16. ஆண்டு ஒன்றுக்கு 800 டெலிபிரின்டர்களை உற்பத்தி செய்யும் இந்துஸ்தான் டெலிபிரின்டர் லிமிடெட் இப்பொழுது தனது சொந்தத் தொழிற்சாலைக் கட்டிடத்தில் இயங்கத் தொடங்கிவிட்டது. எனவே, விரைவில் அவர்கள் கீழ்சென்னியில் குறித்துள்ள முழு அளவின்படி 1,300 டெலிபிரின்டர்களை உற்பத்தி செய்வார்கள் என நம்புகிறோம். இந்த நிறுவனத்தில் ஆண்டு ஒன்றுக்கு 8,000 டெலிபிரின்டர் உற்பத்தி செய்யும் அளவிற்கு உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான வேலைத் திட்டம் இப்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏற்கனவே 25 லட்சம் மூலதன முதலீட்டுடன் தொடங்கப்பட்டுள்ள அறுவைக் கருவித் தொழிற்சாலை (Surgical Instruments Factory) 1965-ம் ஆண்டில் இடையில்

தன் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கிறோம். திருச்சிராப்பள்ளிக்கு அருகே துவக்கப்பட்டுள்ள உயர் அழுத்தக் கொதிகலன் தொழிற்சாலை (High Pressure Boiler Plant) 1966 மார்ச் மாதத்திற்குள் உற்பத்தியை ஆரம்பிக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இருபத்தைந்து கோடி ரூபாய் மூலதன முதலீட்டுடன் துவக்கப்பட்டுள்ள இத்தொழிற்சாலை, இம்மாநிலத்தில் பொதுத் துறையிலுள்ள மிகப் பெரிய நிறுவனங்களில் ஒன்றாகும். இந்துஸ்தான் கச்சா பிளிம் தொழிற்சாலை நிறுவும் வேலையும் திட்டமிட்டபடி செவ்வனே முன்னேறிவருகிறது.

17. ஆண்டு ஒன்றுக்கு 25 லட்சம் டன் எண்ணெயைச் சுத்திகரிக்கத்தக்க பெட்ரோலியம் சுத்திகரிப்பு ஆலை ஒன்றையும், ஆண்டு ஒன்றுக்கு இரண்டு லட்சம் டன் நைட்ரஜன் உரம் தயாரிக்கவல்ல உரத்தொழிற்சாலை ஒன்றையும் தமிழ் நாட்டில் நிறுவ இந்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இவற்றிற்கான நில ஆர்ஜித வேலை நடந்துவருகிறது. இத்தொழிற்சாலைகள் செயல்படத் தேவையான நீர் வசதி, ரயில் வசதி, சாலை வசதி போன்ற பல்வேறு வசதிகளைச் செய்து கொடுப்பதற்கான அடிப்படை வேலைகள் நடைபெற்றுவருகின்றன. மேலும் மத்திய அரசாங்கம், இம்மாநிலத்தில் தொலைத் தொடர்பு கம்பி தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றையும் பம்ப்ஸ்-கம்ப்ரெஸர் தொழிற்சாலை ஒன்றையும் (Pumps-Compressor) கனரக ப்ளேட்ஸ்-வெஸல்ஸ் தொழிற்சாலை (Heavy Plates and Vessels) ஒன்றையும் தமிழ்நாட்டில் நிறுவுவதற்காகத் தகுந்த இடங்களைத் தேர்ந்தெடுப்பது பற்றி ஆராய்ந்துவருகின்றது.

18. சேலம் உருக்குத் தொழிற்சாலை, தொழில் நுட்பப் பொருளாதார ரீதியில் நன்கு செயல்பட முடியும் என்பது இந்திய அரசாங்கம் நியமித்த ஆலோசகர்களான தஸ்தூர் கம்பெனியார் தயாரித்துள்ள விரிவான அறிக்கையிலிருந்து தெளிவாக விளங்குகிறது. இத்தொழிற்சாலை ஆரம்பத்தில் 5 லட்சம் மெட்ரிக் டன் எஃகு தயாரிக்க முடியும் என்றும், பின்னர் உற்பத்தித்திறனை 12 லட்சம் மெட்ரிக் டன்களாகவும் அப்பால் 30 லட்சம் மெட்ரிக் டன்களாகவும் அதிகரிக்க முடியும் என்றும் இந்த அறிக்கை கூறுகிறது. இத்திட்டத்தின் முதல் நிலை வேலைக்காக 95 கோடி ரூபாயிலிருந்து 100 கோடி ரூபாய்வரையில் முதலீடு செய்ய வேண்டியிருக்கும். இத் தொழிற்சாலையில் பயன்படுத்தப்படுகிற இரும்புக் கனியில், கந்தகமோ, எரியமோ (பாஸ்பரஸ்) இல்லாதது சிறப்பு எஃகு (Special Steel) கலப்பு எஃகு (Alloy Steel) இவற்றை நல்ல முறையில் இத் தொழிற்சாலை உற்பத்தி செய்ய முடியும். நம் நாட்டில் உள்ள ஏனைய எஃகுத் தொழிற்சாலைகளுடன் ஒப்பிட்டுப்பார்த்தாலும், இத் தொழிற்சாலைக்குத்தான் மூலப் பொருள்கள் சேகரிப்பிற்கான செலவு மிகக்குறைவான தாகும். இத்தொழிற்சாலை நான்காவது திட்டத்தில் துவக்கப் படும் என நாம் திண்ணமாக நம்புகிறோம்.

மாநில அரசாங்கத் துறைத் திட்டங்கள்

19. மாநில அரசாங்கத் துறையில், ஒன்பது கூட்டுறவு நூற்பு ஆலைகளை நிறுவும் வேலை வேகமாக முன்னேறிவருகிறது. இவற்றுள் சேலம் கூட்டுறவு நூற்பு ஆலை 1964 ஜூன் மாதத்தி

விருந்து செயல்பட்டுவருகிறது. பிற ஆலைகள் 1965, உற்பத்தியைத்தொடங்கும் என்று எதிர்பார்க்கிறோம். இவ் வண்ணமே கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் நிறுவும் வேலையும் செவ்வனே முன்னேறிவருகிறது. சேலம் மாவட்டத்தில் மோகனூர் அருகே நிறுவப்பட்டுள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலை உற்பத்தியைத் தொடங்கிவிட்டது. இவ்வாலை நாளொன்றுக்கு 1,000 மெட்ரிக் டன் கரும்பு பிழியும் திறன் கொண்டது. கள்ளக்குறிச்சியிலும், மதுரையிலும் உருவாகி வரும் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக் கான வேலை, அடுத்த கரும்பு வரும் பருவத்துக்குள் முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

20. பொதுத் துறையில், பெருந் தொழில்களைத் தொடங்க உதவும் வகையில், அரசாங்கத்திற்கே முழு உரிமையுள்ள தொழில் வளர்ச்சி கார்ப்பரேஷனை அமைக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. 1965-66 பட்ஜெட் மதிப்பீட்டில், இந்தக் கார்ப்ப ரேஷனின் பங்கு மூலதனத்துக்காக ரூபாய் 75 லட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது. கார்ப்பரேஷன், முதல் வேலையாகத் தொடர் வார்ப் படத் தொழிற்சாலை ஒன்றை (Continuous Casting Plant) அரக்கோணத்திலும், சிமெண்ட் தொழிற்சாலை ஒன்றை ராஜ பாளையம் அருகேயும் நிறுவும். இதற்கு சுமார் 8½ கோடி ரூபாய் முதல் 9 கோடி ரூபாய்வரையில் மூலதனச் செலவு ஆகும். இத் தொழிற்சாலைகளை நிறுவுவதற்கான வேலைகள் விரைவில் மேற் கொள்ளப்படும்.

தனியார் துறை திட்டங்கள்

21. தனியார் துறையிலுள்ள முக்கியமான தொழிற் திட்டங் களும் நடப்பு ஆண்டில் நல்ல முறையிலே நிறைவேறியுள்ளன. மோட்டார் கார் உறுப்புகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை களும், மின் பற்றவைப்புக்குச்சி (Electrode) உற்பத்தி செய்யும் தொழிற்சாலையும், பெரிய சர்க்கரை ஆலை ஒன்றும், சிமெண்ட் தொழிற்சாலை ஒன்றும், பிராணவாயு உற்பத்தி நிலையம் ஒன்றும், சில உருளை அறவை ஆலைகளும் (Roller flour mills), பல பொறியியல் தொழில் நிறுவனங்களும் 1964-ம் ஆண்டில் உற் பத்தியைத் தொடங்கின. மேட்டூர் அருகே அலுமினியம் உருக்கும் தொழிற்சாலை செயல்படத் தொடங்கியிருப்பது நடப்பு ஆண்டின் முக்கியமான சாதனைகளுள் ஒன்றாகும். இந்தத் தொழிற்சாலை ஆண்டு ஒன்றுக்கு 10,000 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யும் திறன் உடையது. இம் மாநிலத்தில் தனியார் துறையின் மிகப் பெரிய முயற்சியாகிய இந்தத் தொழிற்சாலைக்கு மின் சக்தியை குறைந்த கட்டணத்தில் வழங்கியதோடல்லாமல், தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கார்ப்பரேஷன் மூலமாக 1.5 கோடி ரூபாய் மூலதன முதலீடும் செய்து அரசாங்கம் உதவியுள்ளதை இச்சபை உறுப்பினர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். தனியார் துறையில் தென் இந்தியக் கப்பல் கார்ப்பரேஷன் ஏற்படுத்தப்பட்டது நடப்பு ஆண்டின் மற்றொரு சாதனையாகும். மேற்கு ஜெர்மனி, பிரிட்டன் ஆகிய நாடுகளின் ஒத்துழைப்புடன் பண்டங்களை ஏற்றிச் செல்லும் கப்பல்கள் ஐந்தினை வாங்கி, கப்பல் போக்குவரத்தில் இக் கார்ப்பரேஷன் ஈடுபடும். தனியார் துறையில் தொழில் வளம் பெருகுவதற்குப் பரந்த அளவில் ஊக்க

மளித்து வந்துள்ள தமிழ்நாடு தொழில் கடன் முதலீட்டுக் கார்ப்பரேஷன் 1964-ல் சொற்கள் கடனாக 2.32 கோடி ரூபாயும், கூட்டுக் கடனாக 42.9 லட்சம் ரூபாயும் வழங்கியுள்ளது. இதனால், 1,48. கோடி ரூபாய் கடனுக்கு உத்தரவாதமும் அளித்துள்ளது. 2.9 கோடி ரூபாய் மதிப்புள்ள பங்குகளுக்குப் பொறுப்பேற்றும் 1.13 கோடி ரூபாய் மதிப்புள்ள பங்குகளில் நேரடியாக மூலதன முதலீடு செய்தும் இக் கார்ப்பரேஷன் புதிய தொழில் முயற்சி களுக்கு ஊக்கமளித்துள்ளது.

மின்சாரம்

22. தமிழ்நாடு கடந்த 10 ஆண்டுகளில் தொழில் துறையில் தழைத்தோங்கியிருப்பதற்கு நம்முடைய மின் உற்பத்தித் திட்டங் கள் விறுவிறுப்பாக நிறைவேற்றப்பட்டிருப்பதே காரணமென்றால், அது மிகையாகாது. மூன்றும் திட்ட மொத்த முதலீடான 291 கோடி ரூபாயில் 100 கோடி ரூபாய்க்குச் சற்று அதிகமாகவே மின்சார அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டது என்பதை இம் மன்றத்திற்கு நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். அதன் பின்னர் நாம் பல புதிய திட்டங்களை மேற்கொண்டதோடு, கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கும் திட்டங்களையும் தீவிரப்படுத்தியிருக்கிறோம். எனவே, நடப்புத் திட்டக் காலத்தில், மின்சாரத் திட்டங்களில் நாம் செய்யும் முதலீடு 120 கோடி ரூபாய்க்கும் மேலாக இருக்கு மென்று தெரிகிறது. மூன்றும் திட்டக் காலத்தில் 1,040 மெகவாட் மின்சார உற்பத்தித் திறனைப் பெறவேண்டும் என்பது நமது குறிக் கோளாகும். ஆனால், தமிழ்நாடு மின்சாரக் குழு (Madras State Electricity Board) அந்தக் கால அளவிற்குள் 1,150 மெக வாட் மின்சார உற்பத்தித் திறன் உள்ளதாக விளங்கும். மூன்றும் திட்டத் தொடக்கத்தில் 571 மெகவாட் அளவில் இருந்த நம் மாநில மின்சார உற்பத்தித் திறன் நெய்வேலியில் உற்பத்தி செய்யப்பட விருக்கிற 400 மெகவாட் மின்சார உற்பத்தியையும் சேர்த்து, 1,550 மெவாட் அளவிற்கு உயர்ந்துவிடும். எவ்வகையில் வைத்து மதிப் பிட்டாலும், இம்முன்னேற்றம் மூன்றும் திட்டக் காலத்தில் ஏற் பட்ட பாராட்டத்தக்க தலை சிறந்த சாதனையாகும் என்பதில் சற்றும் ஐயமில்லை.

23. மின்சாரத் திட்டங்கள் நடப்பு ஆண்டிலும் நல்ல வேகத் துடன் நிறைவேறிவருகின்றன. குந்தா-ஐந்தாவது மின்சார உற்பத்தி நிலையத்தில் 20 மெகவாட் உற்பத்தித் திறன் கொண்ட இயந்திரம் ஏற்கனவே செயல்படத் தொடங்கிவிட்டது. 60 மெக வாட் உற்பத்தித் திறனுள்ள மற்றொரு இயந்திரமும் மார்ச்சு இறுதிக்குள் குந்தா-மூன்றாவது மின்சார நிலையத்தில் செயல்படத் தொடங்கிவிடும். சென்னை பேலின் பிரிட்ஜில் மணிக்கு 150,000 பவுண்டு திறனுள்ள கொதி கலன் அண்மையில் செயல்படத் தொடங்கியுள்ளதால், அங்கு 10 மெகவாட் மின்சக்தி கூடுதலாக உற்பத்தியாகிறது. இங்ஙனம் தமிழ்நாட்டின் மின் இணைப்பின் உற்பத்தித் திறன் நடப்பு ஆண்டில் 90 மெகவாட் அளவிற்கு உயர்ந்திருக்கிறது. இதன் காரணமாகவும் நெய்வேலியில் 250 மெக வாட் அளவிற்கு மின்சக்தி உற்பத்தி செய்யும் முதல் அட்டம் பூர்த்தியாகி இருப்பதாலும், அடுத்த ஆண்டில் நமது மின்சக்தி இணைப்பிற்குச் சிரமமான நிலை இருக்காது என்று கருதப்படுகிறது.

இருநூறு மெகவாட் திறனுள்ள மேட்டூர் சுரங்கத் திட்டமும், குந்தா திட்ட மூன்றும் மின்சார நிலையத்தின் 60 மெகவாட் திறனுள்ள இரண்டாவது இயந்திரமும், 50 மெகவாட் திறனுள்ள குந்தா நான்காவது மின்சார நிலையமும், பெரியாறு மின்சார நிலையத்தில் 35 மெகவாட் திறனுள்ள கூடுதல் யூனிட் ஒன்றும் அடுத்த ஆண்டில் நிறைவேறிவிடும். பரம்பிக்குளம்-ஆளியாறு நீர் மின்சாரத் திட்டத்தின் ஒரு பகுதி பூர்த்தியாகி, 100 மெகவாட் மின்சாரத் திறன் உள்ள நிலையங்கள் செயல்படத் தொடங்கிவிடும். 1965-66-ஆம் ஆண்டுக்குரிய திட்டச் செலவில் கிராமங்களுக்கு மின் வசதி அளிப்பதற்கான திட்டங்களுக்காக, 4 கோடி ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. இது தவிர, வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்கான விரைவுத் திட்டத்தின் பகுதியாக கிராமங்களுக்கு மின்சார வசதியளிப்பதற்கென, திட்டத்திற்குப் புறம்பாக இந்திய அரசாங்கம் குறைந்தது ஒரு கோடி ரூபாயாவது நிதி ஒதுக்குமென்று எதிர்பார்க்கிறோம். மூன்றாம் திட்ட இறுதிக்குள் நகரங்கள், கிராமங்கள், சிற்றூர்கள் உள்பட 20,500 ஊர்களுக்கு மின்சாரம் வழங்கப்படும். மூன்றாம் திட்டத் தொடக்கத்தில் 10,760 ஊர்களுக்கே மின்சார வசதி செய்து கொடுக்கப்பட்டிருந்தது. நடப்புத் திட்டக் கால இறுதிக்குள், 2 லட்சத்து 30 ஆயிரத்துக்கும் சற்று அதிகமான பம்பு செட்டுகளுக்கு மின்சார இணைப்பு கிடைக்கும். இதனால் கணிசமான அளவிற்குப் பாசன வசதியும் பெருகும். இவ்வாறு மின்சார உற்பத்தித் திறன் பொதுவாக அதிகரித்திருந்தாலும், நமது மின்சாரத்தேவை, உற்பத்தித் திறனைக் காட்டிலும் எப்போதுமே அதிகமாக இருந்து வருகிறது. எனவே, நம் மாநிலத்தில் புதிய மின்சாரத் திட்டங்களை மேற்கொள்வதற்கான வாய்ப்புகளை இடைவிடாமல் அரசாங்கம் ஆராய்ந்து வந்திருக்கிறது. நான்காம் திட்டம் சம்பந்தமாக நாம் முன்கூட்டியே எடுக்கப்போகும் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, 100 மெகவாட் திறனுள்ள கோதையாறு நீர் மின்சார திட்டத்தையும், சென்னை பேசின் பிரிட்ஜ் அனல் மின்சார நிலையத்தை 30 மெகவாட் கூடுதல் உற்பத்தித் திறன் அளவிற்கு விரிவாக்கும் திட்டத்தையும் தொடங்கியுள்ளோம். நீர் மின்சார நிலையங்களில் உற்பத்தியாகும் மின்சாரத்திற்கும், அனல் மின்சார நிலையங்களில் உற்பத்தியாகும் மின்சாரத்திற்கும் தகுந்த சமநிலை இருக்க வேண்டியதின் அவசியத்தைக் கருதி, எண்ணூரில் 300 மெகவாட் உற்பத்தித் திறனுள்ள அனல் மின்சார நிலையமொன்றை ஏற்படுத்துவதற்கும் நாம் ஏற்கெனவே திட்டக் கமிஷனின் இசைவினைப் பெற்றுள்ளோம்.

தொழில் நுட்பக் கல்வி

24. தொழில் நுட்பக் கல்வித் திட்டங்கள் விரிவடையும் வேகத்திற்கும் பொருளாதார மேம்பட்டிருக்கும் நேரடித் தொடர்பு இருக்கிறது. வளர்ந்து வரும் நமது பொருளாதாரத்தின் நீண்ட காலத் தேவைகளையொட்டி, இத் துறையைப் பற்றிய திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. மூன்றாம் திட்ட இறுதிக்குள் நமது மாநிலப் பொறியியற் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 2,140-க்கு உயர்த்திருக்கும். பாலிடெக்னிக்குகளில் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 4,200-க்கு உயர்ந்துவிடும். எனவே, மூன்றாம் திட்டத்

தொடக்கத்தில் நிர்ணயித்த குறிக்கோள் அளவுக்கும் அதிகமாகவே நம்முடைய சாதனை அமைந்திருக்கும். சேலத்தில் நிறுவப்பட்டிருக்கும் அரசாங்கப் பொறியியற் கல்லூரியை, அடுத்த கல்வியாண்டிலிருந்தே தொடங்குவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றனவென்பதை இம் மன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். நான்காம் திட்டக் காலத்தில் நிறுவப்பட்டிருக்கும் புதிய பாலிடெக்னிக்குகள் சம்பந்தமாக முன்கூட்டியே நடவடிக்கையெடுப்பதும் அவசியமென்று கருதப்படுகிறது. தஞ்சாவூர், தென்காசி, மேட்டூர், கடலூர் ஆகிய இடங்களில் நான்காம் திட்டக் காலத் தொடக்கத்தில் ஏற்படுத்த எண்ணியுள்ள இப்புதிய அரசாங்கப் பாலிடெக்னிக்குகளுக்குத் தேவையான முன்னேடி நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வதற்காக இப்போது மன்றத்தின் முன்புள்ள வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் வகை செய்யப்பட்டுள்ளது. உயர் தொடக்கக் கல்வி நிலையில் கல்வி வசதிகளை விரிவுபடுத்தும்போது, 14-17 வயதுத் தொகுதியிலுள்ள இளைஞர்களைத் தொழில் நுட்பப் படிப்பிற்குத் திருப்புவதற்கு வகை செய்வது அவசியமாகும். இந்தத் தேவையை இளநிலைத் தொழில் நுட்பப் பள்ளிகள் (Junior Technical Schools) பூர்த்தி செய்யுமென்று கருதலாம். அத்தகைய 10 பள்ளிகள் நமது மாநிலத்தில் ஏற்கெனவே நிறுவப்பட்டுவிட்டன. காஞ்சிபுரம், நாகைப்பட்டினம், குடியாத்தம், சேலம், அண்ணாமலைநகர், திண்டுக்கல், தூத்துக்குடி, காரைக்குடி, ராஜபாளையம், ஆவடி ஆகிய இடங்களில் இன்னும் அத்தகைய 10 புதிய பள்ளிகளை ஏற்படுத்தவும் இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் வகை செய்யப்பட்டுள்ளது. நெசவுத் தொழில் நுட்ப நிலையம் (Institute of Textile Technology) ஒன்றையும், வாணிகத் துறைப் படிப்பு நிலையம் (Institute of Commercial Practice) ஒன்றையும் சென்னையில் ஏற்படுத்தவும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கிறது. இந்த நிலையங்களை அமைத்திருத்தி செய்வதற்கான செலவின் பெரும்பகுதி நான்காம் திட்டம் காலத்தில்தான் ஏற்படும்.

25. பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையானவற்றுள் கல்வியின் பங்கு மிகப் பெரியது என்பதை நமது திட்டங்களைத் தீட்டும்போது மனதிற்கொண்டுள்ளோம். இந்த வளர்ச்சித் துறையிலிருந்து நம் சாதனைகள் திட்ட இலக்குகளை மிஞ்சிவிடும். இந்தாண்டு திட்டத்துக்குட்பட்டும், உட்படாதும் கல்விக்காக மொத்தம் 37 கோடி ரூபாய் அளவுக்கு இவ் வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இச் செலவானது, செலவினப் இனச் செலவுகளில் 22 சத விதமாகும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்குள்ளாக, 6-11 வயதுத் தொகுதியிலுள்ள சிறுவர்களில் 92 சத விதத்தினர் பள்ளிக்குச் செல்ல வசதி செய்யப்படும். இந்தச் சாதனையின் அடிப்படையில் அடுத்த ஐந்தாண்டுக்கால அளவுக்குள் இத் தொகுதியில் உள்ள சிறுவர்கள் எல்லோருமே கல்வி வசதி பெறுவதற்கான திட்டத்தை நம்பிக்கையுடன் நாம் தயாரிக்கும் நிலையில் உள்ளோம். நாடு முழுவதையும் எடுத்துக்கொண்டால், இந்த வயதினுள்ள சிறுவர்களில் 87.7 சத வித அளவு சிறுவர்களை பள்ளியில் சேர்ப்பதையே நான்காவது திட்டம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது என்பதை

இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இது பெரும்பாலான மற்ற மாநிலங்களைக் காட்டிலும் நமது மாநிலம் கல்வி அபிவிருத்தியில் எத்துணை அளவிற்கு முன்னேறியுள்ளது என்பதைத் தெளிவாக உணர்த்தும். ஏழை மாணவர்களும் பெருமளவுக்குப் பள்ளிகளில் சேர்ந்து படித்து வருவதற்கு ஏதுவாக இருப்பனவற்றுள், மதிய உணவு ஏற்பாடு முக்கியமான இடம் பெறுகிறது. மதிய உணவுத் திட்டம் இப்போது 30,000 தொடக்கப் பள்ளிகளில் அமுலில் இருந்து வருகிறது. 16 லட்சம் சிறுவர்கள் பயனடையும் இத் திட்டத்திற்காக அடுத்தாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஒரு கோடியே எண்பத்தாறு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மதிய உணவின் தாத்தை உயர்த்தும் வகையில் "கேர்" நிறுவனத்தினர் தாராளமாக உதவி அளித்து வருகின்றனர். கடந்த நான்காண்டுகளில் ரூபாய் 6 கோடிக்குமேல் மதிப்புள்ள பால் பவுடர், எண்ணெய், தானிய உணவு முதலிய பொருள்களை இத்திட்டத்துக்கென வழங்கியுள்ளனர். உயர்தொடக்கப் பள்ளி நிலையிலும் இது வரை ஏற்பட்டுள்ள முன்னேற்றம் நாம் எதிர்பார்த்ததைவிட அதிகமானதாகும். மூன்றாவது திட்டத்தில் இரண்டு லட்சத்துப் பத்தாயிரம் மாணவர்களைப் பள்ளியிற் சேர்க்க வேண்டுமென முதலில் எண்ணியதற்குப் பதிலாக, திட்டமுடிவிற்குள் 5 லட்சத்து 90 ஆயிரம் மாணவர்கள் பள்ளியிற் சேர்க்கப்படுவார்கள். மேலும், பள்ளிகளில் பயில்விக்கும் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன், அண்மையில் மாநிலக் கல்விக் கழகம் (State Institute of Education) ஏற்படுத்தப்பட்டிருப்பதை கனம் அங்கத்தினர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். தொடக்கப் பள்ளிகளை மேற்பார்வையிடும் அதிகாரிகளுக்கும், ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளில் பணியாற்றுபவர்களுக்கும் இந்த நிறுவனம் அகப்பணிப் பயிற்சி (In-service training) அளிக்கும். மேலும் இக்கழகம் தொடக்கப்பள்ளிகளில் பயிற்சி அளிப்பதற்கான சாதனங்களையும், வெளியீடுகளையும் தயாரிக்கும். தொடக்கப் பள்ளிகளை விரைவாக விரிவாக்கி வரும் இந்தக் காலத்தில் போதிய அளவு இட வசதியுடன் அவற்றை அமைப்பது கடினமென்பது எல்லோரும் அறிந்ததே. நமக்குள்ள நிதி வசதிகளையொட்டி, இப்பெரும் பிரச்சினையைச் சமாளிப்பதற்கு இயன்ற முயற்சிகளைச் செய்து வருகிறோம். பொது மக்கள் நன்கொடையுடன் தொடக்கப் பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் கட்டுவதற்காகக் கடந்த ஆண்டுகளைப்போல் பஞ்சாயத்து யூனியன்களுக்கு மானியம் வழங்குவதற்கென 40 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

26. தொடக்கக் கல்வி பரவலாக முன்னேறியிருப்பதற்கேற்ப, உயர்நிலைக் கல்வி வசதிகளையும் பெருக்கி வந்துள்ளோம். உயர்நிலைப்பள்ளிவரை இலவசக் கல்வி அளிக்கும் கொள்கை அமுலுக்கு வந்த பின்னர், பள்ளிகளில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை கணிசமான அளவுக்கு அதிகரித்துள்ளது. மூன்றாவது திட்ட முடிவுக்குள் பள்ளிகளில் சேரும் மாணவர் எண்ணிக்கை ஐந்தாண்டுத் திட்ட இலக்கான 75,000-க்குப் பதில், 2 லட்சத்து 75 ஆயிரமாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. சென்ற இரு ஆண்டுகளில் உயர்நிலைக் கல்விக்கான செலவு பெருமளவு அதிகரித்துள்ளது. உயர்நிலைக் கல்விக்காக 1963-64-ல் 6 கோடியே 70 லட்சம் ரூபாய் அளவிற்குச் செலவாகியது. ஆனால், அடுத்த ஆண்டு

வரவு-செலவுத் திட்டத்தில் இதற்காக 11 கோடியே 90 லட்சம் ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்க வேண்டியிருக்கிறது. தமிழ்நாடு இதுவரை கண்டிராத இவ்வளர்ச்சியை ஒட்டி இடவசதியின்மை, பள்ளிச் சாதனங்கள் பற்றாக்குறை போன்ற குறைபாடுகள் எழுவது இயற்கையே. இவற்றை ஓரளவு சரி செய்வதற்காக, முன்னாள் ஜில்லா போர்டு நிர்வாகத்தின்கீழ் இருந்த உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் கட்டுவதற்கான மானியம் வழங்குவதற்கென்று ரூபாய் 30 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

27. உயர்நிலைக் கல்வி பரவலாக்கப்பட்டதால், அதற்கேற்ப கல்லூரிக் கல்வி வசதியைப் பெருக்குவதும் அவசியமாகிறது. இதற்காக வரும் கல்வி ஆண்டில் அரசாங்க கலைக் கல்லூரிகள் எழுமிடத் திறக்க உத்தேசித்துள்ளோம். மேற் கல்விக்கான வாய்ப்புகளைப் பரவலாக ஏற்படுத்தவேண்டும் என்ற நமது கொள்கைக்கு இணங்க, அவை பெரும்பாலும் கல்வியில் பின்தங்கியுள்ள பகுதிகளில் ஏற்படுத்தப்படும். கடலூர், குடியாத்தம் ஆகிய இடங்களில் அண்மையில் திறக்கப்பட்ட கல்லூரிகளுக்குக் கட்டிடம் கட்டுவதற்காகவும் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆடவர், பெண்டிருக்காக மாலைக் கல்லூரிகள் (Evening Colleges) நடத்துவதென்று செய்யப்பட்டுள்ள முடிவு பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அடுத்த கல்வி ஆண்டு முதல், சென்னையிலும் கோயம்புத்தூரிலும் உள்ள அரசாங்க கலைக் கல்லூரிகளில் ஆடவர்க்காகவும், சென்னை மேரி அரசுக் கல்லூரியில் மகளிருக்காவும் மாலை வகுப்புகள் நடத்துவதென்று திட்டமிடப்பட்டுள்ளது. இம் மாலைக் கல்லூரிகளினால் பெருவாரியான மாணவர்கள் பயனடைவர். குறிப்பாக, முறையாகக் கல்லூரிக் கல்வி பெறமுடியாமல் வேலையில் அமர்ந்திருப்பவர்கள் பலரும் பயன் பெற வழி ஏற்படும்.

மருத்துவம், பொது சுகாதாரம்

28. 1962-63-ஆம் ஆண்டு இறுதியில் ஏற்பட்ட தேசிய நெருக்கடியையும் அதன் காரணமாகத் தோன்றிய புதுப் பிரச்சினைகளையும் பொறுப்புகளையும் முன்னிட்டு நமது திட்டங்களைச் சிறிது மாற்றியமைக்க வேண்டியிருந்ததை இச்சபை நன்கு அறியும். விவசாயம் தொழில் உற்பத்தி ஆகிய திட்டங்களுக்கு மேலும் அதிக முக்கியத்துவம் கொடுத்ததோடு, மருத்துவத் துறைக்கான புதிய கட்டிட வேலைகளை ஓரளவு ஒத்திவைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்தக் கொள்கையைச் சிறிது தளர்த்தி, ஒத்திப் போடப்பட்ட வேலைத் திட்டங்களில் சிலவற்றை நிறைவேற்றுவதற்கு எடுத்துக்கொள்ள இப்போது அரசாங்கம் முடிவு செய்துள்ளது. 1965-66-ல் செலவினக் கணக்கு, மூலதனக் கணக்கு இவை ஒவ்வொன்றிலும் 27 லட்ச ரூபாய் கூடுதல் செலவாகிற பல புதிய திட்டங்களுக்கு நிதி ஒதுக்கம் செய்வதன் மூலம், இத்துறையின்கீழ் உள்ள திட்டங்கள் இன்னும் விரைவாக நிறைவேற இப்பொழுது வாய்ப்பு கிடைத்திருக்கிறது. மலேரியா ஒழிப்புத் திட்டத்தின் தீவிரக் கட்டம் வெற்றிகரமாக நிறைவேறியுள்ளதையடுத்து, இத்துறையில் தொடர்ந்து கண்காணிப்புச் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியுள்ளது. இத்தகைய ஏற்பாடுகளுக்காகவும், கிராமப் பகுதிகளில் மருத்துவ வசதிகளை

அதிகரிப்பதென்ற நமது கொள்கையை ஒட்டியும், பல்வேறு வளர்ச்சி வட்டாரங்களில் 120 ஆரம்ப சுகாதார நிலையங்களைத் திறப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளோம். இதன் மூலம், வளர்ச்சி வட்டாரம் ஒவ்வொன்றிலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் திறக்கப்பட வேண்டுமென்கிற மூன்றாவது திட்டத்தின் இலட்சியம் நிறைவேறும்.

29. பொருளாதார முன்னேற்றத்தினால் கிட்டும் பலன்கள், மிகுந்த மக்கட்பெருக்கத்தினால் சிதறிப் போகாமலிருக்க வழி செய்ய வேண்டியது அவசியமாகும். எனவேதான், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்களுக்குச் சிறப்பான இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதனைத் தீவிரப்படுத்துவதற்காக அண்மையில் நாம் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். இத்திட்டத்தை மக்களிடையே பரப்புவதற்காக, பிரசாரகர்கள் (canvassers) நியமிக்கப்பட்டுள்ளார்கள். அறுவை சிகிச்சை செய்து கொள்ள முன்வருபவர்களை ஆராய்ந்தறிய பொறுப்புள்ள நல்லுறவு அதிகாரிகளையும் நியமித்துள்ளோம். மேலும், இதற்காக பல்வேறு மருத்துவ நிலையங்களில் கூடுதல் பணியாளர்களை நியமிப்பதுடன், இத்திட்டத்தை நிறைவேற்ற பஞ்சாயத்துகளும், பஞ்சாயத்து யூனியன்களும் தீவிரப் பங்கு கொள்ள முயற்சி எடுத்துள்ளோம். மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில், இந்தத் திட்டம் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததால், கனம் சட்டமன்ற உறுப்பினர்களும் பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவர்களும் இதற்கேற்ற நல்ல சூழ்நிலையை உருவாக்குவதில் பெரும் பங்குகொள்ளவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

நீர்வழங்கும் திட்டங்கள்

30. நகரப் பகுதிகளில் நீர் வழங்குவதற்கான வேலைத் திட்டங்களில் பல முற்றுப் பெறும் கட்டத்தை அடைந்துள்ளன. இவ் வேலைத் திட்டங்களுக்காக 1965-66 ஆண்டுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 146 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தாத்துக்குடி துறைமுகத் திட்டத்தையொட்டி ஏற்படக்கூடிய நீண்ட கால வளர்ச்சியினைக் கருத்திற்கொண்டு, அப்பகுதிக்கு நாளொன்றுக்கு 30 லட்சம் காலன் நீர் வழங்குவதற்கான திட்டத்திற்கு அனுமதி தரப்படுகிறது. முடிவில் 78 லட்சம் ரூபாய் மொத்தச் செலவாகிற இத் திட்டத்திற்கென, 1965-66-ம் ஆண்டிற்குரிய மூலதனச்செலவுத் திட்டத்தில் 10 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

பின்தங்கிய வகுப்பினர் நலன்

31. பின்தங்கிய வகுப்பினர் நலனில் அரசாங்கத்துக்கு எப்போதுமே விசேஷ அக்கறை உண்டு. ஹரிஜனங்கள், பின்தங்கிய வகுப்பினர் நலனுக்குரிய திட்டங்களுக்காக 1965-66-ம் ஆண்டில் ரூபாய் 484 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு உபகாரச் சம்பளங்கள் வழங்கும் திட்டமும் தொடர்ந்து நடத்தப்படும். இதற்காகத் தக்க அளவில் முன்னிலும் கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. முக்கியமாக ஹரிஜனங்களுக்கு வீட்டு மனை வசதிக்காக நில ஆர்ஜிதம் செய்யும் வேலையைத் துரிதப்படுத்தியுள்ளோம். இதற்காக வரும் ஆண்டில் ரூபாய் 38 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

1963-64-ம் ஆண்டு இறுதி கணக்குகள்

32. இனி, இவ்வரசுசெலவுத் திட்டத்துடன் தொடர்புடைய அடிப்படைப் புள்ளி விவரங்களைப் பற்றிச் சிறிது விளக்க விரும்புகிறேன். 1963-64 திருத்த மதிப்பீடுகளின்படி செவின்யூ கணக்கில் மூன்று கோடியே இரண்டு லட்சம் ரூபாய் துண்டு விழும் என மதிப்பிட்டிருந்தோம். ஆனால், இப்போது கிடைத்துள்ள இறுதிக் கணக்குகள் கணிசமான அபிவிருத்தி ஏற்பட்டுள்ளதைக் காட்டுகின்றன. ஆண்டு முடிவில் செவின்யூ கணக்கில் 23 லட்சம் ரூபாய் அளவிற்கே பற்றாக்குறை இருந்தது. செலவினங்கள் ஒரு கோடி ரூபாய் அளவிற்கு அதிகரித்திருந்தும், செவின்யூ வரவினங்களில் ஏற்பட்ட மூன்று கோடியே எழுபத்தொன்பது லட்சம் ரூபாய் உயர்வே, மனநிறைவைத் தரக்கூடிய இம்முன்னேற்றத்திற்குக் காரணமாகும். மாதிரி வரியினங்கள் பெரும்பாலானவற்றின் கீழ் அதிகத் தொகைகள் வசூலானதும், திட்ட வேலைகளுக்கென மத்திய அரசாங்கத்திடமிருந்து அதிக உதவி மானியங்கள் கிடைத்ததும் இம் முன்னேற்றத்துக்குக் காரணங்களாகும். மோட்டார் வாகன வரி, பொது விற்பனை வரி, முத்திரைக் கட்டண வரி ஆகிய இனங்களின்கீழ் குறிப்பிடத் தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. பழைய பாக்கித் தொகை உட்பட அரசாங்கத்துக்குச் சேரவேண்டிய நிலவரித் தொகைகளையும் வசூலிக்கத் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டதனால், "நிலவரி" யின் கீழ் ஒரு கோடி ரூபாய்க்கும் மேலாக கூடுதல் வருவாய் கிடைத்திருப்பதைச் சிறப்பாக எடுத்துக்கூற விரும்புகிறேன்.

33. பல்வேறு அபிவிருத்தி துறைகளின் கீழ் மொத்தம் ஒரு கோடியே அறுபத்து நான்கு லட்சம் ரூபாய் கூடுதலாகச் செலவாகியுள்ளது. மருத்துவத்துறை (33 லட்சம் ரூபாய்), பின்தங்கிய வகுப்பினர் நலன் (26 லட்சம் ரூபாய்), பாசன ஆதாரங்களின் பராமரிப்பு (35 லட்சம் ரூபாய்) ஆகியவற்றில் கணிசமான அளவுக்கு செலவுத் தொகை அதிகரித்துள்ளது. அபிவிருத்திச் செலவில் மற்ற இதர இனங்களில் செலவு 63 லட்சம் ரூபாய் குறைந்துள்ளதை இச்சபை மகிழ்ச்சியுடன் வரவேற்குமென நம்புகிறேன்.

34. மூலதனக் கணக்கில் இறுதிச் செலவான 23.64 கோடி ரூபாய் திருத்த மதிப்பீட்டில் எதிர்பார்த்ததை விட அதிகமானதாகும். நாமிழில் வளர்ச்சி பாசன திட்டங்கள், போக்குவரத்து ஆகிய துறைகளில் மூலதனச் செலவு கணிசமாக உயர்ந்துள்ளது. "அரசாங்க வாணிபத் திட்டங்கள்", "இதர பணிகள்" ஆகிய தலைப்புகளின்கீழ் செலவு ஓரளவு குறைந்துள்ளது. பரம்பிக்குளம்–ஆளியாறு, சாத்தனூர் (இரண்டாம் நிலை), கோழுகி நதித் திட்டம், சிறு பாசன வேலைத் திட்டங்கள் ஆகியவற்றை விரைவாக நிறைவேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதின் காரணமாக, "பாசனம்" என்கிற தலைப்பின் கீழ் மட்டும் ஒரு கோடி ரூபாய்க்கும் மேலாக செலவு அதிகரித்துள்ளது.

35. டெபாசிட் தலைப்புகளின்கீழ் பற்றுவரவு நிலையின் போக்கை அறுதியிட்டுக் கூறுவது எளிதல்ல. இத்தலைப்புகளின் கீழும் கணிசமான அளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டதாலும், பாதிலே வரிகளை வசூலிப்பதை தீவிரப்படுத்தி நாம் மேற்கொண்ட இதர நடவடிக்கைகளினாலும், திட்டத்தில் சேராத வேலையினைச் செலவுகளில்

சிக்கனத்தை மேற்கொண்ட காரணத்தாலும், கடந்த ஆண்டின் முடிவில் அரசாங்கத்தின் வழிவகை நிலைமையில் நல்ல அபிவிருத்தி காணப்பட்டது. இதனால் ஒரு கோடியே என்பத்து மூன்று லட்சம் ரூபாய் சொக்க இருப்புடன் சென்ற ஆண்டு முடிவடைந்தது.

1964-65-க்குரிய திருத்த மதிப்பீடுகள்

36. என்னுடைய கடந்த வரவு-செலவு திட்ட உரையில், செலின்யூக் கணக்கில் நடப்பு ஆண்டுச் செலவு 140 கோடியே 82 லட்சம் ரூபாயாக இருக்குமென்றும் வரவு 138 கோடியே 48 லட்சம் ரூபாயாக இருக்குமென்றும், துண்டு விழும் தொகை 2 கோடியே 34 லட்சம் ரூபாயாக இருக்கும் என்றும் மதிப்பிட்டிருந்தேன். நடப்பு ஆண்டில் நமது வரவினங்களில் எழுச்சி (buoyancy) காணப்பட்ட போதிலும், அரசாங்க ஊழியர்களுக்கும் தலஸ்தாபன ஊழியர்களுக்கும், பள்ளி ஆசிரியர்களுக்கும் அளித்த அகவிலைப் படி உயர்வுகாரணமாக அதிக செலவுப் பொறுப்பு ஏற்பட்டுள்ளது என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும். நடப்பு நிதி ஆண்டில் மே மாதத்திலும், அக்டோபர் மாதத்திலும் அகவிலைப்படி விதங்களை அதிகரித்ததின் மூலம் நடப்பு ஆண்டில் 245 லட்சம் ரூபாயும் ஒரு முழு ஆண்டில் 385 லட்சம் ரூபாயும் கூடுதல் செலவாகும். ஆண்டு ஒன்றுக்கு ஒன்றரைகோடி ரூபாய் கூடுதல் செலவில் கிராம அதிகாரிகளின் ஊதியங்களைக் கணிசமாக அரசாங்கம் அதிகரித்ததையும் சபையினர் அறிவார்கள். நடப்பு ஆண்டில் மட்டும் 75 லட்சம் ரூபாய் இதற்காக அதிகச் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது, அரசாங்க ஊழியர்களுக்கு இந்த சலுகைகள் வழங்கியதின் விளைவாக ஏற்பட்டுள்ள செலவு அதிகரிப்பை இச்சபையில் சமர்ப்பித்துள்ள திருத்த மதிப்பீடுகளில் காணலாம். தற்போது காணப்படும் வரவு-செலவுப் போக்கினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள இத் திருத்த மதிப்பீடுகளின் படி செலின்யூக் கணக்கில் வருவாய் 147 கோடியே 1 லட்சம் ரூபாயாகவும், செலவு 151 கோடியே 77 லட்சம் ரூபாயாகவும், துண்டு விழும் தொகை 4 கோடியே 76 லட்சம் ரூபாயாகவும் இருக்கும். நடப்பு ஆண்டில், 52 லட்சம் ரூபாய் பழையபாக்கி உட்பட, வருமான வரியில் நமக்குரிய பங்கில் 125 லட்சம் ரூபாய் கூடுதலாக நமக்குக் கிடைக்கும். இந்திய அரசாங்கத்திடமிருந்து திட்ட வேலைகளுக்காக இவ்வாண்டு 10 கோடியே 89 லட்சம் ரூபாய் மட்டுமே கிடைக்குமென்று வரவு-செலவுத் திட்டத்தில் மதிப்பிட்டிருந்தோம். திட்டச் செலவின் தற்போதைய போக்கின் அடிப்படையில், இம்மானியங்கள் மூலம் மொத்தம் 12 கோடியே 5 லட்சம் ரூபாய்வரையில் கிடைக்குமென இப்போது எதிர்பார்க்கிறோம். மாநில வரிகளின்கீழும் ஏற்கெனவே மதிப்பிட்டதைவிட சுமார் 2 கோடியே 43 லட்சம் ரூபாய் அதிகமாகக் கிடைக்குமென எதிர் பார்க்கிறோம். விவசாய வருமான வரி (14 லட்சம் ரூபாய்), நிலவரி (28 லட்சம் ரூபாய்), மோட்டார் வாகன வரி (50 லட்சம் ரூபாய்) ஆகிய இனங்களில் முக்கியமான உயர்வு ஏற்பட்டுள்ளது. பொது விற்பனை வரி, மத்திய விற்பனை வரி இவற்றின் மூலமும், சென்ற ஆண்டைவிட சுமார் மூன்றுகோடியே நாற்பத்திரண்டு லட்சம் ரூபாய் வரை கூடுதலாகக் கிடைக்குமென எதிர்பார்க்

கிறோம். வரிகள் செலுத்தாமல் ஏய்ப்பவர்களைத் தடுக்கவும், வரி பாக்கிகளை வசூலிக்கவும் மேற்கொண்ட தீவிர நடவடிக்கைகளின் விளைவை இவ்வினத்தில் ஏற்பட்டுள்ள உயர்வு ஓரளவு எடுத்துக் காட்டுகிறது.

37. வரி நீங்கலான மற்ற வருவாய் இனங்களின் கீழும், வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளைவிட 2 கோடியே 38 லட்சம் ரூபாய் கூடுதலாக கிடைக்கும் என எண்ணுகிறோம். இவற்றுள், விவசாயம் (27 லட்சம் ரூபாய்); தொழில்கள் (86 லட்சம் ரூபாய்); பஸ் போக்கு வரத்து (75 லட்சம் ரூபாய்), காட்டுவளம் (10 லட்சம் ரூபாய்) ஆகிய இனங்களில் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. தொழில் துறையின் கீழ் உள்ள பல்வேறு நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் விற்பனை அதிகரித்திருப்பதால் "தொழில்கள்" என்ற இனத்தில் வருவாய் கூடியுள்ளது. நடப்பு நிதி ஆண்டில் பஸ் கட்டணங்களை உயர்த்தியதாலும், கூடுதலாக இயங்குகின்ற பஸ்களின் கட்டண வசூலாலும், அரசாங்கப் போக்குவரத்துத் துறையிலும் அதிக வருவாய் கிடைத்துள்ளது.

38. அரசாங்க ஊழியர்களுக்கும், கிராம அதிகாரிகளுக்கும் அதிகப்படியான ஊதியம் வழங்கியது, செலின்யூக் கணக்கின் கீழுள்ள இனங்களில் செலவு அதிகரிப்பதற்கு ஓரளவு காரணமாகும் என்பதை ஏற்கெனவே விளக்கியுள்ளேன். இதைத் தவிர, செலவினங்களில் ஏற்படுகின்ற உயர்வின் பெரும்பகுதி அபிவிருத்திப் பணிகளைப் பற்றியதே. கல்வி, தொழில் நுட்பக் கல்வி (142 லட்சம் ரூபாய்), மருத்துவம் (65 லட்சம் ரூபாய்); பொதுச் சுகாதாரம் (36 லட்சம் ரூபாய்), விவசாயம் (70 லட்சம் ரூபாய்); கால்நடை அபிவிருத்தி (94 லட்சம் ரூபாய்), சமுதாய அபிவிருத்தி (38 லட்சம் ரூபாய்), பின்தங்கிய வகுப்பினர் நலன் (24 லட்சம் ரூபாய்); பாசன ஆதாரங்கள் பராமரிப்பு (53 லட்சம் ரூபாய்) ஆகிய இனங்களில் குறிப்பிடத்தக்க உயர்வு ஏற்பட்டுள்ளது. விவசாயம், கால்நடை அபிவிருத்தி ஆகிய இனங்களில் இந்திய அரசாங்கம் கொண்டு வந்துள்ள விரைவுத் திட்டத்தின்கீழ் அண்மையில் அனுமதிக்கப்பட்ட பல வேலைத் திட்டங்களுக்காக, திருத்த மதிப்பீடுகளில் கூடுதல் செலவினம் முழுவதற்கும் வகை செய்யப் பட்டுள்ளது.

39. நடப்பு ஆண்டிற்கான திருத்த மதிப்பீட்டின்படி மூலதனச் செலவு 38.27 கோடி ரூபாய், வரவு-செலவுத் திட்டத்தில் மதிப்பிட்டதைவிட 14 கோடி அதிகமாவதைப் பற்றிச் சிறிது விளக்கிக் கூற விரும்புகிறேன். உணவு தானியங்களை அரசாங்கக் கணக்குகளில் கொள்முதல் செய்து உணவு தானிய இருப்பு ஒன்றை ஏற்படுத்த அரசாங்கம் அண்மையில் முடிவு செய்துள்ளதன் விளைவாக, இந்த உயர்வில் பெரும்பகுதி, அரசாங்க வாணிபத் திட்டங்களின் கீழ் ஏற்பட்டுள்ளது.

40. உணவு தானியக் கொள்முதலுக்கான மொத்தச் செலவுக்காக, சென்ற தணை மதிப்பீடுகளில் 21 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் பெற்றதை இச் சபை அறியும். உணவு தானிய விற்பனை மூலம்

எதிர்பார்க்கும் வரவுகளைத் தள்ளிய பிறகு, நிகரச் செலவுக்காக திருத்த மதிப்பீடுகளில் 8 கோடி ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கம் செய்துள்ளோம். பாசனத் திட்டங்களுக்கான செலவு 1 கோடியே 14 லட்சம் ரூபாய் அதிகரித்துள்ளதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். இவற்றுள் சித்தார் பட்டணங்கால் திட்டத்திற்காக மட்டும் 61 லட்சம் ரூபாய் செலவு அதிகரித்துள்ளது. பொதுப்பணிகள் மூலதனச் செலவுக்காக 22 லட்சம் ரூபாயும், அரசாங்கப் போக்குவரத்துத் துறையில் பஸ்கள் வாங்குவதற்கும், ஏனைய மூலதன வேலைகளுக்குமாக 1 கோடியே 27 லட்சம் ரூபாயும் கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளன. கடன்கள், முன்பணங்கள் என்னும் இனத்தின்கீழ் மூன்று கோடியே 5 லட்சம் ரூபாய் அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மத்திய கிடங்குக் கார்ப்பொரேஷன் ஏற்றுக்கொள்ளப்போகும் கிடங்குகளைக் கட்டுவதற்காக, முதற் கண் நாம் செய்யும் செலவாகிய ஒரு கோடியே அறுபது லட்சம் ரூபாய் இத் தொகையில் அடங்கும்.

41. ரெவின்யூ கடன் தலைப்புகளின்கீழ் திருத்த மதிப்பீடுகளில் இப்போது எதிர்பார்க்கும் அதிகச் செலவினங்களில் பெரும் பகுதிக்கு இந்த சபை மூன்று துணை மதிப்பீடுகள் மூலம் ஏற்கெனவே ஒப்புதல் தந்திருக்கிறது. எஞ்சியுள்ள பகுதி இக் கூட்டத் தொடரில் நான் சமர்ப்பிக்கவிருக்கின்ற இறுதித் துணை மதிப்பீட்டில் இடம் பெறும்.

42. ரெவின்யூக் கணக்கு நிலை பாதகமாயிருப்பினும், நடப்பு நிதி ஆண்டில் வழிவகை நிதி நிலை சரளமாகவே இருக்குமென நாம் எதிர்பார்க்கிறோம். எனினும், அதிகமாக பொறுப்புகளை ஏற்றுக் கொள்ள இருப்பதால் ரெவின்யூ வசூல்கள் குறித்து மிகக் கவனம் செலுத்தி, அத்தியாவசியமில்லாத செலவினங்களில் தொடர்ந்து சிக்கன முறைகளைக் கடைப்பிடிக்கா விட்டால், அடுத்த நிதி ஆண்டில் வழிவகை நிதி நிலை சிரமமாக இருக்கும்

1965-66-க்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள்

43. நெகிழ்ச்சியுள்ள வரவினங்களான மோட்டார் வாகன வரி, விற்பனை வரி, மின்சாரத் தீர்வை போன்றவற்றில் ஏற்படக்கூடிய வளர்ச்சியினைக் கருத்திற்கொண்டு, 1965-66-ம் ஆண்டின் வரவு-செலவு திட்டத்தில் வருவாய் 163 கோடியே 63 லட்சம் ரூபாயாகவும், ரெவின்யூக் கணக்கில் செலவு 170 கோடியே 60 லட்சம் ரூபாயாகவும், துண்டுவிழும் தொகை 6 கோடியே 97 லட்சம் ரூபாயாகவும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதுள்ள நிலவரப் படியான வருவாயையும் தற்போதுள்ள செலவுப் பொறுப்புகளையும் எடுத்துக்கொண்டால், துண்டு விழும் தொகை 2 கோடி ரூபாய்க் குள்ளாகவே இருக்கும். ஆனால், தால் கமிஷன் சிபாரிசுகளுக் கேற்ப, மத்திய அரசாங்கம் தனது ஊழியர்களது அகவிலைப்படி வீதங்களைக் கணிசமாக உயர்த்தியதன் விளைவாக உருவாகியுள்ள நிலைமையையும் நாம் மனதிற்கொள்ள வேண்டியிருக்கிறது. 1961-62-ம் ஆண்டு முதல் இடையிடையே அகவிலைப்படி வீதங்களை உயர்த்தியதின் விளைவாக, இத் திட்டக் காலத்துக்குள் ஏறத்தாழ

17 கோடியே 13 லட்சம் ரூபாய் அளவுக்கு கீழ்க்கண்டவாறு செலவு ஏற்பட்டுள்ளது :—

	ஆண்டொன்றுக்கு.	திட்டக் காலத்தில்.
	(லட்சம் ரூபாய்களில்.)	
1962 ஜூன் மாதத்தில் 150 ரூபாய்க்குக் குறைவாக ஊதியம் பெறுவோர்க்கு அளிக்கப்பட்ட ஐந்து ரூபாய் உயர்வு.	260	953
1963 ஜனவரி மாதத்தில் 150 ரூபாய் முதல் 400 ரூபாய் வரை ஊதியம் பெறுவோர்க்கு அளிக்கப்பட்ட பத்து ரூபாய் உயர்வு.	40	130
1964 மே மாதத்தில் 400 ரூபாய் வரை ஊதியம் பெறுவோர்க்கு 2 ரூபாய் முதல் 10 ரூபாய் வரை அளிக்கப்பட்ட உயர்வு.	160	293
1964 அக்டோபர் மாதத்தில் 600 ரூபாய் வரை ஊதியம் பெறுவோர்க்கு மூன்றரை ரூபாய் முதல் இருபது ரூபாய் வரை அளிக்கப்பட்ட உயர்வு.	225	337
ஆக மொத்தம் ..		17,13

அரசாங்க ஊழியர்களுக்கு உயரிய அகவிலைப்படி வீதங்கள்

44. நமது நிதி நிலைமை தொடர்ந்து சிரமமாக இருந்த போதிலும், மத்திய அரசாங்க ஊழியர்களது அகவிலைப்படி வீதங்களுக்குச் சமமாக, மாநில அரசாங்க ஊழியர்களது அகவிலைப்படி வீதங்கள் இருக்கும்படி செய்து வந்துள்ளோம். தால் கமிஷன் அறிக்கையின் பேரில், மத்திய அரசாங்கம் எடுத்த முடிவுகளை யொட்டி, மாநில அரசாங்கம் தனது ஊழியர்களது அகவிலைப்படி வீதங்களை நன்கு ஆராய்ந்தது. மத்திய அரசாங்கத்தினர் தங்களுடைய ஊழியர்களது அகவிலைப்படி வீதங்களை உயர்த்தும் போது 600 ரூபாயிலிருந்து 1,200 ரூபாய் வரை ஊதியம் பெறும் ஊழியர்களை விட்டு விட்டனர். இத்தரத்தில் உள்ள ஊழியர்களில் பெரும்பாலோர், மாநில சம்பளக் கமிஷன் சிபாரிசுகளினால் பலனேதும் பெறவில்லையாதலால், அவர்களுக்கும் உதவி தேவை என நாம் கருதுகிறோம். எனவே, கீழ்க்கண்டவண்ணம் அக விலைப்படி வீதங்களைத் திருத்தியமைக்க அரசாங்கம் முடிவு செய் துள்ளது :—

மாதச் சம்பள வரையரை.			திருத்தியமைக்கப் பட்ட அகவிலைப் படி வீதங்கள்.
			ரூ.
89 ரூபாய் வரை			28
90 ரூபாய் முதல்		149 ரூபாய் வரை	42
150	,,	209 ,,	54
210	,,	399 ,,	66
400	,,	599 ,,	70
600	,,	799 ,,	80
800	,,	999 ,,	85
1,000	,,	1,200 ,,	90

இம் மாறுதல், ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து, அதாவது ஏப்ரல் மாத முதல் தேதியன்று வழங்கப்படும் மார்ச்சு மாதச் சம்பளத்திலிருந்து அமலுக்கு வரும். இவ்வுயர்வு, தல ஸ்தாபன ஊழியர்கட்கும், உதவி பெறும் பள்ளிக்கூட ஆசிரியர்கட்கும் கிடைக்கும். இந்நிறுவனங்கள் மேற்கொள்ளும் இக் கூடுதல் செலவிற்காக வழக்கமான முறையில் நிதி உதவி அளிக்கப்படும். இந்த அகவிலைப்படி உயர்வின் காரணமாக ஆண்டொன்றுக்கு 5 கோடியே 58 லட்சம் ரூபாய் கூடுதல் செலவாகும். தல ஸ்தாபனங்கள் இச் செலவு செய்வதற்கும், அதற்குரிய உதவியை நிர்ணயித்து வழங்குவதற்கும் இடையில் உள்ள கால அளவைக் கருத்திற்கொண்டு, இவ் வுயர்வை யொட்டிய செலவுக்காக, "71. பல்வகை" கணக்குத் தலைப்பின்கீழ் மொத்தமாக 500 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் கோரப்பட்டுள்ளது. இறுதியில், இத் தலைப்பின்கீழுள்ள இந் நிதி ஒதுக்கம் திருப்பித் தரப்பட்டு, அடுத்த ஆண்டில் அந்தந்த மாநியங்களின்கீழ் ஏற்ற கூடுதல் நிதி ஒதுக்கம் பெறப்படும்.

வழி வகை நிதி நிலை

45. ரெவின்யூக் கணக்கில் தூண்டு விழுகின்ற 697 லட்சம் ரூபாய் பெரிய தொகை தானென்றாலும், இது அகவிலைப்படி வீதங்களை இவ்வாண்டில் உயர்த்தியது, வரும் ஆண்டில் உயர்த்த எண்ணியுள்ளது—இவற்றின் விளைவாகவே ஏற்பட்டுள்ளது. தற்போது செயலாற்றி வரும் நான்காம் நிதிக் கமிஷன், நம் மாநில அரசாங்கத்தின் நிதித் தேவைகளை மதிப்பிடும்போது, தவிர்க்க முடியாத இக் கூடுதல் செலவுப் பொறுப்புகளையும் மனதிற்கொண்டு, தக்க நிதி ஆதாரங்கள் கிடைப்பதற்கு வழிவகை செய்யுமென நம்பலாம். எனவே புதிய வரி விதிப்பு ஏதுமின்றி ரெவின்யூக் கணக்கில் தூண்டு விழும் இத் தொகையை அப்படியே விட்டுவைக்க முடிவு செய்துள்ளோம். இப்புதிய பெரும் பொறுப்பிலும் வழி வகை நிலைமையும் அடுத்த ஆண்டிலும் தொடர்ந்து சிரமமாகவே இருக்கும். நமது வரவினங்களையும், செலவினங்களையும் நன்கு கவனித்து வருவதுடன், பழைய பாக்கிகளை வசூலிப்பதன் மூலமாகவும், வரி கொடாமல் தப்புவதைத் தடுப்பதன் மூலமாகவும், நிதி வசதிகளைப் பெருக்கும் முயற்சிகளை நாம் தீவிரப்படுத்த வேண்டும். இதுவன்றி, சிறு சேமிப்பின் மூலம் கிடைக்கும் தொகையை அதிகப் படுத்தவும் நல்ல இடம் இருக்கிறது. சிறு சேமிப்பு இயக்கத்தை மக்களிடையே நன்கு பரப்புவதில், அதிலும் குறிப்பாக, கிராமப் பகுதிகளில் பரப்புவதில், கனம் அங்கத்தினர்களும், பஞ்சாயத்து யூனியன் தலைவர்களும், பஞ்சாயத்துத் தலைவர்களும் பெரும் பங்கெடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இச் சிறு சேமிப்பின் மூலமாகவே, திட்டங்களின் விளைவாக எழும் அதிக வருவாய்களின் ஒரு பகுதியை மீண்டும் திட்ட வேலைகளுக்காக முதலீடு செய்யும் வகையில் திருப்ப முடியும். வரும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மேலும் பெரிய அளவில் வளர்ச்சிப் பணிகளை நாம் மேற்கொண்டு நடத்துவது, இம் முயற்சியைப் பொறுத்தே அமையும்.

நான்காம் ஐந்தாண்டுத் திட்டம்

46. முன்னைய திட்டங்கள் எல்லாவற்றையும் ஒருங்கு சேர்த்து ஒப்பிட்டு நோக்கினும்கூட, அவற்றை யெல்லாம்விட பெரியது நான்காம் திட்டம். தேசிய திட்டத்தின் இலக்குகளையும், குறிக்கோள்களையும் மனதிற்கொண்டு, நம் மாநிலத்தின் தனிப்பட்ட பிரச்சினைகளுக்கும் தனிப்பட்ட தேவைகளுக்கும் ஏற்ப, நாம் நான்காவது திட்டத்தைத் தயாரித்துள்ளோம். சதுர மைலுக்கு 669 மக்கள் வீதமுள்ள நமது மாநிலத்தின் ஜன நெருக்கம், தேசத்தின் சராசரி ஜன நெருக்கத்தைவிட அதிகம் என்பதை மனதிற் கொண்டு, அதற்கேற்ப நான்காவது திட்டத்தின் முதலீட்டு அளவையும் முறையையும் நிர்ணயித்துள்ளோம். நம் மாநிலத்தில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் சாகுபடிக்கேற்ற சராசரி நிலப்பரப்பும் தேசிய சராசரியைக் காட்டிலும் குறைவாகவே உள்ளது. நீர்ப்பாசன வசதியைப் போன்று, அரசாங்கம் அமைத்துக் கொடுக்கும் பொருளாதாரப் பொதுவசதிகளை மட்டும்கொண்டு உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான வாய்ப்புகளும் நமது மாநிலத்தில் குறைவாகும். எனவே, பொறுக்கு விதைகள், செயற்கை உரங்கள், பசுந்தாள் உரங்கள் போன்ற திருந்திய சாதனங்களைப் பெருமளவில் பயன்படுத்துவதன் மூலம்தான் உற்பத்தியை நமது மாநிலத்தில் பெருக்கமுடியும். விவசாய வளர்ச்சியில் நமது நிறனைச் சோதிக்கும் ஒரு கட்டத்தில் நாம் இப்பொழுது அடியெடுத்து வைக்கின்றோம்.

47. இது போன்ற பல கோணங்களிலிருந்தும் விவசாய உற்பத்திப் பிரச்னையை ஆராய்ந்து பார்த்து, நான்காவது திட்டக் காலத்தில் உணவு தானிய உற்பத்தியை 65 லட்சம் மெட்ரிக் டன்களிலிருந்து 80 லட்சம் மெட்ரிக் டன்களாக உயர்த்தக்கூடுமென மதிப்பிட்டிருக்கிறோம். விவசாயத் துறைக்குள், அதிக மதிப்புள்ள விளை பொருள்களான கரும்பு, நெட்டிழைப் பருத்தி, நிலக்கடலை, காய்கறி, பழவகைகள் ஆகியவற்றை அதிகம் உற்பத்தி செய்யும் வகையில் நமது திட்ட நகை அமைத்துள்ளோம்.

48. நடப்பு திட்ட முடிவிற்குள், தமிழ்நாட்டின் நீர்வளத்தை முற்றிலும் பயன்படுத்தும் நிலையை அடைந்துவிடுவோம். நமது நீர்வள வசதிகள் குறைவெனினும், தென் பகுதி முழுவதுமாக எடுத்துக்கொண்டால் நீர்வளம் நிறைந்திருப்பது தெளிவாகும். இவ்வளத்தை தென்பிராந்தியத்தின் பொதுநலனுக்காக உபயோகிப்பதே தேசியத் திட்டத்தின் குறிக்கோளாக விருக்க வேண்டும். மேற்கு நோக்கிச் செல்லும் சில நதிகளின் நீரைத் திருப்பி விட்டுப் பயன்படுத்த நான்காவது திட்டத்தில் வகை செய்துள்ளோம். இவற்றிற்கு நிதிக் கமிஷன் சம்மதத்தையும், அண்டை மாநிலங்களின் சம்மதத்தையும் பெற முயலவேண்டும். இதைத் தவிர, பழைய பாசன திட்டங்களைச் சீரமைப்பதிலும் அதன் மூலம் மிச்சமாகும் தண்ணீரைக்கொண்டு பாசன வசதிகளை விரிவாக்குவதிலும் நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சிறப்பாகக் கவனம் செலுத்தப்படும். தஞ்சாவூர் டெல்டாவிலுள்ள கால்வாய்களைச் சீரமைத்துப் புதுப்பிப்பதற்கு நான்காவது திட்டத்தில் தலையாய இடம் அளித்துள்ளோம். இதைப்

போன்றே பெரியாறு பாசன அமைப்பினைச் சீரமைப்பதற்கான பணிகளையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவற்றைத் தவிர கீழ்க் கண்ட புதிய பாசனத் திட்டங்களுக்கு நான்காவது திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது:—

(1) அவிநாசி பகுதியில் பாசன வசதிகள் ஏற்படுத்துதல்,
(2) பரப்பலாறு திட்டம்,
(3) சின்னாறு நீர்த் தேக்கத் திட்டம்,
(4) பாலாறு–பொருந்தலாறு திட்டம்,
(5) மருதையாறு திட்டம்.

49. மாநில வருவாயை (State income) அதிகரிக்கச் செய்வதில் தொழிற் துறை கணிசமான அளவுக்கு உதவவேண்டு மென்பது நாம் தயாரித்துள்ள நான்காம் திட்டத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். இத் துறையில் விரும்பும் அளவிற்கு வளர்ச்சி காண வேண்டுமென்றால், மத்திய அரசாங்கத் துறை, மாநிலத் துறை, தனியார் துறை ஆகியவை அனைத்திலுமாக மொத்தம் 600 கோடி ரூபாய் முதலீடு செய்யவேண்டு மென்று மதிப்பிட்டுள்ளோம். இதுவரையில் மாநில அரசாங்கம் தொழில் வளர்ச்சிக்காகக் கணிசமான அளவிற்கு நேரடியாக முதலீடு செய்ய வில்லை. தனியார் துறையினருக்குப் புதிய தொழில்களைத் துவக்கு வதில் ஊக்கமளிப்பதும், தேவையான நிதி உதவி செய்வதுமே நமது கொள்கையாக இருந்துவந்துள்ளது. என்றாலும், சென்ற பத்து ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள தொழில் வளர்ச்சியின் அமைப் பிலும், வகையிலும் சில இடைவெளிகள் உள்ளன. குறிப்பாக, மற்ற தொழில்களுக்குத் தேவைப்படும் மூலப் பொருட்களையும் இடைநிலைப் பொருட்களையும் உற்பத்தி செய்யும் அடிப்படைத் தொழில்கள் சிலவற்றை அபிவிருத்தி செய்வது இப்போது அவசியமாகிறது. மக்கள் பெருவாரியாகப் பயன்படுத்தும் நுகர் வுப் பொருட்களை உற்பத்தி செய்வதிலும் அரசாங்கம் நேரடிப் பங்கு கொள்ளவேண்டும் என்ற கருத்தும் இப்பொழுது நிலவி வருகிறது. இந்த நோக்கங்களையெல்லாம் கருத்தில் கொண்டு நான்காவது திட்டத்தில் தொழில் வளர்ச்சிக்காக மாநில அரசாங்கம் இதுவரை இருந்ததைவிட மேலும் நேரிடையாகவே பெரும் பங்கு கொள்ள வழிவகை செய்ய உத்தேசித்துள்ளோம். தொழில் வளர்ச்சியில் தனியார் துறையும் தொடர்ந்து முக்கிய மான பங்கு வகித்தே வரும். ஏற்கனவேயுள்ள நிறுவனங்கள் மூலமாகவும், வேளாண்மைத் தொழில் கார்ப்பொரேஷன், ஏற்று மதிக் கார்ப்பொரேஷன் போன்ற புதிய நிறுவனங்கள் மூலமாக வும், தனியார் துறையினருக்கு நிதி உதவி வசதி செய்வது, நான்காம் திட்ட தொழில் வளர்ச்சிக் கொள்கையின் முக்கிய அம்ச மாகும். தொழிற் துறையில் மத்திய அரசாங்கம் முதலீடு செய்வ தாக உத்தேசித்துள்ளதில், இம்மாநிலம் தனது நியாயமான பங்கினைப் பெறவும் அரசாங்கம் ஆவன செய்யும். நான்காவது திட்டத்தில் மத்திய அரசாங்கத் துறையில் நிறைவேற்ற வேண்டிய தாக நாம் குறிப்பிட்டுள்ள திட்டங்களில் நெய்வேலி–சேலம் உருக்கு ஆலைத் திட்டம் முக்கியமானதாகும்.

50. மின்சார அபிவிருத்திக்காக நான்காவது திட்டத்தில் 217 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளோம். மைசூர் அரசாங்கத்தின்

சம்மதம் தேவைப்படுகின்ற ஹோகனக்கல் திட்டத்தைத் தவிர, அடியிற்கண்ட புதிய மின் உற்பத்தித் திட்டங்களுக்கும் நான்காவது திட்டத்தில் வழி வகை செய்யப்பட்டுள்ளது:—

திட்டம்.	உற்பத்தித் திறன். மெகவாட்.	உத்தேச செலவு. (ரூபாய் கோடியில்).
1. எண்ணூரில் அனல் மின்சார நிலையம்.	300	28
2. தூத்துக்குடியில் அனல் மின் நிலையம்.	100	11·1
3. மேல் தாமிரபரணி நீர் மின் சாரத் திட்டம்.	155	17·8
4. பாண்டியாறு புன்னம்புழா ..	70	9·2
5. மேல் மணிமுத்தாறு ..	95	11·7
6. பரளியாறு நீர் மின்சாரத் திட்டம்.	30	3·8
7. சுருளியாறு நீர் மின்சாரத் திட்டம்.	25	3·2

நெய்வேலி அனல் மின்நிலையத்தை மேலும் விரிவாக்கும் விஸ்தரிப் புத் திட்டம், அணுசக்தி மின்நிலையம் ஏற்படுத்தும் திட்டம், ஆகியவை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய அரசாங்கம் ஏற்று நடத்த வேண்டியவையாகும். கிராம மின்சார விஸ்தரிப்புத் திட்டம் தொடர்ந்து நிறைவேற்றப்படும். இதன் மூலம் கூடுதலாக இரண்டரை லட்சம் பம்பு செட்டுகளுக்கு மின் சக்தி வழங்குவதற்கு நான்காவது திட்டத்தில் வகை செய்யப் பட்டுள்ளது.

51. தொழில் நுட்பக் கல்வியின்கீழ் இப்போதுள்ள நிறுவனங் களைக் கூடியமட்டில் விஸ்தரிப்பதோடல்லாமல், மூன்று புதிய பொறியியல் கல்லூரிகளையும், ஏழு பாலிடெக்னிக்குகளையும் திறப்பதற்கும் நான்காவது திட்டத்தில் நிதி ஒதுக்கம் செய்துள் ளோம். திட்டக் கமிஷன் திட்டியுள்ள நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் முன்னைய திட்டங்களிலிருந்து ஓரளவு வேறுபட்டு, சமூக நலப் பணித் திட்டங்களுக்குச் (Social Service) சிறப்பிடம் அளித்துள்ளது. இக் கருத்திற்கேற்ப கல்வி, மருத்து வம், பொதுச் சுகாதாரம், தண்ணீர் வசதி, வீட்டு வசதி பின் தங்கிய வகுப்பினர் நலன் ஆகிய சமூக நலப் பணிகளுக்காக மூன்றாவது திட்டத்தில் 76 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்ததை நான்காவது திட்டத்தில் சுமார் 229 கோடி ரூபாய் அளவிற்கு உயர்த்தியுள்ளோம். எல்லாப் பிரிவுகளையும் சார்ந்த மக்களுக்கும் சமமான வாய்ப்பினை அளிப்பதோடு, சமூக நலப்பணி அபிவிருத்தி யின் மூலம்தான் வருவாய்களை ஏழை மக்களுக்குச் சாதகமான முறையில் வியோகம் செய்ய முடியும்.

52. இத்தகைய அடிப்படைக் கருத்துக்களைச் சார்ந்து நாம் தயாரித்துள்ள நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் ரூபாய் 750 கோடி அளவில் அமைந்துள்ளது. மாநில அரசாங்கம் மூலம் நிறைவேற்றப்படும் மத்திய அரசினர் ஊக்குவிக்கும் திட்டங் களுக்காக (Centrally Sponsored Schemes) ரூபாய் 50 கோடி ஒக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர மத்திய அரசாங்கத் துறை யிலும் தனியார் துறையிலும் செய்யப்படும் முதலீடுகளும்

உள்ளன. நாம் தயாரித்துள்ள திட்ட நகலைத் திட்டக் கமிஷனுடன் மேலும் கலந்து ஆலோசித்து சில மாற்றங்கள் செய்ய வேண்டியிருக்கலாம். எனினும், நான் இதுகாறும் கூறியவற்றிலிருந்து நான்காவது திட்டம் தணிவுள்ள பெரிய திட்டம் என்பதும், நமது நிர்வாகத் திறனுக்குச் சரியான சவாலாக அமையும் என்பதும் நன்கு புலனாகும்.

முடிவுரை

53. இவை அனைத்திற்கும் மேலாக, திட்டத்தின் வெற்றி நாட்டில் அமைதி நிறைந்த சூழ்நிலை நிலவுவதைப் பொறுத்த இருக்கும். அத்தகைய சூழ்நிலையில்தான் நமது நிர்வாக இயந்திரம் ஆக்கப் பணிகளில் தனது சிந்தை முழுவதையும் செலுத்த முடியும், கடந்த பத்துப் பதினைந்து ஆண்டுகளாக, அரசியல் கொள்கை வேறுபாடுகள் இருந்தபோதிலும், நமது மாநில வளர்ச்சி பற்றிய பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதில் ஒருமித்த சிந்தனையுடன் செயலாற்றி வந்துள்ளோம். இவ் வொருமித்த மனப்பான்மையினால்தான் இயற்கை வளக் குறைபாடு களையும் கடந்து, நமது மாநிலத்தில், பற்பல துறைகளில் போற்றத் தக்க அளவிற்கு வளர்ச்சி காண நம்மால் முடிந்தது. நாம் அனை வரும் இதுகாறும் விரும்பிக் காத்துவந்த அமைதியான சூழ்நிலை, கடந்த சில வாரங்களில் பாதிக்கப்பட்டுள்ளது. இம் மாநிலத்தி லுள்ள மாணவர்கள் மனதிலே தோன்றிய ஐயப்பாடுகளையும் உணர்ச்சிகளையும் என்னால் நன்கு உணர முடிகிறது. ஆனால் அவர்களுடைய கிளர்ச்சியைச் சில சமூக விரோத சக்திகள் பயன் படுத்திக் கொண்டதால் மக்களின் உடமைக்கும் உயிருக்கும் சேதம் நேரிட்டது. நமது மக்களுக்கு நேர்ந்த இன்னல்களைக் கண்டு நாம் அனைவருமே ஆழ்ந்த துயரடைந்துள்ளோம். நெருக்கடி யான இந்நேரத்தில் மாவட்டக் கலெக்டர்களும் அவர்களின்கீழ் உள்ள நிர்வாகப் பணியாளர்களும், நமது போலீஸ் படையினரும் போற்றத்தக்க உணர்ச்சியுடன் பணியாற்றியுள்ளார்கள். இந்தி ஆட்சிமொழி ஆவது பற்றி அமரர் நேரு அவர்கள் அளித்த வாக் குறுதிகள், தேசத் தலைவர்களால் பனப்பூர்வமாக மீண்டும் ஒப்புக்கொள்ளப்பட்டு, அவை விரைவிலேயே சட்டப் புத்தகத்தில் பொறிக்கப்படும். இந்தி மொழி பற்றி, மாணவர்களுக்கும், பொது மக்களுக்கும் ஏற்பட்டுள்ள உண்மையான ஐயப்பாடுகளை அகற்று வதற்கு இது வகை செய்யும். அரசாங்கம், அவர்களுடைய நலனை விழிப்புடன் போற்றிக் காத்து வரும் என்றும், அரசாங்க ஊழியத்தில் அவர்களுக்குரிய வேலை வாய்ப்புகளுக்கும், பதவி உயர்வுகளுக்கான வாய்ப்புகளுக்கும் குந்தகம் நேராவண்ணம் ஆவன செய்யுமென்றும் அவர்கள் உறுதியாக நம்பலாம். நாம் அனைவரும் பாராட்டிப் பேணிவரும் நம் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு மீண்டும் நம்மை அர்ப்பணம் செய்து கொள்ளக் கூடிய ஓர் அமைதியான சூழ்நிலையைத் தோற்றுவிப்பதற்கு நாம் எல்லோருமே பாடுபட வேண்டும். இவ்வுணர்வின் அடிப்படை யில் உணர்ச்சிகளைக் கிளரா வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை, வரவு-செலவுத் திட்ட விவாதங்களின் போது கனம் உறுப்பினர்கள் மனதிற் கொள்வார்கள் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை என்று கூறி, இந் நிதி நிலை அறிக் கையை இம் மன்றம் ஏற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இணைப்பு I

[1-வது பத்தியில் உள்ள கணக்குகள் 1956 நவம்பர் 1-ம் தேதி முதல் அமுலுக்குவந்த மாநிலங்களின் சீரமைப்பு அடிப்படையில் அமைந்தது.]

தமிழ்நாடு (எல்லைப்புக் கணக்கில் வருவாயும், செலவினமும்.

விவரங்கள்.	1938-9.	1956-7.	1957-8.	1958-9.	1959-60.	1960-1.	1961-2.	1962-3.	1963-4.	1964-65. திட்ட மதிப்பீடு.	1964-65. திருத்த மதிப்பீடு.	திட்ட மதிப்பீடு 1965-66.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)
						(கோடி ரூபாய் கணக்கில்)						
					அ. வருவாய்.							
மத்திய அரசுத் தீர்வைகள்.	..	1,75·14	3,14·43	5,88·53	6,02·51	6,09·04	†	†	†	†	†	†
வரிப் பொருளின் வரி நீங்கலாக இதர வருமான வரிகள்—												
வருமான வரியில் பங்கு	23·50	5,33·85	6,16·07	6,36·72	6,66·29	7,34·11	7,87·20	7,74·49	9,73·44	8,80·00	10,05·00	9,80·00
வேளாண்மை வருமான வரி	..	1,12·51	1,29·67	86·55	1,53·49	1,34·48	1,41·51	1,16·21	1,35·15	1,16·09	1,80·00	1,30·00
சொத்து வரி	..	23·35	28·41	26·18	30·26	29·32	40·49	37·33	38·47	37·00	63·00	63·00
இரயில்வேஸ் சட்டண வரி	..	..	31·07	70·37	84·43	89·77	‡	‡	‡	‡	‡	‡
நில வரி—												
பாசன வரியைத் தவிர மொத்த வருவாய் உள்பட	7,00·78	6,19·86	6,91·53	6,67·34	7,04·62	7,40·21	6,83·32	7,13·38	8,93·37	8,40·51	8,69·03	8,48·87
மூலப் தீர்வைகள்	3,72·33	30·39	37·97	22·63	22·04	24·68	33·09	38·30	40·71	35·09	40·13	40·13
வண்டி வரி	81·22	4,37·73	4,54·29	4,99·58	5,49·51	6,05·10	7,02·72	10,19·06	12,33·59	12,00·00	12,50·00	15,00·00
விநோத வரி	..	..	..	14,76·11	16,74·53	19,11·53	21,25·61	24,80·09	27,01·73	30,05·00	31,35·97	34,51·39

† "மத்திய மூலத் தீர்வையில் மாநிலங்களின் பங்கு" என்பதனையும் சாட்டப்பட்டுள்ளன.

‡ "LVI. மத்திய உள்ளி மானியங்கள்" என்பதனைத்தும் சாட்டப்பட்டுள்ளது.

தமிழ்நாடு செவின்யுக் கணக்கில் வருவாயும், செலவினமும்—தொடர்ச்சி.

பெருந் தலைப்புகள்.	1938–9.	1956–7.	1957–8.	1958–9.	1959–60.	1960–1.	1961–2.	1962–3.	1963–4.	1964–65. திட்ட மதிப்பீடு.	1964–65. திருத்த மதிப்பீடு.	திட்ட மதிப்பீடு. 1965–66.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)
						(ரூபாய் லட்சத்தில்)						
அ. வருவாய்—தொடர்ச்சி.												
இதர வரிகளும் நிர்வகனும்—												
பொது விற்பனை வரி	..	11,16·77	11,78·05	†	†	†	†	†	†	†	†	†
இதர இனங்கள்	3·19	§2,75·61	3,84·67	2,07·50	2,22·20	2,45·64	2,78·93	4,58·40	6,73.16	7,10·14	8,02·52	9,12·66
மொத்தம் ..	3·19	13,92·38	15,62·72	2,07·50	2,22·20	2,45·64	2,78·93	4,58·40	6,73.16	7,10·14	8,02·52	9,12·66
முத்திரைத்தாள்	1,73·37	3,62·76	3,50·00	3,91·81	4,77·80	4,52·97	5,21·74	5,48·21	6,68·21	6,44·41	6,45·63	7,05·63
பத்திரப்பதிவு	32·70	78·85	79·42	86·26	1,04·51	1,06·90	1,13·14	1,24·16	1,51·43	1,40·22	1,61·30	1,75·30
வட்டி	19·73	59·68	3,78·97	4,94·96	6,07·48	7,08·82	8,29·59	11,64·84	11,21·65	13,78·75	13,38·48	15,41·99
நீதி நிர்வாகம்	15·39	62·05	67·63	56·07	52·39	60·36	72·07	85·32	87.03	85·46	87·61	88·51
சிறைச்சாலைகள்	5·98	26·20	26·32	24·08	30·99	35·59	30·92	42·87	41·19	41·77	41·42	41·95
போலீஸ்	5·66	21·81	19·14	22·58	23·82	29·51	39·37	37·06	31·39	39·37	32·38	32·38
பலவகைத் துறைகள் ||	7·62	99·48	90·06	1,19·07	1,56·57	***	59·50	36·07	38·51	36·97	40·03	41·96
துறைமுகங்களும் கப்பல் போக்குவரத்தும்.	44·67	..	..	..	..	..	..	..	..	..	..	..
கல்வி ||	8·35	93·71	1,34·64	1,79·59	2,02·65	2,68·82	48·50	48·27	1,54·72	83·79	84·12	1,06·74
மருத்துவம் ||	10·25	31·14	61·04	73·90	83·84	85·60	79·77	78·58	94·60	84·94	98·80	1,02·61
பொதுச் சுகாதாரம் ||	2·59	7·17	19·40	68·05	1,18·50	1,85·78	16·66	12·26	13·97	15·72	29·65	15·21
வேளாண்மை ||	3·12	1,04·21	1,01·71	1,62·16	2,33·09	2,48·54	1,91·75	2,26·68	2,80·74	2,45·40	2,72·37	3,20·13
விலங்கின வளர்ப்பு ||	1·02	13·08	19·23	18·27	23·18	15·18	11·49	21·51	16·95	15·96	16·40	16·01
கூட்டுறவு ||	4·18	1,27·82	1,06·47	72·43	1,25·62	2,03·55	37·62	36·29	35·04	38·33	38·00	38·04
தொழில்கள் ||	18·85	1,23·41	2,47·24	2,17·03	2,79·19	2,84·83	1,84·51	2,95·84	3,46·90	3,24·95	4,10·48	4,48·08
சமூதாய அபிவிருத்தித் திட்டம், தேசிய வளர்ச்சித் திட்டம், ஐதல அபிவிருத்தி வேலைகள். ||	*	*	*	*	*	*	29·28	2·12	2·57	0·27	2·87	4·77
பலவகை—சமூக அபிவிருத்தி ஸ்தாபனங்கள். ||	..	..	..	..	..	1,98·60	(c)	27·46	23·62	23·46	24·57	26·96
பலவகை—												
நேரடி வருவாய் ‡	6·31	9·14	9·57	10·62	11·08	10·61	11·52	11·70	9·02	11·49	10·86	11·86
(கழிக்கவும்)—நடைமுதல் செலவுகள்.	— 38·39	— 57·72	— 59·46	— 64·57	— 78·64	— 91·56	— 1,23·70	§	§	§	§	§
நிகர வருவாய் ..	— 32·08	— 48·58	— 49·89	— 53·95	— 67·56	— 80·95	— 1,12·18	11·70	9·02	11·49	10·86	11·86
வனம்—												
நேரடி வருவாய் ‡	1·99	2·08	1·89	2·26	2·35	2·24	2·52	2·65	2·10	2·42	2·62	2·28
பொதுப் பணிகள்	25·12	1,28·73	99·11	1,10·45	1,40·81	1,42·25	1,13·86	1,20·68	1,14·56	1,38·96	1,37·29	1,38·99
நிஜாரத் நிட்ட (மொத்த) வருவாய் ..	42·51	8,13·43	2,54·27	..	..	..	..	..	..	..	..	..
(கழிக்கவும்) நடைமுதல் செலவுகள்.	— 24·81	— 5,26·02	— 2,20·07	..	..	..	..	..	..	..	..	..
நிகர வருவாய் ..	17·70	2,87·41	34·20	..	..	..	..	..	..	..	..	..
மோட்டார், நீர்வழிப் போக்குவரத்துத் திட்டங்களின் மொத்த வருவாய்கள். (a)	..	1,81·21	2,13·34	2,27·55	2,51·46	3,15·14	3,69·27	4,34·80	5,18·73	6,09·32	6,84·17	8,05·66
(கழிக்கவும்)—நடைமுதல் செலவுகள்.	..	— 1,49·91	— 1,85·52	— 1,99·48	— 2,19·58	— 2,95·03	— 3,46·89	§	§	§	§	§
நிகர வருவாய் ..	..	31·30	27·82	28·07	31·88	20·11	22·38	4,34·80	5,18,73	6,09·32	6,84·17	8,05·66

† "விற்பனை வரி" என்பதன்கீழ் காட்டப்பட்டுள்ளது.

*** "பலவகை சமூக, அபிவிருத்தி ஸ்தாபனங்கள்" என்பதன்கீழ்ச் சேர்க்கப்பட்டுள்ளது.

* "L.I.A. சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள், தேசிய வளர்ச்சித் திட்டம், ஐதல அபிவிருத்தி வேலைகள் கணக்கின் வருவாய்கள்" என்பதன்கீழ்க் காட்டப்பட்டுள்ளது.

|| இத் துறைகள் சம்பந்தமான அபிவிருத்தி திட்டங்களுக்காக மத்திய அரசினர் உதவித்தொகை மத்திய அரசினர் உதவி மானியம் என்பதன்கீழ்க் காட்டப்பட்டுள்ளது.

(c) "XXI. பலவகைத் துறைகள்" என்பதன்கீழ்ச் சேர்க்கப்பட்டுள்ளது.

‡ நிலவரி அடங்கவில்லை.

§ 1962 ஏப்ரல் 1 முதல் செலவுப் பக்கத்தின்கீழ்க் காட்டப்பட்டுள்ளது.

(a) 1949–50-க்குமுன்பு, வருவாய் "பலவகை" என்னும் செவின்யுத் தலைப்பின்கீழ்ச் சேர்க்கப்பட்டது. நடைமுதல் செலவுகள் "பலவகை" என்னும் செலவுத் தலைப்பின்கீழ்க் காட்டப்பட்டது.

தமிழ்நாடு ரெவின்யூக் கணக்கில் வருவாயும், செலவினமும்—தொடர்ச்சி.

பெருந் தலைப்புகள்.	1938–9.	1956–7.	1957–8.	1958–9.	1959–60.	1960–1.	1961–2.	1962–3.	1963–4.	1964–65 திட்ட மதிப்பீடு.	1964–65 திருத்த மதிப்பீடு.	திட்ட மதிப்பீடு. 1965–66.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)
					(ரூபாய் லட்சத்தில்)							
அ. வருவாய்—தொடர்ச்சி.												
ஓய்வு உபகாரச் சம்பளம்—ஓய்வுகால அனுகூலங்கள் ஆயிலை குறித்த உதவித் தொகைகளும் வருங்கால் தொகைகளும்.	2·88	16·06	9·09	9·26	4·33	15·30	16·39	30·40	24·62	21·11	39·01	40·14
எழுதுபொருளும்-அச்சுத் தொழையும் ..	3·96	9·76	11·76	19·07	18·70	22·01	39·60	42·06	43·45	43·45	51·44	54·44
காட்டுவனம் ‖	45·63	1,75·17	1,29·19	1,30·63	1,69·24	1,99·35	2,52·28	2,22·86	2,59·03	2,29·90	2,40·09	2,59·23
பலவகை—												
அரசாங்கப் பல போக்குவரத்துத் துறைமூலம் மொத்த வருவாய்.(a)	..	..	..	..	.	..	..	..	.	..	..	..
இதர இனங்கள்	14·58	74·90	2,39·03	2,56·63	3,69·39	§§5,93·03	99·80	1,35·04	86·35	95·21	98·43	101·84
மொத்தம் ..	14·58	74·90	2,39·03	2,56·63	3,69·39	5,93·03	99·80	1,35·04	86·35	95·21	98·43	1,01·84
kind of civilization should be corrected and that can be done only by the teachers at schools. This is quite necessary to enable our nation to rise to a high place and keep it among the galaxy of nations in the world. Through proper education alone can we hope to attain the high level which we attained in the old days. Take for instance the instinct of charity that was there among our people. It has now completely gone out. Even little children, through the education it has received, through cheap stories and unhealthy films, jumps out as soon as a beggar comes to the house and says : ' No, No '. Recently we have passed a legislation to prevent beggary. But we cannot do that by legislation. The instinct of charity should be put into the minds of young children. They should be made to learn that man lives not only for himself but for others also. Selffishness must go ; otherwise work in the offices will not go on. There should be no place for envy or jealousy. To counteract all these tendencies and instincts and to make our society act in such a way that it will be a model for the rest of the world, education of the children should be taken care of. Even though the Government have appointed a National Education Commission, they should call some people who have real experience of education and hear their views. They should call people who have been in the line for 15 to 20 years. They need not necessarily be certified educational experts. It is difficult to get a certificate as expert from the Government. The Government should consult the people in the line and find out how children could be rectified.

Thank you, Mr. Chairman.

*திரு. ஏ. சாம்பசிவ செட்டியார் : சேர்மென் அவர்களே, இந்த வரவு செலவு திட்டத்தைப்பற்றி சிறிது நேரம் பாராட்டிப் பேச விரும்புகிறேன். இந்த திட்டம் தமிழ் நாட்டினுடைய பொது வளர்ச்சியை, பொருளாதார முன்னேற்றத்தை எடுத்துக் காட்டு வதாக அமைந்து இருக்கிறது. பொதுவாக இந்த வரவு செலவு திட்டம் பொறுத்த வரையில் இது எல்லோரும் பாராட்டத்தக்க முறையிலே சிறப்பாக அமைந்து இருக்கிறது என்று பெருமை யோடு சொல்லிக் கொள்வதில் யாருக்கும் தயக்கம் இருக்காது என்று கருதுகிறேன். ஆகையினால் அந்த அளவுக்கு இந்த வரவு செலவுத் திட்டத்தை நல்ல முறையில் அதிகமான சிரமங்களுக்கு இடையே தயாரித்த இந்த அரசாங்கத்தினுடைய முதலமைச்சர் அவர்களைப் பாராட்டிப் பேச விரும்புகிறேன்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலேயே இந்த சபையிலே உணவு உற்பத்தியைப்பற்றி குறிப்பிடும்போது நாம் போர் முனைக்கு எவ்வளவு ஆயுதமாக வெடிமருந்துகள் செய்தோமோ அது போலவே இந்த எரி முனைக்கும் உழவுத் தொழிலுக்கும் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டேன். இந்த வரவு செலவு திட்டத்தைப் பார்க்கிறபோது விவசாய வளர்ச்சியைப்பற்றியே, 6, 7 பகுதிகளில் தெளிவாகவும் மிகவும் விளக்கமாகவும் பேசப்பட்டு இருப்பது, அரசாங்கத் தினுடைய கவனம் உழவர்கள் பக்கத்திலே, உணவு உற்பத்தியிலே அதிகமாகத் திரும்பி இருக்கிறது என்பதைக் காட்டுவதற்குப்

[திரு. ஏ. சாம்பசிவ செட்டியார்] [3rd March 1965

போதுமானதாக இருக்கிறது. இருந்தாலும் இன்னும் உழவர் களிடத்தில் போதுமான ஆர்வம், தங்கள் தொழிலில் பெருமை, இவை ஏற்படவில்லை. அதற்குரிய முறைகளை ஆராய்ந்து, தீவிர மாக மேற்கொள்வதற்கு நல்ல வழிவகைகளைக் காணவேண்டும். இப்போது ஆங்காங்கே உள்ள பஞ்சாயத்து யூனியன் மூலமாக, விவசாயிகளுக்கு உரம், தழை, அவைகளுக்கு வேண்டிய பணம் இவற்றையெல்லாம் கொடுத்து வருகிறார்கள். ஆனால் அவைகளைப் பெறுவதிலே கூட, விவசாயிகளுக்கு மிகுந்த தொல்லை இருக்கிறது. அதற்காக இரண்டொரு முறை அடிக்கடி ஊருக்குச் சென்று வருவதோ, அங்குள்ள அதிகாரிகளைப் பார்த்துவிட்டு, நாளை வா, அதற்கடுத்த நாள் வா என்று திருப்பி அனுப்பப்படுவதோ, இது மாதிரியான சிரமங்களோ இன்னும் விவசாயிகளுக்கு இருந்து கொண்டுதான் இருக்கிறது. ஆகவே, இந்த வரவு செலவு திட்டத் தில் அதைப்பற்றி கூட ஒரு வரி பேசப்பட்டு இருப்பது குறித்து நான் மிகவும் பெருமைப்படுகிறேன். மகிழ்ச்சி அடைகிறேன். விவசாயிகளுக்கு அவர்கள் இருக்கிற இடத்திலே கொண்டுபோய், உரம் முதலியவற்றை விநியோகம் செய்ய வேண்டுமென்று எழுதப் பட்டு இருக்கிறதைப் பார்க்கிறபோது அந்தக் குடியானவர் களுக்கு இது மிகவும் மகிழ்ச்சியைத் தரும் என்பதைச் சொல்லிக்

(Deputy Chairman in the Chair.)

கொள்ள விரும்புகிறேன். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ஒரு ஜீப் இருக்கிறது. கிராமத்திலுள்ள விவசாயிகளுக்கு முன் பணம் கொடுக்க வேண்டியிருந்தாலோ அல்லது அவர்களிடம் பத்திரங்களில் கையெழுத்து வாங்க வேண்டியிருந்தாலோ, இதை யெல்லாம் செய்யும் போது அவர்களை பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்திற்கு அழைக்காமல் அதிகாரிகள் அந்தந்த கிராமங் களுக்குச் சென்று அதையெல்லாம் செய்யலாம். அரசாங்கம் அவர்களுக்கு அவ்வாறு உதவி செய்தால், அவர்களுக்கு அரசாங் கத்தினிடம் இன்னும் பிடித்தமும் நல்லெண்ணமும் ஏற்படும்; அவர்களுக்கு அவர்களுடைய தொழிலிலும் இன்னும் ஊக்கமும் ஆர்வமும் பிறக்கும். அவர்களுக்கு இந்த முறையில் உதவி செய் வதற்கு இந்த ஆண்டாவது ஒரு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயத்திற்குத் தேவையான துணைக் கருவிகள், ஆழமான கிணறு தோண்டுவதற்கு வேண்டிய ட்ரில்லர், இயந்திர கலப்பைகள் முதலியவைகளையெல்லாம் நாம் இன்னும் போதிய அளவு தயாரித்துக் கொடுக்க முடியவில்லை. அயல் நாட்டு உதவியுடன் இங்கே பெரிய தொழில்களை அமைத்து, இயந்திரக் கலப்பைகள், புல்டோஸர்கள், ட்ரில்லர்கள் போன்ற கருவிகளை இங்கேயே தயாரிக்க ஏற்பாடு செய்தால், அது அவர்களுக்கு இன்னும் விரைவில் துணை புரிய வகை செய்யும்.

தஞ்சாவூர் ஜில்லாவில் தீவிர சாகுபடித் திட்டத்தை மேற் கொண்டு புதிய கிணறுகள் வெட்ட நம் அரசாங்கம் முன்வந்திருப் பது வரவேற்கத்தக்கது. இது சம்பந்தமாக ஒரு கருத்தை நான் பல ஆண்டுகளுக்கு முன்பே கிழ் மையில் சொல்லியிருக்கிறேன். சேலம், கோயம்புத்தூர், திருச்சி ஆகிய ஜில்லாக்களில் ஒரு கிணறு

3rd March 1965] [திரு. ஏ. சாம்பசிவ செட்டியார்]

தோண்டுவதற்கு ஆகக்கூடிய செலவு ரூ 3,000-த்தில் தொடங்கி ரூ. 6,000-த்திலோ அல்லது ரூ 12,000-த்திலோ அல்லது வேறு எங்கேயோ போய் முடியும். ரூ 30,000 செலவாகும் என்று மதிப் பிற்குரிய உறுப்பினர் ஸ்ரீ செட்டியார் சொல்கிறார். இவ்வளவு பணம் செலவழித்துத் தோண்டினாலும் தண்ணீர் கிடைக்குமா என்பது சந்தேகம் தான். தஞ்சாவூர் ஜில்லாவில் குழாய்க் கிணறுகளை ரூ 700 அல்லது ரூ 800 அல்லது ஒருசில ஆயிரம் ரூபாய்களில் அமைத்துவிட முடியும். எனவே, தஞ்சாவூர் பாசனம் முழுவதையுமே குழாய்க் கிணற்றுப் பாசனமாக ஆக்கிவிட்டு, சேலம், திருச்சி, கோயம்புத்தூர் ஆகிய பகுதிகளுக்குக் காவிரித் தண்ணீரைக் கொடுப்பதற்கான வழி பற்றி சிந்திக்க வேண்டும் என்று பத்து, பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பே சொல்லியிருக் கிறேன். இப்போது தஞ்சாவூர் ஜில்லாவில் குழாய் கிணறுகள் தோண்டப்பட்டிருக்கின்றன. பூமிக்குள்ளே இருக்கும் தண்ணீரை வெளியில் கொண்டுவந்தால் நிலமும் வளமாக இருக்கும் என்று அமெரிக்காவிலிருந்து நம் நாட்டுக்கு வந்த ஆராய்ச்சியாளர்கள் சொன்னதனாலோ, தண்ணீர் இல்லாத காலத்தில் பயிர்கள் காய்ந்து போகாதபடி பார்த்துக்கொள்வதற்காகவோ அல்லது வேறு என்ன காரணத்தாலோ இப்போது இந்தத் துணைப் பாசனம் அமைக்கப் பட்டிருக்கிறது. தஞ்சாவூர் ஜில்லாவில் குழாய்க் கிணறுகள் தோண்ட ஆரம்பித்திருப்பதால், சேலம் போன்ற பகுதிகளுக்கு காவிரித் தண்ணீரைக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று அரசாங்கத்தை மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாய அபிவிருத்திக்காக உரம் கொடுத்து அதிகமான தானியத்தை விளைவிக்க நாம் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோம். இந்த விஷயத்தில் இரண்டு கருத்துக்கள் இருக்கின்றன. செயற்கை உரமானது நிலத்திலுள்ள சத்துக்களை அதிகமாக கிரகித்து அவைகளைப் பயிருக்குக் கொடுத்துவிடுவதால், நிலம் காலப்போக்கில் வலுவிழந்ததாகி விடுகிறது. ஆகவே தழை உரங்களை அதிகமாக உபயோகிக்க ஏற்பாடு செய்யவேண்டும். பஞ்சாயத்து யூனியன்களை அமைத்த காலத்தில், உரங்களுக்கான பயிர்த்தழைகளை வளர்ப்பதற்கு தீவிர சாகுபடித் திட்டத்தில் ஏற்பாடு செய்தோம். ஆனால் பிறகு ஏதோ தவறான கணக்குகள் வைக்கப்படுகிற காரணத்தாலோ அல்லது வேறு ஏதோ காரணத் தாலோ, அந்த ஏற்பாட்டை விட்டுவிட்டு செயற்கை உரங்களைப் போட்டு விவசாய உற்பத்தியைப் பெருக்க ஏற்பாடு பண்ணி விட்டோம். இந்த ஏற்பாட்டைத் தொடர்ந்து நீடித்தால் நிலத்தின் வளம் குன்றிவிடும் என்று பலரும் அபிப்பிராயப்படுகிறார்கள். எனவே தழை உரங்களுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

இந்த சந்தர்ப்பத்தில் இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். 5-1 p.m
உரங்களுக்காகத் தழைகள் வேண்டியிருப்பதால் பெரிய காடுகளில் உள்ள மரங்களையும் செடிகளையும் முன் அனுமதி பெற்றே வெட்ட வேண்டும். பெரிய காடுகளிலுள்ள மரங்களை சிலர் கள்ளத்தனமாக வெட்டும் வழக்கம் அதிகமாகி வருகிறது. குறிப்பாக, சேலத்தில் பெரிய கலராயம், சின்ன கலராயம், தும்பல் ஆகிய பகுதிகளில் உள்ள காடுகளை சிலர் வெட்டி காடுகளையும் காடுகளின் வளத்தையும்

[திரு. ஏ. சாம்பசிவ செட்டியார்] [3rd March 1965

கெடுக்கிறார்கள். எனவே, இந்த விஷயத்தில் இன்னும் சிறிது கடுமையான மேற்பார்வை இருக்கவேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

விவசாய உற்பத்திப் பெருக்கத்திற்கு நாம் எவ்வளவோ ஏற்பாடுகள் செய்திருந்தாலும் கூட, விவசாய உற்பத்தி இன்னும் போதிய அளவு பெருகவில்லை. இப்போது விவசாயத் தொழிலில் உணவு தானிய உற்பத்திக்கு அதிகம் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. சமீபத்தில் ஒரு நண்பரைவர் "நான் ரூ. 240 செலவு செய்திருக்கிறேன். 10 மூட்டை தான் கிடைத்தும் போயிருக்கிறது" என்று என்னிடம் சொன்னார். ஒரு மூட்டை, 50 படி கொண்டது. எனவே ரூ. 240 தான் வரும் போல் இருக்கிறது. லாபம் இல்லை என்பதாக அவர் சொன்னார். இன்றுள்ள நிலைமை நண்பரைவர்களை உணவு தானிய உற்பத்திக்கு ஊக்கமளிப்பதாக இல்லை. பெருமைப்படுத்தக் கூடியதாக இன்று இல்லை. இப்போது ஒரு ஏக்கருக்கு மூட்டை வைத்து கேள்விப்பட்டால், ரூ. 30 கொடுக்க வேண்டியிருக்கிறது. முன்பெல்லாம், மாதம் 15 ரூபாய்க்கு ஆள் 200, 300 படி நெல் கொடுத்தால் விவசாயத்திற்கு வேலையாட்கள் கிடைப்பார்கள். இன்று கூலியாட்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 3 அல்லது ரூ. 4 கூலி கொடுப்பதால், உழவுத் தொழிலுக்குக் கூலியாட்களே கிடைப்பதில்லை. எனவே விவசாயம் அதிகச் செலவுள்ளதாக ஆகிவிட்டது. உணவு தானிய விவசாயம் இப்போது லாபகரமாக இல்லை. கரும்பு, வாழை முதலியவற்றைப் பயிரிட்டால் அதிக வருமானம் கிடைக்கிறது; ஒரு ஏக்கருக்கு முட்டுவழிக்காக ரூ. 1,000 செலவானாலும் ரூ. 1,500 மேற்கொண்டு கிடைக்கக்கூடும். எனவே, உணவு தானிய உற்பத்தி அதிகரிப்பில் விவசாயிகள் ஊக்கம் கொள்ளும்படி செய்ய வேண்டுமானால், ஒரு மூட்டை நெல் அதற்கு இவ்வளவு ரூபாய் என்ற நிலையில் நெல் மூட்டைகளுக்கு அவர்களுக்கு குறிப்பிட்ட தொகை பணம் இனாமாகக் கொடுத்துக் தான் ஆகவேண்டும். தான்ரு லட்சார் ஏக்கரில் நெல் பயிரிடல் செய்தால், ஒரு கடனுக்கு 100 ரூபாய் வீதமாவது பணம் கொடுக்கலாம். மூட்டைக் கொடுத்தால், நான் ரு மூட்டைக்கு ரூ. 4 கோடி வேண்டியிருக்கும். எவ்வளவோ செலவு செய்யும் போது, இந்த 4 கோடி ரூபாய் செலவு ஒரு பெரிய விஷயமல்ல என்று நினைக்கிறேன். மனிதவர் நல்ல நிலையில் இருப்பதற்கு மனிதனுடைய உடம்பும் உள்ளமும் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். உடம்பு ஆரோக்கியத்திற்கு நல்ல உணவு தேவை. உள்ளத்தின் ஆரோக்கியத்திற்கு நல்ல கல்வி தேவை. கல்விக்கென கிட்டத்தட்ட 30 அல்லது 40 கோடி ரூபாய் செலவு செய்யும் தொகையும் உணவுக்காகச் செலவு செய்யும் தொகையும் போதாது என்பது என் அபிப்பிராயம். விவசாயத்திற்கு இப்போது செலவழிப்பதை விட இன்னும் அதிகம் செலவழிக்க வேண்டும். விவசாயிகளுக்கு அவர்களுடைய ஊர்களிலேயே முன் பணம், விதைகள் முதலியவை கொடுப்பதற்கு ஏற்பாடு செய்து அவர்களை விவசாயத்தில் ஊக்குவிக்க வேண்டும். அவர்கள் உற்பத்தி செய்யும் விவசாயப் பொருள்களுக்கு இன்னும் அதிகமான விலை கிடைக்கச் செய்ய முடியுமா என்றும் பார்க்க வேண்டும். இதில் ஒரு பெரிய தொல்லை

3rd March 1965] [திரு. ஏ. சாம்பசிவ செட்டியார்]

ஏற்பட்டது. இந்த உணவு நெருக்கடி காரணத்தால் அதிகமாகவும் விரைவாகவும் நெல் கொள்முதல் செய்யவேண்டுமென்று மேல் அதிகாரிகள் அடிக்கடி உத்தரவு பிறப்பித்துக்கொண்டே இருந்தார்கள். அந்தக் காரணத்தால் நெல் அறுவடை ஆவதற்கு முன்பே களத்தில் கொள்முதலுக்குச் சென்றோம். நெல் பச்சையாக இருந்ததாலும் ஈரம் காயாமல் இருந்ததாலும் ஒரு சாக்கில் 75 கிலோ பிடிக்கவேண்டுமென்றால் அதற்கு மேலாக மூன்று நான்கு கிலோ அதிகமாகவும் இன்னும் சில இடங்களில் சாக்கு கொள்ளும் அளவுக்கும் பிடித்தார்கள். அதன் மூலம் குடியானவர்களின் அதிருப்தியைத் தேடிக்கொண்டார்கள். அத்தோடு நாம் உணவுப் பொருள்களை கொள்முதல் செய்ய நியமித்திருப்பவர்களுக்கு இந்தத் தொழிலைப் பொறுத்த வரையில் முன் அனுபவம் இல்லை. சம்பா, குறுவை என்று நாம் தெரிந்துகொள்ள அனுபவம் குறைவாக இருக்கிறது என்று கருதுகிறேன். இதை நான் சரியாகவே சொல்லுகிறேன் என்று மனப்பூர்வமாகவே நம்புகிறேன். ஒட்டுக்கிச்சடி நெல்லை சீரகசம்பா என்று வாங்குகிறார்கள். சேலம் மார்க்கெட்டிங் சொசைட்டியில் இதுபோல் நடந்திருக்கிறது. இதைச் சொன்னால் எங்கள் காலுகா சப்ளை ஆபீசர், கலெக்டர் போன்றவர்கள் தங்கள் பேரில் குறைசொல்வதாகச் சொல்கிறார்கள். தஞ்சாவூரில் என்ன நெல் வாங்கினீர்கள் என்று கேட்டால் குறுவை நெல்லை சீரகசம்பா என்று வாங்கியிருக்கிறார்கள். இப்போது அதுபற்றி மேல் நடவடிக்கையும் எடுத்து இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அதைப்பற்றி மேலே தெரிந்துகொள்ள நான் விரும்பவில்லை. எதற்காகச் சொல்கிறேன் என்றால் நெல்கொள்முதல் செய்ய நியமிக்கப்பட்டிருப்பவர்களுக்கு இந்தக் துறையில் முன் அனுபவம் இல்லை. ஜில்லாவுக்கு ஜில்லா மாறுபட்ட நிலை இருக்கிறது. திருச்சியில் குடம் சம்பா என்று போட்டு இருக்கிறார்கள். கிச்சடி யையிட அதற்கு நல்ல விலை உண்டு. அதற்கு ரூ. 45 நெல்லைவுக்குக் கிடைக்கிறது. சேலத்தில் கஷ்டப்பட்டு அதை வேளாண்மை செய்கிறார்கள். அதில், அந்த அதை சம்பா என்று போட்டு ரூ. 43, 42 என்று கொடுத்திருக்கிறார்கள். ஒரு நெல்லைவுக்கு ரூ. 3, 4 வித்தியாசமாக இருக்கிறது. இதனால் கிராமத்திலுள்ளவர்கள் அரசாங்கத்தைப் பற்றியும் கொள்முதல் பற்றியும் மனதில் தப்பாக நினைப்பதற்கு இடம் ஏற்படுகிறது. உணவு கொள்முதல் செய்வதில் நமக்குப் போதுமான அனுபவம் வருகிற வரையில் நம்முடைய அரசாங்க அலுவலர்கள் பயிற்சி பெறுகிற வரையில் பாகம் பாகமாகப் பிரித்து ஒரு பகுதியில் வியாபாரிகளை நியமித்து அவர்களைக் கொள்முதல் செய்யும்படி செய்து விலை ஏறாமல் கட்டுக்குள் வைத்துக்கொண்டு இந்த முறையை மாற்றுவதில் சில நாட்களுக்குள் இந்த நிலைமை சீர்பட்டுப் போகும். இதனால் நியாயமாகவே எற்கனவே ஏற்பட்ட தவறுகளைத் திருத்திக்கொள்ள முடியுமென்று நினைக்கிறேன். ஆகவே இந்த வகையில் விவசாய வளர்ச்சிக்கு அரசாங்கம் செய்திருக்கிற பல பெரிய காரியங்களைப் பாராட்டி விவசாயிகளுக்கு செய்கிற உதவிகளை கிராமங்களில் கொண்டுபோய் சேர்க்க வேண்டுமென்று சொல்லியதற்காகவும் மேலும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. எ. சாம்பசிவ செட்டியார்] [3rd March 1965

கல்வித் துறையில் செலவத்தில் இன்னியாரிங் கல்லூரி தொடங்க ஏன்று ஆண்டுகளாக எற்பாடு இருந்தது. வருகிற ஆண்டில் தொடங்கப் போவதாக சொல்லியிருக்கிறார்கள். அதற்கு மகிழ்ச்சி தெரிவித்துக்கொள்கிறேன். சேலம் இரும்பு தொழிற்சாலை தொடங்குவதற்கு வேண்டிய முடிவுகளை இந்த அரசாங்கம் தன் னுடைய சொந்த முயற்சியில் உறுதியோடு மேற்கொண்டதற்காக மேலும் பாராட்டுகிறேன். இந்த வரவு செலவுத் திட்டத்தை பற்றி வரி எதுவுமில்லாமல் செய்திருக்கும் திறமையைப் பாராட் டுக்தான் ஆகவேண்டும். தேர்தல் முன்னால் அளிவிய தொழிற் பாலி ஒன்று தொடங்குவதாக இருந்தது. அதை முறைப்படி கில் நாட்களில் தொடங்குவார்கள் என்று கருதுகிறேன். தமிழ் நாடு தொழில் துறையில் ஒரு காலத்தில் கடைசி என்றிருந்த நிலைமை மாறி இப்போது முதலாவதாக வருவதற்கு முயற்சி செய்துகொண்டு வருகிறோம். அடுத்து நான்காவது திட்டத்தில் முதலாவதாக வந்து விடுவோம் என்று பெருமை கொள்ளும் அளவு க்கு தமிழ் தொடர்ந்து முன்னேறுகிறது. ஆனாலும் திட்டத்தில் ற்கனவே ஒதுக்கியதைவிட 50 கோடி ரூபாய் அதிகமாக செலவு செய்திருக்கிறோம். அதற்காகப் பெருமைப்படுகிறோம். தானு மாறுக செலவு செய்யவில்லை. முறையாக வெளிநாட்டு தொழில் நிபுணர்கள் பாராட்டும் வகையில் செய்திருக்கிறோம். சிலபேர், அவசரமாக அள்ளி இறைத்துவிட்டோம் என்று கூறுகிறார்கள். பொருளாதார நீதியில் பணவிக்கம் ஏற்பட்டிருக்கிறது என்ன சொல்வது சரியாக இருக்கலாம். தொழில் வளர்ச்சி என்று சொல்லும்போது அப்படங்கம் நிறையாகச் செய்கிறது என்கிற நம்பிக்கை காரணமாகத்தான் வெளிநாட்டினர் தமிழ்நாட்டில் முதலீடு போட்டு தொழில் களர்க்கப் பாடுபட்டுக்கொண்டு வருகிறார்கள். ஆகையால் இந்த அரசாங்கம் தொழில் துறையின் வளர்ச்சிக்காக எடுத்துக்கொண்ட முயற்சிகளைக் கண்டிப்பாகப் பாராட்டாமல் இருக்கமுடியாது.

மதிப்பிற்குரிய நண்பர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பல்லியதைப்போல கல்வியில் ஏராளமாக பணம் செலவு செய் கிறோம். முன்பு இருந்ததைவிட பாதத அளவில் எல்லோருக்கும் கல்வி அளிக்கும் முறையில் தினமாகச் செயலாற்றி வருகிறோம். நாம் எதற்காகப் படிக்க வேண்டுமென்று கருதுகிறோமோ அதை அடையாமல் நிலைமை எற்பட்டுவிட்டது. அதற்குக் காரணம் எல்லாப் பள்ளிகளிலும் பயிற்சி பெற்ற திறமையான ஆசிரியர்கள் இல்லாததுதான். விரைவாக கல்வித்துறையை விரிவு படுத்திக் கொண்டு போனதால் பெரும்பாலான பள்ளிகளின் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இருக்கும்படியான நிலைமை எற்பட்டது. அவர்களுக்கு ஆசிரியத் தொழிலில் பிடிப்பில்லை. நேராகக் கல்லூரியிலிருந்து வந்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் ஆசிரியர் தொழிலில் சில நாட்கள்தான் தங்குகிறார்கள். அதனால் அந்தத் தொழிலுக்கு இருந்த பெருமை குறைந்துவிட்டது. புதியவர்கள் நிலைத்தவர்களாக இருப்பதாலும் அவர்கள் சரியான முறையில் பயிற்சி பெற்றதாலும் இளைஞர்களை தவறான பாதையில் செலுத்தும் நிலை தாராளத்தில் இருப்பது வருத்தம் தருவதாக இருக்கிறது. அமரர் முனிவர் திரு. க. அவர்கள், மாணவர்கள்

3rd March 1965] [திரு. எ. சாம்பசிவ செட்டியார்]

என்ற சொல்லுக்கு அரிய பொருள் சொல்வார்கள். "வருங்காலத் திற்குரிய நல்ல மாணவர்களை எல்லாம் தம்மாட்டு மாணவர ஆக்கிக் கொள்ளும் முயற்சியில் ஈடுபடுகிறவர்கள் மாணவர்கள்" என்று பெருமையோடு சொல்லிக்கொள்வார்கள். தமிழகம் அந்த வகை யில் பெருமையோடுதான் இருந்தது. இளைஞர்கள் எப்போதும் துடிப்பு உள்ளவர்கள். முற்றிலும் அவர்கள்மேல் தவறு சொல்லத் தயாராக இல்லை. இந்த வரவு செலவுத் திட்டத்தில் பேசும் போதுகூட மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள், மாணவர்கள் உணர்ச்சி வசப்பட்டவர்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை பயன்படுத்திக்கொண்டு சமூக விரோத சக்திகள் தீய காரியங் களைச் செய்துவிட்டன. அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்று கடைசியில் அவர்கள் சொல்லியிருப்பது அவர்களுடைய ஜீவகாருண்ய உள்ளத்தைத் தெளிவாக்குவதாக அமைந்திருக் கிறது. கல்வித்துறையின் வளர்ச்சிக்கு ஆசிரியர் தொழிலுக்கு மக்கமுண்டாக்கவேண்டும். இப்போதுள்ளதைவிட சம்பளம் உயர்வாகக் கொடுக்கத்தான் வேண்டும். இப்போது கொடுக்கப் படும் சம்பளமும் நல்லநிலையில் தான் இருக்கிறது. முன்பு நான் அத்தொழிலில் இருக்கும்போது ரூ. 30 அல்லது 45 என்று சம்பள மாக வாங்கிக்கொண்டிருந்தேன். இப்போது தொடக்கமே ரூ. 150 ரூபாய் கொடுக்கிறார்கள். இருந்தாலும் அது கவர்ச்சியாக இல்லை. பொருளாதார நிலையை ஒப்பிட்டுப்பார்க்கும்போது இந்தப் பணம் இன்றைய வாழ்க்கைக்கு போதுமானதாக இல்லை. ஆகை யால் ஆசிரியர்களுக்கு இன்னும் நல்ல சம்பளம் கொடுக்க வேண்டும். 'எழுத்தறிவித்தவன் இறைவனுவான்' என்ற மூதுரை படி மிகவும் மதிக்கத்தக்க தொழில் அது. படித்தவர்கள் அத் தொழிலை விரும்பி ஏற்க மறுக்கிறார்கள் என்று சொல்கிறோம். ஏனென்றால் அத்தொழில் தனக்குள்ள மதிப்பை இழந்துவிட்டது. அதை சரிசெய்வது அரசாங்கத்தின் கடமை. "நல்லனடை நூல்கள் வேந்தர்க்குக் கடனே" என்று ஔவையார் கூறியிருக்கிறார்கள்: ஆகையால் அத்தப்பொறுப்பு அரசாங்கத்தினுடையது. தீய சக்திகளை ஒழிப்பதற்கும் நல்ல பண்புகளை வளர்ப்பதற்கும் அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும். நல்ல சமுதாய சங்கங்கள் மூலமாகவோ அல்லது பெற்றோர்கள் சங்கம் மூலமாகவோ தேர்ச்சி பெற்ற பெரியவர்களைக் கொண்டோ மத சமய சங்கங்களை வைத்துக்கொண்டோ எப்படியாவது சமுதாயத்தில் நல்ல பண்பு களை நிலைநாட்ட முயற்சி செய்யவேண்டும். கல்வித் துறையில் பெரும் பணத்தை செலவு செய்தும் பயனில்லை என்று சொல்லா மலிருக்க முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். மாணவர்கள் உணர்ச்சி வசப்பட்டு செய்திருந்தாலும் கூட தங்களுடைய எதிர்ப்பை, போராட்டத்தை வாபஸ் வாங்குகிறோம் என்று தெரிவித்தற்காக என்னுடைய மனப்பூர்வமான பாராட்டுதலை மாணவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதன் காரண மாக முதலமைச்சர் அவர்களும் மன்னிக்கத் தயாராக இருப்பார் கள் என்று நினைக்கிறேன். அப்படியிருந்தால் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுதலை தெரிவித்துக்கொள்கிறேன். கல்வித் துறையில் அதிகமாக கவனம் செலுத்தவேண்டுமென்று சொல்லின்

கொள்கிறேன். வரவு செலவுத் திட்டத்திலே முன்னுல் பேசியவர் கள் சொல்லியதுபோல இந்த ஆண்டு ஐயாவு என்று பஞ்சப் படியை உயர்த்தியிருக்கிறோம். அதேபோல தரம அதிகாரி களுக்கு சம்பளம் திடீரென்று 17, 18 ரூபாயிலிருந்து ரூ. 30, 50 என்று உயர்த்தியிருக்கிறோம். அப்படியிருந்தும் புதிய வரி இல்லாதபடி வரவு செலவுத் திட்டம் சமர்ப்பித்ததற்காக அரசாங்கத்திற்கும் நிதித் துறையிலுள்ளவர்களுக்கும் தலைவரும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

DEPUTY CHAIRMAN : The House will now adjourn and meet again at 3 p.m. to-morrow.

The House then adjourned.

V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE

* 137 *Annual Report of the Madras Public Service Commission for the year* 1963-64.

* 138. *Notification issued with G.O. Press. No.* 2961. *Revenue, dated* 16*th December* 1964 *regarding amendment to the Madras General Sales Tax Act*, 1959.

* 139. *Notification issued with G.O. Press No.* 3010, *Revenue, dated* 21*st December* 1964 *regarding amendment to the Madras General Sales Tax Rules*, 1959.

* 140. *Notification issued with G.O. Ms. No.* 2589, *Rural Development and Local Administration, dated* 12*th December* 1961 *regarding amendments to rule relating to assessment and collection of taxes by Town Panchayats.*

* 141. *Notification issued with G.O. Ms. No.* 2590, *Rural Development and Local Administration, dated* 12*th December* 1961 *regarding amendments to rule relating to assessment and collection of taxes by Village Panchayats.*

* **Laid on the Table of the House on 1st March 1965.**

THE MADRAS LEGISLATIVE COUNCIL

Thursday, the 4th March 1965.

The House met in the Council Chamber, Fort St. George at three of the clock, Mr .Chairman (the HON. SRI M. A. MANICKAVELU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS

Pension for re-employed teachers in non-Government schools

* 95 *Q.*—SRI G. KRISHNAMOORTHY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether teachers in non-Government schools are eligible for pension during re-employment; and

(*b*) if not, the reasons therefor?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Teachers who retire and get re-employment in non-Government schools are eligible to draw the pension admissible to them, but the pay on re-employment is so fixed that the pension admissible and the pay during the re-employment together do not exceed the pay drawn at the time of retirement.

(*b*) Does not arise.

SRI G. KRISHNAMOORTHY : Sir, is it a fact that this benefit has been given to teachers in non-Government schools from 16th September 1961 and that many teachers who retired as between 1st April 1955 and 15th September 1961 are not eligible for this?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There cannot be any retrospective effect for this.

SRI G. KRISHNAMOORTHY : May I know, Sir, the formula adopted by the Government, and whether the term 'pay' includes dearness allowance also?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I would like to have notice, Sir.

Vigilance and Anti-Corruption Commission

* 96 *Q.*—SRI S. K. SAMBANDHAN : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) the number of persons arrested by Vigilance and Anti-Corruption Commission as on 1st November 1964; and

(*b*) the action taken against those persons?

[4th March 1965

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Forty-five persons.

(*b*) Some have been prosecuted. In respect of the others the investigation is in progress.

SRI S. K. SAMBANDHAN: Sir, will the Hon. the Chief Minister tell us that what is denoted by the expression 'some' and what is the number denoted by that expression?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Prosecution have been launched in some cases. In other cases investigation is not complete. On the completion of the investigation of the cases, action will be taken.

SRI S. K. SAMBANDHAN: Sir, what is the procedure followed by the Government as soon as persons are arrested for anti-Corruption cases?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Even if the investigation is not complete, the person concerned is placed under arrest. But when the investigation is complete, the charge-sheet is filed.

SRI S. K. SAMBANDHAN: Have the files come to the Government or to the Chief Minister from the Commission as soon as they are arrested, for information or opinion?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I know this much. It does not come to the Chief Minister as such. I do not know at what stage it is reported to the Government.

DR. H. V. HANDE: Sir, what are the offences included under this category? Are cases of nepotism also included or only bribery and corruption?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: If the hon. Member would like to have particulars. I require notice.

Electricity from sea waves

*97 Q.—SRI S. K. SAMBANDHAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to produce electricity from sea waves; and

(*b*) if so, the stage at which the matter now stands?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) & (*b*) There is at present no proposal in this regard.

SRI S. K. SAMBANDHAN: If I remember correct, Sir, as soon as the Hon. Minister for Industries returned from foreign tours, he used to give expression that there were possibilities and that proposals were there and that the Government were taking keen interest and steps also. So, will the Hon. Minister tell us whether any steps have at any time been taken, and if so, what they are?

4th March 1965]

THE HON. SRI R. VENKATARAMAN: I have been careful in the choice of my words. I said, 'There is no proposal at present'. We have some ideas. After all, we gather a large number of ideas when we see things happening in different parts of the world. Then we gather information about them. After gathering the information, we try to see whether they can be adopted to suit our conditions and circumstances. The stage at which the matter stands now is that we have gathered a lot of information. Some of the material has come in French, and we are getting it translated also. So, this is the preliminary stage at which it stands.

DR. H. V. HANDE: Sir, may I know whether in the extensive tours of the Minister for Industries he saw at least one place where this particular method was being utilised?

THE HON. SRI R. VENKATARAMAN: Yes, in the Rance-tidal Wave Scheme.

SRI S. K. SAMBANDHAN: When other sources are limited for the production of electricity, will the Government take steps to exploit this source?

THE HON. SRI R. VENKATARAMAN: If it is feasible, we shall certainly do it. Because our sources are limited, we are trying extraordinary remedies.

MR. CHAIRMAN: I understand Ozone is produced.

SRI G. KRISHNAMOORTHY: Is it comparatively costly?

THE HON. SRI R. VENKATARAMAN: It is too early to say whether it is costly. At this stage, the information with us does not justify our coming to any conclusion.

Betel cultivation

*98 Q.—SRI K. S. ABDUL WAHAB: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the total acreage of betel cultivated in the State during 1963–64;

(*b*) the total quantity produced; and

(*c*) whether any new scheme has been introduced for the cultivation of betel in the State?

THE HON. SRI P. KAKKAN: (*a*) 16,000 acres.

(*b*) 12,80,000 lakhs of leaves.

(*c*) No new scheme was introduced during 1963–64.

(அ) 16,000 ஏக்கர்.

(ஆ) 12,80,000 லட்சம் வெற்றிலைகள்.

(இ) 1963-64-ல் புதுத்திட்டம் எதுவும் கொண்டுவரப்பட வில்லை.

[4th March 1965

திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி: இதில் எவ்வளவு நம்முடைய ராஜ்யத்தைவிட்டு ஏற்றுமதி ஆனது?

கனம் திரு. பி. ககன்: எவ்வளவு என்ற கணக்கு இங்கு இல்லை. குறிப்பாக நம் மாநிலத்திலிருந்து பம்பாய் போன்ற வட இந்திய மாநிலங்களுக்குப் போகிறது. வெளி நாட்டிற்கும் ஏற்றுமதி செய்கிறோம்.

Minor irrigation dam in the Palakombai area

*99 Q.—SRI N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether there is any proposal to build a minor irrigation dam if the Palakombai area, Andipatti Panchayat Union limit, Madurai district; and

(b) if so, the stage at which the matter now stands?

THE HON. SRI P. KAKKAN: (a) Yes.

(b) It is under detailed investigation by the Chief Engineer (Irrigation), Madras.

(அ) ஆம்.

(ஆ) சென்னை (பாசனத்) தலைமைப் பொறியாளர் இந்த விஷயத்தை விரிவாகப் பரிசீலனை செய்து வருகிறார்.

Bridge over Gadilam river

*100 Q.—SRI M. ETHIRAJULU: Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether there is any proposal to reconstruct the bridge over the Gadilam river in Cuddalore town; and

(b) if so, the stage at which the matter now stands?

THE HON. SRI V. RAMAIAH: (a) & (b) No. There is however, a proposal to construct a second new bridge across Gadilam river at mile 0/5–6 of Cuddalore-Chidambaram road in Cuddalore Municipal limits joining the existing bridge. The matter is under consideration.

SRI S. K. SAMBANDHAN: Sir, this has been pending for a long time. Will the Government see that it is expedited at least now?

THE HON. SRI V. RAMAIAH: The information I have is that we have started the work, and we have taken up the construction recently. My desire is that the project is executed as quickly as possible.

SRI S. K. SAMBANDHAN: Thanks.

4th March 1965]

Road connecting Mandapam and Pamban

*101 Q.—SRI M. RAJAH IYER: Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether there is any proposal to form a road connecting Mandapam and Pamban; and

(b) if so, the stage at which the matter now stands?

THE HON. SRI V. RAMAIAH: (a) Yes.

(b) The Government of India have recently sanctioned an estimate for Rs. 65,700 for the investigation of the bridge work and the connected road works. The State Government have sanctioned the employment of necessary staff by the Chief Engineer (Highways and Rural Works) for the investigation work.

SRI M. RAJAH IYER: Will the Hon. Minister tell us at what stage the investigation is, and whether the prospects of a road-bridge across the Pamban channel are bright now?

THE HON. SRI V. RAMAIAH: The recent information is that the detailed investigations are being continued. As far as preliminary investigations are concerned, they are all ready. Rough estimates have been prepared and after the recent cyclone, we thought we must take up the work quickly. This road should have been completed much earlier than the railway bridge. But actually we find that the railway bridge has been completed before we can complete the detailed investigations. The Government are anxious that this bridge should also be there. As soon as the detailed investigations are over, steps will be taken.

திரு. எஸ். பி. கே. ஏ. லெக்ஷ்மணன் செட்டியார்: சாதாரண ரோடு போக்குவரத்து வசதியைச் செய்வதைக் காட்டிலும் 'மெக்கனைஸ்டு ஃபெர்ரி கிராசிங்' ஏற்பாடு செய்வது சுலபமாகவும் குறைந்த செலவிலும் செய்யலாம் என்று சொல்வதால் சர்க்கார் அதைக் கவனிக்குமா?

கனம் திரு. வி. ராமய்யா: அதுபோன்ற ஒரு கருத்து பேசப் பட்டுவருகிறது. ஆனால் இன்று அதற்காக இந்த இன்வெஸ்டிகேஷன் வேலையை நிறுத்திவைக்கவில்லை. அதுவும் நடக்க வேண்டும். அதே சமயத்தில் சேதுசமுத்திர திட்டம் வந்தபிறகு அதனால் ஏற்படக்கூடிய பலாபலன்களை மனதில் வைத்து எது அந்தப் பகுதி மக்களுக்கு வசதியாக இருக்குமோ அதை அரசாங்கம் செய்ய முயற்சி எடுக்கும்.

SRI K. S. ABDUL WAHAB: May I know the spot where the bridge is to be constructed—whether it is to be constructed alongside of the railway bridge or at a different place?

THE HON. SRI V. RAMAIAH: That, I am not able to say. But it will be very near the railway station.

SRI V. K. RAMASWAMY MUDALIAR: Will the entire cost be met by the Government of India?

[4th March 1965

THE HON. SRI V. RAMAIAH : It is a Government of India work.

Nurses

* 102. Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) the basis on which nurses are drafted to the A and B groups ;

(*b*) whether the emoluments and privileges are the same for these two groups; and

(*c*) whether promotions are given to these two groups collectively or separately?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) Candidates applying for training in Part 'A' (Teaching) and Part 'B' (Administration) of the Diploma in Nursing Course are automatically selected to undergo the respective training for which they apply, subject to their being qualified to undergo the training course and subject to the availability of seats.

(*b*) & (*c*) On completion of their training, the Nursing staff are posted back to their respective posts and they are allowed only their usual pay and allowances. At present, candidates possessing the qualification of Diploma in Nursing (Part 'A'—Teaching) have better prospects of promotion than those possessing the qualification of Diploma in Nursing (Part 'B'—Administration), as the former alone are eligible for promotion as Nursing Tutors. The Diploma in Nursing (Part 'B'—Administration) has not been prescribed as a necessary qualification to any particular category of posts and hence promotion for persons possessing this qualification is not as rapid as that for persons possessing the teaching qualification.

DR. H. V. HANDE : What is the minimum qualification for those who want to enter Part A and for those who want to enter Part B?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : For entering the Part A course, the candidates should have passed S.S.L.C. and have put in two years of service in a hospital. For entering the Part B course, an ordinary pass in S.S.L.C., a completed S.S.L.C. is necessary.

DR. H. V. HANDE : Are those people who have passed in Part A eligible for transfer to the mofussil headquarters hospitals where there is no teaching institution?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : In some cases they have already been posted.

DR. H. V. HANDE : Even in the matter of allotment of quarters, is there any distinction made between these two categories?

4th March 1965]

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : No. With regard to quarters, wherever quarters are available, the nurses are provided with quarters, particularly the unmarried nurses.

Income certificates

* 103 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether income certificate are insisted upon in the out-patient departments in the Government hospitals before treatment of each patient; and

(*b*) if so, whether there is any proposal to revise the procedure in this behalf?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) No.

(*b*) Does not arise.

DR. H. V. HANDE : Is the Hon. Minister aware that about six months ago a particular patient went to the Eye Hospital and he was denied treatment because he was not able to produce the income certificate? This matter was taken up by the Press also. A photostat copy of the prescription also appeared in one of the leading papers. Is the Minister aware of it? Can the Minister refute that?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Unfortunately, this information has not come up to Government.

DR. H. V. HANDE : Sir, I am given to understand from reliable authority that there is an officer in the Eye Hospital to decide whether the income of the patient who comes to the out-patient department is above or less than Rs. 100. Only after that officer decides, the patient will be treated. Otherwise, the patient will be charged even as an out-patient.

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : In all hospitals it is the policy of the Government and a rule has been framed that those people who are drawing more than Rs. 100 should pay for their hospital charges and diet. In cases where patients try to evade this payment, this certificate is insisted on, but not at the time of admitting the patient: and particularly in emergency cases there are strict instructions from Government not to insist upon the income certificate.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மருத்துவ மனையில் அனுமதிக்கப்படுகின்ற நோயாளிகளுக்குள்ள விதிகள் வெளியிலிருந்து வைத்தியம் செய்துகொள்ளும் நோயாளிகளுக்கும் அரசாங்கத்தால் கைக்கொள்ளப்பட்டிருக்கிறதா ?

[4th March 1965

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அவுட்-பேஷண்டாக இருந்தாலும் எவருக்கும் ப்ளட், யூரின் சக்சாமிலைஸன் செய்ய வேண்டுமென்றால் சர்டிபிகேட் வேண்டுமென்ற அவசியம் ஏற்படுகிறது.

DR. H. V. HANDE : There is no officer posted in the hospitals at the out-patient point to find out whether the patient's income is above or less than Rs. 100.

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : If there is no such officer in the out-patient block, the out-patient department has to make an assessment for this purpose.

DR H. V. HANDE : My purpose in putting this question is this. I have received a lot of complaints that there is a good deal of harashment done to the patients just because they are not able to produce the certificates at the out-patient department. That is why I make the request to the Hon. Minister . . .

MR. CHAIRMAN : The hon. Member is just transmitting the complaint to the Hon. Minister.

Thirumalai Naicker's palace

* 101 Q.—SRI N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether there is any proposal to shift the Courts housed in Thirumalai Naicker's palace at Madurai; and

(b) if so, whether a museum is to be started at Thirumalai Naicker's palace at Madurai?

THE HON. SRI N. S. S. MANRADIAR : (a) & (b) No, Sir.

SRI S. K. SAMBANDHAN : Mr. Chairman, the question-time is usually considered to be one hour. This House is having it for at least half an hour. A number of questions have been tabled by the Members of the Opposition. But the opportunity is very limited because the various departments do not send in the answers and the answers are much delayed. When such is the case, if the Hon. Chairman also restricts the number of supplementaries, it is unfortunate. That is only my submission. In future more supplementaries may be allowed, Sir, without any restriction of time.

MR. CHAIRMAN : The time for supplementaries is determined with reference to the importance of the question. The hon. Member will remember that yesterday there were about twelve supplementary on a single question.

SRI S. K. SAMBANDHAN : But that does not justify the Hon. Chairman's rejection of my genuine questions on an important matter like corruption.

MR. CHAIRMAN : Questions are over.

4th March 1964]

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—CALLING ATTENTION TO THE ERECTION OF CAUTION SIGNALS BY INSTALLATION OF RED LIGHTS AT CHECKPOSTS.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : கன்னியாகுமரி மாவட்டத்தில் பல இடங்களில் உணவுப்பொருள்கள் தடுப்பு சவுக்கைகள் ஏற்படுத்தி அவைகளில் பெருஞ்சாலியின் குறுக்கே தடியைப் போடுகிறார்கள். தக்க ரீதியில் சிவப்பு விளக்கிட்டு அபாய அறிவிப்பு செய்யவில்லை. அதனால் சிறுவாசக் கொணத்தில் இருக்கும் சவுக்கையில் சாலியின் குறுக்கே போடப்பட்டுள்ள தடியில் தனது மோட்டார் சைக்கிள் மோதி மிட்லேட் பாதிரியார் படுகாயப்பட்டிருக்கிறார். அதன் பிறகும் சாலியின் குறுக்கே தடைபோடும் இடத்திற்கு சற்று தூரத்தில் இருமருங்கும், (அபாய) முன் எச்சரிக்கை அறிவிப்பு ஏற்படுத்தப்படவில்லை. இந்த விஷயத்தை கனம் உணவு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HON. SRI V. RAMAIAH : Mr. Chairman, no instances, as the hon. Member referred to, have come to the notice of the Government. However, strict instructions are being issued to all the District Collectors to ensure that proper danger signals are installed on the road on both sides of the checkposts to avoid any such inconvenience to the road users.

III.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR 1965-66—*contd.*

MR. CHAIRMAN : Now we resume the discussion on the Budget. The hon. Member Sri Chitrarasu will now speak.

திரு. சி. பி. சிற்றரசு : தலைவர் அவர்களே, சர்க்கார் சமர்ப்பித்திருக்கின்ற வரவு செலவுத் திட்டம் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒன்று அதிலே ஊழியர்களுக்கும் போலீசுக்காரர்களுக்கும் படியை உயர்த்தியிருப்பதும், இரண்டாவது புதுவரிகள் போடவில்லை என்பதும், மூன்றாவது துண்டு விழுந்து இருந்தும் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை என்பதும் ஆகும். இந்த வரவு-செலவுத் திட்டத்தைப்பற்றிக் குறிப்பிடவேண்டும் என்றால் (pressure of necessity) தேவையின் அழுத்தம், படியை ஏன் இப்படி உயர்த்தி இருக்கிறீர்கள் என்று கேட்பதற்கு பதில் விலைகள் ஏறிவிட்டன என்று சர்க்கார் சமாதானம் சொல்லக்கூடும். பொருள்கள் விலை இப்போது ஏறவில்லை. அது ஏறி வெகு நாள் ஆகிவிட்டது. அப்போதெல்லாம் அதைப்பற்றிக் கவலிக்காமல் சட்டமன்றங்களிலே எதிர்க் கட்சிக்காரர்கள் எடுத்துச் சொல்லியும் போலீசுக்காரர்களுக்குச் சம்பளம் போட வேண்டும் என்று சட்ட மன்றத்திலே தோழர் கருணாநிதி கேட்டுக் கொண்டபோது போலீசுக்காரர்களுக்குச் சம்பளம் போட வேண்டும் என்று கேட்டு நீங்கள் காக்கா பிடிக்கிறீர்களா என்று கேட்டார்கள். இப்போது போலீசுக்காரர்களுக்குச் சம்பளம் ஏற்றியிருப்பதைப் பார்க்கிறபோது, நமக்கு அதே கேள்வியைத் திருப்பிக் கேட்கலாமா என்று தோன்றுகிறது. எப்படியிருந்தாலும் ஊழியர்களுக்கு ஏற்றியதற்காக மெத்த சந்தோஷப்

[திரு. சி. பி. சிற்றரசு] [4th March 1965

படுகிறோம். ஆனால் அதே நேரத்திலே மற்றவர்களுக்கும் இந்த மாதிரி வசதிகளைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறோம். வரிகள் போடவில்லையென்றால், வரிகள் போடுவதற்கு இடமில்லை. ஏற்கெனவே வரிகள் போட்டாய் விட்டது. ஆகையினாலே புதுவரி போடவில்லையே தவிர, வரி போடுவதற்கு இருந்து போடவில்லை என்று நான் கருதவில்லை. ஒரு ஆள் எவ்வளவு வரிகள் செலுத்துகிறார்கள் என்று பார்த்தால், காலையிலே இருந்து இரவு படுக்கின்ற வரையிலும் அல்லது இறந்து போகின்ற வரையிலும் வரிகளைக் கொடுத்தபடியே இருக்கிறான். காலையிலே எழுந்தவுடன் சிலர் காப்பி அருந்துகிறார்கள். டீ அருந்துகிறார்கள். அதிலே காப்பிக்கொட்டைக்கு வரி, சர்க்கரைக்கு வரி, தேயிலைக்கு வரி. பாலுக்கு வரி இல்லை என்றாலும் பால் விற்கிறவர்களே பாதி தண்ணீர் போட்டு வரியாகக் கலந்து விடுகிறார்கள். ஆனால் பாலுக்கும் விற்பனை வரி உண்டு. அதன் பிறகு சுருட்டு பற்ற வைத்தால், சுருட்டுக்கு வரி. சிகரெட்டுக்கு வரி. பத்த வைக்கின்ற தீப்பெட்டிக்கு வரி. பிறகு குளிக்கலாம் என்றால் உடம்பிலே போட்டுக் கொள்ளுகிற சோப்பு, சீக்காயுக்கு வரி தேய்க்கின்ற எண்ணைக்கு வரி. உடம்பைத் துவட்டுகின்ற துண்டுகளுக்கு வரி. சுடு தண்ணீருக்கு வரி. பச்சைத் தண்ணீருக்கும் வரி. அதன் பிறகு உணவுப் பொருள்கள் அவைகளுக்கும் வரி. உணவுப் பொருள்களில் மெத்தக் கலப்படம். அதன்பிறகு ரயில்வே கட்டணம், பஸ் கட்டணம். இதையெல்லாம் என்னால் கட்ட முடியாது, நான் செத்துப்போகிறேன் என்றாலும், தாராளமாகச் செத்துப்போ, உனக்கு மரண வரி உண்டு. ஆகையினாலே செத்துப்போனபிறகு கூட மரண வரி செலுத்தவேண்டிய நிலையில் இருக்கிறபோது வேறு வரிகள் போடவில்லை என்பதற்காக ஆச்சரியப்படுவதற்கில்லை. இன்னும் போகப் போக நிலைமைகளையும் கவனித்துப் பார்க்கவேண்டும். ஆனால் இந்தத் துண்டு விழுகின்றதை எப்படி சரி கட்டுவதற்கு சர்க்கார் நினைத்திருக்கிறது என்று பார்த்தால் இன்னும் சர்க்காருக்கு சிறிது நாளில் ஒரு 6, 7 கோடி ரூபாய் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதனால் இதைச் சரிப்படுத்திக்கொள்ளலாம் என்று எதிர்பார்த்திருக்கக் கூடும். இதையெல்லாம் எண்ணுகிறபோது, பட்ஜெட்டைப் பொதுவாக வரவேற்று அதிலே இருக்கின்ற குறைகளைச் சொல்லுகிறபோது, எறிய செலவுகள் நியாயமா அல்லவா என்பதை விவாதிப்பதற்கு முன்பே அடிக்கடி நாங்கள் போலீசுக்காரர்களுக்குச் சம்பளம் போட வேண்டும் என்று சொல்லபோது, காக்கா பிடிக்கிறீர்கள் என்றும், இவர்களே செய்கிற போது தாராள சிந்தை உடையவர்கள் என்றும் சொல்லி இந்த மாதிரி எதிர்க்கட்சிகளுடைய நிலைமைகளை மிகக் கேவலமாகப் பேசுகிற நிலைமை ஒரிரண்டு மாதங்களாக வளர்ந்திருக்கிறது. எதற்கெடுத்தாலும் நமது முதலமைச்சர் பொதுமக்கள், பொதுமக்கள் என்கிறார்கள். பொதுமக்களைப்பற்றி முதலமைச்சருக்கும் ஆளுகிற சர்க்காருக்கும் தெரிந்த அளவிற்கு அதிகமாகவே திராவிட முன்னேற்றக் கழகத்தாராகிய எங்களுக்கு நன்றாகத் தெரியும். அவர் எந்தப் பொதுமக்களைக் குறிப்பிடுகிறார்கள் என்று எங்களாலே புரிந்து கொள்ள முடியவில்லை. திருச்செங்கோட்டில் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு

4th March 1965] [திரு. சி. பி. சிற்றரசு]

வாக்களித்தார்களே அந்தப் பொது மக்களையா, திருவண்ணாமலை தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வாக்களித்தார்களே, அந்தப் பொது மக்களையா என்பதையும் எங்களாலே புரிந்து கொள்ள முடியவில்லை. பொது மக்கள் இன்னும் சர்க்கார் சார்பாக இருக்கிறார்கள் என்று தவறாகக் கருதிக்கொண்டிருக்கிறார்கள். தயவு செய்து அந்த எண்ணத்தை மாற்றிக் கொள்ளுவது நல்லது. திராவிட முன்னேற்றக் கழகத்தில் பக்கத்தில் மக்கள் வந்துகொண்டிருக்கிறார்கள் என்பதற்குச் சான்றாக 1962-இல் நடந்த தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக 34 லட்சம் மக்கள் இருந்தார்கள். மூன்று ஆண்டுகள் ஓடிய பிறகு இன்னும் அந்தத் தொகை அதிகமாகக் கூடியிருக்கிறது. இது மாத்திரம் அல்லாமல் அடுத்த ஏப்ரல் திங்களிலே நடக்கப் போகிற தர்மபுரி உப தேர்தலிலே மக்கள் யார் பக்கம் இருக்கிறார்கள் என்று தர்மபுரி உப தேர்தலிலே மக்கள் தீர்ப்புக் கூற தர்மபுரி காத்திருக்கிறது. ஆகையினால் இளைச்சிகள் ஏற்படுகிறபோது, எப்படியாவது திராவிட முன்னேற்றக் கழகத்தை அழித்துவிடவேண்டும் என்று, அவர்கள் தான் பிரியாணி கொடுத்து மாணவர்களை ஊக்குவித்தார்கள் என்று சொல்லுகிறார்கள். பிரியாணி கொடுத்தது திராவிட முன்னேற்றக்கழகம் என்று சொல்லுவதால், அது வள்ளல் தன்மையைக் காண்பிக்கும் என்று அற்பத்தனமாக எங்களைப் பொறுத்தவரையில் சந்தோஷப்படப் போவதில்லை. பிரியாணிக்கு மேஜரான மாணவர்கள் மயங்கி இந்தப் பக்கம் போனார்கள் என்ற கூற்றை வாதத்திற்காக உண்மை என்று வைத்துக்கொண்டால் கூட, எங்கள் அருமை நண்பர் சங்கரலிங்கம் காங்கிரசை விட்டு வெளியேறினாரே எதனால், பொள்ளாச்சி எம்.எல்.ஏ. 3 நாள் உண்ணாவிரதம் இருந்தது எதனால், மத்திய சர்க்காரிலே இருக்கிற அமைச்சர்கள் சுப்பிரமணியம் அவர்களும் அழகேசன் அவர்களும் ராஜினாமா செய்தது எதனால்? நமது தொழில் அமைச்சர் சொன்னது போல, ஆங்கிலம் இல்லாவிட்டால் வெளிநாட்டு மூலதனம் நாட்டிற்கு வருவது தடைப்படும் என்று சொன்னது எதனால்? முதலமைச்சர் எப்படியாகிலும் தினம் இரண்டில் ஒன்றைப் பார்த்து வருகிறேன் என்று டில்லிக்குப் பறந்தார் என்றால் இவர்களையெல்லாம் எந்த சக்தி தூண்டியது? இவர்களுக்கு யார் பிரியாணி வாங்கிக் கொடுத்தார்கள்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நான் பிரியாணி சாப்பிட்டேன்.

திரு. சி. பி. சிற்றரசு: வெரிகுட் பிரியாணி. ஆகையினால் இப்படிச் சொல்லுவதாலே பலனில்லை. மாணவர்களை முதலமைச்சர் முதலிலேயே சந்தித்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

மேலே அசோகன் கொடி, அசோகன் காலவேலனெடி கலிங்கத்தில் போர் நடத்திய பிறகு, லட்சக் கணக்கான பிணங்களைக் கண்ட பிறகு புலால் உண்பதில்லை என்றான். வேட்டையாடக் கூடாதென்றான். அதோடு அசோகன் தன் ஆட்சிக் காலத்தில் எல்லா மந்திரிகளுக்கும் உத்தரவு போட்டான். நான் எங்கு இருந்தாலும் அந்தப்புரத்தில் இருந்தாலும் ஆட்சி மன்றத்தில் இருந்தாலும் சட்ட மன்றத்தில் இருந்தாலும் என்னைப் பார்க்கத்

[திரு. சி. பி. சிற்றரசு] [4th March 1965

திரண்டுவரும் மக்களை உள்ளே அனுமதியுங்கள், மக்களை உள்ளே விடாத அதிகாரியின் மேலே கடுமையான நடவடிக்கை எடுக்கவும் என்று சொன்னதாக நாம் வரலாற்றில் படிக்கிறோம். இந்த வரலாற்றை படித்துவிட்ட பிறகும் மாணவர்களை சந்திக்க மாட்டேன் என்கிறார் முதலமைச்சர். இது ஜனநாயகம் தானா என்பது சந்தேகமாக இருக்கிறது. என் சந்திக்க மாட்டார்கள் என்று கேட்டால், யாரோ யாரோ மாணவர்களைத் தாண்டிவிட்டிருக்கிறார்கள் என்றார். 25-ம் தேதி சந்திக்க வந்த மாணவர்களை முதலமைச்சர் சந்தித்திருந்தால் அந்த நிலைமைகள் ஏற்பட்டிருக்காது.

திரு. எஸ். ஆர். தியாகராஜன் : முதலமைச்சர் அவர்கள் மாணவர்கள் வந்தபோழுது உளிலே இல்லை. வெளியூருக்குப் போய் விட்டார். தெரிந்து கொண்டே தவறான முறையில் பேசுகிறார்.

திரு. சி. பி. சிற்றரசு : அடுத்த நாள் சந்திக்க முயற்சித்திருக்கலாம்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : முதலமைச்சர் அவர்கள் வெளியூருக்குப் போனதால் நான் மாணவர்களை சந்திக்க வேண்டுமென்று அவர்கள் எனக்குச் சொன்னார்கள். நானும் சரி என்றேன். மாணவர்களை அழைத்துப் பேசினேன். முதலமைச்சர் அவர்களிடம் பேசினால்தான் முக்கியம், மற்றபடி தொழிலமைச்சரிடம் பேசவேண்டியதில்லை என்றால், ஒத்துக்கொள்கிறேன். நான் முதலமைச்சரைவிட வயதில் சிறியவன்தான், அனுபவத்திலும் சிறியவன்தான். ஆனால் சர்க்கார் என்ற கூட்டுப்பொறுப்பில் என்னைப் பார்த்தாலும் முதலமைச்சரைப் பார்த்தாலும் ஒன்று தான். ஏன் நேரடியாக சொல்கிறேன் என்றால், மாணவர்களைப் பார்க்க சர்க்கார் மறுத்துவிட்டது என்ற பிரச்சாரம் தொடர்ந்து விடாமல், செய்வது சரியல்ல, என்பதற்காகச் சொல்கிறேன்.

திரு. சி. பி. சிற்றரசு : முதலமைச்சர் அவர்களைச் சந்தித்தாலும் தொழிலமைச்சரைச் சந்தித்தாலும் ஒன்றுதான். ஆனால் எங்களுக்குக் கிடைத்திருக்கும் செய்தி அவர் வெளியூருக்கு போய் விட்டார் என்று இல்லை. போலீஸ் அதிகாரிகள், மாணவர்களை முதலமைச்சர் சந்திக்க மாட்டேன் என்று சொன்னார் என்று சொன்னதாகப் பத்திரிகையில் வந்திருக்கிறது. அதை இந்த சர்க்காரோ மறுக்கவில்லை. எனவே, உண்மையென்று நம்பவேண்டியிருந்தது. மாணவர்கள் சந்திக்கவில்லை என்றே வைத்துக்கொண்டாலும் அதற்குப் பிறகு ஆங்காங்கே பஸ் பயணங்களையெல்லாம் போலீஸ் காரர்கள் மேலேயே போட்டுவிட்டார்கள். ஆங்காங்கே தடுப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கிறது, கண்ணீர் குண்டுகள் போடப் படுகிறது என்றால் போலீஸ் அதிகாரிகள் தக்கபடி நடந்து கொள்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இங்கே தான் தகராறு ஏற்படக் காரணம். என் என்றால் இந்த ஆட்சியை நடத்துவது அரசாங்கமா அல்லது போலீசாரா என்ற சந்தேகம் ஏற்பட்டப் பிறகுதான் நிலைமைகள் மோசமாக ஆரம்பமாக இருந்தது. இந்தத் தமிழகமே வெட்கி தலை குனியும் அளவுக்குப் போலீஸ் அதிகாரிகள் பட்டப்பகலில் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இதுவரையில் இந்த மாதிரியான துப்பாக்கிய சம்பவங்கள் நடைபெற்றதே

4th March 1965] [திரு. சி. பி. சிற்றரசு]

இல்லை. இந்த நிலைமைகளை எண்ணுகிறபோது நாம் அதற்குக் காரணம் இல்லை என்பதை சொல்லித் தப்பித்துக்கொள்வதைவிட அவர்களுக்கு உதவி செய்ததைப் போல, அந்தப் போராட்டத்தில் மாண்ட மற்றவர்களுக்கும் உதவி செய்ய வேண்டுமென்று நான் மிக பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் ஒருவர் தவறு செய்தால், அதற்காக அவருடையக் குடும்பத்தைப் பழிவாங்கவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். ஜனநாயகத்தில் இருக்கிறோம் என்பதற்காக, ஜனநாயகத்தை நிலைநாட்ட, இனியாவது பொதுமக்களுக்கும் நமக்கும் இந்த சர்க்காருக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் தமிழகத்திலே என்றுமே நடக்காத ஒன்று நடந்துவிட்ட பிறகு அதற்காக இறந்துவிட்டவர்களுக்கு அனுதாபத் தீர்மானம் போட வேண்டுமென்று நாங்கள் கருதினோம் ஆகையினாலே குற்றம் செய்த ஒருவனுக்காக அவனோடு சம்பந்தப்பட்டவர்களையோ அவனுடைய குடும்பத்தையோ நாம் ஏதோ கேலி செய்கிறமுறையில் பேசவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நிலைமைகளை முதலமைச்சர் அவர்கள் சாமர்த்தியமாகச் சமாளித்துவிட்டார் என்று சொல்லப்படுகிறது. அதில் எனக்கு நம்பிக்கை இல்லை. அது உண்மை அல்ல. வெளி மாகாணத்திலிருந்து போலீசும் ராணுவமும் வந்த பிறகு நிலைமை சீர்பட்டது என்று சொல்லலாமே தவிர, ஒரு குண்டு வெடிக்காமல், ஒரு தடியடி நடத்தாமல் இந்த மாகாண மக்களை சுமுகமாக நடத்திருந்தால், அதிலே ஏதோ ராஜ தந்திரம் இருப்பதாக ஒப்புக்கொள்ள முடியும். வெளி மாகாணத்திலிருந்து போலீசும், ராணுவமும் அழைத்து வந்து யாரும் எந்த நிலைமையையும் சமாளித்துவிட முடியும். இந்த முதலமைச்சராவது வயதானவர் அனுபவம் மிக்கவர் விம்ஸ் நகரக் காடுகளிலே ஒரு சிறு பெண் மாடுகளை மேய்த்து கொண்டிருந்தாள் பதினெட்டு வயது மங்கை ஜோன் ஆஃப் ஆர்க், நாட்டில் ராணுவம் அடக்கப்பட்ட காரணத்தால், வெள்ளைக்காரர்களை விரட்டி விரட்டி அடித்தாள் என்று நாம் வரலாற்றிலே படித்தோம். முதலமைச்சர் போலீஸை வைத்து நிலைமையை சமாளித்து விட்டார்கள் என்றாலும் இனி இது தொடராது என்பதற்காக நாம் சந்தோஷப்படுகிறோம், இனியாவது ஒரு நல்ல முடிவைத் தேடவேண்டும், அந்த முடிவுக்கு பொதுமக்களை அணுகவேண்டும். பொதுமக்களை சந்திக்க நாம் எடுத்துக் கொண்ட முயற்சிகள் என்ன? பொதுமக்களைச் சந்திக்கலாமென்றால் 144. பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பலாமென்றால், 8-ந் தேதி வரையில் பள்ளிக்கூடம் இல்லை. இன்று இரவோடு 144-ஐ எடுத்துவிடுங்கள். நாம் பொது மக்களைச் சந்திப்போம். வாருங்கள் பொதுமக்களின் கவனத்திற்கு விஷயங்களைக் கொண்டுவருவோம். இதை செய்யாமலே இருக்கிறோம் என்றால், அந்த பொது பொதுமக்கள் கொதித்து எழுந்தார்கள் என்றால், அந்த பொது மக்களை யார் என்ன செய்ய முடியும்? அவர்கள் ஆவேசத்தை தடுப்பதற்கு நீங்கள் எடுத்துக் கொண்ட முயற்சி என்ன?

இந்த சர்க்காருக்கு ராஜதந்திரம் இருக்குமானால் திராவிட முன்னேற்றக் கழகத்தவரை உள்ளே பிடித்து வைக்காமல் பொது மக்களை சந்திக்கச் சொல்லுங்கள் என்று கேட்டிருக்க வேண்டும்.

[திரு. சி. பி. சிற்றரசு] [4th March 1965

நானே என்னுடைய மகள் இறந்துவிட்ட தினத்தன்று இரவு கைது செய்யப்பட்டேன், ஏழு நாட்களுக்குப் பிறகு வெளியே விடப்பட்டேன். கைது செய்யப்பட்ட காரணம் என்ன? மறுபடியும் விடக் காரணம் என்ன? இரவு ஒரு மணிக்கு பிடிக்க வேண்டியது. இரவு ஒரு மணிக்கு விடவேண்டியது இது என்ன? நம்முடைய சர்க்கார் வேலைகளெல்லாம் இருட்டிலே தானு? பகலிலேயே இவ்வேயா? காரணம் சொல்வது கிடையாதா? இது என்ன 1967 வரையில் நடக்குமா? இல்லே, அதற்குப் பிறகுமா? இருக்கிற இடம் மாறினால் ஆட்சி மாறும். சனநாயகத்திலே இது சர்வசாதாரணமானது. மக்கள் தீர்ப்புக்குத் தலைவணங்கி நல்ல முடிவுக்கு வாருங்கள் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* SRI M. RAJAH IYER: Mr. Chairman, Sir, I have to participate in the debate when our minds are so full of the thoughts of students' unrest and our ears are so full of words uttered by the previous speaker that I cannot help making at least a passing reference to it. Right or wrong there have been acts of violence and vandalism in our State. Most of them are attributed to the students and I can understand how much it should pain people like us whose life-work has been cast to the winds, to see that the fair name of the student community besmirched like this. I do not propose to enter into a discussion as to who was exactly responsible for all these acts that we witnessed in our State. Whether they were done by the students or whether they were done by others who exploited the students, I would leave that to politicians to enter into. We have also a couple of hours vouchsafed to us this evening and the whole thing I hope will be thrashed out then.

SRI K. BALASUBRAMANYA AYYAR: You can also give your views instead of leaving it to the politicians.

மாணவர்கள் போராட்டம் அவர்களுடைய சொந்தப் பொறுப் பில் தொடங்கப்பட்ட போராட்டம் திராவிட முன்னேற்றக் கழகப் போராட்டத்திற்கும் மாணவர்கள் போராட்டத்திற்கும் சம்பந்த மில்லை. அதற்கு அதில் ஈடுபட்ட மாணவர்களைப் பார்த்தாலே இது தெரியும். பட்டாக்காரரின் மகன், முன்னாள் போலீஸ் அதிகாரியின் மகன், தஞ்சாவூர் மாவட்டத்தில் டி.எஸ்.பி.-யின் மகன். முன்னாள் ஐ.ஜி.-யின் மகன், ஓர் அமைச்சரின் மருமகன், இப்படிப் பலர் முன் வந்ததாக கூறப்படுகிறது. முதல் அமைச்சர் அவர்கள் வயதானவர்கள் என்பதால், அவர்களுடைய போல்கள் இருந்திருக்கலாம். மாணவர் காங்கிரஸ் இயக்கத்தி லிருந்த மாணவர்களைக்கூட திராவிட முன்னேற்றக் கழக இந்தி எதிர்ப்பு வெற்றிபெறவில்லை என்று கருதி இதில் உணர்ச்சியோடு குதித்திருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஓர் அம்மையார் பேசும்போது, இந்தி எதிர்ப்பு போராட்டத்தை நடத்திய கழகத்தினர் கோழைகள், மாணவர்கள்தான் இதில் வீரமாக முனைந்திருக்கிறார்கள், அவர்கள்தான் வெற்றிபெற முடியும் என்று பேசியிருக்கிறார். இளைஞர்களைப்பற்றி நன்றாக அறிந்தவர்கள்போல இளைஞர்தான் அதை நடத்த முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த உணர்ச்சி அப்படியெல்லாம் கிளப்பி விடப்பட்டது.

முன்னாள் முதலமைச்சர் திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியார் அவர்கள் சொன்னார்கள், ஆட்சியிலுள்ள அமைச்சர்கள் தட்டிக் கேட்கத் தயங்கும் கோழைகளாக இருந்தால் இந்தி வராமல் என்ன செய்யும் என்றார். செட்டி நாட்டரசர் முத்தையா செட்டியார் அவர்கள் இந்தத் திணிப்பை எதிர்த்து நீங்கள் தீவிரமாகத்தான் போராடவேண்டுமென்றும் இல்லாவிட்டால் தக்க பலன் கிடைக் காது என்றும் சொன்னார். அதற்கு பதிலளித்த முதலமைச்சர் அவர்கள் இந்தி வரவில்லை, நேரு உறுதி மொழி இருக்கிறது என்று பேசினார். இந்தி எங்கே திணிக்கப்படுகிறது என்று கேள்வியும் எழுப்பினர், ஆங்கிலம்தானே இருக்கிறது, நாம்தான் ஆட்சி மொழிச் சட்டம் கொண்டுவந்துவிட்டோமே என்றார். மாணவர்கள் கிளர்ச்சிக்குப் பிறகு, மக்கள் உணர்ச்சி வெள்ளத்தைப் பார்த்த பிறகு இந்தி திணிப்பு முறையல்ல, அதை நானே தடுப்பேன், ஆங்கிலம் 'மே கன்டினியூ' என்று சட்டம் செய்தபோதே 'ஷேல் கன்டினியூ' என்று போடவேண்டுமென்று கேட்டேன்; இந்தத் தடையை போகும்போது அதை லற்புறுத்துவேன், அரசியல் சட்டத்தைத் திருத்தும்படி கேட்பேன் என்றெல்லாம் பேசமுற் பட்டார். டாக்டர் சி. பி. ராமசாமி ஐயர் அவர்கள் சில நாட் களுக்கு முன் சொன்னார்கள், பொதுமக்கள் உணர்ச்சி கொந்த ளித்து எழுகிறது. அரசியல் சட்டத்தைத் திருத்துவதன் மூலம் ஆட்சி மொழி விதியைத் திருத்தும் வரை மக்களுக்கு நம்பிக்கை

கூட இங்கே வந்து நேரில் பார்த்த பிறகுதான் உண்மை தெரிந்தது என்றும் சுப்பிரமணியம் அவர்கள் சொல்லியிருப்பது மறுக்க முடியாததாகும். இங்குள்ள அமைச்சர்களைவிட அவர் ஒன்றும் உண்மைக்குப் புறம்பாக நடப்பவர் அல்ல. அவர் தமிழ் மக்களின் உணர்ச்சியை மதித்து தன்மானத்தைக் காப்பாற்ற தனது பதவியையும் ராஜினமா செய்தார். அமைச்சர் ஓ. வி. அழகேசன் அவர்களும் இங்குள்ள உணர்ச்சியை எடுத்துக்காட்ட ராஜினமா செய்தார்கள். இந்த இரண்டு பேருடைய ராஜினமாவினால்தான் தமிழ்களுடைய கோபம் புணர்ச்சி அடங்கியது. தலைமை அமைச்சர் திரு. லால்பஹதூர் சாஸ்திரி அவர்கள் இப்படிப்பட்ட உணர்ச்சி படைத்தவர்களும் காங்கிரசில் இருக்கிறார்கள் என்பதையும் இதனால் தெரிந்து கொள்ள முடிந்தது. இந்த நிலைமையை உண்டாக்கிய அவர்களுக்கு நான் வணக்கம் செலுத்துகிறேன். நாட்டில் ஏற்பட்ட உணர்ச்சியின் நியாயத்தையும் அளவையும் எண்ணிப்பார்க்க வேண்டும். மொழி உணர்ச்சியால் ஏற்பட்ட இந்தக் கிளர்ச்சியில் மாணவர்களிடத்தில் நீதி, நியாயத்தை வைத்து முதலமைச்சர் அவர்கள் பொறுப்போடு நடவடிக்கை எடுப்பதற்கு வழிகோல வேண்டும் என்று வற்புறுத்த விரும்பி இந்தி ஒத்திவைப்புத் தீர்மானத்தை முன் மொழிகிறேன். இந்தி ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மேல் அமைச்சர் தெரிவிக்கக் கூடிய கருத்துக்களுக்கு நான் பதில் அளிக்கக்கூடிய வாய்ப்பு பெற்றவன் அல்ல. வாய்ப்பு அளிக்க முன்வரமாட்டார்கள் என்பது தெரியும். எனவில் அமைச்சர் அவர்கள் நானே பேசி நேரத்தை முடித்து விடப்போகிறேன் என்று சொன்னர். நாடாளும் அமைச்சருக்கு இருக்கிற பெருந்தன்மை அவருக்கு இருக்குமானால் எனக்கு வாய்ப்பு அளித்தால், அவர் எதேனும் குற்றச்சாட்டுகள் சொல்லுவார்களானால், பதில் அளிக்கக்கூடியவனாக இருப்பேன் என்று கூறி இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்து முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

*திரு. எல். கே. சம்பந்தன் : கனம் தலைவர் அவர்களே, இன்று துர்ப்பாக்கியமான ஒரு சம்பவத்திற்குப் பிறகு இதைக்குறித்து சபையில் பேச நிகழ்ந்தது இந்த சபையின் துர்ப்பாக்கியம் என்றுதான் சொல்லவேண்டும். விளக்கங்களில் இப்படி ஏற்பட்டதற்குக் காரணம் ஆளும் கட்சியினர் எதிர்கட்சியினரைக் குறைப்பட்டுச் சொன்னதும் இது ஆளும் கட்சியினரைச் சார்ந்தது என்பதை நண்பர் அன்பழகன் அவர்கள் தெளிவாக எடுத்துச் சொன்னர்கள். என்போப் போன்றவர்கள் எந்தக் கட்சியோடும் சேராதவர்களும் எந்தவிதமான பாரபட்சத்தை எதிலேயும் வைக்காதவர்களும் தமிழன் என்ற உணர்ச்சி மட்டும் இருக்கின்ற தமிழ் நாட்டிலுள்ள பலரும் நூற்றுக்கணக்கானவர்கள், ஆயிரக்கணக்கானவர்கள் எல்லாம் லட்சக் கணக்கானவர்கள் எல்லாம் இந்த உணர்ச்சியைக் கொண்டவர்களாகத்தான் இருக்கிறார்கள். என்பதை இந்த மக்களின் பெயரால் ஆட்சி செய்யும் ஆட்சியாளர்களுக்கு நான் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். மக்களுடைய உணர்ச்சியை உணர மறுத்தது தான் அல்லது உணர

விரும்பாததுதான் இந்த நிகழ்ச்சிகளுக்கெல்லாம் காரணம் என்பதை அமைச்சர் அவர்களுக்கு மேலும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்தி நாட்டின் ஆட்சி மொழியாக வந்தால், இந்த நாட்டினுடைய மத்திய அரசாங்க மொழியாகுமேயானால், தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொருவருடைய கதி, அதிலும் முக்கியமாக இளைஞர்களுடைய கதி, மாணவர்களுடைய கதி என்னாகும் என்று ஒரு நிமிடமேனும் உணர்ச்சியோடு உண்மையோடு சிந்தித்துப் பார்ப்பவர்களுக்கு அந்த உணர்ச்சி தான் ஏற்பட்டது. அந்த உணர்ச்சியை உடையவர்கள் எல்லா கட்சிகளிலும் இருக்கிறார்கள். கண்டிப்பாக காங்கிரசுக்காரர்களாக இருந்தாலும், அதே உணர்ச்சி இருக்கிறது. பல காங்கிரசுக்காரர்களோடு நான் விவாதித்திருக்கிறேன். பல காங்கிரசுக்காரர்கள் என்னிடத்திலே சொல்லியிருக்கிறார்கள். இந்தியால் மக்களுக்குத் தீங்குதான் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் கட்சியில் சொல்லுகிறார்களோ இல்லையோ என்னிடத்திலே சொல்லியது உண்மை என்று சொல்லுகிறேன். காங்கிரசுக்காரர்கள் உள்பட நாட்டிலுள்ள குறைந்தது 100-க்கு 99 பேருக்கு மேல் இந்த நிலவரத்தைப் புரிந்துகொண்டிருக்கிறவர்கள். இதை அரசாங்கம் புரிந்து கொள்ளாது, அதிலும் முதலமைச்சர் அவர்கள் புரிந்து கொள்ளமாட்டார்கள். தங்கள் வாய்க்கு வந்த படியெல்லாம் ஆட்சியில் இருக்கிறோம் என்ற காரணத்தினால், தங்களிடம் அதிகாரம் இருக்கிறது என்ற காரணத்தினால், அதிகார வெறியினாலே எதையும் செய்யலாம் என்ற காரணத்தினால் பேசி வந்தது தான் இந்த நிகழ்ச்சிகளுக்கெல்லாம் காரணம் என்பதை திரும்பத் திரும்ப நான் முதலமைச்சர் அவர்களுக்கு எடுத்துச் சொல்லி, அவர்கள் இதற்கு வருத்தப்பட வேண்டுமே தவிர எதிர்க் கட்சிக்காரர்களைக் குற்றுவதற்கோ அல்லது மாற்று யோசனை செய்வதற்கோ இடமில்லை என்பதைத் தெள்ளத் தெளிய எடுத்துச் சொல்ல நான் ஆசைப்படுகிறேன்.

அடுத்து மாணவர்களைப் பற்றி ஒரு சில வார்த்தைகள். நான் குழந்தை உள்ளவன். எனக்கு நான்கு குழந்தைகள் உயிரோடு இருக்கிறார்கள். அதே மாதிரி பல பெரியவர்கள் குழந்தை இல்லாமல் இருக்க மாட்டார்கள். குழந்தைகள் அல்லது இளைஞர்கள் என்ற அளவிலே ஒருவித உணர்ச்சி அவர்களிடத்திலே இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியும். எனென்றால், அரசாங்கத்தார், காங்கிரசுக்காரர்கள் என்ற முறையில் விடுதலைக்கு கிளர்ச்சி நடத்தியபோது என்னைப் போன்றவர்களெல்லாம் மாணவர்களாக இருந்திருக்கிறோம். கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கிறோம். போலீசுக்காரர்களிடத்திலே அடியும் உதையும் வாங்கியிருக்கிறோம். அந்தக் காலத்திலே. இதே போல இப்போதிருக்கின்ற மாணவர்கள் உணர்ச்சிவசப்பட்டு எதாகிலும் செய்திருப்பார்களானால், தவறுகப் புரிந்து கொண்டு கண்மூடித்தனமாக நமது போலீசுக்கு உத்திரவிட்டு, அவர்களைப் பழி வாங்கச் செய்தது எனக்குத் தெரிந்த வரையிலே மன்னிக்க முடியாத குற்றம் என்று சொல்லத் தயாராய் இருக்கிறேன். அதிலும் குறிப்பாக கல்லூரிகளுக்குள்ளே

புகுந்து கல்லூரி விடுதிகளுக்குள்ளே புகுந்து இன்னும் சொல்ல கூசப்படுகிறேன்—கல்லூரிகளின் முதல்வர்கள் அல்லது வார்டனைப் போன்றவர்களிடத்திலே உத்தரவு பெறாமல், அனுமதி பெறாமல், கல்லூரிகளுக்குள்ளும் விடுதிகளுக்குள்ளும் சென்று போலீசுக்காரர்கள் அடித்தது, உதைத்தது, கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியது இருக்கிறதே இவைகளை ஒவ்வொரு தமிழனும் கேட்டால் கண்ணீர் வடிக்கத்தான் செய்வான். அரசாங்கம் கண்ணீர் விட்டாலும் விடாமல் போனாலும் சரி, இப்போதாவது உணர வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படி உணராமல் சர்க்கார் இதை அடக்க போலீசுக்காரர்களை ஏவிவிட்டார்கள் என்றால், இந்த நிலை என்றுமே நிலைத்து விட முடியுமா என்பதை ஒரு நிமிட மாகிலும் நினைத்துப்பார்க்க நமது முதலமைச்சர் அவர்களும் அவருடைய சகாக்களும் தவறிவிட்டார்கள் என நினைக்கிறேன். இப்படியே எப்போதும் ஆட்சி நடத்திவிட முடியுமா? பஞ்சாப் முதன்மந்திரி கைரோன் அவர்களைப் பற்றிக் கேள்விப்பட் டிருக்கிறோம். அவர் நீடித்து ஆட்சி நடத்திவிடவில்லை, ஆட்சியை விட்டு வெளியே வந்த பிறகு அவர் நீடித்து உயிரோடு இருந்திடவில்லை. அதே மாதிரி மற்றொரு மாநிலத்திலே முதலமைச் சர்கள் இரண்டு பேர் அவர்களுடைய கட்சியின் உள்ளே நிலவிய நிலைமை காரணமாக ஆட்சியில் நீடித்து இருந்திடவில்லை. போலீசுக்காரர்களுடைய தைரியத்தை வைத்துக்கொண்டு ஆட் சியை மட்டும் வைத்துக்கொண்டு இப்படியே ஆட்சியில் இருந்து விட முடியும் என்பதை மட்டும் நினைத்துக் கொள்ளவேண்டாம். உண்மையை உணர்ந்து பார்க்கவேண்டும்.

திரு. கே. ராஜாராம்: உயிர் போருக்கும் சாசுவதம் இல்லை.

திரு. கே. ராமதாஸ்: கைரோனைப்பற்றிச் சொன்னது உறுப்பினர் எண்ணத்தை பிரதிபலிக்கிறது.

திரு. எஸ். கே. சம்பந்தன்: நான் உதாரணத்திற்குத்தான் சொன்னேன். என்னைப்போன்றவர்கள் என்றுமே அப்படிச் செய்ய மாட்டார்கள். உதாரணத்திற்குத் தான் சொன்னேன். எப்படி இருந்தாலும் சரி, இது மாதிரி நினைத்துக்கொண்டு போலீசை வைத்துக்கொண்டு, அதிகாரிகள் பலத்தை வைத்துக்கொண்டு ஆட்சி நடத்தலாம் என்ற நினைப்பினால் வருகின்ற விளைவு தான் இது. மேன்மேலும் அவர்களெல்லாம், இந்த நேரத்திலே வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுவதுபோல் எவ்வளவுதான் நடந்திருந்த போதிலும், என்னதான் இருந்தாலும், மக்களுடைய உணர்ச்சியை அறியவில்லை. போலீசுக்காரர்கள் அவர்களுடைய கடமைகளைச் சரியாக செய்துவிட்டார்கள் என்று பாராட்டி பல ஆண்டுகாலமாக பலர் போலீசுக்காரர்களுக்கும் மற்ற அரசாங்க ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு கொடுக்கவேண்டும் என்று கேட்டபோதெல்லாம் சந்தர்ப்பம் இடம் தரவில்லை, பண நெருக்கடி என்று சொன்ன முதலமைச்சர், இந்த சந்தர்ப்பத்தில் அவர்களுக்குச் சம்பள

உயர்வு கொடுத்தது—மிக மிகக் கேவலமான மனப்பான்மையை எடுத்துக் காட்டுகிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை என்பதை மட்டும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். மற்றும் இந்த உணர்ச்சி வசத்தால் பல குழப்பங்கள் உயிர்த்தியாகங்கள் நடந்த போதிலும், கோடிக் கணக்கான பொதுச் சொத்துக்களுக்கு நாசம் ஏற்பட்டபோதிலும் அதற்கெல்லாம் காரணம் யார் என்று சிந்தித்து முதலமைச்சர் அவர்கள் வழி வகை செய்ய வேண்டும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

திரு. ஏ. சாம்பசிவ செட்டியார்: நண்பர் சம்பந்தன் அவர்கள் பேசியதில் கைரோன் நிகழ்ச்சியைப்பற்றிக் குறிப்பிட்டதை இந்த சபை நிகழ்ச்சியிலிருந்து எடுத்துவிட வேண்டும் என்பது என்னு டைய விருப்பம்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஒன்றும் எடுக்கவேண்டிய தில்லை. நான் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். முன்னேயே எழுதி வைத்ததை இப்போது பேசுகிறார்கள். இது சம்பந்தன் அவர்கள் பேச்சிலிருந்து தெரிகிறது, உறுப்பினர் களுடைய தன்மை இப்படி இருக்கிறது என்று.

திரு. எஸ். கே. சம்பந்தன்: மன்னிக்கவேண்டும். முதலமைச்சர் அவர்களும் காங்கிரஸ்காரர்களும் தவறுகப் புரிந்து கொண்டிருக் கிறார்கள். சர்வாதிகாரத்தில் நம்பிக்கை வைத்திருப்பவர்கள் ஆட்சி ஒன்றும் நிலைத்து விடவில்லை. ஆட்சியில் உள்ளவர்கள் அதனாலே போலீஸ் மேலும் சர்வாதிகாரத்தின் மேலும் நம்பிக்கை வைத்துக் கொள்ள வேண்டாமென்று கேட்டுக் கொண்டேன்.

மிஸ்டர் சேர்மன்: சாதாரண நேரத்திலே பேசினால் சரி. இப்போது அப்படி இல்லையே.

* திரு. என் ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தை அழுத்தந் திருத்தமாக ஆயிரம் முறை பத்தாயிரம் முறை எதிர்க்கிறேன். இது இந்த சபையிலே வரக் கூடாது என்பது எனது கருத்து.

இந்த நாட்டிலே சுதந்திரம் வருவதற்குப் போராடியவர்களிலே நான் ஒருவன். எனது 12-வது வயதிலே தேசியக் கொடியைத் தாங்கி சுதந்திரப் போராட்டத்தில் கலந்துகொண்டேன். 40 ஆண் டுகள் அதற்காகப் பாடுபட்டிருக்கிறேன். வாலிப வயதிலே 3 ஆண் டுகள் சிறைவாசம் செய்திருக்கிறேன். கஷ்டப்பட்டு அருமையாகக் கிடைத்த சுதந்திரத்தைக் கொண்டாட ஜனவரி 26-ம் தேதியைக் கொண்டாடினோம். அப்படிப்பட்ட நாளை எதிர்த்து அதை துக்க நாளாகக் கொண்டாட வேண்டும், அதற்கு எங்களுக்கு உரிமை இருக்க வேண்டும் என்று தோழர்கள் கேட்பதைக் கண்டு நான் வெட்கப்படுகிறேன். வேதனைப்படுகிறேன். வெட்கப்படாமல் இந்த நாட்டிலே யார்தான் என்ன செய்ய முடியும்? நாட்டின் சரித்திரத் திலே ஒரு கறை படிந்த சம்பவமாக இந்த துக்க நாள் மாறி விட்டது. வெளி நாட்டில் எள்ளி எனனம் செய்கிற வகையில்

[திரு. என். ஆர். தியாகராஜன்] [4th March 1965

இருக்கிறது. ஏன் என்றால் துக்க தினமாக 26-ம் தேதியைக் கொண்டாட வேண்டாமென்று திரு. ஏ. எல். முதலியார் அவர்கள், சர்வ கலாசாலைத் தலைவர்கள் கேட்டுக்கொண்டார்கள். 25-ம் தேதி பேராசிரியர் அன்பழகனைப் பார்த்து, அவர் சொன்னார். "காமராஜர் அவர்களே உறுதி கொடுத்திருக்கிறார். இந்த மந்திரிகள் எல்லாம் அவருடைய சபார்டினேட்ஸ். எனவே அவர் சொல்வதை இவர்கள் கேட்பார்கள்" என்று. அதைக் கூட பொருட்படுத்தாமல் துக்க தினம் கொண்டாடப்பட்டிருக்கிறது. ஒரு பொறுப்பான சட்ட மன்ற அங்கத்தினர், துக்க தினமாகக் கொண்டாடியது மாத்திரம் அல்லாமல், லீவென்ஸ் இல்லாத துப்பாக்கியை வைத்துக்கொண்டு கருப்புக் கொடியை அகற்றுங்கள் என்று கேட்டுக் கொண்டபொழுது, துப்பாக்கியால் சுடுவேன் என்று மிரட்டியிருக்கிறார். அன்றே நான் சந்தேகப்பட்டேன். எவனோ வெளி ஜெர்மனியிலிருந்து துப்பாக்கிகள் கப்பல் கப்பலாக இங்கு இறக்குமதி செய்யப்படுகிறது என்று. இங்கு யார் பெயரையும் நாங்கள் சொல்ல விரும்பவில்லை. எதிர்கட்சிக்காரர்கள் வசம் அந்தத் துப்பாக்கி இருக்கிறதைக் கண்டதும் எனக்கு இப்போது அந்த சந்தேகம் ஊர்ஜிதம் ஆகிவிட்டது. சம்பந்தம் சொன்னதும் இன்னும் சரியாக ஊர்ஜிதம் ஆகிவிட்டது.

திரு. என். வி. நடராசன்: யாரிடம் இருக்கிறது என்பதை கனம் உறுப்பினர்கள் பொறுப்போடு சொல்ல வேண்டும்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நண்பர் பேசும்போது கூடுமான அளவுக்கு தனிப்பட்ட யாரையும் தாக்காமல் இருந்தால் நன்றாக இருக்கும். சர்க்கார் மீதும் அது எடுத்துக் கொண்ட கொள்கைகளையும் குற்றம் சொன்னார்கள். அதற்கு பதில் வாதத்தைச் சொல்லலாம். நம் கவுன்சிலில் இதுமாதிரி உஷ்ணம் வரக்கூடிய விவகாரம் இது வரை நடந்து வழக்கம் இல்லை. அந்த வழக்கத்துக்கு மாறாக எதையும் நடத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஏ. கே. தங்கவேல் முதலியார்: உஷ்ணம் உண்டாக்கியது யார்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: எதிர்கட்சி அங்கத்தினர் அன்பழகன் பேசுகிறபோது, புண்பட சில வார்த்தைகளைப் பேசினார் என்றாலும் யாரும் அதைத் தடுத்து எந்த விதமான ஆட்சேபனையும் செய்யவில்லை. தியாகராசன் அவர்கள் பேசும் போதும் அமைதியாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். ஆர். தியாகராஜன்: மேடைப் பேச்சிலே அன்பழகனைப் போல் நானும் பேசுபவன்தான். எத்தனை குறுக்கீடுகள் வந்தாலும் சமாளிப்பேன்.

திரு. ஏ. கே. தங்கவேல் முதலியார்: இங்கே யாரும் சவால்விட வரவில்லை. கோபம் வருகிறது என்றால் எனக்குக் கூடத் தான் சொம்பக் கோபம் வருகிறது.

4th March 1965]

மிஸ்டர் சேர்மன்: தயவுசெய்து இது சட்டமன்றம் என்று நினைத்துப் பேசுங்கள்.

திரு. என். ஆர். தியாகராஜன்: ஏதோ மாணவர்கள் கிளர்ச்சி என்றாலும் மாணவர்கள் போல் அக்கிரமங்கள் நடந்திருக்கின்றன. நானும் நூற்றுக்கணக்கான ஆதாரங்கள் வைத்திருக்கிறேன். (ஒரு பேப்பரைக்காட்டி) தலைவர் அவர்களுக்கு இதை சமர்ப்பிக்க விரும்புகிறேன். மதுரையில் காங்கிரஸ் ஆபீஸுக்கு நெருப்பு வைத்துக் கொளுத்திய கூட்டத்திலே மாணவர்கள் இல்லை.

• • •

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அந்த உறுப்பினர் தந்திருக்கிற பத்திரிக்கையைத் தாங்கள் ஏற்றுக் கொண்டு அவர்களே விட்டு அதை நிரூபிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பத்திரிக்கையை அவர் சமர்ப்பிக்கவேண்டும், இல்லையெனில் அந்த வார்த்தையை அவர் வாபஸ் பெற வேண்டும்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அன்பழகன் அவர்கள் சொன்னார்கள், காங்கிரஸ்காரர்கள் சென்று அவர்கள் கொடியை எரித்தார்கள், தவறு செய்தார்கள் என்று தியாகராஜனும் திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள் தவறு செய்தார்கள் என்று சொல்கிறார்கள். ஒன்றுக்கொன்று சரியாகத்தான் இருக்கிறது. அதைப் பற்றி மேற்கொண்டு விவாதத்துக்கு இடம் இல்லாமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன்: நான் கேட்பது ஒழுங்குப் பிரச்னை காரணம் அது சட்ட மன்றத்தில் பதிவு செய்யப்படும். இந்தப் படத்தைக் காட்டி அவர் சொல்கிறார். "அன்பழகன் கூறினார், அதற்கு தியாராஜனும் சொன்னார், இரண்டுக்கும் சரியாகப் போய்விட்டது." என்று சொல்லுவது சரியில்லை. போலீஸ்காரர்கள் யாருக்கு உடந்தையாக இருந்தார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிந்துகொண்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

மிஸ்டர் சேர்மன்: இனி உஷ்ணம் வராமலிருக்க, இனிமேல் மாணவர், மாணவர் அல்லாதவர் என்று சொல்லி விடுங்கள்.

திரு. என். ஆர். தியாகராஜன்: தமிழ் நாட்டில் இந்த மாதிரியான சம்பவங்களுக்குக் காரணம் திராவிட முன்னேற்றக் கழகத்தார்கள்தான் என்பதை அழுத்தந் திருத்தமாகக் கூறுகிறேன். அவர்களால்தான் இந்த சம்பவங்கள் நடந்தன. ஜனவரி 26-ஐத் தொடர்ந்து நடந்த சம்பவங்களில் ஒன்றைக் கூற விரும்புகிறேன். எங்கள் ஜில்லாவில் ஒரு சட்ட மன்ற உறுப்பினர் தலைமையில் ஒரு பெரும் புரட்சி நடந்தது. ஆர்பாட்டக்காரர்கள் ஒரு போலீஸ் ஸ்டேஷனை அடித்து நொருக்கினர்கள். "உடல் மண்ணுக்கு, உயிர் தமிழுக்கு" என்று தி.மு. கழகத்தினர் சொல்கிறார்கள். அங்கே ஆர்பாட்டக்காரர்கள் தமிழில் எழுதப்பட்டிருந்த ஒரு போர்டையே நெருப்பு வைத்துக் கொளுத்தினர்கள். அவர்கள் இவ்வாறு ஒரு தமிழ் போர்டையே நெருப்பு வைத்துக் கொளுத்தினர்கள்.

*** Expunged as ordered by the Chair.

திரு. கே. ராஜாராம்: தமிழ் தெரியாதவர்கள்.

திரு. என். ஆர். தியாகராஜன்: ஆமாம். அவர்கள் தமிழ் தெரியாத தற்குறிகள். அங்கே ஆர்ப்பாட்டக்காரர்கள் போஸ்ட் ஆபிசையும் கொளுத்தினார்கள். அவர்கள் இரண்டு போலீசாரை உயிருடன் நெருப்பு வைத்துக் கொளுத்தினார்கள். இத்தலைய பலாத்காரச் சம்பவங்கள் எத்தனையோ நடந்திருக்கின்றன. இதற் கெல்லாம் பொறுப்பாளிகள் தி. மு. கழகத்தினர்தான் என்பது என் அபிப்பிராயம். இத்தகைய சம்பவங்களுக்குப் பொறுப்பாளி களாக அவர்கள் இருப்பதால், இங்கே இந்த ஒத்திவைப்புத் தீர் மானத்தைக் கொண்டுவருவதற்குக் கூட அவர்களுக்கு உரிமை கிடையாது என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லிக்கொள் கிறேன்.

*திரு. என். வி. நடராசன்: கனம் தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது பேச முற்படும்போது, நான் நமது கனம் முதல் அமைச்சருக்கும், மற்ற கனம் அமைச்சர்களுக் கும், இந்த மன்றத்தினருக்கும் ஒன்று சொல்ல விரும்புகிறேன். "இன்று அரசியல் துறையில் திராவிட முன்னேற்றக் கழகத்தி னிடம் மற்றவர்களுக்குக் கருத்து வேறுபாடு இருக்கலாம், ஆனால் இன்று தனிப்பட்ட முறையில் எந்த விதமான குரோதமும் விரோதமும் கொள்ளாது காந்தீய வழியில் ஒரு இயக்கம் இருக் கிறது என்றால், அது திராவிட முன்னேற்றக் கழகம் தவிர வேறு கட்சி எதுவும் இல்லை." கனம் முதல் அமைச்சர் அவர்களைக் கேய்ரோவுடன் இணைத்துப் பேசியதாக கனம் உறுப்பினர் திரு. சம்பத்தன் சில வார்த்தைகள் சொன்னதாக எண்ணி வருத்தப் பட்டார். அவர் அவ்வித எண்ணத்துடன் சொல்லவில்லை. கனம் முதல் அமைச்சராகினும் சரி, வேறு யாருடைய உயிருக்கு ஆபத்து வந்தாலும், சம்பந்தப்பட்ட குற்றவாளிகளைக் கண்டிக்க கழகம் தயங்காது என்று நான் உறுதியுடன் சொல்லிக் கொள்கிறேன். எங்களுக்கு பலாத்காரத்தில் சிறிதும் நம்பிக்கை இல்லை. நாங்கள் கனம் முதல் அமைச்சர் மீது மீண்டும் குற்றங்கள் அடுக்கிக் கொண்டு போக விரும்பவில்லை. ஆனால் ஒன்று சொல்வேன். அவர் ஜனவரி 27-ம் தேதி மாணவர்களை தயவோடு சந்தித்திருந் தால், நாட்டில் விபரீத நிலைமை ஏற்பட்டிருக்காது, இந்தச் சம்பவங்கள் ஓளவு குறைந்திருக்கும் என்பது என் அழுத்தமான அபிப்பிராயம். 28, 29-ம் தேதிகளில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் 25, 26, 27-ம் தேதிகளில் மேற்கொள்ளப்பட்டிருந்தால், உலைமையிலேயே இந்த துர்பாக்கியமான சம்பவங்கள் நேர்ந்திருக் காது; இந்த சபையின் கௌரவத்தைக் குறைக்காதபடி விவாதம் நடத்த வேண்டும் என்று கனம் சர்க்கார் கட்சித் தலைவர், இன்று கூறியது போல் கூறுவதற்கு இடம் இருந்திருக்காது.

நேர்ந்ததெல்லாம் நேர்ந்து விட்டது. இறந்தவர்கள் போலீ சாராக இருந்தாலும் சரி, மற்ற யாராகயிருப்பினும் சரி, இறந்த வர்களின் குடும்பத்திற்கு அனுதாபம் காட்ட வேண்டியது மனித தர்மம் ஆகும்.

போலீஸாரின் சம்பளம் இப்போது உயர்த்தப்பட்டிருக்கிறது. பழுத்த அனுபவமுள்ள கனம் முதலமைச்சர் இப்போது போலீஸார் சம்பளத்தை உயர்த்தியிருக்கிறார். இப்படிச் செய்த தால் இந்த நாட்டின் காவலர்களாகிய போலீஸ்காரர்களுக்கும் பொதுமக்களுக்குமிடையே நிரந்தரமான விரோதத்தை அவர் உண்டாக்கியிருக்கிறார் என்று நான் சொல்லவில்லை யென்றாலும் இந்த நிலைமையில் அவர்களுடைய சம்பளம் உயர்த்தப் படுவதைப் பார்க்கும்போது, போலீஸாருக்கும் பொதுமக்களுக்குமிடையே என்றும் நல்லுறவு நிலவுமா என்ற ஐயப்பாடு எழுகிறது. அவர் களுடைய சம்பளத்தை உயர்த்திய நேரம் சரியான நேரமல்ல. மக்களைப் போலீஸார் சுட்டுத் தள்ளியது சரியா என்றுதான் மக்கள் கேட்கிறார்கள். மக்களைப் போலீஸார் சுட்டுத்தள்ளியது போலீஸாரின் திறமைக்கு எடுத்துக்காட்டு ஆகாது. இந்தியாவி லேயே தமிழ்நாட்டின் போலீஸார் தான் சிறந்தவர்கள் என்பதை எல்லோரும் அறிவார்கள். இந்தப் பெயர் பெற்ற இந்த மாநிலப் போலீஸார் மிருகங்களை வேட்டையாடுவது போல் மக்களை வேட்டையாடுவதற்கு, துப்பாக்கி துளைத்தனம் நடத்துவதற்கு ஆட்சியாளர்கள் அனுமதி கொடுத்தது மக்களின் உணர்ச்சியை எவ்வளவு பாதித்துள்ளது என்பதை கவனிக்க வேண்டும். பலர் இறப்பதற்கு யார், யார் காரணஸ்தர்களாக இருந்தனர் என்றெல் லாம் நான் இங்கே பேச விரும்பவில்லை. இதற்கெல்லாம் பரிகார மாக கனம் முதல் அமைச்சர் ஒன்று செய்ய வேண்டும் என்று மட்டும் சொல்வேன். ஹிந்தித் திணிப்பிற்கு வகை செய்யும் ஆட்சி மொழிச் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்ற விஷயத்தில் உறுதியோடு இருந்து, அவர் திருத்தச் சட்டம் வரும்படி செய் தால் தமிழகம் அவரிடம் நன்றியுள்ளதாக இருக்கும். சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர வேண்டுமானால், முதல் அமைச்சர் களும், காங்கிரஸ் செயற்குழுக்களும், சட்ட நிபுணர்களும் சேர்ந்து ஆலோசித்த பிறகு தான் சட்டத் திருத்தம் வரக்கூடும் என்பதாகப் பாராளுமன்றத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. திருத் தச் சட்டத்தை உடனடியாகக் கொண்டுவராமல் இதுபற்றிப் பரி சீலனை செய்து கொண்டிருப்பதாகச் சொல்வது நாட்டு மக்கள் ஏற்கனவே ஏமாந்துவிட்ட நிலையை இன்னும் நீடிப்பதாக இருக் கிறது. அகில உலகம் சுற்றிவந்துள்ள சர்வகலாசாலைத் துணை வேந்தர் "டாக்டர் ஏ. எல். முதலியார் ஸ்ரீ. காமராஜர் கூறியுள்ள உறுதி மொழியை ஏன் நம்பக்கூடாது" என்று ஏற்கனவே சொன்னார். அப்போது நான் "ஸ்ரீ. காமராஜரையும், இந்த மந்திரிசபையையும், தமிழ்நாட்டுக் காங்கிரஸ்காரர்களையும் நாம் நம்பினாலும், டெல்லியிலுள்ள ஹிந்தி வெறியர்கள் நம்மை ஏமாற்றுகிறார்களே" என்று சொன்னேன். அவ்வாறு நான் சொன்னதற்குப் பிறகு அகில இந்திய காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ. காமராஜர் "ஹிந்தியில் உத்தரவு வந்தால் அதைத் தூக்கி எறிவேன்" என்று சொன்னதாகவும், அது பற்றி அவரிடம் பின்னர் கேட்கப்பட்ட போது, "ஹிந்தியில் வரும் உத்தரவை தூக்கி இன்னொரு இடத்தில் வைத்துவிடுவேன் என்று தான் நான் சொன் னேன்" என்று அவர் சொன்னதாகவும், பத்திரிகையில் செய்திகள்

வந்திருக்கின்றன. எனவே யாரை நம்புவது? ஆகையால் சட்டத் திருத்தத்தை சீக்கிரம் கொண்டுவர வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

மாணவர்கள் முதலமைச்சருக்கு குழந்தைகள் போன்றவர்கள், பேரப் பிள்ளைகள் போன்றவர்கள். சமீபத்தில் ஏற்பட்ட வருந்தத்தக்க நிலைமைக்குக் காரணம் இந்த சர்க்கார்தான், மாணவர்களில் 25-ம் தேதி வரை சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று சொல்லாதவர்கள் இந்தித் திணிப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று இப்போது சொல்கிறார்கள். நான் காங்கிரஸை யோ, கலப்பு மந்திரிசபைகளையோ கேலிபேசவில்லை. ஆந்திர மாநிலப் பிரிவினைக்கு சட்டபூர்வமாகப் போராட்டம் நடந்தபோது ஸ்ரீஜவஹர்லால் நேரு "பிரிக்க மாட்டேன். ஆறு ஆண்டுகள் பொறுத்திருக்க வேண்டும்" என்றார். பெருங்கிளர்ச்சிகள் நடந்த பிறகு ஆந்திரா பிரிவினையை சீக்கிரம் செய்தார்கள். எந்த விஷயத்தையும் நியாயமாகச் சொன்னால் அது கேட்கப்படுவ தில்லை. ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி என்று சொல்வதுண்டு. அந்த முறையில் எங்கள் மீது குறைகூறப்படு கிறது. நாங்கள் ஓராண்டு காலம் போராட்டம் நடத்தியபோது, எங்கேயாவது ஒரு பலாத்கார நிகழ்ச்சியாவது நடந்ததா? எங்களுக்கு நாங்களே தொல்லை உண்டாக்கிக் கொண்டோம்.

தாய்மையான எண்ணத்துடன் பதவிய அமைச்சர்கள் ஸ்ரீ. சுப்பிரமணியம் அவர்களும், ஸ்ரீ. அனகேசன் அவர்களும் மிகப் பெரிய பொறுப்பிலிருந்து ராஜினாமா செய்து விலகியதை நினைக்கும்போது எனக்கு 1938-ல் ஆண்டி நடந்தது. ஹிந்தி எதிர்ப்பு ஆரம்பமான ஆண்டு அது. நாட்டு விடுதலைப் பணியில் காங்கிரஸ் இயக்கத்திற்கு ஒரு தனி பாரம்பரியம் இருப் பது போல், இந்தி பிரசாரசபாவிற்கு ஒரு பாரம்பரியம். தமிழ் மக்களை—தமிழகத்தை மீட்டும் பணியில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஒரு தனி பாரம்பரியம் உண்டு. இதை ஆட்சிபீடத் தில் இருப்பவர்கள் உணர்ந்திருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக் காது. 1931-ல் நான் ஒரு சாதாரண காங்கிரஸ்காரன். பெத்து நாயக்கன்பேட்டை காங்கிரஸில் நான் செயலாளராகவும், சென்னை மாவட்ட காங்கிரஸ் உறுப்பினராகவும் இருந்தேன். அந்தக் காலத் தில் ராஜாஜி மந்திரியாக இருந்தார். அப்போது வந்த கட்டாய ஹிந்தியை எதிர்த்து சென்னை மாவட்ட காங்கிரஸ் கமிட்டியில் என்னால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் தோற்றதால், நான் காங்கிரஸிலிருந்து விலகினேன். அன்று என்னைத் தொடர்ந்து சிலர் காங்கிரஸிலிருந்து விலகினார்கள். இப்போது ஹிந்தியை எதிர்த்து மிகப் பெரிய பதவியிலுள்ள அமைச்சர்களும் மற்றவர் களும் பதவியிலிருந்து விலகுகிறார்கள். அன்று எவ்வளவோ காங்கிரஸ் தோழர்கள் உயர்த்திய தாய்மையான ஹிந்தி எதிர்ப்புப் போர்க் கொடி இன்று தலை நிமிர்ந்து பறப்பதைப் பார்க்கும்போது நான் மிகவும் பெருமை அடைகிறேன்.

கனம் அமைச்சர்களுக்கு, குறிப்பாக கனம் முதல் அமைச் சருக்கு, ஒன்று சொல்ல விரும்புகிறேன். காங்கிரஸ் கட்சியினர் எங்கள் விரோதிகள் அல்லர். எங்களுக்குத் துன்பம் வந்தால்

காங்கிரஸ் கட்சியினர் வருத்தப்படவேண்டும். காங்கிரஸ் கட்சியி னருக்குத் துன்பம் வந்தால் நாங்கள் வருத்தப்பட வேண்டும். எனவே நாங்கள் கூறுவதைக் கேளுங்கள். மாணவர்கள் மீது தொடரப்பட்டுள்ள வழக்குகளை தயவுசெய்து எந்த விதமான நிபந்தனையும் இல்லாமல் அவர்கள் எதிர்காலத்தில் தேசப் பொறுப்பை ஏற்க வேண்டியவர்களாக இருப்பதால் வாபஸ் பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மதுரையில் மாணவர் களுக்கு ஆறு மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டிருப்ப தாகச் செய்தி பத்திரிகையில் வந்திருக்கிறது.

திரு. என். ஆர். தியாகராஜன்: ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் தி.மு. கழகத்தினர் இல்லை என்றால் கனம் அங்கத்தினர் ஏன் கவலைப்படவேண்டும்?

திரு. என். வி. நடராசன்: பெரும் பொறுப்பிலுள்ள காங்கிரஸ் காரர்களே அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். இவர்களெல்லாம் தி. மு. கழகத்தினரா?

இன்றைய தினம் கழகத்தின் தலைவர்களில் ஒருவராகிய தோழர் கருணாநிதியை விடுதலை செய்யவேண்டுமென்று விண்ணப்பிக்க வில்லை. மற்ற தோழர்களை விடுதலை செய்யக் கேட்கவில்லை. மாணவர்களைத்தான் விடுதலை செய்யச் சொல்கிறேன். குறிப்பாக காங்கிரசிலிருந்த மாணவர்கள் எல்லாம் இந்தக் கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். எனவே மாணவர்களை விடுதலை செய்வதில் மேலும் வீம்பு காட்டவேண்டாம். அடுத்தபடியாக இந்தித் திணிப்பில் தற்போது எந்த அளவுக்கு உறுதி அளிக்கப்பட்டிருக் கிறதோ அதைச் சட்டமாக்குவதற்கு முயற்சித்து இந்தப் பாராளு மன்றக் கூட்டத் தொடரிலேயே அதைச் சட்டமாக்கினால் நாட்டில் மீண்டும் குழப்பமில்லாமல் இப்போது இருக்கிற பிரச்னையிலுள்ள வேகமும் விரோதமும் பகைமையும் குறையுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். கடைசியாக நமது கனம் அங்கத்தினர் தியாக ராஜன் அவர்களுக்குச் சொல்வேன்: திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் இந்த துக்க நாள் குறித்தது தான் பெரியாரிடமிருந்து பிரிந்தார். நாட்டுக்கு சுதந்திரம் வந்தபோது அதை துக்க நாளாகக் கொண்டாட வேண்டுமென்று பெரியார் அவர்கள் உத்தரவிட்டார்கள். அதற்கு அறிஞர் அண்ணா அவர்கள் காங்கிரசுக்கும் நமக்கும் அபிப்பிராய பேதம் இருந்தாலும், வெள்ளையர் ஆதிக்கம் இந்த நாட்டிலிருந்து அகன்றது எல்லோருக்கும் பொதுவாக பெருமை தருவதாகும், ஆகையால் அதை துக்க நாளாகக் கொண்டாட நான் ஒப்புக் கொள்ள மாட்டேன் என்று தமது திராவிட நாடு பத்திரிகையில் எழுதினார்கள். பிறகு அது குறித்து வேறுபாடுகளைப் பார்த்து பெரியாரிடமிருந்து விலகினர். அவரோடு நாங்கள் எல்லோரும் விலகினோம். சுதந்திரத்திற்கு நாங்கள் விரோதிகள் அல்ல. காங்கிரஸ் தலைவர்கள் செய்த தியாகத்திற்கு நாங்கள் தலை வணங்கு கிறோம். நாங்கள் துக்க நாளாகக் கொண்டாடியதைப் பேசு கிறார்கள். அதே நேரத்தில் இந்திய பிரதமர் இந்தித் திணிப்பு நாளை பெரிய விழாவாகக் கொண்டாடும்போது, அதில் பேசினார்

[திரு. என் வி. நடராசன்] [4th March 1965

என்றால், அந்த உணர்ச்சி நமக்கு வராதா? காங்கிரசாக இருந்தாலும் கம்யூனிஸ்டாக இருந்தாலும், மொழிப் பிரச்னையில் அவர்கள் அங்கே ஒற்றுமையாக இருக்கிறார்கள். அந்த ஒற்றுமை ஏன் தமக்கில்லை? அந்த ஒற்றுமை நமக்கு இருக்கக்கூடாதா என்று காங்கிரசைச் சார்ந்த கனம் அங்கத்தினர்களைக் கேட்டுக் கொள்கிறேன். எங்கள் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் இல்லத்திலும், அறிவகம், அன்பகம், மற்றும் தோழர்கள் கருணாநிதி மதியழகன் இல்லத்திலும் என்னுடைய இல்லத்திலும் ஏற்றப்பட்டிருந்த கருப்புக் கொடியைக் கிழித்தெறிந்தும், கொளுத்தியிருக்கிறார்கள். போலீஸ் அதிகாரிகள் மற்றவை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்திருக்கிறார்கள். இது நியாயமா என்று முதலமைச்சர் அவர்களைக் கேட்கிறேன். எங்கள் மீது வெறுப்பு உங்களுக்கு இல்லையென்றால் உங்கள் நிர்வாகம் அந்த அளவுக்கு மோசமாகிவிட்டது என்றுதானே அர்த்தம். இப்போது உள்ள அரசியலில் வலுத்தவர் கை ஓங்கினால்தான் நாட்டை ஆளமுடியும் என்ற நிலை வந்தால் எதிர் காலத்தில் மக்களுக்கு நல்ல வாழ்வு எப்படிக் கிடைக்குமென்று சிந்திக்குமாறு முதலமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். நடை பெற்ற சம்பவங்கள் ஆட்சி பீடத்திலிருப்பவர்களுக்கு படிப்பினை யாக இருந்து எதிர்காலத்தில் இது போன்ற நிலை ஏற்படாதிருக்க வேண்டும். அதற்கு ஏற்ப ஆட்சி மொழிச் சட்டத்தைத் திருத்த வேண்டும். கழகத்தைப் பொறுத்தவரை சொல்வேன், சட்டத்தைத் திருத்துவது மட்டும் போதாது. பதினைந்து மொழிகளும் ஆட்சி மொழியாக ஆக்கப்படவேண்டும். ஆனால் முதலமைச்சர் தந்துள்ள உறுதிப்படி ஆட்சிமொழிச் சட்டத்தைத் திருத்துவதை விரைவில் செய்ய துணிவோடு போராடினால் மக்கள் ஓரளவு அமைதி பெறுவார்கள் என்று கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள் கிறேன்.

* **திரு. கே. ராமதாஸ்**: கனம் தலைவர் அவர்களே, இந்த அவசிய மில்லாத ஒத்தி வைப்புத் தீர்மானத்தை என் நண்பர் நியாக ராஜன் சொல்லியதுபோல, பலமாக எதிர்க்கிறேன். இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தைப் பிரேரேபிக்க செய்த அன்பழகன் அவர்கள் பேசும்போதும் அவர் முன்பு பேசிய பேச்சையும் தொடர்ச்சியாகப் பார்க்கும்போது, மாணவர்கள் மீது பழி சுமத்த நாங்கள் தயாராக இல்லை. முழுக்க முழுக்க இந்தக் கலவரத்துக்குக் காரணம் தி.மு. கழகத்தைச் சேர்ந்தவர்கள்தான் என்பதை இந்தச் சமயத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படு கிறேன். எனக்கு முன் பேசிய கனம் நடராஜன் அவர்கள் குறிப் பிட்டார்கள். ஓராண்டு காலமாக இந்தித் திணிப்பை எதிர்த்து தான்கள் பல போராட்டங்களை நடத்தியிருக்கிறோம், முயல் செய்தி ருக்கிறோம். இந்திய அரசியல் சட்டத்தை எரித்திருக்கிறோம் என்றார்கள். இதிலிருந்து நமக்குத் தெரிவது என்னவென்றால், இல்லாத ஒன்றை இருப்பதாகப் பேசிக்கொண்டு மக்களிடம் பீதியைக் கிளப்புவது தி.மு.க. வின் கொள்கை ஒத்தி திணிக்கப் படுகிறது என்று பேசியதின் மூலம் எழுதியதின் மூலம் வெறியை உண்டாக்கியவர்கள் அவர்கள்தான். அவர்கள் தெரிந்தோ தெரியா மலோ நடத்திய போராட்டம் மக்கள் மத்தியில் செல்வாக்கிழந்து

4th March 1965] *[திரு. கே. ராமதாஸ்]*

விட்டது, தெரிந்தோ தெரியாமலோ இவர்கள் கையில் மாணவர்கள் அகப்பட்டார்கள். மாணவர்கள் காலித்தனம் செய்தார்கள் என்று முழுக்க முழுக்க அவர்கள் மீது பழி சொல்லத் தயாராக இல்லை. ஆனால் அது தி.மு. கழகத்தினால்தான் நடைபெற்றது என்று நிரூபிக்க முடியும். குடியரசு தின விழா என்று சொல்லியபோது, காந்தியடிகள் தலைமையில் லட்சக்கணக்கான மக்கள் தங்கள் உயிரை, உடமையை இழந்து இந்த தேசத்தினுடைய சுதந்திரத் தினை நமக்கு வாங்கிக் கொடுத்தார்கள். இந்த ஆண்டு வேண்டு மென்றே துக்க நாள் என்று முதன்முதலாக அறிவித்தவர்கள் யார்? தி.மு. கழகத்தார்தான். குடியரசு நாள் குடிகெடுக்கும் நாள் என்று பத்திரிகையில் எழுதப்பட்டது. இந்தி வருவதால் தமிழ் செத்து விட்டது என்றும் முதலமைச்சர் கையில் துப்பாக்கியைக் கொடுத்து விட்டது என்றும் முதலமைச்சர் தமிழ்த்தாயை அவர் சுடுவதுபோலவும் படம் போட்டு பத்திரி கையில் வந்திருக்கிறது. சாதாரண மக்களுக்கு என்ன தெரியும்? இதனால் இந்தி வருவதால் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் தமிழ்த் தாயைக் கட்டுக் கொல்வார்கள் போல இருக்கிறதே என்று எண்ண மாட்டார்களா? உண்மையாகவே தமிழ்த்தாய் செத்துவிடு வாளோ என்ற எண்ணம் அதைப் பார்க்கிற சாதாரண மக்களுக்கு ஏற்படுவது இயற்கைதான். அப்படிப் போட்டது தி.மு.க-வைச் சேர்ந்த பத்திரிகை அல்லவா? தீவிரவாதிகள் பத்திரிகை அல்லவா அது? அன்பழகன் அவர்கள் சொன்னார்கள், வீடுகளில் தான் கருப்புக் கொடியைக் கட்டச் சொல்லியதாக. ஆனால் தீவிரவாதி கள் என்று சொல்லிக்கொள்பவர்கள், என்ன எழுதினார்கள்? ஒகோஹோ, வானத்தை நோக்கினால் பார்க்குமிடமெல்லாம் கருப்புக் கொடி காட்சியளிக்கவேண்டுமென்று சொல்லவில்லையா? எழுதவில்லையா? இது தூண்டிவிடுவது இல்லையா? கருப்புக் கொடி கட்ட முயன்றால், அதை இறக்கவும் உரிமை உண்டு இந்த நாட்டில். தமிழை அழிப்பது போல விஷப்பிரசாரம் செய்தவர் கள் தி.மு. கழகத்தார்கள்தான். மொழி உணர்ச்சி தெரிந்தோ தெரியாமலோ பரவலாக மக்களிடத்தில் தோன்றிவிட்டது. அரசியலுக்கு அப்பாற்பட்டவர்கள், அரசியலிலிருந்து விலக்கப் பட்டவர்கள் எல்லாம் சேர்ந்து பணமுதலைகள் கூடியாரை வைத்து காங்கிரஸ் சர்க்காரைக் கவிழ்ப்பது. பக்தவத்சலத்தை எப்படி கீழே இறக்குவது என்று யோசித்தார்கள். ஒரு பெரியவர் முன்பு சொல்லியிருக்கிறார். குரங்குப் படை என்னிடம் இருக்கிறது, அதை வைத்துக்கொண்டுதான் காரியத்தைச் செய்வேன் என்று முன்பு பேசியிருக்கிறார். அப்படி யார் திருச்சியில் கூடி பேசினார் கள்? அரசியலிலிருந்து ஒதுக்கப்பட்டவர்கள் இப்போது மக்க ளிடம் செல்வாக்கற்று நடமாடிக் கொண்டிருக்கிற ஒரு பெரியவர் பேசினார்கள். அவர்கள் தான் மாணவர்களே, 25-ம் தேதி கல்லூரிக் குப் போகாதீர்கள், ஸ்கூலுக்குச் செல்லாதீர்கள் என்று திட்டம் போட்டு தீர்மானம் நிறைவேற்றினார்கள். 27-ம் தேதி நிகழ்ச்சி எல்லோருக்கும் தெரியும். இந்தித் திணிப்பைத் தடுக்கவேண்டு மென்றால் அதற்காக என்ன செய்வது? கூட்டமாகச் சேர்ந்து. கொண்டு படை எடுத்துவருவதைப் போல ஆர்ப்பாட்டம் செய்வதும், கல் எறிவதும் போலீசாரைக் கையில் பிடித்துக் கொண்டு மறம் போடுவதுதான் முதலமைச்சரைச் சந்திக்க

வருகின்ற முறையா? இதுதானே தமிழர் நாகரிகம் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் என்ன செய்தார்கள்? இந்த சபைக்கு வருகிற ஒரு உங்கத்தினர் கதர் குல்லாய் போட்டிருந்த காரணத் திற்காக பஸ்ஸிலிருந்து இறங்குங்கோது. சுதந்திரத்தின் ஆட்சியில் போலீசால் அடிபட்டு கால் முறந்த நொண்டியாக நடப்பதைப் பிடித்து அடித்தார்கள். இது முறையா? முதல் மந்திரி காரிலே வருகிறார்கள், புகைவண்டியில் நாம் போக வேண்டாமா? அதனால் அவர்கள் பலாத்காரத்தை விரும்புவார் இருக்கலாம். ஆட்சியின் தலைமையில் உள்ள போலீஸ் துறையினரும் ஆளுந்தரப்பு நடத்தலில் கையைக் கட்டிக்கொண்டு இருக்க வேண்டுமா? மாணவர்கள் போலீஸ்காரரைப் பிடித்து இரண்டு பைசா, பத்து பைசா என்று எலம் போட்டால் அதையும் பார்த்துக் கொண்டு போலீசாரால் சும்மா இருக்க முடியுமா? அப்படிச் செய்தவர்கள் மாணவர்களாக இருக்க முடியுமா? • • •

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, மாணவர்கள் நடத்திய ஊர்வலத்தில் போலீஸ் அதிகாரியைப் பிடித்து எலம் போட்டதாக • • காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ராமதாஸ் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி எலம் போட்டிருந்தால், போலீசார் நடவடிக்கை எடுக்காமல் என் இருந்தார்கள்?

• • • • •

திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் போலீஸ் அதிகாரியைப் பிடித்து எலம் போட்டார்கள் என்று சொல்கிற காரணத் தால் முன்பு எலம் போட்ட காரணத்திற்காக என்ன கைது செய்ய வில்லை என்று அவர்கள் தெரிவிப்பார்களா? அதற்கு வாய்க்கூற்றவர்கள் தான் போலீஸ் இலாகாவில் இருக்கிறார்களா?

திரு. கே. ராமதாஸ்: கனம் தலைவர் அவர்களே, இதை நான் சொல்லுவதற்கு முன்னால் கனம் உறுப்பினர் அவர்கள் அவசரப்படுவதிலே ஆத்திரப்படுவதிலே அர்த்தமில்லை. ஒரே காரணத்திற்காக போலீசார் அத்தனை பேரையும் கைது செய்யவில்லை. மாணவர்கள் வருகின்ற போது மாணவர்கள் கொந்தளிப்பாக இருந்தபோதும் ஒரிரண்டு இடங்களில் இருந்த காரணத்தினால் பொதுமக்களைக் கடைப் பிடிக்கும் என்று முதல் மந்திரியால் போலீசாருக்குக் கொடுக்கப்பட்ட உத்தரவு. சாதாரணமாகப் பொதுமக்கள் வரிசையாக எப்படி இருக்கிற காரணத்தினால் ஒரு மிஷன் தொழிலாளிகூட மாணவர் களைப்பார்த்து ஏளனம் அடித்து கொண்டிருப்பதால் மாணவர்கள் யார் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் யார் என்று பார்ப்பதற்கு நேரம் இல்லை. அதன் காரணமாகத் தான் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

திரு. க. அன்பழகன்: அந்தக் கூட்டத்தில் காங்கிரஸ்காரர்களாகக்கூட இருக்கலாம்

*** Expunged as ordered by the Chair.

திரு. கே. ராமதாஸ்: இருக்கவே முடியாது.

திரு. ஏ. கே. தங்கவேல் முதலியார்: உங்களுக்கு நிச்சயமாகத் தெரியாது. அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள் என்று தெரியாது.

திரு. கே. ராமதாஸ்: ஆகவே 25-ம் தேதி முடிந்து விட்டது. கூட்டமாக வந்த மாணவர்களை நம்முடைய அமைச்சர் வெங்கட் ராமன் அவர்கள் சமாதானப்படுத்தினார்கள். கலைந்து செல்கிற போது அமைதியாகக் கலைந்து சென்றார்களா? இல்லை. உத்தியோகம் செய்யக்கூடிய ஊழியர்கள் வீட்டிற்குப்போகும் போது அவர்களை அடித்திருக்கிறார்கள். அவர்கள் என்ன பாவம் செய்தார்கள்? 26-ம் தேதி காலையிலே குடியரசு தின விழா. எதிர்க்கிறவர்கள் அழுகிறவர்கள் வேண்டுமானால் துக்கம் கொண் டாடிக் கொள்ளட்டும். இந்த நாட்டினுடைய சுதந்திரத்தைக் காத்தவர்களுக்கு மரியாதை செலுத்துகிற வகையிலே கூட்டம் கூட்டுவது, ஊர்வலம் போவது இதை எதிர்க்க வந்தால் பொறுத் துக் கொள்ளுவார்களா? இதே சர்க்கார், அகிம்சை முறையில் இயங்குகிற சர்க்கார் வேண்டுமானால் பொறுத்துக் கொண்டிருக்க லாம். தேச பக்தி உள்ள பிரஜை ஒத்துக் கொள்வானா? சுதந்திர தினில் உற்சாகமாக உறுதியாக ஊர்வலம் செல்லுகிறான். கல் விழுந்தால், காலித்தனம் ஏற்பட்டால் கைகட்டிக்கொண்டிருப் பானா, காங்கிரஸ்காரர்கள் மட்டும் சென்றால் கைகட்டிக் கொண்டி ருக்க முடியுமா. ஊர்வலம் செல்லுகிறது எல்டாம்ஸ் ரோட்டிலே. முதன்முதலில் அந்தத் தெருவிலிருந்து அங்கு இருந்தவர்கள் இந்த ஊர்வலத்தின் மீது கல் வீசியதால் கருப்புக்கொடி அகற்றப் பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதற்கு மாறுகத் திரித்துக் கூறுகிறவர்கள் காங்கிரஸ்காரர்கள் காலித்தனம் செய்தார்கள், கருப்புக் கொடிகளை இறக்கினார்கள், கழகத்துக்காரர்களைத் தாக்கினார்கள் என்று பேசுவது நாகரிகம் அல்ல. தமிழர்களுடைய பண்பல்ல. நடைபெற்ற உண்மைகளை நினைக்காமல் பாபமல் பேசுவது தவறு. உண்மைகளை ஆராய்ந்து அறிந்து கொள்ளுவது தான் நியாயமே தவிர, தமிழர்களுடைய பண்பே தவிர வீண் புரளி கிளப்புவது நல்லது அல்ல. 26-ம் தேதி யன்று பச்சையப்பன் கல்லூரியில் உள்ள மாணவர்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் பலர் இருக்கலாம், காங்கிரசைச் சேர்ந்தவர்கள் பலர் இருக்கலாம், கம்யூனிஸ்டு களாகப் பலர் இருக்கலாம். அவர்களில் பலர் ஊர்வலமாகப் போவதை யார் தடுக்க முடியும்? தடுத்து நிறுத்த முடியும்? காங்கிரஸ் சார்பாக இருக்கிறவர்கள் அதிலும் தேச பக்தி உள்ள மாணவர்கள் மானத்தைக் காத்து சுதந்திரத்தை வாங்கிக் கொடுத்த பெரியவர்களுக்கு நன்றி செலுத்தக் கூடிய முறையில் அங்கு தேசியக் கொடி ஏற்றி வைக்கப்படுகின்றபோது தடுத்து நிறுத்துவது எரியா? எங்களுடைய கொள்கை பிடிக்கவில்லை யென்றால், கருப்புக்கொடி ஏற்றிக்கொள்ள வேண்டுமென்றால் அது உங்களுடைய இடம். காங்கிரசுக் கட்சியினுடைய காரிய

தரிசியை அழைத்து இந்தத் தேசியத் திருநாளை நடத்த முற்பட்ட வர்களைத் தாக்கியிருக்கிறார்கள். காரியதரிசியைத் தாக்கி இருக் கிறார்கள். அவருடைய காரைச் சேதப்படுத்தினார்கள். அவரைப் பலாத்காரமாகப் பிடித்து இந்தி ஒழிக என்று அவரைச் சொல்லச் சொன்னார்கள். இவைகளையெல்லாம் செய்தபிறகும் அங்கு போலீசார் தலையிடவில்லை. காங்கிரஸ் காரியதரிசி தாக்கப் பட்டார். கார் உடைக்கப்பட்டது. அமைச்சர்கள் தலையிடவில்லை. அதன் பிறகு நடைபெற்றது என்ன? யார் விழா கொண்டாட ஏற்பாடு செய்தார்களோ அவர்களைத் தாக்கும்போதும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள். முதலமைச்சர் மாணவர்கள் அத்துமீறி நடந்துகொண்டாலும்கூட பொறுமையாக இருங்கள் என்று சொன்னதால் போலீசுக்காரர்கள் பொறுத்துக்கொண் டார்கள். அன்பழகன் அவர்கள் வீட்டில் கொலை நிகழ்ந்து அல்லது கொள்ளை அடித்தவன் புகுந்து கொள்ளுவானேயால் அவனைப் போலீசார் பிடிக்கக்கூடாதா?

திரு. க. அன்பழகன்: நண்பர் அவர்கள் பெயரைச் சொல்லி குறிப்பிட்ட காரணத்தினால் பேசுகிறேன். என் வீட்டில் கொலை செய்ய அல்லது கொள்ளை அடிக்க வருபவனைப் பிடிப்பதா அல்லது போலீசுக்காரர்கள் வீட்டில் இருப்பவர்களை அடிப்பதா?

திரு. கே. ராமதாஸ்: நான் மீண்டும் சொல்கிறேன். நான் ஒரு வார்த்தை பேசும்போது என்ன முடிக்கிறேன் என்று பொறுமை யாக இருந்து கேட்டால் புரிந்து கொள்ளுவது சாத்தியமாக இருக்கும். ஆத்திரப்பட்டு எழுந்து இந்தப் பேச்சை முடிப்பதற்கு முன்னால் பேசினால் புரிந்து கொள்ள முடியாது. இந்த மாணவர் களில் மூன்று பிரிவுகள். ஒன்று காங்கிரஸ் பிரிவு, ஒன்று தி.மு.க. முன்னேற்றக் கழகப் பிரிவு, ஒன்று ஏற்கெனவே புகுத்தப் பட்ட வெறி உணர்ச்சி கொண்ட குழு. இப்படிப் பிரிவுகள். தேசியக் கொடியை ஏற்றியதை இறக்கியே தீரவேண்டும் என்று வற்புறுத்தினார்கள். அப்போதும் போலீசார் தலையிடவில்லை. அவர்கள் கட்டமாகப் புறப்பட்டு பூந்தமல்லி ஹைரோட்டில் சென்று கொண்டிருந்த சர்க்கார் பஸ்கள் ரெடியாக வைத்திருந்த பெட்ரோல், டிரோஜின் இவைகளால் கொளுத்தப்பட்டு உள்ளே சென்ற பிறகுதான் போலீசார் உள்ளே நுழைந்தார்கள். உள்ளே ஓடி ஒளிந்தவர்களை விட்டு விட முடியுமா? பொதுச் சொத்து, மக்களுடைய சொத்து அரசாங்க பஸ்களைக் கொளுத்தினால் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? நம்முடைய போலீஸ் அதிகாரிகள் அகிம்சாவாதிகளாக மாறிவிட்டார்கள். முதல் அமைச்சர் தலைமையில் நடக்கிற அரசாங்கம், அகிம்சை, காந்தியடிகள் இவைகளுக்குக் கட்டுப்பட்டு இருக்கலாம். ஆனால் அராஜகத்தை அடக்கவேண்டிய போலீசாரும் அகிம்சாவாதி களாக மாற வேண்டுமா? இந்த சென்னைப் போலீசுக்காரர்களைப் பொறுத்தவரையில் மிகமிக நல்ல முறையில் அகிம்சையைக் கடைப்பிடித்து இருக்கிறார்கள். மாணவர்கள் என்ற பெயரால் பலர் பஸ்களைக் கொளுத்தினார்கள். போலீசார் மீது செருப்பு

வீசினார்கள், தடியால் அடித்தார்கள். போலீசார் மாணவர்களைப் பார்த்து கையெடுத்து கும்பிட்டு அவரவர்களுடைய சூழுக்குச் செல்லுங்கள் என்று சொன்னார்கள். ஆகவே இவ்வித காரியத் தனம் செய்தவர்கள் எப்படி மாணவர்களாக இருக்க முடியும்?

திரு. க. அன்பழகன்: வேறு யார்?

திரு. கே. ராமதாஸ்: வேறு யாராக இருக்க முடியும் என்று நான் சொல்லிவிட்டேன். அதே மாதிரி வெங்கடேஸ்வரா ஹாஸ்ட லில் மற்றொரு நிகழ்ச்சி நடைபெற்றதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். 25-ம் தேதி அன்று—தேசியத் திருவிழா மறு நாள். தேசியக் கொடி கட்டுவதற்கு பைகிராப்ட்ஸ் ரோட்டில் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே 25-ம் தேதி அன்று எங்கே நம்மையெல்லாம் பிடித்து உள்ளே போட்டுவிடுவார்களோ என்று ஒளிந்து கொண்டிருந்த தி.மு.க. முன்னேற்றக் கழக நண்பர்கள் எல்லாம், மற்றும் மெரினா குப்பத்திலே இருக்கிறவர்கள் ஹாஸ்டலுக்குள்ளே புகுந்துவிட்டார்கள்.

திரு. க. அன்பழகன்: நடைபெற்ற நிகழ்ச்சிகளைத் தொகுத்து உறுப்பினர் அவர்கள் பேசுகிற காரணத்தினால் அதற்குப் பொறுப்பு எடுத்துக்கொண்டு இந்த நிகழ்ச்சிகளைப் பற்றி அமைச்சர் அவர்கள் நீதி விசாரணை நடத்த முன் வருவார்களா?

திரு. கே. ராமதாஸ்: தலைவர் அவர்களே, குறுகிய நேரம். நான் ஆளும் கட்சியைச் சேர்ந்தவனாக இருந்தாலும்கூட நிகழ்ச்சிகளைப் பற்றி விமர்சிக்க எனக்கு உரிமை உண்டு. முதலமைச்சர் அவர்கள் பதில் அளிப்பதற்கு நேரம் அளிக்கவேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ரயில் நிறுத்தப்போராட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். போராட்டம் என்று ஆரம்பிக்கப்பட்டு போராட்டம் எந்த நிலையில் நடத்தப்பட்டது? மாணவர்களால் இதைச் செய்ய முடியுமா? ஒரு ரயில் இன்ஜின் ஆள் இல்லாமலே திருகிவிடப்பட்டுத் தானாக ஓடுகிறது என்றால், எந்த மாணவர்களாலாவது இதைச் செய்ய முடியுமா? உங்களால் பயிற்சி செய்யப்பட்டு ரயிலில் உத்தியோகம் செய்கிற நண்பர்கள் தேர்ச்சிபெற்றுவிட்ட காரணத்தினால் அவர்கள் செய்திருக்கிறார்கள், இதை.

திரு. க. அன்பழகன்: சட்டமன்றத்திலே பேசுகிறபோது நேரடி யாக உங்களால் என்று சொல்லுவது சட்ட மன்ற முறைக்கே, பாராளுமன்ற முறைக்கே சரியில்லை. ஆகையால் அவைகளை யெல்லாம் சட்ட மன்ற நிகழ்ச்சியிலிருந்து விலக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: உங்களால் என்பதை மற்றவர்களால் என்று மாற்றி வைத்துக் கொள்ளலாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

[4th March 1965

திரு. என். ஆர். தியாகராஜன் : நண்பர் நடராஜன் அவர்கள் பேசும்போது என்னைப்பார்த்து உங்கள் என்று 4, 5 தடவை சொன்னார்கள். அதையும் எடுத்துவிடவேண்டும் என்று சொல்லுகிறேன்.

திரு. கே. ராமதாஸ் : அதைப் போன்று ரயில் என்ஜின்கள் உடைக்கப்பட்டதுடன் ஒவ்வொரு ரயில் பெட்டியும் சேதப்படுத்தப் பட்டது என்று நான் சொல்லத் தேவையில்லை. மற்றொன்று, ரயில் நிறுத்தப் போராட்டம் பற்றி நண்பர் சம்பந்தன் சொன்னார்கள். அதுபோன்று ரயில் நிறுத்தி என்ன சாதித்தார்கள்? இந்தி ஒழிக, தமிழ் வாழ்க என்று? கோபால் வெட்டிக் கொல்லப்பட்டார். என் பக்தவத்சலத்தை வெட்டிக் கொல்லக் கூடாது என்று எழுதி இருந்தது.

திரு. எஸ். கே. சம்பந்தன் : நான் முன்னும் வெட்டிக் கொல் என்று சொல்லவில்லை. சர்வாதிகாரத்தில் நம்பிக்கை வைக்க வேண்டா மென்று தான் சொன்னேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நீங்கள் சொன்னதாகச் சொல்ல வில்லை.

திரு. கே. ராமதாஸ் : இப்படி ஆத்திரம் ஊட்டக் கூடிய அளவிலே எழுதி இருந்தார்கள். கலைஞர் நேற்றைய தினம் பூராவிலும் எழுதியிருந்திருக்கிறார்கள். "பக்தவத்சலம் மரணம், மாலை 4 மணிக்கு சவ ஊர்வலம் மயானம் செல்கிறது." இந்த அநாகரீக வார்த்தைகளை, பண்பற்ற வார்த்தைகளை எல்லாம் தமிழ் நாட்டிலே வாழ்கிற ஒவ்வொரு தமிழனும் கேட்டுப்போது வெட்கித் தலை குனியத்தான் வேண்டும். "6 மணிக்கு சவ அடக்கம். எல்லோரும் சேர்ந்து வாரீர். ஐ.ஜி. அருள் ஹெனல் அரெஸ்ட் செய்யப்பட்டார். பயமின்றி போராட்டத்தில் குதிக்க வாரீர். டிபுடி கமிஷனர் சேதுமாதவரை மாணவர்களால் கூட்டிக் கொல்லப் பட்டார்." இவ்வாறு எதிரியிலே எழுதியது யார்? இந்த அநாகரீக வார்த்தைகளை எழுதியது திருமகனார் என்று கூறுகியாகச் சொல்ல முடியும். இது கிட்டத்தட்ட ஆதியே தனி திதிலே எதோ மாணவர்கள் மட்டும் சம்பந்தப்பட்டிருப்பதாகச் சொல்வது சரி யில்லை. சம்பந்தப்பட்டவர்கள் யாராக இருப்பினும், சர்க்கார் மீண்டும் மீண்டும் சமாதானத்தைப் பற்றியே பேசிக் கொண்டி ராமல், இந்த விதமான காரியங்களில் ஈடுபடுகிற தலைவர்கள் யாராக இருப்பினும், உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இந்த நிர்வாகத்தை நான் எதிர்க்கிறேன் என்ற வகையிலே எதிர்ப்பதாகி முத லமைச்சர் அவர்கள் சமாதானத்தைக் கொஞ்சம் மறந்து துணிவாகக் காரியங்களை ஆற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

DR. A. LAKSHMANASWAMI MUDALIAR : Mr. Chairman, Sir, It is with feelings of extreme sorrow that I rise to speak on this occasion. I have been in this House for the past 18 years and I have participated in many discussions and debates but when in the Business Advisory Committee, I felt with the Hon. the Leader

4th March 1965] [Dr. A. Lakshmanaswami Mudaliar]

of the House, or rather I told the Hon. the Leader of the House when this Motion was given notice of, let some steam be let off, it never occurred to me that on this occasion we would conduct ourselves in the manner which I am sorry, very sorry this House was ever guilty of. I profusely apologise to the Hon. the Chief Minister for the sentiments that have been expressed unconsciously perhaps by some members on this side of the House. I equally regret the amount of heat and passion that was displayed by members on the Treasury Bench which in my opinion was not at all necessary. I feel on an occasion like this, what is wanted is a little bit of circumspection, introspection and a little bit of charity to everybody concerned. I regret that that has not been present on this occasion. Let me say this, Sir, that there are occasions when unfortunately emotions do get better of us. It is a sign of weakness and not of strength. It is a sign which we of the medical profession always try to persuade our clients not to exhibit. We say, ' Don't get your blood pressure rise in your own interest and if you wish to live long '. I have heard the speeches made by hon. Members on both sides of the House and I cannot congratulate them on the very vehemence with which some of them spoke about the incidents as though they had personally come into contact with such incidents. That amount of passion was not necessary. We know many things are happening. I do not think, therefore, this is the occasion when we should speak in a tone which I venture to suggest that this House has never been guilty of. Let us all come back to the original mood, let us behave as we ought to as elders. I wish respectfully to apologise for the statement made by my hon. Friend Sri Sambandhan which on cooler consideration he would feel might have been very seriously misunderstod. I hope he will get up later and apologise for the statement that he has made.

Sir, I speak more on behalf of the students. It is true that the upsurge among the students was sudden and practically widespread throughout the State and in other parts of the country as a whole. It would not be correct to say that the upsurge was not the result of the spontaneous feeling among the student population, rightly or wrongly, of something which was detrimental to their interest and to their future. As to the causes of that I leave it to be dealt with at a later stage. But I do want to state this, that it was due in the main to the feeling of helplessness that the student community felt.

Blame has been lavishly laid on the Chief Minister. It is natural that people who had not the opportunity to meet the Chief Minister at different stages of this unfortunate episode should come to that conclusion. And while technically everything that goes on in the State may be laid at the door of the Government, there is also reason to consider whether it is justified and whether all the acts were such as warranted the steps that were taken. Certain incidents in regard to the steps taken in colleges and

hostels have been referred to and when responsible Principals have come forward to testify to these incidents, we cannot brush it aside.

Soon after those incidents came to my notice, as Vice-Chancellor I sought an interview with the Hon. the Chief Minister and requested him to issue instructions to the Police officials to observe the usual policy that had been observed on previous occasions that, within the colleges, the Principal or the Warden should be responsible and it is only when things get out of their control and they request the services of the police that the police should enter. The Chief Minister assured me that necessary instructions would be issued in this direction. I know also from the reports of the Principals and others that this was actually what happened.

When a statement was issued jointly by the Vice-Chancellor of the Annamalai University, Dr. C. P. Ramaswamy Iyer and myself, we realised at an early stage that unfortunately in the name of the students, unsocial elements were taking advantage and as always happens in such cases, created a state of lawlessness which if stern steps had not been taken might have led to greater amount of chaos and disorder. The tragic events that took place at Tiruppur which are too horrible to mention cannot be easily brushed aside by us. We can never but be ashamed that those incidents should have taken place. Let me state also this that several of the incidents that took place and the worst incidents that took place, took place where there were no colleges and therefore there is no question of the students having been involved in all these incidents. I want to make that very clear.

Sir, a delegation of the Syndicate of the Madras University met the Hon. the Chief Minister who gave a very courteous hearing and who also promised sympathetic consideration so far as the students were concerned. I do not wish, therefore, to refer further to this episode but my whole interest now is to see that some steps are taken to bring about normalcy and a peaceful atmosphere in the State.

Sir, this is not the occasion when members belonging to political parties should be vying with one another to create an atmosphere of greater confusion and fears. It is not for the good of the country and Tamilnad. I have been in touch with the student population for fifty years and I can assure all members that there is no State in which the student population have acted in a commendable manner through many periods of excitement as they have in this State. I hope I will not be mistaken when I say that not only have I been in touch for 50 years with the student population, as one associated with the University and in fact with many other Indian Universities, I have known students in many parts of the country and many parts of the world and it is no exaggeration to say that the students in this State have been well disciplined and exceedingly well behaved. Therefore, it is a matter of great

sorrow for me that their fair name should have been tarnished and particularly because unsocial elements took advantage of the situation.

Sir, I shall not now go into the causes which led to the sudden upheaval. That perhaps we shall consider at a later stage when this Government have voluntarily given us the opportunity to discuss the language policy. There is no need now to get excited over that policy. We can discuss it in a cool manner, and I hope in a very much cooler manner than unfortunately what has been seen to-day. It is indeed a very commendable thing, characteristic of this Government all these years, and I should like to say how much we appreciate this fact that they have readily agreed to the suggestion of the Business Advisory Committee that two days should be set apart for this purpose.

Sir, I am old—older than anybody else. I am the oldest man here. Speaking at this age, let me remind you that I have seen many aspects of public life in all these forty years. I remember the days in 1942 when the 'Quit India' movement was launched. I remember the many incidents that took place then and the fact that certain harsh treatment was meted out, which has left a permanent mark on some of these people who have now gone to the extent of hating the very language, not merely the administration. We remember those days, and we do not want that anything more should be talked about them. But people in Northern India have that view. I may say that even in those days when, as Vice-Chancellor, I pleaded with the Government of the day for a couple of students who were unfortunately mixed up with others and were about to be committed to prison, the Government of that day yielded to my request and released those two students. But I can give you a more important instance of disturbances which took place in the Hindu University at Banaras, and the Government of the day felt that all the disturbances in Banaras very wrongly of course should be attributed to the students of the University. At that time, there was a great Vice-Chancellor at Banaras—No less a person than the President of the Indian Republic to-day, Dr. S. Radhakrishnan. He will tell you better than I can that he had an interview with the Governor, and it was he that convinced the Governor that it was not right policy to prosecute the students and penalise them. Let me say this that the Governor yielded to his request in many respects and made suitable alterations.

Now, Sir, I want to say this quite frankly. We do not want a whole generation of students to turn bitter against our own Government. What has happened has happened. I do not want even those who feel aggrieved to think that they have a great grievance against the Government. Whatever grievances there may be in one party or other, in a democracy, as the Hon. the Leader of the House has always stated, there are ways and means of expressing those grievances and getting them redressed. Have we now become a different nation? Have we become individuals

unknown to each other just because we belong to different political parties? I do not want that these unfortunate events should darken the career of any of those students who, from an over-zealous or too enthusiastic an attitude, might have been considered as dangerous.

Prosecutions have been launched. We pleaded with the Chief Minister and his colleagues that they be kind enough to see that the Government did not pursue the cases. The Chief Minister had always a receptive mind in regard to the treatment that had to be meted out to the students. He gave us that assurance when we waited in deputation on him. I am sure that his attitude still continues to be the same because in all our interviews and discussions, we never found him unsympathetic to what we had to say—not even a word uttered in haste or in anger. Sir, there is always the possibility to err. To err is human and to forgive is divine. I would at this moment request the Chief Minister to kindly see that all the students arrested or sentenced are let out and an amnesty is given to the student community. I am strengthened in this hope by the statement made by the Prime Minister in the Lok Sabha in reply to the debate on the President's Address, where he has said that while he is prepared to take a lenient view of the students' emotional outburst, he could not overlook the role of the anti-social elements. I am sure, Sir, that there will not be wanting people who will say that this Government have not been firm. I have heard it said by very senior people that it is always the case with people to think that they can govern much better when they are not in office and that they will know how difficult it is to govern only when they are in office. To think that the Chief Minister is responsible for all that has happened is, in my opinion, as unnecessary and harmful as to think that the Vice-Chancellor is responsible for all the copying done by the students here and there and taking the Vice-Chancellor to task for that reason (laughter). This is not correct. Let us look at things in a fair and square manner. The Chief Minister is there. He had to be rooted to the desk. He could not go out. He could not see things. It is possible that things might have gone wrong here and there. Nobody need be ashamed of owning it. Nobody need be enraged or exasperated because things had happened here and there. It is worthwhile for us to go on discussing and discussing as if no peace can be established? We have our own future. I shall just give an instance. As a student in 1908, we heard at 8 o'clock one night that Bepin Chandra Pal was coming to Madras the next morning. This information was brought to us by Sri Chakkarai Chettiar, and we were all anxious to publicise the news. How is this to be done? How was the announcement to be made? A young student got hold of a brilliant idea. He thought of lighting a big torch on the 5th floor of the Caithness Hall in Linghi Chetty Street, where we were all resident. Fifty thousand people had gathered at that time to see what it was all about. The warden of that hostel was no other than Dr. Skinner, Principal of the Christian College. We had closed the doors of the hostel and

got on to the fifth floor, and the warden could not get admission to where we were. He waited for two hours till the torch had completely burnt out. When we announced the plan in our over-zealous excitement, he went home and did not sleep that night. Next morning he came to the hostel and we were called to assemble in the hall. He asked " Do you realise what you have done? Do you realise that what you have done would have resulted in the conflagration of the whole area? Do you realise that by our foolish conduct you yourself would have perished in the conflagration ?". Like this he admonished us till tears came down our eyes. It was he who went to the Commissioner of Police and pleaded that this was a foolish act, a childish act, and that it should be ended. Sir, let us now have a new chapter with the students. Because, who are the students? Are they not our own children and grand children? It is unnecessary to give the names of parents of these children. Many of them might be very young. It is not the names of the parents that we want now. What we want now is that the whole situation should be assuaged. We should bring about rational methods of dealing with the subject and we should so conduct ourselves that we shall once more be worthy of being legislators in an enlightened State such as Madras.

Sir, the future of our country rests not on us but on the young students of to-day. They are going to protect us and they will be the bastions to prevent any unholy hands being laid on this sacred soil. It is to them that we have to go, not to any of us—I speak with great respect to the whole gathering—because none of us will be in a position to fight the enemy. If anybody is prepared to rise here, he can rise. I know he cannot. Because it is not the spirit only. It is something better than spirit—physical being. I have known the most generous response that was forthcoming in October 1962 from the student population from every college, every school, and every hostel,—the girl students throwing jewels without consulting their parents and getting abuse at home. That was the state of affairs then. I remember that day in October 1962 when I addressed a great gathering of students, research workers and the staff in the University. It was an electric response that we had. It is those students that are going to save us. They are very generous in spite of their faults. As one associated with them for so many years I cannot but feel very sad that anything like this should have happened here.

Let me say this, Sir. I am making an appeal to this Government. Many things could be said and have been said. But I deeply regret that any statement should be made here or elsewhere which will directly react on what we know were the cruel days which we had to pass through. Such things have never happened in the State to any Chief Minister. I hope we had better drop the idea of having any direct attack on anybody. This is a divine event like the floods and tidal waves that struck Rameswaram. It was a divine act; other people might have taken advantage of it. Let us gather together and restore the good name of the State.

I thought these disturbances were only confined to the north, the east and the west. In the south we thought there was no disturbance and we were protected. But I have no reason to think that we are any more protected and out of the woods. Then you will realise that there is a great need for that unity that ought to prevail in the country. That unity, unfortunately, is lacking. It is not language that can bring us unity. Unfortunately, a few people have got that feeling. Of that we shall speak at a later stage. What is wanted is a unity of purpose once more to help ourselves, to come together, not for party advantage. No party can last for ever and after all, any party which places the interests of the country below the interests of the party and which considers the party more important than the country, cannot in a democracy succeed. My Friend opposite need not be too vehement in this matter. After all is said and done, vehemence does not lead us anywhere. Let us get at things. Let us forget this unfortunate chapter and I say that with all the humility that I can command. Let us forget it. Let us not discuss who did this, who did that and who did the other thing. My Friend spoke as if he had seen what had happened in a television set. But I do not know; I have only heard about it. I cannot speak with such vehemence on any matter of which I am not personally aware. There is no use of talking like that. You can get excited, but that is not what is wanted. What is wanted is calm, deliberate consideration as to how to cure the great wounds that have taken place in Tamil Nad. I beg of you, sitting there or here, not to get excited. My hon. Friend Sri Sambandhan in a moment of haste spoke what he would never have meant. I apologise on his behalf. Let us all gather together and see what could be done. I have been for many years in the public life of this country. Fortunately or unfortunately, I am the most senior Vice-Chancellor in the whole of this Country. I have been the Vice-Chancellor of the University for the past 25 years. Believe me when I say that I am not saying this to boast myself. I never expected in the last years of my service in the University that I would have to witness such things. I hope, therefore, we will all forgive and forget. In that spirit I would appeal to all of you, appeal to Sri K. Anbazhagan and his followers. "Let us forget and forgive, whoever it may be". Let us once more launch on our task, the great task of unifying ourselves and unifying our country and seeing that nothing is done to prevent that unity. I pray God's Grace may be showered on all of us. I pray that we may have the divine blessings to see once more that we close up our ranks and that we do not allow the tension to continue. It is in that belief and hope that I have said the many things which you may not relish.

Thank you, Sir.

(Deputy Chairman in the Chair.)

*கனம் திரு. எம். பக்தவத்சலம்: தலைவர் அவர்களே, கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மிகவும் உருக்கமாகத் தெரிவித்த கருத்துகள், இந்த விவாதத்தில் எனக்கு விடை அளிக்கும் பணியை சுலபமாக ஆக்கிவிட்டது. இவ்வாறு இந்த சம்பவங்களைப் பற்றி அரசாங்கமே விளக்கும் ஒரு சந்தர்ப்பத்தை இரண்டு நாளைக்கு முன்பாக மற்றொரு மன்றத்திலே எதிர்பார்த்தேன். ஆனால் அது நேரவில்லை. ஆகவே இந்த அவசரப் பிரேரணை கொண்டு வரப்பட்ட வாய்ப்பை நான் வரவேற்றேன். ஆனால் நான் கூறப் போகிற சம்பவங்கள் மிகவும் துக்கத்தை அளிக்கும் சம்பவங்கள். இந்த சம்பவங்கள் நேர்ந்ததற்கு வருந்துவதோடு இதனாலே பாதிக்கப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கும் நான் என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த துக்கரமான சம்பவங்களையெல்லாம் எண்ணிப் பார்க்கும் பொழுது, இந்த துக்கரமான சம்பவங்கள் துக்க நாள் கொண்டாடியதனால் தான் என்ற முடிவுக்கு வரவேண்டியிருக்கும் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். எனெனில், இந்த அவசரப் பிரேரணையினையே அவசரப் பிரேரணை கொண்டு வந்தவர்களாலேயே சொல்லப்பட்டிருக்கிறது. துக்க நாளோடு சேர்த்து, மாணவர் கிளர்ச்சியோடு சேர்த்து இந்தி எதிர்ப்போடு சேர்த்து இவ்வாறு ஒன்றுக்கொன்று சம்பந்தம் ஏற்பட்டு இருக்கிறது என்பதை அவர்களே ஒப்புக் கொண்டதால் என்னுடைய பணி மிகச் சுலபமாகி விட்டது. எனவே இதைப்பற்றி அதிகமாக நான் விளக்கிச் சொல்ல வேண்டியதில்லை. கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியபடி போனது போய்விட்டது, மறந்து விடுவோம் என்பதுதான் என்னுடைய எண்ணம். இருந்தாலும் சில கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டதால் நான் அதற்கு விளக்கம் கூற வேண்டியவனாக இருக்கிறேன்.

சட்ட மன்றத்திலேயே எவ்வளவோ நான் கேட்டுக் கொண்டேன் "26-ம் தேதி புனிதமான நாள். சுதந்திரம் அடைவோம் என்று பிரதிக்ஞை எடுத்துக் கொண்ட நாள். 1931-ஆவது ஆண்டிலிருந்தே சுதந்திர நாளைக் கொண்டாடி வந்திருக்கிறோம்", என்று. சுதந்திரா கட்சித் தலைவர்கள் எடுத்துக் கூறினார்கள். "இவ்வாறு துக்க தினம் கொண்டாடினால் பக்கத்திலே இருக்கிற சிறுக்காரன் எல்லையில் இருக்கிறானே, அவன் என்ன நினைப்பான்? நாட்டிலே ஒற்றுமை குலைந்து பலஹீனம் ஏற்பட்டு விட்டது என்று நினைக்க மாட்டானா?" என்று அவர்கள் எடுத்துக் காட்டியதையும் எடுத்துச் சொன்னேன். 25-ம் தேதி வேண்டுமானாலும் கொண்டாடுங்கள் என்று கூறினேன். அதையும் கேட்கவில்லை. அதன் விளைவு என்ன? 26-ம் தேதி நடந்த கலவரங்களை உறுப்பினர் அவர்கள் அறிவாரா? சர்க்கார் பஸ்கள் கொளுத்தப்பட்டதை கனம் உறுப்பினர் அறிவாரா? பச்சையப்பா கல்லூரியில் இருந்து கொண்டு கல்லால் அடித்துக் கொண்டிருந்ததை உறுப்பினர் அறிவாரா? மறுபடியும் அந்த சம்பவங்களையெல்லாம் சொல்லி இந்த சபையில் ஒரு நெருக்கம் உண்டாக்க விரும்பவில்லை. 26-ம் தேதி நாம் மகிழ்ச்சியோடு கொண்டாட வேண்டிய நாள். நாடு பூராவும் பாரதம் பூராவும் மகிழ்ச்சியோடு கொண்டாட வேண்டிய நாள். அப்படியிருக்கும் போது இப்படிப்பட்ட சம்பவங்கள் எப்படி ஏற்பட்டன? சுதந்திர நாள் அன்று துக்க நாள் கொண்டாடுவது சொம்பத்

[திரு. எம். பக்தவத்சலம்] [4th March 1965

தவருனது என்பதையே இது எடுத்துக் காட்டுகிறது. துக்க நாள் கொண்டாடுவது என்று முடிவு எடுத்த காரணத்தினாலேதான் இவ் வளவு நடந்து விட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன். இந்தி வருவதைப்பற்றி நான் சட்ட சபையிலே விளக் கினேன். இப்போது என்னுடைய போக்கை நான் மாற்றிக் கொள்ள வில்லை. அப்போது என்ன சொல்வேனோ அதே தான் இப்போதும். இந்தி பேசாத இடங்களில் ஆங்கிலம் தொடர்ந்து இருக்கும். ஜனவரி 26-ம் தேதி இந்தி ஆட்சி மொழியாக வந்தாலும் அதனால், மாராக இருந்தாலும், மாணவர்களாக இருந்தாலும் உத்தியோகஸ்தர்களாக இருந்தாலும் அவர்கள் எந்த விதமாகவும் இதனால் பாதிக்கப்பட மாட்டார்கள், அவர்களை நாங்கள் பார்த்துக் கொள்வோம் என்று உறுதி கூறியிருக்கிறேன். இன்னும் அதை மறுபடி எடுத்துச் சொல்லி வருகிறேன். ஆனால் இப்போது அதைப்பற்றி எல்லாம் பேசக்கூடாது. கான்ஸ்டிடியூஷனை மாற்ற வேண்டும் என்று விடாப்பிடியாகச் சொல்லிக் கொண்டு வந்தார்கள். மொழியைப் பற்றிப் பேசப் போகிறார்கள். 11, 12 தேதி களிலே நான் விளக்கமாக கூறலாம் என்று இருக்கிறேன். ஆனால் ஒன்று நாம் எதையும் பாரத நாடு என்ற அடிப்படையிலேயே சிந்திக்க வேண்டும். துண்டு போடலாம் என்று மனதிலே நினைத்துக் கொண்டு இருப்பவர்களுக்கு இது புரியாது. தனியே போக வேண்டும் என்ற எண்ணம் உள்ளவர்கள் ஆங்கிலமே வேண்டும் என்றால், ஆங்கிலத்தை வேண்டாதவர்கள் மீது நாம் எப்படி ஆங்கிலத்தைத் திணிக்க முடியும்? ஆகவே அது சாத்தியப்படாது என்று சொல்லினேன். 25 பேர் வந்தார்கள். 2½ மணி நேரம் பேசி னார்கள். இரவு 11¾ மணி வரையில் பேசினார்கள். ஆனாலும் கேவிப் பின்னர் மாதிரி திருப்பித்திருப்பிச் சொல்கிறார்கள், கான்ஸ்டிடியூ ஷனைத் திருத்த வேண்டும், இந்தியே கூடாது என்று தான் சொன் னேன் "அது தல்லதில்லை. அது வேண்டாம். உங்களுக்கு நம்பிக்கை இல்லை யென்றால் இப்படிச் செய்யுங்கள். 2, 3 ஆண்டுகள் நீங்கள் நன்றாகப் படியுங்கள். பாலிடிக்ஸில் சேர்ந்து படியுங்கள். இதற்கு மேலே நான் என்ன சொல்வது" என்று சொன்னேன். ஆனால் இதுபற்றி நேரலி இருந்த வரையில் இது வரைக்கும் நடைமுறையில் நம்பினேன். ஆனால் இப்போது உண்மையிலேயே ஒரு அச்சம் ஏற்பட்டு இருக்கிறது. அதையும் உடனடியாகப் போக்க வேண்டும். கிளர்ச்சி செய்கிறவர்கள் ஒரு புறம் இருக்கட் டும். உண்மையிலேயே இந்தி திணிக்கப் படுமோ என்ற அச்சம் இருக்கிறது. அதை நீக்க வேண்டும். இதற்கு ஒரு சட்டத் திருத் தம் வேண்டுமென்று தெரிவித்தேன். அதை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். இந்தியைப் பற்றி இப்போது நான் அவ்வளவு தான் கூற விரும்புகிறேன். இந்தியுடன் ஆங்கிலமும் இருக்கும். "கான்ஸ்டிடியூஷன்படி." இந்திதான் நாட்டின் ஆட்சி மொழி. 'கான்ஸ்டிடியூஷன்'-ஐ மாற்ற வேண்டும் என்று நான் சொல்லவில்லை ஆனால் நான் ஆங்கிலம் வேண்டும் என்கிற வரையில், எதாவது ஒரு மாநிலம் ஆங்கிலமும் வேண்டும் என்கிற வரையில், ஆங்கிலமும் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்று தான் நானும் விரும்புகிறேன். அதற்குரிய முறையில் சட்டம் திருத்தப்பட

March 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

வேண்டும். ஆகவே என் போக்கில் ஒரு மாறுதலும் இல்லை. 'கான்ஸ்டிட்யூஷனை' மாற்ற வேண்டும் என்று நான் சொன்னேன் என்ற பேச்சுக்கே இடமில்லை. ஆனால் இங்கே இருந்த போக்கில் மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. இந்த மாறுதல் குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன் அதாவது நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு விரோதமாக இந்தப் போக்கு செயல்படாதபடி இதன் தீவிரம் கொஞ்சம் குறைந்திருக்கிறது; சம்பந்தப்பட்டவர்கள் இந்தப் போக்கின் தீவிரத் தன்மையைக் குறைத்துக் கொண்டதுபற்றி மகிழ்ச்சியடைகிறேன்.

மாணவர்களிடம் எனக்கும் பரிபூரண அனுதாபம் உண்டு. மாணவர்கள் தவருன முறையில் நடந்துகொண்டு விட்டது தான் எனக்கும் கவலையை உண்டுபண்ணுகிறது. அவர்கள் தவருக நடந்துகொண்டதற்காக அவர்கள் மீது பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்று நான் விரும்பவில்லை. அவர்கள் 6-ம் தேதி என்னை வந்து பார்த்தபோது, "மற்றவர்களிடம் கண்டிப்பாக இருப்பவன் நான். கோர்ட்டில் ஒரு வழக்குத் தொடர்ந்துவிட்டால், என் நடவடிக்கைகளை நான் கைவிட மாட்டேன். ஆனால் உங்கள் விஷயத்தில் பரிபூரண அனுதாபத்துடன் நடந்துகொள்ளத் தயாரா யிருக்கிறேன்" என்று அவர்களிடம் நான் சொன்னேன். வைஸ்-சான்ஸலர், ஸ்ரீ. பாலசுப்ரமணிய ஐயர் முதலியவர்கள் என்னை வந்து பார்த்தபோதும், இதையேதான் நான் அவர்களிடமும் சொன் னேன். மாணவர்களிடம் நான் கண்டிப்பாக இல்லை. அவர்களிடம் எனக்கு அனுதாபம் இருக்கிறது. தவறு செய்த மாணவர்களைத் தண்டித்துத் தான் ஆக வேண்டும் என்பது நியாயமில்லை. இருந் தாலும், அவர்களை எப்படித் திருத்துவது என்பதைப் பற்றிச் சிந்தித்துத்தானாக வேண்டும். அவர்களுடைய எதிர்காலத்தைப் பற்றியும், அவர்கள் இனிமேல் நல்லவிதமாக நடந்துகொள்ள வேண்டும் என்பதைப் பற்றியும் சிந்தித்துத்தானாக வேண்டும். மாணவர்கள் பலாத்காரத்தில் ஈடுபட்டார்கள். ஆனால் அவர்களைத் தூண்டியவர்கள் வேறு சிலர். இந்த விவகாரத்தை இப்போது நான் வளர்க்க விரும்பவில்லை. சம்பவங்களுக்கு ஒரு கட்சியினர் 'ப்ளான்' போட்டார்கள். மற்றொரு கட்சியினர் 'ப்ளான்' போட் டார்கள். மற்றொரு கட்சினர் வெறுப்பை உண்டாக்கினர்கள். மாணவர்களுக்கும் எந்தெந்தக் கட்சியினருக்கும் தொடர்பு உண்டு என்று எனக்குப் பல தகவல்கள் வந்திருக்கின்றன. யார் யார் யாரிடம் தொடர்பு கொண்டனர் என்ற தகவல் என்னிடம் இருக் கிறது. இது எனக்கு மிகவும் வருத்தம் தருகிறது. அந்தக் கட்சி யினரால் மாணவர்கள் தூண்டிவிடப் பட்டார்கள். ஆனால் பிறகு

The students are let down by the very people who inspired and encouraged them to acts of violence and incendiarism.

திரு. க. அன்பழகன்; தூண்டி விட்டவர்கள் யார் என்ற தகவலை கனம் அமைச்சர் தரலாம்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதெல்லாம் எனக்கு நன்றாகத் தெரியும். யார் யார் மாணவர்களைத் தூண்டிவிட்டார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். தூண்டிவிடப்பட்ட மாணவர்கள்

பிறகு அவர்களிடம் சென்றபோது "இந்தப் பஸ்ஸில் மட்டும் வராதே, போ" என்று அந்த மாணவர்களிடம் அவர்கள் சொன்னார்கள். அப்போது, மாணவர்களின் கதி எப்படி வேண்டுமானால் ஆகட்டும் என்ற கெட்ட எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டது. இது மட்டுமில்லை. இவர்கள் இளம் சிறார்களைத் தாக்கிவிட்டுப் பிறகு "என்னிடம் வராதே" என்று அவர்களிடம் சொன்னதுடன் நிற்கவில்லை. "மாணவர்களால்தான் இத்தகைய பலாத்கார சம்பவங்கள் நடந்தன" என்று அவர்களைத் தாக்கிவிட்டு நீங்களே சொல்கிறீர்கள். இவ்வாறு பலாத்காரத்திற்கு முழுப் பொறுப்பையும் மாணவர்கள் மீது சுமத்துவது சரியானதல்ல.

நான் கவலைப்படுவதெல்லாம், மாணவர்கள் மனதில் தவறான கருத்து ஏற்பட்டுவிட்டதே என்பதுதான். அவர்களே யார் தாக்கிவிட்டாலும் அவர்கள் மனதில் ஒரே மாதிரியான தாக்கு கொண்டியது: மனதில் தவறுதலாக கருத்து ஏற்பட்டது. ஒரு வைத்தியக் கல்லூரி மாணவர் தன் ஆசிரியரைப் பார்த்து "அடுத்த ஆண்டிலிருந்து நாங்களெல்லாம் எல்லாத்தையும் இந்தியில்தான் படிக்க வேண்டுமாமே" என்று கேட்டதாம். இப்படிப்பட்ட தவறான கருத்து மாணவர்கள் மனதில் ஏற்பட்டது. அவர்கள் பலாத்காரத்திலும் இறங்கினார்கள். அவர்கள் 27-ம் தேதி பஸ்களைக் கொளுத்தினார்கள்; கற்களை எறிந்தனர்; இப்படிப்பட்ட காரியங்கள் எல்லாம் நடந்தன.

மாணவர்களை நான் பார்க்கவில்லை என்று சொல்ல முடியாது. அவர்களை நான் பார்க்கவில்லை என்று குற்றம் சொல்வதற்கே இடமில்லை. 25-ம் தேதி அவர்கள் வந்தபோது நான் காரியாலயத்தில் இல்லை. நான் அகில இந்திய நிலையத்திற்குப் போய், என் நாட்டு அமைச்சரைப் பார்த்து விட்டு ஒரு விழாவிற்காக வேறொருக்குச் சென்றேன். 27-ம் தேதியைப் போன்று அன்றைக்கு சந்திக்கவே இல்லை. அன்று அவர்கள் செக்ரடேரியட்டுக்கு வரவில்லை. அதற்குப் பிறகு மாணவர்கள் வந்தபோது, அவர்களை நிலையத்திலேயே மெல்வதற்காக போலீஸாரே அவர்களை நிறுத்திவிட்டார்கள். அதற்குப் பிறகு 6-ம் தேதி மாணவர்கள் என்னிடம் வந்து 1½ மணி நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

மாணவர்கள் சென்னையில் பட்டுவின்றி மற்ற இடங்களிலும் கார்களை நிறுத்தி பெட்ரோல் வாங்க முயற்சித்தார்கள். "பெட்ரோல் எதற்கு வேண்டும்" என்று கேட்டால், 'கொளுத்த' என்று அவர்கள் பதில் சொன்னார்கள். இங்கே இருக்கும் அம்பையர் அவர்கள் பட்ட பாடு சாதாரணமானதல்ல. அவர்களுடைய நல்ல காரின் டயர் ஆணியினால் கெடுக்கப்பட்டது. இப்படிப்பட்ட காரியங்கள் கேள்விமுறை இல்லாமல் செய்யப்பட்டதால் மாணவர்களுக்கு ஒரு ஆவேசம் வந்தது. அவர்களுக்கு ஒரு வெறுப்பு ஏற்பட்டது.

மாணவர்களுடைய எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்கும்போது, கவலை எற்படுகிறது. அவர்களுடைய எதிர்காலம் கருதி இருக்க வேண்டும் எதிர்க் கட்சித் தலைவரும், அதிர்ச்சி உபதேசமும் போல்பவர்களும், கல்வித் துறையில் அனுபவம்

பெற்றுள்ளவர்களும் இதுபற்றித் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும். மாணவர்கள் இத்தகைய தவறுகள் செய்யாதபடி எவ்வாறு பார்த்துக்கொள்வது என்றும், இவர்கள் கெட்ட இடமில்லாதபடி செய்வது எப்படி என்றும் பார்க்க வேண்டும். இந்த விஷயத்தில் பெற்றோர்களுக்கும் கடமை இருக்கிறது. "காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்று சொல்வதுண்டு. "இவர்கள் நம் குழந்தைகளாயிற்றே, இவர்களுக்கு நல்லொழுக்கம் ஏற்பட வேண்டுமே" என்று பெற்றோர்கள் நினைத்து, அவர்கள் போகிய அக்கறை எடுத்துக் கொள்ளாத வரையில், மாணவர்களிடையே சீர்திருத்தம் ஏற்படாது.

திருநெல்வேலியில் மாணவர்கள் 'ஹிந்தி ஒழிக' என்று ஒரு காகிதத்தில் எழுதி, அந்தக் காகிதத்தை நாக்கால் தொட்டு, அதை ஒரு ஸப்-இன்ஸ்பெக்டரின் நெற்றியில் ஒட்டினார்கள். ஒரு டெபுடி-சூபரிண்டெண்ட் ஆப் போலீஸ் மீது சாணத்தைப் போட்டு, 'ஹிந்தி ஒழிக' என்று சொல் என்று அவரிடம் சொன்னார்கள். ஒரு போலீஸ் அதிகாரியின் முதுகில் 'ஹிந்தி ஒழிக' என்று மாணவர்கள் எழுதினார்கள்.

மாணவர்கள் பலாத்காரத்தில் இறங்கினார்கள். அந்த சந்தர்ப்பத்தில் சமூக விரோதிகள் சேர்ந்துகொண்டார்கள்; அரசியல் கட்சியினர் சேர்ந்துகொண்டனர்; அரசாங்கத்தின் மீது ஆத்திரம் கொண்டவர்கள் சேர்ந்துகொண்டார்கள். இந்த விதமாகத் தான் கொடிய சம்பவங்கள் நேர்ந்தன; நஷ்டமும் ஏற்பட்டது; மனித உயிர்களும் பறிக்கப்பட்டன.

போலீசாருக்குச் சன்மானம் அளித்தது பற்றிப் பேசப்பட்டது. போலீசாருடைய வேலை மிகவும் கஷ்டமான வேலை. இன்று மக்கள் "அவர்கள் நம்மைக் காப்பாற்றினார்கள்" என்று சொல்கிறார்கள். அவர்கள் இல்லாவிட்டால் மக்கள் எவ்வளவோ கஷ்டங்களை அனுபவிக்க நேர்ந்திருக்கும்.

"27-ம் தேதி மாணவர்கள் என்னைக் காண வரும்போது, அவர்களைத் தொடாதீர்கள்" என்று போலீசாரிடம் சொல்லியிருந்தேன். மாணவர்களைப் பயன்படுத்திக்கொண்டவர்கள் பிறகு அவர்களை 'லெட் டவுன்' பண்ணிவிட்டார்களே என்றுதான் நான் வருத்தப்படுகிறேன்.

போலீசார் மிகவும் கஷ்டப்பட்டார்கள். அவர்களுடைய பொறுமைக்கு அளவே இல்லை. சென்னை நகர ஆசிரியர் ஒருவர் தின்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தை இங்கே படிக்க விரும்புகிறேன்.

It is very distressing to note that nowadays people seem to approve, justify and sometimes seek pleasure in expressing their opinions in a violent way, causing destruction to life, person and property. The role of the Police during these trying days in working hard to preserve the law and order and to protect the life and property against frenzied mob has been splendid and praiseworthy. Please convey hearfelt respects to those heroic police personnel

who fulfilled their duties with dauntless courage. I can humbly pray for their welfare and great glories. Also please convey my sincere and heartfelt sympathy and condolences to the relatives of those heroic souls, who died with their boots on.

போலீசாரின் பாதுகாப்பு யாருக்கு வேண்டாமென்று சொல்ல முடியும்? எல்லோருக்கும்தான் வேண்டும். பலாத்கார செயலிலே தொழிலாகக் கொண்டிருக்கிறவர்கள் குண்டர்கள் என்று சொல்பவர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்குக்கூட நாம் ஒரு சட்டம் செய்கிறோம். அதற்குக்கூட போலீசாரின் பாதுகாப்பு வேண்டியிருக்கிறது. போலீசார் கஷ்டப்பட்டுச் செய்தார்கள் என்றும் அவர்களுக்கு ஒரு இன்கிரிமெண்ட் கொடுத்தது தப்பா? போலீசார் மக்களைப் பாதுகாத்தார்கள். அது இல்லாமல் இருந்திருந்தால் மக்கள் அதிகக் கஷ்டப்பட்டிருப்பார்கள்.

திரு. என். வி. நடராசன்: போலீசாரின் சம்பள உயர்வு தவறு என்று சொல்லவில்லை. அதைக் கொடுத்த சந்தர்ப்பம் போலீசாருக்கும் பொதுமக்களுக்கும் உள்ள உறவைக் கெடுப்பதாக இருக்கிறது என்றுதான் சொன்னேன்.

(Mr. Chairman in the Chair)

கனம் திரு. எம். பக்தவத்சலம்: போலீசாருக்கும் பொது மக்களுக்கும் நல்ல உறவாகத்தான் இருக்கிறது. அந்த உறவு பெருகிவருகிறது. அதை மக்கள் நன்றாக உணர்கிறார்கள். அதையால் போலீசாருக்கு இந்த சபையின் மூலமாக பொதுமக்களின் சார்பாக அரசாங்கத்தின் சார்பிலும் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். போலீசாரின் பாதுகாப்பு எப்போதும் இருக்கும். அவர்கள் உயிருக்குத் துணிந்தவர்கள். எப்படியும் மக்களைப் பாதுகாப்பார்கள். ஒரு போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் கோரமாகக் கொல்லப்பட்டார். பல போலீசார் அடிபட்டார்கள், அவமானப் படுத்தப்பட்டார்கள். என்றாலும் அவர்கள் துணிவோடு பணியாற்றினார்கள். குமாரபாளையத்தில் சப்-இன்ஸ்பெக்டரின் துணியை அவிழ்த்துவிட்டு தெருத்தெருவாக இழுத்துச் சென்றார்கள். கொடைக்கானலில் என்ன நடந்தது? ஒரு கான்ஸ்டபிளை குளத்தில் முழுகடித்தார்கள். இங்கே ஒரு கான்ஸ்டபிள் தலையில் பெட்ரோலை வைத்துக் கொளுத்தினார்கள். போலீசாருக்கு நாம் பாராட்டைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். பொது மக்கள் சார்பாக நான் அதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்று தெரிவிக்க விரும்புகிறேன். மாணவர்கள் இனி இதையெல்லாம் விட்டுவிட்டு ஒழுங்காகப் போவார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. வருகிற 8-ம் தேதி கல்லூரிகள் திறக்கப்படும். சட்டக் கல்லூரி 10-ம் தேதி திறக்கப்படும். இன்னும் சில தாண்டிறவர்கள் இருக்கிறார்கள். அதற்கு இணங்காமல் இருக்கவேண்டும். சில மாணவர்கள் என்னை வந்து பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்களுக்கு என்னிடத்தில் நம்பிக்கை இருக்கிறது. எவ்வளவுதான் வெறுப்பை ஊட்டிய

போதிலும் என்னிடத்தில் நம்பிக்கை இருக்கிறது. மாணவர்கள் நன்றாகப் படிக்கவேண்டுமென்றுதான் 37 கோடி ரூபாய் கல்விக்காக இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கியிருக்கிறோம். ஆகையால் மாணவர்கள் இனிமேல் இந்தப் போக்கையெல்லாம் விட்டுவிட்டு அவர்கள் எந்தவிதமான பயமும் இல்லாமல் இருக்க வேண்டும். இந்தத் திணிப்பு எப்போதும் நேரவில்லை. அப்படி ஒரு பிரமை ஏற்பட்டுவிட்டது. எந்த விதமான பாதகமும் இல்லாமல் பாதுகாத்துக்கொள்ளலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது. யாரும் தவறான பாதைக்குச் செல்ல முற்பட்டால் அதற்கு இடம் கொடுக்காமல் படிப்பில் அக்கறை கொண்டு ஒழுக்கத்தோடு சீரிய மக்களாக ஆவதற்கு முயற்சி செய்வார்கள் என்று நம்புகிறேன். மாணவர்கள் என்ன செய்தார்கள், எப்படித் தூண்டிவிடப்பட்டார்கள், எத்தகைய சூழ்நிலை இருந்தது என்பது எல்லாம் எனக்கு நன்றாகத் தெரியும். அவர்களைப் பழி வாங்க வேண்டுமென்பது இல்லை. தண்டிக்க வேண்டுமென்பதும் இல்லை. ஆகவே எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், வைஸ் சான்ஸலர் அவர்கள் கூறியபடி மாணவர்களிடத்தில் மிகுந்த அனுதாபத்துடன் நான் நடந்துகொள்வேன் என்பதை அவர்களே தெரிந்து கொண்டிருக்கிறார்கள். மாணவர்களும் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். மாணவர்கள் இனிமேல் நல்லமுறையில் படித்து முன்னேற்றமடைய வேண்டுமென்பதுதான் என்னுடைய அவா. இன்று சமூக விரோதிகள் பல கொடிய காரியங்களைச் செய்திருக்கிறார்கள். ஏராளமான நஷ்டத்தை உண்டுபண்ணி இருக்கிறார்கள். அதற்குக் காரணம் பின்னால் இருக்கிற அரசியல் கட்சிகள் அராஜகத்தை நாட்டில் உண்டாக்கவேண்டுமென்ற எண்ணத்தோடு இருந்ததுதான். அதுதான் அவர்களுடைய லட்சியம். அது சொம்பக் கேவலம். சொம்பத் தவறானது. நாட்டுப் பற்று இல்லாதவர்கள்தான் அதை விரும்புவார்கள். அவர்கள் அராஜகம் உண்டுபண்ணும் வகையில் தூண்டிவிட்டார்கள். மற்றவர்கள் அதைப் பயன்படுத்திக் கொண்டார்கள். கலவரம் வந்தால் அதைப் பயன்படுத்திக் கொள்ள சிலர் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் சேர்ந்து இதில் ஈடுபட்டதால் தமிழ் நாட்டுச் சரித்திரத்தில் கெட்ட பெயரை இழுக்கை ஏற்படுத்தும் இத்தகைய சம்பவங்கள் நடந்துவிட்டன. ஆனால் நாம் பெற்ற அனுபவத்திலிருந்து இதையெல்லாம் சீக்கிரம் மறந்துவிடவேண்டும். எதிர்கால சந்ததிகள் இதுபோல இங்கு நடந்தது என்று நினைக்காமல் முடியாமல் தமிழ்நாட்டுப் பரம்பரையைப் பாதுகாக்கும் முறையில் நடந்துகொள்வார்கள் என்று நம்புகிறேன். இதற்குமேல் இந்த விவாதத்தில் காலத்தை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. மொழிப் பிரச்னைபற்றி விளக்கமாகப் பேச சந்தர்ப்பம் இருக்கிறது. அப்போது எடுத்துக்கொள்ளலாம். மாணவர்கள் தாங்கள் நடந்து கொண்ட விதத்தை அவர்களே சிந்தித்துப் பார்க்கவேண்டும். பெற்றோர்கள் தங்கள் கடமையைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆங்காங்கு பல ஸ்தாபனங்கள் அமைக்கப்படுகின்றன. எவ்வளவு தான் உயர்ந்த கல்லூரி, உயர்ந்த பள்ளிக்கூடங்கள் இருந்தாலும்,

[திரு. எம். பக்தவத்சலம்] [4th March 1965

எவ்வளவுதான் அங்கே கட்டுப்பாடுகள் இருந்தாலும் பெற்றோர்கள் கண்காணிக்காவிட்டால், பிள்ளைகள் தவறித்தான் போவார்கள். இவ்வளவு ஆகியும் பெற்றோர்கள் அதைக் கவனிக்கவில்லை என்று தான் கவலைப்படுகிறேன். இதில் ஈடுபட்டவர்கள் கல்லூரி மாணவர்கள் மட்டுமல்ல. உயர்நிலைப் பள்ளிக் குழந்தைகள் சேர்ந்து விட்டன. அவர்களுக்கும் வேகம் வந்துவிட்டது. அதனால் அவர்களும் ஈடுபட்டார்கள். பாளையங்கோட்டையில் நடைபெற்றது என்ன? உயர்நிலைப் பள்ளி மாணவர்கள்தான் செய்தார்கள். ஒரு சில ஊர் ஊராகப் போனார்கள். மாணவர்களுக்கெல்லாம் என்ன எண்ணம் ஏற்பட்டதென்றால், அங்கே நடந்ததே இங்கேயும் நம் ஊரிலும் ஏதாவது நடந்தவில்லை என்றால் பிற்போக்கு வாதி என்று கேவலமாக நினைப்பார்களே என்று நினைத்தார்கள். தெரியாத குழந்தைகள் என்ன செய்யும்? நேற்று எங்கள் ஊரில் இப்படிச் செய்தோம் என்றால் அதைக் கேட்டுவிட்டு நாமும் அப்படிச் செய்யாவிட்டால் அவமானமாகப் போகும் என்று அவர்களும் கொளுத்தினார்கள். குழந்தைகள் நெருப்போடு விளையாடும்போது பெற்றோர்களும், ஆசிரியர்களும் அதைக் கவனிக்கவேண்டும். ஆசிரியர்களுக்கும் பொறுப்பு இருக்கிறது. ஒரு சில தவறுகள் நடந்தது உண்டு. பொதுவாக ஆசிரியர்கள் எப்படிக் குழந்தைகள் விஷயத்தில் தாயைவிட அக்கறை கொண்டவர்கள். அவர்களுக்கும் பொறுப்பு உண்டு. எனவேதான் எச்சரிக்கை செய்கிறேன். அதுதான் முக்கியம். உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கிற பிள்ளைகள் இப்படிக் கெட்டுப்போகிறார்கள் என்றால் இதையெல்லாம் ஆசிரியர்களும் பெற்றோர்களும் கவனித்து மாணவர்கள் சீரான முறையில் நடக்க வழிகாட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(The Hon. Chairman sounded the gong and the Hon. th Chief Minister resumed his seat.)

MR. CHAIRMAN : It is now half past six of the clock. Under Rule 52 of the Council Rules, the debate shall automatically terminate at the end of two hours after the commencement of the debate.

So, the motion is talked out.

The House will now adjourn and meet again at 3 p.m. tomorrow.

The House then adjourned.

V. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

* 142. *Notification issued with G.O. Ms. No. 179, Rural Development and Local Administration, dated 23rd January 1965 regarding amendment to the Conduct of Election of Members of Village Panchayats Rules, 1964.*

* Laid on the table of the House on 1st March 1965.

THE MADRAS LEGISLATIVE COUNCIL

Friday, the 5th March 1965.

The House met in the Council Chamber, Fort St. George, at three of the clock, Mr. Chairman (THE HON. SRI M. A. MANICKAVELU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS

STARRED QUESTIONS.

District Educational Officers

* 105 *Q.*—SRI M. RAJAH IYER : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the rules, if any, for the direct recruitment of District Educational Officers from teachers in non-Government service; and

(*b*) the number so directly recruited and the number promoted from Government service, since the framing of such rules ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) According to the special rules for Madras Educational Services, as reissued in November 1955, 25 per cent of the substantive posts in the category of District Educational Officer (viz., category 3 of Class II of the Madras Educational Service) have to be filled or reserved to be filled by direct recruitment from among teachers in recognised non-Government Secondary Schools, who possess the qualifications prescribed.

(*b*) 5 and 23 respectively.

SRI M. RAJAH IYER : May I know, Sir, when this recruitment of five from the non-Government service actually took place?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I am sorry, Sir. I do not have that information with me here.

SRI G. KRISHNAMOORTHY : May I know, Sir, the percentage reserved for teachers from the non-Government schools?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : That is 25 per cent, Sir.

SRI M. RAJAH IYER : May I know, Sir, whether in view of the fact that nearly 23 from the Government service have been promoted and only five were recruited from non-Government service, this ratio is likely to be more favourably considered and further recruitment made only from non-Government service ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, this 25 per cent will be maintained.

Ball-point pens

* 106 Q.—SRI S. K. SAMBANDHAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have issued any instructions to the officers not to use ball-point pens in the official records; and

(*b*) if so, the reasons therefor?

THE HON SRI M. BHAKTAVATSALAM : (*a*) No.

(*b*) It has been decided that signature on bills and other documents with money value should be made in ink only. The above decision of the Government of India has been communicated to all the Heads of Departments, etc., for nformation and guidance.

The objection to accepting signatures on documents by ball-point pens is that they are apt to be smudged and fade away after some time. There is also a possibility that such signatures could be forged and altered more easily.

SRI S. K. SAMBANDHAN : Sir, do the Government have any report from any specialist that the ink used in such ball-point pens, is fading away more quickly than the ordinary ink, and, if so, may I know who is the expert ?

THE HON. SRI R. VENKATARAMAN : Myself.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not know who that expert is. But the Government of India told us that the ball-point pent should not be used, and we have accepted that recommendation.

THE HON. SRI R. VENKATARAMAN : May I add, Sir, that in the files I have signed with the ball-point pen, my signature has been eaten away by moths, and it also fades away quicker. The result that in some of the files I found my signatures had been eaten away. Therefore, I have decided not to use the ball-point pens.

Narikoravars

* 107 Q.—SRI K. S. ABDUL WAHAB : Will the Hon. the Minister for Home be pleased to state the measures, if any, taken for the settlement of Nomadic Tribes like Narikoravars ?

THE HON. SRI P. KAKKAN : A statement is placed on the Table of the House.

அவை முன் வை அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

SRI K. S. ABDUL WAHAB : May I know the origin of the tribes, Sir ?

கனம் திரு. பி. கக்கன்: ஆரிஜின் என்பது சரியாகத் தெரிய வில்லை. இப்போது ஷெடியூல் டிரைப்கள்-ஆதிவாசிகள் என்ற பிரிவில் அவர்களைச் சேர்க்க வேண்டுமென்று மத்திய அரசாங்கம் ஒப்புக்கொண்டு சேர்க்கச் சொல்லியிருக்கிறார்கள்.

SRI K. S. ABDUL WAHAB : How many sorts of tribes are there in the State and may I know whether their wanderings are limited to our State or do they wander throughout India ?

THE HON SRI P. KAKKAN : The nomadic tribes in the State are 12 in number.

திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி : அவர்களுக்கு வடஆர்க்காடு மாவட்டத்தில் குடியிருக்க வீடுகளும் விவசாயத்திற்கு நிலமும் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் அந்த வீடுகளில் குடியிருக்கிறார்களா? நிலத்தில் விவசாயம் செய்யாமலும் குடியிருக்காமலும் வெளியே சுற்றிக்கொண்டு வருகிறார்களா?

கனம் திரு. பி. கக்கன் : அங்கே குடிஇருந்து வருகிறார்கள் என்ற தகவல் வந்திருக்கிறது. 89 ஸ்காலர்ஷிப்புகள் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது என்றால் அவர்களுடைய குழந்தைகள் உபகார சம்பளம் வாங்கிப் படிக்கும் அளவில் இருக்கிறார்கள் என்றுதான் தெரிகிறது.

திரு. எஸ். கே. சம்பந்தன் : அவர்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகள் அவர்களால் சரியாகப் பிரயோஜனப்படுத்தப்பட வில்லை என்று தென்னற்காட்டில் சொல்லப்படுகிறது. அவை சரியாகப் பயன்படுத்தப்படுகிறதா என்று அரசாங்கம் கவனிக்குமா?

கனம் திரு. பி. கக்கன் : அவர்கள் கொம்ப நாள் விவசாயம் செய்யவில்லை. இப்போது நிலம் கொடுத்தபிறகுதான் விவசாயம் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். எல்லாம் போகப்போக சரியாகி விடும்.

SRI K. S. ABDUL WAHAB : What is their main source of income?

கனம் திரு. பி. கக்கன் : முன்பு ஊர்களில் ஊசி விற்றார்கள். அம்மி கல் கொத்தி ஜீவனம் செய்தார்கள். இப்போது விவசாயத்தில் ஈடுபடுகிறார்கள். இனிமேல் நல்ல வசதிக்கு வருவார்கள்.

திரு. ஏ. கே. தங்கவேல் முதலியார்: அவர்களுக்கு கட்டிக் கொடுத்த வீடு அவர்களுக்குப் பிடிக்கவில்லை. அதனால் இரவிலும் பகலிலும் அவர்கள் வீட்டிற்குள் இருப்பதில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மிஸ்டர் சேர்மன் : வீட்டில் இல்லையென்றால் காட்டில் இருப்பார்கள்.

[5th March 1965

திரு. ஏ. கே. தங்கவேல் முதலியார்: அவர்களுக்குக் கொடுத்த வீடு எங்களுக்குப் பிடிக்கவில்லை என்று சொல்கிறார்களே.

மிஸ்டர் சேர்மன்: மழை பெய்தால் வீட்டுக்கு வந்துவிடுவார்கள்.

திரு. ஏ. கே. தங்கவேல் முதலியார்: அரசாங்கத்திற்கு அது தெரியுமா? அவர்கள் மனப்பான்மையைப் புரிந்துகொள்வதுதான் முக்கியம்.

கனம் திரு. பி. சுக்கன்: கவர் நாடோடிகளின் கேள்வி புரியும்படியாக இல்லை.

SRI K. S. ABDUL WAHAB: What is the mother tongue of these nomadic tribes? Is it Tamil or some other language?

கனம் திரு. பி. சுக்கன்: ஒருவர் தமிழில் பேசுகிறார்கள். பலர் வேறு பாஷையும் பேசுகிறார்கள்.

Supply channel to the Rangasamudram Sakkilichi Kanmoi

*108 Q.—SRI N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the supply channel to the Rangasamudram Sakkilichi Kanmoi in Andipatti Panchayat Union limit, Madurai district, has been silted up; and

(b) if so, whether there is any proposal to desilt it?

THE HON. SRI P. KAKKAN: (a) Yes.

(b) This work has to be attended to by the Panchayat concerned. The Panchayat has been asked to take up the work immediately after improvements to the head sluice and scouring vents are carried out by the P.W.D. in the anicut from which the supply channel takes off, for which an estimate has been sanctioned by the Public Works Department.

(அ) ஆம்.

(இ) இப் பணியைச் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து மேற் கொள்ள வேண்டும். இக் கண்மாயில் வாய்க்கால் எந்த அணைக் கட்டிலிருந்து பிரிகிறதோ அதன் தலை மதகுக்கு அடுத்திருக்கின் செய்து, மதகுக் கண்களைச் சுத்தப்படுத்தும் வேலையைப் பொதுப் பணித் துறையினர் நிறைவேற்றியவுடன், பஞ்சாயத்து மேற்படி வேலையை மேற்கொள்ளும்படிக் கேட்கப்பட்டுள்ளது. பொதுப் பணித் துறை நிறைவேற்ற வேண்டிய வேலைக்கான மதிப்பீட்டுத் தொகைக்கு அனுமதி வழங்கப்பட்டுவிட்டது.

திரு. கே. ராமதாஸ்: தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியில் வந்த பெயர்களில் பல்கலைச்சித்தர் சக்கிலி கண்மாய் என்று இருக்கிறது. அது ஒரு பிரதேசத்தினர் பெயரை வைத்து படித்தவுடன் போல் இதுபோன்ற பெயர்கள் இருக்கின்றன. அவற்றை மாற்றி அமைக்க சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்தது?

5th March 1965]

கனம் திரு. பி. சுக்கன்: ஏற்கனவே இதுபோல ஜாதிப் பெயரில் சில இடங்கள், கண்மாய்கள் எல்லாம் இருக்கின்றன. அது நல்ல தல்ல என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். கிராம மக்கள் அதுபோன்ற பெயர்களை மாற்றியமைக்க விரும்பினால் அதைப் பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

Water for non-domestic purposes

*169 Q.—SRI A. K. THANGAVEL MUDALIAR: Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether it is a fact that municipalities are liable to pay 1/3 of the income deriver from the levy of charges for water supplied to industrial and other establishments, besides street and house connections;

(b) if so, the reasons therefor; and

(c) whether there is any proposal to relinquish this claim?

THE HON. SRI V. RAMAIAH: (a) Except a few old municipalities, which were drawing water from Government sources free of charge for a very long time, the other municipalities are liable to pay Rs. 1.50 per 1,000 cubic yards of water drawn for domestic purposes. If a local body which draws water from a Government source, either free or on payment of charge, sells the water for non-domestic purposes, it is liable to pay to the Government one-third of the total amount realised from such sales every year. No share of the revenue realised from supplies made to street taps, house connections, etc., need, however, be paid to Government.

(b) Because the municipalities sell water for non-demestic purposes at about Rs. 2 per 1,000 gallons which works out to Rs. 340 per 1,000 cubic yards as against Rs. 1.50 per 1,000 cubic yards which they pay to Government.

(c) No.

(அ) நீண்ட நாட்களாகக் கட்டணம் எதுவும் செலுத்தாமல் அரசாங்க நீர் நிலைகளிலிருந்து தண்ணீர் பெறும் சில பழைய நகராட்சிகளைத் தவிர மற்ற நகராட்சிகள் வீட்டு உபயோகத்திற் காகப் பயன்படுத்தும் பிரதி 1,000 கன கெஜம் நீருக்கு ரூ. 1-50 வீதம் அரசாங்கத்திற்குக் கட்டணம் செலுத்த வேண்டும். ஒரு தல அதிகார மன்றம் இலவசமாகவோ கட்டணம் செலுத்தியோ அரசாங்க நீர் நிலை ஒன்றிலிருந்து பெறும் தண்ணீரை வீட்டு உபயோகத்துக்கன்றி மற்ற காரியங்களுக்காக விற்பனை செய்தால், அவ்விற்பனை மூலம் அதற்கு ஒவ்வோர் ஆண்டும் கிடைக்கும் வருவாயில் மூன்றில் ஒரு பங்கினை அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டும். ஆயினும் தெருக்குழாய்கள், வீடுகள் இவற்றிற்கு வழங்கப்படும் தண்ணீர் வாயிலாகக் கிடைக்கும் வருவாயில் அரசாங்கத்துக்கு ஒரு பங்கு செலுத்த வேண்டிய அவசியம் இல்லை.

[5th March 1965

(இ) வீட்டு உபயோகத்திற்கு அல்லாத மற்றக் காரியங்களுக்காக நகராட்சிகள் தண்ணீரை 1,000 காலனுக்கு சுமார் 2 ரூபாய் விதம் விற்பனை செய்கின்றன. இதன்படி 1,000 கன கெஜம் தண்ணீர் ரூ 340 ஆகிறது. ஆனால் அவை அரசாங்கத்திற்குச் செலுத்தும் தொகை 1,000 கன கெஜத்திற்கு ரூ. 1-50 மட்டுமே. இவ்வாறு வருவாயில் மூன்றில் ஒரு பங்கினைச் செலுத்த வேண்டுமென்று அரசாங்கம் கேட்பதற்கு இதுவே காரணமாகும்.

(உ) இல்லை.

திரு. ஏ. கே. தங்கவேல் முதலியார் : இதனால் முனிசிபாலிடியின் வருமானம் பாதிக்கப்படுகிறது. நாங்கள் தண்ணீர் வருகிற ஆறுகளில் பம்பு வைத்துத் தண்ணீர் கொண்டு வருகிறோம். இதனால் சர்க்காருக்கு நஷ்டமில்லை. இருந்தாலும் சர்க்கார் எதை எடுத்தாலும் வரிபோடவேண்டுமென்ற பிரமையில் இப்படிப் போடுகிறார்கள். கடன் வாங்கி எல்லாம் செய்து பவானியின் கரையில் பம்பு வைத்து தண்ணீர் எடுத்தால் அதை எதற்காகப் பயன்படுத்துகிறோம்? நாங்கள் ஏதாவது விற்று லாபம் சம்பாதிக்கிறோமா? பொதுக் காரியத்திற்குச் செய்யும் வேலைகளுக்கு எல்லாம் இப்படி வரி போடுவது தர்மமா? தர்மத்திற்கு விரோதமாக வாங்குவது நன்றாக இருக்கிறதா? மூன்றாவது போவழிக்குக் கொடுத்தால் அவன் அந்தப் பணத்தை சாதி கும்பிட்டு விட்டுப் போய்விடுவான். முனிசிபாலிடி செய்தால் என்ன? அதுபோல தர்மத்திற்கு விலக்களிக்க வேண்டுமென்று கோரிக்கொள்கிறேன்.

கனம் திரு. வி. ராமய்யா : என்னுடைய முந்திய பதிலிலே கூறினேன். தர்மத்திற்குக் கொடுப்பதில் நாங்களில்லை. விட்டு உபயோகத்திற்கும் இல்லை. தொழில் காரணங்களுக்காகவும் மற்ற லாபம் தரக்கூடிய காரியங்களுக்காகவும் விற்பனை செய்யக் கூடியவற்றிற்கு வருகிற வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கு கேட்கிறோம்.

SRI S. K. SAMBANDHAN : Will the Hon. Minister tell us, Sir, the total amount realised by way of this levy on the municipalities and also the expense involved in the collection of that amount?

THE HON. SRI V. RAMAIAH : I do not have the figures with me, as far as the amount realised is concerned. If he puts a separate question, I can give the answer. I do not think there is any heavy expense involved in collecting this amount.

SRI S. K. SAMBANDHAN : Sir, the Government are well aware that the resources of the municipalities are very, very limited and very meagre nowadays. Irrespective of the fact whether the amount collected by the municipality, is for demestic or non-domestic purpose, will the Government be pleased to forgo this amount in favour of the municipality ?

THE HON. SRI V. RAMAIAH : The Government are very sympathetic towards the finances of the municipalities. Whenever required, the Government do give them liberal loans or grants

5th March 1965]

But here a question of principle is involved. When the municipality sells it for non-domestic purposes like industrial purposes, the Government feel that they can afford to pay one-third of the amount they collect.

SRI K. S. ABDUL WAHAB : May I know the municipalities where this is levied?

THE HON. SRI V. RAMAIAH : This is applicable to all municipalities.

SRI G. KRISHNAMOORTHY : Sir, does this apply to Madras City Corporation?

THE HON. SRI V. RAMAIAH : A separate question may be put, Sir.

SRI M. SUBBIAH CHETTIAR : Sir, is this applicable only to the water drawn from the rivers or from even wells by the municipalities?

THE HON. SRI V. RAMAIAH : I said, 'Government sources'.

திரு. ஏ. கே தங்கவேல் முதலியார் : கடன் வாங்கியதைக் கொடுப்பதற்கும் வட்டி கொடுப்பதற்கும் சரியாக இருக்கிறது. ஆகையால் அதைக் கழித்துக் கொடுப்பதுதான் பெரிய தர்மம். அதைக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

கனம் திரு. வி. ராமய்யா : நான் முன்பே அதற்குச் சொல்லி விட்டேன்.

மிஸ்டர் சேர்மன் : முன்பு சொன்ன பதிலிலேயே சொல்லி விட்டாராம்.

Questions are over.

[Note.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—CALLING ATTENTION TO SEIZURE OF FOODGRAINS AT CHECKPOSTS IN KANYAKUMARI DISTRICT

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : கன்னியாகுமரி மாவட்டத்தில் பல இடங்களில் உணவுப் பொருள் தடுப்பு சவுக்கைகள் ஏற்படுத்தி சிறிதளவு சாப்பாட்டிற்கு அரிசி, நெல் கொண்டு சென்றால் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ரெவினியூ இன்ஸ்பெக்டர்கள் பறிமுதல் செய்கிறார்கள். எடுத்துக் காட்டாக, நான் நெல் குற்று வதற்காக, ரைஸ் மில்லுக்கு அனுப்பின சுமார் 45 பக்கா அவித்த நெல்லை (boiled) ஒழுகினசேரி சவுக்கையில் பறிமுதல் செய்தார்கள். பின்னர் நான் நோட்டீஸ் அனுப்பியதும் திருப்பிக் கொண்டு தந்தனர். இதனைப் போல தூற்றுக் கணக்கான எழை களிடமிருந்து பறிமுதல் செய்கிறார்கள். இந்த விஷயத்தை கனம் உணவு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HON. SRI V. RAMAIAH : Mr. Chairman, the Government have decided to build a sizable buffer stock of rice out of the ensuing samba harvest in the State. The bulk of this quantity will be purchased from the Cauvery-Coleron delta area in the districts of Thanjavur, Tiruchirappalli and South Arcot

[Sri V. Ramaiah] [5th March 1965

They would be supplemented by limited procurement in other districts, the quantity to be procured in each district depending on the size of the harvest.

In this connection, the Government have considered that unless some restrictions are imposed on the free movement of paddy at least from selected areas in the State where all the procurement is undertaken, merchants will try to outbid Government and corner the stocks. Hence, for the success of this purchase programme, the Government have decided to regulate the movement of paddy and rice from place to place within the State under a system of permits. In exercise of the powers conferred by rule 125 of the Defence of India Rules, 1962, the Madras by rule 125 of the efence of India Rules, 1962, the Madras issued for this purpose and it has come into effect from 1—1—1965. As per this order, no person can transport one quintal or more of paddy or rice (including broken rice) from one district to another or from one notified area within the district to a place outside that notified area within the district except under a permit to be issued by an authorised officer.

There were complaints from almost all the Collectors that there is large-scale movement of paddy and rice. The Government have, therefore, amended the movement control order and tightened the movement restrictions further by reducing the quantitative limit for free movement of paddy and rice from one quintal to 10 litres, except in the case of Vilavancode taluk of Kanyakumari District. Since Vilavancode taluk is very near the border of the Kerala State and since there is every possibility for large scale smuggling, it has been decided that Vilavancode taluk of Kanyakumari District should be completely sealed from other taluks in Kanyakumari. Orders have been issued to the effect that no transport or movement of paddy or rice either into or from the Vilavancode taluk of Kanyakumari district will be allowed except under and in accordance with the conditions of a permit issued by the State Government or by an authorised officer.

If specified instances of hardship as alleged by the Member are brought to the notice of Government, suitable action will be taken wherever necessary.

III.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR 1965-66 e ml.

MR. CHAIRMAN : The hon. Member Sri A. Subramanyam will complete his unfinished speech.

* திரு. ஏ. சுப்பிரமணியம்: எனம் அவைத்தலைவர் அவர்களே, 1965--66-க்குரிய வரவுசெலவுத் திட்டத்தை நான் முழு மனதோடு வரவேற்கிறேன். நான் நேற்றையதினம் குறிப்பிட்டது போக தொடர்ச்சியாக சில விஷயங்களைக் கூற விரும்புகிறேன். நான் இந்த சட்டமன்றத்திலே 1937-ம் வருஷத்திலிருந்து இது வரையில்

5th March 1965] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

தொடர்ச்சியாக இருந்து வருகிறேன். கீழ்ச் சபையிலும் மேல் சபையிலும் சரி, தொடர்ச்சியாக இருந்து வருகிறேன். கீழ் சட்டசபைக்கு 1947-ம் வருடம் போட்டி இல்லாமலே பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறேன். சில அரசியல் அபிப்பிராய பேதங்களால் காங்கிரசிலிருந்து விலகியும்கூட நான் சில ஆண்டுகள் இருந்திருக்கிறேன். தொடர்ச்சியாக 4 முறை இந்த சட்டசபைக்குச் சுயேச்சையாக நின்று வெற்றி பெற்று வந்திருக்கிறேன். சென்ற ஆண்டில் தான் நான் காங்கிரஸ் உறுப்பினராக மறுபடியும் சேர்ந்து காங்கிரஸ் உறுப்பினராக நின்று வெற்றிபெற்று சேவை செய்யும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதையும் இச் சபையில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஒரு முக்கியமான விஷயம். அதாவது சட்டசபை உறுப்பினர் என்ற ஒரு உரிமைக்குரிய விஷயத்தில் அவர்கள் செய்ய வேண்டிய கடமையைச் சரிவரச் செய்யவேண்டும். சென்ற 24 வருடங்களாக ஒவ்வொரு வரு பட்ஜெட்டிலும் நான் என்னுடைய கடமையைச் செய்து வந்திருக்கிறேன். அதாவது குறிப்பாக, கதர், தீண்டாமை, மதுவிலக்கு பிற்பட்டவர்களுடைய முன்னேற்றம் காந்திஜியின் திருமந்திரங்களாகக் கருதும் இவை களில் முன்னேற்றம் அடைவதற்கு என்ன வழிகள் உண்டோ அதைப்பற்றிப் பேசியிருக்கிறேன். காங்கிரஸ் கட்சி இந்த கொள்கைகளிலிருந்து விலகி இருந்தால் நான் காங்கிரசிலிருந்து விலகுவேன் என்று நான் போன சட்டசபை கூட்டத்தில் கூறியிருக்கிறேன். இதை யாவரும் மனதில் கொள்ளவேண்டும். இந்த பட்ஜெட்டில் ஒரு குறிப்பான விஷயத்தைக் கூற விரும்புகிறேன். நான் தீவிர தேசிய வாதி. காங்கிரல்காரன். இந்த தேசம் சுதந்திரம் அடைவதற்கு பற்பல போராட்டங்கள் நடந்தன. அவைகள் அனைத்திலும் நான் தீவிரமாக ஈடுபட்டவன். ஈடுபட்டு பல முறை சிறைக்குச் சென்றிருக்கிறேன். தடியடி பட்டேன். சுட்டிமுனைக்கு ஆளானேன். துப்பாக்கி சூட்டுக்குக்கூட தவறி என்னுடைய உயிர் பிழைத்திருக்கிறது. பல முறை மாண்டு போனேன். 4, 5 முறை தூக்கியெறிந்துவிட்டார்கள். ஏன், அதிகம் கூறுவானேன் இந்த கோட்டைக்கு முன்பாக 1930-ம் வருஷத்தில் உப்பு சத்தியாக்ரக போராட்டம் நடக்கிறபோது திருமதி துர்க்காபாய் அம்மையின் தலைமையின்கீழ் ஊர்வலம் வருகிறபோது நான் தொண்டர் படை தலைவனாக இருந்தேன். அந்த அம்மையார் கையைப்பிடித்து கமிஷனர் கன்னிங்ஹாம் இழுத்துவிட்டவுடனே, எனக்கு ஆத்திரம் வந்தது. நம் நாட்டின் பெண்ணைக் கைப் பிடித்து இந்த வெள்ளையன் இழுக்கிறானே என்று முன் வந்தேன். அவ்வளவுதான். சார்ஜ் என்னும் கமிஷனர் வெள்ளைக்காரன் கூற, மற்ற வெள்ளைக்கார சார்ஜண்டுகள் அடி அடியென்று என்னை அடித்துப் போட்டார்கள். குதிரையை விட்டு மிதிக்கச் செய்தார்கள். மண்டையை உடைத்தார்கள். பைனட்டில் குத்தினார்கள். என் மேல் இருந்த துணிமணிகளையெல்லாம் கழற்றி என்னை தாயை அடிப்பதுபோல் அடித்து என் வாயிலிருந்து இரத்தம் வர இராத்திரி கம்பில் மாட்டிவிட்டும் போய்விட்டார்கள். இந்த மாதிரி பல சம்பவங்கள். இந்த தேசத்திற்காக படித்தாண்டாத தாரீமணிகளும், பால் மணம் மாறாத பாலகர்களும் விருத்தாபியர்களும்

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [5th March 1965

விடுதலைப்போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றார்கள். கஷ்டப் பட்டார்கள். உத்தியோகத்தைக் கைவிட்டார்கள். தகப்பன் இறந்தார். மகனும் இறந்தான், என்றால் கூட ஜாமீன் கொடுத்து வெளிவரவில்லை. அத்தகைய நிலையிலிருந்து கஷ்டப்பட்டார்கள். சிறையில் கொஞ்சமான துன்பமா? சென்னை சிறையில் ஒன என்னும் ஜெயில் சூப்பரெண்டெண்ட் ஒருவன் இருந்தான். அவன் செய்த அட்டகாசங்கள், கொஞ்சமல்ல, தொண்டர்களை சித்ரவதை செய்தான். ஒரு தினம் தங்கட்கிழமை பைலில் நிற்கும்போது

. . .

மிஸ்டர் சேர்மன் : பட்ஜெட்டைப்பற்றிப் பேசவேண்டும்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: வன்முறை செயல்கள் பல நடந்து விட்டன. அரசாங்கச் சொத்துக்களுக்கும் நஷ்டம். வரவு-செலவுத் திட்டத்திற்கு வருகிறேன். இதைச் சொல்லுவதற்கு உரிமை கொடுக்கவேண்டும். பட்ஜெட்டைப்பற்றி வருஷாவருஷம் பேசு கிறோம். சமீபத்தில் நடந்த நிகழ்ச்சிகள் மறுபடியும் இந்த தேசத் திலே நடக்கக்கூடாது என்பதற்காகத் தான் நான் பேசுகிறேன். தலைவர் அவர்கள் மன்னிக்கவேண்டும்.

மிஸ்டர் சேர்மன்: பேச்சு பட்ஜெட்டை ஒட்டி இருக்கவேண்டும்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: விஷயம் பட்ஜெட்டை ஒட்டியதுதான். சிறையில் பைலில் நிற்பார்கள் குறைகளைச் சொல்லுவதற்கு. அப்பொழுது ஜெயில் சூப்பரெண்டெண்ட் பைலில் நிற்பவர்களைப் பார்த்து "What do you want?" என்பான். "I want letter paper." என்றால், உதைப்பான். அடித்தபடியாக அடித்தவனைப் பார்த்து "What do you want?" என்பான், "I want Card" என்றால் உதைப்பான். முகத்திலே உமிழ்வான். வாய் வெந்து போயிருக்கிற காரணத்தால் பால் கேட்டால் அதற்கு வாய்மேல் அடிப்பான். சிறையில் இத்தகைய துன்பம் அடைந்து, கஷ்டப் பட்டு, இந்தப் போரில் ஈடுபட்டார்கள். சுதந்திரம் வந்தது. குடியரசு தினம் கொண்டாடப்பட்டது. வருடம் கொண்டாடப்பட்டுக்கொண்டு வருகிறது. அந்த தினத்தைத் துக்க தினமாகக் கொண்டாடவேண்டும் என்று ஒரு சில, அல்லது ஒரு கட்சிக்காரர்கள் கூறுவார்கள் என்றால், என்னைப் போன்றவர் கள் மனம் புண்படாதா? அதற்காக பாடுபட்டவர்கள் மனம் புண்படாதா? நாங்கள் செய்த சேவை என்ன? பிரிட்டிஷ்காரர்கள் சம்பளம் வாங்கிக்கொண்டு எங்களை அடித்தபோது நாங்கள் பட்ட கஷ்ட நஷ்டங்களின் அளவு என்னவு என்று தெரியுமா? சிறை, அடி, உதை, துப்பாக்கிச் சூடு, தூக்கு மேடை இத்தியாதிகள் இவ்வளவையும் பொருட்படுத்தாது சேவை செய்தோம். சுதந்திரம் கிடைத்தது. துயரமாக தினத்தைக் கொண்டாடு வதற்குப் பாக்கியம் கிடைத்தது. ஆனால் அந்த நிலைமையிலே எதோ வகுப்புவாதக்கட்சிகள் இந்தியைப் புகுத்துகிறார்கள் என்பதாக ஒரு கருத்தைக்கொண்டு அதற்காக துயரத் தினத்திலே எதோ தினம் கொண்டாட வேண்டும் என்று ஒரு யோசிக்கை விடுத்து துக்க தினம் கொண்டாடுவதால் என்ன பயன் புண்படாதா? தேச பக்தர்கள் மனம் புண்படாதா? எதற்காக இந்த தேசத்திற்குச் சேவை செய்தார்கள்? எதற்காக சட்டசபை இருக்கிறது?

இன்றைக்கு சர்க்காரை நாங்கள் திட்டுகிறோம். மற்றவர்களும் திட்டுகிறார்கள். எல்லோரும் திட்டிக்கொண்டு இருக்கிறோம். எங்களுக்கு ஒன்றும் செய்யவில்லையே, இவ்வளவு கஷ்டப்பட் டோமே என்று தியாகிகள் கேட்கிறார்கள். கஷ்டப்பட்டவர்களுக் கெல்லாம் ஒன்றும் செய்யவில்லையே என்று நாங்களும் சர்க்காரைத் திட்டிக் கொண்டிருக்கிறோம். மாணவர்களுக்கு சம்பளம் இல்லாமல் படிக்க வைக்கிறாயே, பள்ளிக்கூடங்கள் கட்டி என்று பலர் திட்டுகிறார்கள். என்.ஜி.ஓ. சம்பளம் போதாது என்று திட்டறாங்க. விவசாயிகளுக்கு உரம் செய்து கொடுக்கவில்லை என்று திட்டறாங்க. என் ஏரியாவில் தண்ணீர் வரவில்லை என்று விவசாயிகள் திட்டறாங்க. வாங்கக்கூடிய சாமான்களுக்கு விலை ஏறியிருக்கிறது ஒன்றும் கிடைக்கவில்லை பலரும் மக்கள் திட்டறாங்க. நாம் திட்டிக் கொண்டிருக்கிற வேகியில் இருக்கி றோம். எப்படி ஒழுங்கான முறையில் நடைபெறச் செய்வது என்று பார்க்கும்போது கஷ்டமாக இருக்கிறது. இந்த பட்ஜெட்டி லே நான் பல தடவை சொன்னது போல மழைகள் பொன்ற விவசாயிகளுக்கு இந்த இன்ஷூரன்ஸ் திட்டம் கொண்டு வராத தைப் பற்றி கவலை தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதனைச் செய்ய வேண்டும். அவர்கள் சாந்தி அடையக்கூடிய வகையிலே நல்ல காரியங்கள் செய்து வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு வதுடன் இந்த பட்ஜெட்டை நல்ல முறையில் வரி இல்லாமல் கொண்டு வந்ததற்காக என்னுடைய பாராட்டைத் தெரிவித்து என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம். ஜெய் ஹிந்த்.

திரு. கே. கே. கோதண்டராமன்: கனம் உதவித் தலைவர் அவர்களே, 1965-66 பட்ஜெட்டை முழு மனதுடன் வரவேற்கிறேன். புதிய வரி ஒன்றும் இல்லாமல் இருப்பதும் ஊழியர்களுக்குக் கிராக் கிப்படியை உயர்த்தி இருப்பதும் இந்த நெருக்கடியான நேரத்தில் நாட்டின் அமைதியையும் மக்களுடைய பாதுகாப்பையும் உறுதி

th March 1965] [திரு. கே. கே. கோதண்டராமன்]

செய்த போலீசுக்காரர்களுக்கு அதிகப்படி சம்பளம் கொடுத்திருப் பதையும் கருதியே நான் இதை வரவேற்கிறேன். நேற்று இந்தச் சபையில் பெரு மதிப்பிற்குரிய நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் இங்கு ஏற்பட்ட கொந்தளிப்பை அவருடைய உருக்கமான பேச்சில் அமைதிப்படுத்தினர். பின்னர் நமது மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்களும் இந்தி இந்த நாட்டின் ஆட்சி மொழியாக நாம் அதை விரும்புகிற வரையில் வராது என்றும் மாணவர்கள் பள்ளிகளுக்குத் திரும்பி வரலாம் என்றும் அன்புடன் பதிலளித்த பிற்பாடு மீண்டும் அந்தப் பழைய விஷயங்களில் புக நான் விரும்ப வில்லை. திருப்பூரில் நடந்த கோரமான நிகழ்ச்சிகளைப் பற்றி யெல்லாம் சொல்ல நான் எண்ணியிருந்தேன். அவைகளையெல்லாம் பற்றிக்கூட நான் இந்தச் சபையில் இப்போது சொல்ல விரும்ப வில்லை. எல்லாம் இனிது முடிந்தது. எனக்கு முன்னர் பேசிய ஒரு சில அங்கத்தினர்கள் வேண்டுகோள் விட்டது போல இந்த நாட்டிலுள்ள மாணவர்கள் நம்முடைய குழந்தைகள் பாதிக்கப் பட்டவர்களும் நம்முடையவர்கள். இதிலே கட்சிப் பாகுபாடு இல்லை. எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களுடைய குழந்தைகளும் இருக்கிறார்கள். எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களுடைய மாண வர்களும் இருக்கிறார்கள். ஆகவே இதிலே யார் யாரால் என்ன கஷ்டம் வந்தது என்பதைப்பற்றி ஆராய்ந்துகொண்டிருப்பதில் பலன் இல்லை. எல்லோரும் ஒன்று சேர்ந்து தமிழ் நாட்டுக்கு ஏற்பட்ட இந்தக் குறையைப் போக்குவதற்குக் கட்சி வித்தியாசம் இன்றி பாடுபடவேண்டும் என்பது தான் என்னுடைய கோரிக்கை.

அதன் மேல் இந்த பட்ஜெட்டில், தம் நாட்டிலே விவசாயிகளைப் பற்றி எனக்கு முன்னர் பேசிய அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட் டார்கள். விவசாயிகள் அதிகப்படியாக உற்பத்தி செய்யவேண்டு மானால் அவர்களுக்குப் பல நல்ல உபகாரங்களை சர்க்கார் செய்து கொண்டிருக்கிறது என்பதிலே தவறு ஒன்றும் இல்லை. ஆனாலும் உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், பருத்தி விதையின் விலை அதிகமாக ஏறிக்கொண்டு வருகிறது. இன்று மூட்டைக்கு 30—34 ரூபாய் வரைக்கும் போய்க் கொண்டிருக்கிறது. பால் சொரியும் பசுக்கள் என்று ஆண்டாள் பாசுரத்திலே தான் படித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது. நல்ல மாடுகளை வைத்து விவசாயம் செய்வது என்பது இன்று நடைமுறையில் நடவாத காரியமாக இருக்கிறது. இந்த பருத்தி விதைகள் எண்ணை எடுப்பதற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. பருத்தி விதை ஏற்றுமதியைக் கட்டுப்பாடு செய்து, அதன் விலையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். பருத்தி விதை விவசாயிகளுக்கு, முதுகெலும் பாக இருக்கிற மாடுகளுக்குத் தேவையாக இருக்கிறது. பருத்தி விதையில் நான் மாடுகளை நன்றாக வளர்க்க முடியும். மாடுகளுக்கு வேண்டிய பிண்ணாக்கின் விலையும் எகபோகமாக ஏறிக்கொண்டி ருக்கிறது. விவசாயிகள் சொல்லுகிறார்கள், "சர்க்கார் கொடுக்கும் பருத்தி விதையின் கண்ட்ரோல் விலையை விட இந்த நெல்லி மாட்டிற்கு வைத்துவிட்டால் சௌகரியமாக இருக்கும். எனெனில் பருத்தி விதையை அந்த விலையில் வாங்குவதை விட நெல் விலை எளிதாக இருக்கிறது" என்று. இந்த நிலைமை நீடிக்குமானால்

[திரு. கே. கே. கோதண்டராமன்] [5th March 1965

பருத்தி விதைக்குப் பதிலாக நெல்லை மாட்டிற்கு வைக்க வேண்டி வந்துவிடும். இது இப்போது உள்ள உணவுப் பொருள்கள் இருக்கிற நெருக்கடி நிலைக்கு இன்னும் ஆபத்தானது என்பதில் சந்தேகம் இல்லை. இதை உடனடியாகக் கவனிக்கும்படி அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேன். இது உடனடியாக கவனிக்கப்பட வேண்டிய விஷயம். இதுவரையில் நாட்டில் ஒரு மூட்டை நெல் விலைக்குச் சரியாக பருத்தி விதை விலை இருந்து வந்தது. ஆனால் இப்போது சர்க்கார் கொடுக்கின்ற விலையைவிட பருத்தி விதையின் விலை அதிகமாக ஏறிவிட்டது. இதை உடனடியாக கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதைப்பற்றிச் சில வார்த்தைகள் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஃபுல் ஃபிளெண்ஸ் ஸ்கீம் என்று வந்திருக்கிறது. இதற்கு முன் ஐ.எம்.எஸ். கடன்கள் பஞ்சாயத்து யூனியன் மூலம் கொடுக்கப்பட்டு வந்தன. இந்த ஃபுல் ஃபைளெண்ஸ் ஸ்கீம் வந்தால் விவசாயிகளுக்குப் போதுமான கடன்கள் கிடைக்கும் என்று இருக்கிறது. இந்த ஃபுல் ஃபைளெண்ஸ் ஸ்கீமால் இந்த ஐ.எம்.எஸ்ஸில் லோன் கிடைத்ததை விட அதிகமாக இந்த முறையால் விவசாயிகளுக்கு உதவி ஒன்றும் கிடைப்பதில்லை. ஆகவே பழையபடி ஐ.எம்.எஸ். லோன்களை பஞ்சாயத்து யூனியன் மூலமாகக் கொடுக்கவேண்டும் என்பது எனது அனுபவ பூர்வமான எண்ணம். விவசாயிகளுக்குக் கொடுக்கவேண்டிய சாதாரணக் கடன்களை கூட்டுறவு சொசைடிகள் மூலம் கொடுக்க வேண்டும். கூட்டுறவு சொசைடிகள் மூலம் கொடுக்கப்படுகிற கடன்கள் விவசாயிகள் வேறு வகையில் அநியாய வட்டிக்கு ஊரில் வாங்காமல் 5 சதவீதம், 10 சதவீதம் மாதத்திற்கு இப்படி அநியாய வட்டியில் வாங்குகிற ஒரு விவசாயி இப்படி அநியாய வட்டி வாங்கி மூழ்கடித்துவிடாமல் காப்பாற்றுவதற்கு கூட்டுறவு சொசைடிகள் மூலம் கடன்களைக் கொடுக்கவேண்டும். விவசாயிகளுக்கு விவசாய அபிவிருத்திக்கு வேண்டிய கடன்கள் கொடுக்கப்படுகிறது என்று சொல்லுகிறார்கள். எப்படி கொடுக்கப்படுகிறது? கடன்களிலே பாதி மருந்துகளாகவும் பாலிடால், மற்றும் மருந்துகள், விதை நாணயங்கள் இப்படி பாதியும் பாதி சொக்கமாகவும் கொடுக்கப்படுகிறது. இந்த நிலைமையிலே விவசாயிகளுக்குத் தங்களுக்குத் தேவைக்கு அதிகமான அளவு பாலிடால் சப்ளை செய்யப்படுகின்றன. மேலும் மருந்துகள் பயிருக்கு நோய் வந்தால் தான் உபயோகப்படுத்தப்பட வேண்டும். நோய் வருவதற்கு முன்பே மருந்துகள் லோன்களில் கொடுக்கப்படுகின்றன. அப்படி கடன்கள் கொடுக்கப்பட்டாலும் குறுகிய காலத்திலே திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனை கொடுக்கப்பட்டிருக்கிறது. கோவாபரேடிவ் சொசைடிகள் விவசாயிகளுக்கு மாடு வாங்குவதற்கோ, நிலம் கலியாணம் செய்வதற்கோ மற்ற வகையிலே அநியாய வட்டிக்கு வாங்காமல், வாங்கப் போகாமல் பாதுகாக்க கடன்கள் கொடுக்க சொசைடிகள் முன்வரவேண்டும். கடன்களை சொசைடிகள் கொடுக்கவேண்டும். விவசாய அபிவிருத்தி செய்கிற காரியத்தில் நேரடியாக

5th March 1965] [திரு. கே. கே. கோதண்டராமன்]

அரசாங்கம் விவசாயிகளுக்கு உதவி செய்யவேண்டும். இந்தக் காரியங்கள் எல்லாம் பஞ்சாயத்து யூனியன் மூலம் நடைபெற வேண்டும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். எனக்கு முன்னால் பேசிய மதிப்பிற்குரிய அங்கத்தினர் குறிப்பிட்டதுபோல நாம் பஞ்சாயத்து ராஜ்யம் ஏற்படுத்தி விட்டோம் பஞ்சாயத்தை நம்பியிருக்கிறோம் என்று சொல்லுகிறோம் என்றால் இந்த விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகிற கடன்கள், மருந்துகள், விதைகள் முதலியவைகளை சொசைடிகள் செய்வதையெல்லாம் பஞ்சாயத்து யூனியன்கள் செய்து விடலாம். இன்னொரு யோசனை கூட அரசாங்கத்திற்குத் தெரிவிக்க நான் விரும்புகிறேன். பஞ்சாயத்து யூனியன்களில் வசதி உள்ள பஞ்சாயத்து யூனியன்கள் நிறைய இருக்கின்றன. இந்த பஞ்சாயத்து யூனியன்கள் லட்சக்கணக்கில் தங்கள் பணத்தை ஸ்டேட் பாங்கில் போட்டு வைத்திருக்கிறார்கள். வசதியுள்ள பஞ்சாயத்து யூனியன்கள் தங்கள் சொந்தப் பணத்திலிருந்து விவசாயிகளுக்குக் கடன்கள் கொடுக்கச் செய்வதில் தப்பு ஒன்றும் இல்லை. 1½ சத வீதம் வட்டிகூட இல்லாமல் ஸ்டேட் பாங்கில் பஞ்சாயத்து யூனியன் பணம் இருப்பதை மக்களுக்கு எடுத்து உதவி செய்தால் தூங்கிக் கொண்டிருக்கிற பணத்தை சரியாக உபயோகப்படுத்தியதாய் இருக்கும். அதற்கு பஞ்சாயத்து யூனியனில் அப்படி ஒரு சட்டத்தை அமைக்கலாம். மோட்டார் லோன்கள், என்ஜின் லோன்கள் கொடுக்கப்படுகின்றன. இது வரவேற்கத் தகுந்த விஷயம். இதை பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் செய்து கொண்டு வருகிறார். இந்தப் புதிய பொறுப்பை பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் வசம் விட்டால் மிகுந்த உதவியாக இருக்கும். ஒவ்வொரு ஊரிலேயும் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் இருக்கிறார்.

அந்த அந்த ஊரிலே உள்ளவர்கள், விவசாயிகள் சீக்கிரம் அந்த கடனை பெறுவதற்கும் வாய்ப்பாக இருக்கும். இதை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்றும் நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். 5-50 p.m

மத்திய அரசாங்கத்திலே இப்போது நமது மதிப்பிற்குரிய சுகாதார அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் முன்னிலையில் ஒரு விஷயத்தை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இப்போது பிரைமரி ஹெல்த் சென்டர்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பது எல்லோருக்கும் தெரியும். இப்போது அவைகள் அநாதை குழந்தைகளாக ஆகி வருகின்றன. இதற்கு யார் பொறுப்பு என்பது தெரியவில்லை. என்னுடைய தூக்கநாயக்கன் பாளையத்திலே உள்ள பஞ்சாயத்து யூனியனில் இரண்டு பிரைமரி சென்டர்கள் இருக்கின்றன. அந்த கட்டடங்கள் படுமோசமாக இருக்கின்றன. ரிப்பேர் செய்ய வேண்டுமென்றால், ஆஸ்பத்திரி நிர்வாகம், அது எங்களுக்கு சம்பந்தம் இல்லை என்று சொல்கிறது. கட்டடம் கட்டிக் கொடுத்தது பி. டபிள்யு. டி. ஆனால் இப்போது அது எந்த வகையில் ரிப்பேர்களை செய்வது என்பது தெரியாமல் இருக்கிறது. அந்த

[திரு. கே. கே. கோதண்டராமன்] [5th March 1965

விஷயமாக நானும் எழுதி இருக்கிறேன். பேப்பர்கள் போய் வந்து கொண்டு இருக்கின்றன. யார் பொறுப்பு என்பது தெரியவில்லை. பஞ்சாயத்து யூனியன்கள் வசம் சேர்த்து விட்டோமானால் அதனுடைய நிர்வாகம் சரியாக இருக்கும். கிணறு வெட்டக் கூட யாருடைய அனுமதி வாங்குவது என்று தெரியாமல் கிணறு கூட வெட்டாமல் அந்த ஹெல்த் சென்டர்கள் விடப்பட்டு இருக்கின்றன. என்னைக் கேட்டால் பஞ்சாயத்து யூனியன்கள் வசமே விட்டு விட்டால் நல்லது. இப்போது குழு ஏற்படுத்தி இருக்கிறார்கள். பஞ்சாயத்து கமிஷனர், சேர்மன், மாநகர் நல அதிகாரி இவர்களைக் கொண்டு ஏற்படுத்தி இருக்கிறார்கள். அந்த குழுவே அந்த நிர்வாகத்தையெல்லாம் கவனித்து வரலாம்.

இன்னொன்று சர்க்கார் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். கோவை ஜில்லாவிலே ரயில்வே செஸ் பண்டு என்று 18, 19 லட்ச ரூபாய் இருக்கிறது. அந்த பணத்தை என்ன செய்வது என்று சர்க்கார் முடிவு செய்யாமல் இருக்கிறது. சட்டப்படி அதற்கு சட்டபூர்வமான வாரிசுகள் பஞ்சாயத்து யூனியன்கள் என்று இருந்தால், அந்த பணம் ஜில்லா போர்டுக்குச் சொந்தமான பணம். கோவை மாவட்டத்திலே உள்ள 41 பஞ்சாயத்து யூனியனுக்கும் சேர்த்து வரவேண்டும். ஆனால் அந்த தொகை இன்னும் பகிர்ந்து கொடுக்கப்படவில்லை. அதையும் அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த பணத்தை வைத்து கோவையிலே ஒரு வைத்தியக் கல்லூரி ஆரம்பிக்கலாம் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி ஆரம்பிக்க முடியுமானால் நிறைய பண வசதி உள்ள யூனியன்களிடமிருந்து பணம் கிடைக்கும். அவர்கள் நன்கொடை கொடுப்பார்கள். அப்படி வைத்தியக் கல்லூரி ஆரம்பிக்க முடியாவிட்டால், அந்தப் பணத்தை 41 பஞ்சாயத்து யூனியன்களுக்கும் கொடுத்து, அந்த பணம் கல்விக்காக கட்டடம் கட்டுவதற்காக ஒதுக்கிவிடலாம் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஆசிரியர்கள் குடியிருப்புக்கு இப்போது பஞ்சாயத்து யூனியன்கள் மிக சிறப்பாக ஏற்பாடுகள் செய்து வருகின்றன. அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் ஒரு திட்டத்தை இப்போது பல பஞ்சாயத்து யூனியன்கள் ஏற்படுத்தி விட்டன. ஆனால் கனம் முதலமைச்சர் அவர்கள் ஒரு முறை கோவை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்து கொண்டு இருந்தபோது ஆசிரியர்கள் மீது மிக அன்பு கொண்டு எல்லா ஆசிரியர்களுக்கும் வீடு வசதி செய்து தர வேண்டுமென்று சொன்னார்கள்.

பஞ்சாயத்து யூனியன்களில் உள்ள எங்கள் சொந்த பணத்தைப் போட்டு நாங்கள் வீடுகள் கட்டிக் கொடுக்கிறோம் என்று சொன்னோம். நீங்கள் கட்டக் கூடாது என்று அரசாங்கம் சொல்லி விட்டது என்று அவரிடம் சொன்னேன். அதைப் பிறகு ஞாபகப் படுத்துங்கள் என்று சொன்னார்கள். இப்போது அதை ஞாபகப் படுத்துகிறேன். ஆசிரியர்களுக்கு வீடுகட்டிக் கொடுக்க வசதி இருக்குமானால் பஞ்சாயத்து யூனியன்கள் அதை நிறைவேற்ற

5th March 1965] [திரு. கே. கே. கோதண்டராமன்]

தடை இல்லை. இது அரசாங்கத்தில் பொது கொள்கை என்று இருந்தால் பல ஆசிரியர்களுக்கு வீட்டு வசதி ஏற்படும். பல கிராமங்களிலே ஆரம்ப ஆசிரியர்கள் நிலை சரியாக இருந்தால் எல்லாம் சரியாக முடியும். அவர்கள் வறுமையில் இருந்தால், மிக கஷ்டமான நிலையில் இருந்தால், தங்கள் தொழிலை அவர்கள் எப்படி நன்றாக செய்வார்கள்? இப்போது கிராமங்களில் வீடுகள் கட்டிக் கொடுப்பது மிகவும் சிரமமாக இருக்கிறது. திண்டாமை இன்னும் விட்டபாடில்லை. ஒரு ஹரிஜன ஆசிரியர் 'நல்ல வீடாக கிடைக்காமல் கஷ்டப்படுகிறேன்' என்றார். சுமார் 10 மைல், 8 மைல் தூரம் அவர் வீடு இருக்கிறது. அங்கிருந்து வர வேண்டி இருக்கிறது. இந்த மாதிரி சிக்கல்கள் எல்லாம் வீடுகள் நிறைய கட்டப்பட்டு விடுமானால் அவர்களுடைய குறைகளும் நீங்கி விடும். அதையும் அரசாங்கம் கவனிக்க வேண்டும்.

3-வது 5 ஆண்டு திட்டத்திலே மிக சிறப்பாக பல காரியங்கள் நடந்திருக்கின்றன. அதற்காக அரசாங்கத்தை நான் மிகவும் பாராட்டுகிறேன். குற்றம் நாடி, குணம் நாடி, அவற்றுள் மிகை நாடி, உண்மைகாண வேண்டுமென்றால், குணமே அதிகமாக இருக்கிறது. குற்றம் இல்லை என்று சொல்லவில்லை. நம்முடைய அனுபவம், மக்களுடைய ஒத்துழைப்பு, இந்த நாடு சிறந்த நாடாக ஆக வேண்டுமென்ற நல்ல எண்ணம் ஆகிய இந்த சிறப்புகளை வைத்து அரசாங்கம் மிக நன்றாக பணி புரிந்து வருகின்றது. இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களை விட நம் மாநிலம் தான் அதிக பணம் செலவழித்து, நல்ல திட்டங்களை நிறைவேற்றி வருகிறது என்பதை எண்ணிப் பார்க்கும் போது நாம் அனைவரும் பெருமை கொள்ளாமல் இருக்க முடியவில்லை. தொழில் துறையிலும், விவசாயத் துறையிலும் நாம் மிக வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறோம். செய்தது மலை அளவு இருந்தாலும் இன்னும் செய்ய வேண்டியது பெரிய பெரிய மலை அளவுகள் இருப்பதாலும், நமது மதிப்பிற்குரிய இந்த அரசாங்கம் அவைகளை மேலும் விடாமல், திறம்பட நடத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்படிப்பட்ட அரசாங்கத்திற்கு பேராற்றலைத் தரும் முதலமைச்சருக்கும், அவருடன் ஒத்துழைக்கும் மற்ற அமைச்சர்களுக்கும் என்னுடைய பாராட்டைத் தெரிவித்து அவர்கள் மேலும் நல்ல நல்ல பணி ஆற்ற வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்துக் கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

DEPUEY CHAIRMAN: The House will now adjourn and meet again at 3 p.m. to-morrow.

The House then adjourned.

IV. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

* 143. *Notification issued with G.O. Ms. No.* 1948, *Public (Services-A), dated 2nd December* 1964, *regarding amendment to the Madras Public Service Commission Regulations*, 1954.

* 144. *Notification issued with G.O. Ms. No.* 3042, *Revenue, dated 24th December* 1964, *regarding certain provisions of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1948 *come into force in Sembaiodai, Perichaliodai inam estates in Ramanathapuram district.*

APPENDIX.

(*Vide* answer to starred question No. 107 on page 2)

No specific scheme has been formulated for the Welfare of nomadic tribes as their numbers are insignificant. However measures have been taken in the following districts for their amelioration under the following heads :

Name of district.	Number of houses constructed.	Extent of lands assigned.	Number of scholarships granted.
(1)	(2)	(3)	(4)
		Acs.	
1. North Arcot	474 (From 1954–55 to 1962–63).	2,365·39	81 Scholarships
2. South Arcot	30	30·00	..
3. Thanjavur	30	..	..
4. Salem	25	..	..

The above particulars in respect of other districts are Nil. In addition three land farming colonies have been organised in the following villages of Tiruchirappalli district for settling the Narikoravars and other nomadic tribes.

1. Karai village in Perambalur taluk.
2. Manickamanipuram village in Perambalur Taluk.
3. Poolangudi village in Tiruchirappalli taluk.

The Government of India have since agreed to the inclusion of Narikoravars in the list of Scheduled Tribes and they will become eligible for all schemes applicable to Scheduled Tribes.

* Laid on the Table of the House on 1st March 1965.

THE MADRAS LEGISLATIVE COUNCIL

Saturday, the 6th March 1965.

The House met in the Council Chamber, Fort St. George, at three of the clock, Mr. Chairman (THE HON. Sri M. A. MANICKAVELU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Mid-day Meals Scheme

* 110 Q.—SRI G. KRISHNAMOORTHY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of teachers of Elementary Schools in Ramanathapuram District found fault with, in the maintenance of accounts for the Mid-day Meals Scheme during 1st January to 1st December, 1964;

(*b*) the details of flaws noted in such maintenance;

(*c*) the nature of punishment given in such cases;

(*d*) whether appeals have been received by the Government from the concerned teachers; and

(*e*) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Two.

(*b*) Concealment of one tin of excess stock of vegetable oil behind the almirah in the first case and failure to prepare the mid-day meals monthly return properly in the second.

(*c*) The increment of the teachers was stopped for a period of one year in both cases.

(*d*) No.

(*e*) Does not arise.

SRI G. KRISHNAMOORTHY : Who is the officer, Sir, that is empowered to award these punishments, and are there any definite rules as to the nature of punishment that has to be awarded?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There are rules prescribing the authority who can award these punishments in respect of disciplinary matters.

SRI G. KRISHNAMOORTHY : Is it a fact that public opinion regarding the well-established character of the teacher and the unblemished record of the teacher in previous years is not taken into consideration in these cases?

[6th March 1965

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, when there is an enquiry, they take into account all that is presented to them, and then only decide about the punishment or the guilt of the teacher. If the teacher is aggrieved against the punishment awarded, he can appeal against the order of punishment.

SRI K. S. ABDUL WAHAB : May I know, Sir, whether there is any proposal before the Government to increase the rate given for the mid-day meals, in view of the increased cost of living?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, there is no such proposal before the Government. But this question relates to distribution of CARE articles.

SRI G. KRISHNAMOORTHY : Sir, do the Government realise that the burden thrown upon the teachers brings all these risks upon them and, if so, will they revise their policy by entrusting this work to non-official Committees?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, if two teachers in the whole State committed some wrong and they were awarded punishment, that does not mean that the teachers in the whole State cannot attend to this work satisfactorily.

SRI G. KRISHNAMOORTHY : Cannot the Government think of leaving them with a warning, this being the first case and of a trivial nature?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have already stated that they could have appealed, but they did not.

SRI S. K. SAMBANDHAN : Will the Hon. the Chief Minister tell us whether any such reports have come from the other districts of the State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have no such information, Sir.

Grade II Hindi Pandits

* 111 Q.—SRI M. RAJAH IYER AND SRI G. KRISHNAMOORTHY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether Grade II Hindi Pandits doing twelve periods of work in the Higher Standard of High Schools are eligible for a Special pay of Rs. 10 per mensem; and

(*b*) if so, whether the Government have instructed all Special District Educational Officers to implement them in Board High Schools?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) Necessary instructions in this regard had already been issued to the Collectors who were in charge of District Board Schools, prior to 27—4—1963.

6th March 1965]

SRI M. RAJAH IYER : Sir, are the Government aware that in a few District Board High Schools they have not been paid the special pay nor have their appeals been entertained as the relevant rules are not there with the Special District Educational Officers, and, if so, will the Government recircularise their instructions?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, Sir, the Director of Public Instruction has been asked to give suitable instructions to local bodies and the management schools in the matter.

District Board High Schools

* 112 Q.—SRI M. SANKARALINGAM PILLAI : Will the Hon. the Chief Minister be pleased to state with reference to the answer given to Legislative Council question No. 123, on 30th July 1962, the stage at which the proposal to take over the former District Board High Schools in the State now stands ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இவ்விஷயம் இன்னும் அரசாங்கத்தின் ஆலோசனையில் இருந்து வருகிறது.

SRI G. KRISHNAMOORTHY : Sir, what is the difficulty in the Government taking over these schools as Government schools now that the Government bear the entire deficit of the District Board Schools?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : This has been under the examinatin of the Government, Sir.

Agricultural pump sets

* 113 Q.—SRI S. K. SAMBANDHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) district-wise, the number of applications pending for service connection to agricultural pumpsets as on 1st May 1963; and

(*b*) district-wise, the date of first application pending for service connection to agricultural pumpsets?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) A statement is placed on the table of the House.

SRI S. K. SAMBANDHAN : Sir, from the statement we find that even applications preferred in 1955, 1956, 1957 and 1958, and so on, are still pending with the Electricity Department. Will the Hon. Minister tell us whether all these applications relate to non-remunerative schemes or have been shelved for some other resons?

THE HON. SRI R. VENKATARAMAN : There are several reasons. Now the main reason is the non-remunerative nature of the scheme; in the North Arcot district, it is due to the Palar Basin Rules. In each district there are some peculiar reasons. But mainly it is non-remunerative nature of the schemes. What

* Printed as Appendix I on page 34g.

happens is this. Peoplt merely file an application. They do not even buy the pump sets. I asked the department whether we could not cancel all these applications and ask them to renew them as and when they were ready. If that is done, it will cause a lot of inconvenience to the general public. If for a remunerative scheme a dozen pumpsets are required, and applications for seven or eight have been received, we wait till the other four applications are received, so that it may be made a remunerative scheme and implemented. But if my suggestion or the suggestion of the hon. Member were accepted, we would straightway reject all the pending applications and ask the applicants to file their applications again. But this will only cause inconvenience to the public. That is why we are carrying over all the applications, even though they might have been filed 10 years earlier, in the hope that we will be able to increase the number of sets and make them remunerative.

SRI S. K. SAMBANDHAN : Is it a fact that priorities are not adhered to in giving service connections and there is missuse of power in giving such connections? Have the Government received any such complaints, and do the Government propose to instruct the Department to adhere strictly to priority in the future?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, there are very strict instructions that the connections should be given, if the feasibility and other things are established, in the order of priority. We have received one or two complaints, and we have prosecuted the offenders. I may tell the hon. Member that in the last three or four years some people, who have not observed the rules or were guilty of receiving any gratification, have been punished and some of them even sentenced by the Court.

SRI V. K. RAMASWAMY MUDALIAR : Sir, even in cases where it is found remunerative, in certain villages, if the ryot applies for one more pumpset, the application has to go through all the formalities. The Assistant Engineer, the Divisional Engineer, the Superintending Engineer, and the Chief Engineer, all of them, have to approve the application. The ryot has got to go to many people with the result that a lot of inconvenience is caused to him. In such cases will the Government consider the disirability of entrusting the work to the level of the Assistant Engineer himself?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, we cannot increase the number of pumpsets beyond the capacity of the transformer, and it has to be decided by a technically qualified person, preferably on a level higher than that of the Assistant Engineer. Very often people do not understand the technical difficulty, and say that we have given pumpsets to 16 people, and I want one more and they are not giving". But that one more may be beyond the capacity of the transformer in that area. It is better in technical matters relating to electricity that the proper authority gives the permission. However, I shall bear in mind the suggestion of the hon. Member that it should be expedited.

திரு. என். ஆர். தியாகராஜன்: மதுரை ஜில்லாவில் நீண்ட காலமாக மின்சார இலாகா சரியாக செயல்படவில்லை என்று குறைகூறுவது ஏற்றுக்கொள்ளும் வகையில் இருக்கிறது. பத்து ஆண்டுகளாக கவனிக்காத மனுக்களும் இருக்கின்றன. அதில் என்ன குறைகள் இருக்கின்றன, எதனால் கவனிக்காமல் இருக்கிறார்கள் என்பதை மனுதாரர்களுக்குத் தெரிவிக்கலாம். மொத்தத்திலுள்ள 25 ஆயிரம் பேருக்கும் கொடுக்க ஏற்பாடு செய்தால், உணவுப்பிரச்னை தீரும் என்பதால் அதை அரசாங்கம் கவனிக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: மதுரை ஜில்லாவைப் பொறுத்தவரையில் தாமதங்களுக்குக் காரணங்கள் கீழ்க் கண்டவை :—

1. Parties applied but did not take action to purchase the pumpsets;

2. in the scheme sanctioned, a number of parties in the majority of cases did not come forward, and therefore, there was delay in taking up the work,

3. several applicants did not even have wells and they did not take action to dig the wells and purchase pumpsets,

4. defective ownership certificates; a[illegible]

5. schemes evolved for expanding a[illegible] becoming unremunerative and places requiring long extensi[illegible]

திரு. என். ஆர். தியாகராஜன்: இந்தக் குறைகள் மனுதாரர்களுக்குத் தெரிவிக்கப்பட்டனவா? குறைகளைச் சுட்டிக்காட்டினால் அதைத் தீர்த்துக் கொள்ள வழி ஏற்படுமில்லவா? அலுவலியாளர் ஆபீசர்களிடத்தில் அலைந்துக்கொண்டிருக்கவேண்டிய அவசியம் ஏற்படாதல்லவா? இதை அரசாங்கம் கவனிக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் அங்கத்தினரின் அபிப்ராயப்படி கேஸ்கள் ரிஜக்ட் செய்யவேண்டுமென்றால் அது சர்க்காருக்கு சுலபம். சர்க்கார் அப்படி ரிஜக்ட் செய்யக்கூடாது. ரெமியூனரேட்டிவ் செய்தோ, வேறு நிவர்த்திகளைச் செய்தோ மின்சாரம் கொடுக்கச் செய்யவேண்டுமென்ற காரணத்தால்தான், அவற்றைப் "பெண்டிங்" ல் வைத்துக்கொண்டு பரிசீலனை நடத்திக் கொண்டிருக்கிறோம். என்ன காரணத்திற்காகக் கொடுக்கவில்லை என்பது அந்தந்த மனுதாரர்கள் வரும்போது அங்கிருக்கிற ஆபீசர்கள் அவர்களுக்குச் சொல்வார்கள்.

SRI S. K. SAMBANDHAN : Sir, will the Hon. Minister tell us the figures given are that 25,000 applications are pending as on 1st May 1963 for the last many years—the probable number of applications that might have been found defective by way of faulty declarations, people not having pumpsets and so on out of these 25,000 applications pending?

[6th March 1965

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, these 25,000 include such cases also. Even this has been a costly exercise—getting all the information from the various electricity systems in all parts of the State, looking into the records, and tracing the old records for the past ten years. If further execise of this kind is to be embarked upon, I am afraid, it will entail enormous loss of time, money and energy.

திரு. எஸ். ஜெயராம செட்டியார்: இந்த மின்சார கனெக்ஷன் கொடுக்கும் விஷயத்தில் ஒரு குறிப்பிட்ட கஷ்டத்தை சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். ஒரு பட்டாதார் தன்னுடைய இணற்றில் மின்சார பம்பு போடவேண்டுமென்று மனு செய்திருக்கிறார். அதற்காக கியாரண்டி எழுதிக்கொடுத்தார். அதற்குப் பிறகு அந்த நிலத்தை ரிஜிஸ்டர் ஆபீசில் போய் பதிவு செய்யவில்லை. பிறகு அந்த நிலத்தை விற்றுவிட்டார். புதிதாக வாங்கியவர் பம்பு செட்டுக்கு மனுப்போடும்போது 'கியாரண்டி' கொடுத்த 'பாக்கியை' கொடுத்துவிட்டுத்தான் நிலத்தைப் பயன் படுத்தலாம் என்றும் பணத்தைக் கொடுக்கவேண்டுமென்றும் சொல்லும் நிலை இருக்கிறது. அதைப் பரிசீலனை செய்வதற்கு சர்க்கார் முற்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அந்த விதிகள் அப்படியே தான் இருக்கும். Transfer of Property Act பிரகாரம்— கனம் அங்கத்தினருக்கு அது தெரிந்திருக்கும்—நிலத்தில் எந்த விதமான 'லையபிலிட்டி' இருந்தாலும் அதை வாங்கியவர்கள் "லியபிலிட்டியை" சேர்த்துத்தான் வாங்குகிறார்கள். ஏனென்றால் இந்த கியாரண்டி கொடுக்கிற பணமானது நிலத்தினுடைய அடமானத்தின்பேரில்தான் வைக்கப்பட்டிருக்கிறது. யார் அதை வாங்கினாலும் கொடுக்கும்படியாகத்தான் இருக்கும்.

10 a.

Improvement of roads in Cuddalore Taluk

*114 Q.—SRI M. ETHIRAJULU : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have received any representation from Messrs. Parry and Company for the improvement of certain roads in Cuddalore taluk; and

(*b*) if so, the action taken or proposed to be taken thereon?

THE HON. SRI P. KAKKAN : (*a*) No such representation has been received from the said company.

(*b*) Does not arise.

(*அ*) மேற்படி கம்பெனியிடமிருந்து முறையீடு எதுவும் வரவில்லை.

(*இ*) இக் கேள்விக்கு இடமில்லை.

6th March 1965]

திரு. எஸ். கே. சம்பந்தன்: அந்தக் குறிப்பிட்ட நிறுவனம் அரசாங்கத்திற்கு நேரடியாக எழுதுவதில்லை என்றும் மாவட்ட ஆட்சியாளர் மூலம்மாக அரசாங்கத்திற்கு எழுதியிருக்கலாமல்லவா என்று நான் அறிய விரும்புகிறேன். அப்படி எழுதியும் மாவட்ட ஆட்சியாளர்களுக்கு விண்ணப்பித்தும் அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை அரசாங்கம் அறிவிக்குமா?

கனம் திரு. பி. கக்கன்: நெல்லிக்குப்பம் வட்டாரத்தில் சில வேலைகள் செய்திருக்கிறோம். கம்பெனி எழுதிக்கொடுக்காவிட்டாலும், நாங்கள் ரோடுகளைச் செப்பனிட ஏற்பாடு செய்கிறோம்.

திரு. எம். எத்திராஜுலு: கரும்பு செல் நிதியிலிருந்து அந்த ரோடுகளைப் போடுவதற்காவது அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. பி. கக்கன்: ரோடு போடவேண்டுமென்றால் அந்தப் பணத்திலிருந்துதான் போடவேண்டும்.

Emergency operation theatre in the General Hospital

*115 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to start an emergency operation theatre in the General Hospital for road accidents; and

(*b*) if so, the stage at which the matter stands now?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) Yes.

(*b*) The plans and estimates for the work are awaited from the Director of Medical Services.

DR. H. V. HANDE : Sir, where is the proposed operation theatre going to be located—the emergency operation theatre?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : There is a proposal to put up a cardiology block in the Government General Hospital. This emergency theatre will be included in that plan.

DR. H. V. HANDE : Was there any proposal two years ago on the recommendation of the Director of Medical Services to have it located even at that time and the Government also passed orders favourably? If so, may I know why there has been a delay of nearly two years?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : I do not think there has been any such proposal.

DR. H. V. HANDE : Sir, have the road accident cases that are brought to the General Hospital increased immeasurably during the last one year?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : separate question may be put, Sir.

Fish farms

* 116 Q.—SRI S. K. SAMBANDHAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) Whether any fish farms have been put up by the Panchayat Unions;

(*b*) if so, the number and names of Panchayat Unions that have put up fish farms during 1963-64; and

(*c*) the amount spent on the fish farms by each of the Panchayat Unions during the above period?

THE HON. SRI S. M. A. MAJID : (*a*) Yes.

(*b*) & (*c*) Particulars are being collected.

திரு. எஸ். கே. சம்பந்தன்: இந்த மீன் பண்ணைகளில் ஒரு சிலவற்றையாவது அமைச்சர் அவர்கள் பார்த்திருந்தால், குறிப்பிட்ட பண்ணைகளில் தண்ணீர் இருக்கிறதா என்று அமைச்சர் அவர்கள் கவனித்திருக்கிறார்களா என்று இந்த சபைக்குச் சொல்வார்களா?

கனம் திரு. எஸ். எம். ஏ. மஜீத்: மீன் தண்ணீரில்தான் வளரும் கனம் அங்கத்தினர் இம்மாதிரி ஏதாவது பண்ணைகளிலே தண்ணீர் இல்லாத இடங்களிருந்தால், எவையாவது நல்ல முறையில் கவனிக்கப்படாமலிருந்தால், அவற்றைத் தெரிவித்தால் தகுந்த நடவடிக்கை எடுத்துத் திருத்தியமைக்கிறேம்.

திரு. எஸ். கே. சம்பந்தன்: பஞ்சாயத்துக்கள் நடத்துகின்ற பல மீன் குட்டைகளைப் பார்த்துவிட்டுத்தான், கேள்விப்பட்டுத் தான், சொல்கிறேன். இந்தக் கேள்வியை அனுப்பி ஓராண்டு கால மாகிறது. இன்னும் தகவல் சேகரிக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் பதிலில் சொல்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன் குட்டைகள் இருக்குமிடங்களுக்குச் சென்று அங்கு தண்ணீர் இருக்கிறதா என்று அவர்கள் பார்த்தால் போதும். மீன்களை தண்ணீர் இல்லாமல் எப்படி வளர்க்கிறார்கள் என்பது அப்போது தான் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும்.

கனம் திரு. எஸ். எம். ஏ. மஜீத்: கனம் அங்கத்தினர் அபிப் ராயத்திற்கு நன்றி. 1961லிருந்து 1964 வரையில் மொத்தம் 133 பண்ணைகள் இருக்கின்றன. குறிப்பிட்ட வருஷத்திற்கு குறிப்பிட்ட தேதியில் தகவல் சேகரித்து இருக்கிறது. இந்தத் திட்டம் நல்லமுறையில் செயல்படவேண்டுமென்றால் தேர்ந்தெடுக் கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்குத் தான் அதில் ஊக்கம் அதிக மாக இருக்கவேண்டும். அங்கத்தினர்கள் அவற்றைக் கவனத்தில் வைத்துக்கொண்டு தங்களுடைய அபிப்பிராயங்களை சர்க்காருக்கு அவ்வப்போது கொண்டுவந்தால் நலமாக இருக்கும்.

MR. CHAIRMAN : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR 1965-66—*cont.*

திரு. என். வி. நடராசன்: கனம் தலைவர் அவர்களே, 1965-66-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை ஆளுங்கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் வரவேற்றுப் பேசியிருக்கிறார்கள். அது மட்டும் அல்ல. புதிய வரி ஒன்றையும் விதிக்கவில்லை என்பதையும் பாராட் டியிருக்கிறார்கள். ஆனால் எந்த அளவுக்கு மக்கள் மீது வரிகளைச் சுமத்த முடியுமோ, அந்த அளவுக்கு வரிகளைச் சுமத்தி இருப்பதாலே, மேலும் புதிய வரிகளை விதித்தால் மிச்சம் மீதி உள்ள வாழ்வும் சீரழிந்து விடும் என்பது அனைவரும் உணர்ந் ததாகும். ஆகவே இப்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்தத் திட் டத்தில் ஏதாவது வரிகளைக் குறைக்கும் நிலைமை இருந்தால், அதை சர்க்கார் செய்ய முன் வருமானால் உள்ளபடியே எல்லோராலும் இந்த வரவுசெலவுத் திட்டம் பாராட்டப்படுவதாய் அமையலாம் என்பது என் கருத்தாகும். அப்படிக் குறைக்கப்படுவதற்கான ஒரு சந்தர்ப்பம் இப்போது ஏற்பட்டிருக்கிறது.

சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்த நமது தொழில் துறை அமைச்சர் அவர்கள் சென்னையிலே ஓடும்படியான பஸ் போக்குவரத்தில் ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ 40 லட்சம் ரூபாய் இழப்பு ஏற்படுகிறது என்ற காரணத்தால், பஸ் கட்டணங் களை எல்லாம் உயர்த்தினார்கள். அப்படி உயர்த்துவது ஏழை நடுத் தர மக்களுடைய வாழ்வை, அவர்கள் தொல்லையை மேலும் அதிகப் படுத்துவது ஆகும் என்று சொல்லி, அந்தக் கட்டணத்தை உயர்த் தக்கூடாது என்று திராவிட முன்னேற்றக் கழகம் சட்ட மன்றத் திலே அப்போது வலியுறுத்தியிருக்கிறது. சென்னையிலே பல அமைப்புகள் அதுபற்றி குரல் எழுப்பி உள்ளன. அன்று மேயராக இருந்த தோழர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஒரு குழுவை அமைத்து தொழில் துறை அமைச்சரைச் சந்தித்து இதுபற்றி எடுத்துக் காட்டியிருந்தார்கள். அவரும் அனுதாபத்தோடு இந்தக் கருத்துக் குக் கவனம் செலுத்துவதாக வாக்களித்தார்கள். அந்த அனுதாபம் இன்றளவும் இருக்கும் என்று நம்புகிறேன். இந்த நிதி நிலை அறிக் கையில் கனம் முதல் அமைச்சர் அவர்கள் மிக உற்சாகத்தோடு குறிப்பிட்டிருக்கிறார்கள், பஸ் போக்குவரத்தில் ஏறத்தாழ 75 லட்ச ரூபாய் வருவாய் பெருகியிருப்பதாக. 40 லட்ச ரூபாய் இழப்பு ஏற்பட்டதனால் 2 கோடி ரூபாய் வருவாய் வரக்கூடிய அளவுக்குக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும். அரசாங்கம் அப்படிக் குறைக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

அடுத்தபடியாக, அரசாங்க ஊழியர்களின் அகவிலைப் படியை உயர்த்தியிருப்பதை நான் எதிர்க்கவில்லை. அதை நான் உண் மையிலேயே வரவேற்கிறேன். ஆனால் இவ்வாறு ஊதியத்தை உயர் த்துவதை விட, விலைவாசிகளைக் கட்டுப்படுத்தினால் அவர்களுக்கு அது சௌகரியமாக இருக்கும். அவர்களுடைய அகவிலைப்படியை உயர்த்தியது வரவேற்கத்தக்கதுதான், பாராட்டத் தக்கதுதான். ஆனால் அவர்களுள் 89 ரூபாய் வரை சம்பளம் வாங்குபவர்களுக்கு

[திரு. என். வி. நடராசன்] [6th March 1965

ரூ. 7-50 அகவிலைப்படி உயர்வு கிடைத்திருக்கிறது என்றால், கடை விரிகளில் உணவு தானியங்களின் விலைகளும் மற்றப் பண்டங்களின் விலைகளும் ரூ. 15 அளவில் உயர்ந்து வருகிறது. எனவே சம்பள உயர்வு கொடுக்கப்பட்டாலும், அரசாங்க ஊழியர்களுக்கு மன நிறைவு ஏற்படுவது சாத்தியமாயில்லை. விலைவாசிகளைக் கட்டுப் படுத்தினால், அரசாங்க ஊழியர்கள் மட்டுமின்றி ஏழை நடுத்தர மக்களும் அதனால் பயனடைவார்கள். இல்லாவிட்டால் இத்தகைய சம்பள உயர்வு அளிப்பது, யானைப் பசிக்கு சோளப் பொரி கொடுப் பது போலதான் இருக்கும். அரசாங்கம் அரிசியின் விலையைக் கட்டுப்படுத்தியது. உடனே அரிசி கிடைப்பதே கஷ்டமாகப் போய் விட்டது. அந்த மாதிரியான நஷ்டம் ஏற்படாதபடியும் பார்த்துக் கொள்ள வேண்டும். இன்று பருப்பு, புளி முதலியவைகள் விலை உயர்ந்துகொண்டே போகின்றன. இந்த சந்தர்ப்பத்தில் அரசாங்க ஊழியர்களின் சங்கத்தின் தலைவர் அறிவித்துள்ளதை இங்கே படிக்க விரும்புகிறேன். "நகர அலவன்ஸ், வீட்டு வாடகை அல வன்ஸ் ஆகியவை அளிக்காதது ஏமாற்றமளிக்கிறது. வேகமாக ஏறிவரும் விலைவாசியையும் விட்டு வாடகை உயர்வையும் மேற் குறிப்பிட்டுள்ள அலவன்ஸுகள் இல்லாமல் சமாளிக்க இயலாது. பொது பிராவிடண்ட் நிதிக்கு 6 சதவிகிதம் பிடிப்பதை அரசாங்கம் விரைவில் நிறுத்தும் என்று நம்புகிறேன்" என்று அவர் அறிவித் திருக்கிறார். எனவே அரசாங்க ஊழியர்களும், ஏழை நடுத்தர மக்களும் என்றென்றும் நன்றாக வாழ்வதற்கு வகை செய்வதற்காக விலைவாசிகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று சொல்லிக்கொள் கிறேன்.

அடுத்தபடியாக, மத்திய சர்க்காரின் தங்கக் கட்டுப்பாடு உத் தரவு காரணமாக நகைத் தொழிலாளர்கள் வேலை இழந்து இன்று பிச்சைக்காரர்களாக வாழ்கிறார்கள். அவர்களுக்கு அரசாங்கம் கொடுக்கும் கூடங்களினால் அவர்கள் நிலை சீர்திருத்தி விடமுடியாது. கடன்களை அவர்கள் எப்படியோ செலவழித்து விடுகிறார்கள். எனவே அவர்கள் தங்கள் தொழிலை நடத்துவதற்கு அரசாங்கம் திட்டவட்டமான நிரந்தரமான வழி வகை செய்ய வேண்டும். அத்தொழிலில் அனுபவமுடையவர்களைக் கலந்து கொள்ள வேண்டும். நாட்டு மக்கள் நலமாக வாழ்வதற்காக கடமையாற்ற வேண்டும் என்பதற்கு அரசாங்கத்திற்கு எல்லாக் கட்சிகளின் ஒத்துழைப்பும் தேவை என்பதை நான் விளக்கத் தேவை இல்லை. இந்த ஒத்துழைப்பைப் பெற, ஆட்சியாளர்கள் எதிர்க் கட்சிகளை மதித்து நடக்க வேண்டும். இந்த பட்ஜெட் விவாதத்தின்போது இது வரை பேசியவர்கள் பட்ஜெட்டின் மீது பேசுவதற்கு பதிலாக மொழிப் பிரச்னை பற்றியும் அண்மையில் நடந்த கலவரங்கள் பற்றியும் பேசியிருக்கிறார்கள். இந்த நிலைமை குறித்து நான் வருந்துகிறேன். மதிப்பிற்குரிய உறுப்பினர் ஸ்ரீ கோபாலன் நேற்று நம் நாடு சுதந்திரம் அடைவதற்காக தலைவர்கள் என்ன கஷ்டப்பட்டார்கள் என்றெல்லாம் பேசியபோது நான் உண்மை யிலேயே கண் கலங்கினேன். அவர்கள் பட்ட கஷ்டத்தையும் அடைந்த நஷ்டங்களையும் நாங்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தினர், கொஞ்சமாவது குறைத்து மதிப்பிடவில்லை.

6th March 1965] [திரு. என். வி. நடராசன்]

எங்களைக் காங்கிரஸ்காரர்கள் மதித்தாலும் மதிக்காவிட்டாலும், அவர்கள் பட்ட கஷ்டங்களையும் அடைந்த நஷ்டங்களையும் நாங்கள் என்றென்றும் மதிப்போம். ஒரு நாட்டுக்கு விடுதலையும், மொழியும் இரு கண்கள் போல முக்கியமானவை. நாடு அன்னிய ஆட்சியிலிருந்து விடுதலை அடைந்தது போல, ஹிந்தி ஆதிக்கத்திலிருந்தும் நம் மொழி விடுதலை பெற வேண்டும். அதற்காக 1937-லிருந்து இன்றுவரை நாங்கள் தொடர்ந்து போராடி வந்திருப்பதைக் காங்கிரஸ்காரர்கள் மதிக்க வேண்டாமா? நாங் களும் எங்கள் கழகத் தலைவர் ஸ்ரீ அண்ணா அவர்களும் சாமானிய மானவர்களாக இருக்கலாம். ஆனால், காங்கிரஸ் என்பது நெய்யில் பொரித்த புண்டம், கழகம் வேறு சாதாரண எண்ணெயில் பொரித்த பண்டம் என்று நினைக்கக்கூடாது.

திரு. கே. ராஜாராம்: கனம் சபைத் தலைவரைப் பார்த்துப் பேசும்படி கனம் அங்கத்தினரைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என் வி. நடராசன்: எங்கள் கழகத்தைப்பற்றி கனம் அமைச்சர் என்னவெல்லாமோ பேசியிருந்தாலும், எங்களுடைய ஹிந்தி எதிர்ப்பை மதித்து அவர் என்றாவது பேசியிருக்கிறாரா? நேற்றுக் கூட துக்க தினத்தை 27-ம் தேதி வைத்துக் கொண்டிருக்க கூடாதா என்று கேட்கப்பட்டது. இதற்கு கனம் முதல் அமைச்சர் எடுத்துக்கொண்ட முயற்சி என்ன? ஸ்ரீ அண்ணாதுரையை அழைத்து இது சம்பந்தமாக அவருடன் கனம் முதலமைச்சர் பேசியிருக்கக்கூடாதா? ஸ்ரீ ராஜாஜிக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் எத்தனையோ விஷயங்களில் வேற்றுமைகள் இருந்தாலும், அவர் ஒரு எதிர்க்கட்சியின் தலைவராக இருப்பதால் கனம் முதலமைச்சர் அவரை அழைத்துப் பேசியிருக்கக்கூடாதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஸ்ரீ ராஜாஜி கூட 26-ம் தேதியில் துக்க தினம் வேண்டாம் என்று சொன்னார். 26-ம் தேதியில் துக்க தினக் கொண்டாட்டத்தை வைத்துக்கொள்ள வேண்டாம் என்று சட்ட மன்றத்தில் சொன்னார், அவ்வாறு அந்த மன்றத்தின்மூலம் எல்லோரையும் கேட்டுக்கொண்டேன். என்னால் ஒரு குறையும் இல்லை.

திரு. என். வி. நடராசன்: கனம் முதலமைச்சர் சட்ட மன்றத்தில் அவ்வாறு கூறியதை நான் மறுக்கவில்லை. சட்ட மன்றத்திலுள்ள எங்கள் கழகத் தலைமைக்கு மேற்பட்ட வெளியில் உள்ள எங்கள் கழகத்தின் தலைவரையும் கலந்து பேச அழைத்திருந்தால், நாங்கள் வேறு தயாராயிருந்தோம். நான் கனம் முதலமைச்சரைக் குறைகூறவில்லை. இந்த நாட்டு மக்களின் வாழ்வு எதிர்காலத்தில் நலமாக இருக்க வேண்டுமானால், ஆட்சி யாளர்கள் எதிர்க் கட்சிகளை மதித்து நடக்க வேண்டும். அவர்கள் எங்கள் கொள்கைகளை ஏற்காவிட்டாலும் எங்களுடன் கலந்து பேசினால் அதனால் நன்மைகள் ஏற்படும். "27-ம் தேதி கனம் முதலமைச்சரை மாணவர்கள் சந்திக்கும் பிரச்னையே எழவில்லை. அவர்கள் அன்று திருப்பி அனுப்பப்பட்டு விட்டார்கள்" என்று கனம் உறுப்பினர் ஸ்ரீ ஹாண்டேவுக்கு சர்க்கார் தரப்பில் பதில் கூறப்பட்டது. நான் மிகவும் ஆதாரபூர்வமாக, திட்டவட்டமாகச்

[திரு. என். வி. நடராசன்] [6th March 1965

சொல்வேன். முதலமைச்சர் அவர்களைச் சந்திப்பதற்காக ஆறு மாணவர்களைக் கொண்ட ஒரு குழு வந்தது. பெரிய கூட்டமாக வந்தார்கள். அங்கிருந்த போலீஸ் அதிகாரி ஒருவர் அவர்களைத் தடுத்து முதலமைச்சரைப் பார்க்க முடியாதபடி மறுத்து தடுத்து விட்டார்கள். முதலமைச்சர் உங்களைப் பார்க்க இடப்பாடில்லை என்று கூறிவிட்டார். கனம் போலீஸ் அமைச்சர் திரு. கக்கன் அவர்களையாவது நாங்கள் பார்க்கவேண்டுமென்று மாணவர்கள் கேட்டார்கள். அவர்களையும் பார்க்க முடியாது என்று சொல்லி விட்டார்கள். அதற்குப் பிறகு சீஃப் செக்ரட்டரியையாவது பார்க்கவேண்டுமென்றார்கள். அதையும் மறுத்துவிட்டார்கள். இதை ஏன் சொல்கிறேன் என்றால், முதலமைச்சர் அவர்களுக்கோ போலீஸ் அமைச்சர் அவர்களுக்கோ தெரியாமல் இருந்திருக்கலாம் இவை. பிறகு மாணவர்கள் போலீஸ் கமிஷனரைப் பார்த்து கேட்கிறோம் என்று மாலை 2½ மணியிலிருந்து 5½ மணி வரை வெளியே காத்து நின்றுகொண்டிருக்கிறார்கள். அதற்கு முதலமைச்சர் மாணவர்களைப் பார்க்க இடப்பாடில்லை என்று கூறியிருக்கிறார்கள். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் போலீஸ் மந்திரிக்கோ முதலமைச்சருக்கோ தெரியாமல் போலீஸ் அதிகாரிகளே முடிவு கூறுமளவிற்கு ஆட்சிப் பொறுப்புகளைப் போலீஸ் இலாகாவினரே ஏற்றுக்கொண்டுவிட்டார்களா என்று ஐயப்படுகிறேன். உள்ளபடியே அவர்கள் மாணவர்கள் விருப்பத்தை அமைச்சர்களுக்குத் தெரிவித்திருந்தால் இந்த நிலைமை உருவாகியிருக்காது என்று நம்புகிறேன். எதிர் காலத்தில் போலீஸ் அதிகாரிகள் இதுபோன்ற சிக்கலான பிரச்னையில் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும். வேண்டுமென்று சர்க்கார் விரும்பினால் ஆகாத்தைத் தடுத்திக்க வந்த மாணவர்கள் குழுவை அழைத்து வந்து நிலைமையை விளக்கத் தயாராக இருக்கிறேன். இப்படி பாக விரித்துத்தான் நான் இதைச் சொல்கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: மிஸ்டர் 6-ம் தேதி மாணவர்கள் முதலமைச்சர் அவர்களைப் பார்க்கப் போகவில்லை. இந்த மாதிரி நாங்கள் 25-ம் தேதி உங்களைப் பார்க்க விரும்பினோம், அதற்கு அனுமதிக்கவில்லை என்று சொல்லவில்லை. எதற்காக இதை மீண்டும் மீண்டும் சொல்லவேண்டியிருக்கிறது என்றால் மாணவர்களைப் பார்ப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் மறுத்து விட்ட காரணத்தால்தான் இந்த விதமான கிளர்ச்சி ஏற்பட்டது என்று பிரசாரம் வெளியே நடக்கிறது. அதற்குத்தான் சொல் கிறேன். 25-ம் தேதி பார்க்க முடியவில்லை என்பதற்கு ஆதாரமில்லை. 25-ம் தேதிகூட 144 தடை உத்தரவை மீறி அவர்கள் வந்தார்கள். அதைத் தடை செய்தார்கள். முதலமைச்சர் அவர்களைப் பார்க்கவேண்டுமென்று சொல்லி அவர் பார்க்க முடியாது என்று மறுத்துவிட்டதாகத் தகவல் கிடைத்தும் சம்பவம் நடக்கவில்லை. மாணவர்களை மீண்டும் முதலமைச்சர் அவர்கள் பார்த்தபோது அவர்களைப் பார்ப்பதற்கு அனுமதி அன்றைக்குக் கொடுக்கவில்லை என்றும் சொல்லவில்லை.

6th March 1965]

கனம் திரு. எம். பக்தவத்சலம்: 6-ம் தேதி மாணவர்கள் என்னிடம் வந்து இரண்டரை மணிநேரம் பேசிக்கொண்டிருந்தபோது நான் பிரஸ் கான்ஃபிரன்சுக்குத் தெரிவித்த அறிக்கையை ஒரு மாணவரிடமே கொடுத்து மற்றவர்களுக்குப் படித்துக் காட்டச் சொன்னேன். அவர்கள் தாய்கள் பார்க்க வந்ததாகவோ அதை அனுமதிக்கவில்லை என்றோ யாரும் என்னிடம் கூறவில்லை. கனம் அங்கத்தினர் சொல்வதைப் பற்றி தகக் கேள்விப்படுகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: வெளியில் அப்படிச் சொல் கிறார்கள்.

திரு. என். வி. நடராசன்: சம்பந்தப்பட்ட மாணவர்கள் அமைச் சரைப் பார்க்க வேண்டுமென்று விரும்பி வந்தவர்கள் போலீஸ் அதிகாரியைப்பார்த்து இரண்டு மணி நேரம் பேசினார்கள் என் பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படு கிறேன். 144 தடை இருக்கும்போது அதை மீறி அவர்கள் வரு வதற்கு காரணம் என்ன? அமைச்சரைப் பார்க்கத்தான். அமைச்சர் அவர்கள் அதற்கு விளக்கம் கூறுவதால் நான் அதை மேலும் வளர்க்க விரும்பவில்லை.

ஒன்றை மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். முதலமைச்சர் இருக்கிறார்கள். போலீஸ் அமைச்சர் இருக்கிறார் கள். அவர்களுடைய அறிக்கையைக் காணவில்லை. போலீஸ் அதிகாரிகள் அடிக்கடி அரசியல் கட்சிகளுக்கு எச்சரிக்கை செய் வதுபோல அறிக்கை விடுவதும், அரசியல் கட்சிகளை மிரட்டுவது போல பேசுவதும் நமது மாநிலத்தின் அரசியல் தரத்தைக் குறைத்துவிடுமென்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள் கிறேன். எதிர்காலத்தில் இது போன்று ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டுமென்று சர்க்காருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மொழிப் பிரச்னையைப்பற்றி அதிகம் இப் போது பேச விரும்பவில்லை. எதிர்க் கட்சித் தலைவர் அன்றைய தினம் எடுத்துக் கூறியது சிந்திக்கவேண்டியதாகும். நாங்கள் எல்லோரும் தேசத் துரோகிகள் அல்ல. மீண்டும் மீண்டும் வலி யுறுத்துகிறேன். தேசம் விடுதலை அடையும்போது எதிர்த்தவர்கள் இப்போது எங்கே இருக்கிறார்கள்? மகாத்மா காந்தியடிகளும் காங்கிரஸ்காரர்களும் வெள்ளையனே வெளியேறு போராடும் நிலையில் அதற்கு எதிராக இருந்தவர்கள் இப்போது ஆளும் கட்சிப்பக்கம் இருக்கிறார்கள். அதைப்போன்றவர்கள் எங்களில் யாராவது இருக் கிறோம் என்று நிரூபித்தால் அவர்களுக்கு நீங்கள் கொடுக்கும் தண்டனையை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். நாட்டை நாங்கள் எப்போதும் காட்டிக் கொடுக்கவில்லை. அப்படிச் செய்ய மாட்டோம். விலைவாசிப் போராட்டத்தின்போது வெளியே கொந் தளிப்பு நடந்துகொண்டிருந்தபோது சிறையிலிருந்து வெளிவந்த அண்ணா அவர்கள் முதன் முதலாகவேலூரில் மேடையில் பேசும் போது இந்தக் கொந்தளிப்பைப்பற்றிப் பேசினார். சீன நாட் டினர் படை எடுக்கும்போது நமக்குள் ஆளுகிற காங்கிரஸ் கட்சிக் கும் எவ்வளவுதான் மனக்கசப்பு இருந்தாலும் நாட்டைக் காப்பதற் காக நாம் சர்க்காருடன் இதய பூர்வமாக ஒத்துழைக்கச் சொன்

[திரு. என். வி. நடராசன்] [6th March 1965

ஞர்கள். அதற்குப்பிறகு எங்களால் இயன்ற அளவு உதவிகளை அதற்காகச் செய்திருக்கிறோம். எந்த நோக்கில் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டுவந்தார்களோ அந்த நோக்கில் நேரடி திற்கும் சர்க்காருக்கும் துணையாக இருக்கவேண்டுமென்று விரும்பி நாங்கள் எல்லாம் சேர்ந்து தொண்டு செய்தோம். அந்த இயக்கத்தின் தலைவர்களில் ஒருவனை தொழுநோய் கருணைநிதி இல்லை பாதுகாப்புச் சட்டப்படி சிறையில் தனிமையில் நெஞ்சுவலியோடு இருக்கிறார். யாரை அடக்கவேண்டுமோ அவர்களை அடக்காமல் நாட்டின் பாதுகாப்புக்குத் துணைபோகிறவர்களை அடக்கிவருகிறீர்கள். பத்திரிகைகளுக்குப் பரிந்து பேசவில்லை. உங்களுக்கு எவ்வளவு அதிகாரம் இருக்கிறது என்று எடுத்துக்காட்டுவதை விட அன்பால் திருத்துவதுதான் நாட்டுக்கு நன்மை அளிக்கும். அதனால் மதிப்பு ஏற்படும். சட்டம் இருக்கிறது, அதிகாரமிருக்கிறது என்று அவைகளை வரம்பு மீறி பிரயோகப் படுத்தினால் தீர்ந்த பிறகு எதைப்போய் துணைக்கு அழைப்பீர்கள்? சில பத்திரிகை களின்மீது பாதுகாப்புச் சட்டப்படி நடவடிக்கை எடுத்திருக்கிறது. இது அவசியம்தானு, நியாயம்தானு என்று முதலமைச்சர் அவர்களை சிந்திக்குமாறு கேட்டுக்கொள்வேன். 8-ம் தேதி கல்லூரிகள், உயர்நிலைப் பள்ளிகள் திறந்து எல்லா மாணவர் களும் திரும்பச் சென்று கல்வியில் கவனம் செலுத்தவேண்டு மென்று மனப்பூர்வமாக விரும்புகிறோம். அதற்கு முன்னதாகவே மாணவர்களை விடுதலை செய்து வழக்குகளை வாபஸ் பெறவேண்டு கிறேன். அப்படிச் செய்வது பயந்து செய்வதாக ஆகுமென்று கருதக்கூடாது. பெரிய மனது வைத்து அவர்களை விடுதலைசெய் தோம் என்ற நிலைமையை உண்டாக்கினால் 8-ம் தேதி முதல் கல்லூரி மாணவர்கள் கட்டுப்பாட்டுடனும் கண்ணியத்துடனும் கல்வியில் ஒத்துழை செலுத்துவார்கள் என்று நம்புகிறேன். அதைப் போலவே தான் பத்திரிகைகள் நிலைமையும். பத்திரிகைகள் அனைத்தும் எங்கள் கொள்கைகளை அப்படியே ஆதரிப்பவை அல்ல. சில சமயத்தில் தீவிரமாக எங்களை எதிர்ப்பனவாக இருந்தும் இருக் கின்றன. நாட்டில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பை அடக்கவேண்டு மென்றால், எல்லாவற்றையும் மறந்துவிட்டு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதுபோல வழக்குகளையெல்லாம் வாபஸ் பெற வேண்டுகிறேன். ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும் முதலமைச்சர் அவர்களுக்கும் எனது மனம் விட்டுத் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன். அறிஞர் அண்ணு அவர்களால் அரசியல் துறையில் ஏற் படுத்தப்பட்ட பண்பாட்டின்படி கட்சிகளுக்குள் எவ்வளவு கருத்து வேற்றுமை இருந்தாலும் நட்பு முறையில் அவை பரிமாறப்படுவனவாக இருக்கக்கூடாது. எங்களை எதுவேண்டுமானாலும் சொல்லுங்கள். ஆனால் தேசத் துரோகிகள் என்று சொல்வதைவிட எங்களைச் சுட்டுத் தள்ளிவிடுங்கள். அந்த வார்த்தையை மிகவும் வேதனை யோடு குறிப்பிடுகிறேன். நீங்கள் பழைய பாடத்தைத் தொடர்ந்தால் புரட்டிப் பார்க்கவேண்டாமா? எந்த வகையில் நாங்கள் நாட்டிற் குத் துரோகம் செய்திருக்கிறோம்? செய்தவர்கள் உங்கள் பக்கத் தில் உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள். காங்கிரசுக்கும் பிரிட்டிஷ் சர்க்காருக்கும் ஏற்பட்ட மனக்கசப்பின் காரணத்தால் ராஜாஜி அவர்கள் மந்திரி சபையைவிட்டு 1938-ல் வெளியேறியபோது சர்க்காரை ஏற்று நடத்தவேண்டுமென்று ஜஸ்டிஸ் கட்சியில்

6th March 1965] [திரு. என். வி. நடராசன்]

இருந்த பெரிய தலைவர்கள் தீவிர முயற்சி செய்தார்கள். அப்போது திர்வாகக் குழுவில் ஒரு குரல் எழுந்தது. அந்தக் குரல் அறிஞர் அண்ணு அவர்களின் குரல்தான். வெள்ளையர்கள் வெளியேற வேண்டியவர்கள். அவர்களுக்குப் பதிலாக காங்கிரஸ் கட்சியோ வேறு கட்சியோ ஆளவேண்டுமேதவிர வெள்ளையர்கள் ஆளக் கூடாது. எவ்வளவு வேறுபாடு இருந்தாலும் மந்திரிசபை அமைப்பதில் ஈடுபடக்கூடாது என்றார்கள். அவர்களுடன் சேர்ந்து பேசியவர்கள் நாங்கள். அன்று சாமான்யமானவராக இருந்த அண்ணு அவர்களின் குரல் எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்டு மந்திரி சபை அமைப்பதற்கு நீதிக்கட்சி ஒத்துழைப்பு தராது என்று நிர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதற்குப் பிறகுதான் இடைக்கால மந்திரிசபை வந்தது. இதை யெல்லாம் ஆளும்கட்சியினர் ஆராய சிந்தித்துப் பார்த்தால் இந்த நாட்டில் மக்களுக்கு நல் வாழ்வு எற்பட எல்லாக் கட்சி களின் துணையையும் விரும்பி ஒத்துழைப்பைப் பெறுவதற்கு ஏற்ற வகையில் இனி நடப்பார்கள் என்று நம்புகிறேன். அதற்கு எங்கள் கழகம் தயாராக இருக்கிறது என்றும் தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. எம். எத்திராஜுலு: தலைவர் அவர்களே, இந்த 1964-65க்கு முதலமைச்சர் அவர்களால் கொண்டுவந்த வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து முதலாவதாக அரசுக்கு செயலில் ஈடுபட்டு உயிர் இழந்தவர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தையும் பொது மக்களின் சொத்துக்களுக்கு கோடானகோடி ரூபாய் நஷ்டத்தை ஏற்படுத்திய அரசுக்கு எனது ஆழ்ந்த மன வருத்தத் தையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நமது முதலமைச்சர் அவர் கள் என்றைக்கு அரசியலில் காலடி எடுத்து வைத்தார்களோ அன்று முதல் இன்று வரை அவர்களால் தமிழ் நாட்டில் நிலையை நன்கு அறிந்து மக்களின் உள்ளத்தை நன்கு தெரிந்து நாட்டில் மக்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதை உணர்ந்து அதற்கு ஏற்ற வாறு, தற்போது இருக்கிற நிலையையும், விலைவாசி உயர்வையும் தெரிந்து அதற்கொப்ப ஒரு நல்ல வரவு செலவு பட்ஜெட்டை இந்தத் தருணத்தில் கொண்டு வந்திருப்பதைப் பார்த்து நான் மிக மிக மகிழ்ச்சி அடை கிறேன். இந்த வரவு செலவுத் திட்டத்தைப் பாராட்டிப் பாராட்டிப் பேசுகிற ஒரு வாய்ப்பு இந்த வருஷத்திலே கிடைத்திருக்கிற நேரத்திலே இந்த மொழிப்பிரச்னை குறுக்கே வந்து அதை மறைத்து விட்டது என்பதை வருத்தத்தோடு தெரி வித்துக்கொள்ளுகிறேன். இருப்பினும் அரசியல் தலைவர்கள் வாழ்நாளிலும் இந்த வரவு செலவுத் திட்டத்தைப் பொது மக்களும் வியாபாரியும் மனமார வாழ்த்துகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இருப்பினும் கூட காங்கிரஸ் கட்சி யைச் சேர்ந்தவர்கள் இந்த வரவு செலவுத் திட்டத்தைப் பொது மக்களுக்கு மட்டுமல்ல, கிராமம் கிராமமாக எடுத்துச்சொல்லி, எப் போர்ப்பட்ட வரவு செலவுத் திட்டம், என்னென்ன முன்னேற்றம் அடங்கியிருக்கிறது, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்து வதற்கு எப்படி இன்றைக்கு வழிகோலப்பட்டிருக்கிறது என்று எடுத்துச் சொல்ல தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன். முதலாவதாக நான் இந்த வரவு செலவுத்

[திரு. எம். எத்திராஜுலு] [6th March 1965

திட்டத்தைப் பார்க்கும் போது 163 கோடி ரூபாய் வரை இருந்தாலும், செலவு 170 கோடியாக இருக்கிறது. நமக்குத் துண்டு விழுவது ஏறக்குறைய 7 கோடி ரூபாயாக இருந்தாலும் நாம் ஒரு மிகப் பெரிய பிரச்சினையை இந்த நேரத்தில் தீர்த்து வைத்திருக்கிறோம். நமது நாடு இயங்குவதற்கு உயிர் நாடியாக மேலே பார்க்கக்கூடிய சர்க்கார் ஊழியர்களுக்கும், ஸ்தல ஸ்தாபனத்திலே வேலை செய்பவர்களுக்கும் நெடு நாள் இருந்த குறை இப்போது தீர்த்து வைக்கப்பட்டிருக்கிறது. எனக்கு முன்பு பேசிய நண்பர் நடராசன் அவர்கள் சொன்னார்கள். இதுபற்றிக் குறை கூறுகிறார்கள் என்று கவலைப்பட்டார்கள் என்று சொன்னார்கள். இந்த செக்ரடேரியேட்டிலே இருக்கக்கூடிய அதாவது சர்க்கார் எம்.ஜி.ஓ. தலைவர் அவர்கள் சொன்னதைச் சொல்லுகிறேன். இந்த கிராக்கிப்படி எங்களுக்கு மன நிம்மதியை அளிக்கிறது என்று அவர் சொன்னதை நான் பத்திரிகையிலே பார்த்தேன். அப்படி இருக்க இவர் சொன்னது ஆச்சரியமாக இருக்கிறது. ஆகவே இந்த கிராக்கிப்படியைப் பார்த்து எல்லோரும் மனப்பூர்வமாக ஒத்துக்கொள்ளுகிறார்கள் என்பது எனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. ஆனால் இன்னும் சில குறைகள் இருக்கலாம். நமது முதலமைச்சர் அவர்கள் காலத்திலேயே மத்திய சர்க்கார் ஊழியர்கள் எந்த விதத்தில் சலுகைகள் பெறுகிறார்களோ அந்த அளவிற்கு இவர்கள் நிச்சயமாகப் பெற முடியும் என்று இந்த மன்றத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மற்றொன்று இந்த வரவு-செலவுத் திட்டத்திலே 3½ லட்சம் மெட்ரிக் டன் உரத்தை இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதை எல்லோருக்கும் விநியோகம் செய்ய வேண்டும். எந்த அளவிலே செய்யவேண்டும் என்று சொன்னால், பெரிய நிலச் சுவான்தார்கள், நடுத்தர நிலச்சுவான்தார்கள், சிறிய பட்டாதார்கள், ஒரு ஏக்கர் இரண்டு ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்களுக்குக்கூட தயவுசெய்து சிபாரிசுகள் இருந்தாலுங்கூட ஏற்பாடு செய்யவேண்டும். எந்தக் கையிலே வேண்டுமானாலும் பார்த்துப் பார்மிட்டு கொடுத்தாலும் அவர்களிடம் கொண்டுக்கொள்ளுவதற்கு ஏற்பாடு செய்யும்வகையில் கார்டு முறைகொண்டு வருவது நல்லது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அடுத்து சிறிய நிலச்சுவான்தார்கள் கவனத்துக்கு 3 ஆயிரம் ரூபாய் வரை வட்டி 37 லட்சம் ரூபாய் தள்ளுபடி செய்திருப்பதை வரவேற்கிறேன். இந்தக் கிராமங்களை வெட்டிக்கொண்டு போகும்போது, எல்லைக் கிராமங்கள் அதிகம் இல்லாமல் இருக்கிறதோ அதை அதிகம் இல்லாமல் இருக்கிறதோ அதை அதிகம் இல்லாமல் இருக்கிறதோ அந்த ஊர்களில் இந்த மாதிரியான கிராமங்களை வெட்டுவதற்கு ஏற்பாடு செய்தால் அந்தப் பகுதிகளில் இருக்கும் விவசாயிகளை ஊக்குவித்து விவசாயத்தை நல்ல முறையில் பெருக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு தென் ஆர்க்காடு ஜில்லாவிலே இன்னும் எந்த விதமான நீர்த்தேக்கத் திட்டமும் போட முடியாது. அதற்கான வாய்ப்புகளும் கிடையாது. ஆகவே அங்கே இருக்கிற பெரிய ஏரிகளை முன்னதாக வெள்ளக்காலம் காலத்தில் இருந்தது போல் எப்படியேனும் வெட்ட வேண்டும். இப்போதும் வெட்டிக்கொண்டுதான் வருகிறார்கள். இருந்தாலும் சரியாக

6th March 1965] [திரு. எம். எத்திராஜுலு]

ஆழப்படுத்துகின்ற முறையிலே வெட்டவேண்டும். அப்போது தான் மழை காலத்தில் வருகிற தண்ணீர் நிறைய ஏரியின் முழு அளவிற்கு தண்ணீர் பிடிக்க முடியும் என்று சொல்லி அந்தத் தண்ணீரை இரண்டு போகத்திற்கும் விவசாயம் செய்யலாம் எனத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு அங்கு இருக்கிற சப்ளை சேனல்களை குடிமராமத்து செய்து கொள்வார்கள் என்று விட்டு விட்டார்கள். அதைக் குடிமக்கள் யாருமே செய்வதில்லை. மராமத்து செய்யப்படாத காரணத்தினாலும் சப்ளை சேனல் எல்லாம் சீர்திருத்தாத காரணத்தாலும் மண் அடைத்துக்கொண்டு தண்ணீர் போகாது நின்றுவிடுகிறது. ஆகவே சேனலை அரசாங்கம் ஏற்று வருடா வருடம் சரிசெய்துகொடுக்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் மராமத்து அமைச்சர் முன்னிலையில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, மின்சாரத்தில் ஏறக்குறைய இதுவரை 100 கோடி ரூபாய் செலவு செய்து இந்த ஆண்டு மேலும் 20 கோடி ரூபாய் செலவு செய்வது என்று முடிவு செய்திருக்கிறோம். எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு 20,500 கிராமங்களுக்கு மின்சாரம் கொடுக்கப்படுகிறது என்றால், தமிழ் நாட்டின் வளர்ச்சி எவ்வளவு தூரம் முன்னேறி இருக்கிறது என்று பார்க்கும்போது அதைவிட முன்னேற்றம் எந்த ராஜ்யத்திலும் ஏற்பட்டிருக்க முடியாது என்று தைரியமாக சவால் விடலாம். எந்த நாடும் மின்சாரத் துறையில் எவ்வளவு பெருகி இருக்கிறதோ அந்த நாடு தொழில் வளர்ச்சியில் ஓங்கி வளர்ந்து இருக்கும் என்பதைச் சொல்லாமலேயே மற்றவர்கள் மதிப்பிடுவார்கள். இந்த சந்தர்ப்பத்தில் ஹரிஜனங்கள் இருக்கிற கிராமங்களில் அந்த கிராமங்களுக்கெல்லாம் பஞ்சாயத்து யூனியன்கள் மின்சார போர்டிலிருந்து மின்சாரம் வாங்கிக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். சில ஊர்களில் ஹரிஜன மக்கள் நிலமும் என்று விட்டுவிடுகின்றார்கள். அப்படி விட்டுவிடக் கூடாது; கால தாமதம் செய்யக்கூடாது என்றும் அரசாங்கம் அறிவுறுத்த வேண்டும் என்று மின்துறை அமைச்சரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, பெரும் தொழில் வாய்ப்புகள் தமிழ் நாட்டிலே ஏற்பட்டிருக்கின்றன. இந்த வாய்ப்பானது எங்கு பார்த்தாலும் வளர்ந்திருக்கிறது. முதல் ஐந்தாண்டுத் திட்ட ஆரம்ப காலத்திலே எங்கேயோ ஒரு சிறு தொழில்களே இருந்தன. குறிப்பாக நெசவாலைகள் தான் இருந்தன. இன்றைக்கு வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிட்டது போல, மூன்றரை திட்டம் முடிவடைகிற நேரத்திலே, ஜில்லாவில் எங்கு பார்த்தாலும் பெரும் தொழில்கள், தொழிற்சாலைகள் இருக்கின்ற நிலையைப் பார்க்கிறோம். தொழில் சம்பந்தமாக மாபெரும் வளர்ச்சி அடைந்து இருக்கிறோம் என்பதில் சந்தேகம் இல்லை. தொழிற்சாலைகளை நமது சர்க்கார் வேண்டிய அளவிற்குக் கொண்டுவர ஏற்பாடு செய்திருப்பது வரவேற்கத்தக்கதாகும். இந்த வரவு செலவுத் திட்டத்தில் பொது மக்கள் முதலீடு போட முடியாத அளவுள்ள பெரிய தொழிற்சாலைகளை கார்ப்பரேஷன் முலமாக கொண்டுவருவதற்கு 8½ கோடி ரூபாய் ஒதுக்கி அரக்கோணத்தில் வார்ப்பட தொழிற்

[திரு. எம். எத்திராஜுலு] [6th March 1965

சாலையையும் பாஜபாலையத்தில் பிலேண்டு தொழிற்சாலையையும் மற்படுத்துவதற்கு சர்க்கார் முன்வந்திருப்பதைப் பாராட்டு கிறேன். இந்த நேரத்திலே தொழில் அமைச்சரை ஒன்று கேட்டுக் கொள்ளுகிறேன். எல்லா ஜில்லாக்களிலேயும் தொழில் பேட்டைகளை அமைத்துவிட்டார்கள். ஆனால் தென்னற்காடு ஜில்லாவில் மட்டிலும் இதுவரையிலும் தொழில் பேட்டை அமைக்கவில்லையே என்று சபை கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தென்னற் காடு ஜில்லாவிலே நெய்வேலியில் பெரிய தொழிற்சாலை இருக்கிறது என்று சொல்லிச் சொல்லி, தென்னற்காடு ஜில்லாவில் பெரிய தொழிற்சாலை அரசாங்கத்தின் மூலமாக வரவில்லையென்பதையும் நான் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப் படுகிறேன்.

இனிமேலாவது பெரிய தொழிற்சாலை ஒன்றை அரசியல் தென்னற்காடு ஜில்லாவில் ஏற்படுத்துவார் தொழில் அமைச்சரைப் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். நெய்வேலி தொழிற்சாலை கார்ப்பரேஷனில் இருக்கிறது. ஆகையால் தென்னற்காடு ஜில்லாவி லுள்ள எல்லா மக்களுக்கும் பயனுள்ளதாக இருக்க முடியாது.

அடுத்து கடலூர் N.T. பிரிவுள்ள கொழுமம் பாலத்தை அகலப் படுத்த வேண்டும், போக்கு வரத்து அதிக இடையூறாக இருக் கிறது என்று அடிக்கடி இந்த மன்றத்தில் பேசியிருக்கிறேன். இதைப்பற்றிக் கேள்வி கூட கேட்டேன். அமைச்சர் பதில் சொல்லும்போது பக்கத்தில் ஒரு புதிய பாலம் போடுவதாக பதில் சொன்னார்கள். இரண்டு வருஷத்திற்கு முன்பு நாகை மாவட்டத்து அமைச்சரும் பார்க்கர் அதிகாரிகளும் கூடவே வந்தார்கள். பாலத்தைப் பார்த்தார்கள். அங்கு இருக்கிற நிலைமையை அவர்களே நேரில் பார்த்தார்கள். உண்மை யிலேயே அந்தப் பாலத்தை அகலப்படுத்த வேண்டுமென்று தான் ஒப்புக்கொண்டார்கள். நேரில் பார்த்தும் என் பாலத்தை விரிவுபடுத்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லை என்று கேட் கிறேன். இதுவரை சர்க்கார் எடுத்துக்கொள்ளாவிட்டாலும் இனியாவது பஸ் போக்கு வரத்து வசதிக்காக விரைவிலே விரிவு படுத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது நேற்று நான் பிரச்னை என்பதை அரசாங்கத்திற்கு அறிவுறுத்து கிறேன்.

அதற்கு அடுத்து, கல்விக்காக 37 கோடி ரூபாய் என்று ஒதுக் கப்பட்டிருக்கிறது. இவ்வளவு தொகை வேறு எந்த வாழ்க்கை லும் ஒதுக்கப்படவில்லை என்பதை எல்லோரும் தெரிந்துகொள்ள வேண்டும். நமது முதலமைச்சர் அவர்கள் மிகவும் தாராள மனப்பான்மையுடன் இன்றைக்கு கல்விக்காக அரும் பாடுபட்டு வருகிறார்கள். 30 ஆயிரம் பள்ளிக்கூடங்களில் மதிய உணவுத் திட்டம் இன்றைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த வரவு செலவுத் திட்டத்தில் 16 லட்சம் ஏழை மாணவர்களுக்கு மதிய உணவு போடுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார். இதற்காக 1.16 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். இது எதைக் காட்டுகிறது என்றால் எதிர்காலத்தில் இனிமேல் கட்டாயக் கல்வி இளைஞர்களுக்கு கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் எல்லா

6th March 1965] [திரு. எம். எத்திராஜுலு]

குழந்தைகளும் பள்ளிக்கூடத்திற்கு வரவேண்டுமென்று இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது நன்றாகப் புலப்படுகிறது. அதோடு பின் தங்கிய வகுப்பாருக்கு 5 கோடி ரூபாய் கல்லூரி படிப்புக்கு சம்பள சலுகைக்காகவும், ஹாஸ்டல் வசதிக்காகவும் ஒதுக்கப்பட்டி ருப்பது பாராட்டத்தக்கது. மேலும் வேண்டும்போது அதிகப் படுத்துவார்கள் என நம்புகிறேன். என்னைப்போல் பின் தங்கிய வகுப்பினர்கள் எல்லாம் இந்தச் சலுகையை பெற்று ஏராளமான மாணவர்கள் பி.ஏ., எம்.ஏ. படித்துவருகிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். வெள்ளைக்காரன் காலத்தில் பின்தங்கிய வகுப்பாருக்கு 4,000 ரூபாய்கூட ஒதுக்கப் படவில்லை. ஆனால் சுதந்திரம் பெற்ற பிறகு பிரகாசம் மந்திரி சபை அமைத்த காலத்தில்தான் இந்தப் பின்தங்கிய வகுப்பின ருக்கு படிப்படியாக சலுகைகளையும், வசதிகளையும் கொடுத்து இன்று நம்முடைய முதலமைச்சர் காலத்தில் மலைபோல் வளர்ந்து 5 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த முன்னேற்றம் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

அதற்குப் பின், மீனவர்களுக்கு இந்த வரவு செலவுத் திட்டத் திலே கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மீன் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மீன வர்கள் கடல் ஓரப்பகுதிகளில் வாழ்கிறார்கள். நகரப் பகுதி களுக்கு மீன்களைக் கொண்டு வருவதற்கு நல்ல ரோடுகளை அமைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொருளா தாரத் துறையில் முன்னேற வேண்டுமானால் ரோடுகளை அவர் களுக்குப் போட்டுத்தரவேண்டியது மிக மிக அவசியம். ரோடு கள் இல்லாத காரணத்தினால் பிடித்த மீன்களை நகரப் பகுதிகளில் கொண்டு போய் விற்பனை செய்வதற்கு சரியான பாதையில்லை. பிடித்த மீன்களை தலையில் தூக்கிக்கொண்டு முழங்கால் அளவு மண்ணில் நீந்திக்கொண்டு வர முடியவில்லை. அவர்களுக்கு உட னடியாக ரோடு போட்டுக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு பிளீடிங் மெட்ராஸ் பற்றி இரண்டொரு விஷ யத்தை அரசாங்கத்தின் கவனத்திற்குக்கொண்டு வருகிறேன். எற்றுமதி அபிவிருத்தி கவுன்சிலில் சென்ற இரண்டு நாட்களுக்கு முன்னதாக நடந்த கூட்டத்தில் நமது முதலமைச்சர் அவர்கள் தலைவராக தேர்தெடுக்கப்பட்டதை அறிந்து மிக மகிழ்ச்சி அடை கிறேன். ஆனால் பிளீடிங் மெட்ராஸை 3 கோடி ரூபாய் அளவுக்கு ஏற்றுமதி செய்யவேண்டுமென்று இந்தக் கூட்டத்தில் தீர்மானித் திருப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன். தமிழ் நாட்டில் இதற்குக் கிடைத்திருக்கிற கோட்டாவானது சுமார் 50 பேர் களுக்குத்தான் இருக்குமென்று நினைக்கிறேன். அந்தத் தொழிலி லே ஈடுபடாதவர்களுக்கு கோட்டா இருந்தாலும் அவர்கள் இப் போது இன்றைக்கு சரக்கு வாங்க முடியாத நிலைமை ஏற்பட் டிருக்கிறது. காரணம் விலை அதிகமாகிவிட்டதால், போதிய சரக்கு கிடைக்கவில்லை.

இங்கு விலை உயர்வு அதிகமாக இருப்பதால் சரக்குகளை அமெரிக்காவிலுள்ள வியாபாரிகள் வாங்குவதற்குத் தயங்குகிறார்கள். இதைப் பார்க்கும்போது எதிர்காலத்தில் இந்தத் துணி வாங்கப்

[திரு. எம். எத்திராஜுலு] [6th March 1965

படுமோ, வாங்கப்படாதோ என்ற பயம் தென்னவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இம்மாதிரியான சம்பவம் முன்னதாகவே ஒரு சமயம் ஏற்பட்டு பலர் நஷ்டம் அடைந்திருக்கிறார்கள். ஆனால் ஒரு சிலர் நல்ல லாபம் அடைந்திருக்கிறார்கள். மற்றொரு காரணம், பம்பாயிலிருந்து இங்கு வருபவர்கள் பெரும்பாலும் சட்டைக்காக இந்த பிளீடிங் பெட்ரூல் துணியை அதிகவிலை கொடுத்து வாங்கிக் கொண்டு போய் விடுகிறார்கள். நான் சர்க்கார் இதையெல்லாம் மத்திய சர்க்காருக்கு எடுத்துச் சொல்லி விலையை முன்கூட்டி அறிவிக்கக்கூடாது என்று அவர்களிடம் சொல்ல வேண்டும்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அவ்வாறு முன்கூட்டி விலையை தெரிவிக்காவிட்டால் நெசவாளர்கள் கஷ்டப்படுவார்கள்.

திரு. எம். எத்திராஜுலு: அந்தமாதத்தில் தெரிவிப்பதுதான் நல்லது. மேலும் இந்த சர்க்கை எற்றுமதி செய்வதற்கு சம்மந்தமில்லாதவர்களுக்குத்தான் தொழிலிலே நிறைய அனுபவம் இல்லாதவர்களுக்கும் கோட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏராளமான ஜாம்கள் வைத்திருப்பவர்களுக்குத்தான் நெசவுத் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கும் மலேயா தொழிலில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் பர்மிட் கொடுக்கவில்லை. இதற்கு என்ன காரணம்? ஹேண்டி கிராப்ட்ஸ், எக்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் போல் உள்ளவர்களுக்கும் ஆந்திராவிலிருந்து வந்து இங்கு வியாபாரம் செய்பவர்களுக்கும் தான் அதிகச் சலுகை கொடுத்து மற்றவர்களை பாதிக்கும்படியான நிலைமை இங்கு ஏற்பட்டு வருகிறது. இதிலே பல விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. இதை நன்றாகப் பரிசிலித்து புதியதாக பர்மிட் கொடுக்கும் விஷயத்தை இலாகாவில் ஏற்றுமதி ஆலோசனைக் குழுவிடம் ஒப்படைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பின் தங்கிய இனத்தவர்களின் கல்விக்காக ரூ. 5 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று மந்திரி அவர்களே கூறினார். இந்த மன்றத்தில் தான் பத்து வருடங்களாக இருந்துக்கொண்டிருக்கிறேன். நான் தொடர்ந்து எல்லோரும் முழக்கும் சலவைத் தொழிலாளர்களைப் பற்றி இங்கே அடிக்கடி பேசியிருக்கிறேன். பேசாத நாளே இருந்திருக்க முடியாது. ஒரு சில நன்மைகள் செய்துள்ள கருணை வள்ளல் ஸ்ரீ காமராஜர் அவர்களையும், முதலமைச்சர் ஸ்ரீ பக்தவத்சலம் அவர்களையும் நான் மிகப் பாராட்டுகிறேன். மிகவும் தாழ்த்தப்பட்டவர்கள் சலவைத் தொழிலாளர்கள். தாழ்த்தப்பட்ட இனத்தவர்கள் பிரிவில் இந்த சமூகத்தினர்களை மற்ற மாநிலங்களில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதேபோல் இவர்களை ஷெட்யூல்ட் காஸ்டில் இந்த மாநிலத்தில் சேர்க்காத காரணம் என்ன என்று எனக்குப் புரியவில்லை.

கனம் திரு. பி. கக்கன்: சலவைத் தொழிலாளர்கள் எல்லோரையும் ஹரிஜனங்கள் லிஸ்டில் கொண்டுவர வேண்டும் என்று கனம் அங்கத்தினர் கூறுகிறார். அது முடியாத காரியம். இவர்களை 'மோஸ்ட் பாக்வர்ட் இனாலுக்கு' அருகிலுள்ள பிரிவில் கொண்டு வரலாம்.

6th March 1965]

திரு. எம். எத்திராஜுலு: மோஸ்ட் பேக்வர்டுக்கு ஒரு சலுகையும் கிடையாது. அது வாயால் சொல்லிக்கொள்ளலாம். காரியத்தில் ஒன்றுமில்லை. கேரளா, டெல்லி, ராஜஸ்தான், மேற்கு வங்காளம், திரிபுரா, போபால் முதலிய வட ராஜ்யங்களில் இவர்களை அந்த லிஸ்டில் சேர்த்திருக்கிறார்கள். அப்படி தமிழ் நாட்டில் சேர்க்காவிட்டாலும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அளிக்கும் சமமான கல்வி உத்தியோகச் சலுகைகளையாவது இவர்களுக்கும் அளிக்க வேண்டும் என்று இந்த மன்றத்திலே பல தடவை கெஞ்சிக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அதைப் பார்த்துதான் கருணைவள்ளல் திரு. காமராஜர் அவர்கள் தைரியமாக இவர்களை தாழ்த்தப்பட்ட பட்டியலில் சேர்க்கும்படி மத்திய சர்க்காருக்கு எழுதினார். அங்கும் புறக்கணிக்கப்பட்டு விட்டது. அதைப் பார்த்த காமராஜ் அவர்கள் மத்திய சர்க்கார் சேர்க்காவிட்டாலும் ஹரிஜனங்களுக்குக் கொடுக்கும் கல்விச் சலுகையை நான் தருகிறேன் என்று ஒரு ஜி. ஓ. போட்டார். அந்த ஜி.ஓ. வந்த பிறகுதான் சலவைத் தொழிலாளர்களும், சவரத்தொழிலாளர்களும் தைரியமாகப் படிக்க முன்வந்தார்கள். ஏறக்குறைய 200, 300 பட்டதாரிகளாவது இந்த சமூகங்களில் படித்திருக்கிறார்கள். அந்த ஜி.ஓ.வையும் பார்த்து சில அதிகாரிகள் வியாக்கியானம் செய்து நிறுத்தப் பார்க்கிறார்கள். இந்த சமூகத்தினர்களுக்குக் கல்விச் சலுகை அளித்துவிட்டால் மட்டிலும் போதுமா? இவர்கள் எப்போது உத்தியோகத்தில் வருவது? இப்போது உத்தியோகமே கிடைக்காது ஏராளமானவர்கள் சுற்றி வருகிறார்கள். இந்த சமூகத்தவர்களில் நன்றாக படித்தவர்களும் இருக்கிறார்கள் இவர்களை என்றைக்கு கலெக்டர்களாகவும், எஸ். பி. களாகவும் பார்க்கப்போகிறோமோ தெரியவில்லை. இதை அரசாங்கம் பரிசிலித்து நேரடி உத்தியோகம் கொடுக்க வேண்டும். திரு. காமராஜர் முதலமைச்சராக இருந்தபோது இவர்களுடைய வாழ்க்கை நிலையை பரிசீலித்து அரசாங்கத்திற்கு ரிப்போர்ட் சமர்ப்பிக்கும்படி அவர் ஒரு லேபர் ஆபீசரை நியமித்தார். அந்த அதிகாரி மாநிலம் பூராவும் சுற்றிப்பார்த்து சர்க்காருக்கு 11 கண்ணிக்கையுள்ள சிபாரிசுகளை அனுப்பியிருக்கிறார். அந்தச் சிபாரிசுகளில் சர்க்கார் இரண்டொரு சிபாரிசுகளை ஏற்றுக்கொண்டு மற்றவைகளையெல்லாம் பூரணமாகப் பரிசீலிக்காமல் அவைகளை சம்பந்தப்பட்ட இலாகாவிற்கு அனுப்பி விட்டதாகத் தெரிகிறது. அப்படி அனுப்பினால் அது தூங்கிக்கொண்டுதான் இருக்கும். அதன் மீது இரண்டு வருடகாலமாய் நடவடிக்கை எடுக்காமல் இனிமேலா எடுக்கப் போகிறார்கள்? இனி மேலும் அலட்சியப்படுத்தாமல் எல்லா சிபார்சுகளையும் உடனடி நடவடிக்கை எடுக்க முதலமைச்சரை பணிவுடன் மன்றாடி கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து டோபிகானுக்கள் நகரசபைகளால் தான் கட்டப்பட வேண்டும் என்று சொல்லப்படுகிறது. பொதுமக்கள் அழுக்குகளை போக்க டோபிக்கானுக்கள்; சலவைத் தொழிலாளர்கள் வாழ்வதற்கல்ல. டோபிக்கானுக்கள், சுகாதாரத்திற்கும், தொத்து வியாதி பரவாமல் தடுப்பதற்கும் என்று அடிக்கடி இந்த மன்றத்தில் சொல்லியும் சுகாதார அதிகாரிகள் காதுகளில் விழவில்லை. டோபிக்கானுவைப் பற்றி அவர்களுக்கே தெரியாது. தெரியாதவர்களுக்கு குறை சொல்லி என்ன பயன்? சென்ற வருடம் டோபிக்

[திரு. எம். எத்திராஜுலு] [6th March 1965

காளுக்கள் கட்டுவதற்கென சர்க்கார் 1 லட்சம் ரூபாய் கடனுகக் கொடுப்பதற்கு முன் வந்தும் மந்த நகரசபை இதைக் கேட்டது? இதிலிருந்து நகரசபையின் பலவீனம் அபிப்பிராயமாக இருப்பதை பார்க்க வேண்டும். அவர்களிடம் டோபிகாளுக்கள் விஷயத்தை மேலும் ஒப்படைத்தால் இடம் கிடைக்கவில்லை, பணம் இல்லை, சர்க்கார் கடன் கொடுக்கவில்லை, என்ற பல்லவியையே பாடிக் கொண்டே கை விட்டு விடுவார்கள். ஆகையால் இந்தப் பொறுப்பை சக்காரே எடுத்துக்கொள்ள வேண்டும். அல்லது சுகாதார அதிகாரிகளிடம் ஒப்படைக்க வேண்டும்.

அடுத்தபடியாக, சலவையாளர்கள் தங்கள் வீடுகளில்தான் துணிகளுக்கு வெள்ளாவி வைப்பது என்று தொன்றுதொட்டு வரும் பழக்கம். அவர்கள் அவ்வாறு செய்தால் அவர்களை சுகாதார அதிகாரிகள், வெள்ளாவியினால் தொத்து வியாதி பரவுகிறது என்று கோர்ட்டுக்குக் கொண்டுபோய் தண்டிக்கிறார்கள். இது வருந்தத்தக்கது. இவ்விஷயத்தை நான் பிற்பாடு தனி கவிட்டியில் விரிவாக எடுத்து அமைச்சர் முன்னிலையில் பேசினேன். சுகாதார நிலாகா உதவி அதிகாரியும் அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்தார். அவருடனும் விவாதித்து அதைப்பற்றி மேலே பேச வேண்டாம், இனிமேல் அப்படிச் செய்ய மாட்டார்கள் என்று தீர்மானத்தை கைவிடும்படி சொன்னார்கள். தீர்மானத்தை வாபஸ் பெற்றேன். மறுபடியும் விருத்தாஜலத்தில் சென்ற மாதம் ஒரு வரை கோர்ட்டுக்கு கொண்டு போய் இருக்கிறார்கள். பின்னர் நானே சென்று வக்கீலை வைத்து வாதாடி சில காரணத்திற்காகத் தள்ளுபடி செய்யப்பட்டது என்பதை முதலமைச்சருக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

கனம் திரு. பி. கக்கன் : அட்வைஸரி கமிட்டியில் இந்தப் பிரச்சினையை கனம் உறுப்பினர் குறிப்பிட்டார். வீடுகளில் வெள்ளாவி போட்டால் பக்கத்திலுள்ள வீடுகளுக்கு அந்தக் காற்று பரவி அங்குள்ளவர்களுக்கு நோய் வரும் என்றார். எனவே தள்ளி இருக்கும் இடத்தில் வெள்ளாவி போட வேண்டும் என்றும் கனம் உறுப்பினர் சொல்கிறார்.

திரு. எம். எத்திராஜுலு : பார்பரை பார்பரையாக அவர்கள் வெள்ளாவி போடும் இடம் விடும், தோட்டம் முதலான. அழுக்குத் துணிகளை காரமுள்ள சோடாவில் பிரியப்போது எல்லா விஷ கிருமிகளும் செத்துவிடுகிறது. எப்படி மற்றவர்களுக்குத் தொத்து நோய் பரவும் என்று கேட்க விரும்புகிறேன். இது 11 லட்சம் சலவைத் தொழிலாளர்களின் பிரச்சினை. வெள்ளாவி வைப்பு போடுவதற்கு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறதா? பொதுவான இடங்களிலே பொதுமக்கள் துணிகளை வெள்ளாவியிலே போட வைத்துவிட்டு வீட்டுக்கு வந்து விடுகிறார்கள். தினமும் அருகில் இருக்கவேண்டும். வேறு இடத்தில் வெள்ளாவி வைப்பு போட்டு துணிகள் களவு போனால் யார் பொறுப்பாவார்? பாதிக்கப்பட்டவர்கள், சலவைத் தொழிலாளர்கள். இதனால் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இதை உடனே அதிகாரிகளைக்

6th March 1965] [திரு. எம். எத்திராஜுலு]

கூட்டி பரிசீலனை செய்து நிச்சயம் ஒரு முடிவுக்கு வரும்படி சுகாதார அமைச்சரையும், அரசாங்கத்தையும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். சலவைத் தொழிலாளர்களின் குடியிருக்கும் வீட்டு பிரச்னையிலும், சைதாப்பேட்டை சலவைத் தொழிலாளர்கள் கூட்டுறவு வீடு கட்டும் பிரச்னையிலும் சர்க்கார் உடனே கவனம் செலுத்த வேண்டும். அடுத்தபடியாக, சமீபத்தில் மாணவர்கள் கலவரம் நடந்தபோது நல்ல காலமாக கடலூர் பகுதியில் இருந்து வந்தேன். எந்தவிதமான அசம்பாவிதமும் அங்கு நடக்கவில்லை. இதற்காக அங்கேயுள்ள கலெக்டருக்கும் மற்றுமுள்ள சூப்பிரண்டு, டிப்டி சூப்பிரண்டு, இன்ஸ்பெக்டர் முதலியவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் சிதம்பரத்தில் கலவரம் நடந்தது. அராஜகமும் நடந்தது. இவ்வளவு அராஜகம் நடந்தும் மாணவர்களை விட்டுவிட வேண்டும் என்று சொல்லப்படுகிறது. மாணவர்கள் மீண்டும் இத்தகைய செயல்கள் செய்யாமல் இருக்கவேண்டுமானால், இந்த நாட்டை நல்லமுக எதிர் காலத்தில் ஆளக்கூடியவர்களாக மாணவர்கள் ஆக வேண்டுமானால், நான் சொல்லுவதையும் சர்க்கார் கவனிக்க வேண்டும். 1960-ம் ஆண்டுக்கு முன்பு ஒரு சமயம் நானும் அப்போதைய கல்வி அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்களும் சிதம்பரத்திற்கு ஒரு கட்டிடத் திறப்பு விழாவிற்குச் சென்றிருந்தோம். இரவு ஒரு டியாமா நடந்தது. அதன் காரணமாக அப்போது அங்கே அண்ணாமலை சர்வகலாசாலை மாணவர்களுக்கும் வார்டனுக்கும் சச்சரவு ஏற்பட்டது. இதன் காரணமாக மாணவர்கள் கலவரத்தில் நெருங்குகிறார்கள். அதற்கும் அமைச்சருக்கும் சம்பந்தமில்லை. அப்படியிருந்தும் கல்வி அமைச்சரின் காரை அவர்கள் நிறுத்தினார்கள். காரில் நானும் உட்கார்ந்து கொண்டிருந்தேன். அவர்கள் செறுப்புகளை வீசினார்கள், கல்லால் அடித்தார்கள். கல்லூரியின் கேட்டுக்களைத் தீயிட்டுக் கொளுத்தினார்கள். கல்லூரியின் கண்ணாடி கதவுகளை உடைத்தார்கள். மரங்களை வெட்டி வழியின் குறுக்கே போட்டார்கள். கல்லூரிக்குப் பெரும் நஷ்டம் ஏற்படுத்தினார்கள். அந்த சம்பவத்தைக் கட்டிய அண்ணாமலை செட்டியாரின் உருவச் சிலைக்கு தீவைத்தார்கள். இப்படிப்பட்ட காரியங்கள் பரம்பரை பரம்பரையாகச் செய்யும் மாணவர்களுக்கு நல்லதொரு பாடம் கற்பித்துத்தான் அவர்களை விடுதலை செய்ய வேண்டும். மாணவர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது என்ற சட்டத்தையும் உடனடியாகக் கொண்டுவரவேண்டும். மேலும், குண்டர் கள் சட்டம் கொண்டு வந்து அவர்களை அந்தமானுக்கு அனுப்ப வேண்டும். ஒரு தரம், இரண்டு தரம், மூன்று தரம் மன்னிக்கலாம். நான்காவது தடவையும் குற்றம் செய்தால் குண்டர்களை அந்த மானுக்கு அனுப்புவது நல்லது என்று அரசாங்கத்திற்கு யோசனை கூறுகிறேன். நான்காவது தடவையும் குற்றம் செய்தால் இங்கே யுள்ள ஜெயிலுக்கு அனுப்பி பொதுமக்கள் பணத்தை விரயம் செய்வதில் பிரயோசனம் இல்லை. உடனே அந்தமானுக்கு அனுப்பி நிரந்தரமாக இருக்கும்படி செய்வது நல்லது. அங்கேயோ விவ சாயத்திற்கு ஆட்கள் வேண்டியிருக்கிறது. எனவே குண்டர்களை அந்தமானுக்கு அனுப்புவது நல்லது என்று அரசாங்கத்திற்கு யோசனை கூறுகிறேன். பொது சொத்துக்களுக்கு நஷ்டம் ஏற்

[திரு. எம். எத்திராஜுலு] [6th March 1965

பதித்தில் அவர்கள் சொத்துக்களை பறிமுதல் செய்ய சட்டம் செய்ய வேண்டும். மேலும், மாணவர்கள் அரசியலில் ஈடுபடக் கூடாதென்று உடனடியாகச் சட்டம் கொண்டுவர வேண்டும் என்று சபாநாயகர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்த இரண்டு யோசனைகளையும் சபாநாயகரும், எதிர்க்கட்சித் தலைவர்களும் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இத்துடன் என் உரையை முடிக்கிறேன்.

• SRI A. SRINIVASA RAGHAVAN : Mr. Chairman, Sir, I rise respectfully to congratulate the Hon. the Chief Minister on the budget for 1965-66. The budget, it can be seen has been framed with an eye kept steadily on the ways and means position. That position has been easier than was anticipated during the current year, in spite of the expenditure on revenue account having risen and the increase in the outlay on the Third Plan. That is because of an additional income through our share of income-tax, of additional grant from the Centre of a little more than a crore of rupees towards Plan outlay, and of additional revenue from State taxes and from non-tax sources. But the budget for 1965-66, Sir, is framed on the assumption that the ways and means position may become difficult and on the welcome basis that no attempt need be made on that score to make that position easier through additional taxes. It is good, Sir, that we realise now and then the truth of the paradox that in trying to make a Government solvent, we may succeed in making the people bankrupt. It is a cautious budget, but it is by no means a timorous one. It is framed with care, but it is certainly not a care-taker's budget. It takes into account rightly the impressive record of our State in fulfilling the Plan targets except in agricultural production and in exceeding, through our performance every year, the initial Plan outlay. It considers rightly that this tempo must be kept up so that we may face the stupendous responsibilities and secure the great possibilities of the Fourth Plan with the strength and the pace required to do it. The provision therefore of about Rs. 78½ crores of Plan outlay for the coming year is both proper and adequate. Judging by the experience of the first four years, Sir, this provision, I must say, is not overambitious.

All the resources from the State revenues and from Central grants are to be utilised, as the budget indicates, on a balanced programme of progress. Adequate provision, it seems to me, has been made for almost every sphere of public welfare—for agriculture, animal husbandry, major and minor irrigation, and fisheries. If I may venture a suggestion, Sir, in this context, I should like to recommend the extension of the facilities secured through the Indo-Norwegian Project at Mandapam to other coastal areas in the State, particularly to the southern reaches of the Gulf of Mannar which have a long and, from the point of view of public revenue, of food, of employment potential, of foreign exchange earning, and of experienced and enterprising works, a worthy and a noble tradition in fisheries and which have, in addition, special fields like conch and pearl fisheries.

6th March 1965] [Sri A. Srinivasa Raghavan]

In the field of industries and commerce, the proposal to institute an Industrial Development Corporation seems, at first sight, welcome. It is certainly necessary to set up more large-scale industrial undertakings in our State, like the proposed Casting Mill at Arkonam and cement plant near Rajapalayam. But whether these should be, all of them, necessarily in the public sector and whether they may not, with equal or better advantage, be started in the private sector under the auspices of Governmental help and guidance, may be carefully examined. The approach to the problem of mixed economy should, as all economic thinkers in India are now agreed, be pragmatic, practical and elastic, unless we commit ourselves to being socialistic as an end in itself instead of thinking as we ought to, that all socialistic patterns are for the immediate good of the people and should be practicable, and not for the satisfaction of an abstract idelogical pattern of socialism. I venture to say this because I notice that there have been considerable losses in Government Transport Department, in the Government Cinchona Department and in the Madras Dairy and Milk Project.

Sir, as one intimately connected with education and as a teacher by profession, it warms my heart to see that a sizable sum of Rs. 37 crores has been provided in the Budget for education. Apart from the amount itself, the fact that it represents 22 per cent of the total Revenue Budget is significant. It denotes the increasing recognition of the importance of education in any scheme of national development and in any effort on our part to maintain and strengthen our democratic way of life and Government. I do not wish to enter now into minute details regarding the Government proposals on education. I should like to welcome the proposed State Institute on Education which, I hope, will be a source of inspiration and strength to all the teacher training institutions in the State and also to private organisations like the South India Teacher's Union Council of Educational Research which are doing valuable field work in assessing and formulating educational standards and methods. Recently, we have risen from the centuries-old neglect of the welfare of the teacher, and this Government's measures to increase the pay of teachers and to provide pension for them are most welcome and commendable not merely in the interests of the teachers but in those of education and the welfare of the State. Our State has been a pioneer in many ways in education and bids fair to hold that enviable position. May I, therefore, plead for a little—a very little—extension of the generosity that the Government have shown already? I am grateful that the Government are thinking of ensuring a minimum pension of Rs. 20 for a teacher. I hope that the idea would materialise soon. The Government would earn the gratitude of all teachers and would be doing only what is fair in addition if they make the same scales of pension available to all the teachers who retired after 1955 instead of as at present having two castes of teacher—pensioners. Also, it would be just to have the same age of retirement, viz., sixty, for all grades of teachers. At present, a secondary grade teacher who retires from a high school (because

he is deemed to have retired in his 55th year gets about half the pension that a secondary grade teacher who retires from an elementary school gets, because the latter can retire at sixty as per rules and the basic salary he gets at 60 is taken into account for claculating the pension and that basic salary has had the push up which the salary revision of 1960 has given it. Sir, college teachers, to which category I have the honour to belong, have been given a pension. We are thankful to the Government for that. But a Government that had recognised the difficulties of those of their employees and also of teachers who are getting salaries from Rs. 600 to Rs. 1,200 (in this they have rightly gone beyond the recommendations of the Das Commission) and who recently have been good enough to grant them dearness allowance may well think of making the pension to collegiate teachers something more than the gesture that it now is.

Sir, I shall be failing in my duty if I do not refer, however briefly, to educational policies. Education for all should be our objective but not all kinds, nor all levels of education. To have the same kind of education for everyone would be a national disaster; to throw open all levels of education to everyone who merely asks for them without regard to his equipment and his aptitude would be a national waste. We learn that the University of Madras is considering—I hope other Universities will follow—ways and means of toning up standards by prescribing higher minima of achievement on the part of students who aspire for University education. At the level of secondary education also, standards have to be rigorously graded up; and in order that this may be done, better facilities in the way of accommodation and equipment are necessary. Also, to keep pace with the industrial advancement of the country, a scientific bias has to be given to our education. Our Government have provided for all this, I believe, in the Rs. 37 crores set apart for education. I welcome particularly the provision of Rs. 186 lakhs for mid-day meals, Rs. 40 lakhs for Panchayat Board elementary school buildings, Rs. 30 lakhs for high school buildings of the old district boards and a total allocation of Rs. 11.8 crores for Secondary Education and also adequate provision under another head for scholarships, residential and non-residential, for Scheduled Castes and Backward Class students. The proposed increase in the number of the Arts and Science Colleges sponsored by the Government and the proposed Engineering College at Salem are most welcome. The great and noble experiment of free education up to the end of the secondary school course is praiseworthy. I hope, however, that free education will be an education in freedom. An attempt to secure the same rigid pattern all over the State and perhaps all over India as some persons are suggesting is, I am afraid, not a step in the right direction. It may not develop education on right lines; for education like life should ever be ready to adapt itself to changing conditions. Its progress depends on continuous experiment and healthy variety. Besides, nationalising education in the hope of stream-lining it for the present may well result in a

monstrous steam-roller that may crush not merely initiative but even the atmosphere of educational freedom which is the bulwark of democracy.

A wise and carefully planned Budget, neither too cautious nor over-ambitious, on the whole balanced—this is what is before us. But to work the projects of welfare that it implies and states, we should have an atmosphere of order and peace among the people, a faith in the objectives proposed and a determination to reach them through willing and corporate work. That atmosphere has been sadly disturbed recently and it is with the apprehension what its continuance may lead to that I refer to it. I refer, of course, to the unhappy incidents that marred the peace of our State in the last week of January and the first week of February. All of us are agreed that whatever be the justification for the agitation, the violence that resulted from it is most deplorable. The question, has been asked here in this House: 'Who is responsible for it all'? Charges and counter-charges have been flung across the table and every political group here has tried to point to another as the villain of the piece and even individuals, high-placed individuals deserving of the greatest respect, have been mentioned carelessly in this connection and even threateningly. It would be good to assess what were the contributory causes of the violence, for that might help us to avoid a recurrence of it. But the basic cause, the root cause, which started the agitation, if not the violence, was the fear in the hearts of many in our State, that the coming of Hindi what they call the imposition of Hindi might lead step by step to Hindi imperialism. As an eminent professor of Political Science—I do not like to name him—in one of our oldest universities has put it, "The real heart of the problem is that the official language of the country is the language of the Government and of the rules; it cannot be understood by the common man in any other way". It is heartening that the leaders both at the Centre and the State, men of goodwill who know the people, are working out a solution that will dissolve the legitimate fears in the hearts of the people, and that, I hope, will be accepted by all in a true spirit of compromise, and, as the learned Vice-Chancellor of the University of Madras called on us in an uplifting speech the other day on the floor of this House, in a spirit of true harmony and in the realisation of the unity of our country. Hindi which was brought in as an instrument of that unity, is now seen by many as the means of discord and division. The collective wisdom of our leaders has recognised this unfortunate situation; and English will, I hope and trust—and no one need be unhappy or ashamed it—continue to serve us in the South both as a link language and, so far as we are concerned, as our official language at the Centre. There has been, I am afraid, a little too much of generalisation on insufficient data.

MR. CHAIRMAN: The hon. Member's time is up.

SRI A. SRINIVASA RAGHAVAN: I shall finish my speech in one or two minutes. The Police—that is to say, some members of the Police Force—have employed force in certain places. That

[Sri A. Srinivasa Raghavan] [6th March 1965

is true. Their argument is that but for that, they would not have been able to maintain law and order. Those who disagree with them condemn what they call Police excesses, as though all the Police in the State were guilty of going every time beyond the powers given to them on the plea of discharging their imaginary responsibilities. Similarly, while some persons argue that students have been guilty of planned violence, others say that anti-social elements—we should not call them rowdies—are entirely to blame, and that students are absolutely blameless. The truth of the matter is that some policemen in some places—let me even grant it in a good number of places for the sake of argument—used force. Whether it is excessive, is subject to enquiry. Let us even grant it, for argument's sake, that it was excessive force. But does that mean that the whole Police force should stand condemned ? Have they not by and large done their job taking the whole State, as well as any other section of the people ?

Sir, I have been a teacher these forty years, and I have devoted my life to the youth of the land. Never in my life have I been pained as I have been during the months of January and February this year. I know our young men. Till a few years ago, you cannot easily find a more intelligent, a more hard-working, a more restrained, and a more disciplined group of young men anywhere else in the world. Times unfortunately are not what they were. During the last few years, Sir, the reputation which the South Indian student had is slowly lessening in value and strength. Students were filled with fears and righteous indignation, and were feeling frustrated. This cannot be denied. Whether they were right in their attitude or not, is a different question. Their feelings were there. These rose as one man to express what they felt, and in the enthusiasm, the idealism, and the self-sacrifice that only the young know in full, and in the frenzy that immaturity unfortunately gives rise to, some students—a handful of them—might have broken the law here and there and might have been rushed by interested parties into acts of vandalism.

MR. CHAIRMAN : Two minutes have become four minutes.

SRI A. SRINIVASA RAGHAVAN : I am sorry, Sir. I will finish in a minute. I am a new Member and I hope you will show me some indulgence.

MR. CHAIRMAN : It is pleasing to hear the choice language The hon. Member will proceed.

SRI A. SRINIVASA RAGHAVAN : The students are still our own children. They are the pledges of our future. To bring them back to their old restraint and discipline is our immediate task. That task can be achieved not by punishing a few or destroying their future, but—and I speak as one who knows the hearts of students—only through forgiveness, through affection and through absolute faith in them, however erroneous they might have been. That is the only way to bring them back and foster their faith in us.

6th March 1965] [Sri A. Srinivasa Raghavan]

Violence ! Alas, who has been responsible for it, we ask. In this country the great Valluvar commanded :

"கன்றுள் பசி காண்பாளாயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை."

Among a people with an age-long civilisation, the basis of which was summed up by the poet :

"பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க
நாகரிகர் வேண்டு பவர்."

In this sacred soil of ours where his voice went forth 2,000 years ago.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" what have we witnessed ? Tamils putting other Tamils cruelly to death in the name of Tamil, trying to paralyse civil life, and indulging in terrible acts to incendiarism on the one hand and self-immolation on the other. Schools and colleges are closed for more than one month. Some schools, the temples of learning, have been burnt. Men and women were dreading to walk in the streets. Let us feel thankful that all this nightmare has ended now. And when we ask the question, ' who is responsible for it ', let every one of us have the courage, the wisdom and humility to say, ' I am responsible ', for Sir, you and I and all the rest of us have each one a portion of the shame and a moiety of the blame. Let us say this. Let us feel it in a spirit of true sorrow and humility. Then, Sir, the atmosphere would be cleared. The budget would then be translated into a glorious piece of progress, the language question solved justly, and our State would then take its place, as a part of this land, in the van of its march forward.

I thank you, Mr. Chairman, for your indulgence.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : கனம் தலைவர் அவர்களே, இந்த வரவு செலவுத் திட்ட விவாதத்தை, அதிக உணர்ச்சிவசப் படும்படி செய்யக்கூடிய நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து இந்த மன்றத்தில் நாம் நடத்தி வருகிறோம். யார் பேரிலும், அந்த நிகழ்ச்சிகளைப் பற்றிக் குறிப்பிட விடமுடியாதபடி இருக்கிறார்கள். அதே சமயத்தில் வரவு செலவுத் திட்டத்தை அந்த நிகழ்ச்சிகள் எவ்வாறு பாதிக்கின்றன என்பதையும் எல்லோரும் எடுத்துக்காட்டுகிறார்கள். ஆனால் நான் இந்த வரவு செலவுத் திட்டத்தைப் பற்றியே பேச வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். நம் மாநிலத்தில் நம் சர்க்கார் பல வருஷங்களாக என்னென்ன நன்மைகள் செய்துவந்திருக்கிறார்கள் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் நாம் இங்கே சொல்லாமல் விட்டுவிட்டால், அது நாம் செய்ய வேண்டிய காரியத்தை நாம் செய்யாமல் விட்டுவிடுவது ஆகும் என்பது என் கருத்து. சர்க்கார் இந்த நிதி ஆண்டில் ரூ. 170 கோடி செலவுசெய்யத் திட்டமிட்டிருக்கிறார்கள்; ரூ. 164 கோடி வருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறார்கள்; சுமார் 6 கோடி ரூபாய் துண்டுவிழும் என்று நினைக்கிறார்கள். இந்தத் துண்டுத் தொகையை எப்படியும் சமாளித்துவிடலாம் என்று சர்க்கார் எதிர்பார்க்கிறார்கள். சாதாரண வியாபார அனுபவம் கொண்ட

எனக்கு இந்த ரெகார்டு நமபரை, காண்டினூ என்று பல தொழில் களாகத்தான் கருதுகிறார் Sales Tax இலாகாவின் அமைச்சர் சமாளித்துவிடலாம் என்று நினைக்கிறது. இது ஒரு 'Elastic source'. நேரம் பல்வேறுவிதமான வளர்ச்சி அடைகிறதோ அவ்வளவுக்கவ்வளவு இந்த இலாகாவிலிருந்து அதிகமான பெறமுடியும். சரியான காலத்தில் இந்த இலாகாவைத் தாங்கள் பலமும் செய்யலாம் என்பது போல நடந்துகொண்டிருக்கிறார்கள் என்ற எண்ணம் வர்த்தகர்களுக்குத் தோன்றக்கூடிய நிலைமை ஏற்பட்டது. எனவே வர்த்தகர்கள் சார்பாகப் பிரதிநிதிகள் இந்த இலாகா சம்பந்தமாகப் பலதடவை சென்றனர். என் கையிலேயே ஒரு நாள் பூராவும் விற்பனை வரி அதிகாரிகளை பேட்டி காண்பதற்காக சரியாகத் திட்டமிட்டு ஒரு அட்டவணை தயாரிப்பதற்காக என் கையிலே அந்த அட்டவணையைக் கொண்டு வந்தார். நான் அந்தப் பக்கம் வந்தபோது, அவர் சொன்னபடி தான் வந்திருப்பதாகச் சொல்லி என்னிடம் சில விவரங்களைக் கேட்டார். அவர் ஒரு வண்டி வைத்திருப்பதாகக் கூட நான் கேள்விப்பட்டேன். இந்த மாதிரி பேதங்களுக்காகச் சென்னை மாகாணங்களில் தற்காப்புக்காக அவர் அதை வைத்திருப்பதாக அறிந்தேன். வர்த்தகர்கள் தப்பும் பண்ணுகிறார்கள் என்று இந்த சபையில் அடிக்கடி சொல்லப்பட்டிருக்கிறது. தப்புப் பண்ணுபவர்கள் அதற்கென்று கணக்குகள் வைத்துக்கொள்வது கஷ்டமாக இருக்கிறது என்று கூட இந்தச்சபையில் பல தடவை சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது எடுத்திருக்கிற நடவடிக்கைகளினால் நூற்றுக்கு நூறு பேர்கள் தவறை விழிக்குப் போவதில்லை என்ற பயத்தை உண்டாக்கியிருக்கிறார்கள். அதைக் கடுமையாக இல்லாமல் கவனமாக அணுகுகிற முறையில் அதிகாரிகள் அணுகினால் நல்லது. அதுபற்றி டிபார்ட்மெண்டிற்கு ரகசியமாகச் சொல்லி வைத்தால் நன்றாக இருக்குமென்று நினைக்கிறேன். அதுமாதிரி இல்லாவிட்டால் அவர்களை எல்லாம் திருடர்கள் என்று நினைப்பதுபோல நடந்துகொள்கிறார்கள். எப்போதும் டிபார்ட்மெண்ட் விழிப்புடனே இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திடீரென்று சோதனை போடுகிறார்கள். அது கொஞ்சநாள் நின்றுவிட்டாலும் எப்போது அதிகாரிகள் என்று நிருடுகிறவர்கள் பார்த்துக்கொண்டிருப்பார்கள். அதனால் அந்த டிபார்ட்மெண்ட் எப்போதும் கண்காணிப்பாக இருந்தால் ஏய்ப்பது கடினம் கொள்கிறவர்களுக்கு சௌகரியமாக இருக்கும். வரியைப் போட்டால் விற்கிறவர்களுக்குத் தெரியும் அதை எப்படிக் கட்டவேண்டுமென்று Consumer தலையில் வைத்து அதை வசூல் செய்து கொடுத்து விடுவார்கள். கஷ்டம் ஒன்றும் இல்லை. அதனால் இந்த டிபார்ட்மெண்ட் நடத்தும் விதங்களிலெல்லாம் வர்த்தகர்கள் சங்கடப்படுகிறார்கள். அதை நாகரீகமாக கஷ்டமில்லாமல் நடத்த வேண்டுமென்று சொல்வார்களே அதுபோல சுலபமான முறையில் வேலை செய்யும்படி அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உணவுப் பிரச்னையைப்பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். நம் மாகாணத்தில் சமீப காலமாக பல திட்டங்களைப் போட்டு ஏற்பாடு Grash

programme வேறு போட்டிருக்கிறோம். ஏராளமான முயற்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன. இந்த வருஷம் நம்முடைய முதலமைச்சர் கொடுத்திருக்கிற அறிக்கையில் சர்க்கார் எவ்வளவு செய்தாலும் கூட மக்கள் ஆதரவு இல்லாவிட்டால் அந்த ஸ்கீம் சரியாக நடப்பதில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். மக்கள் எந்த முறையில் ஆதரவு கொடுக்கவில்லை, எந்தமுறையில் ஒத்துழைப்பை அவர்களிடமிருந்து எதிர்பார்க்கிறார்கள் என்று விளக்கவேண்டும். நம் உபதலைவர் அவர்கள் உட்பட ஒரு கமிட்டியை ஏற்படுத்தியிருக்கிறார்கள், உணவு உற்பத்தியை அதிகம் செய்வதற்காக. அப்படி ஆராய்ச்சி செய்தால் நல்லது. பத்து பதினைந்து வருஷங்களாக விவசாயத்தில் முன்னேற்றம் காணவேண்டுமென்று சொல்கிறார்கள். வெளி நாடுகளுக்கு எவ்வளவோ பேர்கள் போய் வருகிறார்கள். வெளிநாடுகளில் நாம் நினைத்துப் பார்க்கமுடியாத அளவில் விவசாய உற்பத்தி செய்கிறார்கள். நாம் எல்லாரிதமான முயற்சிகளை எடுத்தும் கூட்டுறவு மூலமாக கடன் முதலான வசதிகளைச் செய்தும்கூட ஓரளவுக்குமேல் உற்பத்தி செய்ய முடியவில்லை. நாம் என்னதான் திரும்பத் திரும்ப செய்தாலும் ஏக்கருக்கு ஐயாயிரம் பவுண்டுக்கு மேல் உற்பத்தி செய்யமுடியவில்லை. வெளிநாடுகளில் பத்தாயிரம் பதினாயிரம் என்று சொல்கிறார்கள் என்று கூறப்படுகிறது. அதை எப்படி அவர்கள் செய்ய முடிகிறது என்று நம் மக்களுக்குத் தெரிவிக்கும் முறையில் அந்த டிபார்ட்மெண்ட் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உணவு அமைச்சர் அவர்கள் அதற்கு வேண்டிய வழிமுறைகளைச் சொல்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உணவு எவ்வளவு உற்பத்தி செய்தாலும் சேமிப்பில் கண்காணிப்பாக இருக்கவேண்டியிருக்கிறது. எங்கள் ஊரில் உணவை சேமித்து வைப்பதற்காக கிடங்கு கட்டுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். புரொகியூர்மெண்ட் செய்யும் பொருளை நல்லமுறையில் வாங்கிச் சேகரிக்கவேண்டும். காய்ந்த பக்காக வாங்கி சேமித்தால்தான் அவை கெடாமல் இருக்கும். இல்லாவிட்டால் அடுத்தடுத்த பயிரை பாதிக்கும் நிலைமை ஏற்பட்டுவிடும். நகையால் கொள்முதல் செய்யும் போது கண்காணிப்பு அவசியமென்று கருதுகிறேன்.

கோயில் துறை சம்பந்தமாக நம்முடைய மாகாணத்தில் சென்னையைத்தவிர ஏராளமாக தொழில்கள் பெருகி வருகின்றன. சிறிய தொழில்களானாலும் பெரிய தொழில்கள் ஆனாலும் கண்காணிப்பாக இருந்தால் நம்முடைய வியாபாரம் வர்த்தகர்களிடம் நல்லபடியாக வைக்கவில்லை. சமீபத்தில் அறிக்கையில் சொல்லியிருக்கிற மாதிரி அலுமினியம் பிளாண்ட் புதிதாக வருகிறது. ராஜபாளையத்தில் சிமெண்ட் தொழிற்சாலை கட்டப்போகிறார்கள். கப்பலிங் கார்ப்பரேஷன் வைத்து ஐந்து கப்பல்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட இருக்கிறது. இரண்டு மூன்று தினங்களுக்கு முன் கேள்விப்பட்டேன் மிகப்பெரிய சிமெண்ட் தொழிற்சாலை வரப்போவதாக. ஐயாயிரம் டன் உற்பத்தி செய்வதற்கான மூலதனம் கொடுக்க மத்திய அரசாங்கம் முன்வந்திருப்பதாக அறிந்தேன். நம்முடைய மத்திய நிதி அமைச்

[திரு. எஸ். ஜெயராம செட்டியார்] [6th March 1965

சரும், தொழில் அமைச்சரும் நம் மாகாணத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பதால் எவ்வளவு தொழில் வளம் இங்கு உண்டாக்க முடியுமோ அதற்கு வேண்டிய ஊக்கத்தைக் கொடுத்து வருகிறார்கள். அடுத்து ஸ்பின்னிங் மில்கள் கொடுத்தார்கள். தனியார் துறைக்கும் ஒதுக்கியிருக்கிறார்கள். அதில் பாதிப்பேருக்கு மேல் நல்லமுறையில் செய்யமாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். தொழில் துறை அமைச்சருக்கு அந்த இன்பர்மேஷன் வந்திருக்குமென்று நினைக்கிறேன். விசேஷமான பிரயத்தனத்தில் அது நடப்பதாக நினைக்கிறேன். நம் நண்பர் பொன்னுசாமி செட்டியார் அவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்களைப் போன்றவர்களிடத்தில் அது போன்ற தொழில்களை ஒப்படைத்தால் நிச்சயமாகவே அந்தத் தொழில் வளருவதற்கு ஏதுவாக இருக்கும். அதே சமயத்தில் ராஜா முத்தையா செட்டியார் அவர்கள்கூட சொல்லியதாக கேள்விப்பட்டேன். ஸ்பைன்னிங் காம்பரேஷனுக்கு இன்னும் கொஞ்சம் பணம் கொடுத்தால் உபயோகமாக இருக்குமென்று அவர்கள் சொல்லியதாக அறிந்தேன். இப்போது காண்டி சர்டிபிகேட் கொடுப்பதைமட்டும் வைத்திருக்கிறார்கள். பணத்தை அவர்கள் முன்னாகவே கொடுக்க எற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம் முன்னாள் மாகாணத்திலுள்ள சோடு வசதிகள் எப்படியிருக்கிறதென்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் கொஞ்சம் பாதிரிகுப்பத்துக்குச் சென்று பார்க்கவேண்டும். வெளியில் போகாமலிருப்பவர்களுக்கு அது தெரியாது. வெளியில் போயிருந்தால் நிறையில் அருமை தெரியும். பங்கள் வளரிலிருந்து பத்து மைலுக்குள் சென்னை நகரத்தின் நடுவில் வந்தாலும் இப்படி மழை சட்டைகளை வருவதற்குள் மாற்றியாக வேண்டியதிருக்கும். இப்போது காளில் அங்கிருந்து வந்தால் இங்கு வந்ததும் விட்டிலிருந்து வந்ததுபோல இருக்கிறது. அவ்வளவு வசதியான சோடுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. போக்குவரத்து வசதிக்காக மண் சோடுகள் அமைக்கும்போது அவை மழைநீரால் அரித்துக் கொண்டு போகாத அளவுக்கு அமைக்கப்பட வேண்டியது அவசியம். அவை சரியான பராமரிப்பு இல்லாமல் சிதைக்கப் போகுபவர்களிடத்தில் ஒப்படைக்கப்படுகின்றன. அவற்றைப் பார்க்க நம் முடைய மந்திரியை அனுப்பி அவர்கள் கவனம் செலுத்துவார்கள் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதைத் தீவிரமாக ஆலோசித்து பஞ்சாயத்து யூனியன்கள் சோடு போடுவதற்கு பத்து சோடுகள் போட வேண்டுமானால் அந்த சோடுகளை நல்ல முறையில் போட எற்பாடு செய்வதற்கு ஏதுவாக சோடு போடும்படியான எற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார வசதியைப்பற்றி சொல்லவேண்டியதில்லை. நகர முடைய மாதிரித்திலே ஏராளமான மின்சாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு கொடுத்தாலும்கூட நிறைத்திலே இருக்கிறவர்கள் "மின்சார மைண்டி" என்னும் அளவில் மின்சாரம் இல்லாவிட்டால் ஒன்றும் செய்ய முடியாது என்று நினைக்கத் தவறிவிட்டார்கள். எல்லோரும் மின்சாரம் கேட்கிறார்கள். டிரான்ஸ்பார்மர் 10 இணைப்புகளுக்குக் கொடுத்திருந்தால், இன்னும் 5 இணைப்புகளுக்கு கேட்கிறார்கள். கொஞ்சம் டிரான்ஸ்பார்மர் பவர் ஜாஸ்தியாக வேண்டியிருக்கிறது. டிரான்ஸ்பார்மர் கிடைக்கவில்லை. அதனாலே கிராம மக்களிடத்திலே அதிருப்தி இருந்து வருகிறது. 20-25 ஆயிரம் பெட்டிஷன்கள் கொடுத்தும் காலதாமதம் ஆகியிருக்கிறது. விசேஷ மாகக் கொடுத்தால் நன்றாக இருக்குமென்று நினைக்கிறேன். மானாவாரியாக இருக்கிற பிரதேசங்களிலே கிணறுகள் கட்டி மின்சாரம் வருகிறதனாலே விவசாயம் அதிகமாக இருக்கிறது. அங்கெல்லாம் கவலைப் போட்டால் கட்டுப்படியாகவில்லை. மின்சாரம் வேண்டும் என்கிறார்கள். துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கல்வியைப்பற்றி ஓரிரண்டு வார்த்தைகள் சொல்ல ஆசைப் படுகிறேன். சீனிவாசசாகவன் அவர்கள் சொன்ன மாதிரி, ஏராளமாக 22 சதவிகிதம் என்னவோ சொன்னார்கள், கால் பாகம் கல்வி இலாகாவிற்காகச் செலவழிக்கப்படுகிறது. இங்கு முதல் அமைச்சர் அவர்கள் இல்லையே, கல்வி மந்திரி இல்லையே என்று கவலைப்படுகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கவலை வேண்டாம். அவர் கேட்டுக்கொண்டிருப்பார்.

திரு. எஸ். ஜெயராம செட்டியார்: ஹைஸ் ஸ்கூல்ஸ் ஏராளமாக ஏற்படுத்திவிட்டோம். கிராமத்திலே எங்கே வேண்டுமானாலும் 10 ஆயிரம் ரூபாய், 5 ஏக்கரா நிலம் கொடுத்த இடத்திலே எல்லாம் ஹைஸ்கூல் ஆரம்பித்து விட்டோம். ராஜா அய்யர் அவர்கள் இதைப்பற்றி ஏற்கெனவே சில அபிப்பிராயங்கள் இந்த மன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள். சில இடங்களில் கல்வி அதிகாரிகளிடத்திலே கேட்டால் பல பள்ளிகளில் பிள்ளைகளின் Strength இல்லை என்று சொல்லுகிறார்கள். இப்படி இருக்கக் காரணம் பக்கத்துப் பக்கத்திலே பள்ளிகள் இருப்பதுதான். எக்யூப்மெண்ட்டு இல்லாமல் ரொம்ப மட்ட ரகமான பள்ளிக்கூடங்களாக இவைகள் போய்க்கொண்டிருக்கின்றன. இவைகள் நல்ல முறையில் நடக்க, பிள்ளைகள் இரண்டு மைல் நடக்க வேண்டி வந்தாலும், எகனமிக் ஸ்கூலாக இருக்கிற மாதிரி அமல்கமேட் பண்ண நல்ல சூழ்நிலை இருந்தால் நல்லது. தயவு தாட்சண்யம் இல்லாமல் செய்யவேண்டும். சில பள்ளிகளில் 8 பிள்ளைகள், 7 பிள்ளைகள், சில பள்ளிகளுக்குக் கட்டிடம் இல்லாமலும், சில பள்ளிகளுக்கு சயன்ஸ் எக்யூப்மெண்டு இல்லாமல் வைத்திருப்பதைவிட இரண்டு பள்ளிகளைச் சேர்த்து ஒரு நல்ல பள்ளிக்கூடமாக இருந்தால் (அட்மாஸ்பியர்) சூழ்நிலை நன்றாக இருக்கும். சாதாரணமாக 10-20 பேர் ஒரு வகுப்பில் இருந்தால் அது சோபிக்காமல் போகிறது. நான் பல கல்வி அதிகாரிகளின் அபிப்பிராயத்தைக் கேட்டு இதைச் சொல்லுகிறேன். இதையும் கொண்டுவரவேண்டும். எட்டாவது படித்தவர்களுக்கு டிசையினிங் கொடுக்கிறார்கள். இப்போது 10-வது படித்தவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். பத்தாவது படித்தவர்களை மட்டும்தான் வாத்தியார் வேலைக்கு எடுத்துக்கொள்ளுவது என்பதாக சர்க்கார் முடிவு எடுக்க வரவேண்டும். ஹையர் டிசையினிங்கைத் தவிட்டு செகண்டரி டிசையினிங் கோர்ஸைக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

6th March 1965] [திரு. எஸ். ஜெயராம செட்டியார்]

இந்த டயர்கள் அலவன்ஸைப்பற்றி ஒரு சில வார்த்தைகள். நாம் நிதி ஒதுக்கி கொடுக்கவேண்டிய நிலையில் இருக்கிறோம். இது பெரிய பொருளாதார விஷயம். விலைவாசியைக் கட்டுப் படுத்தவேண்டும் என்று சொல்கிறார்கள். எனக்குக்கூட இந்த லிஸ்டைப் பார்க்கும்போது சங்கடமாக இருக்கிறது. இந்த பொரிகடலே சட்டினி பண்ணுவதற்கு உபயோகப்படுகிறது, இது 3 ரூபாயாகப் போய்விட்டது. உணவு அமைச்சர் 2 ஆயிரம் டன்னே பஞ்சாப் மாகாணத்திலிருந்து கொண்டுவந்து விநியோகம் பண்ண ஏற்பாடு செய்திருக்கிறார். பருப்பு விலை, உளுந்து விலை ரொம்ப ஜாஸ்தியாகத்தான் இருக்கிறது. எவ்வளவு ரூபாய் கொடுத்தாலும் கட்டுப்படியாகாமல் இருக்கிறது. உளுந்து ஒரு லிட்டர் 58 நயே பைசே விற்கிறது. துவரம் பருப்பு இந்த மாதிரி எந்தக் காலத்திலேயும் விற்கவில்லை. இப்போது குறைந்திருக்கிறது. 65 நயே பைசே ஒரு லிட்டர் துவரை. இந்த மாதிரி நிலையில் இருந்தால் எவ்வளவு பணம் கொடுத்தாலும் விலைவாசி உயர்வால் அது காணவில்லை என்று சொல்லுகிறார்கள். 150 ரூபாய் சம்பாதிக்கிற மில்லில் வேலை பார்க்கிறவர்கள் காணவில்லை என்கிறார்கள். நல்லெண்ணெய் 6 ரூபாய் விற்கிறது. எல்லோரும் கஷ்டப்படுகிறார்கள். விலைகள் குறைந்தபாடில்லை. இந்த நிலையில் நிற்கிறதற்கு ஏதாவது செய்தால், கொடுத்த டியர்னஸ் அலவன்ஸை திரும்பியே பண்ணுவார்கள். புண்ணியவான்கள் கொடுத்தார்கள் என்று சொல்லுவார்கள்.

கடைசியாக, எவ்வளவு செய்தாலும் கூட நெல்லை மாவட்டங்கள் சொன்ன மாதிரி அமைதி இல்லை என்று சொன்னால், எந்த பட்ஜெட்டும் சரிவரப் போடாத பட்ஜெட்டு மாதிரி ஆகிவிடும். நம் மாகாணத்திலே ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டு பஸ்கள் 10-15 நாட்கள் ஓடாததால் எவ்வளவு நஷ்டம் என்று பார்த்தால், கஷ்டமாக இருக்கிறது. பஸ்களை உடைத்ததைப் பார்த்தால் சங்கடமாக இருக்கிறது. ஆர்.டி.ஓ. உட்கார்ந்து கொண்டு பேசினார். ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டு பஸ் ராமநாத புரத்திற்கு 11½ மணிக்கு வருகிறது, அதன்மேல் கல் அடிக்கப் போகிறார்கள் என்று செய்தி வந்திருக்கிறது என்று சொன்னார்கள். அவர்கள் அந்த இடத்திற்குப் போவதற்கு முன்னால் பஸ்களை உடைத்துவிட்டார்கள். இந்த மாதிரிக் காரியத்தைப் பண்ணுவதினால் என்ன லாபம் என்று வியாக்கியானம் பண்ணுவதில் பிரயோசனம் கிடையாது. இந்த மாதிரிச்செய்தால் உணர்ச்சியைக் காட்டிய மாதிரி இருக்கும் என்ற பைத்தியக்கார உணர்ச்சி வந்திருக்கிறது. நம் தலைவர்கள் எல்லோரும் அதை ஊக்கிவைத்துவிட்டோம். இப்படிச் செய்வதனால் எந்தக் காரியமும் நடக்காது என்ற எண்ணத்தை பையன்களிடத்திலே, இப்படி இயக்கத்தை நடத்துகிறவர்களிடத்திலே ஏற்படுத்த வேண்டும். எதற்கும் பணிய மாட்டோம் என்ற சர்க்கார் முடிவிற்கு வந்துவிடவேண்டும். நான் கோயமுத்தூருக்குப் போனேன். பல்லடம் வழியிலே போய்க்கொண்டிருந்தபோது கோயமுத்தூர் போகாதீங்க என்று அங்கே சொன்னார்கள். ஏனய்யா என்று போலீஸை. கோயமுத்தூர் போய்ச் சேருவதற்கு முன்னாலே வழியிலே இரண்டு மூன்று இடத்திலே நிறுத்தி ராத்திரி—இந்தி ஒழிக என்று

சொல்லுங்க என்று சொல்லச் சொன்னார்கள். நான் உடனே சொல்லிவிட்டேன். 'இந்தி ஒழிக' என்று உட்னே நான் சொல்லி விட்டேன். பக்கத்தில் இருந்தவர்கள் சொன்னார்கள், 'என்ன அவ்வளவு சீக்கிரமாகச் சொல்லிவிட்டீர்கள்' என்று. முதலில் கார் போக வேண்டும், பைத்தியக்காரர்களோடு என்ன பண்ணுவது என்று சொன்னேன். கோயமுத்தூருக்குப் போனேன். அங்கே விட்டுக்காரர் 'இந்தி ஒழிக' 'தமிழ் வாழ்க' என்று பெரிய அட்டையிலே எழுதி அதை என் காரில் ஒட்டிவிட்டார்கள், அது நல்லது என்று. நான் காரியம் முடிந்து திரும்பி வரும் வழியில் என் காரை நிறுத்தி இரண்டு ரூபாய் கொடுங்கள் என்று உண்டியல் வைத்துக் கேட்டார்கள். எதற்கு என்று அவனைக் கேட்டால் பெட்ரோல் வாங்க என்று, ஓப்பனாக சொன்னார்கள். கொடுத்து வந்தோம் என்று வையுங்கள் (சிரிப்பு) எதற்குச் சொல்கிறேன் என்றால், இவ்வளவும் நடக்கிறது. மூன்று இடங்களில் கொடுத்து தாராபுரம் வருகிற போது சங்கட மாகப் போய்விட்டது வழியில் மடக்கி இந்த டெக்காய்ட்ஸ் மாதிரி கேட்கிறார்கள். இப்படிக் காலாகாலத்திலே ஊருக்குத் திரும்பி வந்துவிட்டோம். எத்தனையோ காரணங்கள் இருக்கின்றன. இந்த நிலைமை ஒன்றிரண்டு தினங்களிலே எப்படி ஏற்பட்டது என்று ஒருவருக்கும் புரியவில்லை. எனக்கு ஒன்றும் சொல்லத் தெரியவில்லை. பல சம்பவங்கள் நடந்து விட்டன. பெரியவர்கள் சொன்ன மாதிரி இனிமேல் எதிர்காலத்திலே நல்ல நிலையிலே பையன்கள் எல்லோரும் சேர்ந்து காரியங்கள் நடத்துவதற்கு அமைச்சர் அவர்களும் மற்றவர்களும், நம்முடைய Leader of the House தொழில் அமைச்சர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் சேர்ந்து ஒத்துழைக்கவேண்டும். எல்லோரும் மன்னித்துவிடுங்கள் என்று மட்டும் சொல்லிப் பிரயோசனம் இல்லை. இப்படி இனிமேல் வராமல் இருக்குமா என்ற காரண்டி இருக்க வேண்டும். மன்னித்து விடுங்கள் என்று எல்லோரும் சொல்லலாம். ஜெயராம செட்டியார்கூட மன்னித்து விடுங்கள் என்று சொன்னார் என்று சொல்லலாம். இனிமேல் இந்த மாதிரி பலாத்காரத்தில் ஈடு படமாட்டார்கள் என்ற காரண்டியை, உறுதியை ஏற்படுத்திக் கொண்டு இந்த விஷயங்களை எல்லாம் சிந்தித்து நல்ல சூழ்நிலை உண்டாக்குவதற்கு பெரியவர்கள் முயற்சிக்கவேண்டும். பெரிய வர்கள் ஸீபர்கெட்டு அண்டு ஸீபர்கிவ் என்று சொன்னார்கள். அந்த மாதிரியான சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. எஸ். ஆர். பி. பொன்னுசாமி செட்டியார்: தலைவர் அவர்களே, 1965-66 ஆவது ஆண்டு பட்ஜெட்டை நான் மனப்பூர்வ மாக வரவேற்கிறேன். நான்கு, 5 நாட்களாக இந்த சபையிலே மிக முக்கியமான இந்த பட்ஜெட் விவாதத்திலே, பட்ஜெட் வாதத்தை மறந்து, சமீபத்திலே நடந்த நிகழ்ச்சிகளிலேதான் எல்லோரும் முழு கவனம் செலுத்தி வந்தார்கள். ஆனால் இன் றைய தினம் ஒரு முக்கிய மாற்றம் காண்கிறீர்கள். பல மெம்பர்கள் உண்மையில் பட்ஜெட் விவாதத்தைப்பற்றிப் பேசினார்கள். இது கண்டு நான் சந்தோஷப்படுகிறேன். ஆனால் அதே சந்தர்ப்பத்திலே

[திரு. எஸ். ஆர். பி. பொன்னுசாமி செட்டியார்] [6th March 1965

நடந்த நிகழ்ச்சிகளை யாருமே மறக்க முடியாது தான். சமீபத்திலே நிகழ்ந்த நிகழ்ச்சிகள் நமது தமிழ் நாட்டின் சரித்திரத்திற்கே ஒரு பெரிய களங்கத்தை ஏற்படுத்திவிட்டது. இன்னும் 100, 200 வருஷங்கள் போனால் கூட இந்தக் களங்கம் மறையாது என்பது தான் என்னுடைய எண்ணம். இதற்கு யார் காரணம் என்கிற பிரச்னையை எல்லாம் விட்டு விட்டு மேற்கொண்டு அது போன்ற நிகழ்ச்சிகள் இனி தமிழ் நாட்டில் நடக்கக்கூடாது என்ற அளவுக்கு நாம் எல்லோரும் பொறுப்பு எடுத்துக் கொள்ள வேண்டும். வினை விதைத்தவன் தினையா அறுப்பான் என்று பெரியவர்கள் சொல்வார்கள். சமீபத்திலே நமது நாட்டிலே நடந்தது எதாக இருந்தாலும் சரி, அவர்கள் தங்கள் பொறுப்புகளை உணராமல் கட்சிக்கு சாதகமாகவும் மற்ற கட்சிகளுக்கு பாதகமாகவும் பேசினதனால் தான் இவ்வளவு நடந்திருக்கிறது என்பது என்னுடைய எண்ணம். நான் யார் மீதும் குற்றம் சுமத்த விரும்பவில்லை. இந்த நிலை அடியோடு மாற வேண்டும். அது மாறவில்லையென்றால் சனநாயகம் என்று சொல்லிக் கொண்டே தான் இருக்க வேண்டுமே தவிர, உண்மையில் சனநாயகத்திற்கு என்ன அர்த்தமோ அது இருக்காது, நிர்வாகமும் நடத்த முடியாது. நாட்டினுடைய பொறுப்பை ஒவ்வொருவரும் நன்றாக உணர வேண்டும். அந்த அளவுக்கு சட்ட மன்ற உறுப்பினர்களான நாம் முழுப்பொறுப்புடன் அமைதியான சூழ்நிலை வர பாடு பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இரண்டு நாட்களுக்கு முன்பு ஒத்தி வைப்புப் பிரேரணையிலேயே எதிர்க் கட்சித் தலைவர் கனம் லட்சுமணசாமி முதலியார் அவர்களும் அதற்குப் பதில் கூறுகிற முறையிலே முதலமைச்சர் அவர்களும் பேசிய பேச்சுக்களின் கருத்துக்களில், இந்த நாட்டு மக்களானாலும் சரி, மாணவ சமுதாயமாக இருந்தாலும் சரி, யாருமே கவலை கொள்ளத் தேவை இல்லை. மாணவர்கள் உரிமை பறிபோகாமல் அவர்கள் உரிமைகள் அமைதியான முறையில் காக்கப்படும் என்பதாக முதலமைச்சர் வாக்களித்திருக்கிறார்கள். பிரச்னையை எல்லாம் நன்றாகக் கவனித்து வருகிறார்கள். பிள்ளைகளும் பள்ளிகளுக்குச் சென்று தங்களுடைய கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பட்ஜெட் என்று வரும்போது நான் ஒன்று நினைவு படுத்த விரும்புகிறேன். இந்த மன்றத்திலே 3 ஆவது, 5 ஆண்டுத் திட்டம் வருகிற நேரத்திலே அன்று அந்த மெம்பர்கள் குறை சொல்லியும் விடாமல் 350 கோடி ரூபாய்க்கு திட்டமிட்டு இருந்தோம். மத்திய ஆசிலே உள்ள பிளானிங் கமிஷன் 291 கோடி ரூபாய்தான் என்று குறைத்து விட்டார்கள். ஆனால் இன்றைய தினம் 3 வது 5 ஆண்டுத் திட்டம் 250 கோடி ரூபாய்க்குத் தான் திட்டம் தீட்டியது, ஆனால் திட்ட முடிவிலே திட்டத்துக்கு மேல் 50 கோடி ரூபாய் அதிகமாகச் செலவு செய்யக் கூடிய நிலையில் இருக்கிறோம். இதற்காக உண்மையில் அரசாங்கத்தை நான் பாராட்டுகிறேன். தீட்டிய திட்டப்படி அந்தத் திட்டத் தொகைக்கு மேலாக, ஒழுங்கான முறையிலே அமைதியாக காரியங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட சில ராஜ்யங்களிலே சென்னை முன் அணியில் நிற்கிறது என்பதைக் காண தமிழ் நாட்டை

6th March 1965] [திரு. எஸ். ஆர். பி. பொன்னுசாமி செட்டியார்]

டைச் சேர்ந்த நாம் அனைவரும் உண்மையிலேயே மிகவும் மகிழ்ச்சி அடையவேண்டும். அதை யாரும் மறுக்க முடியாது. இன்றைய தினம் அகில இந்திய ரீதியிலே எடுத்துப் பார்த்தால் தேசத்தின் எந்தப் பகுதியிலேயும் சென்று பார்த்தால், தமிழ் நாட்டினைச் சேர்ந்தவன் என்று சொன்னால், ஒரு தனிப்பட்ட மரியாதையோடு கேட்கிறார்கள். "உங்கள் ராஜ்யம் ஒழுங்காக, அமைதியான முறையிலே செயல்படுகிறது" என்று. எல்லாத் துறையிலும் வேகமாக முன்னேறி வருகிறோம். எனக்கு முன்பு பேசிய ஜெயராம் செட்டியார் அவர்கள் சொன்னார்கள். தொழில் துறையிலே நம் நாடு வெகு வேகமாக முன்னேறி வருகிறது என்று. உண்மை. யாரும் அதை மறுக்க முடியாது. 10, 15 வருஷங்களுக்கு முன்பு தமிழ் நாட்டிலே எதாவது தொழில் ஆரம்பிக்க வேண்டுமென்றால் அதற்கு மூலப் பொருள் எங்கே இருக்கிறது என்று கேட்டு வந்தார்கள். மின்சார வெட்டு வருஷா வருஷம் இருக்கிறதே எப்படி தொழில் செய்ய முடியும் என்றெல்லாம் கேட்டார்கள். அந்த நிலை எல்லாம் இப்போது மாறிவிட்டது. இத்தகைய பெரிய முன்னேற்றத்திற்குக் காரணமாக இருப்பவர் நமது மதிப்பிற்குரிய தொழில் அமைச்சர் கனம் வெங்கட்டராமன் அவர்கள். அவர்களுக்கு வெளி நாடுகளில் எல்லாம் நல்ல மதிப்பு இருக்கிறது. "ஏதாவது கூட்டுச் சேர்ந்து தொழில்கள் நடத்த தகுந்த இடம் எது என்று இந்தியா பூராவிலும் சுற்றிப் பார்த்தால் சென்னைக்குத் தான் வர வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்குத் தோன்றுகிறது" என்று வெளி ராஜ்யங்களில் உள்ளவர்கள் சொல்வதை நான் கேட்டிருக்கிறேன். இந்த ராஜ்யம் தொழில் துறையில் சிறந்த முறையில் முன்னேறியிருக்கிறது. இந்தத் துறையில் ராஜ்யத்தில் சில பகுதிகள் மாத்திரம் வளர்ச்சி அடைந்துவிட்டால் போதாது, எல்லாப் பகுதிகளும் வளர்ச்சி அடைய வேண்டும். இந்த வளர்ச்சியினால் அந்தந்தப் பகுதி மக்களுக்கு நிறைய வேலை வாய்ப்புக்கள் கிடைக்க வேண்டும், வாழ்க்கை வசதிகள் பெருக வேண்டும். இன்று எல்லாப் பகுதிகளிலும் தொழில்கள் பரவலாக வளர்ந்து வருகின்றன. இதே வளர்ச்சி தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்று நான் நாமெல்லோரும் விரும்புகிறோம். தொழில் துறையில் நாம் அகில இந்திய ரீதியில் ஆன்றாவது ஸ்தானத்தில் இருக்கிறோம். இன்னும் 10-15 ஆண்டுகளில் நம் ராஜ்யம் மற்ற எல்லா ராஜ்யங்களையும் விட முதன்மையான ஸ்தானத்தைப் பெற்றுவிடும் என்பதில் சந்தேகமில்லை. இப்போது ஓரிரண்டு ராஜ்யங்கள் நம் ராஜ்யத்தைவிட அதிக வளர்ச்சி பெற்றதாக இருக்கிறதென்றால், அந்த வளர்ச்சி ஆங்கிலேயர்கள் காலத்திலிருந்தே ஏற்பட்டது ஆகும். எனவே தான் அவை முதலாவது அல்லது இரண்டாவது ஸ்தானத்தில் இருக்கின்றன. இன்னும் பத்து ஆண்டுகளில் தமிழ்நாடு தான் அகில இந்திய ரீதியில் தலை நிமிர்ந்து நிற்க முடியும் என்று நான் சந்தேகமில்லாமல் சொல்ல முடியும். தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கக்கூடிய முறையில் இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் கார்ப்பொரேஷன் அமைந்திருப்பதை நான் வரவேற்கிறேன். கலியார் துறையில் இருப்பவர்கள் அரசாங்கத் துறையில் தொழில்கள் அமைவதை விரும்புவதில்லை

DEPUTY CHAIRMAN : The hon. Member's time is up.

திரு. எஸ். ஆர். பி. பொன்னுசாமி செட்டியார்: நான் பேச வேண்டிய 'பாயிண்டுகள்' இன்னும் பல இருக்கின்றன.

டெபுடி சேர்மன்: சீக்கிரம் பேசுங்கள். ஒரே பாயிண்டைப் பற்றி மீண்டும் மீண்டும் பேச வேண்டாம்.

திரு. எஸ். ஆர். பி. பொன்னுசாமி செட்டியார்: மக்களுக்கு வேலை வாய்ப்புகளுக்கு வகை செய்ய பல தொழில்களை வளர்க்க வேண்டும்.

அடுத்தபடியாக, அடுத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 1,040 மெகவாட் மின்சாரம் உற்பத்தித் திறனைப் பெற வேண்டும் என்பது நமது குறிக்கோளாகும் என்று திட்டவட்டமாகச் சொல்லப்பட்டுள்ளதை நான் வரவேற்கிறேன். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குத் திட்டக்குழு 5 லட்சம் டன் இலோவாட் மின்சாரம் தேவைப்படும். இப்போது உற்பத்தி குறைவாக இருப்பதால், இப்போதிருந்தே திட்டமிட்டு புதிய தொழில் நிலையங்களை அமைக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன். இந்த விஷயத்தில் உடனடியாகத் திட்டமிட்டால் தான் தொழில் வளர்ச்சி பெருகும்.

உணவுப் பிரச்னை மிகவும் முக்கியமான பிரச்னை. சென்ற அக்டோபர் மாதத்தில் இருந்த எதிர்பாராத உணவுப் பற்றாக்குறை நிலைமையை யாரும் மறக்க முடியாது. அப்போது மிகவும் கஷ்டப்பட்டோம். அந்தக் கஷ்டம் போய் இப்போது எவ்வளவோ நல்ல நிலையில் இருக்கிறோம். மறுபடியும் 'லீன் மந்த்ஸ்' ஆகிய அக்டோபர், நவம்பர் வரும். அரசாங்கம் முன்பு ஏற்பட்ட பற்றாக்குறை நிலைமையை மனதில் கொண்டு செய்ய வேண்டியதை யெல்லாம் ஜாக்கிரதையாகச் செய்துகொண்டிருக்கிறார்கள். இருந்தாலும், இன்னும் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று சர்க்காரை வற்புறுத்த விரும்புகிறேன். இந்த வருஷம் நாம் 60 லட்சம் டன் உணவு உற்பத்தி எதிர்பார்க்கிறோம். இந்த 60 லட்சம் டன்னில் உபரி கிடைக்கும் என்று நான் நினைக்கிறேன். அந்த உபரியை 'லீன் மந்த்ஸை' சமாளிப்பதற்காக 'பஃபர் ஸ்டாக்காக' வைத்திருக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். முன்பு போல பற்றாக்குறை ஏற்பட்டால் இருப்பதற்காக அப்படிச் செய்ய வேண்டும். நெருக்கடி காலங்களில் குறைந்த விலையில் உணவு தானியம் வாங்க விரும்புகிறவர்களுக்கு நியாய விலைக் கடைகள் மூலம் அந்த உபரி தானியத்தைக் கொடுக்கலாம். பாக்கியுள்ள கட்டுப்பாடுகளை நீக்க முடியுமா என்று பரிசீலனை செய்யும்படி அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். நீக்குவதால் கஷ்டம் வருமானாலும் கண்மூடிக்கொண்டு நீக்கிவிட வேண்டும் என்று நான் சொல்லவில்லை. கண்மூடிக்கண் இல்லாவிட்டாலும் நிலைமையைச் சமாளிக்க முடியும் என்ற நம்பிக்கை சர்க்காருக்கு இருக்குமானால், கண்மூடிக்கண் திறந்திட வேண்டும் என்றுதான் நான் சொல்கிறேன். எப்படியாவது, நாம் கண்மூடிக்கண் திறப்பதற்குள் மக்கள் பிழைத்துக் கொள்ள வேண்டும். சில இடங்களில் பற்றாக்குறை விரும்புகிறவர்களுக்கு முழுங்கல் அரிசியும், வேறு சில இடங்களில் முழுங்கல் அரிசியை

விரும்புபவர்களுக்கு பச்சரிசியும் கிடைக்கிறது என்று மக்கள் சொல்லுகிறார்கள். மக்கள் கட்டுத்திட்டத்தை விரும்பவில்லை என்பதைத் தான் இது காட்டுகிறது. எனவே கண்ட்ரோல்களை எடுப்பதற்கான பரிசீலனையை அரசாங்கம் செய்ய வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இரண்டு நாட்களுக்கு முன், கேள்வி நேரத்தில் கைத்தறி நெசவாளர்களுக்கு எந்த வகையிலும் பாதகமில்லாதபடி தான் விசைத் தறிகள் கொண்டு வரப்படும் என்று கனம் தொழில் அமைச்சர் சொன்னார். அதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். எத்தக் காரணத்தாலும் கைத்தறி நெசவாளர்களுக்கு பாதகம் செய்யக்கூடாது. அகில இந்திய ரீதியில் ஜனத்தொகை விகிதப்படி நமக்கு விசைத்தறிகளில் பங்கு கிடைக்கும் என்று அவர் சொன்னார். இதுபற்றி கொஞ்சம் புனராலோசனை செய்ய வேண்டும் என்று நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். இப்போது ஏற்கெனவே பல இடங்களில் விசைத்தறிகள் அதிகமாகி இருக்கின்றன. அகில இந்திய ரீதியில் தமிழ்நாட்டில்தான் கைத்தறிகள் அதிகம் என்று அசோக் மேத்தா கமிட்டி ரிப்போர்ட்டில் திட்டவட்டமாகக் கூறப்பட்டிருக்கிறது. கைத்தறிகளை மாற்றுவதற்காகவே விசைத் தறிகள் கொண்டுவரப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அப்படியானால் கைத்தறியாளர்களுக்குத்தான் இதில் முதல் உரிமை உண்டு. மேலும் தமிழ்நாட்டிலுள்ள விசைக் கைத்தறிகள் அடிப்படையில் விசைத்தறிகள் கொடுக்கப்பட்டால் தமிழ் நாட்டுக்கு விசைத்தறிகள் இன்னும் அதிகமாக வரும். இதைத் தான் நான் விரும்புகிறேன். கனம் அமைச்சருக்கு இதுபற்றிய நிலைமை நன்றாகத் தெரியும்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இன்னும் ஜாஸ்தி விசைத் தறிகள் வருகின்றன என்றால் ஒருவேளை கைத்தறியாளர்கள் பயப்படுவார்களோ என்னவோ.

திரு. எஸ். ஆர். பி. பொன்னுசாமி செட்டியார்: கைத்தறி நெசவாளர்களுக்கு எந்த வகையிலும் பாதகம் ஏற்படாதபடி விசைத் தறிகள் வர வேண்டும் என்று நான் முதலிலேயே சொன்னேன். முழு விசைத்தறி வேண்டாம் என்று சொன்னவர்கள் கூட இப்போது விசைத்தறி வேண்டுமென்று கேட்கிறார்கள். இப்போதுள்ள நிலைமையைப் பார்த்தால், நான்காவது அல்லது ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில்தான் இங்கே அதிகமான விசைத்தறிகள் வரக்கூடும் என்று தோன்றுகிறது. நான் பேசுகிற கணக்கு இருபதாயிரம் வரும். அது நான்கைந்து வருஷங்களுக்குத் தொடர்ந்து வரும். அதனால் அந்தத் தொழில் பாதிக்குமென்று நினைக்கவில்லை. பலருக்கு முன்பு பெரிய நண்பர்கள் விலைவாசி ஏற்றத்தால் வாழ்க்கை வசதிகள் குறைந்துவிட்டன என்று குறிப்பிட்டார்கள். கைத்தறி நெசவாளர்கள் எவ்வளவு காலத்திற்குக் குறைந்த வருமானத்தை வைத்துக்கொண்டு வாழமுடியும்? அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயரவேண்டாமா? விசைத்தறிகள் வந்தால் தானே அவர்கள் வாழ்க்கையை ஓரளவு உயர்த்திக் கொள்ள முடியும்? ஆகையால் விசைத்தறி வருவது தவறு இல்லை என்று கருதுகிறேன். இந்த பட்ஜெட்டில் திட்டவட்டமாகக் குறிப்

[திரு. எஸ். ஆர். பி. பொன்னுசாமி செட்டியார்] [6th March 1965

பிட்டிருக்கிறார்கள். நகரப் புறங்களில் இருக்கிற பருத்திகளுக்குக் குடிநீர் வசதிக்குப் பணம் ஒதுக்கி இருக்கிறார்கள். பொதுவாக இந்த சபையில் பலமுறையில் பேசியிருக்கிறேன். நான் பேசியது மாத்திரம் அல்ல. ராஜ்யத்தில் எந்தப் பகுதியில் இருக்கிறவர்களைக் கேட்டாலும் கோயமுத்தூர்காரன் என்று சொன்னாலே தண்ணீர் இல்லே என்று பிரச்னை வந்துவிடும். அவ்வளவுதான் அவர்களும் அமைச்சர் அவர்களும் சிரிக்கிறார்கள். சிரிப்பதில் தவறில்லே. பலகாலமாக சிறுவாணியைக் கட்டி முடிக்கவேண்டுமென்று முயற்சி செய்து வருகிறோம். பக்கத்தில் வரும்போல இருந்தது. சென்ற ஜூலை, பிப்ரவரி மாதத்தில் அடிக்கல் நாட்டி விழா நடந்து அந்த வருஷமே திட்டம் முடியுமென்று நினைத்தோம். அதையும் காணவில்லே. வளருகிற நகரம் கோயமுத்தூர். தொழில் துறையில் வேகமாக வளருகிற நகரம். ஒரு லட்சமாக இருந்த மக்கள் தொகை நான்கு லட்சமாக வளர்ந்து விட்டது. இன்னும் காணவில்லே.

டெபுடி சேர்மன் : கோவை எலக்ஷன் முடிந்துவிட்டது. இனி மேல் வரும்.

திரு. எஸ். ஆர். பி. பொன்னுசாமி செட்டியார் : எப்போதும் வெயில் காலத்தில் கொஞ்சம் கஷ்டமாக இருந்தாலும் கூட சென்ற வருஷத்தைப்போல கஷ்டம் கோவை நகரம் என்றுமே கண்டதில்லே. தாய்மார்கள் குடங்களே வைத்துக்கொண்டு விதி விதியாக அலைந்ததை என் வாழ்க்கையில் பார்த்ததேயில்லே. Peak summer வந்தால் கஷ்டமாகத்தான் இருக்கும். சென்ற வருஷம் இரண்டரை மாதங்கள் அந்தக் கஷ்டம் பொறுக்கமுடியாமல் இருந்தது. அதனால் அரசாங்கத்தை மிகவும் மன்றுடிக் கேட்டுக் கொள்கிறேன். உடனடியாக அந்தக் கஷ்டத்தை நிவர்த்தி செய்யவேண்டுமென்று வற்புறுத்திச்சொல்ல ஆசைப்படுகிறேன். பொதுவாக இந்த பட்ஜெட்டைப் பொறுத்தவரையில், மனப்பூர்வமாக வரவேற்கிறேன். அரசாங்க ஊழியர்களுக்கு, போலீசாருக்கு டி.ஏ. உயர்த்திக் கொடுத்திருக்கிறோம். அதை வரவேற்கிறேன். சிலபேர்கள் கொஞ்சம் பொறுத்துக் கொடுத்திருக்கலாமென்று சொல்கிறார்கள். உடனடியாகச் செய்வதுதான் நல்லது. அரசாங்கம் அப்படி உடனடியாகச் செய்ததை நான் வரவேற்கிறேன். கடைசியாக முதலமைச்சர் அவர்களுடைய அறிக்கையில் உள்ளதை நாம் பாராட்டி, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு மீண்டும் நம்மை அர்ப்பணம் செய்யக்கூடிய மனோதிடத்தை ஊட்டுகிற தொன்றுவதற்கு நாம் அனைவரும் பாடுபட வேண்டுமென்று சொல்லிக் கொண்டு என் வார்த்தைகளே முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளே** : கனம் தலைவர் அவர்களே, இம்மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் 1965-66-ம் ஆண்டு வரவு-செலவுத்திட்டம் புதிய வரி விதிப்பு இல்லாத புதுமையுடையது. ஆசிரியர்கள் உட்பட அரசு ஊழியர்கள் அனைவருக்கும் படி உயர்வும் அளிக்கப் பட்டிருக்கிறது. இந்த இரண்டு அம்சங்களும் வரவேற்கத் தக்கன. முதல் அம்சத்தைப் பொறுத்தவரையில் இனி எந்த வரியும் போடமுடியாததால் ஏற்பட்டது. போடவேண்டிய

[திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளே] [6th March 1965

வரிகள் எல்லாம் மத்திய அரசினுல் போட்டாகிவிட்டது. இருந்தாலும் பொருளாதார நிபுணர்கள் நினைத்தால் இன்னும் போட்டு விடுவார்கள் என்றுதான் நினைக்கிறேன். முடியாது என்று இப்போது சொல்லிவிட்டோம். போட்டுப்பாருங்கள் என்றால் அவர்கள் போட்டுவிடுவார்கள். அதற்கு முனையாமல் இருந்ததற்கு நான் நன்றி செலுத்தவேண்டியதுதான்.

திரு. கே. பாலசுப்ரமணிய அய்யர் : எதையாவது குறைக்கச் சொல்லுங்களேன்.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளே : அடுத்தாற்போல, கல்வித் துறைக்கு பெரிய இனச் செலவில் 22 சத விகிதம், அதாவது 37 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது வரவேற்கத் தக்கது. அவ்வாறு பெரும் தொகை கல்வித் துறைக்கு ஒதுக்கப்பட்டிருந்தும் ஆசிரியர்கள் முழுவதும் குறிப்பாக கன்னியாகுமரி மாவட்ட ஆசிரியர்கள் இன்னும் பெரும் தொல்லேக்கு ஆளாக்கப் பட்டிருப்பது வருந்தத்தக்கது. 37 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தும் அவர்களுடைய குறைகள் தீர்க்கப்பட வேண்டுமென்று இந்த மன்றத்தில் அமைச்சர் அவர்களேக் கேட்டுக்கொள்கிறேன். அவற்றிற்கு எடுத்துக்காட்டாக கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்தோடு இணைந்து எட்டு ஆண்டுகள் முடிந்து ஒன்பதாம் ஆண்டு ஆரம்பித்துவிட்டது. அங்கே உள்ள ஆசிரியர்களில் பெரும் பகுதியினர் சம்பளத்தில் அதிகமாகப் பெற்றுவிட்டதாகவும் அதை திரும்பப் பெற அரசாங்கம் நடவடிக்கை எடுத்து அதுபற்றி அவர்கள் அரசாங்கத்திடம் முறையிட்டு தற்காலிகத் தடையை வேண்டிக்கொண்டிருக்கின்ற நிலேயில் இருக்கிறார்கள். அவைகளில் உள்ள குறைகளே ஒவ்வொன்றாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1960-ம் வருஷம் ஜூன் 1-ந் தேதியில் நிர்ணயம் செய்யப்பட்ட சம்பள விகிதப்படி திருவிதாங்கூர் கொச்சி நாட்டிலிருந்து தமிழகத்திற்கு மாற்றப்பட்ட ஒரு பட்டதாரி ஆசிரியர் 1960-ல் பத்து வருஷ அனுபவம் உடையவர் என்று வைத்துக் கொண்டால் அவர்களுடைய சம்பளம் ரூ. 160 ஆக நிர்ணயம் செய்யப்பட்டது. அதே நேரத்தில் மற்ற மாவட்டங்களில் அதே கல்வி யோக்யதாம்சம் உள்ள ஒரு பட்டதாரி ஆசிரியர் 1960-ம் வருஷம் ஜூன் 1-ந் தேதியில் பத்து வருஷம் சர்வீஸ் உள்ளவருக்கு ரூ. 200 நிர்ணயம் செய்யப்பட்டது. அவ்வாறு ரூ. 40 வேறுபாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஆசிரியர்கள், திருவிதாங்கூர் கொச்சியிலிருந்து மாற்றப்பட்டதால் நூற்றுக்கணக்கானவர்கள் குறைவான சம்பள விகித நிர்ணயத்திற்கு உள்ளானார்கள். அதனால் ஏற்பட்ட விளைவு என்னவென்றால் 1964-ம் வருஷம் ஜூன் 1-ந் தேதியில் கொடுக்கப்பட்ட படி உயர்வில்—சம்பள உயர்வு அல்ல—ரூ. 160 நிர்ணயம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு ரூ. 5 கிடைத்தது. அதே வேலே, அதே கல்வி, அதே சர்வீஸ் உள்ள மற்ற மாவட்டத்திலுள்ளவர்களுக்கு ரூ. 200 என்று நிர்ணயம் செய்யப்பட்டு அவர்களுக்கு ரூ. 10 சம்பள உயர்வு கிடைத்தது. எடுத்துக் காட்டாக 1960-ல் நிர்ணயம் செய்யப்பட்ட பத்து வருட வேலே அனுபவமுள்ள பட்டதாரி ஆசிரியரைச் சொன்னேன். 1960-ல் சம்பள நிர்ணயம் செய்யப்பட்ட y revision கமிஷன் படி சம்பளம்

[திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை] [6th March 1965

நிர்ணயம் செய்யப்பட்ட 5 முதல் 20 வருஷ அனுபவமுள்ள கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நாற்றுக்கணக்கான ஆசிரியர்கள் திருவிதாங்கூர்-கொச்சியிலிருந்து மாற்றப்பட்டதால் தாம் தாழ்ந்த நிர்ணயம் செய்யப்பட்டார்கள். இதனை நானும் பல தடவை கூறியிருக்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மக்கள் பிரதிநிதிகள், ஆசிரியர் சங்கங்கள் இதை முறையிட்டதுமுண்டு. கடந்த இரண்டு மூன்று திங்களாக அவர்கள் அதிகாரிகளை சம்பளம் வாங்கிவிட்டார்கள் என்றும் அதை வசூல் செய்யப் போகிறோம் என்றும் நடவடிக்கையைத் தெரிவித்தியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு 1964-ம் வருஷம் அக்டோபர் மாதம் 8-ந் தேதியில் மிகத் தெளிவாக இக்குறை களைக் குறிப்பிட்டு அது தர்மம் ஆகுமா? சட்டப்படி நியாயமாகுமா? என்று கேட்டு ஆறு பக்கங்கள் கொண்ட மகஜர் ஒன்றைத் தயாரித்து அமைச்சருக்கு அனுப்பிவைத்தேன். 1964-ம் வருஷம் அக்டோபர் மாதம் 14-ந் தேதி வரை ஒன்றும் பதிலில்லாததால் அப்போது நினைவூட்டல் ஒன்று அனுப்பிவைத்தேன். இன்னும் அதற்கு நடவடிக்கை நடந்துகொண்டிருக்கிறது. ஆசிரியர்கள் கொதிப்படைந்து இருக்கிறார்கள். அரசாங்கத்தினுடைய அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு அதைக்கொண்டு வர விரும்புகிறேன். அடுத்தாற் போல சென்னைக் கல்விச் சட்டம் எர்.டி.ஆர். என்று சொல்வார்களே அதில் உள்ள விதிகள் 13, 138 படி ஒரு பட்டதாரி ஆசிரியர், பி.ஏ., பி.எஸ்.சி., பி.டி., படித்திருந்தால் பட்டதாரி ஆசிரியராக நியமிக்கப்படுவார்கள். குறித்த காலத்திற்குப் பிறகு அந்த வேலை உறுதி செய்யப்படும். அதற்குப் பிறகு அவர்களுக்கு சம்பள உயர்வு (increments) சென்றுகொண்டே யிருக்கலாம். இது தனியார் பள்ளிகளிலும் கழகப் பள்ளிகளிலும் நடைபெறுகிறது. இந்தச் சூழ்நிலையில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள எழாயிரம் ஆசிரியர்களில் பெரும்பாலோர் அரசாங்கப் பள்ளி ஆசிரியர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டம் 1956 நவம்பர் 1-ம் தேதி இணைந்தபோது எற்படுத்திய ராஜ்ய புனரமைப்புச் சட்டப்படி அங்கிருந்து மாற்றப்படும் ஆசிரியர்களாக இருந்தாலும் அரசாங்க ஊழியர்களாக இருந்தாலும் என்ன தகுதியில், சம்பளத்தில், இருந்தாலும் எந்தக் கல்வி யோக்கியதாம்சம் வைத்துக்கொள்ளப்பட்டதோ அதே நிலையில் வைத்துக்கொள்ளப்பட வேண்டுமென்றுதான் ராஜ்ய புனரமைப்புச் சட்டத்தின் விதியில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். அந்த நிலையில் இங்கே சலுகைகளைப் பெற்ற கடமைப்பட்டவர்கள் அவர்கள். ஆனால் 1956-ல் இந்தப் பகுதியில் இணைக்கிறபோது கோள பய்லிச் சர்வீஸ் கமிஷனில் 56 ஆசிரியர்களை அரசாங்க பட்டதாரி ஆசிரியர்களாக நியமிக்க ஒரு பட்டியல் தயாரிக்கப்பட்டது. அந்த நேரத்தில் உடனடியாக ஆசிரியர்களை நியமிக்க வேண்டியதாக இருந்தது. அதிலிருந்து சென்னை அரசாங்கம் ஆசிரியர்களை நியமித்தது.

இந்த ஆசிரியர்கள் அங்கிருந்து மாற்றப்பட்ட ஆசிரியர்கள். T.C. அனுப்புவது, டிஸ்டேட்டிலிருந்து மாற்றப்பட்டவர்கள். அவர்களுக்கு அங்குள்ள சலுகையோடு அவர்கள் 1956-இல் இங்கு

6th March 1965] [திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை]

நியமிக்கப்பட்டார்கள். நியமிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்கு அப்பால் ஒன்றிரண்டு இன்க்ரிமெண்டு-சம்பள உயர்வும் பெற்றார்கள். பிறகு 1962-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 25-ந் தேதியில் அவர்களுக்கு இந்த அரசாங்கத்திலிருந்து ஒரு உத்திரவு வருகிறது. உங்களை இதுவரை உறுதிப்படுத்தவில்லை, கன்ஃபர்ம் பண்ணவில்லை என்று 6 ஆண்டுகளுக்கு அப்பால் வருகிறது. பி.ஏ., பி.எஸ்.சி., படித்தவர்கள் இவர்கள் தேர்வுகள் பாஸாகவில்லை, அதனால் உறுதிப்படுத்தவில்லை என்று அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. அதோடு 25-9-1964-க்குள் தேர்வுகளிலே வெற்றி பெறுவிட்டால் வேலையிலிருந்து நிறுத்து விடப்படுவீர்கள் என்று அறிவிக்கப்பட்டது. நான் கூறுகிறேன். அவர்கள் டி.எஸ்.ஸலாட்டில் என்பதை 18-8-1960-இல் வெளியான சென்னை 1315 ஜி.ஓ. விலே, அந்த அரசாங்கச் சட்டத்திலே 56 ஆசிரியர்களும் உள்ளனர். அலாட்டில் என்று குறிப்பிட்டிருந்தது. டிஸ்டேட்டிலே இந்தத் தேர்வுகள் தேர்ச்சி வேண்டிய தேவையில்லை. ஆசிரியராக நியமிக்கப்படுவதற்கோ அல்லது உறுதிப்படுத்துவதற்கோ தேவையில்லை. இந்த நிலையில் அவர்களுக்கு இது தேவையில்லை என்பதைத்தான் நாம் தெரிந்து கொள்ளவேண்டும். அதற்கு மாறாக அவர்களுக்கு உத்திரவு வந்திருக்கிறது. உத்திரவு வந்தது மட்டுமல்ல. இந்த மாதிரி அடிக்கடி வரும். இதெல்லாம் சாதாரணம் என்று அவர்கள் இருந்தார்கள். இப்போது என்ன நடக்கிறது என்றால் நீங்கள் வாங்கிய சம்பள உயர்வையெல்லாம் சர்க்கார் பிடிக்க இருக்கிறது என்று மீண்டும் உத்திரவு வந்து அதிகச் சம்பளங்களை வசூல் செய்கின்ற நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது. இது வருந்தத் தக்க செய்தி என்று நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். அங்குள்ள கனியார் பள்ளிகளிலே ஒரு ஆசிரியருக்கு ஹெட்மாஸ்டராக மற்ற டிபார்ட்மெண்டு டெஸ்டு கோருகிறார்கள் என்றும் ஆசிரியர்களை கன்ஃபர்ம் செய்ய டிபார்ட்மெண்டு டெஸ்டு தேவையில்லை, வேலையை உறுதிப்படுத்துவதற்கு டிபார்ட்மெண்டு டெஸ்டு தேவையில்லை, என்று கூறுகிறார்போது இவர்கள் வேலைகளை உறுதிப்படுத்துவதற்கு இவர்களுக்கு டெஸ்டு தேவை என்ற அவல நிலைமைக்கு இவர்கள் உள்ளாக்கப் பட்டிருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்திலே டி.எஸ்.ஸ்டேட்டிலிருந்து மாற்றப்பட்ட ஆசிரியர்கள் அதாவது 19-20 ஆண்டு வேலை அனுபவம் உடையவர்கள் தலைமை ஆசிரியர்களாகப் பணியாற்றிவருகிறார்கள். ஆயிரம் மாணவர்களுக்குமேல் இருக்கின்ற உயர் நிலைப்பள்ளிகளிலே அவர்கள் தலைமை ஆசிரியர்களாக இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தலைமை ஆசிரியர்களுக்குள்ள சம்பளத்தைப் பெறவில்லை. அவர்கள் செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக 140-250 கிரேடில் தான் அந்த வேலையைப் பார்க்கிறார்கள். கனியார் பள்ளிகளிலே கழகப் பள்ளிகளிலே, 5 ஆண்டு அனுபவம் பெற்ற ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாகவும் 250-350 சம்பள விகிதத்திலே தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள் இந்த 20 ஆண்டு அனுபவம் உள்ள தலைமை ஆசிரியர்களோடு ஒப்பிடும் 140-250 சம்பள விகிதத்தில் தலைமை ஆசிரியர்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிற அவல நிலைமையைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். அரசாங்கப் பள்ளி ஆசிரியர்கள் இடையே

[திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை] [6th March 1965

2 : 1 என்ற ரேஷியோவிலே முதல் கிரேடு ஆசிரியர்களாக மாற்றும் முறை உண்டு. தலைமை ஆசிரியர்களாக இருந்தாலும் இவ்வளவு இவர்கள் 250-550 ரூபாய் ஸ்கேலில் இருப்பார்கள் என்ற விதி இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்த விதி அமுல் நடத்தப்படவில்லை. அவ்வாறு முதல் கிரேடு ஆசிரியர்களாக்கப்பட்டால், இந்த மாதிரி தலைமை ஆசிரியர்களாக இருக்கிறவர்கள் முதல் கிரேடு ஆசிரியர்களில் எத்துவிடுவார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் டிஎல். பிஎஸ்ஸி படித்திருந்து வந்த பல தமிழ் ஆசிரியர்கள் இருக்கிறார்கள். இவர்கள் அங்கு வித்துவான் எஸ்எஸ்எல்சி. ஆசிரியர் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். இவர்களைத் தனி சம்பள விகிதத்திலே வைக்கிறார்கள். அதற்குரிய காரணம் "நீங்கள் கேரளப் பல்கலைக் கழக வித்துவான்களோடு சேர்ந்தவர்கள். சென்னைப் பல்கலைக் கழக வித்துவான்களோடு சேர்ந்தவர்களுக்குத் தான் முதல் தர தமிழ் ஆசிரியர் சம்பள விகிதம்" என்று கூறுகிறார்கள். அதாவது கேரள பல்கலைக் கழக வித்துவானை சேர்ந்த முதல் கிரேடு தமிழ் ஆசிரியர்களுக்கு ரூ. 125-175. சென்னைப் பல்கலைக் கழக வித்துவான் முதல் கிரேடு தமிழ் ஆசிரியர் களுக்கு ரூ. 140-250. அது மட்டுமல்ல; இவர்கள் கூடுதல் சம்பளம் வாங்கியவர்கள் என்ற நிலையிலே பலரிடமிருந்து சம்பளம் திருப்பி வசூலிக்கப்படுகிறது. இரண்டாவது ஆண்டுகள் அந்தப் பகுதியிலே வேலை பார்த்தவர்கள் இங்கு இணைவதற்கு முன்னால் 10 ஆண்டுகள் தமிழ் ஆசிரியர்களாக இருந்தவர்கள் அந்த கிரேடில் சம்பளம் பெற்றவர்கள் அவர்களிடமிருந்து சம்பளம் திருப்பிப் பெற நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இரண்டு நாட்களுக்கு முன்பு கல்வி இலாகா துணை டைரக்டர் ஒரு ஆசிரியரை அழைத்துக் கொண்டு சென்று அவரிடமிருந்து தவறுகளை எடுத்துச் சொல்லச் சொல்லி அவர் மூலம் விண்ணப்பமும் கொடுத்திருக்கிறேன். இந்த நிலை இருக்கிறது. கிறிஸ்தவ பல்கலைக்கழகப் பட்டத்தையும், முகம்மதிய பல்கலைக்கழகப் பட்டத்தையும் எடுத்துக்கொள்ளுகிற இந்தப் பல்கலைக்கழகப் பட்டத்திற்கு மதிப்பு இழப்பு என்ன வந்துவிட்டது என்றால், அவர்கள் மதவாரியாகப் பார்த்தவர்கள். இப்போது நான் தமிழ் மொழிக் கல்வி என்று சொல்லுகிறார். அங்கு கேரளாவில் இயற்கையிலேயே கூட தமிழ் மொழி படிக்க வைத்திருக்கிறார்கள். ஒரு மொழி கூடுதலாகப் படிப்பதற்கு கூடுதலாகச் சம்பளம் கொடுக்க வேண்டும் என்பதால் கேரளஜி கெளிக்கார்கள் இதனை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இன்னொரு காரணம் சொல்லுகிறார்கள். அங்கிருக்கிற வித்துவானுக்கு இரண்டாண்டு படிப்பு என்று இங்கிருக்கிற வித்துவானுக்கு நான்கு ஆண்டுகள் என்று. கேரளப் பல்கலைக் கழகத்திலே வித்துவான் வகுப்பு கிடையாது. அங்கு ஆசிரியர்களாக இருக்கிறவர்கள் க்ளியாக எழுதி வெற்றி பெற்றுக் கொள்ளலாம். கேரளத்தில் இரண்டு ஆண்டுகள் தான் படிக்கிறார்கள் என்பதற்காக இந்த நிலையைத் தளர்த்துவிடக் கூடாது என்று அரசாங்கத்தை வேண்டிக்கொள்ளுகிறேன். நாங்கள் கேரளத்துடன் இருக்கிறபோது அங்கே தமிழ் மொழியில் தமிழ் மையர் என்ற வகுப்பு இருந்தது. 9-வது வகுப்பு என்று சொல்லுவார்கள். தமிழின் மேல் எவ்வளவு அக்கறை அவர்கள் வைத்திருந்தார்கள் என்பதை இந்தச் சட்டமன்றம் தெரிந்து கொள்ளவேண்டும். நாங்கள் கேரளத்தோடு இருந்தும் தாயகத்தோடு இணைய வேண்டும், தமிழகத்தோடு ஒன்றுக இருக்க வேண்டும் என்று போராடி வந்தவர்கள் நாங்கள். நீங்கள் படை யெடுத்துப் பிடித்தவர்கள் அல்ல என்று இந்தச் சபையிலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். நாங்கள் போராடி வந்து சேர்ந்தவர்கள். தமிழ் வையர் என்று வகுப்பு வைத்தார்கள். அவர்களை செகண்டரி கிரேடு ஆசிரியர் பயிற்சிக்கு அனுப்பி வைத்தார்கள். செகண்டரி ஆசிரியராகவும், தலைமை ஆசிரியராகவும் வேலை பார்த்தார்கள். இங்கே இணைந்த பிறகு அவர்களுக்கு செகண்டரி கிரேடு தர முடியாது. 9-வது வகுப்பு இங்குள்ள முன்றாவது பாரத்திற்குச் சமம். ஆதலால் எலிமெண்டரி கிரேடு தான் தர முடியும். எலிமெண்டரி கிரேடு ஆசிரியர்களாகத் தான் கருத முடியும் என்பார்கள். சட்டத்திலே என்ன விதி என்றால் அவர்கள் அங்கு எந்த அந்தஸ்தோடு இருந்தார்களோ அந்த அந்தஸ்தை இங்கே அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பது. இதை இங்கே சர்க்கார் சம்பளம் வாங்கும் அதிகாரிகள் புரிந்து கொள்ளவில்லை. அதனால் 4 பேர் சென்னை உயர்நீதி மன்றத்திலே தொடர்ந்து, வழக்கு தொடுத்து, பாதவன் பிள்ளை இவர்கள் நால்வரும் கட்டப் போட்டு வெற்றி பெற்று அந்த நிலையிலே இருக்கிறார்கள். இந்த வெற்றிக்குப் பிறகும் ஆசிரியர்களுக்கு இந்த அதிகாரிகள் அந்த நிலையைக் கொடுக்க மறுக்கிறார்கள். கேட்டால் நீயும் கட்டுக்குப்போ என்று அதிகாரிகள் சொல்லுகிறார்கள். கட்டுக்குப்போய் ஆயிரம் ரூபாய் கொடுத்துத்தான் வழக்கை அமுல் நடத்த வேண்டிய நிலைக்கு சில அதிகாரிகள் தள்ளுகிறார்கள். இது என்ன ஆட்சி என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். டிஎல்லிலே இருக்கிறபோது எஸ்எஸ்எல்சி. வெற்றி பெற்றவருக்கு அந்த 35 மார்க்கு ஆங்கிலத்தில் இருந்தால் பட்டம் சர்டிபிகேட் தேர்வு எழுதலாம். இங்கு 40 மார்க்கு வேண்டும் என்று இருக்கிறது. T.C. S.S.L.C. தேர்வு பெற்ற செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக இருக்கிறவர்களை இந்த 40 மார்க்குப் பெறுவதற்கு கல்வியில் பண்ணுமல் இருக்கிறார்கள். அவர்கள் டிஎல்-இல் பட்டம் சர்டிபிகேட் தேர்வு எழுதுவதற்கு என்ன அனுமதி கொடுக்கிறார்களோ அதை இவர்கள் விஷயத்தில் நாம் அமுல் நடத்த வேண்டும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஆசிரியர்கள் பிரச்சினை இன்னும் நிறைய இருக்கிறது. நேரம் இல்லாததால் விட்டு விடுகிறேன்.

அடுத்தாற்போல, இந்த பட்ஜெட்டில் உணவு உற்பத்திக்கு அதிகத் தொகை ஒதுக்கியிருக்கிறார்கள். விவசாயிகளுக்கெல்லாம் உரம் கொடுப்பது, புது ரக விதைகள் கொடுப்பது என்றெல்லாம் இருக்கிறது. எல்லாம் இருந்தும் உணவு உற்பத்தி செய்கிற விவசாயிகள் உற்பத்தி செய்கிற மனநிலைக்கு வசதி இருக்கிறதா என்றால் இல்லை என்பது என்னுடைய கருத்து. உற்பத்திச் செய்தவன் தான் உற்பத்தி செய்த நெல்லைக் கொண்டு போக முடியாது. இந்த சர்க்காரின் அலட்சியத்திற்கு நான் இரண்டறியும் ஒரு தீர்மானம் கொண்டு வந்தேன். அந்த நெல்லை குத்திக் கொண்டு போகும்போது பறிமுதல், 25 பக்கா 20 பக்கா நெல்லை Notified.

6th March 1965] [திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை]

[திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை] [6th March 1965

ரியாவுக்குள் கொண்டுபோகும்போது பறி முதல். அங்குள்ள அதிகாரிகள் காரியம் உங்கள் கவனத்திற்கு வராமல் தடக்குமென்றால் இது என்ன ஆட்சி என்று எனக்குத் தெரியவில்லை. யார் தவறு செய்தாலும், அதற்கு நீங்கள்தான் பொறுப்பு. நாங்கள் இல்லை என்று சொல்லுவதில் பயன் இல்லை. நீங்கள் பொறுப்பை ஏற்றுக் கொள்ளவேண்டும். செக் போஸ்டிலே தடை செய்யும் தடியில் மோதுண்டு படுகாயம் பட்ட தகவல் ஏதும் வரவில்லை என்று சொன்னார்கள். அப்படியானால் ஃபாதர் மில்லாடி அவர்கள் எப்படி ஆஸ்பத்திரியில் இருக்கிறார்கள்? இந்த விவரத்தை வைத்து சித்தித்துத் தெரிந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

என்னைப்பற்றி குறிப்பிட்டதால் என்னைப்பற்றி ஒரு வார்த்தை குறிப்பிடுகிறேன். நான் தேர்ந்தெடுக்கப்பட்டது சுயேச்சையாகத் தான். பிறகு காங்கிரஸில் சேர்ந்து சட்டசபை கட்சியில் சேரமலும் போட்டேன். இரண்டு மாதங்களுக்கு முன் நடந்த கட்சி கூட்டத்திற்கு அழைப்பு வந்தது. எனவே கட்சியில் சேர்ந்ததாக நினைத்து அதிலிருந்து ராஜினாமா செய்தேன். காங்கிரஸில் சேராமல் விலகிவிட்டேன் என்று இந்த சபையில் அம்மையார் அவர்கள் சொன்னார்கள். இது வரையில் சேர்க்காமல் இருப்பதற்கு என் நன்றி இதனை சபையில் தெரிவித்த அம்மையார் அவர்களுக்கு நன்றி.

***திரு. எஸ். பி. கே. ஏ. இலட்சுமணன் செட்டியார்** : தலைவர் அவர்களே, 1965-66-ம் ஆண்டு பட்ஜெட்டை ஆதரிக்கும் முகத்தான் சில விஷயங்களைச் சொல்ல நான் ஆசைப்படுகிறேன்.

முக்கியமாக நாம் இப்போது கவனிப்பது அதிக உணவு உற்பத்தியையும் விவசாயத்தையும்தான். இதற்காக நமது சர்க்கார் எவ்வளவோ செய்து வருகிறது. இருப்பினும் நாம் அதில் இன்னும் சேர்த்துக் கொள்ள வேண்டிய சில யோசனைகள் இருக்கின்றன.

நாட்டிலே உணவு விலை, உணவு தானிய விலைகள் பற்றி இருப்பதன் காரணமாக எங்கு பார்த்தாலும் விலைபொருள் தானியத்துக்குத் தருந்த விலை கொடுக்க அஞ்சுகிறார்கள். லேபர் அண்ட் வேஜஸ் என்ற அடிப்படையிலே பார்த்தால் இப்போது கொடுக்கும் விலை அதிகம் என்று சொல்வதற்கு இல்லை. அது விவசாயம் பண்ணிப் பார்த்தாலே புரியும். வேஜஸ் அடிப்படையில் பார்த்தால் மூட்டைக்கு சுமார் 5 முதல் 6 ரூபாய் வரை நஷ்டம் வரக் கூடிய நிலை இருக்கிறது. காபிடல், லேபர் அண்டு வேஜஸ் என்ற அடிப் படையில் சொல்லவில்லை. லேபர், வேஜஸ் அடிப்படையிலேயே சொல்கிறேன். கட்டுப்படியாகவில்லை.

விவசாயத்திற்கு முக்கியமானது நீர்ப்பாசனம். ஒரு போகத்தை இரு போகமாக்க மதுரை ராமநாதபுரம் ஜில்லாவிலே பெரியார் நீர்ப்பாசன உதவியைக் கொண்டு முயற்சி செய்கிறார்கள். நான் ஒன்று சொல்லிக் கொள்கிறேன். இரு போக நீர்ப்பாசன

6th March 1965]

[திரு. எஸ். பி. கே. ஏ. இலட்சுமணன் செட்டியார்]

வசதியினால் உற்பத்தி அதிகம் பெருகி விடாது. மதுரை ஜில்லா வுக்குப் பக்கத்திலே உள்ள ஒரு போகத்திற்கு தண்ணீர் பற்றாக் குறையாக இருக்கக் கூடிய நிலங்கள் இருக்கின்றன. நீர்ப்பாசன வசதி கிடைக்கக்கூடிய நிலைமை இருப்பதால், ஒரு போக நீர்ப் பாசன வசதி பூர்த்தியாக கிட்டும் முறையிலே பெரியார் நீர்ப் பாசன வசதியை அண்மையில் இருக்கிற நிலங்களுக்கு விஸ்தரிப்பது நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக ராமநாதபுரம் சிவகெங்கை சீமைகளிலே பெரியார் நீர்ப்பாசனம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. சுமார் 6,000 ஏக்கர் களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே ஷில்டு மூலம் சுமார் 2,500 ஏக்கர் நீர்ப்பாசனம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த நீர்ப்பாசன வசதி குறிப்பாக குறிச்சி கண்மாய் தலைப்பிலிருந்து மடை வைத்து அந்த ஷில்டுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கண்மாய் சுமார் 350 ஏக்கர் நீர்ப்பாசனத்துக்கு உரியது. ஆகவே அதை பெருக்கப்பட்டு தண்ணீர் வழிந்து போக கால காமதமாகுவதால் ஷில்டு கால்வாய்க்கு குறிப்பிட்ட காலத்தில் தண்ணீர் விடுவது வழக்கமாக பின் தங்கி விடுகிறது. இந்த இடைஞ்சலைத் தவிர்க்க சுமார் 150 அடி மேற்கேயுள்ள மேல நந்தினி சுமார் பத்து பதினைந்து ஏக்கர் வேளாண்மை செய்யக் கூடிய கண்மாய். இதை நீர்ப்பாசன ஹெட்டாக வைத்துக் கொண்டால், சுமார் 5, 6 மணி நேரத்தில் அந்தக் கண்மாய்க்கு பெருகி தண்ணீர் போக வசதி இருக்கிறது. அதைச் செய்ய வேண்டுமென்ற திட்டம் சுமார் 3, 4 வருஷங்களுக்கு முன்னாலேயே எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த விவரத்தை கனம் உணவு அமைச்சருக்கு லெட்டர் மூலம் தெரிவித்திருந்ததில், அதை கவனிப்பதாக பதில் வந்து இருக் கிறது. எனவே இந்த மேல நந்தினி கண்மாய் மூலம் தண்ணீர் பாய்ச்சும் ஏற்பாடு செய்தால் அது விவசாயத்திற்கு காலா காலத்தில் உதவியாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தண்ணீர் பாய்ச்சுகிற விஷயத்திலே கடந்த 1962-63, 1963-64 வருடங்களிலே, அதைப் பற்றிக் கலந்து பேசுவதற்காக ஜில்லா வளவிலே நீர்ப்பாசன வசதியை கவனிக்க ஒரு இர்ரிகேஷன் கமிட்டி இருந்தது. 1963-64, 1964-65-யிலே கமிட்டி கலைந்து விட்ட தனால் அது செயல்படவில்லை. அந்தக் கமிட்டி இருக்கிற வரை யிலே எந்த விதமான தடங்கலும் இல்லாமல் தண்ணீர் சேதம் இல்லாமல் இருந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டிலாவது அந்த இர்ரிகேஷன் கமிட்டியை செயல் பட வைக்க வேண்டுமென்று நான் உணவு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். சிவகெங்கை தாலுகாவில் மழை அவ் வப்போது இரண்டொரு நாட்கள் தான் பெய்கிறது. எனவே நாம் இருக்கும்போதே விதைக்கவோ உழவோ செய்ய வசதி இல்லை. அதன் காரணமாக கடந்த இரண்டு, மூன்று ஆண்டு களாக அங்கே புஞ்சை வெள்ளாமையே இல்லாததால் அரிசி யல்லாத மற்ற தானியங்களின் விலைகள் மிக அதிகமாக உயர்ந்து வருகின்றன. 15 ரூபாய்க்கு அரிசி வாங்கி விருந்து வைக்க

[திரு. எஸ். பி. கே. எ. இலட்சுமணன் செட்டியார்]

முற்படும்போது, காய்கறி, பருப்பு ஆகியவைகளுக்கு ஆகும் செலவையெல்லாம் பார்த்தால் மொத்தச் செலவு சுமார் 100 ரூபாய் ஆகிறது. எனவே உழவை காலா காலத்தில் தட்டிக் கழிக்காமல் விவசாய இலாகாவில் 2-3 மிஷைக் கலப்பைகள் வைத்திருந்தால் நன்றாக இருக்கும். பொலி காளைக்கு மேல்வைரவ பஞ்சாயத்து யூனியனிலும் ஒரு ஐந்தாண்டு திட்ட காலத்துக்கு 25 ரூபாய் செலவழிக்கப்படுகிறது. இப்போது செயற்கைக் கருத்தரிப்பு முறையில் பால் தரும் கன்றுகள் பிறக்க வழிவகை செய்வதால், பொதி மாடுகளுக்குச் செலவழிக்கும் தொகையை டிராக்டர் கருக்குப் பயன்படுத்தலாம். இதைப் பஞ்சாயத்து யூனியன் மூலம் செய்யலாம். உரம் போடப்பட்ட நிலங்களில் சொம்ப நன்றாக 25-30 சதவிகிதம் அதிகமாக உற்பத்தி செய்ய முடிகிறது. உரத்தை கலையெடுத்தவுடன் போட்டால் தான் பலன் இருக்கும். அந்தக் காலத்தில் உரம் கொடுக்கும்படி செய்ய வேண்டும். இதற்கு எற்பாடு செய்யும் முறையில் இந்த ஆண்டு காலுகாக்களில் உரத்தை ஸ்டோர் பண்ணி வைத்தால் இந்த ஆண்டு நல்ல பலன் கிடைக்கும்.

மின்சாரத்தைப் பொறுத்த வரையில், விவசாயத்திற்கு இடைஞ்சல் இல்லாதபடி மின்சார சப்ளை கிடைக்கிறது. ஆனால் ஒரு நாள் அதிகமாக மின்சாரம் உபயோகித்தால் கூட அதிக டெபாஸிட் கேட்கப்படுகிறது. எப்போதாவது ஒரு நாள் தான் கல்யாணம் வரும். அப்போது அதிக மின்சாரம் உபயோகிக்கப் படும். அதேபோல வெயில் காலங்களில் எப்போதாவது சில நாட்கள் தான் அதிகம் தண்ணீர் இறைக்க வேண்டியதிருக்கும். இந்த மாதிரி சமயங்களில் அதிக டெபாஸிட் கேட்பது சரியல்ல. வருவ சராசரியாக எவ்வளவு மின்சாரம் உபயோகிக்கப்படுகிறது என்பதை கவனிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, ஷோரவேய்ஸ் இலாகா சம்பந்தமாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். காளையார்கோவிலிருந்து பக்கத்தில் மறவர்-தெரண்டி ரோடு மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. ஆகவே அந்த ரோடை இந்த வருஷம் அவசியம் 'பிளாக் டாப்' செய்ய வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

கல்வி துறையில் சர்க்கார் கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவழித்து வருகிறார்கள். கிராமந்தோறும் பைஸ்கூல்கள் ஏற்பட்டு வருகின்றன. அவசியமான விஞ்ஞானக் கருவிகளைப் பள்ளிக் கூடங்களுக்குக் கொடுக்க வேண்டிய அவசியத்தைப்பற்றி கல்வித் துறையில் நல்ல அனுபவமுள்ளவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தக் கருவிகளைப் புதிதாக அமைக்கப்பட்ட பள்ளிகளுக்கு உடனடியாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

*** திருமதி டி. எல். திருபுரசுந்தரி** : கனம் உப தலைவர் அவர்களே, அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வு கொடுப்பதுடன் புது வரிகளும் எதுவுமில்லாமல் தயாரிக்கப்பட்டிருக்கும் இந்த

பட்ஜெட்டை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. இப்படிப் பட்ட பட்ஜெட்டைத் தயாரித்துள்ள கனம் மந்திரி அவர்களை மனப்பூர்வமாக பாராட்டுகிறேன். சமீபத்தில் பல தீய சக்திகள் தமிழ்நாட்டைப் பெருமளவில் பாதித்திருக்கின்றன. அதன் காரணமாக தமிழ்நாடு பெருமளவில் சேதமடைந்திருக்கிறது. இந்தச் சேதங்களை விளைவித்தவர்கள் தமிழ்நாட்டின் பண்பையும் தமிழ் நாட்டுக்கு திருத்துவந்த பெரும் பெருமையையும் கெடுத்து விட்டார்கள் என்றே சொல்லலாம். இதை நினைக்க, நினைக்க மனம் மிருந்த வேதனை அடைகிறது. இனிமேல் எப்போர்ப்பட்ட கஷ்டங்கள் வந்தாலும் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்யாமல் திருப்பதற்காவ நல்ல புத்தியையும் நல்ல உள்ளத்தையும் மக்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை நாம் வேண்ட வேண்டும். கல்விக்காக நமது கனம் முதல் அமைச்சர் ரூ. 37 கோடி தாராளமாக ஒதுக்கியிருக்கிறார். நம் இந்திய நாட்டு மக்கள் நன்றாகப் படித்தவர்களாக இருக்க வேண்டும் என்ற பரந்த நோக்கத்துடன் அவர் அவ்வாறு செய்திருக்கிறார். சமீபத்தில் ஏற்பட்ட கலவரங்கள் காரணமாக, அந்தப் பணத்தைச் சரியா உபயோகப்படுத்த முடியுமா என்ற சந்தேகம் எற்பட்டிருக்கிறது. மறைந்துவிட்ட நமது நேருஜி அவர்கள் தமது பிறந்த நாளை குழந்தைகள் தினமாகக் கொண்டாட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். வருங் காலத்தில் நாட்டை ஆளக்கூடிய இன்றையக் குழந்தைகள் நல்ல பண்பு உள்ளவர்களாகவும் உன்னதமான உள்ளமுள்ளவர்களாகவும் ஆக வேண்டும் என்ற எண்ணத்துடன் அவர் அவ்வாறு சொல்லியிருக்கிறார். நம் நாட்டு மாணவர்கள் நேருஜி அவர்களின் எண்ணத்திற்கேற்றவாறு பணியைச் செய்யாமல் அதற்குமாறுக செய்திருக்கிறார்கள் என்று கூற ஆசைப்படுகிறேன். ஏனெனில் அவர்கள்தான் வருங்காலத்தை உருவாக்கக்கூடியவர்கள். அவர்கள் நல்ல முறையில் இருக்கவேண்டும் என்னதான் நமக்கு பெரிய கல்வி வந்தாலும் பெருமை வேண்டும். பெரியவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பார்த்துக்கொள்ளட்டும் என்று இருந்திருக்கவேண்டும். முடியாவிட்டால் என்றாவது ஒரு சாந்தமான முறையில் நடந்திருக்கலாம். மகாத்மா காந்தி அடிகள் பெரிய சுதந்திரத்தை வாங்கிக் கொடுத்தார்களா என்றால் அவர்கள் எதைக் கொடுத்திருக்கிறார்கள்? எந்த ஒரு சிறிய உயிருக்கும் கூட ஒரு விதமான கஷ்டமில்லாமல் வெள்ளைக்காரரை விரட்டியடித்தார் என்றால் அந்த சுதந்திர நாட்டில் வாழ்கிற நாம் அதைக் கடைப் பிடித்து நடக்கவேண்டும். உண்ணாவிரதம் இருக்கலாம். சாந்த மான முறையில் ஊர்வலம் வரலாம். இதையெல்லாம் கடைப் பிடித்து இருந்தால் இவ்வளவு பெரிய கஷ்டமெல்லாம் வந்திருக்காது. எனக்கு முன்பு பேசிய சகோதரர் ஜெயராம செட்டியார் அவர்கள் பேசினார்கள். மாணவர்கள் எவ்வளவோ கஷ்டப்படுத்தியிருக்கிறார்கள். மாணவர்கள் மட்டும் அல்ல. எதோ ஒரு சக்தி அவர்களை தூண்டிவிட்டது. இப்போது குண்டர்கள் என்று சொல்கிறார்களே அவர்கள் சேர்ந்து அனைத்தையும் செய்துவிட்டார்கள். மாணவர்கள் நன்றாக யோசனை செய்திருக்கவேண்டும். இப் போது யாருக்கு நஷ்டம்? நாங்கள் வெளியூர் நகரில் இருக்கிறோம்.

[திருமதி டி. எல். திருபுரசுந்தரி] [6th March 1965

அமிஞ்சிக்கரைக்குப் பக்கம் பச்சையப்பன் கல்லூரிக்கு எதிரில் பல்லைக் கொளுத்தினார்கள். பல லட்சம் நமக்குத்தான் நஷ்டம். போல்ட் ஆபீசைக் கொளுத்தினார்கள். மறுநாள் போய் நாம் தானே அங்கே கார்டு கொடுங்கள் என்று கேட்கிறோம். அவர்கள் எங்கே இருந்து கார்டு கொடுப்பார்கள்? ரயிலே சேதப்படுத்தியிருக்கிறார்கள். இப்போது ஒரு மைலுக்கு ரூபாய்க்கு பத்து காசு அதிகப் படுத்தியிருக்கிறார்கள். யார் கொடுப்பது? மந்திரிகளா அவர்கள் வீட்டிலிருந்து கொண்டுவந்து கொடுக்கமுடியும்? பொது மக்களிடமிருந்துதான் அதையெல்லாம் வாங்கவேண்டும். இதையெல்லாம் மாணவர்கள் நினைத்துப் பார்க்காமல் தவறான முறையில் நடந்து விட்டார்கள். இனிமேல் 8-ம் தேதி கல்லூரிகளும் பள்ளிகளும் திறந்தால், மாணவர்கள் நல்லமுறையில் போய் நடந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆஸ்பத்திரிகளைப்பற்றிக் கொஞ்சம் சொல்ல ஆசைப்படுகிறேன். ஆஸ்பத்திரியில் ஏழைகளுக்குத்தான் நான் எல்லாம் ஏற்பாடு செய்திருக்கிறேன். ஆனால் ஏழைகளுக்கு மருந்து கொடுப்பதோ ஆபரேஷன் செய்வதோ நல்லமுறையில் நடப்பதில்லை. பணம் கொடுத்தால் தான் நல்லமுறையில் சிகிச்சை அளிக்கிறார்கள். அந்த நிலைமை மாற வேண்டும். நாம் செலவு செய்து ஏழைகளுக்கு ஆஸ்பத்திரி கட்டி வைத்திருக்கிறோம். அதை சரியாகக் கவனிக்க அரசாங்கம் கண்காணிப்பாக இருக்க வேண்டும். அதுமட்டுமல்ல, வெளியிலிருந்து சில பேர் கொஞ்சம் டேஞ்சரான நிலையில் சென்னைக்குப்போய் ஜெனரல் ஆஸ்பத்திரியில் சேர்த்தால் நல்லது என்ற நினைப்பில் வருகிறார்கள். சிலர் விவரம் தெரிந்தவர்கள் வரும்போது அங்குள்ள காசில்தாரிடம் ஒருமானம் குறித்து வாங்கி வருகிறார்கள். சிலபேர் தெரியாமல் அவசரத்தில் வருகிறார்கள். வந்தால் அங்கு இருக்கிறவர்கள் நீங்கள் போய் சர்டிபிகேட் வாங்கி வாருங்கள், இல்லாவிட்டால் சேர்க்கமுடியாது என்று சொல்லிவிடுகிறார்கள். அவசரமான நிலையில் இருக்கிற நோயாளியை விட்டுவிட்டு அவர் கூட வந்திருக்கும் தந்தையோ, தாயாரையோ, மகனையோ, கணவனையோ ஊருக்குத் திரும்பப் போய் வாங்கி வருவதற்கு முடியுமா என்பதை சிந்திக்கவேண்டும். ஏதாவது ஒன்று போனதில் இப்படியாகிவிட்டதே என்று அவர்கள் மனம் எவ்வளவு பாடுபடும்? அதற்கு விடக்கூடாது.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: சார், அந்த மாதிரி செய்வது இல்லை. முதலில் அட்மிட் செய்துவிட்டு பிறகு வரானத்தைச் சொல்லும்போது அதன்பேரில் ஏதாவது சந்தேகம் ஏற்பட்டால் சர்டிபிகேட் கேட்பார்கள். வருகிறவர்கள் ஏழைகளாக இருந்தாலும் பணக்காரர்களாக இருந்தாலும் முதலில் அட்மிட் செய்து விடுவார்கள்.

As a general principle, instructions have already been issued that at the time of admission no doctor shall insist on the income certificate.

6th March 1965]

திருமதி டி. எல். திருபுரசுந்தரி: அப்படிச் செய்தால் அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இது மாதிரி செய்வதாகக் கேள்விப்பட்டேன். அதுதான் கேட்டேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இதுமாதிரி தப்பாக வெல்லாம் சொல்லிவிடுவார்கள்.

திருமதி டி.எல். திருபுரசுந்தரி: பஸ் ஸ்டாண்டைப்பற்றிச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஷெனாய் நகரில் பஸ் ஸ்டாண்டு மிகவும் அவசியம். குழந்தைகள் பள்ளிக்குப் போகிறார்கள். செகரட்டேரியட்டிற்கும் ஊழியர்கள் வருகிறார்கள். பஸ் ஸ்டாண்டு அங்கிருப்பது நல்லது. கார்ப்பரேஷனுக்கு எவ்வளவோ செய்கிறோம். அரசாங்கத்திற்கு எவ்வளவோ விசேஷமான அதிகாரம் இருக்கின்றது. அந்த மனையை நாம் வாங்கி மாம்பலம், மந்தவெளி போன்ற இடங்களிலுள்ள பஸ் ஸ்டாண்டைப்போல நல்லமுறையில் அங்கு அமைக்கவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். ஷெனாய் நகரிலிருந்து அமிஞ்சிக்கரைக்கு 10 பைசா, அதற்குப் பக்கத்தில் கொஞ்ச தூரம் போவதற்கு 10 காசு கூடுதலாக இருக்கிறது. தாசப்பிரகாசாவிலிருந்து சென்ட்ரல் வரையில் 10 காசு. அதைத் தாங்கள் போய்பார்த்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குக் கடைசியிலாவது இந்த சந்தர்ப்பம் பேசுவதற்கு அளித்ததற்கு வணக்கம் செலுத்தி முடித்துக்கொள்கிறேன்.

DEPUTY CHAIRMAN: The House will now adjourn and meet again at 3 p.m. on Monday, the 8th March 1965.

The House then adjourned.

III.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

* 145. *Notification issued with G.O. Ms. No. 5570, Industries, Labour and Co-operation, dated 10th December 1964 regarding amendments to the Madras Warehouses Rules, 1953.*

* 146. *Notification issued with G.O. Ms. No. 3553, Home, dated 17th November 1964 regarding amendments to the Madras Rectified Spirit Rules, 1959.*

* Laid on the table of the House on 1st March 1965.

APPENDIX.

[*Vide* answer to starred question No. 113 on page 299.]

(*a*) & (*b*) The district-wise particulars regarding the number of applications pending for service connection to agricultural pumpsets as on 1st May 1963 and the date of first application are given below :—

Serial number and name of district.	Number of applications pending service connection for agricultural pumpsets as on 1st May 1963.	Date of first application pending service connection for agricultural pumpsets.	Reasons for pendency.
(1)	(2)	(3)	(4)
1 Chingleput	1,356	12— 9—57	Failure to dig wells and purchase pumpsets by the parties, defective ownership certificates, scheme evolved becoming unremunerative, supplies requiring long extensions, non-feasibility to evolve remunerative scheme for want of sufficient loads, etc., are some of the reasons for pendency. Pending applications are not rejected for reasons of unremunerativeness of the scheme. The applications in such cases are kept pending so that sufficient load (Parties) would come in course of time to evolve a remunerative proposal. This process is continued though it involves taking time in certain cases, as otherwise there would not be any co-ordination in the matter of building up loads in the concerned areas.
2 Coimbatore	4,005	26— 7—57	
3 Madurai	5,196	12— 9—55	
4 North Arcot ..	1,996	6 –2 —59	
5 The Nilgiris ..	4	21—11—61	
6 Ramanathapuram ..	3,714	19— 1—58	
7 Salem	7,498	19— 2—59	
8 South Arcot ..	1,814	23— 8—59	
9 Tirunelveli	381	10— 8—60	
10 Tiruchirappalli ..	509	24—11—59	
11 Thanjavur	12	3—12—60	
12 Kanyakumari ..	3	2—10—62	

THE MADRAS LEGISLATIVE COUNCIL

Monday, the 8th March 1965.

The House met in the Council Chamber, Fort St. George, at three of the clock, Mr. Chairman (THE HON. SRI M. A. MANICKAVELU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

S.S.L.C. Examinations

* 117. *Q.*—SRI J. PONNUSWAMY VILLAVARAYAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to award prize to the student who stands first in the S.S.L.C. examinations; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No.

(*b*) Does not arise.

Pesticides

* 118 *Q.*—SRI G. KRISHNAMOORTHY : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the agencies through whom the pesticides are sold to agriculturists;

(*b*) the number of deaths caused to agriculturists in the State during 1st January 1964 to 1st December 1964 while spraying pesticides;

(*c*) the names of pesticides that caused such deaths; and

(*d*) the steps taken by the Government to educate agriculturists to prevent such recurrence?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Pesticides are sold to agriculturists through all Agricultural Depots at Block Headquarters. Such of these co-operative as are willing to take up sale of less poisonous pesticides like D.D.T. and B.M.C. are also permitted to sell them to agriculturists at subsidisd rates. Besides these, private agents of the formulating firms also are selling pesticides at full cost.

(*b* No reports on deaths during the period 1st January 1964 to 31st December 1964 due to the use of plant protection chemicals while spraying have come to the notice of the Agricultural Department.

(*c*) Does not arise.

(*d*) All precautions are taken to impress on the ryots about the precautions to be adopted by them while handling poisonous pesticides. Caution notices are read out and explained in person

[8th March 1965

to every ryot who purchases such pesticides at the time of sale and his signature or thumb-impression is obtained in a register in token of his having heard the precautions read out to him.

திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி :1964-ம் ஆண்டில் இல்லாவிட்டாலும், அதற்கு முன்பாவது பின்பாவது 'பாலிடால்' தெளிக்கும்போது எந்த விவசாயியாவது இறந்திருக்கிறாரா?

கனம் திரு. பி. கக்கன்: 1961-ம் ஆண்டில் ஒருவர் இறந்திருக்கிறார்.

திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி : பாலிடால் எந்தப் பயிருக்குத் தெளிக்கப்படுகிறது? அது விவசாயத்தில் எந்த கட்டத்தில் தெளிக்கப்படுகிறது?

கனம் திரு. பி. கக்கன் : பூச்சிகளால் பாதிக்கப்பட்ட நெற் பயிருக்கும் இதர பயிர்களுக்கும் இது தெளிக்கப்படுகிறது. அவை பூச்சிகளால் தாக்கப்படும்போது பூச்சிகளைக் கொல்லுவதற்காக இது தெளிக்கப்படுகிறது.

திரு. வி. கே. ராமசாமி முதலியார் : பயிர்களுக்குப் பூச்சிகள் நிறைய வந்த பிறகு இப்போது விவசாயிகள் பயிர்களை பூச்சிகளிலிருந்து காக்க பூச்சி மருந்துகளை உபயோகிக்க நன்முகத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், இப்போது இந்த மருந்துகள் விவசாயிகளுக்கு பூச்சிகள் பயிர்களை அரித்தவுடன் கிடைப்பதில்லை. அவைகள் கிராமசேவக்குகள் மூலம் கொடுக்கப்படுவதால் காலதாமதம் ஏற்படுகிறது. இந்தக் காலதாமதத்தைத் தவிர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. பி. கக்கன்: கனம் அங்கத்தினர் சொன்னது போல, இந்த மருந்துகளை உபயோகிக்க எல்லோருக்கும் நன்முகத் தெரிந்திருக்கிறது. இந்த மருந்துகளைத் தெரிந்தவர்கள் மூலமே கொடுத்தால் ஆபத்து வராது என்பதால் இவை கிராம சேவக்குகள் மூலம் கொடுக்கப்படுகின்றன. காலதாமதத்தை எவ்வாறு தடுக்கமுடியும் என்பது சம்பந்தமாக அரசாங்கம் பரிசீலனை செய்துவருகிறது.

DR. H. V. HANDE : What are the common pesticides used?

THE HON. SRI P. KAKKAN : Follidol, Endrin, Basudin, Paramar, Zinc Phosphide, Diazinon, etc.

திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி : இந்தப் பூச்சி மருந்துகள் கொடிய விஷமுள்ளவையாக இருக்கின்றன. இவை எப்படியோ தானியங்களில் பதுங்கி மனிதனின் உடலுக்குள்ளும் போய்விடுகின்றன. எனவே பழைய காலத்தில் போல வேப்பம் புண்ணாக்கை உபயோகிப்பது சம்பந்தமாக சர்க்கார் பரிசீலனை செய்துவருகிறார்களா?

கனம் திரு. பி. கக்கன்: வேப்பம் புண்ணாக்கு கிடைக்கும் இடங்களில் அதை உபயோகிக்க ஏற்பாடு செய்யலாம்.

th March 1965]

DR. H. V. HANDE : Whenever crops are affected by insects, pesticides have to be used. Who decides that the crops are affected by the insects? Is it the Block Development Office Surveyor or the ryot who is a novice in the subject? How can he decide whether a crop needs pesticides or not?

கனம் திரு. பி. கக்கன் : செடிகளுக்கு வியாதி வந்திருக்கும் போது நிலச்சொந்தக்காரர்கள் ப்ளாக் டெவலப்மெண்ட் அதிகாரியை அணுகுவார்கள். அவர் என்ன மருந்து தெளிக்க வேண்டும் என்று சொல்வார்.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : பூச்சிகளால் பாதிக்கப்பட்ட செடிகளுக்கு மருந்து தெளிக்க ஸப்ஸிடி கொடுக்கப்படுவதாக கனம் அமைச்சர் சொன்னார். இந்த ஸப்ஸிடி உணவுப் பயிர்களுக்கு எவ்வளவு கொடுக்கப்படுகிறது? இது வியாபாரப் பயிர்களுக்கு எவ்வளவு கொடுக்கப்படுகிறது?

THE HON. SRI P. KAKKAN : Foodgrains, betel vines, arecanut, tobacco, chillies, spices and pulses—25 per cent.

Cash crops, oilseeds, cotton, sugarcane, coconut, sprayers and dusters—50 per cent.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : உணவு நெருக்கடி காலத்தில் உணவுப் பயிருக்கு 25 சதவிகிதமும் வியாபாரப் பயிருக்கு 50 சதவிகிதமும் ஸப்ஸிடி கொடுக்கப்படும் என்று கனம் அமைச்சரின் பதிலிலிருந்து தெரிகிறது. முன்னாள் உணவு அமைச்சர் கனம் ஸ்ரீ. மன்றடியார் கன்னியாகுமரிக்கு வந்தபோது மாவட்டக் கலெக்டர் முன்னிலையில் "கன்னியாகுமரி மாவட்டத்தில் நிறைய பயிர்கள் பூச்சியால் பாதிக்கப்பட்டிருப்பதால் இங்கே உணவுப் பயிருக்கு 50 சதவிகிதமாவது ஸப்ஸிடி கொடுக்க வேண்டும் என்று தற்காலிகமாகவாவது ஏற்பாடு செய்ய வேண்டும்" என்று நான் சொன்னேன். அது இப்போது நடைமுறையில் இல்லை. இந்த யோசனையில் இனிமேலாவது கனம் செலுத்தப்படுமா?

கனம் திரு. பி. கக்கன் : நெல் போல இதர பயிர்கள் ஜாஸ்தி உற்பத்தி ஆவதில்லை. இதற்கு ஜாஸ்தி ஸப்ஸிடி கொடுக்க வேண்டியிருக்கிறது. இதற்கு 50 சதவிகிதம் ஸப்ஸிடி கொடுக்க வேண்டும் என்று மத்திய சர்க்காரிடம் நாங்கள் சொன்னோம். மத்திய சர்க்கார் அதற்கு ஒத்துக்கொள்ளாததால் இப்போது இந்த அளவில் கொடுக்கப்படுகிறது.

திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி : பூச்சிகள் முன் காலத்தில் இருந்ததைவிட இப்போது ஜாஸ்தியாக இருப்பதால், இவை 'ஃபெர்டிலைஸரின்' மூலம் வந்தனவா என்று அரசாங்கம் ஆராய்ச்சி செய்ததா?

கனம் திரு. பி. கக்கன் : விவசாயத் துறையில் ஆராய்ச்சிகள் நடக்கின்றன. உரங்களினால் இந்தப் பூச்சிகள் அதிகமானதா என்று தெரியவில்லை. இருந்தாலும் இது சம்பந்தமாகவும் ஆராய்ச்சி நடத்தலாம்.

[8th March 1965

Land revenue

* 119 Q.—SRI N. V. NATARAJAN : Will the Hon. the Minister for Food be pleased to state whether there is any proposal to abolish land revenue in the case of agriculturists owning five acres and below?

THE HON. SRI V. RAMAIAH : No.

திரு. என். வி. நடராசன் : உணவு உற்பத்திப் பெருக்கத்திற்காக விவசாயிகளுக்கு ஊக்கமளிப்பதின் பொருட்டு இத்தகைய விதி விலக்கை அவர்களுக்கு அளிப்பதற்கான யோசனையை அரசாங்கம் பரிசீலிக்குமா?

வட ஆற்காடு மாவட்டத்தில் ஒரு அவசர சூழ்நிலை ஏற்பட் டிருக்கிறது. சில ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் ஹையர் செகண்டரி ஸ்கூல்களில் பணி ஆற்றிய இரண்டாம் நிலை தமிழ் ஆசிரியர்கள் மார்ச் 10-ஆம் தேதியோடு விட்டுக்குப் போகும்படி கட்டளையிடப் பட்டிருக்கிறார்கள். காரணம் அவர்கள் பண்டிதர் பயிற்சி பெறவில்லையாம். நேற்று முந்தாநாள் ஆசிரியர்கள் என் றால் அவசரத்திற்கு வைத்துக் கொண்டோம் நீங்கள் போகலாம் என்று சொல்லலாம். ஆனால் 15 ஆண்டுகள் இருந்தவர்களை போங்கள் என்று சொல்லி இருப்பதை அரசாங்கம் உடனடியாகக் கவனிக்க வேண்டும். அது மாதிரி ஆணை தவறுதலாகப் பிறப் பிக்கப்பட்டிருக்கலாம். 1960-க்கு முன்னாலே வேலையில் இருந்தார் கள் என்றால் அவர்களையெல்லாம் நீக்கக் கூடாது என்று அரசாங்க ஆணை இருக்கிறது. புரிந்து கொள்ளாமல் ஆணையிட்டிருக்கிறார் கள் என்று நினைக்கிறேன். இதை அரசாங்கம் உடனடியாக கவனிக்க வேண்டும்.

இந்த வரவு செலவுத் திட்டம் அடுத்த 4-ஆவது 5-ஆவது திட்டங் களுக்கு நல்ல வகையிலே எடுத்துக்காட்டாக அமைந்து இருக் கிறது என்பதனாலே இதை பாராட்டுகிறேன். வரவேற்கிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: தலைவர் அவர்களே, நேற்று பத்திரிகையிலே இந்தி எதிர்ப்பிலே சம்பந்தப்பட்ட மாணவர்கள் மீது இருந்த வழக்குகள் வாபஸ் பெற்று, அவர்கள் அனைவரையும் விடுதலை செய்திருப்பதாக வந்த செய்திகண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். நமது எதிர்க் கட்சித் தலைவர் திரு. லட்சுமண

8th March 1965] [திரு. கே. எஸ். அப்துல் வகாப்]

சுவாமி முதலியார் அவர்களுடைய வேண்டுகோளினால் தான் இது ஏற்பட்டது கண்டு நான் அவரை மிகவும் பாராட்டுகிறேன். ஆங்கிலத்தில் சொல்வார்கள்: A stitch in time save nine என்று. மாணவர்கள் 8-ஆம் தேதி அன்று பள்ளிக்கூடம் போவ தற்கு முன்பு வெளியிடப்பட்டு இருப்பது நல்ல சந்தர்ப்பத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்பதால் அதை நான் பாராட்டு கிறேன்.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைப் பொறுத்த வரையில் இரண்டு வகையில் வாதங்கள் இந்த மன்றத்தில் பேசப்பட்டதை நான் பார்த்தேன். திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள் தூண்டிவிட்ட காரணமாகத்தான் பலாத்காரங்கள் உருவாயின என்று குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது. அதைப் போல் அர சாங்கம் தான் தன் பிடிவாதப் போக்கின் காரணமாக இந்த பலாத்காரத்தை உருவாக்க வகை செய்தது என்று அரசாங்கத் தின் மீது குறிப்பாக முதலமைச்சர் மீது குற்றம் சாட்டப்பட் டிருப்பதையும் நாம் கேட்டோம். என்னைப் பொறுத்த வரையில் இந்த இரண்டு வாதங்களையும் நான் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அம்பு எறியப்பட்ட ஒருவன் அம்பின் மீது கோபம் கொள்ளக் கூடாது. அந்த நிலையில் அம்பு எறிபவர்கள் கனம் லால் பகதூர் சாஸ்திரி அவர்களும் நந்தாஜியும் தான். அம்பு போன்ற நிலை நமது முதலமைச்சருக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆத்திரப் பட வேண்டியது எல்லாம் இந்தியைத் திணித்தவர்கள் மீது. இந்தி யைத் திணித்தவர்கள் நமது முதலமைச்சர் அல்ல.. மத்திய அர சாங்கத் தலைவர்கள் என்பதே என்னுடைய கருத்து.

இன்றைக்கு பத்திரிகையில் பார்த்தால் ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு பத்திராதிபர் கைது செய்யப்படுவதை நாம் காண் கிறோம். கிளர்ச்சி அடங்கி விட்டது. மழை விட்டும் தூவானம் விடவில்லை என்பது போல் கிளர்ச்சி அடங்கியும் அடக்குமுறை அடங்கவில்லை. அதில் பங்குகொண்டவர்கள் சிலர் தவறான போக்குகளைக் கையாண்டார்கள். அவர்கள் செய்த செய்கை யெல்லாம் சரியோ தவறோ, ஆனால் அவர்கள் எந்த உணர்ச்சியோடு செய்தார்கள் என்பதை நாம் கவனிக்கவேண்டும். மக்கள் உணர்ச்சியுள்ளவர்கள். உணர்ச்சியற்ற மரக்கட்டைகள் அல்ல. தாய்மொழிக்கு ஆபத்து வருகிறதென்று கொந்தளித்து எழு கிறார்கள். அவர்கள் அது சரியென்று நினைத்து போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். அவர்களுடைய அந்தத் தியாக மனப்பான்மை யை நாம் பாராட்டக் கடமைப்பட்டவர்கள். அவர்கள் செய்தது தவறோ சரியோ அவர்களது நல்ல உணர்ச்சிக்குத் தக்க மதிப்புக் கொடுத்தாக வேண்டும். அரசாங்கமும் தியாக மனப்பான்மைக்குத் தலைபணிந்துதான் ஆகவேண்டும் என்ற முறையிலாவது அரசாங் கம் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கைது செய்யப்பட்டிருக்கும் எல்லோரையும் விடுதலை செய்யவேண்டுமென்று பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன். இங்கு நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோ கங்களின் எதிரொலிதான் நாம் கேரளத் தேர்தலில் பார்க்கிறோம். கேரளாவில் காங்கிரஸ் படுதோல்வி அடைந்தது என்றால் இங்கு

[திரு. கே. எஸ். அப்துல்வகாப்] [8th March 1965

நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தின் எதிரொலிதான் காரணம். அதுமட்டுமல்ல. காங்கிரஸ் கட்சியில் தன்னுடைய கூட்டாளியுடன் . . .

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நம்முடைய ராஜ்யத்தில் நிறைய இருக்கிறது எதற்காக இன்னொரு ராஜ்யத்தைப் பற்றி இழுக்கவேண்டும், இந்த பட்ஜெட்டில்.

திரு. என். ஆர். தியாகராஜன்: அங்கேதான் முஸ்லிம் லீக் என்ன ஆயிற்று?

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: காங்கிரஸ்தான் கூட்டாளியுடன் முறைதவறி துரோக மனப்பான்மையுடன் நடந்துகொண்டதன் பலனை அங்கு காங்கிரசுக்குப் படுதோல்வி ஏற்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, தேர்தல் நேரத்தில் பிரதான எதிர்க் கட்சியினர் சிறையில் வைக்கப்பட்டதும் ஒரு காரணமாகும்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நடைமுறையில் அது பற்றி இங்கு பேசக்கூடாது என்று வேண்டிக்கொள்கிறேன். அவர்கள் அதைக் கேட்பதாகத் தெரியவில்லை. எந்த ஒரு குற்றச்சாட்டும் வேறு ஒரு ஸ்தாபனத்தைப் பற்றியோ வேறு ஒரு கட்சியைப் பற்றியோ விவாதத்தில் குறிப்பிட்டால் அதை இங்கு இல்லாததால் பதில் சொல்வது முடியாமல் போகும். அதுமாதிரி விஷயத்தை இங்கு எழுப்ப முடியாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

டெபுடி சேர்மன்: ஆமாம். அதைப் பற்றியே பேசாமல் விட்டு விடுங்கள்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: நமது ராகாலத்தைப் பொறுத்தவரையில் நடந்த துப்பாக்கிப் பிரயோகங்களைத் தொடர்ந்து இந்த பட்ஜெட் விவாதத்தை நடத்தக் கூடிய சூழ்நிலையில் சில தலைவர்கள் சட்ட மன்ற உறுப்பினர்கள், சட்டமன்றத்தில் கொஞ்சம் வேகமாகப் பேசக்கூடியவர்கள் என்று அரசாங்கம் கருதக் கூடியவர்கள் பாதுகாப்புச் சட்டப்படி கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள். இந்தப் போக்கானது மற்ற உறுப்பினர்களை மறைமுகமாக பயமுறுத்துவதாக ஆகுமென்பது எல்லோருடைய கருத்து. வில்லுப் பட்டு சாகாதபோது கல்லடியால் சாகுமா என்று சொல்வார்கள். அது போன்று துப்பாக்கிப் பிரயோகங்களைக் கண்டு பயப்படாத உறுப்பினர்கள் கைது செய்வதைக்கண்டு பயந்து விடுவார்கள் என்று அரசாங்கம் நினைத்தால் அது தவருன கருத்து என்று சொல்ல விரும்புகிறேன். கைது செய்யப்பட்டவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். Justice delayed is justice denied என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். அவர்களை உடனடியாக விடுதலை செய்ய முடியவில்லை என்றால் உடனடியாக அவர்கள் மீது விசாரணை நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மாகாணத்தில் நடந்த துப்பாக்கிப் பிரயோகங்கள் நமது இந்திய நாட்டிலே ஒரு புதிய ரிகார்டை ஏற்படுத்தியிருக்கிறது. பிப்பிரவரி 12-ம் தேதி 15 ஊர்களில் ஒரே நாளில் துப்பாக்கிப்பிரயோகம் நடந்திருக்கிறது.

8th March 1965] [திரு. கே. எஸ். அப்துல் வகாப்]

இதற்கு முன்பு இந்த நாட்டில் எந்த மாகாணத்திலேயும் இவ்வளவு விரிவான போக்கிலே இந்த மாதிரி சம்பவம் நடந்ததாகத் தெரியவில்லை. ஆங்கிலத்தில் சொல்வார்கள். It is good to possess giant's strength but it is tyrannical to use it like a giant. அந்தப் போக்கில் அதிகாரத்தைப் பிரயோகித்து வருவதாகத்தான் மக்கள் பேசிக் கொள்கிறார்கள். சரித்திரத்திலே நமது முதலமைச்சர் ஒரு புது ரிகார்டு ஏற்படுத்தியதால் தனக்கு ஒரு நிரந்தரமான இடத்தைத் தேடிக்கொண்டு இருக்கிறார் இந்த நாட்டு சரித்திரத்தில். ஜாலியன்வாலாபாக் என்று சொல்லக் கூடிய பிரிட்டிஷ் ஆட்சியில் டையர் என்பவன் சுட்ட சம்பவத்தையும் மங்கவைத்துவிட்டது இந்த நிகழ்ச்சி என்று மக்கள் கருதுகிறார்கள். துக்க தினம் 26-ம் தேதி அமைதியாகக் கொண்டாடுவதாக திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சொன்னார்கள். அமைதியாக கொண்டாடவிட்டு இருந்தால் அதனால் ஒன்றும் குடி முழுகிப் போய்விடாது என்பது என் அபிப்பிராயம். முன்கூட்டியே கைது செய்தது சரியானதல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் துக்க தினம் கொண்டாடக்கூடாது என்ற நோக்கத்தோடு கைது செய்யப்பட்டார்கள். 26-ம் தேதி துக்க தினம் கொண்டாடாத நிலை ஏற்பட்டது. அந்த நாள் கழிந்த பிறகு 27-ம் தேதி அவர்களை விடுதலை செய்திருக்கவேண்டும். மேற்கொண்டும் அவர்களை உள்ளே வைத்தது அரசாங்கம் செய்த இரண்டாவது தவருகும் என்பது என்னுடைய கருத்து. 26-ம் தேதி சில உறுப்பினர்கள் அவரவர்கள் வீடுகளில் கருப்புக் கொடிகளை உயர்த்துவதை பலாத்காரமாக வீட்டிற்குள் புகுந்து கொடிகளை இறக்க சில புண்ணியவான்கள் முற்பட்டதும் அதற்கு அரசாங்கம் ஆதரவு அளித்ததும் மூன்றாவது தவறு. இவைதான் இந்தக் கிளர்ச்சி பெருகியதற்கு காரணமாக அமைந்தது.

டெபுடி சேர்மன்: The Hon. Member's time is up.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: சரி சார். நான் முடித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். டி. சுந்தரம்: மாண்புமிக்க துணைத் தலைவர் அவர்களே, கடந்த நாற்பது ஆண்டுகளாக பாரத சுதந்திரத்திற்கும் தமிழகத்தின் புது மலர்ச்சிக்கும் சேவை செய்துவரும் அனுபவமும் மிக்க ஆற்றலும் மிக்க முதல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள நிதிநிலை அறிக்கையைபற்றி இந்த மாமன்றத்தில் பேசிய முதுபெரும் அறிஞர்கள் யாவரும் வரவேற்றிருக்கிறார்கள். ஆண்டுதோறும் பெருகிவரும் வரவு செலவு மக்களின் வாழ்க்கை உயர்வையும் பெருகிவரும் பொறுப்புக்களையும் காட்டுகின்றன. உயர்ந்து கொண்டே வரும் நிதிநிலையை 17 ஆண்டுகளாகப் பெருகிக் கொண்டே வரும் ஒரு நிலையை நாம் உருவதற்கான ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் நம்முடைய அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதுமாத்திரமல்ல, இத்தகைய லட்சிய பூர்வமான நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு லட்சிய வளங்கள் எல்லாம் நிறைந்து இருக்க வேண்டும். நாட்டிலே லட்சிய நாட்டைப்பற்றி நம்முடைய பொதுமறை, "பல்குழுவும் பாழ் செய்யும் உட்பகையும் வேந்தலைக்குங் கொல்குறும்பும் இல்லது நாடு" என்று இலக்கணம் வகுத்தி

ருக்கிறது. அந்த இலக்கணமெல்லாம் ஏதோபல காரணங்களால் குன்றியிருக்கும் இந்த சூழ்நிலையிலும் ஒரு லட்சிய நிதிநிலையை சமர்ப்பித்த நம்முடைய ஆட்சியை யாராலும் பாராட்டாமல் இருக்கமுடியாது. இந்த நிதிநிலை அறிக்கையிலே மக்கள் பிரதிநிதி களாக இருக்கும் முதுபெரும் அறிஞர்கள் பாராட்டுவது மட்டு மல்ல. அரசாங்க இயந்திரத்தை இயக்கும் ஆயிரக்கணக்கான அரசாங்க ஊழியர்களுடைய அகமும் முகமும் மலரும்படியாக சம்பளத்தை உயர்த்தியிருப்பதற்காகவும் அவர்களுடைய சார்பிலே நம்முடைய மகழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கடந்த ஆறு வாரங்களாக தமிழகத்தில் இருந்த சோக சூழ் நிலை மாறியுள்ள இந்த நல்லநாளில் இங்கு பேச வாய்ப்பு கிடைத்த தற்கும் நன்றி செலுத்தவேண்டும். ஏதோ ஒரு கெட்ட சகுனத் தின் அறிகுறியாக மனதில் இருள் சூழ்ந்து கிடந்தது. குழந்தைக்கு வியாதிகண்டால் அதற்காக தாய் மருந்துண்ணும் இயற்கை உணர்ச்சியை நாம் கண்டதுண்டு. ஆனால் இன்று தாய்க்கு வந்த நோய்க்காக நம் குழந்தைகள் மருந்து சாப்பிடும் வித்தையைக் கண்டோம். பெரியவர்கள் தீர்வு காணவேண்டிய ஆட்சி மொழி பிரச்னைக்கு, நம்முடைய குழந்தைகள் தெருவிலே இயக்கம் நடத்தி துயர மருந்து சாப்பிட்ட சோக சூழ்நிலையை நாம் கண்டோம். இன்று தாய்மார்கள் (பொருப்புள்ள தலைவர்கள்) மருந்துண்ண ஆரம்பித்துவிட்டார்கள். அவர்கள் உண்ணும் மருந் திலும் நம் குழந்தைகளாகிய மாணவர்களுடைய மனோவியாதி தீரவேண்டும். திருமென்று எதிர்பார்க்கிறோம்.

இந்த நிதி அறிக்கையின் முதல் அறிவிப்பாக உணவு உற்பத்தி யைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறது. உணவு உற்பத்திக்கு மட்டும் தனது சக்திகளைப் பயன்படுத்திய சர்க்காருக்கு கடந்த இரண்டு ஆண்டுகளாக உணவை வாங்கவும் விநியோகம் செய்யவும் ஆன பொறுப்பும் சூழ்நிலையும் சேர்ந்துவிட்டது. வியாபாரத்தில் மிக அனுபவம் வாய்ந்த, வியாபார நலத்துக்காகவே உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும், அதற்காகவே பரம்பரை பரம்பரையாக வாழ்ந்துவரும் வியாபார சமூகத்தினர் கொஞ்சம் நல்ல வியாபார உணர்ச்சியோடும் தேசிய உணர்ச்சியோடும் இந்தப் பெரும் பணியை ஏற்றுக்கொண்டிருந்தால், சர்க்காருக்கு உணவுப்பொருளை வாங்கி விநியோகம் செய்யும் பொறுப்பு குறைந்திருக்கும்; உணவுப் பொருள்கள் உற்பத்தி விஷயத்திலேயே சர்க்கார் தங்கள் ஆற்றல் முழுவதையும் செலவழிக்கும் நல்லதொரு வாய்ப்பு நிலைமை ஏற்பட்டிருக்கும். சர்க்காரின் தலையீட்டினாலேயே தங்களுக்கு இன்னல் ஏற்படுவதாக வியாபார சமூகத்தினரில் பலர் கருது கிறார்கள். "அரிசி வியாபாரத்தில் மாத்திரம்தானே சர்க்கார் தலையிட்டது? இன்னும், மற்ற பொருள்கள் இருக்கின்றன. அவைகள் விஷயத்தில் உங்கள் தேசிய உணர்ச்சியையும் சேவா உணர்ச்சியையும் காட்டுங்கள்" என்றுதான் மக்கள் வியாபார சமூகத்தினரை அடிபணிந்து கேட்டுக்கொள்கிறார்கள். சில மாதங் களுக்கு முன் நேர்ந்த அந்தச் சோகச் சூழ்நிலையில் அரிசிக்குக் கார்டு வந்திருக்காவிட்டால் நிலைமை எப்பேர்பட்டதாக இருந்தி ருக்கும் என்று நினைத்தால் இன்னும் நமக்குக் கவலை ஏற்படுகிறது.

அந்தச் சூழ்நிலையில் அத்தகைய கவலையை நீக்க அரசாங்கம் முன் வந்தமைக்கு அரசாங்கத்திற்கு நம் பாராட்டுதலைத் தெரிவிக்க வேண்டும். அரிசியைத்தவிர மற்ற அவசியமான பொருள்கள் இருக்கின்றன. அவைகளின் விலைகளும் ஏறிக்கொண்டிருக் கின்றன. அந்த விலைகள் ஏறுதபடி செய்து அரசினருக்கே நல்வழி காட்டும்படி வியாபாரப் பொதுமக்களை இந்த மன்றத்தின் மூலம் நான் கேட்டுக்கொள்வது முரணாகாது என்று நினைக்கிறேன்.

உணவு உற்பத்திக்காக அரசாங்கம் எவ்வளவோ காரியங்கள் செய்துவந்தாலும், அதற்காக இன்னுமுள்ள பல தரிசு நிலங்களை மக்களுக்கு வழங்குவதிலும், அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதிலும் அரசாங்கம் இன்னும் கொஞ்சம் தீவிரமாக இருக்க வேண்டும். எல்லா நிலங்களும் காவேரி டெல்டா நிலங்களாக இருக்க முடியாது. சேலம் மாவட்டத்தில் சில தாலூகாக்களில் மிகவும் பயன்படக்கூடிய தரிசு நிலங்கள் இருக்கின்றன. அந்தத் தரிசு நிலங்களை விவசாயத்திற்குப் பயன்படுத்துவதற்காகக் கொடுக்கும்படி வேண்டி மக்கள் நிறைய மனுக்களைப் போட்டிருக் கிறார்கள். அந்த மனுக்களைப் போட்டுள்ளவர்களுக்கு அவைகளை வழங்கி அவர்களுக்கு வேண்டிய விவசாய உதவிகளை அளித்தால், வருடத்தில் இரண்டு முறை நெல் விளையும் பூமியாக அவை மாறு விட்டாலும், அவைகளில் ஏதோ புஞ்சைப் பயிராவது நிச்சயமாக விளையும்; பாலைவனமாக இருக்கும் அந்தப் பிரதேசம் பசுஞ் சோலையாக செழிக்கும். உணவு இலாகாவோ, ரெவின்யூ இலாகாவோ நிலங்களை வழங்கும் அதிகாரம் படைத்த துறைகள்— அந்த மனுக்களுக்கு உடனடியாக நல்முடிவு செய்து அவர்களுக்கு நிலங்களை வழங்க வேண்டும்.

அடுத்தது, தொழில் துறை சம்பந்தமாகப் பேச விரும்புகிறேன். நமது ராஜ்யத்தில் தொழிலைப்பற்றிப் பேசுவதே இன்று ஒரு பெரும் தொழிலாகிவிட்டது. நாடு வரவேற்கத்தக்க வளர்ச்சியை நம் தொழில்கள் இப்போது பெற்றுவருகின்றன. நாம் சுதந்திர மடைந்த பிறகு உலகில் பிற நாடுகளின் ஒத்துழைப்புடன் தொழில் துறையில் முன்னேறி வருகிறோம். யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று நாம் படித்திருக்கிறோம். இந்த பரந்த மனப்பான்மை யுடன் இருந்தால் நாம் எவ்வளவு பயன்பெற முடியும் என்பதை தமிழகத்தில் நாம் கண்ணாரக் கண்டு மனமாரப் போற்றும் தொழில் இயக்கங்கள் காட்டுகின்றன. தொழில் இயக்கத்தை மிகவும் சுறு சுறுப்பாக நடத்திவரும் தொழில் துறைக்கும் அமைச்சர் அவர் களுக்கும் நமது நன்றியைத் தெரிவிக்க வேண்டும்.

தொழிலுக்கு அடுத்தபடியாக உள்ளது மின் இயக்கம். தொழில் களுக்கு அத்தியாவசியமாக உள்ளது மின்சாரம். இத் துறையில் மற்றெந்த மாநிலமும் முன்னேறுதல் அளவில் நம் ராஜ்யம் முன்னேறியிருக்கிறது. நம் ராஜ்யத்திலுள்ள சுமார் 18,000 கிராமங்களில் 16,000-க்கு மேற்பட்டவைகளில் இன்று மின்சார விளக்கு எரிகிறது. இதற்கு முன் அவைகளில் மின்சார விளக்குகள் இல்லாதபோது மக்கள் மாலை 6 மணிக்கே இரவுச் சாப்பாட்டை முடித்துக்கொள்ள வேண்டிய நிலையில் இருந்தனர். இப்போது அந்த நிலை மாறியிருக்கிறது. வீட்டில் விளக்கு வசதி இல்லாத

[திரு. எஸ். டி. சுந்தரம்] [8th March 1965

சிலர் இரவில் ரோடு விளக்கை படிப்பிற்காக உபயோகித்ததாக அறிந்திருக்கிறோம். ரோடு விளக்கில் புத்தகம் படித்த ஜட்ஜ் ஸ்ரீ முத்துஸ்வாமி ஐயரின் ஞாபகம் இப்போது எனக்கு வருகிறது. இப்போது தமிழ்நாட்டில் 17,000-க்கு மேற்பட்ட கிராமங்களில் மின்சார விளக்கு எரிவது மகிழ்ச்சிக்குரிய விஷயம். எங்கும் மின் விளக்கு பிரகாசமாக எரிகிறது. ஆனால் முயற்சிமிக்க முத்துசாமி அய்யர்களைத்தான் அதிகமாகக் காணமுடியவில்லை.

அடுத்தபடியாக, கல்வி. இதற்குமுன் குறிப்பிட்ட எல்லா விஷயங்களுக்கும் ஆதார மூச்சாக விளங்குவது கல்வி. கல்வியானது வருங்கால சந்ததிகளை நல்ல முறையில் உருவாக்கக் கூடியது. கல்விக்கென இந்த பட்ஜெட்டில் 37 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தமிழக அரசாட்சியின் மகிமைகுடமாக விளங்குவது கல்வித் திட்டமாகும். நல்லொழுக்கம், தொழில் வளர்ச்சி முதலியனவெல்லாம் கல்வியைப் பொறுத்திருக்கிறது, நம் சந்ததிகள் வாழையடி வாழையாக வாழ்ந்து நல்ல கல்வியறிவு உள்ளவர்களாகவும், தொழில் நுணுக்கத்தில் சிறந்த தேர்ச்சி உள்ளவர்களாகவும் சிறந்த எஞ்ஜினியர்களாகவும் திகழ வேண்டும். அவர்கள் உலகம் போற்றும் மேதைகளாகத் திகழ வேண்டும். நமது மாநிலக் கல்வித் திட்டம் இதற்கு உகந்த வகையில் இருக்க வேண்டும். கல்விக்காக நமது அரசாங்கத்தார் நிறைய பணம் செலவழிக்கிறார்கள். இவ்வளவு செலவழிக்கும் போது மாணவர்களுக்கு கல்வியால் நல்லொழுக்கம் நன்முறையும் ஏற்பட்டிருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும். மேலும் திருவள்ளுவர் கூறியுள்ள இலக்கணத்தின்படி மாணவர்கள் ஒழுக்கம் பெற்றிருக்கிறார்களா என்று பார்க்க வேண்டும். இந்தக் கேள்விகளுக்கெல்லாம் 'இல்லை' என்று பதில் சொல்ல வேண்டிய நிலையில்தான் இன்று நாம் இருக்கிறோம். விவேகானந்தர் ஓரே வாக்கியத்தில் கல்விக்கு விளக்கம் தருகிறார். அதேபோல மதத்திற்கும் அவர் ஓரே வாக்கியத்தில் விளக்கம் தருகிறார்.

Education is the manifestation of perfection already in man.

Religion is the manifestation of Divinity already in man.

என்றும் விவேகானந்தர் சொல்லுகிறார். ஏற்கெனவே மனிதன் மனத்தில் இருக்கும் பூரணத்துவத்தை வெளிப்படுத்துவதுதான் கல்வி என்று விவேகானந்தர் சொல்கிறார். "இப்படிப்பட்ட கல்வி பள்ளியில் போதிக்கப்படவில்லையாதலால் நாங்கள் பள்ளிக்குப் போகமாட்டோம்" என்று மாணவர்கள் அஞ்சும் நிலைமை இன்று இல்லை. "இப்போதுள்ள கல்வி முறையால் எங்களுக்கு நல்ல உத்தியோகம் கிடைக்காமல் போய்விடக்கூடும்" என்று மாணவர்கள் சொல்லும் நிலைதான் இப்போது நிலவுகிறது. இதுகுறித்து நான் மிகவும் மன வருத்தம் அடைகிறோம். கனம் அங்கத்தினர் திரு. பாமசாமி முதலியார் மாணவர்களுக்கு 'மார்ல் இன்ஸ்ட்ரக்ஷன்'—அற நெறி போதனை—அளிக்கவேண்டும் என்று சொன்னார். அதற்கு ஏற்ற சூழ்நிலையும் இன்று இல்லை. காரணம் மாணவர்கள் ஆசிரியர்களிடம் ஒரு நாளில் சில மணிநேரம் தான் பழகுகிறார்கள். மீதி நேரத்தில் அவர்கள் வேண்டாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். அவர்களுடைய உள்ளங்கள் வேறு விஷயங்களில் செல்கின்றன. இந்தச் சூழ்நிலையை மாற்றினாலொழிய இளம் உள்ளங்கள்

8th March 1965] [திரு. எஸ். டி. சுந்தரம்]

கல்வியிலேயே ஊக்கமாக ஈடுபடுவதற்கான மார்க்கத்தை நாம் கண்டு பிடிக்க முடியாது என்பதை நாம் நன்றாக உணர வேண்டும். சில பத்திரிகைகள், அரசியல் மேடைகள், சினிமா, சிகரெட் கடைகள் ஆகிய நான்கும் மாணவர்களின் மனதை மிகவும் வேகமாகக் கவர்ந்து அவர்கள் மனதைக் கெடுத்துவிடுகின்றன. இங்குள்ள கனம் அங்கத்தினர்கள் சினிமாவுக்கு அடிக்கடி போவார்கள் என்று நான் நினைக்கவில்லை. அவர்களுக்கு அதற்கு நேரம் இல்லை. இந்த நாட்டில் சுமார் 950 சினிமாத் தியேட்டர்கள் இருக்கின்றன. அவைகளில் 9 லட்சம் பேர் சினிமா பார்க்கிறார்கள். இவர்களில் சுமார் கால் பங்கு மாணவர்கள். இந்த சினிமாக்கள் மாணவர்களின் மனதை எவ்வளவு ஆழம் கவரக் கூடியவையவைகளாக இருக்கின்றன என்பது வெளிவரும் படங்களைப் பார்த்தால் தெரியும்.

நாம் கட்டாயம் இந்த சினிமாக்களைப் பொருட்படுத்தி பொறுப்புடன் கவனித்து ஆவன செய்ய வேண்டும். நல்ல சினிமாக்கள் வரும்படி செய்யவேண்டும். வரும்படி செய்ய முடியும், செய்ய வேண்டும். இதைத்தான் சில மாதங்களுக்கு முன்பு ராஜாஜி அவர்கள் நடந்த அன்னையர் மாநாட்டில் நிர்மாணம் நிறைவேற்றி தெரிவித்தார்கள். வெளியே வராமலிருக்கவே, ஆபாசமான போஸ்டர்களும், சினிமா போஸ்டர்களும் இருக்கின்றன என்பதைத் தெரிவிக்க தீர்மானம் நிறைவேற்றினார்கள். அன்னைமார்கள் வெளியேவர முடியாத அளவிற்கு சினிமா போஸ்டர்கள் வருகின்றன என்றால் அத்தகைய சூழ்நிலையில் நாம் என்னதான் கல்வி கற்றாலும் கல்விக்காக எவ்வளவு கோடி ரூபாய் செலவழித்தாலும் என்ன பயனும் கட்டாயமாக இருக்க முடியாது. மற்ற அதிகாரம் இல்லாவிட்டாலும் ஜனநாயகத்திலே சில அதிகாரம் இருக்கிறது. சினிமா சென்சார் போர்டு அதற்குரிய வரையறுப்பு, இருக்கும் வரையறைகளை ஒழுங்காக நடத்தினால் நல்ல சூழ்நிலைவளரச் செய்ய வதற்கு அதிகாரங்கள் இருக்கின்றன. நான் வருத்தத்தோடு சொல்லிக்கொள்ளுகிறேன், இன்னமும் சென்சார் போர்டு தன்னுடைய கடமையைச் சரியாக ஆற்றவதில்லை. நாட்டிற்குச் செய்ய வேண்டிய கடமையுணர்ச்சியோடும் பொது நோக்கத்தோடும் இயங்கவில்லை என்ற குற்றத்தைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, சமீபத்தில் நடந்த இயக்கத்தின்போது சில பத்திரிகைகள் எப்படி நடந்தன என்பதை நாம் கண்டோம். இறந்து உயிர்போன, உடம்பைக்கூட தீயில் இடக் கூடாது என்று சொன்ன ராமலிங்க அடிகள் பிறந்த தமிழ் மண்ணில் ஒரு தமிழன் உயிரோடு தீக்குளித்தான் என்ற செய்தியை பெரிய பெரிய படங்கள் போட்டு பத்திரிகைகளில் போட்டார்கள். இதென்ன உற்சாகம் ஊட்டும் பெரிய நிகழ்ச்சியா? இதை மகிழ்ச்சிக்குரியது போல் போட்டு பத்திரிகையால் இந்த நாட்டில் பணம் பண்ணுகிறவர்கள் கூறுகிறார்களே, இந்த நிகழ்ச்சியை இம்மாதிரி வெளியிட்டால் மக்களுடைய மனம் அவல உணர்ச்சியால் அசந்து போய்விடும். பலவீனமாகப் போய்விடும். இதைப் போன்ற பத்திரிகைகளை ஜனநாயக அரசாங்கத்தில் கட்டுப்படுத்த

[திரு. எஸ். டி. சுந்தரம்] [8th March 1965

இடமில்லை என்ருல் இடம் செய்து கொள்ளுங்கள். இப்போது பத்திரிகை படிக்கிறவர்கள் அதிகமாக ஆயிருக்கிறார்கள். பத்திரிகை ஆசிரியர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். பத்திரிகை முதலாளிகளைக் கேட்டுக்கொள்ளுகிறேன். நீங்கள் கோடிக் கணக்காக சம்பாதியுங்கள். ஆனால் தமிழர்களின் பண்பாட்டைக் காப்பாற்ற முடியாத காரியத்தைச் செய்யாதீர்கள் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். காலம் அதிகமாகிவிட்டதால் சிற்றுரையை இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

திரு. கே. கமலக்கண்ணன்: கனம் துணைத்தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையை ஆதரித்துச் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இயற்கையின் கொடுமையால் சூறைவளியின் காரணமாக கனுஷ்கோடி, ராமேஸ்வரத்தில் பலரு டைய சொத்துக்களும், பல உயிர்களும் சேதம் அடைய நேர்ந்தது. அவர்களுக்கு என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுவதோடு செயற்கையின் கொடுமையால், மொழிப் பிரச்சினையின் விளைவாக சில மாணவர்கள், மாணவர்களின் நிழலிலே இருந்து கொண்டு பல லட்சக்கணக்கில் அரசாங்க சொத்துக்களுக்கும் பல தனிப்பட்டோர் சொத்துக்களுக்கும் நஷ்டத்தை உண்டாக்கியது மட்டுமல்லாமல் பல உயிர் சேதத்திற் கும் காரணமாக இருந்த சமுதாய விரோதிகளை நாம் என்ன என்றுதான் கூற முடியும்? அப்பேர்ப்பட்ட சேதத்திற்கும், பலர் மடிய நேர்ந்து மடிந்தார்களே அவர்களுக்கும் என் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அவர்களுடைய ஆன்மா இறைவன் திருவடி அடைய பிராத்தனை செய்கிறேன்.

இந்த ஆண்டு அறிக்கை 291 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப் பட்டிருக்கிறது. நல்ல முறையில் உயர்ந்த லட்சிய அடிப்படை யிலே ஜனநாயக அடிப்படையிலே ஏழை மக்களுடைய வாழ்க்கை உயரவும் விவசாயம் நல்ல முறையிலே வளருவதற்காகவும், மக்கள் நல்ல முறையிலே சுகாதாரத்தோடு வாழ்வதற்காகவும் பல திட்டங்கள் வகுத்து இந்தத் திட்டங்கள் வெற்றி அடையும் அளவிலே நல்ல முறையிலே செலவு செய்யப் பட்டிருப்பதைக் கண்டு நான் மகிழ்கிறேன். அதற்கு நான் என்னுடைய பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். சென்ற 3 ஆண்டுகளாக ஒதுக்கிய தொகையினை விட அதிகமாக கணிசமான தொகை செலவு செய்து ஒரு நல்ல காரியத் தைச் செய்ய உத்தேசித்திருக்கிறார்கள். நடந்து வரும் மூன்றாவது திட்டத்தில் விவசாயத்தில் அறிக்கையில் குறிப்பிட்ட மாதிரி அவ்வளவு திருப்திகரமான அளவுக்கு வெற்றி காண முடியாமல் போனாலும், அரசாங்கம் விவசாயத்திற்கு நல்ல முறையிலே அதிகமாக பணம் ஒதுக்கி விவசாய மக்கள் நல்வாழ்வு வாழ வேண்டும் என்று நல்ல முறையிலே விவசாயத்தை வளர்ப்பதற்கு திட்டமிட்டிருப்பதைப் பாராட்டுகிறேன். நவீன முறைகளைக் கையாண்டு ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் உள்ள கிராம மக்களுக்கும் பொறுக்கு விதைகளும் மற்ற சாதனங்களும் தாராளமாக வழங்கும் ஒரு திட்டத்தை உருவாக்கி, அவர்களுக்குக் கடன் வசதியும்

8th March 1965] [திரு. கே. கமலக்கண்ணன்]

செய்து கொடுத்தால்தான் கிராமத்திலே இருக்கிற விவசாய மக்கள் ஓரளவுக்கு விவசாயத்தில் அதிக உற்பத்தி செய்வதற்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்படும். அப்படிச் செய்வதன் மூலம் உணவு தானிய உற்பத்தியைப் பெருக்க முடியும் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளுகிறேன். தஞ்சையிலே மட்டும் சுற்று வண்டி மூலமாக விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்குப் பல விளம்பரங்களைச் செய்வதற்கு ஒரு திட்டம் இருக்கிறது என்று இந்த வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை மற்ற ஜில்லாக்களுக்கும் உருவாக்கினால் நன்மையாக இருக்கும் என்று நினைக்கிறேன். அன்னிய அரசாங்கங்கள், ஜப்பான், ரஷ்யா போன்ற நாடுகளிலே சிறிய டிராக்டர்களை உற்பத்தி செய் திருக்கள். 3,500, 4000 ரூபாயுக்கு மேல் அதிகமாகப் போகாது அவைகளுடைய விலை என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அப்பேர்ப் பட்ட சிறிய டிராக்டர்களைச் செய்யும் ஒரு தொழிற்சாலையை நம் நாட்டிலே ஏற்படுத்தி சாதாரண விவசாயிகளும்கூட இந்த டிராக்டரை விவசாயத்திற்குப் பயன்படுத்தினால் உணவு உற்பத்தி யில் இன்னும் நல்ல பலனை அடையலாம் என்று நான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். சில சமயத்திலே பருவ மழை இல்லாத காரணத்தினால் ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர், 4 ஏக்கர், 10 ஏக்கர் வைத்திருக்கின்ற விவசாயிகளுக்கு விவசாய உற்பத்தி குறைந்து விடுகின்றது. அதனால் சொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே பொதுவாக ஒரு "கிராப் இன்ஷூரன்ஸ்" திட்டத்தை உருவாக்கினால் அது விவசாய மக்களுக்கு ஓரளவிற்கு நன்மை தரும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஏ.டி.டி. 27 என்ற குருவை ரக நெல் விதையை சமீபத்தில் கண்டுபிடித்திருக்கிறார்கள். சாதாரணமாக ஏக்கருக்கு 2,000 பவுண்டு சாதாரண நெல் விதையால் உற்பத்தி ஆகிறதை விட 4,000 பவுண்டு உற்பத்தி இந்த விதையால் ஆகிறது என்று குறிப் பிட்டிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட ஒரு நல்ல நெல் வகையை மற்ற எல்லா ஜில்லாக்களுக்கும் எல்லா விவசாயிகளுக்கும் கொடுக்க ஏற்பாடு செய்தால் அது நல்ல உற்பத்தியை உருவாக்கும் என்று நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சாதாரணமாக நம்முடைய அரசாங்கம் கிராமங்களிலே கிணறுகள் வெட்டு வதற்குக் கடனுதவும், மற்றப்படி இலவசமாகவும் பணம் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். அவர்கள் ஏதோ பணம் கிடைப்பதற்கு ஓரளவிற்கு கிணற்றை வெட்டுகிறார்களே தவிர, அதிலே நல்ல பலன் அடைய முடியவில்லை. செலவு செய்தது போக மற்றதைத் தங்களுக்கு அவர்கள் வைத்துக்கொள்ளுகிறார்கள். அப்படி இல்லாமல் கிணறுகள் இன்னும் வெட்டுவதோடு இல்லாமல் புதிய கிணறுகள் ஆழமாகத் தோண்டுவதன் மூலமாக நல்ல தண்ணீர் காண பரிசோதனை செய்து அரசாங்கம் இதற்கு ஒரு கடன் உதவி செய்தால் அது மிகவும் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சென்னை நகரில் லீசென்ஸ் இல்லாத மாடுகள், மாடுகள் ரோடு களிலே திரிவதால் போக்கு வரத்துக்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது. அதனால் பல விபத்துகள் ஏற்படுகின்றன. அதைத்

[திரு. கே. கமலக்கண்ணன்] [8th March 1965

தடுக்க நமது போலீஸ் இலாகாவினர், அந்தக் கால்நடைகளின் சொந்தக்காரர்களைக் கண்டுபிடித்து அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும். அது பெருமளவுக்கு விபத்துக்களைத் தடுக்கு மென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆண்டுதோறும் 25 லட்ச ரூபாய் பெட்ரோலிய சுத்திகரிப்புக்கு 2 லட்சம் டன் நைட்ரஜன் உரம் தயாரிக்க நல்ல தொழிற்சாலைகளை நிறுவ அரசாங்கம் திட்டமிட்டிருப்பது குறித்து நான் அரசாங்கத்தைப்பாராட்டுகிறேன். பின்தங்கிய செங்கல்பட்டு ஜில்லாவில், இந்தத் தொழிற்சாலைகள் நிறுவப்படுவது அதற்கு எவ்வளவோ முன்னேற்றத்தைக் கொடுக்கும் என்று நம்புகிறேன்.

ஆங்கில மாதாந்திர பத்திரிகைகள், ரீடர்ஸ் டைஜெஸ்ட்களில் கீழ்க்கண்ட குறிப்புகள் இருக்கின்றன—

"The World's Wild Youth: Why is it that countries with rapidly improving standards of living are harvesting a tragic crop of restless, violent, anti-social rebels among the younger generation?

• • • •

"A crowd of half-drunken Swedish teenagers, some only 13 arrived at an ancient church near Stockholm at 4 a.m. for an early Christmas Day service. When told it was delayed for 90 minutes, they threw fireworks, desecrated graves and smashed the church windows.

In England, boys from an exclusive public school cut signal wires on a mainline railway; in the same week, two Scot lads removed a 60 foot length of track and derailed a passenger train."

இந்த மாதிரி வெளியிடுகளிலிருந்து பொதுவாக டீன் ஏஜர்ஸ் என்று சொல்லப்படுகிற 13-லிருந்து 18-வயது வரை உள்ள மாணவர்கள், மாணவிகள் எப்படி பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்கிறார்கள் என்பதை நாம் அறிந்துகொள்ள முடிகிறது, இதனுடைய காரணம் என்னவென்றால், நம்முடைய முன்னோர்கள் வகுத்த குருகுலத்தில் சொல்லிக் கொடுத்தது போல், 3-லிருந்து 10 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு அடிப்படையிலேயே நல்ல உயர்ந்த பண்புகளையும் நல்ல ஒழுக்கங்களையும் நாம் கற்றுக் கொடுக்காததுதான். அரசாங்கம் இப்படிப்பட்ட குறைகளை நீக்க, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சென்னையிலே இன்னும் பிச்சைக்காரர்கள் தொல்லை அதிகமாக இருக்கிறது. பஸ் நிலையங்களிலும், ரெயில் நிலையங்களிலும், இன்னும் பல பொது இடங்களிலும் அவர்கள் கூட்டம் கூட்டமாக வருகிறார்கள். பிச்சைக்காரர்கள் விடுதிகள் பல கட்டி அவற்றில் 5 ஆயிரம் 6 ஆயிரம் பிச்சைக்காரர்களை அனுமதிக்க இடமிருந்தும் இன்னமும் அதிக பிச்சைக்காரர்கள் வெளியில் திரிகிறார்கள். வெளி நாட்டிலிருந்து வருபவர்கள் நம் நாட்டைப்பற்றிக் கொஞ்சம் தாழ்வாக மதிப்பிட இது இடமளிக்கிறது. ஆகவே, பிச்சைக்காரர் விடுதிகளை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

8th March 1965] [திரு. கே. கமலக்கண்ணன்]

நமது தொழிலமைச்சர் அவர்களுடைய சிறந்த முயற்சி காரணமாக ஒவ்வொரு ஜில்லாவிலும் தொழிற்பேட்டைகள் அதிகமாகிக் கொண்டு வருகின்றன. அரசாங்கத்தின் உதவியைப் பெற்று தொழில்பேட்டை அமைக்கும் முதலாளிகள் ஒவ்வொரு தொழிற் பேட்டையிலும் ஒவ்வொரு தொழிற்கல்வி நிலையம் அமைத்து, அத்தத் தொழிற்கல்விக்கு ஆகும் செலவை அந்த முதலாளிகளே ஏற்றுக் கொண்டால் பெருமளவுக்கு தொழிற் கல்வியை பரப்பும் வாய்ப்பு இருக்கும். எனவே இதையும் அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வெயில் காலம் வந்து விட்டது. கூவம் ஆற்றில் நாற்றம் இனி அதிகமாகி விடும். தொழில் அமைச்சர் அவர்களே அந்த நாற்றம் சகிக்க முடியவில்லை என்று சொல்லி வேதனைப்பட்டுக்கொண்டிருக்கிறார். எனவே, கூவம் ஆற்றில் தூர் எடுத்து, கடல் தண்ணீர் அதிலே வரும்படி செய்து அந்த நதியை நாவிகேஷனுக்கு ஏற்றதாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதன் மூலமாகப் போக்கு வரத்து நெரிசல் குறைந்து பிரயாணிகளுக்கு ரோடு, ரெயில்கள் தவிர, கால்வாய் மூலமாகவும் பிரயாணம் செய்ய வசதி உண்டாகும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, செவ்வையில் வட பகுதியில் ஒரு தொத்து நோய் ஆஸ்பத்திரி இருக்கிறது. தென்பகுதி மக்கள் இங்கிருந்து அங்கு போக வேண்டி இருக்கிறது. எனவே, தென் பகுதியிலும் ஒரு தொத்து நோய் ஆஸ்பத்திரி கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னையிலே நாளுக்கு நாள் ஜன நெரிசல் அதிகமாகிக் கொண்டே வருகிறது. அவர்களுக்குக் குடியிருக்க வசதியில்லை. மிருகக்காட்சி சாலை, பைத்தியக்கார ஆஸ்பத்திரி போன்ற சில ஸ்தாபனங்களை நகருக்குச் சற்று தள்ளி அமைப்பதிலே ஒன்றும் தவறு இல்லை என்று மக்கள் கருதுகிறார்கள். அப்படிப்பட்ட கட்டடங்களை நகர்த்திவிட்டால், இடம் அதிகமாகக் கிடைக்கும். அந்த இடங்களில் பொது மக்களுக்குத் தேவையான ஆஸ்பத்திரி விஸ்தரிப்புகள் செய்வதற்கோ, மற்ற அவசியமான காரியங்களுக்கோ, பயன்படும்படியான கட்டடங்களைக் கட்டலாம் என்று அரசாங்கத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(Mr. Chairman in the chair)

திரு. எஸ். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, இந்த 1965-66-ம் வருஷத்திய நிதி நிலை அறிக்கையை ஆதரித்து ஒரு சிறிது பேசுகிறேன். முதலமைச்சர் அவர்களைப் பாராட்டிப் பேசவேண்டுமென்று முந்தா நாள் பேசும்போது நினைத்தேன் முடியவில்லை. ஏனெனில் அவர்கள் எதிரிலேயே உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். அப்போது பேசினால் அது முகஸ்துதியாக இருக்குமென்று கருதி விட்டுவிட்டேன். இப்போது அவர்கள் இங்கு இல்லாதது எனக்குப் பாராட்டிப் பேசுவதற்கு எளிதாகவும், கஷ்டமில்லாமலும் சுலபமாகவும் இருக்கிறது. இந்த ராஜ்யத்தில் இவ்வளவு பெரிய தொகை கொண்ட ஒரு பட்ஜெட் வந்ததில்லை. பெரிய பட்ஜெட் இது. நான்காவது திட்டத்திற்கு இந்த ராஜ்யத்திற்கு ஒதுக்கப் பட்ட தொகை, போட்டிருக்கும் திட்டங்கள் எல்லாம் மிகப்

[திரு. என். ஆர். தியாகராஜன்] [8th March 1965

பெரியவை. ஆகவே இந்த ராஜ்ய சரித்திரத்தில் இந்த இரண்டும் முன்பு எப்போதும் நடந்திராத பெரிய சாதனை என்று அவர்களைப் போற்றிப் புகழ்கிறேன். சென்ற தடவை இங்கு கூட்டம் நடந்த போது இலங்கைத் தமிழர்கள் பிரச்னையில் முதல் அமைச்சர் அவர்கள் விட்டுக்கொடுத்துவிட்டார்கள் என்று பேசினார்கள். இந்தப் பிரச்னை நான் சிறு பிள்ளையாக இருந்த பொழுதிலிருந்து நீண்ட நாட்களாக இருந்து வருவது. காலஞ்சென்ற கல்கி ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி அந்தக் காலத்தில் ஆனந்த விகடன் ஆசிரியராக இருந்தபோது இலங்கை சென்றிருந்தார். அப்போது அங்குள்ள இலங்கை அமைச்சர் ஒருவர், ஐயா இலங்கைத் தமிழர் களை நீங்கள் அழைத்துப்போக வேண்டுமென்றார். அதற்கு கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்கள், ஐயா, இலங்கை ராமபிரானுல் விபீஷ ணனுக்கும் கொடுக்கப்பட்டது. விபீஷணனுல் தமிழர்களுக்குக் கொடுக்கப்பட்டது. ராமன் விபீஷணனுக்குக் கொடுத்து பட்டாபி ஷேகம் செய்து வைத்து, ஈரேழு உலகம் உள்ளமட்டும் உங்கள் சந்ததிகள் இருக்குமட்டும் இந்த இலங்கையை நீங்களே வைத்து ஆளவேண்டுமென்று சொல்லிக் கொடுத்தார். அதனுல் எப்படி அழைத்துப்போவது என்று கேட்டார். அப்போது இலங்கைச் சட்டத்தில் அங்குள்ளவர்களின் பாட்டனுர் அங்கு பிறந்திருந்தால் தான் அங்கிருக்க உரிமை உண்டு என்று சட்டம் செய்திருந்தார் கள். அதைக் கூறி ஆகையால் அந்த விபீஷணன் உங்களை அழைத்துக்கொண்டிருந்தாலும் சரி, எப்படியும் உங்களை அனுப்பி விடுவோம் என்றார்கள். அந்த இலங்கைப் பிரச்னைபற்றி எதிர்க் கட்சிப் பத்திரிக்கைகள் என்னவெல்லாமோ எழுதினார்கள், "அந்தோ இலங்கைத் தமிழர்களே, உங்கள் தாயகத்தில் நாங்களே வட வருக்கு அடிமைப்பட்டிருக்கிறோம். உங்களை வாருங்கள் என்று அழைத்துக் கொள்ள முடியாமல் கண்ணீர் விடுகிறோம். வேறு என்ன செய்வது" என்று முறையிட்டார்கள். "நேரு பண்டிதர் உங்களை இந்தியர் அல்ல என்கிறார். இலங்கையிலோ உங்களை இலங்கையர் அல்ல என்று சொல்கிறார்கள். இரண்டும் கெட்ட திரிசங்கு நிலையில் இருக்கிறீர்கள், என்ன செய்வோம்" என்று எழுதினார்கள். கிட்ட தட்ட ஐந்து லட்சம் பேர்களை ஆண்டு ஒன் றுக்கு 25 ஆயிரம் என்ற அளவில் நாம் அழைத்துக்கொள்வது என்று இப்போது முடிவு செய்திருக்கிறோம். இதைப் பார்க்கிற போது நேரு காலத்தில்கூட தீர்க்கமுடியாத பெரிய பிரச்னையை, லால்பகதூர் சாஸ்திரியாரும், பக்தவத்சலம் அவர்களும் செய்து முடித்து விட்டார்கள் என்பதைப் பத்திரிக்கையில் பார்த்து மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். இங்கே எதிர்க்கட்சிகள் இப்போது சொல்வதைப் பார்த்தால், "நீங்கள் ஏன் அழைத்துக்கொண் டீர்கள்? அங்கேயே இருந்து அவர்கள் வாழ உரிமையில்லை என்றால் அங்கேயே கடலிலே விழுந்து சாகட்டும்" என்ற முறையில் ஆணித்தரமாக பேசிவருவதைக் கேட்கிறேன். ஆகை யால் இந்த பட்ஜெட் சாதனை மாத்திரமல்ல. இலங்கை இந்தியர் பிரச்னை தீர்க்கப்பட்டதானது இந்திய சரித்திரத்திலே பொறிக்கப் படவேண்டிய ஒன்றாகும்.

கனம் திரு. வி. ராமய்யா: நம்மைப் பொறுத்தவரையில் இப்போதுதான் ஆரம்பித்திருக்கிறது.

8th March 1965]

திரு. என். ஆர். தியாகராஜன்: உணவுப் பிரச்னைதான் மிகப் பெரிய பிரச்னை செப்டம்பர் அக்டோபர் மாத கட்டத்தில் இந்த ராஜ்யத்தில் மூன்றரை கோடி மக்கள் உணவில்லாமல் மடிந்து போகப்போகிறார்களே, அதற்கு என்ன செய்யப்போகிறீர்கள் என்று எதிர்க்கட்சியினர் கேட்டார்கள். அந்த உணவுப் பிரச்னை யைப்பற்றி யாரும் இப்போது பேசுவதில்லை. அது முடிந்து விட்டது. அவர்களே அதைப் பேசுவதில்லை என்றாலும் என் மனதில் இருப்பது உணவுப் பிரச்னைதான். இருந்தாலும் எதிர்க் கட்சியினர் இப்போது அதைவிட்டு விட்டு ஐயாயிரம் பேருக்கு உத்தியோகம் கிடைக்கக்கூடிய பிரச்னையில் இறங்கிவிட்டார்கள். இந்தி கட்டாயப் பாடமாக இருந்தால்கூட நமக்கு ஐயாயிரம் பேருக்குத்தான் உத்தியோகம் வரும். அதை வைத்துக்கொண்டு மூன்றரை கோடி மக்களைப் பெரிய குழப்படி செய்துவிட்டார்கள். அதற்குக்கூட தனியாக ஒரு நாள் விவாதத்திற்காக வைத்துப் பேசினார்கள். இப்போது முதலமைச்சர் அவர்கள் அதிலும் கெட்டிக்காரத்தனமாக மாணவர்கள் அத்தனை பேரையும் விடுதலை செய்துவிட்டார்கள் என்ற நல்ல செய்தியைப் பார்க்கிறோம். சிறு பிள்ளைகள்மீது கோபம் கொள்வதில் பிரயோஜனமில்லை என்று கருதி ஒரு குடும்பத் தலைவர் நடந்து கொள்வது போல செய்து இந்தப் பிரச்னையிலும் முதலமைச்சர் அவர்கள் வெற்றிபெற்று விட்டார்கள். தனுஷ்கோடியில் பெரும் புயல் வந்தது. அன்று என்னுடைய ஓஜிலாவில் தான்கு இடங்களில் நம் உள் துறை அமைச்சர், உணவு அமைச்சர் இவர்களை அழைத்துக்கொண்டு போய் உணவுப் பிரச்சினை பற்றி கூட்டம் கூடி மகா நாடு நடத்த ஏற்பாடு செய்து வைத்திருந்தோம். அதற்குச் செல்லும்போது தனுஷ்கோடியில் புயல் வந்துவிட்டது என்று செய்தி வந்தது. உடனே அங்கு பதினையாயிரம் ரூபாய் செலவில் ஏற்பாடு செய்து நடத்த இருந்த அந்த மகா நாட்டை நிறுத்தி விட்டு எல்லோரும் தனுஷ்கோடிக்கு விரைந்து விட்டார்கள். அப்போது பாம்பன் பாலத்தை இனி பார்க்க முடியுமா என்ற சந்தேகம் வந்தது. மதில் சுவர்கள் கைகளாமே என்றார்கள். முப்பது ராவண என்ற மன்னன் இருந்தானாம். அந்த மன்னர் கடல் அலைகளுக்குக் கூட தான்தான் அரசன் என்று நினைத்து கடல் அலைகளே நில்லுங்கள் என்று உத்தரவு போட்டாராம்

கனம் திரு. வி. ராமய்யா: கிங் கான்யூட்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சாலமன் என்ற மன்னன் அல்ல. யாரோ ஒரு மன்னன் என்று சொல்லலாம்.

திரு. என். ஆர். தியாகராஜன்: நாம் இப்போது சட்ட மன்றத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கும்போது வெளியே பார்த்தால் கடல் தெரிகிறது. பெரிய மதில் சுவர் ஒன்று கடலிலே கட்டிவிட்டால் சட்ட மன்றத்தில் கடல் புகுந்துவிடுமே என்று சொல்லலாமே. இப்படிப் பார்த்தால் கரையோரமாக எல்லா இடங்களிலும் மதில் சுவர் கட்டவேண்டுமென்றால் அதற்கு எவ்வளவு ரூபாய் ஆகுமோ தெரியாது. சீன தேசத்தில் நீண்ட சுவர் கட்டினார்கள். அதனால் என்ன பலன் கிடைத்தது? மங்கோலியர்கள் படையெடுக்காமலா இருந்தார்கள்? ஆகவே

[திரு. என். ஆர். தியாகராஜன்] [8th March 1965

இப்போது பாம்பன் பாலத்தை 45 தினங்களில் கட்டி முடித்திருக்கிறார்கள் என்பது மனித சாதனை என்று சொல்ல முடியாது. அது தேவ சாதனை என்றுதான் கூற முடியும். அதற்காகவும் முதலமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதைத் தவிர இந்த பட்ஜெட் மீது பேசும்போது கீழ் சட்ட மன்றத்திலென்ருல் சப்ஜெக்ட் வாரியாகப் பேசி விவாதிக்க முடியும். ஒவ்வொரு சப்ஜெக்டிலும் பேச வாய்ப்பிருக்கும். மேல் சபையில் பொது விவாதம்தான் நடத்த முடியும். சுகாதார அமைச்சர் அவர்கள் வெளியே சென்றுவிட்டார்கள். இருந்தாலும் மற்ற அமைச்சர்கள் இருக்கிறார்கள். குறிப்பாக முன்பு சுகாதார இலாகாவை எற்றிருந்த கனம் சேர்மன் இருப்பதால் அதிலுள்ள சில குறைகளைச் சொல்ல விரும்புகிறேன். எங்கள் ஊரில் தேவியில் முனிசிபாலிடியில் ஒரு சர்க்கார் ஆஸ்பத்திரி வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முனிசிபாலிடி அல்லாமல் பஞ்சாயத்து யூனியன் லிமிட்டில் ஒரு ஆஸ்பத்திரி இருக்கிறதா என்றால் இல்லை. அதுபற்றிகூட ஒரு கேள்வி போட்டேன். இன்னும் பதில் வரவில்லை. அது ஆபீசில் தங்கிவிட்டது என்று நினைக்கிறேன்.

மிஸ்டர் சேர்மன் : நல்ல பதில் சொல்லவேண்டுமென்று காத்திருக்கலாம்.

திரு. என். ஆர். தியாகராஜன் : பட்ஜெட்டில் தேனிக்கு ஆஸ்பத்திரி வருவதற்கு ஏதாவது அலாட்மெண்ட் இருக்கிறதா என்று நான்கு இரண்டு நான் கண்விழித்து தேடிப் பார்த்தேன். எதுவும் காணப்படவில்லை. பஞ்சாயத்து யூனியன் லிமிட்டிலும் ஆஸ்பத்திரி இல்லை. 1965 ஆண்டு சரித்திரத்திலேயே என்னுடைய முனிசிபாலிடியில்தான் ஆஸ்பத்திரி இல்லாமல் இருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் சரித்திரத்திலும் எங்கள் யூனியனுக்குத் தான் ஆஸ்பத்திரி இல்லாமல் இருக்குமென்று நினைக்கிறேன். ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன்பு கீழ்சபையில் இருந்தபோது கூட சொன்னேன். இன்னும் ஒன்றும் வரவில்லை.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அங்கே லியாதியஸ்தர்கள் இல்லையென்று நினைக்கிறேன். தேனியில் இருக்கிறவர்கள் எல்லாம் தியாகராஜனைப் போல திடகாத்திரமாக இருப்பார்கள் போலிருக்கிறது.

திரு. என். ஆர். தியாகராஜன் : நான் திடகாத்திரத்துடன் இருக்கிறேனென்பது. டாக்டர் வீட்டுக்குப் போய்க்கொண்டிருக்கிறேன்.

என் ஊரில் பெரியாறுத் தண்ணீரினால் பாசன் வசதியுள்ள நிலங்கள் இருக்கின்றன. வெங்கடாஜலபுரம் முதலிய ஐம்பது கிராமங்கள் பாலைவனமாகிவிட்டன. அதற்கு பெரியாறிலிருந்து ஒரு வாய்க்கால் வெட்டுவதற்கான திட்டம் ஒன்று இருக்கிறது. அந்தத் திட்டம் இன்னும் அமலுக்கு வரவில்லை. அந்தத் திட்டத்தினால் 4,000 எக்கர் நிலங்கள் பயனடைய முடியும் என்று

8th March 1965] [திரு. என். ஆர். தியாகராஜன்]

என்ஜினியர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் இருக்கும் பகுதி வாண்டை பகுதி. அங்கே இப்போது 60 முதல் 120 அடிக்கும் கீழே தான் தண்ணீர் கிடைக்கிறது; 18 குளங்கள் வரண்டு போய் விட்டன. நான் குறிப்பிட்ட திட்டம் கலெக்டராலும் செவின்யூ போர்டாலும் அங்கீகரிக்கப்பட்டு விட்டது. நாங்கள் செய்த ஒரு சிறிய தவறில் காரணமாக நின்றுவிட்டது. ஏக்கருக்கு ரூ. 1,000 கொடுக்கவேண்டும் என்று சொல்லப்பட்டது. அதற்குப் பிறகு 'பெட்டர்மெண்ட் லெவி' போடலாம் என்று நாங்கள் சொன்னோம். திட்டம் அமல் நடத்தப்பட வேண்டாம் என்று தள்ளி வைக்கப்பட்டிருந்தது. பிறகு திட்டத்தை கனம் உணவு அமைச்சர் உயிர்ப்பித்தார். இந்தத் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது என்றும், கவனிக்கப்படும் என்றும் கனம் தொழில் அமைச்சர் இந்த சபையில் கூறினர். ஐம்பது கிராமங்கள் இந்தத் திட்டம் வந்தால் தான் வாழ முடியும் என்ற நிலையில் இருக்கின்றன. எனவே இந்தத் திட்டத்தை சீக்கிரம் நிறைவேற்ற வேண்டுமென்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சனிக்கிழமையன்று கனம் அங்கத்தினர் ஸ்ரீ. நடராசன் நிமுகழகம் ஒருபோதும் தேச விரோதமாக நடந்துகொள்ளவில்லை என்று இந்த மன்றத்தில் சொன்னர். நான் இப்போது கூடாக பேசப் போவதில்லை. சாதாரணமாகத்தான் பேசப்போகிறேன். எனவே கனம் அங்கத்தினர் ஸ்ரீ. நடராஜன் பயப்பட வேண்டாம். (சிரிப்பு.) மதுரை ஜில்லாவில் காங்கிரஸ் கட்சியை வளர்க்கும் இயக்கத்தில் நான் மிகுந்த ஈடுபாடு உடையவன். இந்தப் பணியில் நான் முழு நேர ஊழியன். என்னிடம் வரும் காங்கிரஸ் ஊழியர்களிடம் "நீங்கள் முதலில் நம் கட்சியைப்பற்றிய விவரங்களையெல்லாம் தெரிந்துகொள்ளுங்கள். பிறகு தலைவர்களாக ஆகலாம்" என்று நான் சொல்வது உண்டு. ஸ்ரீ. அண்ணாதுரை கீழ் சபையில் அங்கத்தினராக இருந்தபோது அமைச்சர் சி. என். அவர்கள் திமு. கழகத்தினர் பிரிட்டிஷ் சர்க்காருக்கு தாசர்கள் என்று கூறினர். அதற்கு ஆதாரமாக அவர் சேலத்தில் நடந்த ஒரு மகாநாட்டில் ஸ்ரீ. அண்ணாதுரை அவர்களால் போடப்பட்ட தீர்மானத்தை எடுத்துக் காட்டினர்.

திரு. என். வி. நடராசன் : அன்று நாங்கள் பிரிட்டிஷ் சர்க்காருக்கு எதிராக இருந்திருந்தாலும், பிரிட்டிஷார் நாட்டை விட்டு வெளியேற வேண்டாம் என்று நாங்கள் சொல்லவில்லை என்பதை கனம் அங்கத்தினருக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. என். ஆர். தியாகராஜன் : அந்தத் தீர்மானத்தை நான் இங்கே படிக்கிறேன் :—

"கால நிலைமையையும், உலகப் போக்கையும், சர்க்கார் நிலையையும், நம் மக்கள் தன்மையையும், இதுவரை நாம் நடந்து வந்ததன் மூலம் ஏற்பட்ட அனுபவத்தையும், அதனால் உண்டான பலனையும், மற்ற விஷயங்களுக்கும் சர்க்காருக்கும் இருந்துவரும் நிலைமையையும், அதனால் அவைகளுக்கு ஏற்பட்ட பலனையும் நன்றாக ஜாக்கிரதையாக ஆலோசித்துப் பார்த்ததில் நம்

[திரு. என். ஆர். தியாகராஜன்] [8th March 1965

சமுதாயத்தின் எதிர்கால நலனைக் கோரியும், நம் கட்சியின் தன் மானத்தைக் கோரியும் நம் கட்சியின் போரால் இதுவரை நடக்கும் சர்க்காருக்கும் இருந்தவரும் போக்கை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டிய நிலைமைக்கு நாம் தள்ளிக்கொண்டு போகப் பட்டு விட்டோம்"—கட்சியின் தன்மானத்தைப்பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். "அதாவது, நம் கட்சி தோன்றிய காலம் முதல் இதுவரை நாம் பிரிட்டிஷ் சர்க்காருடன் ஒத்துழைத்து வந்தோம், சர்க்காருடன் ஒத்துழையாமை செய்து சர்க்காருக்கு தொல்லை கொடுத்துவந்த ஸ்தாபனங்களையும் எதிர்த்துப் போராடி சர்க்காருக்கு அனுகூலமான நிலைமையை உண்டாக்க உதவி செய்து வந்ததும், குறிப்பாக சென்ற ஐந்து வருட காலமாக நடந்து வரும் உலக யுத்தத்தில் நல்ல நெருக்கடியில், நேச நாடுகளின் வெற்றிக்குக் கேடு உண்டாக்கும் நிலையில் நம் நாட்டில் பல ஸ்தாபனங்கள் செய்து வந்த பெருங் கிளர்ச்சி களையும் நாச வேலைகளையும் எதிர்த்து அடக்குவதிலும், நேச நாடு களுக்கு வெற்றி உண்டாக்க பணம், ஆள், பிரசாரம் முதலியவை கள் நிபந்தனையின்றி சர்க்காருக்கு உதவி வந்ததும்"—இப் பொழுது சொல்லப்போவது மிகவும் முக்கியமானது—"சர்க்கா ராலும், பாமர மக்களாலும் நம் கட்சியை இழிவாகக் கருதப்படத் தக்க நிலை ஏற்படுவதற்குப் பயன்பட்டு விட்டது"—அப் பொழுதே சர்க்காராலும், பாமர மக்களாலும் அவர்கள் கட்சியை இழிவாகக் கருதக்கூடிய நிலை ஏற்பட்டிவிட்டது. மேலும் என்ன சொல்லுகிறார்கள் என்று பார்ப்போம். "இந்திய அரசியல் சமூக இயல் சம்பந்தமான பேச்சு வார்த்தைகளில் சர்க்கார் நம் கட்சி யையும், நம் தலைவியாகிய திருவிடர் பிரினிதியையும் அலட்சியம் செய்து வருகிறார்கள். இந்திய மக்களின் அரசியல், சமுதாய இயல் சம்பந்தமான ஸ்தாபனங்களில் நம் ஸ்தாபனம் தனிப்பிடத்தக்க தாகவும், தீர்மானமாக இருந்து ஓழுங்கு முறைக்குக் கட்டுப்பட்டு சர்க்கார் பொறுப்பு நடந்து வந்தும் நம் ஸ்தாபனம் சர்க்காரால் மற்ற சாதாரண ஸ்தாபனங்களோடு ஒன்றாகக்கூட சேர்த்துப் பேசுவதற்கில்லாததாக அலட்சியப்படுத்தப்பட்டது." இதுதான் ஸ்ரீ. அண்ணாதுரையின் புகழ்பெற்ற தீர்மானம். வந்தது கோபம் அவர்களுக்கு.

பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாவிலிருந்து போவதும் ஆகஸ்டிழி கத்தில் நீடுழி இருக்க வேண்டும் என்று அவர் பிரசாரம் போட் டிருக்கிறார். 1934ம் ஆண்டில் நாங்கள் குழந்தைகள் என்றார் அண்ணாதுரை. அப்போது ஸ்ரீ அண்ணாதுரைக்குப் அதிக வயது ஆகவில்லை. அப்போது என்போன்ற வாலிபர்கள் ஆயிரக் கணக் கானவர்கள் சிறை சென்றிருந்தோம். அன்று சட்ட சபையில் ஸ்ரீ. அண்ணாதுரை "நீங்கள்கூட ஒரு காலத்தில் வெள்ளைக்காரர் களுக்கு மனுப் போட்டீர்கள்" என்று காங்கிரஸ்காரர்களைப் பார்த் துக் கூறினார். "நாங்கள் மனுப் போட்டது சென்ற நூற்றாண்டில். அப்படி நாங்கள் மனுப் போட்டதுகூட, விடுதலை வேண்டும் என்ற தான்" என்று ஸ்ரீ. சுப்பிரமணியம் அப்போது பதில் சொன்னார். "இப்போது திரு. கழகத்தினர் அந்த 17-ம் நூற்றாண்டுக் காலத் திற்குப் போவதைப் பார்த்து நான் மிகவும் வெட்கப்படுகிறேன், வேதனைப்படுகிறேன்" என்றும் ஸ்ரீ. சுப்பிரமணியம் அப்போது

8th March 1965] [திரு. என். ஆர். தியாகராஜன்

சொல்லியிருக்கிறார். ஒரு கட்சியைப்பற்றிப் பேசுவதற்கு முன் அந்தக் கட்சியின் கொள்கையைத் தெரிந்துகொண்டிருக்க வேண்டும். சனிக் கிழமையன்று கனம் அங்கத்தினர் ஸ்ரீ. நட ராஜன் ஆஸ்பத்திரியிலிருந்துவிட்டு இங்கே வந்திருந்ததால், அவருக்குத் தொந்தரவு கொடுக்கக் கூடாது என்பதற்காக அன்று நான் இதுபற்றிப் பேசவில்லை.

திரு. என். வி. நடராசன்: காங்கிரஸ் இயக்கத்தை நான் குறை கூறுவதாகக் கனம் அங்கத்தினர் கருதுகிறார் போலிருக்கிறது. காங்கிரஸ்கூட தன் குறைகளை மாற்றிக் கொண்டு வந்திருக்கிறது. அன்று நான் பேசிய போது இந்த நாட்டைக் காட்டிக்கொடுக்கும் மனப்பான்மை தி. மு. கழகத்திற்கு இல்லை என்று இங்கே கூறினேன். முன் காலத்தில் பெரியார் திரு. ராமசாமி அவர் களுடைய இயக்கத்தில் திரு. அண்ணா அவர்களுடைய பங்கு என்ன என்று கூறினேன். எங்கள் கட்சியின் கொள்கை என்ன என்பது எங்களுக்குத் தெரியும். அது எங்களுக்குத் தெரியா விட்டாலும் எங்கள் தலைவர்களைக் கேட்டு நாங்கள் அதைத் தெரிந்துகொள்வோம். அந்தத் தீர்மானத்திற்குக் காரணமாக இருந்த பெரியார் திரு. ராமசாமி அவர்களை இப்போது காங்கிரஸ் காரர்கள் தங்கள் பக்கம் வைத்துக்கொண்டு, அவர்கள் எங்களை தேசத் துரோகிகள் என்று கூறுகிறார்கள்.

திரு. என். ஆர். தியாகராஜன்: அவர்கள் பெரியாரைத் தெரிந்துகொண்டிருந்தாலும் இன்னும் அவரைப் பின்பற்று கிறார்கள். பெரியாருக்கு 86 வயதில் புத்தி தெளிவு ஏற்பட்டு எங்களை ஆதரிக்கிறார். உங்களுக்கு அந்த வயதில்தான் புத்தி வரும்போல தெரிகிறது.

* திரு. கே. ஆர். ராமசாமி: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, சமீபத்தில் நடந்து முடிந்துவிட்ட சோக நிகழ்ச்சிகளால் உள்ளபடியே யாரும் வருத்தப் படாமலிருக்க முடியாதுதான். மாணவர்கள் நடத்திய கிளர்ச்சியில் இடையிலே தீயவர்கள் சேர்ந்ததால் அது திசை திருப்பிவிடப்பட்டதன் காரணமாகத் தான் அது மிகக் கிளர்ச்சியாக மாறியது. மற்றப்படி, ஆகஸ்டுப் புரட்சியில் எவ்வளவு உண்மையும் நியாயமும் பொதிந்து கிடந்தனவோ அவ்வளவு உண்மையும் நியாயமும் இந்த மாணவர் கள் கிளர்ச்சியிலும் பொதிந்து கிடந்தன என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தக் கிளர்ச்சியின்போது மாணவர்களும் போலீஸ் அதிகாரிகளும் போலீஸ்காரர்களும் பொதுஜனங்களும் இறந்தனர். அவர்கள் இறந்ததால் தவிக்கும் குடும்பங்களுக்கு என் ஆழ்ந்த அனுதாபத்தையும் வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டு மூன்று தினங்களுக்கு முன்பு டாக்டர் முதலியார் அவர்களும் முதலமைச்சர் அவர்களும் அவற்றைப்பற்றி யெல்லாம் அதிகமாகப் பேசி ஒருவருக்கொருவர் புன் படுத்திக் கொள்ளும் நிலையை ஏற்படுத்தக்கூடாது என்ற நல்ல முறையிலே பேசி அதைச் சுமுகமாகத் தீர்த்து முடித்தார்கள்.

[திரு. கே. ஆர். ராமசாமி] [8th March 1965

ஆனல் ஆளும் கட்சியில் உள்ள ஒரு சில அங்கத்தினர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தை இன்னமும் குறை கூறிக்கொண்டு நடத்த நிகழ்ச்சிகளின் பழியை எங்கள் மீது எப்படியாவது போடலாம் என்று நினைக்கிறார்கள். அவர்களுக்கு மட்டும் நான் பதில் சொல்ல வேண்டியவனுக இருக்கிறேன். திருச்சியிலே இந்தி எதிர்ப்பு மாநாட்டை நடத்தியவர்கள் அரசியல் விதவைகள், ஒதுக்கப்பட்டவர்கள், ஏதும் அறியாதவர்கள் என்று நம்முடைய கனம் அங்கத்தினர் ராமதாஸ் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் சொல்லுவேன். திருச்சியிலே மாநாடு கூட்டியவர்கள், கனம் அங்கத்தினருடைய பாணியிலே பேச வேண்டுமானல், அங்கே மாநாடு கூட்டியவர்கள் அரசியல் விதவைகள் அல்ல, அரசியல் அடிவருடிகள் அல்ல, அரசியல் அனுமதேயங்கள் அல்ல. காலமெல்லாம் காங்கிரசுக்காகப் பாடுபட்டு, சுதந்திரம் வாங்குவதற்கு தன்னையே அர்ப்பணித்துக்கொண்டு, சுதந்திரம் கிடைத்ததும் காங்கிரஸ் ஸ்தாபனத்திலே அரசாங்கத்தில் எந்தெந்தப் பதவிகள் உண்டோ அத்தனைப் பதவிகளிலும் இருந்து பார்த்த அந்த உத்தமர் ராஜாஜி அவர்களும் அதிலே கலந்து கொண்டார். முன்னாள் அமைச்சராக இருந்தவரும், இப்போது வழக்கறிஞராக இருப்பவரும், இதே மாமன்றத்தில் பல ஆண்டுக் காலமாக அங்கத்தினராக இருந்து நமக்கெல்லாம் நல்ல பல அறிவுரைகளை அளித்தவருமான தமிழ் வேள் பி. டி. ராஜன் அவர்களும் அந்த மாநாட்டிலே கலந்து கொண்டார்கள். அடுத்து சாதாரண ஏழைக் குடும்பத்திலே பிறந்து, பட்டம் பதவிகளைப் பெற்று, தன்னுடைய வாழ்க்கையை வளப்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற எண்ணமின்றி, நாட்டு மக்களுக்காக பல ஊர்களுக்கெல்லாம் சென்று பிரச்சாரம் செய்யும் போது, "சொல்லடிகளையும், கல்லடிகளையும்" வாங்கி இன்றைய தினம் சட்ட மன்றத்திலே எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார். அடுத்துத் தொழில் அதிபர் ஜி. டி. நாயுடு அவர்களும் அந்த மாநாட்டில் கலந்து கொண்டார்கள். அடுத்துப் பல தொழில் நிறுவனங்களையும், பல கல்லூரிகளையும் நடத்தி வரும வருமான கருமுத்துத் தியாகராஜ செட்டியார் அவர்களும், முத்தமிழ்க் காவலர் என சிறப்புப் பட்டம் பெற்றுத் தமிழ்த் தொண்டு செய்து வரும் விசுவநாதம் அவர்களும் அந்த மாநாட்டில் கலந்து கொண்டார்கள். பல நல்ல அறிவாளிகளெல்லாம் மாநாட்டில் கலந்துகொண்டு நாட்டிற்கு வரக் கூடிய ஆபத்தை எடுத்துச் சொன்னர்களே தவிர அவர்கள் எல்லாம் ஒதுக்கப்பட்டவர்கள் அல்ல. அப்படிப்பட்ட அறிவாளிகளுடைய எண்ணங்களையெல்லாம் நாம் கேட்டிருந்தால், இப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சியைக்கூட நாம் நடவாமல் செய்திருக்க முடியும். சுதந்திரத்தைப்பற்றிப் பேசும்போது உண்மையாக நான் சொல்லுவேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றிச் சொல்ல இருக்கிற விஷயத்தில் என்னை நானே விளம்பரப்படுத்திக் கொள்ளக்கூடிய நிலை உண்டு என்று நினைக்கக்கூடும். ஒரு காலத்திலே ஒரு இடத்திலே இருந்தோம். பிறகு அந்த இடம் சரியில்லை என்று அந்தக் ககழத்தைவிட்டுப் பிரிந்து நாங்கள் திராவிட முன்னேற்றக் கழகம் வளருவதற்கும் நாட்டிலே நல்ல பணி செய்வதற்கும் நான் அந்த ஸ்தாபனத்திலே முக்கியமான உறுப்பினனாக

8th March 1965] [திரு. கே. ஆர். ராமசாமி]

இருந்து வருகிறேன் என்பதை மிக மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அண்ணு அவர்களுடைய அறிவுரைகளையும் நல்ல ஒரு பணியையும் எண்ணிப் பார்த்து நாம் செயல்பட வேண்டுமே தவிர மேன்மேலும் புண்படக்கூடிய விஷயங்களையெல்லாம் பேசுவதிலே அர்த்தம் கிடையாது என்பதைத் தலைவர் அவர்களுக்கு மிகப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். உண்மையாக தியாகம் செய்தவர்களை நாங்கள் என்றென்றும் போற்றக் கூடியவர்கள். ஒரு புலவர்—இன்னும் அவர் உயிரோடு இருக்கிறார், அவர் காங்கிரசின் போராட்டக் காலத்திலே உப்புச் சத்தியாகிரகத்திலே தடியடிபட்டு சிறைக்கெல்லாம் சென்றவர்—அவர் என்னிடத்தில் ஒரு கவிதை எழுதிக்கொடுத்தார். சுதந்திரம் வாங்கினேம் என்று சொல்லுபவர்கள் கூட சரியாக அனுபவித்திருக்க முடியாது. நான் அனுபவித்திருக்கிறேன் என்று அந்தப் பெருமையைச் சொன்னர்.

தலை நிமிர்ந்தோர் காலம் வாழ்ந்திருந்தோம். தரணியெல்லாம் நமது கொடி பறக்கவிட்டோம். விலையற்ற மாணிக்கமும் மண், பொன் வாழ்வில் வேண்டுகின்ற ஆடையணி உலகம் மெச்சும் கலைகள் பல கண்டவர் நாம் வரியோர் சிந்தும் கண்ணீரைத் துடைப்பதிலே மகிழ்ச்சி கொண்டோம். நிலைகெட்டுப் போனதே அந்த வாழ்க்கை. நீங்கள் அதனை எனென்று நினைத்ததுண்டா?

வெள்ளையர் நம் நாட்டில் வளத்தைக்கண்டார். வியாபாரம் என்னும் நோக்கால் உள்ளே வந்தார். உள்ளழைத்தோம். ஒன்று பத்துக்கோடியென்றே உள்ள பொருள் அத்தனையும் சொந்தம் செய்தார். பிள்ளைப்பிராயத்திலே இருந்த நம்மை பெரும்பாம்பு நிலையினிலே வளைத்துக்கொண்டார். உள்ளபடி நமதடிமைத்தனையறுப்போம்; உணர்ச்சிபெற்று விழுத்தெழுங்களென்றார் காந்தி மகான்; சேர்ந்திருந்த மக்களெல்லாம் ஒன்று சேர்ந்தார்கள். காங்கிரசில் ரத்தம், ஆவி சிந்திடுவோமென முழுக்கினர்கள். கூர்ந்த மதியாளர்கள் பலர் வந்தார். நல்ல கொள்கைகளை மக்களுக்கே காட்டி நின்றார். அதன்பின், பரங்கியரோ நமக்கிந்த நாடு வேண்டாம் பாரதத்தை அவர்களுக்கே சொந்தமாக்க. கொள்கையிலே பிடிப்பு வைத்து கொதிக்கின்ற நெருப்புள்ளம், நிறைய உண்டு நெருங்குவது இனி நமக்காபத்தென்றார், நேரமிது சரியென்றார் ஓடிப்போனர்.

அதன் பின்னர் என்ன ஏற்பட்டது என்று மேற்கொண்டு சொல்ல ஆசைப்படவில்லை. நடந்து முடிந்து விட்ட நிகழ்ச்சிகள் இனிமேல் நல்ல முறையில் அமைய வேண்டும் என்ற எண்ணம் இந்த மன்றத்தில் உள்ள அனைவருக்கும் இருக்கிறது. அது போலவே எனக்கும் இருக்கிறது நான் சொல்லுவேன். எங்கள் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர் என். வி. நடராசன் அவர்கள் கூட சொன்னர்கள். முதலமைச்சர் அவர்கள் விரும்பி இருந்தால், நான் இன்னமும் சொல்லுவேன். இந்த மன்றத்திலே அமைச்சர்களைப்பற்றிப் பேசும்போதெல்லாம் பெருமையாக உரிமையோடு நான் பேசியிருக்கிறேன். குறிப்பாக முதலமைச்சர் அவர்களையும் தொழில் அமைச்சர் அவர்களையும் நான் பெருமைப்படுத்திப்

[திரு. கே. ஆர். ராமசாமி] [8th March 1965

பேசியே வந்திருக்கிறேன். ஏனைனில் ஒருவருக்கொருவர் நல்ல முறையில் பேசவேண்டும் என்ற எண்ணமே தவிர வேறு இல்லை. ஒரு கட்சியைப்பற்றிப் பேசுவதை கொஞ்சம் ஜாக்கிரதையாகப் பேசவேண்டும். அரசியல் சட்டத்திலே எவ்வளவோ பிரச்சினைகளை வைத்துக்கொண்டு அங்கத்தினர் தியாகராஜன் அவர்கள் விவாதித்தார்கள். இந்த விவாதம் எல்லாம் மனதைப் புண்படுத்தக்கூடிய விஷயமாக இருக்கிறதே தவிர அவை ஆராய்தல் அமைக்காது. இந்த மன்றத்தில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நிகழ்ந்ததில்லை.

முதலமைச்சர் அவர்கள் விரும்பியிருந்தால் அண்ணா அவர்களைப் பார்த்து நேரில் பார்த்து நீங்கள் உங்கள் போராட்டத்தை அந்தத் தேதியில் வேண்டாம், தள்ளி, ஒத்திக் வைத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லியிருந்தால் அண்ணா மாட்டேன் என்று சொல்லி விடுவாரா? நிச்சயமாக கேட்பார். மற்றவர்கள் ஏதேதோ செய்யும்போது நேர்மைக்காக பாடுபடக்கூடிய தலைவர். அவரிடம் தள்ளி வையுங்கள், அந்தத் தேதி வேண்டாம் என்றால் கேட்க்காமல் வைத்திருப்பாரா? அந்தத் தேதியில் வேண்டாம் என்றால், அன்றைக்கு நம்மை இண்டாந் குடிமக்களாகக்கூடிய மொழி இந்தி மொழி குடியாக தினத்தைத் தூண்டி கொண்டு அந்த நாளில் வருகிறது. நாம் இரண்டாந்தரக் குடி மக்களாக ஆக்கப்பட்டுவிடுவோம். அந்த நாள் துக்கமான நாள். அந்த நாளில் துக்கத்தைக் கொண்டாட எங்கள் இல்லங்களிலே கருப்புக் கொடி கட்டிக் கொண்டு அழுகிறோம் என்று சொல்லுவோம். குடியரசு தினத்தன்று நீங்கள் சிரிக்கிறீர்கள். நாங்கள் இரண்டாந்தர குடிமக்களாகப் போகிறோம் என்று அழுகிறோம். ஆனால் நீங்கள் சிரிப்பது ஓப்புக்காக சிரிக்கிறீர்கள். நாங்கள் உங்களுக்கும் சேர்த்து உண்மையாக அழுகிறோம் என்பதை வரக்கூடிய காலம் உங்களுக்குப் பதில் சொல்லியே திரும். இன்றைய தினம் எங்களுடைய கழகத்திலே முக்கியமான தலைவர்கள் எல்லாம் சிறைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். கருணாநிதியின் உடல் நலம் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே கண் ஆப்பரேஷன் செய்து கொண்டார். நெஞ்சு வலிக்கு மருத்துவம் செய்துகொண்டார். இப்போது நெஞ்சு வலியுடன் அவரை 400 மைலுக்கு அப்பால் கொண்டுபோய் சிறையில் வைத்திருக்கிறார்கள். அவர் அவ்வளவு பயங்கர வாதியல்ல. நீங்களாகப் பார்த்து கருணாநிதி அவர்களிடம் இன்ன தேதி இத்தனை மணிக்கு இந்த ஜெயில் வாசலில் நீற்க வேண்டும் என்று சொன்னால் தானாக நிற்பார். கருணாநிதி அவர்கள் தியாகத் தழும்புகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு நல்ல உள்ளம் படைத்தவர். ஆகவே அவரைப்பற்றி தப்பாகப் பேச வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜனவரி 26-ம் தேதிக்கு 10 நாட்களுக்கு முன் நடந்த பொதுக் கூட்டத்திலே பேசிய பேச்சுக்கள் எல்லாம் சகிக்க முடியவில்லை. இப்படிப் பேசுவது முறையல்ல. ஆகவே இனிமேலாவது நல்ல முறையில் பேச்சுக்கள் அமைய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நாட்டு மக்கள் நிம்மதியாக வாழவேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன். இப்போதாவது இந்தி திணிக்கப்படுவதால் உள்ள தீமைகளை, அதனால், நாம் இரண்டாந்தர குடிமக்களாக

8th March 1965] [திரு. கே. ஆர். ராமசாமி]

ஆவதைப்பற்றி நமது அமைச்சர்களுக்கு எடுத்துச்சொல்ல ஆசைப்படுகிறேன். வடவர்களிடம் சொல்லி நாம் எந்த உரிமை வாங்க வேண்டுமோ அந்த உரிமையை வாங்கித்தரவேண்டுமென்று அமைச்சர்களைக் கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. கே. ராமகிருஷ்ண ஆச்சாரி: கனம் தலைவர் அவர்களே, இந்த 1965-66 வருஷ வரவு செலவுத் திட்டத்தை வரவேற்று ஒரு சில வார்த்தைகளைப் பேச ஆசைப்படுகிறேன். இயற்கையின் சீற்றத்தாலும் எதிர்பாராத கஷ்ட நஷ்டங்களாலும் செயற்கையின் தூண்டுதலாலும் ஏற்பட்ட துன்பங்கள் அனைத்தையும் சமாளித்து இந்நாட்டு மக்களைப் பாதுகாத்த நமது சர்க்காருக்கும் குறிப்பாக நமது முதலமைச்சருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பொழுது நாட்டிலே மிக முக்கியமான பிரச்சினை உணவுப் பிரச்சினையாகும். உணவுப் பிரச்சினை சோம்பக் கவலை தரத்தக்கதாக இருந்த நேரத்தில், அதை நல்லமுறையில் சமாளித்தது நமது அரசாங்கம். ஆனாலும் உணவு அதிகாரிகள் இதிலே முக்கியமான சிலவற்றைக் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குடும்பக் கார்டுகளுக்கு கிராமங்களில் கொடுக்கப்படும் அரிசி மிக மிக மோசமாக இருக்கிறது. காரணம், அதை நல்ல முறையில் பாதுகாத்துக் கொடுக்காததுதான். இரண்டாவதாக ஆங்காங்கே கொள்முதல் செய்கிற நெல்லில் முதலாளிகள், நங்கள் சொந்த லாபம் கருதி அரிசியை ஈரமாக வைத்து விற்று விடுகிறார்கள். மற்றும் ஆங்காங்கே இருக்கிற கூட்டுறவு ஸ்தாபனங்களுக்குப் பக்கத்தில் இருக்கிற மில்லில் இருந்து அரிசியைக் கொடுக்காமல் எங்கோ தொலை தூரத்தில் இருக்கிற மில்லிலுள்ள அரிசியை வாங்க உத்தரவு கொடுக்கிறார்கள். இதற்காக கூட்டுறவு சங்கங்கள் செலான்படி பேங்கில் ரூபாயைக் கட்டிவிட்டு மில்லுக்குச் சென்றால் அவர்கள் இன்று வேறு கொடுக்கவேண்டியிருக்கிறது. அடுத்த நாள் வாருங்கள் என்று இரண்டு நாட்களை அலைக்கிறார்கள். அதன் பின் அவர்கள் நாய்வு இல்லாத அரிசியைக் கொடுக்கிறார்கள். அவர்களுக்கு உடனடியாக சிலவாகிவிட்டால் நல்லது. இல்லாவிடில் அது கட்டிப்பிடித்து வாடையும் எற்படுகிறது. இதை மக்கள் வாங்க மறுக்கிறார்கள். இதைவிட கிராமங்களில் நெல்லாகக் கொடுப்பது நல்லது. இதை உணவு அமைச்சர் அவர்கள் கவனித்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உணவு உற்பத்தி அதிகரிக்க வேண்டுமெனில் சர்க்கார் நல்ல பொறுக்கு விதைகளைக் கொடுக்கவேண்டும். உரம் முதலியவற்றைக் கொடுக்க வேண்டும். பொறுக்கு விதைகள் சில இடங்களிலே சமயத்துக்குக் கிடைப்பதில்லை.

சென்ற நவம்பர், டிசம்பர் மாதத்தில் கூட கன்னியாகுமரி ஜில்லாவில் நாஞ்சில் நாட்டில் சமயத்துக்கு உரம் கிடைக்காமலும், பொறுக்கு விதைகள் கிடைக்காமலும் விவசாயிகள் சொம்ப கஷ்டப்பட்டார்கள். எனக்குத் தெரிந்த விவசாயிகள் எட்டு மைல் பத்து மைல் தூரத்திலுள்ள கூட்டுறவு சொசைடிகளிலாவது

[திரு. கே. ராமகிருஷ்ணா ஆச்சாரி] [8th March 1965

கிடைக்குமா என்று விசாரித்துப் பார்த்ததில் கிடைக்க வில்லை. எனவே, சமயத்துக்கு இல்லாமல் மிகவும் அவதிப் பட்டார்கள். தஞ்சை ஜில்லாவில் சுற்று வண்டி மூலமாக எல்லா இடங்களுக்கும் உரம் வினியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக இந்த பட்ஜெட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி ஏற்பாடு செய்யா விட்டாலும், இதற்கென்று ஆங்காங்கே வசதியான இடங்களில் முன்னதாக சேமித்து வைத்து தக்க சமயத் தில் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதன்மேல் வாக்கடிய சம்பா பயிரானது ஒரே சமயத்திலே எல்லா இடங்களிலும் பயிரிடப்படும். அந்த இடங்களில் பங்குனி சித்திரையில் மழை பெய்தால் நல்ல பொறு விதை விதைப்பார்கள். அது நன்றாகக் காய்ந்து ஒரு மாதமானபிறகு தண்ணீர் பாய்ச்சு வார்கள். அதற்கு சமயம் தவறாமல் உரத்தையும் கொடுக்க அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். இது உணவு உற்பத்தி அதிகரிக்க வகை செய்யும் என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

இரண்டாவதாக சிறு நீர்ப் பாசனத் திட்டமெல்லாம் இன்னும் நிறைய செய்யவேண்டியிருக்கிறது. களம் பார்த்திய நிதி அமைச் சரும் நமது உணவு மந்திரி அவர்களும் சமீபத்தில் கன்னியாகுமரி ஜில்லாவில் சுற்றுப்பயணம் செய்கிறபோது, எங்கள் தொகுதியான ஆரல்வாய்மொழியில் வரவேற்பு நிகழ்ந்தது. நான் அவர்களுக்கு நன்றி கூறும்போது இந்தப் பொய்கை நீர்ப்பாசனத் திட்டத் தையும் சொல்லி தோவாளை தாலுகாவில் ஆரல்வாய்மொழியில் பொய்கை அணை என்ற திட்டமிருக்கிறது. அதற்கு ஏற்பாடு செய்யவேண்டும், அப்படிச் செய்தால் அதிகப்படியான நிலங் களுக்கு விவசாயம் செய்ய சாத்தியமாயிருக்குமென்றும் சொன் னேன். உணவு அமைச்சர் அப்போது அருகாமையிலே இருந்த திரு. டாக்டர் ப. நடராசன், எம்.எல்.ஏ. அவர்களிடத்தில் இது என்ன விஷயம் என்று கேட்டார். விஷயத்தைத் தெரிந்து கொண்டதும், சரி இதைச் செய்துவிடலாம் என்று சொன்னார். ஆனால் இந்த பட்ஜெட்டில் அதைப் பற்றிக் காணவில்லை. என்ற லும் நம் அரசாங்கம் இதை உடனடியாகக் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அணைக்கு முன் வேலையாக பொய்கை மலையில் சுமார் ஒரு லட்ச ரூபாய்க்கு மேல் செலவு செய்து தடுப்புச் சுவர் கட்டி முடித்திருக்கிறது. மழைகாலங்களில் தண்ணீர் அதிகம் வரும் சமயங்களில் தண்ணீர் பாயும் கால்வாய்களின் கரைகள் நல்ல முறையில் இல்லாததால் தண்ணீர் வீணாக வெளியில் போகிறது. இதைப் பல முறை அபிவிருத்தி கவுன்சில் தெரிவித்தும் சரி செய்யப்படவில்லை. இவ் விதம் தண்ணீர் வீணாவதால் இந்த வருஷம் விவசாயம் செய்து மேல் மழை இல்லாமலும் கிடைத்த தண்ணீரைப் பயன்படுத்த 'கலுங்கள்' சரியில்லாததால் பயிர்கள் வெளுக்காமல் போகுக்க நேர்ந்தது. உற்பத்தி முயற்சியில் இந்த மாதிரி சின்ன சின்னவைகளை கொம்ப துரிதமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக நமது பொற்கொல்லர் பிரச்னை இருக்கிறது. தங்கக் கட்டுப்பாடு வந்து சுமார் இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. இதற்கு முன்பு இந்த மன்றத்திலே அவர்களுடைய குறைகளைப்

8th March 1965] [திரு. கே. ராமகிருஷ்ணா ஆச்சாரி]

பற்றிப் பேசியிருக்கிறேன். நமது அரசாங்கம் கோடி ரூபாய்க்கு மேலே கடன் உதவி செய்திருக்கிறது. நமது சர்க்கார் மாஜி பொற்கொல்லர்களுக்கு ராணுவ வீரர்களுக்கு அளிக்கும் சலுகை களுக்கு அடுத்த படியாக விவசாயத்திற்கு நிலம் கொடுப்பது, வேலை தேடித் தரும் ஸ்தாபனங்களில் வயது, கல்வி இவைகளைத் தளர்த்தி வேலை கொடுப்பது, மாணவர்களுக்கு முதல் வகுப்பி லிருந்து புத்தக மானியம் வழங்குவது முதலிய உத்தரவுகள் பிறப் பித்திருந்தும் நடைமுறையில் யாருக்காவது எங்காவது விவசாயத்துக்காவது நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்றால் இது வரைக்கும் ஒன்றும் கொடுக்கப்படவில்லை. அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய தொகையையும் சரியாகக் கொடுக்கவில்லை. இந்த சமுதாயம் என்ன செய்யும்? நமது அமைச்சர் அவர்கள் ரூபாய் இரண்டாயிரம் வரை கடன் கொடுக்கலாம் என்று அறிவித்திருக் கிறார்கள். இதற்கு வியாக்கியானம் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒவ்வொரு மாதிரிச் சொல்கிறார்கள். அந்த அதிகாரிகள் சொல்வது என்னவென்றால், ரூபாய் இரண்டாயிரம் வரை என்றால் ரூபாய் 200 கூட கொடுக்கலாம். ரூபாய் இரண்டாயிரம்தான் கொடுத்துத் தீரவேண்டுமென்றில்லை என்பதாகவெல்லாம் சொல்கிறார்கள். அவர்களுக்கு ஒரே முறையில் பணம் கொடுத்தால்தான் ஏதாவது தொழில் செய்து பிழைக்க முடியும். அல்லாமல் 200, 300 கொடுத் தால் அது அவர்களுக்குத் தற்காலிகக் கடன்தான் அடைக்கத்தான் பயன்படும், அந்தப் பணம் வீணாகப் போகிறது. ஆகையினால் அந்தப் பணத்தினால் அவர்களுக்கு எந்த விதமான பலனும் இல்லாமல்போகிறது. அத்தோடு சில இடங்களில் கடன் வாங்கியவர்கள் ஒரே தெருவில் இரண்டு மூன்று சைக்கிள் கடைகள் வைத்துவிட்டார்கள். இந்த ஷாப்புக்கள் வைத்தவுடன் முன்னேடியாக வைத்த சைக்கிள் ஷாப் புக்காரன் மணிக்கு 15 காசு வாங்கிக்கொண்டிருந்தவன் இவர்கள் வந்தவுடன் 7 பைசாவாக ஆக்கிவிட்டான். இவர்கள் சைக்கிள்கள் எல்லாம் டயர் தேயாமல் இருந்து வருகிறது. அதனால் அவர்களுடைய வாழ்க்கை கூண்டைந்து வருகிறது. வெற்றிலை பாக்குக் கடை வைத்தால் பக்கத்துக் கடைக்காரர்கள் எல்லாம் தட்டார்கள் எல்லாம் இந்த மாதிரி வியாபாரத்திற்கு வந்துவிட்டார்கள் என்று அவர்களுக்கு முதல் தேறினால் போது மென்ற முறையில் வியாபாரம் நடத்துகிறார்கள். ஆகையால் கடன் வாங்கியவர்கள் பணத்தைக் கொண்டு வியாபாரம் நடத்த முடியவில்லை. ஜவுளிக்கடை, செடிமேடு துணிகள் கடை வைப்ப தற்காக வெளியிலும் கடன் வாங்கி வியாபாரம் செய்யும் ஆட் களுக்கு ஐயாயிரம் ரூபாய் வரையிலும் கடன் கொடுத்து அவர் களுடைய வாழ்க்கையை வளம்பெறச் செய்யவேண்டும். பல இடங்களில் கடன் வாங்கியவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்களுடைய கடன்களை நல்ல முறையில் வினியோகம் செய் யாததால் அவர்களது லட்சம் நிறைவேறவில்லை. இதைப்பற்றி முன் கூட்டத்தொடரிலேயே சொல்லியிருக்கிறேன். நல்ல முறை யில் ஒரு குழு அமைத்து சட்டமன்றத்திலுள்ள உறுப்பினர்களை அதில் சேர்த்து அவர்களைக் கொண்டு ஆராய்ந்து நல்ல தொழில் களை பொற்கொல்லர்கள் பெற ஏற்பாடு செய்யவேண்டும். தங்கக் கட்டுப்பாடு வெற்றி பெறவேண்டும். அதற்கு ஆவன செய்ய

[திரு. கே. ராமகிருஷ்ண ஆச்சாரி] **[8th March 1965**

வேண்டும். அமைச்சர் அவர்கள், இந்தக் குழு அமைக்கும் விஷயத்தைக் கவனத்தில் கொண்டு அந்தக் குழு மூலமாக என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவது இன்னும் அவர்களுக்கு மிஷினரி சாமான்களான ஸ்பேர் பார்ட்டுகள் செய்யச் செய்யலாம். டைம் பீஸ்கள் செய்ய தொழிற்சாலைகளை அமைக்க வேண்டும். இந்துஸ்தான் டூல்ஸ் கம்பெனி பெங்களூரில், கேரளாவில் இருக்கிறது. ஐதராபாத்தில் ஸ்தாபிக்கப் போகிறார்கள். தமிழ்நாட்டில் கூட ஒன்று ஸ்தாபிக்கலாம். அதில் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்களையும் கூட்டுறவு முறையில் பங்காளிகளாகச் சேர்த்து கொடுக்கும் கடனை பங்கு தொகையில் ஈடு செய்து ஆறு மாதம் பயிற்சி கொடுத்து அவர்களைப் பயன்படுத்திக்கொண்டால் சௌகரியமாக இருக்கும். அவர்களது கஷ்டங்கள் ஓளவு குறையும். அதனால் நமது லட்சியமும் நிறைவேறும் என்று எண்ணுகிறேன். பொற்கொல்லர்களுடைய பையன்கள் ஏதோ குறைந்த அளவில் உத்தியோகத்தில் இருக்கிறார்கள். அந்த சமூகத்தில் அதிகமான அளவில் உத்தியோகஸ்தர்கள் இல்லை. இருந்தாலும் அங்காங்கு நமது தமிழ்நாட்டில் பல இடங்களிலே பல ஜில்லாக்களிலே உத்தியோகம் வகிக்கிறார்கள். மாஜி பொற்கொல்லர் குழந்தைகளை அவரவர்கள் விருப்பப்படி அவரவர் ஜில்லாக்களிலே வேலைபார்த்தால். போட்டால் அவர்களுடைய வாழ்க்கை அவர்கள் வருமானத்தைக் கொண்டு நடைபெறவேண்டியிருக்கும், குடும்ப நிலை கொஞ்சம் கஷ்டமில்லாமல் இருக்க வசதியாக இருக்குமென்று நினைக்கிறேன். அவர்களுடைய அபேட்சையைக் கொடுத்தால் அங்கங்கே அவர்களுக்கு வேலை கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி அவர்களை மாற்றவேண்டுமென்று அதிகாரிகளைக் கேட்டால் அதைப் பற்றி அதிகாரிகள் கவனிப்பதில்லை. கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் சென்னையில் வேலை பார்த்தால் அவர்களது வாழ்க்கையை நடத்த முடியாமல் கஷ்டப்படவேண்டியிருக்கிறது. அந்த முறையில் சௌகரியத்தைச் செய்தால் அவர்களது வறுமை ஒருவாறு திருமென்று அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தப் பொற்கொல்லர்கள் வேலை செய்ய முடியாத நிலையிலும் வயதானவர்களாயும் இருப்பவர்கள் ஒன்றும் செய்ய முடியவில்லை. என்னைப் போன்றவர்களுக்கு அதிக வயதாகி விட்டது என்பதால் நீங்கள் லோன் வாங்கினால் திருப்பிக் கொடுக்க முடியாது என்று அனுப்பிவிடுகிறார்கள். இந்த மாதிரி இரண்டும் கெட்டான் நிலையில் இருக்கிறவர்களுக்குப் பணம் வாங்க முடியவில்லை. தொழில் செய்யவும் முடியவில்லை. அவர்கள் சோம்பக் கிடப்படுகிறார்கள். அவர்களுக்கு வயதானவர்கள் பெறும் பென்ஷன் திட்டத்தை வைத்துக் கொடுத்தால் நல்லது. வயது வந்த பிள்ளைகள் இருந்தால் கொடுக்க முடியாது என்ற விதி விலக்கை இவர்கள் விஷயத்தில் மாற்றிக்கொடுக்க வேண்டும். தகப்பனும் பிள்ளையும் தொழில் இல்லாமல் இருக்கிறார்கள். என்ன செய்யமுடியும்? படிக்கிற பிள்ளைகளுக்கு ஸ்காலர்ஷிப்புகளை சரியான முறையில் கொடுக்கவேண்டும். காலேஜ் அட்மிஷனுக்கும்

8th March 1965] [திரு. கே. ராமகிருஷ்ண ஆச்சாரி]

தனியான முறையில் சலுகை அளித்தால், அவர்கள் இந்தத் தொழிலையே விட்டுவிட்டு வேறு தொழில்களில் புகுந்து நல்ல முறையில் வாழ்க்கை நடத்துவார்கள். அவர்களுக்கு தனியாக சீட்டுகள் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அத்தோடு திருநெல்வேலியிலிருந்து நாகர்கோவில், நாகர்கோவில்-கன்னியாகுமரிக்கு ரயில்வே லைன் போட சர்வே நடந்து கொஞ்ச நாட்கள் ஆகிவிட்டன. இந்த ரயில் பாதையை நடத்த ரயில்வே இலாகாவுக்கு அதிகக் கஷ்டமில்லை. சம நிலப்பரப்பு உள்ள பூமி இருக்கிறது, அதிக கஷ்டம் இல்லை. ஆகையால் இந்த மூன்றாவது திட்டத்தில் ஆரம்பிக்க சிபாரிசு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசாங்க ஊழியர்களுக்கு ஆசிரியர்கள் உள்பட எல்லா ஊழியர்களுக்கும் இப்போது பஞ்சப்படியை உயர்த்தியதற்காக நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். கன்னியாகுமரி ஜில்லா இணைப்பிற்குப் பின்னால் இருக்கிற சர்வீஸ்கள் சரியான முறையில் இணைக்காமல் பல உத்தியோகஸ்தர்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எப்போதுமே ஆசிரியர்கள் பிரச்னை கன்னியாகுமரி ஜில்லாவில் பெரிய பிரச்னையாக இருந்து கொண்டிருக்கிறது. இங்குள்ள ஆசிரியர்களுக்கு ஒரு சம்பளமும் கன்னியாகுமரி ஜில்லாவில் இருக்கிறவர்களுக்கு ஒருவிதமான சம்பளம் என்று இருக்கிறது. இதையெல்லாம் நல்லமுறையில் செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN.: The House will now adjourn and meet again at 3-00 p.m. tomorrow.

The House then adjourned.

IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

* 147. *Short review of the activities of the Tuticorin Port for the first half of* 1964–65 *ending* 30*th September* 1964.

† 148. *Resume of work transacted by the Madras Legislative Council during the period from* 18*th to* 25*th January* 1965.

* Kept in the Legislature Library for reference.

† Circulated to all M.L.Cs. on 27th February 1965.

THE MADRAS LEGISLATIVE COUNCIL

Tuesday, the 9th March 1965.

The House met in the Council Chamber, Fort St. George, at three of the clock, Mr. Chairman (THE HON. SRI M. A. MANICKAVELU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Pension applications of Teachers

*** 124. Q.—SRI G. KRISHNAMOORTHY : Will the Hon. the Chief Minister be pleased to state—**

(*a*) whether there is any provision that applications for pension from teachers can be submitted six months in advance of actual retirement from service; and

(*b*) if so, whether instructions have been issued to all managements of schools to such effect?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) Does not arise.

SRI G. KRISHNAMOORTHY : In the absence of enforcement of such a provision, as there is delay—the delay seems to be with the managements—are the District Educational Officers calling for lists of teachers retiring during the year in advance from the managements?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not think it is necessary.

SRI G. KRISHNAMOORTHY : What is the procedure obtaining in the case of Government servants?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I would like to have notice.

SRI G. KRISHNAMOORTHY : What harm is there in just issuing such orders as many pension applications can be expedited and a lot of delay avoided ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I cannot say that it is necessary. Unless it is absolutely necessary, it need not be done.

SRI G. KRISHNAMOORTHY : Have the Government at least circularised the managements that the submission of lists is obligatory on their part?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Government have no information about the delays caused. I have answered that there is a provision that applications for pensions from teachers should be submitted six months in advance. That is insisted upon Nothing more need be done.

[9th March 1965

* 125 Q.—SRI G. KRISHNAMOORTHY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the number of applications for pension from teachers pending sanction by District Educational Officers for over a year (district-wise) as on 1st December 1964 ; and

(b) the reasons for such delay in granting the pension?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) The particulars have been called for from the Director of Public Instruction, and his report is awaited.

* 126 Q.—SRI G. KRISHNAMOORTHY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the number of applications for pension from Elementary School Teachers pending in the office of the District Educational Officer, Coimbatore, for over four years as on 1st December 1964; and

(b) the reasons for such delay in the grant of pension?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Nil.

(b) Does not arise.

SRI G. KRISHNAMOORTHY : As in a number of cases the delay is attributed to the non-traceability of the service registers and as especially in the district board high schools Service Registers have been transferred from the taluk board to the district board and then from the district board to the Panchayat Union offices and, therefore, they are said to be untraceable, can the Government examine the possibility of just issuing orders that the acquittance roll in the case of such teachers may be taken into account and their services verified?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I would suggest to the hon. Member to write to me. If he writes to me, I shall look into it.

Package scheme for groundnut cultivation

* 127 Q.—SRI S. K. SAMBANDHAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the number of acres brought under Package Scheme for groundnut cultivation in South Arcot district in different Panchayat Unions for summer and winter crops during 1963;

(b) the average production of groundnut per acre in these areas during the above year ; and

(c) the average production of groundnut per acre in these places prior to the introduction of the package scheme?

THE HON. SRI P. KAKKAN : (a) to (c) A statement is placed on the table of the House.

(அ) to (இ) சபைமுன் ஓர் அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

* Printed as Appendix on pages 51-52

9th March 1965]

SRI S. K. SAMBANDHAN : From the statement it is seen that no appreciable improvement is there due to the package scheme. Have the Government taken this into consideration and asked the Agricultural department for futher action in this matter ?

கனம் திரு. பி. கக்கன் : சார், இந்த புள்ளி விவரத்தைப் பார்த்தாலே தெரியும். புள்ளிவிவரத் துறை தெரியாளரின் கணக்கின் படி ஏக்கருக்கு 316 பவுண்டு அதிக விளைச்சல் ஏற்பட்டிருக்கிறது. அதிகமாகவில்லை என்று எப்படி சொல்லமுடியும் ?

திரு. எஸ். கே. சம்பந்தன் : குறிப்பிட்ட அளவுக்கு அதிகமாக இல்லை. பாக்கேஜ் ஸ்கீம் வைத்துக்கொண்டு அதற்காக செலவாகிற பணத்தை எடுத்துக்கொண்டாலும் சிரமத்தை எடுத்துக் கொண்டாலும் குறிப்பிட்ட அளவுக்கு உற்பத்தி அதிகமாகவில்லை என்பதால் மேற்கொண்டு அரசாங்கம் சித்தை எடுத்துக் கொள்ளுமா என்பது என்னுடைய கேள்வி.

கனம் திரு. பி. கக்கன் : நம்முடைய தேசத்திற்கு வெளிநாட்டு செலாவணி வேண்டியிருப்பதால் கொக்கடலை அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டுமென்று பாடுபடுகிறோம். அதற்காகத் தான் அரசாங்கம் சப்சிடி கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறது. விதைகள் வாங்கும்போது கூடுதலாக வந்தாலும்கூட மார்க்கெட் ரேட்டுக்கு விவசாயிகளுக்கு கொடுக்கவேண்டுமென்று அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. இதிலிருந்து எவ்வளவு அதிகமாக உற்பத்தி செய்யவேண்டுமென்று ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கின்றன என்பதை கனம் அங்கத்தினர் அறிவார்கள் என்று நம்புகிறேன்.

Production of paddy

* 128 Q.—SRI N. V. NATARAJAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) the quantity of paddy produced in the State during 1963-64; and

(b) the quantity exported to the Kerala State?

THE HON. SRI V. RAMAIAH : (a) 37·50 lakh tonnes of rice (excluding seed requirements).

(b) Quantity of paddy and rice exported to Kerala State—

Year.	Paddy.	Rice.
	(IN METRIC TONNES)	
1963	20,120	426,184
1964 (up to September)	15,246	438,129
Stocks moved after imposition of ban on Government to Government basis.	..	10,000

[9th March 1965

கனம் திரு. வி. ராமய்யா : நமது மாநிலத்தில் மார்ஜினலி சர்ப்ளஸ் நிலை இருக்கிறது.

திரு. என். வி. நடராசன் : நெல் அல்லது அரிசியை மாநிலத்திற்கு மாநிலம் கொண்டுபோவதில் சில கட்டுப்பாடுகள் இருக்க வேண்டியது அவசியமென்றுஎர் மாவட்டத்திற்கு மாவட்டம் விலக்க முன்வருமா ?

கனம் திரு. வி. ராமய்யா : இப்போதிருக்கிற நிலையை நீக்குவதாக இல்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, தஞ்சாஜர் மாவட்டத்தில் உற்பத்தியாகும் குறுவை அரிசியை தமிழ்நாட்டு மக்கள் அதிகமாக விரும்புவதில்லை. கோளத்திற்குத் தான் போய்க் கொண்டிருந்தது. ஆகையால் அதை அங்கேயே அனுப்பிவிட்டு மத்திய சர்க்கார் கோளாவிற்குக் கொடுக்கும் நல்ல அரிசியை இங்கே மாற்றிக் கொடுக்கும் ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. வி. ராமய்யா : கவர் அங்கத்தினர் அவர்கள் ஒரு வருஷத்திற்கு முன்னால் இந்த யோசனையை சொல்லியிருந்தால் சென்னை நகர மக்கள் ஒப்புக்கொண்டு இருப்பார்கள். சென்ற அக்டோபர், நவம்பர் மாதத்தில் பெற்ற அனுபவத்தில் இப்போது குறுவை அரிசியாக இருந்தாலும் சரி, நல்ல அரிசியாக இருந்தாலும் சரி பிடித்தமாக இருக்கிறார்கள். அதோடு நல்ல அரிசி நமக்கும் மற்ற அரிசி மற்ற இடங்களுக்கும் செல்லவேண்டுமென்பதை ஒப்புக்கொள்ள முடியாது. அப்படியிருந்தாலும் கூட நமது அரசாங்கம் முதலமைச்சர் மகாநாட்டில் ஒப்புக்கொண்டபடி ஆந்திராவிலிருந்து ஒரு லட்சம் டன் வரவழைத்து ஏழைகளோ அல்லது தொழிலாளிகளோ நமது மாநிலத்திலிருந்து இரண்டு லட்சம் டன் வேறு அரிசி கொடுப்பதாகவும் ஒப்புக்கொண்டிருக்கிறோம். சென்னை நகர மக்கள் விரும்புகிறபடி அவர்களுக்காக அந்த ஒப்பந்தத்தை செய்கிறோம்.

SRI G. KRISHNAMOORTHY : It is said that the movement within a district is banned from a specified area to another specified area. May I know on what basis the Government decide this specified area?

THE HON. SRI V. RAMAIAH : It is left entirely to the District Collector to fix up areas to help procurement.

DR. H. V. HANDE : Is it a fact that a good deal of paddy is lying idle in the Thanjavur district and that the Government are not able to move that easily?

THE HON. SRI V. RAMAIAH : If the hon. Member knows or has taken the trouble to study the position in Thanjavur, he will agree that at this part of the year, just for a few days, when the entire produce comes for marketing, it is not humanly possible for anybody to lift the entire quantity. There was some difficulty a few weeks back when the agents whom we appointed, due to lack

9th March 1965]

of resources, could not lift the entire quantity, and to ensure the support price to the producer, Government themselves came foward to buy such rice as was offered to Government. Now there is no difficulty at all.

திரு. எஸ். டி. சுந்தரம் : சர்க்கார் கொண்டுவரலாம் என்று அனுமதிக்கப்பட்டிருக்கும் சிறு அளவு அரிசியைக் கூட ஏழை மக்கள் கொண்டுவரும்போது செக் போஸ்டில் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் பிடித்துக்கொள்கிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

கனம் திரு. வி. ராமய்யா : இப்போதிருக்கிற முடிவின்படி பத்து லிட்டர் வரையில் எந்தவிதமான அத்தாட்சியும் இல்லாமல் கொண்டுவரலாம். அப்படிக் கொண்டுவருவதில் சிரமம் இருந்தால் அங்கத்தினர் குறிப்பிட்ட சம்பவத்தைப் பற்றி எழுதி அனுப்பினால் அதைப்பற்றிக் கவனிக்கலாம்.

SRI G. KRISHNAMOORTHY : What are the reasons for restricting the quantity recently to ten litres from one quintal?

THE HON. SRI V. RAMAIAH : Earlier we had permitted the movement of one quintal without any sort of permit. I do not like to make any accusation, but I am only stating a fact. This was taken as an opportunity for trade to move in the name of poor ordinary people paddy in large quantities in wagon loads. Instead of one merchant exporting to another merchant, say, 100 tonnes, he exported, in the name of one quintal, in the names of hundreds of persons, the same quantity without any sort of prevention. So, in order to put down that movement, Government have decided that it could only be ten litres.

SRI K. S. ABDUL WAHAB : May I kow, Sir, the quantity sent to Kerala in the year 1963–64 by the Government and the quantity sent by private merchants?

THE HON. SRI V. RAMAIAH : There was no restriction on movement and the movement was done by private people then.

SRI G. KRISHNAMOORTHY : May I know, Sir, what harm is there in transporting paddy even in larger quantities so long as the paddy does not go out of the State?

THE HON. SRI V. RAMAIAH : If the hon. Member will only go into the details of these movements and knows the points of loading and the places to which they are loaded, he will agree that the ban on the quantity of free movement which we have imposed is correct. The movement is not purely within the State. It is an organized attempt to see that paddy goes outside the State.

SRI S. K. SAMBANDHAN : Why should not Government take severe steps to stop such flow of rice and paddy outside the State?

THE HON. SRI V. RAMAIAH : This is one of such steps, Sir.

[9th March 1965

Valkaradu forest

* 129 Q.—SRI N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) the number of persons to whom forest lands were assigned in Theni, Allinagaram, and Valkardu forest during 1963-64;

(*b*) the persons to whom such forest lands are proposed to be assigned; and

(*c*) whether any representation has been received recently for the assignment of lands for constructing hospital and industrial school at Theni?

THE HON. SRI N. S. S. MANRADIAR : (*a*) to (*c*) Particulars are being collected.

Theni Bus stand

* 130 Q.—SRI N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Local Administraton be pleased to state—

(*a*) whether there is any proposal to shift the Theni Bus stand in Madurai district to any other place; and

(*b*) if so, what it is and the stage at which the matter now stands?

கனம் திரு. எஸ். எம். ஏ. மஜீத் : (அ) & (இ) தேனி நகராட்சி பஸ் நிலையத்தை தற்போதுள்ள இடத்திலிருந்து வேறொரு இடத்திற்கு மாற்றுவதற்கான முடிவு எதுவும் இருக்கிறது. ஆனால் இது தொடர்பான விண்ணப்பம் தற்போது எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

MR. CHAIRMAN : Questions are over.

[Note.— An astorisk (*) at the commencement of a speech indicates revision by the Member]

II. ANNOUNCEMENTS.

(1) *Election of nine Members to the Committee of Privileges.*

MR. CHAIRMAN : I have to inform the House that the following candidates have been validly nominated for election of nine members to the Committee of Privileges for the financial year 1965–66 :—

1. Dr. A. Lakshmanaswami Mudaliar.
2. The Hon. Sri R. Venkataraman.
3. Sri K. Anbazhagan.
4. Sri M. Rajah Iyer.
5. Sri K. Balasubramanya Ayyar.
6. Sri Mohanlal Mehta.
7. Srimathi Lakshmi Krishnamoorthy.
8. Sri K. Rajaram.
9. Sri S. K. Sambandhan.

9th March 1965] [Mr. Chairman]

As the number of candidates nominated is equal to the number of vacancies to be filled, namely, nine, I hereby declare them to have been duly elected to the Committee of Privileges. The Deputy Chairman is ex-officio a Member.

Under Rule 156 (4) of the Council Rules, I have nominated Dr. A. Lakshmanaswami Mudaliar to be the Chairman of the Committee.

(2) *Election of six Members to the House Committee.*

MR. CHAIRMAN : I have also to inform the House that the following six candidates have been validly nominated for election to the House Committee for the financial year 1965–66 :—

Sri M. Rajah Iyer.

Sri K. S. Abdul Wahab.

Sri A. Subramanyam.

Sri K. Ramadass.

Srimathi T. L. Thirupurasundari.

Sri S. D. Sundaram.

As the number of candidates nominated is equal to the number of vacancies to be filled, namely, six, I hereby declare them to have been duly elected to the House Committee.

In addition to the above, under Rule 173 (1) of the Council Rules, I nominate the following two members to be the members of the said Committee :—

Sri K. Rajaram.

Sri S. K. Sambandhan.

The Deputy Chairman of the Council shall be *ex-officio* the Chairman of the Committee.

III. ADJOURNMENT MOTION re. APPOINTMENT OF TEMPORARY PRESIDENTS OF PANCHAYATS.

MR. CHAIRMAN : I have received notice of an adjournment motion from the hon. Member Sri S. K. Sambandhan. It reads as follows :

'To discuss a definite matter of urgent public importance, namely, the appointment of temporary Presidents of Panchayats, which itself is unconstitutional and the further postponement of the election of the Panchayat Presidents which may lead to a collapse of the entire Panchayat administration in the State and which may lead to innumerable legal consequences due to the action which the temporary Presidents may take.'

Prima facie, the matter does not seem to come under the rules prescribed for moving adjournment motions. The appointment of temporary Presidents has not suddenly taken place. These appointments were there even when we began the current sittings of the Council. If it is such an urgent matter, the hon. Member ought to have brought the matter to my notice even on the first day of the sitting of the Council. I feel this is a matter for the

courts to decide whether there is provision or not for appointment of these temporary Presidents and it is not for the House to decide on the legality or the illegality of the action taken by the Government. So I am of opinion that the matter does not involve more than the ordinary day-to-day administration and therefore I withhold my consent for the matter being raised in the House.

(Sri S. K. Sambandhan rose.)

MR. CHAIRMAN : It is all over. However, the hon. Member can move his motion under Rule 42.

IV.—CALLING ATTENTION TO THE EXECUTIVE OFFICE OF THE KURINCHIPADI PANCHAYAT UNION, SOUTH ARCOT DISTRICT.

SRI S. K. SAMBANDHAN : Mr. Chairman, Sir, with your permission, I wish to call the attention of the Hon. the Minister for Local Administration to a matter of urgent public importance, namely, the absence of the Executive Officer of the Kurinchipadi Panchayat in South Arcot district, in consequence of which the work of the Panchayat has not been attended to properly and even the employees were not paid their monthly salaries. So it is necessary on the part of the Government to take steps to see that such long absence of the Executive Officers to Panchayats without substitutes being posted does not recur.

THE HON. SRI S. M. A. MAJID : Mr. Chairman, Sir, the Executive Officer of the Kurinchipadi Panchayat applied for casual leave for two days from the 20th February 1965 and stayed away from duty. Thereafter he applied for regular leave for three weeks. No prior intimation of his intention to proceed on leave was given either to the Joint Development Commissioner or the Government.

The Collector of South Arcot has addressed the Joint Development Commissioner recently for posting a substitute. In reply, the Collector is being informed that he may fill up the vacancy immediately by transferring a Grade I Gramasevak. It is hoped that an Executive Officer will be in position in the course of a week.

As regards payment of salaries due to the employees, the Collector is being told that he may give instructions to the local officers to draw and disburse the salaries immediately. It is expected that this will be done in a day or two.

In respect of the suggestion that the Government should see to it that the Executive Officers do not take leave without substitutes being posted, I may point out that this is the normal procedure. As already explained, the Executive Officer had stayed away of his own accord and urgent steps are being taken to meet the situation. Suitable action will be taken against the Executive Officer for his unauthorised absence, unless he has a valid explanation for taking leave and absenting himself suddenly.

V.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR 1965-66—*cont*

*திரு. க. அன்பழகன்: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு வழங்கப்பட்டிருக்கிற நிதி நிலை அறிக்கை மீது பொருளியல் வழியிலே கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு விரும்பி னாலுங்கூட என் சித்தமோ நாட்டிலே நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளையொட்டி அவசரங்கத்துக்கு வந்திருக்கின்ற பொறுப்புகளையும், மக்களுக்கு வந்திருக்கிற பாதங்களையும் கற்றிச் சுழல்கிறது என்பதை நான் முதற்கண் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த மன்றத்தில் ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்று தரப்பட்டு அந்தத் தீர்மானத்தின் மீது நம்முடைய மதிப்புக்குரிய எதிர்க் கட்சித் தலைவர் டாக்டர் இலட்சுமணசாமி அவர்கள் ஆழ்ந்த உணர்ச்சியோடு கூடிய கருத்துரை ஒன்று வழங்கி, அதிலே பெரும்பான்மையான கருத்துக்களை அவசரங்கம் ஏற்றுக் கொண்டு, பல்கலைக்கழக மாணவர்கள் கல்லூரி மாணவர்கள் அனை வரையும் சிறைகளினின்றும் விடுவித்து, அவர்கள் மீது தொடரப் பட்ட வழக்குகளையும் முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் கைவிட்டு இருக்கின்றார். அந்த வழக்குகளைக் கைவிட்டு மாணவர் களெல்லோரும் கல்லூரிகளுக்குச் செல்வதற்கான நல்லதொரு சூழ்நிலையைத் தோற்றுவித்து இருப்பதற்காக நான் உளமார்ந்த நன்றியை முதற்கண் தெரிவித்துகொள்ள விரும்புகிறேன். மாணவர்களுக்கு அரசாங்கம் காட்டுகிற நல்லெண்ணத்தின் அடிப் படையை முதன்மையாகக் கொண்டு அவர்களும் கல்லூரிக்குச் செல்வதற்குத் தலைப்பட்டிருக்கிறார்கள். அவர்களிலே பலர் வெளியூர்களிலே இருக்கிற காரணத்தாலே கல்லூரிக்கு நேற்றும் இன்றும் திரும்பாமல் இருந்தாலும் நாளையோ பின்னையோ நிச்ச யமாகத் திரும்புவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

நான் சார்ந்திருக்கிற கழகத்தின் தலைவர் அண்ணா அவர்கள் 15 நாட்களுக்கு முன்னரே மாணவர்களுக்கு எலெனியிட்ட வேண்டுகோளின் அடிப்படையில் தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன். மாணவர்கள் இத்தகைய கொள்கை அடிப்படையிலே ஒரு அரசியல் தொடர்புள்ள போராட்ட சூழ் நிலையிலே சிக்கிக் கொள்வதாலே, கல்வியிலே பெறவேண்டிய தகுதியை இழந்துவிடக் கூடாது. கல்வியில் நல்ல தகுதி பெற முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு தங்களை ஆளாக்கிக் கொள்ளாமல் தாங்களே காத்துக் கொள்ள வேண்டும், இத்தகையப் போராட்டங்களிலேயிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள வேண்டும். அறிஞர் அண்ணா அவர்கள் (முன்னரே இவ்வாறு) கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த மாநிலத்தின் முதலமைச்சருக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இவைகளையெல்லாம் என்னைப் போன்ற எதிர்க் கட்சியினர் தெரிவித்தாலே முதலமைச்சர் அவர்கள் பெரும்பாலும் அவற்றை நம்புவதில்லை. நம்பினாலும் நம்பியதை வெளியிடுவதில்லை. உண்மையாகவே மாணவர்கள் இந்தப் போராட்டத்திலே நிதி மாக ஈடுபட வேண்டிய நிலைமை ஏற்பட்டதற்கான மிக முக்கிய

[திரு. க. அன்பழகன்] [9th March 1965

காரணம் எது என்பதை அறியவேண்டும். மாணவர்கள் இந்தப் பிரச்னையைப் பற்றி—இந்தி ஆதிக்கம் ஏற்பட்டு விடுமானால் அதிலேயிருந்து மீள முடியாது என்ற முடிவுக்கு வந்தார்கள். அவர்கள் பல்வேறு கட்சியைச் சார்ந்து நிற்பவர்களும்—வெவ் வேறு கருத்து கொண்டவர்களும் ஆகக்கூடி இந்தி ஆதிக்கத்தை எதிர்க்கவேண்டும். அதைக் கண்டித்து அமைச்சரிடத்திலே தெரிவிக்கவேண்டும் என்ற எண்ணத்தால் தூண்டப்பெற்று ஜனவரி 25ம் தேதி அல்லு முதல் முதலாக முதல் அமைச்சர் அவர்களைக் காண ஊர்வலமாக வந்தார்கள். அதற்குப் பின்னர் கிளர்ச்சி சூழ்நிலையில் மாணவர்கள் வெளியிலே வந்து பலகாரியங்களிலே சுற்றுபடக்கூடாது என்ற எண்ணத்தாலோ அல்லது வேறு எந்தக் காரணத்தாலோ மாணவர்கள் இருந்த விடுதிகளிலே போலீசார் புகுந்து தாக்கியதால் காரணமாக, அவர்கள் 27-ம் தேதி மறு முறையும் முதலமைச்சர் அவர்களை கண்டு முறையிட ஊர்வலமாக வந்தார்கள். அதையொட்டி ஏற்பட்ட நிலைமையை எதிர்க் கட்சியிலே உள்ள நண்பர்கள் சொல்கிறபோது முதலமைச்சர் அவர்கள் கூட "அன்றையத் தினம் மாணவர்களைப் பார்க்க முடியாது என்று நான் சொல்லவில்லை" என்று தான் மறுப்பு தெரிவிக்கிறார். இப்படி அவர்கள் தெரிவித்தாலும்கூட ஆளுங் கட்சித் தலைவராக இருக்கிற உயர்திரு வெங்கட்டாமன் அவர்கள் முதலமைச்சரிடம்—அதுபற்றி அன்று யாரும் கேட்டகவில்லை எனவும் அதனால் அந்தக் கேள்வியே பறவில்லை என்றும் கூறுகிறார். இதனை நாங்கள் சொல்கிற காரணத்தால் அது ஏதோ தூண்டி விடுகிற, வேண்டுமென்று அமைச்சர் மீது பழிபோடுகிற நோக்கம் என்று எண்ணிக் கொண்டு 27-ம் தேதி அன்று நடைபெற்ற நிகழ்ச்சியை மறுப்பதிலே அளவு கடந்த அக்கறை காட்டுகிறார் கள். நான் இதற்காக வருத்தப்படுகிறேன். கோபப்படவில்லை. எனக்கு அந்த உரிமை இல்லை என்று கருத்தில் கொள்கிறேன். வருத்தப்படுவதற்கு காரணம் 27-ம் தேதி வந்த மாணவர்கள் கோட்டைக்கு முன்னாலே வர வேண்டுமென்றால் அமைச்சர்களைப் பார்ப்பது தவிர வேறு எந்தக் காரணத்துக்கும் இங்கு வரமாட் டார்கள், வரவேண்டிய அவசியமுமில்லை. முதலமைச்சரவர்களைப் பார்க்க வேண்டும் என்ற காரணம் அவர்கள் தாங்கள் முறை கடந்து தாக்கப்பட்டதைத் தெரிவிக்க வேண்டுமென்பது. அப் பொழுது மாணவர்களை முதலமைச்சர் பார்க்க மாட்டேன் என்று மிக திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டார் என்ற கருத்து மையில் பத்திரிகையிலேயே இருக்கிறது.

The Chief Minister had made it clear he would not meet the students' representatives as the arrests were a matter of law and order for the police to deal with.

என்று தெரிவித்தார் என்ற கருத்து இருக்கிறது. இதைச் சென்னை, உடனே பத்திரிகை ஆசிரியர்களும் மற்றவர் களும் என்னை தவறுகப் புரிந்து கொண்டு வெளியிட்டுவிட்டார் கள். எதிர்க் கட்சிக்காரர்கள் அதையே திரும்பத் திரும்ப வற்புறுத்திக் குற்றம் சுமத்துகிறார்கள் என்று அமைச்சரவர்கள் கண்டிக்கிறார்கள். அதற்கு மறுநாள் 28-ம் தேதி முதலமைச்சர்

9th March 1965] [திரு. க. அன்பழகன்]

பக்தவத்சலம் அவர்களை செய்தித்தாள் நிருபர்கள் சந்தித்துப் பேசினார்கள். அந்த நிருபர்கள் பல கேள்விகளைக் கேட்டார்கள். அந்தக் கேள்விகளுக்கு முதலமைச்சர் அவர்கள் பல பதில்களை தெரி வித்தார்கள். அதிலே ஒரு கேள்வி மாணவர்கள் தாது கோஷ்டி உங்களைச் சந்திக்க விரும்பினால் சந்திப்பீர்களா? என்பது அதற்கு முதலமைச்சர் பக்தவத்சலம் அழகாகச் சொல்லியிருக் கிறார். "மாணவர்களை சந்தித்துப் பேச நான் என்றைக்குமே தயாராயிருக்கிறேன்" என்றார். அதிலே உள்ள நல்லெண்ணத் தைப் பாராட்டுகிறேன். அதோடு சொல்கிறார்" அவர்களை நேற்று சந்திக்க மறுத்தது எந்தச் சூழ்நிலையில் என்பதைச் சிந்திக்க வேண்டும். வகுப்புக்குப் போகாமல் வந்தவர்களைச் சந்திக்க மறுத்தேன். நாளை விடு முறை நாள். மாணவர்கள் நாளை என்னை சந்திக்க வந்தால் அவர்களை சந்தித்துப் பேசுவேன்" என்று அமைச்சரவர்கள் தான் பார்க்க மறுத்ததை மறுநாள் ஒப்புக் கொண்டு தெரிவித்திருக்கிறார்கள். நான் இதற்காகக்கூட அவர் களைக் குற்றம் சாட்டவில்லை. அந்த நேரம் இருந்த சூழ்நிலையில் அவர்கள் அப்படிச் சொன்னது ஒரு வேளை "இவர்கள் எல்லாம் ஒழுங்கு மீறி வருகிறார்கள். இவர்களையெல்லாம் மதித்துப் பெரிது படுத்திவிட்டால் கிளர்ச்சியிலே ஈடுபட்டுவிடுவார்கள் என்று எண்ணிக்கொண்டு பேசியிருக்கலாம்". ஆனால் அதனாலேயே மாணவர்கள் மேலும் கிளர்ச்சி செய்யும் வழியிலே போயிருக்க லாம். கிளர்ச்சி நடத்தினால்தான் நியாயம் பிறக்குமென்று எண்ணியிருக்கலாம். இதை எதிர்கட்சிகாரர்கள் சொல்லும் போது ஆளும் கட்சியைச் சார்ந்த பொறுப்பிலே இருக்கிற அமைச்சரவர்கள், ஏதோ புனைந்து சொல்கிறார்கள் என்று கொள்ளாமல் அவர்கள் கண்டு உண்மைகளைத்தான் சொல்கிறார் கள். அவைகளுக்கெல்லாம் பரிகாரம் தேடவேண்டும். இவை கள் எல்லாம் நடந்து முடிந்து விட்டது, எனவே இவற்றைக் குற்றமாக எடுத்துக் கொள்ளாதீர்கள் என்று சொல்வார்களானால் நான் ஏற்றுக் கொள்வேன். ஆனால் வேண்டுமென்றே எதிர் கட்சிக்காரர்களோ, பத்திரிகைக்காரர்களோ இவற்றை புனைந்து சொல்கிறார்கள் என்று கொண்டால் அது நமக்கிடையிலே ஏற்ப் படவேண்டிய மனப்பூர்வமான நல்லெண்ணத்தை உருவாக்காது என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து இந்த மாணவர்கள் போராட்டத்திலே மதுரையிலே ஏற்பட்ட நிகழ்ச்சியைப்பற்றி சிந்திக்கவேண்டும். முதல் நாள் அங்கு ஏற்பட்ட கலவரம்பற்றியும் அதிலே யார் குற்றவாளிகள் என்றும் நான் கூற முன்வரவில்லை. அந்த உரிமையை நான் மேற் கொள்ளவில்லை. ஆனால் மதுரை கலெக்டரின் அறிக்கையிலே மாணவர் ஊர்வலம் அந்தத் தெரு வழியாக வந்தபோது ஒரு கட்சியைச் சார்ந்தவர்கள் தங்கள் அலுவலகத்திலே இருந்து ஓடிவந்து தாக்கியதால் தான் கலவரம் ஏற்பட்டது என்றும் குறிப்பிட்டுள்ளது.

திரு. என். ஆர். தியாகராஜன்: காங்கிரஸ் ஆபிசிலே இருந்து வந்ததாக கலெக்டர் சொல்லவில்லை.

திரு. க. அன்பழகன்: கலெக்டர் அறிக்கையின் கருத்தை முதலமைச்சர் ஏற்றுக் கொண்டால் போதும். அது எந்த இடத்திலே நடைபெற்றது, குற்றவாளிகள் யார் என்பது அங்குள்ள கலெக்டரோ அல்லது நீதி விசாரணை செய்பவர்களோதான் தீர்மானிக்க வேண்டும். அந்த அறிக்கையின் கருத்தை முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கி வைத்து விட்டு கிளர்ச்சிகளைப் பற்றி மற்றக் கருத்துக்களை மட்டும் எடுத்துச் சொல்லுவது முறை பொருத்தமாகாது. இன்னுமொன்று, கல்லக்குடி விடுதிகளுக்குள்ளே போலீசார் சென்று தாக்கியதாக நான் என்ன சொல்லும் போது அது நியாயமா அல்லவா என்பதை எந்த ஆளும் கட்சிகாரர்களும் தீர்மானிக்கக் கூடாது. நாமும் தீர்மானிக்க முடியாது. ஆளும் கட்சியின் தலைவர் அவர்களும், கட்சி அடிப்படையிலே தீர்மானிக்கக் கூடாது. அதைப் பற்றி நீதிபதி ஒருவர் தீர்மானித்தால்தான் நியாயம் கிடைக்கும். மாணவர்கள் கிளர்ச்சியை நிறுத்தி கல்லூரிக்குத் திரும்ப வேண்டும் என்ற இந்த சூழ்நிலையில் நான் அதைக் கிளற விரும்பவில்லை. ஆனால் அந்த நிகழ்ச்சிகளைப் பற்றி நீதி விசாரணை நடத்தவதே அனைவருக்கும் திருப்தியளிப்பதாகும்.

இந்த மாணவர்கள் மேற்கொண்ட போராட்டத்தைப்பற்றி நமது மதிப்புக்குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே ஒரு கருத்தை வெளியிட்ட நேரத்தில் அவர்கள் தெளிவாகத் தெரிவித்தது இது. இந்த நிகழ்ச்சி மிக வருந்தத்தக்கது. இப்படிப்பட்ட சூழ்நிலை தமிழ் நாட்டுப் பெயருக்கே கூட ஒரு தீமையாக அமைந்து விட்டது. இவைகளெல்லாம் மாணவர்களிடத்திலே எதிர்பாராமல் ஏற்பட்ட உணர்ச்சியின் காரணமாக என்பதை விடவே தனிப்பட்ட இதற்கு வேறு ஏதாவது காரணமிருந்தால் என்ன நினைக்க இடமில்லை. தங்களுடைய கவனக்குறைவு எதிர்கால வாழ்க்கைப் பாதகமாகவே இந்தப் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. அதனாலோ மாணவர்களிடையே ஏற்பட்ட உணர்ச்சியின் விளைவு இந்த கிளர்ச்சி என்று அந்தக் கருத்தை மாணவர்கள் ஏற்பதாக சொல்லப்பட்டிருப்பதாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் அப்படிப்பட்ட மாணவர்கள் கிளர்ச்சியைப் பற்றி ஒரு தகவலை பொறுப்பிலே உள்ள முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தபோது எதிர்க் கட்சிக்காரர்கள் தான் தூண்டிவிட்டார்கள் என்று சுட்டிக் காட்டுவதன் பலன் என்ன என்று கேட்க விரும்புகிறேன்.

தி.மு. கழகத்தைப் பொறுத்த வரை இந்த மாதிரி கருத்துக்கள் அடிப்படையானவை. எந்த ஒரு போராட்டத்தையும் தி.மு. கழகம் கழகத்தில் பொறுப்பு வகிப்பவர்களைக் கொண்டுதான் நடத்துமே தவிர கழகத்திலே தொடர்பு இல்லாதவர்களைக் கொண்டு ஒரு போராட்டத்தை நடத்த தி.மு.கழகம் இசைவதில்லை.

இரண்டாவது, எந்தப் போராட்டமாக இருந்தாலும் அது பயனுள்ளதின் வழியிலே செல்வதை தி.மு. கழகம் ஏற்றுக் கொள்வதில்லை.

மூன்றாவது, மாணவர்கள் அரசியல் கிளர்ச்சிகளிலே ஈடுபடுவதை தி.மு. கழகம் ஆதரிப்பதில்லை.

எனவே முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் தாண்டிவிட்டது என்ற கருத்துப்படி முதலமைச்சர் அவர்களோ, மற்றவர்களோ சொல்வார்களானால், அப்படி சொல்வதற்கான சரியான சான்று முகாந்தரம் இருக்குமானால் அதை அவர்கள் வெளியிட வேண்டும்.

நான் என் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால் மாணவர்களுடைய கிளர்ச்சியின் நோக்கமும் திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திய கிளர்ச்சியின் நோக்கமும் ஒன்றாக இருக்கலாம். அந்த கிளர்ச்சிகளின் நோக்கம் ஒன்றாக இருப்பதால் முறைகளும் வழிகளும் செயல்களும் முதலான எல்லாம் ஒன்று என்றோ அல்லது திராவிட முன்னேற்றக் கழகம் இப்படிப்பட்ட குற்றத்திற்கு உடந்தையாக இருந்தது என்றோ பொறுப்பிலுள்ள அமைச்சர்கள் குற்றச்சாட்டு கூறுவார்களேயானால் அப்படிப்பட்ட நிலையில் அவர்கள் இந்தக் குற்றச்சாட்டைச் சொல்லுவதற்கு முன் நாட்டில் நடைபெற்ற எல்லா நிகழ்ச்சிகளையும் விசாரித்து குற்றவாளிகளைக் கண்டறிய ஒரு நீதிபதியைக் கொண்டு நியாய விசாரணை (Judicial enquiry) நடத்தவதற்கு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அந்த விசாரணையின் மூலமாக ஒரு குற்றச்சாட்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது அதன் தலைமை மீது வெளிப்படுமானால் தலைவணங்கி மன்னிப்பு கேட்டுக் கொள்ள தயாராய் இருக்கிறேன். அதற்கு வழிசெய்யாமல் ஒரு பழியை ஒரு கட்சி அமைப்பின் மீது போட்டு விடுவதால் நாட்டில் நடை பெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளைப் பற்றி மக்கள் சிந்திக்கும்பொழுது இது எதோ திராவிட முன்னேற்றக் கழகத்தால் தூண்டப்பட்டது என்ற எண்ணம் ஏற்பட்டு மக்கள் கோபம் வேறு பக்கம் திரும்பும் என்று எண்ணிக்கொண்டு பேசினால், அது வேறுக்கத் தக்கது. ஒரு வேளை ஆங்காங்கு நடைபெற்ற கலவரங்களுக்கு காரணமாக இன்றைய தினம் பலர் கைது செய்யப்பட்டிருக்கலாம். அப்படி கைது செய்யப்பட்டவர்களின் பட்டியலை வைத்துக் கொண்டு யார் யார் இன்னென்ன காரியங்களுக்காக என்று ஆராய்ச்சி படித்துக்காட்டலாம். அது ஒன்றும் கஷ்டம் அல்ல. நிகழ்ச்சிகள் நடைபெற்ற பொழுது கைது செய்யப்படாமல், 10, 15, நாட்களுக்கு பிறகு கைது செய்யப்பட்டவர்களைப் பற்றி அது எந்த அளவு உண்மையானது என்பதும், அதில் என்ன நியாயம் நீதி இருக்கிறது என்பதும் வழக்கு மன்றத்தில்தான் தீர்மானம் செய்யப்பட வேண்டும். அது மட்டுமல்ல. இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டதற்குக் காரணம் திராவிட முன்னேற்றக் கழகம் இந்திய சென்னியை எதிர்க்க ஆதரிக்க வருந்தி தெரிவிக்க நாள் கொண்டாடியது தான் என்று அமைச்சர் தெரிவித்திருக்கிறார். அதற்கு நாள் கொண்டாட வேண்டிய நிலைமை திராவிட முன்னேற்றக் கழகத் தீர்மானத்தின்படி திகவும் இன்றியமையாத ஒன்று. அப்படி அதற்கு நாள் கொண்டாடுவதில் தவறுகள் தலைவர்கள் அல்லது நாட்டு மக்கள் நடுவராக நாமே கொண்டாடுவதற்கு

எந்த குந்தகமும் குறையும் ஏற்படுத்த கழகம் விரும்பவில்லை. அது மட்டுமல்ல. ஜனவரி 24-ம் தேதி வெளிவந்த அறிஞர் அண்ணு அறிக்கையில் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட துக்க நாள் நிகழ்ச்சியினுல் பொது இடங்களில் கருப்புக்கொடி கட்டினுல் ஒருவேளை ஆளும் கட்சியினரும் அமைச்சர்களும் கண்டிக்கின்ற சூழ்நிலை ஏற்படுகிறது என்றும், அமைச்சர் அவர்கள் தெரிவித்ததுபோல் அமைதிக்கு பங்கம் ஏற்படும் என்று தெரிவதால் அவர் அவர்கள் வீடுகளில் மட்டும் கறுப்புக்கொடி உயர்த்துங்கள் வேறு எங்கும் உயர்த்த வேண்டாம் என்று அறிவித்தார்.

திரு. எஸ். ஆர். தியாகராஜன் : சுதந்திரம் கிடைத்த பிறகு ஒரு நாளாவது சந்தோஷ நாள் கொண்டாடி இருக்கிறீர்களா சொல்லுங்கள் பார்க்கலாம்.

திரு. க. அன்பழகன் : நாங்கள் சந்தோஷ நாள் கொண்டாடுகிற அளவுக்கு நீங்கள் எங்களை வாழவிடவில்லை, வாழவைக்கவில்லை என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். தியாகராஜன் : அழுதுகொண்டே இருங்கள்.

திரு. க. அன்பழகன் : அந்த வருத்தத்தைக் கூட தெரிவிக்க உரிமையில்லை என்று எண்ணுவீர்களேயானால் அதை ஒட்டி இரண்டொரு கருத்து தெரிவிப்பது அவசியமாக இருக்கிறது. இதே குடியரசு நாள் போன்று மகிழ்ச்சிப்படும் நாள் தான் சுதந்திர நாளைக் குறிப்பிடக் காரணம் 1959-ம் ஆண்டு ஆகஸ்டு என்று கருதுகிறேன். அன்றைய தினம் வங்காளத்தில் முதலமைச்சராக இருந்த காலம் சென்ற டாக்டர் B.C. ராய் அவர்கள் அப்போது இருந்த சூழ்நிலையில் அசாமில் ஏற்பட்ட மொழிக் கலவரம் இனவெறி கலவரமாக வளர்ந்ததால் பாதிக்கப்பட்ட வங்காள மக்களுக்குப் பாதுகாப்பு கிடைக்கவில்லை என்று அதை துக்க நாள் என்று அறிவித்தார். அதற்கு காங்கிரஸ் பெரும் தலைவர்களான டில்லி அரசினர் கூடக் கண்டனம் கூட தெரிவிக்கவில்லை. யாரும் கண்டிக்கவில்லை. அன்று கவர்னர் அவர்கள் மாளிகையில் நடைபெற வேண்டிய விருந்து நிறுத்தப்பட்டிருந்தது. தகராறு மன்னங்கள் கொண்டாடும் சுதந்திர நாள் கொண்டாட்டம் நிறுத்தப்பட்டது. காங்கிரஸ் தலைவர் அறிவிப்பின்படி வங்கப் பிரதேசத்தில் சுதந்திர நாள் விழா நடத்தப்படவில்லை. இதை தெரிவிக்க காரணம் டாக்டர் B.C. ராய்க்கு இருந்த பெருமையும் தாழ்மையும் எங்களுக்கு இல்லை என்பதை ஒப்புக் கொண்டாலும் நாங்கள் நிகழ்ச்சி அளவில் ஒன்றுதான் என்பதற்கே.

திரு. என். ஆர். தியாகராஜன்: 17 வருஷங்களில் ஒரு நாள் எனக்கு உடம்பு சரியில்லை. நானும் கொண்டாடவில்லை.

திரு. க. அன்பழகன்: அவ்வாறு டாக்டர் B.C. ராய் துக்க நாள் நடத்த அவர் பெற்றிருந்த உரிமை இல்லையாக் கட்சியினர் பிற முடியாது என்று சொல்லுவீர்களேயானால் அந்த நியாயம் பற்றி பொது மக்கள் முடிந்து கொள்ளட்டும். மேலும் இந்தி திணிப்பை எதிர்த்து சில ஆண்டுகளுக்கு முன்னரே

பண்டித நேருவிடம் பல முறை வேண்டுகோள் விடப்பட்டது. அந்தக்காலங்களில் டாக்டர் ராஜேந்திர பிரசாத் குடியரசு தலைவராக இருந்தார். 1959-ல் குடியரசு தலைவர் என்ற முறையில் இந்தி எந்த எந்த வகையில் பரப்பப்பட வேண்டும் புகுத்தப்பட வேண்டும் என்று அவர் ஒரு அறிக்கையை வெளியிட்டார். அப்படிப்பட்ட அறிக்கை எங்களுக்கு வேதனையைத் தந்தது. உடனே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் குடியரசு தலைவர் தமிழ் நாட்டுக்கு வருகிற நேரத்தில் கண்டனத்தை தெரிவிக்க கருப்புக் கொடி பிடிப்போம் என்று அறிவித்தோம். ஒரு வேளை அது காங்கிரஸ்காரர்களுக்கு வருத்தமாக இருந்திருக்கலாம். ஆனால் எங்கள் கொள்கையின்படி அப்படித் தீர்மானம் செய்தோம் வருத்தத்தை தெரிவிக்க. அதற்குப் பின்னர் குடியரசு தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாதும், பண்டித நேருவும் அந்த பிரச்னை பற்றி கலந்து பேசியதன்பலனுக இந்தி திணிப்பு பற்றி உண்மையாகவே தென்னாட்டுக்காரர்கள் அச்சமுறுவதால் அதனை நீக்க வேண்டுமென்று பண்டித நேரு ஒரு அறிக்கை வெளியிட்டார்கள். அதே போல் குடியரசு தலைவர் டாக்டர் பிரசாத் அவர்களும் ஹைதராபாத்துக்கு வந்திருந்த தாளில் ஒரு அறிக்கை வெளியிட்டார். "நங்கள் எடுக்கும் நடவடிக்கைகள் இந்தி வளர்ச்சிக்காகவே தவிர பிற மொழியினர்மீது திணிப்பதற்காக அல்ல, தென்னாட்டுக்காரர்கள் அச்சமுறுகின்ற வகையில் என்றும் திணிக்க மாட்டோம் என்ற கருத்துப்பட ஒரு அறிக்கை வெளியிட்டார். அதைப் படித்துக்காட்ட நேரம் இடம் தராது. எதற்காக இதை குறிப்பிடுகிறேன் என்றுல் ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் தமிழக சட்ட மன்றத்தில் இன்று இடம் பெற்றிருக்கிற அளவுகூட அன்று இடம் பெறுத நிலையில். சட்ட மன்றத்தில் 15 பேர் பாராளு மன்றத்தில் 2 பேர் என்ற நிலையில் குடியரசு தலைவருடைய பெருமைக்கு இழுக்கு குந்தகம் ஏற்பட்டு விடும் கறுப்புக் கொடி காட்டினுல் என்று கருதியவுடன் பிரச்னையை உடனடியாக தீர்க்கவேண்டும் என்ற நல்லெண்ணம் பண்டித நேருவுக்கு இருந்தது. ஆகுதல் அளிக்கவேண்டும், புண்படுத்துகிற நிலையை வளரக் கூடாது என்று எண்ணியதால் அவரிடமிருந்து கழகத்தலைவர் அறிஞர் அண்ணு அவர்களுக்கு பாராளுமன்றத்திலுள்ள உறுப்பினர் மூலம் கடிதம் கிடைத்தது. நாங்கள் கறுப்புக்கொடி பிடிப்பதைக் கூட பண்டித நேரு அவர்களின் ஆகுதல் வார்த்தை, உறுதிமொழிகளைக் கேட்டு கைவிட நேரிட்டது. அதை ஒத்ததே இன்றைய நிலை.

திரு. கே. வி. ராமசாமி: பாயிண்ட் ஆப் ஆர்டர், ஸார். நாங்கள் இந்த விஷயத்தைப் பற்றி கூறும் பொழுது பேசக்கூடாது, விஷயத்திற்கு வாருங்கள் என்று கூறப்பட்டது. ஆனால் தற்சமயம் நண்பர் பேசும்பொழுது அது அனுமதிக்கப்படுகிறது.

திரு. என். ஆர். தியாகராஜன் : பட்ஜெட்டைப்பற்றி பேச வேண்டும் என்று சொல்லுகிறார்.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, எவரே இந்தச்செய்தி பற்றி எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றுல் ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் கொள்கைகள் ஒன்றுக இருப்பதும் இல்லை.

நிலைமைகள் பற்றிய கருத்துக்கள் வேறுபடுகின்றன. அந்நிலையில் எதிர்க்கட்சியினர் இயங்குவதற்கு வேண்டிய உரிமைகள் முறைகள் இவைகளை எல்லாம் ஆளும் கட்சியினரே திர்மானம் செய்து விட முடியாது. ஆளும் கட்சித்தலைவர்களும் பிறரும் பெருகிய உரிமையை எதிர்க்கட்சிக்காரர்கள் பெற முடியாத நிலை இன்றுள்ளது. சட்ட மன்ற ஒழுங்கு, நாட்டில் இடம் பெற வேண்டிய ஒழுங்கு, எதிர்க்கட்சிக்காரர்கள் தமது கடமைகளைக் காட்டிலும் இன்ன அளவுக்கு கிளர்ச்சிகள் நடத்தலாம். எவ்வளவு உரிமைகளை ஆளும் கட்சி அமைச்சர்கள் அனுபவிக்க முன்வர வேண்டும். அது முடியாது என்றால் சட்டப்படி எதையும் தடுக்க வேண்டும். இவ்வளவையும் குறிப்பிட்டுக் காரணம் 65 ஜூலையில் 26-ம் நாள் துக்க நாள் என்று தீர்மானம் முன்வைத்தும் கருணாநிதி அறிவித்து அன்று கறுப்புக் கொடிகள் பறக்கவிடப் பெறுமென்றும் என்று தெரிவிக்கப்பட்டது. பின்னர் கார்யவாஹர் போலீஸ் கூட்டம் ஒரு இடத்தில் நடத்தலாம் என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தது. ஆனால் அதற்குள் தலைவர்கள் கைது செய்யப்பட்டார்கள். பேச்சாளர்கள் தனி வேறு யாரும் இந்தத் தலைப் பட்டத்தை மறுகிற நிலைமை கூடாது என்று அறிவிக்கப்பட்டிருந்தும் தலைவர்களும் பேச்சாளர்களும் கைது செய்யப்பட்டனர். பொது இடங்களில் கறுப்புக் கொடி பறக்கவிடாதிருக்கவும், அவரவர்கள் இல்லங்களில் பறக்கவிட்டுக் கொள்ளலாம் என்றும் கலைமுதலமைச்சர் சட்டசபையில் தெரிவித்திருந்தார். ஆனால் அப்படி அவரவர்கள் வீடுகளில் ஏற்றப்பட்ட கொடிகளும் பலாத்காரமாக இறக்கப் பட்டன.

திரு. கே. ராமதாஸ்: [illegible] வற்கனவே ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மீது நண்பர் அன்பழகன் அந்தக் கருத்தையே திருப்பித் திருப்பிப் பேசினார்கள். பேச முடிக்கப் பட்டது. இருபது நிமிஷம் ஆகியும் இந்த வாழ்த்தைக்கூட இல்லாமல் கடந்த விஷயத்தை திருப்பிப் பேசிக்கொண்டிருக்கிறதை சட்ட மன்றத்தில் அனுமதிக்கலாமா?

MR. CHAIRMAN: The hon. Member will please be brief.

SRI S. K. SAMBANDHAN: Sir, it is for the Hon. Chairman to say that. It is not open to an hon. Member to say that the hon. Member may speak on the Governor's Address or on the Budget. There is nothing specific.

MR. CHAIRMAN: This is brought to my notice. The Hon. Member will please be brief.

திரு. க. அன்பழகன்: இந்த விஷயத்தில் நான் கட்சி அடிப்படையில் பேசவில்லை. அமைதி, ஒழுங்கு, சட்டம் ஆகிய மூன்று பிரச்னைகள் இதில் தொக்கி நிற்கின்றன. பொது அமைதிகூட வேண்டாம் என்ற நோக்கத்துடன்தான் ஒரு நாள் நாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சிகளின்போது அரசினரால் சட்டம் காப்பாற்றப்படவில்லை என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவிக்கக் கடமை பட்டிருக்கிறேன்.

MR. CHAIRMAN: Even that can be referred to briefly.

திரு. க. அன்பழகன்: நீதிபதி விசாரணை நடத்த கனம் அமைச்சர் தயாராயிருந்தால், 26-அன்று அரசினர் நடந்து கொண்டது பற்றிய குற்றச்சாட்டுகளை நிரூபிக்க நான் தயாராக இருக்கிறேன் என்று பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். நீதிபதி விசாரணை வேண்டாம் என்றால், தக்க வகையில் திருப்தியடையும் வண்ணம் சான்றுகள் வேண்டும் என்றும் கனம் அமைச்சர் கூறினால், சான்றுகள் கொடுக்கவும் நான் தயாராயிருக்கிறேன். ஜனவரி 25-லிருந்து 27 வரையில் நடை பெற்ற எந்த வன்முறை சம்பவங்களிலாவது போலீசார் தலையிடக்கை எடுக்க வில்லை. நான் ஆளும் கட்சியினரைப் பற்றிக் குறை கொல்லவில்லை. ஆளும் கட்சிக்குத் தவறு செய்ய உரிமைகள் இருக்கலாம். நடுநிலை யோடு நடந்து கொள்ள வேண்டிய போலீசார் நூற்றுக்கணக்கான நிகழ்ச்சிகளின்போது ஒரு தலைபக்கமாய் நடந்துகொண்டனர் என்றால், இது குறித்து, கனம் அமைச்சர் கான் ஒரு காங்கிரஸ்காரர் என்ற நினைப்பில் பேசுகிறார் என்று நான் நினைக்கிறேன். நிர்வாக பொறுப்பில் இருக்கிற நாம் ஆளும் கட்சியினர் என்ற முறையில், போலீஸார் இவ்வாறு நடந்துகொண்டது நியாயமானதுதான் என்று அவர் கருதுகிறாரா என்று கேட்க விரும்புகிறேன். ஒரு நாள் துக்க நாள் என்றால், அன்று சட்டபூர்வ முறைகளும் கள்ளி வைக்கப்படும் என்று எதிர்பார்க்கிறார்கள் இருக்கிறதா? சட்டப்படி நடவடிக்கை எடுக்க இந்த முறைகளை ஆளுங்கத்தார் பயன்படுத்தினார்களா, போலீசாரால் மக்களுக்குத்தர வேண்டிய பாதுகாப்பு கொடுக்கப்பட்டதா என்பனவெல்லாம் தெரிய வேண்டுமென்பதற்காகத்தான் நீதி விசாரணை கேட்கப்படுகிறது.

திருச்சி பின்னர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒரு முக்கியமான தலைவர் மு. கருணாநிதி அவர்கள் பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டிருக்கிறார். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் யாராயிருந்தாலும் அவர்கள் மேற்கொண்ட நிலைக்கு காரணமாக அமைந்து வைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று ஆரம்பக் கூறமுடியுமானால் நான் வருந்தியவனாவேன். ஆனால் அவர்கள் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் கலந்துகொண்டார்கள் என்பதற்காக ஆட்சியாளர்கள் அதற்கு இந்தப் பாதுகாப்புச் சட்டத்தை ஏன் பயன்படுத்த வேண்டும்? வேறு சட்டங்களைப் பயன்படுத்தியிருக்கலாம். வேறு சட்டங்களின்படி அவர்கள் மீது வழக்குத் தொடர வாய்ப்பு இருக்கிறது. அப்படி இருக்க, ஏன் பாதுகாப்புச் சட்டத்தை இதற்குப் பயன்படுத்த வேண்டும்.

இன்றைய தினம் போலீஸ் காவலில் இருக்கும் ஒரு சட்ட மன்ற உறுப்பினர் திரு. இராசாங்கம் அவர்கள் துன்புறுத்தப்படுவதாக எனக்குச் செய்தி வந்திருக்கிறது. அந்தச் செய்தி உண்மையா, பொய்யா என்று விசாரித்தறியக் கூடிய முழுவாய்ப்பு எனக்கு இல்லை. அந்தப் பொறுப்பு கனம் அமைச்சருடையது. ஒரு சட்ட சபை உறுப்பினர் காவலில் வைக்கப்பட்டிருக்கும்போது, அவர் செய்த தவறுக்காகவோ செய்யாத தவறுக்காகவோ அவரிட[illegible] மிருந்து வாக்குமூலம் பெறுவதற்காக அவர் துன்புறுத்தப் பட்டால்—எந்த வகையில் துன்புறுத்தப்பட்டாலும்—[illegible]

நாட்டில் ஜனநாயக முறைக்கு உகந்ததா என்று கவர் அமைச்சர் கள் சிந்தித்துப்பார்க்க வேண்டும். இது சம்பந்தமாக கனம் அமைச்சர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

* 145 Q.—SRI N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the districts in which the scheme of digging wells and installing pump-sets in the dry lands is being implemented; and

(b) whether any loan is granted for this or whether the Government take the responsibility of digging the wells?

THE HON. SRI P. KAKKAN : (a) & (b) A statement * is placed on the table of the House.

(அ) & (இ) சபையில் ஓர் அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

Fruit-bearing trees

* 146 Q.—SRI N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the Government grant loans to grow orchards;

(b) the names of fruit-bearing trees for rearing of which loans will be granted by the Government;

(c) the amount of loan which will be given per acre; and

(d) the loan granted so far in each district during 1963-64?

THE HON. SRI P. KAKKAN : (a) to (d) A paper * is placed on the table of the House.

(அ) to (ஈ) : சபைமுன் ஓர் அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

* Printed as Appendix I on pages 52–55

* Printed as Appendix II on pages 55–56.

[11th March 1965

Admission into the Medical Colleges

*147 Q.—SRI K. S. ABDUL WAHAB: Will the Hon. the Minister for Public Health be pleased to state the number of Caste Hindus, Muslims, Christians, and Harijans selected for admission into the Medical Colleges for the year 1964?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM:

Caste Hindus	487
Muslims	40
Indian Christians	68
Harijans	104

DR. H. V. HANDE: On what basis are they selected?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: They are selected on the population basis.

DR. H. V. HANDE: Are any special, extra marks given to *viva voce*?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: Yes, Sir. That is being done by the Selection Committee.

DR. H. V. HANDE: How many marks are allotted for this subject by the Selection Committee?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: That is left to the responsibility and discretion of the Selection Committee. Probably it may be 50.

SRI G. KRISHNAMOORTHY: Is it on a caste basis or district basis?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: It is on a districtwise basis. Preference is given to Scheduled Castes and Scheduled Tribes.

DR. H. V. HANDE: Do the Government give any directive as a policy to the Selection Committee in regard to allotment of extra marks?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: No, Sir.

Protected water-supply to Dharmapuri

*148. Q.—DR. T. V. SIVANANDAM: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal to provide protected water-supply to Dharmapuri, Salem district: and

(b) if so, the stage at which the matter now stands?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (a) No.

(b) Does not arise.

11th March 1965]

DR. T. V. SIVANANDAM: Is it a fact that Dharmapuri is one of the important municipalities of the Salem district and will the Government think of providing protected water-supply to that place at an early date?

THE HON. SRIMATHI JOTHI VENKATACHLAM: Dharmapuri has since become a municipality and the water-supply scheme for the municipality is likely to be taken up during the Fourth Five-Year Plan.

Kottur drinking water-supply scheme

*149. Q.—SRI N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Local Administration be pleased to state when the Kottur drinking water-supply scheme in Periakulam taluk, Madurai district, will be implemented?

கனம் திரு. எஸ். எம். ஏ. மஜீத்: கோட்டூர் கிராமத்திற்குக் குடிநீர் வழங்குவதற்கு சுருளியாற்றிலிருந்து நீரெடுக்கும் திட்டத்திற்கு சுமார் ரூ. 1,05,000 செலவாகும். மற்றும் இதற்கு அன்றாடம் 31,000 காலன் நீரெடுக்க அனுமதியளிக்கவும் வேண்டும். இத்திட்டம், கிராமப் பணிகள் மானியத்தின் கீழ் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளது. இதன்கீழ், எந்த ஒரு பணிக்கும் ரூ. 40,000-க்கு மேற்படாத தொகை செலவழிக்கப்படலாம். ஆனால் அப்பணிக்கு ஆகும் செலவில் 25 சதவீதம் உள்ளூர் மக்களால் கொடுக்கப்பட வேண்டும்.

மேற்படி நிதியைத் தளர்த்தியும் இத்திட்டம் அனுமதிக்கப் படலாம். ஆனால் அரசாங்கப் பங்கான 75 சதவீத நிதியைப் பெறுவதற்கேற்ப, கிராமப் பணிகள் மானியத்தில் போதுமான நிதி வசதி இருக்கவேண்டும். மற்றும் எஞ்சிய தொகையை பஞ்சாயத்து யூனியன் தன் சொந்த நிதியிலிருந்தோ அல்லது உள்ளூரில் நிதி வசூல் செய்தோ பெறவேண்டும். இவ் விஷயம் ஆலோசனையில் உள்ளது.

District Development Councils

*150 Q.—SRI G. KRISHNAMOORTHY (on behalf of SRI M. Rajah Iyer): Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether representations have been received that Special District Educational Officers in charge of Board High Schools are required to attend meetings of the District Development Councils; and

(b) if so the action taken or proposed to be taken thereon?

கனம் திரு. எஸ். எம். ஏ. மஜீத்: (அ) ஆம்

(இ) இந்த விஷயம் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி: அவர்கள் இந்த மீட்டிங்கில் ஆஜராவதைப்பற்றி என்ன தப்பிதம் இருக்கிறது என்று சர்க்கார் நினைக்கிறது?

கனம் திரு. எஸ். எம். ஏ. மஜீத்: இந்த விஷயம் இப்போது தான் சர்க்காருடைய கவனத்திற்கு வந்தது. கலெக்டரும் அவர் மீட்டிங்கில் ஆஜராக இருந்தால் நல்லது என்று கூறியிருக் கிறார்கள். சம்பந்தப்பட்ட இலாகா டைரக்டருக்கு அபிப்ராயம் கோரி எழுதியிருக்கிறோம். இன்னும் தகவல் வரவில்லை.

MR. CHAIRMAN : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—CALLING ATTENTION TO NON-GRANT OF ANNUAL INCREMENTS TO B.T. ASSISTANTS AND LANGUAGE PANDITS IN NORTH ARCOT DISTRICT BOARD.

*டாக்டர் அ. சிதம்பரநாதன்: ஐயா, வடஆற்காடு மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் பி.டி. பட்டம் பெற்ற உதவியாசிரியர்களும் மொழியாசிரியர்களும் மூன்றுண்டுகளாக அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய ஆண்டுயர்வுகள் கொடுக்கப் படாமல் இருக்கிறார்கள் என்பதையும், அவர்கள் தொடர்ந்தும் திருப்தியாகவும் வேலை பார்த்துவந்திருந்தும் தக்க காரணமின்றிக் கொடுக்கப்படாமல் இருக்கிறார்கள் என்பதையும், அதனால் அவர் களுக்கு ஏற்பட்டிருக்கும் பண்முட்டுப்பாடு பெரிது என்பதையும் இதனை உடனடியாகக் கவனித்து அவ்வாண்டுயர்வுகளைக் கொடுக் குமாறு ஆணையிட வேண்டும் என்பதையும் கனம் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Chairman, Sir, the confirmation and declaration of probation of all categories of teachers were not done from the year 1958 onwards either by the defunct District Board, North Arcot, or by the Special Officer, North Arcot District Board, or by the Collector (L. A. Branch), Vellore, resulting in huge accumulation of arrears of work in North Arcot District. After the Secondary Education Unit came under the control of the Director of Public Instruction with effect from 25th April 1963, necessary steps have been taken regarding the regularisation of services and declaration of probation of all temporary incumbents numbering about 500. The Special District Educational Officer, North Arcot, has addressed all the Headmasters of Board High Schools in his district and gathered necessary particulars in regard to the fixation of seniority and regularisation of services of the staff. The Government have not received any specific representation to the effect that increments had not been sanctioned to the B.T. Assistants and Language Pandits serving in the Board High Schools in North Arcot District. However, with reference to a representation received from Dr. A. Chidambaranathan that increments had not been sanctioned to Tamil Pandits in Thanjavur District, the Director of Public Instruction was instructed to issue necessary instructions to all the Special District Educational Officers to see that expeditious action was taken in this regard. It is hoped that the Special District Educational Officers would have by this time taken action in the light of the instructions issued by the Director.

III.—GOVERNMENT MOTION.

DISCUSSION ON THE OFFICIAL LANGUAGE POLICY.

*கனம் திரு. எம். பக்தவத்சலம்: Sir, I move—

"That the Official Language Policy be taken into consideration."

தலைவர் அவர்களே, மொழிப் பிரச்னை உண்மையிலேயே இந்த நாட்டைப் பொறுத்தமட்டில் ஒரு சிக்கலான பிரச்னையாக இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. அதற்குக் காரணம் என்னவென்றால் நாம் சுதந்திரம் அடைந்தது ஒன்று. இரண்டாவது பல மொழிகள் பேசப்படுகிற இந்த நாட்டிலே அரசியல் அமைப்புச் சட்டத்தில் 14 மொழிகள் தேசிய மொழிகளாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன. நம்முடைய காலம் சென்ற பிரதமர் அவர்களே அடிக்கடி வற்புறுத்திக்கூறியிருப்பது போல், 14 மொழிகள் தேசிய மொழிகள்; 14 மொழிகளுக்கும் சம அந்தஸ்து உண்டு; எல்லாம் தேசிய மொழிகளாகவே ஒப்புக் கொள்ளப்பட் டிருக்கின்றன, என்பதை யாவரும் உணருவார்கள். ஆனால், நம்முடைய அரசியல் அமைப்பு, ஆட்சி அமைப்பு, யூனியனுக இருக்கிறது. மத்திய ஆட்சி வேறு, மாநில ஆட்சி வேறுக இருக்கிறது. மாநிலங்கள் இப்போது அநேகமாக மொழி வாரியாகவே இருக்கின்றன. ஒரு மொழி பேசப்படுகிற சில மாநிலங்கள் இரண்டு, மூன்று மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருக் கின்றனவே தவிர, ஒரு மாநிலத்திலே பல மொழிகள் பேசப் படுகிற பிரச்னை இல்லை. இந்த மாநிலத்தில்கூட தெலுங்கு பேசு கிறவர்களும் மலையாளம் பேசுகிற ஒரு சிலரும் இருக்கலாம். ஆனால், பொதுவாக மொழிவாரியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்டிருக் கின்றன. மத்தியப் பிரதேசத்தில் இந்தி தாய் மொழியாக உள்ளது. உத்திரப் பிரதேசம் இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டது. அது மாதிரி ஒரு மொழி பேசப்படுகிற மாநிலம் ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருக் கின்றனவே தவிர, அநேகமாக ஒரு மொழி பேசும் அமைப்பு களாகவே மாநிலங்கள் அமைந்திருக்கின்றன. இருந்தாலும் சிறு பான்மையோர் பிரச்னை இருக்கிறது. அதிலும் இந்த அரசாங்கம் கண்டிப்பாக அனுசரிக்க ஏற்றுக்கொண்டிருக்கிற சில பகுதிகள் உள்ளன. மொழி விஷயத்தில், படிப்பு விஷயத்தில், வேறு மொழி பேசுகிறவர், சிறுபான்மையோரின் நலன்கள் போதியளவு பாது காக்கப்படவேண்டும் என்பதில் அரசாங்கம் கண்ணும் கருத்து மாக இருக்கிறது. இதைப்பற்றி என்ன என்ன கோட்பாடுகள் அமைத்துக் கொள்ளவேண்டுமென்று முடிவு செய்தபொழுது, இதைப் பார்த்த மத்திய அரசாங்கத்தின் முன்னாள் உள்நாட்டு அமைச்சர் அவர்கள்—இப்போதுள்ள பிரதமர்—இந்த நகல் வேண்டுமென்று கேட்டார்கள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே இது உண்மையில் அமைக்கப்பட்டிருக்கிறது. மற்ற மாநிலங் களுக்கும் நாம் தெரிவிக்கவேண்டுமென்று இந்த நகலையும் அனுப்பி வைத்தேன். சிறுபான்மையோர் விஷயத்தில் நாம் கவனம் செலுத்துகிறோம். தமிழ் நாட்டிலே ஆங்கிலம், தமிழ் தவிர ஆறு மொழிகள் பயிற்சி மொழிகளாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்

[திரு. எம். பக்தவத்சலம்] [11th March 1965

இன்றன. சிறு பான்மையினர் வேண்டுமென்றால் தெலுங்கோ, மலையாளமோ, குஜராத்தியோ படித்துக்கொள்ளலாம். சென்னையில் குஜராத்தி சொல்லிக் கொடுக்கிற பள்ளிக்கூடம் ஒன்று இருக்கிறது. அது மாதிரியே இந்தி சொல்லிக் கொடுக்கிற பள்ளிக்கூடம் ஒன்று இரண்டு இருக்கின்றன. ஆனால், நாம் சுதந்திரம் அடைவதற்கு முன்பு இது ஒரு பிரச்னையாக எற்படவில்லை. பல மொழிகள் பேசிக் கொண்டிருந்தாலும் இது ஒரு பிரச்னையாக ஏற்படவில்லை. எனென்றால், ஆட்சியைப் பொறுத்தவரையில் ஆங்கிலத்தில் நடந்தது. அப்போதுகூட கிராமங்களில் கிராம முன்சீப், கணக்குப்பிள்ளை கணக்கு வைக்கிறது எல்லாம் தமிழில் தான் இருந்தது. நான் சின்ன வயதில் பார்த்திருக்கிறேன். இருந்தாலும் அப்போது ஆட்சி மொழி ஆங்கிலம் தான். மாநிலத்திலும் ஆட்சி மொழி ஆங்கிலம் தான். கோர்ட்டுகளில் வழக்கறிஞர்கள் தமிழில் தான் பேசினார்கள். ஆனாலும், ஆட்சி மொழி ஆங்கிலமாகத் தான் இருந்தது. மத்திய மாநில ஆட்சியைப் பொறுத்த மட்டில், அப்போதே மகாத்மா காந்தி அடிகள் சுதந்திரப் போராட்டத்தின் தலைமையை ஏற்றுக் கொண்ட சமயத்தில் தீர்க்கதரிசனத்துடன் இதை வற்புறுத்தினார்கள். பாரத நாட்டுக்கு ஒரு மொழி வேண்டும், அது பெருவாரியான மக்களால் பேசப்படுகிற மொழி யாக இருக்கவேண்டும், அதற்கு இந்தியையே வைத்துக் கொள்ள லாம் என்று கூறினர். ஆகவேதான் இந்தி, நிர்மாணத் திட்டத்தில் ஒரு அம்சமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதே சமயத்தில் மற்றொன்றையும் காந்தி அடிகள் நம்மிடம் வற்புறுத்தினார்கள், நம்மை உணரச் செய்தார்கள். மாநிலங்களில் அலுவல்களை தாய் மொழியில்தான் நடத்த வேண்டும் என்றார்கள். அதற்கு இணங் கத்தான் சென்னை ராஜதானி காங்கிரஸ் கமிட்டி மாறி தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி, ஆந்திரா காங்கிரஸ் கமிட்டி, கேரள காங்கிரஸ் கமிட்டி என்று எல்லாம் மொழிவாரியாக காங்கிரஸ் ஸ்தாபனம் அமைக்கப்பட்டது. சுதந்திரம் அடைந்த உடன் அரசியல் அமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அந்தச் சட்டத்தில் 343, 344 என்ற இரண்டு பிரிவுகளைக் கனம் உறுப்பினர்கள் கவனித்து இருப்பார்கள். 343-வது பிரிவு எந்த மொழியில் ஆட்சி நடத்துகிறது என்பதைப்பற்றியது. இதில் மத்திய ஆட்சியைப் பொறுத்தவரை இந்தி தான் ஆட்சிமொழியாக இருக்க வேண்டு மென்று சட்டம் கூறுகிறது. ஆனால், 15 ஆண்டுகளுக்கு இது வரையில் இருந்ததுபோல் ஆங்கிலமே தொடர்ந்து ஆட்சிமொழி யாக இருக்கலாம் என்று அதில் கூறப்பட்டிருக்கிறது. மாநிலங் களைப் பொறுத்தவரையில், நாம் எந்த மொழியை வேண்டு மென்றாலும் வைத்துக் கொள்ளலாம். 14 மொழிகளில் எதை வேண்டுமென்றாலும் வைத்துக் கொள்ளலாம் என்று அதிகாரம் இருக்கிறது. அந்த அதிகாரம் நம் சட்ட சபைக்கு அளிக்கப்பட் டிருக்கிறது. அதோடு கூட ஆங்கிலத்திலும் வேண்டுமென்றால் வைத்துக் கொள்ளலாம் என்று அதிகாரம் அளிக்கப்பட்டிருக் கிறது. நாம் இந்த மாநிலத்தில் ஒரு சட்டம் செய்தோம். அந்தச் சட்டப்படி தமிழ் தான் ஆட்சிமொழி என்று நிர்ணயித் திருக்கிறோம். சட்ட மன்றம் அதைச் சட்டமாக்கி இருக்கிறது.

11th March 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

அந்த வகையில் தமிழை ஆட்சிமொழி ஆக்குவதில் வேகமாக ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்கிறோம். அதற்கு glossary தயார் செய்யவேண்டியிருக்கிறது. சொற் களஞ்சியம் தேவை. தகுதியான சொற்கள் வேண்டும், புரியாத சொற்களைப் போட்டுப் பயனில்லை. எல்லோரும் புரிந்து கொள்ளக் கூடிய அளவில் அந்தக் கொள்கைகள் கடைபிடிக்கப்பட்டு மாநில ஆட்சியைப் பொறுத்தமட்டில் தமிழ் ஆட்சிமொழி யாகியிருக்கிறது. ஆனால், ஆங்கிலத்தைத் தொடர்ந்து வைத்துக் கொள்ள வேண்டுமென்று ஆங்கிலத்தையும் சேர்த்து வைத் திருக்கிறோம். சமீபத்தில் சட்டம் செய்தோம். அது இல்லை யென்றால் சங்கடம் ஏற்படக்கூடும். தமிழ் ஆட்சி மொழி என்றாலும் ஆங்கிலத்தை வைத்துக் கொண்டிருக்கிறோம். ஆட்சேபணையில்லாத வகையில் வைத்துக்கொண்டிருக்கிறோம். சட்டம் செய்கிறோம். மசோதா நிறைவேற்றுகிறோம். முதலில் draft செய்கிறோம். ஆங்கிலத்தில் பழக்கப்பட்டிருக்கிறோம். ஆங்கிலத்தில் draft பண்ணும்போதே எவ்வளவோ தவறுகள் இருக்கின்றன. எதிர்க் கட்சித் தலைவர் கனம் பாலசுப்ரமணிய அய்யர் எத்தனையோ குற்றம் குறைகளை காட்டியிருக்கிறார். சட்ட இலாகா இருக்கிறது, கவனம் செலுத்தி திருப்பித் திருப்பிப் பார்த்து மசோதா கொண்டு வந்தாலும் தவறுகள் தெரிகின்றன. தமிழில் கொண்டுவரவேண்டுமென்றால், தகுந்த வார்த்தைகள் போட வேண்டும். சட்டத்தில் முக்கியமானது precision அந்த ஒரு கருத்தைத் தான் சொல்லவேண்டும். அதைச் சொன்னால் சிலர் கோபித்துக்கொள்ளுவார்கள். இப்போது போலீஸ் என்பதற்கு காவல் என்றால் forest guard இருக்கிறான், gate guard இருக்கிறான், இதனால் பின்னால் சங்கடம் வரும் என்று சொன்னால் தமிழ் வேண்டாம் என்று சொல்கிறார் என்கிறார்கள். தமிழ் வார்த்தை முக்கியம் அல்ல. கருத்துத் தான் முக்கியம். ஒரு வார்த்தை சொன்னால், புரியும்படி இருக்க வேண்டும். அசல் தமிழாக இருக்க வேண்டும் என்பதல்ல. இன்றைக்கு ஆங்கிலம் உலகத்தில் சிறந்த மொழியாக விளங்கு கிறது என்றால் அந்த ஆங்கிலம் எல்லாவற்றையும் கிரகித்துக் கொள்கிறது. பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில்கூட மாமூல், செஷன்ஸ்டிகேட்டா, சிரஸ்தார், அமீன் போன்ற வார்த்தைகளை ஆங்கிலத்தில் மாற்றிக்கொள்ளவில்லை. அதையே வைத்துக் கொண்டார்கள். முஸ்லிம் காலத்து வார்த்தைகளாக இருந்தாலும் அவைகளையே வைத்துக் கொண்டார்கள். ஆங்கில இலக்கியத்தில் ஆண்டுதோறும் 600 வார்த்தைகள் சேருகின்றன என்று சொல்லப் படுகிறது. அந்த மொழி வளருவதற்கு இதுதான் காரணம் என்று லைதீகமாக உள்ளவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். இதை கவனமாக வைத்துக்கொண்டு, பலர் உதவி பெற்று 'glossary' தயாரித்து வருகிறோம். தகுதியான சொற்கள் ஆட்சி நிர்வாகத்துக்குரிய சொற்கள், கோர்ட்டுக்கு வேண்டிய சொற்கள் இதை எல்லாம் தயாரித்துக் கொண்டு வருகிறோம். இப்போது நம் மாநிலத்தைப் பொறுத்தமட்டில் தமிழ் ஆட்சி மொழியாக

[திரு. எம். பக்தவத்சலம்] [11th March 1965

இருக்கிறது. எல்லா இலாகாக்களின் தலைமை காரியாலயங்களிலும் செகரடேரியட்டிலும் ஒரு அளவுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. சட்டசபையிலும் கூடியவரை தமிழ்தான் நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஆங்கிலம் இருப்பதும் அவசியம்.

இப்பொழுது மசோதா தயாரிப்பது என்றால், ஆங்கிலத்திலே தான் தயாரிக்கிறோம். மற்றப்படி தமிழும் கையாளப்படுகிறது. ஆகவே, மாநில ஆட்சிமொழியைப் பொருத்தமட்டில் இதிலே வேறு ஒன்றும் சர்ச்சைக்கு இடமில்லை. நிலைமை எல்லோருக்கும் புரிந்திருக்கிறது.

ஆனால், மத்திய ஆட்சி மொழியிலும் நமக்கு அக்கறை இருக்கிறது. அது எப்படி இருந்தால் நமக்கு எப்படி. பாதகம் இல்லாமல் இருக்கும் என்பதைத்தான் இந்த மாநிலத்திலே உள்ளவர்களாகிய நாம் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அரசியல் அமைப்புச் சட்டத்திலே ஆர்ட்டிகிள் 343-ல் இந்தி என்று அவர்கள் போட்டிருக்கிறார்கள். அதிலே இருக்கிற சங்கடங்களை உணர்ந்தார்கள். அதனால் 15 ஆண்டுகளுக்கு ஆங்கிலம் இருக்கலாம் என்று அரசியல் அமைப்புச் சட்டத்திலே வகை செய்தார்கள். ஆகவே, 1965 ஜனவரி 26-ஆம் தேதி வரையிலே ஆங்கிலம் இருந்தது. நமக்கு ஒன்றும் தொல்லை இல்லை. ஆனால், ஏதாவது ஒரு காலத்திலே 15 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தி வரும். ஆகவே, இந்தி படிப்பது நல்லது என்று வற்புறுத்தப்பட்டது. சில பேர் இந்தியே வேண்டாம் என்று சொல்லுகிறார்கள். இந்தி என்றால் சில பேருக்கு ஒரு 'allergy' இருந்தது. பொதுவாக இந்தி படிக்கிறது நல்லதுதான். அதனாலே தமிழுக்கு பாதகம் ஏற்படாது. தமிழுக்குக் குறை ஏற்படாது என்று பலர் படித்துக் கொண்டுதான் இருந்தார்கள். தாங்களாகவே படித்தார்கள். அதற்குப் பிறகு சுதந்தரம் வந்தது. காந்தியடிகள் சொன்னார்கள் இந்தியைப் படிக்கவேண்டும் என்று. பல பேர் ஆண்கள், பெண்கள், வயதானவர்கள்கூட இந்தியை உற்சாகமாகப் படித்துப் பட்டம் பெற்றார்கள். ஆனால், அப்படிப் படித்தவர்களுக்கு ஒரு சங்கடம் இருந்தது. அவர்களுக்கு படித்ததைக் கையாள்வதற்கு சந்தர்ப்பம் இல்லை. எனக்குக்கூட அப்படித்தான். இலக்கியம், இலக்கணம் படிப்பது மறந்து போகிறது. ஆனால் முஸ்லிம் சகோதரர்கள் இருக்கிற இடங்களிலே இருப்பவர்கள் தாங்களாகவே உருது விலே, இந்துஸ்தானியிலே பேசுகிறார்கள். பழக்கம் இருந்தால் வந்துவிடுகிறது. அதிலும் தமிழ்நாட்டு மக்களுக்குத் தான் பல மொழிகளைக் கற்றுக்கொள்ளும் திறமை அதிகமாக இருக்கிறது.

அரசியல் அமைப்புச் சட்டப்படி இந்தியை 15 ஆண்டுகளுக்குப் பிறகு வைத்துக் கொள்ளலாம் என்று இருந்தாலும், நாம் நெருங்க நெருங்க 344 ஆவது ஆர்டிகிள்படி இந்தி எவ்வளவுதூரம் அபிவிருத்தி பெற்றிருக்கிறது என்பதை ஆராய்வதற்கு ஒரு கமிட்டியை ஜனாதிபதி போடவேண்டும் என்ற விதியின்படி ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. பி. ஜி. கெர் அவர்களுடைய தலைமையிலே அந்தக் கமிட்டி ஆராய்ந்தபொழுது நம்முடைய மாநில ஆட்சியின் சார்பாகவும் அப்பொழுதே நம்முடைய அபிப்பிராயங்களைத் தெரிவித்தோம். Memorandum அனுப்பினோம். இதை

11th March 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

யெல்லாம் வைத்துக்கொண்டு சில யோசனைகள் கூறியதை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் பொதுவாக இந்தி 1965-லே வரலாம் என்ற வகையிலேதான் அந்தச் சிபாரிசுகளை அனுப்பினார்கள். அந்தச் சிபாரிசுகள் அனுப்பியதன்பேரில் ஒரு மத்திய பார்லிமெண்டரி கமிட்டி அமைக்கப்பட்டது. அந்தக் கமிட்டிக்கும் நம்முடைய அபிப்பிராயங்களைத் தெரிவித்தோம். அப்படித் தெரிவிப்பதற்கு முன்பே முக்கியமாக இந்த மாநிலத்திலே உள்ள ஆட்சியை நடத்துகின்றவர்கள் அக்கரை எடுத்துக்கொண்டு, Initiative எடுத்துக்கொண்டு, மைசூர் முதலமைச்சர், கல்வி அமைச்சர், ஆந்திர முதலமைச்சர், கல்வி அமைச்சர், கேரள முதலமைச்சர், கல்வி அமைச்சர் எல்லோரையும் அழைத்து நமது தென் மண்டலத்தைப் பொறுத்தமட்டில் நமக்கு என்ன செய்யவேண்டும் என்பதை தெளிவாகத் தெரியப்படுத்தி ஒரு யாதாஸ்தை அனுப்ப வேண்டும் என்று முடிவு செய்து, அதன்படி ஆங்கிலமும் இருக்க வேண்டும், அது இல்லாவிட்டால் கஷ்டப்படுவோம். இந்தி இன்னும் பக்குவம் அடையவில்லை, ஆகவே ஆங்கிலமும் இருக்கவேண்டும் என்பதுதான் முக்கியமான கருத்து என்று தெரிவித்தோம். பார்லிமெண்டரி கமிட்டியும் அதை ஒருவாறு ஒப்புக்கொண்டார்கள். 1965-க்குப் பிறகும் போகப் போகத்தான் இந்தி வரமுடியும், ஒரேயடியாக இந்தி மட்டும் ஆட்சி மொழியாக இருந்தால் குந்தகம் ஏற்படும் என்பதை ஓரளவு உணர்ந்துகொண்டார்கள். அதற்கு மேலும் நாமும் மற்றவர்களும் வற்புறுத்தினோம். பார்லிமெண்டரி கமிட்டியும் ஒருவாறு உணர்ந்து இருக்கிறது. அந்த நிலையிலேதான் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு Official Languages Act என்ற சட்டம் ஒன்று பார்லிமெண்டில் நிறைவேற்றப்பட்டது. 1965 ஜனவரி 26 முதற்கொண்டு அரசியல் அமைப்புச் சட்டப்படி இந்தி மட்டுமே ஆட்சி மொழியாக இருக்கிறது. ஆனால், அந்த காண்ஸ்டிட்யூஷன்படியே சட்டம் செய்யலாம். ஆங்கிலம் உபயோகிப்பதற்கு அந்தச் சட்டந்தான் செய்யப்பட்டது. ஆங்கிலம் இருக்கலாம் என்பது சட்டம். ஆனால், அதன் உபயோகத்திற்குக் கால வரம்பு இல்லை; 10 ஆண்டு, 20 ஆண்டு, 30 ஆண்டுகள் என்று பிரதம மந்திரி அவர்களும், இப்பொழுது இருக்கிற பிரதம மந்திரி அப்பொழுது உள்நாட்டு அமைச்சராக இருந்தார்கள், அவர்களும் அப்பொழுதே விளக்கினார்கள். பிரதம மந்திரி உறுதி (assurance) கொடுத்தார்கள். நாம் எத்தனையோ முறை இங்கேயுள்ள மன்றங்களிலே விளக்கி இருப்பதைப் போல, சட்டம் ஒரு பக்கம் இருந்தாலும், சட்டத்தோடு assurance வேறு இருக்கிறது. அதுதான் விளக்கம். நாம் விரும்புகின்ற வரையில், இந்தி பேசாத மக்கள் விரும்புகின்ற வரையில் ஆங்கிலம் இருக்கும் என்றும், ஆனால் இதைச் சட்டத்திலே போடுவது சிரமம். 'Non-Hindi State' என்றால் பஞ்சாப், மகாராஷ்டிரா, குஜராத்தி இதுவெல்லாம் 'Non-Hindi' ஸ்டேட்தான். ஆக, இதிலேயெல்லாம் சங்கடம் வந்தது. பிரதம மந்திரி நேருஜியின் assurance இருக்கிறது. அதை நாம் நம்பலாம், அதுவே போதும் என்ற வகையிலேதான் நாம் சட்டத்தை விளக்கினோம். நமக்கு ஒன்றும் பாதகம் ஏற்படாது, இந்தித் திணிப்பு ஒன்றும் இருக்காது. எது வரையிலே வேண்டுமோ, அது வரையில் ஆங்கிலம்

[திரு. எம். பக்தவத்சலம்] [11th March

தொடர்ந்து இருக்கும் என்ற சட்டம் இருக்கிறது. அதிலே இருக்கிறது, அதைப்பற்றி அலுவலோடு [illegible] என்றுதான் விளக்கிக்கொண்டு [illegible]

ஆனால், அதற்குப் [illegible] வருகிறது [illegible] பிறகும், எல்லா பாடமும் [illegible] பிறகும் என்றும் ஆசாமற்ற [illegible] பொதுவாக ஒரு அச்சம் இருந்தது. மற்ற அச்சத்தைத் தவிர இதுவரையிலும் பிரதம மந்திரியின் உறுதி [illegible] என்றும் சொன்னாலும், இப்படி ஒரு அச்சம் வந்து [illegible] தவிர்க்கும் வகையிலே நடவடிக்கைகள் எடுத்துக் [illegible] வேண்டும் என்று நாமும் வற்புறுத்தினோம். மற்றவர் பலரும் வற்புறுத்தினர்கள்.

இப்பொழுது நிலைமை என்னவென்றால், முதலமைச்சர்கள் சந்தித்தார்கள். அவர்களெல்லாம் வற்புறுத்தினர்கள். அதையெல்லாம் ஏற்றுக்கொண்டு பிரதம மந்திரி அவர்கள் பார்லிமெண்டிலே தெரிவித்திருக்கிறார்கள். இந்தி பேசாத மக்கள் விரும்புகிற வரையிலே ஆங்கிலம் தொடர்ந்து இருக்கும் மத்திய ஆட்சி மொழியாக இந்தியோடுகூட ஆங்கிலமும் இருக்கும் மத்திய ஆட்சிக்கும் மாநிலங்களுக்கும் கடிதப் போக்குவரத்து என்றால் ஆங்கிலமும் தொடர்ந்து இருக்கும் அல்லது வேறு இந்தி பேசுகின்ற மாநிலத்துக்கும் இந்தி பேசாத மாநிலத்துக்கும் தொடர்பு வேண்டுமென்றால், அதிகம் ஆங்கிலம்கூட இருக்கும். இந்தியை வைத்துக்கொள்வதைப்பற்றி நாம் ஆட்சேபிக்கவில்லை, அரசாங்கமும் ஆட்சேபிக்கவில்லை. அதற்கு சில பத்திரிகைக்காரர்கள்தான் கண்டிப்பிட்டார்கள் காரணம், அச்சு அதிகம் செலவாகிறது என்று. பெரிய விஷயத்தைப் பார்க்கும்போது இந்த சிறிய விஷயத்துக்கொல்லாம் காரணம் செலவாகிறது என்று பார்ப்பதிலே பயனில்லை. 'கான்ஸ்டிட்யூஷனையே' மாற்ற வேண்டுமென்று சிலர் கூறுகிறார்கள். ஆனால் அதுவல்ல இந்த அரசாங்கத்தின் கொள்கை. கான்ஸ்டிட்யூஷனை மாற்ற வேண்டிய அவசியமில்லை. இந்த Official Languages Act மாற்றினால் போதும் என்பதுதான் இந்த அரசாங்கத்தின் கொள்கை.

இந்த Official Languages Act வரும்பொழுது ஒரு சர்ச்சை வந்தது. may என்று போடலாமா, shall என்று போட வேண்டாமா என்று. ஆனால் வழக்கறிஞர்கள் வாதாடக் கூடும்; 'may' என்றால் 'shall' என்று சொல்லலாம், 'may' என்றால் 'may not' என்றும் சொல்லலாம் என்று. ஆனால் shall என்று போடுவதற்கு அப்பொழுது ஒரு சங்கடம், அப்பொழுது இருந்த பிரதம மந்திரியே தெரிவித்தார்கள். அதாவது வரம்பு கட்டிவிட்டால் 'shall' என்று போடலாம். 10 ஆண்டு, 20 ஆண்டு, 25 ஆண்டு என்று வரம்பு கட்டிவிட்டால் shall போடலாம். வரம்பு இல்லாதபோது shall போட்டால்

11th March 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

சங்கடம் வரும். ஆங்கிலம் உபயோகிக்க வேண்டும் என்ற ஒரு நிலைமை வரும் என்று கஷ்டத்தை எடுத்துச் சொன்னார்கள். சரி எப்படியும் பிரதம மந்திரியின் உறுதிமொழி இருக்கிறது என்று ஏற்றுக்கொண்டேன். ஆனால் இப்பொழுது அந்த அஷ்யூரன்ஸை சட்டபூர்வமாக்கவேண்டும். பிரதம மந்திரியின் உறுதி மொழியை அப்படியே சட்டம் ஆக்குவது சிரமம்தான். இருந்தாலும் இப்பொழுது அச்சம் வந்துவிட்டது. எவ்வளவு தூரம் முடியுமோ அந்த அளவுக்குச் சட்டம் ஆக்கவேண்டும் என்றுதான் வற்புறுத்தினேன். அப்பொழுது ஒரு வரம்பு வந்துவிடுகிறது. எல்லா இந்தி பேசாத, இந்தியைத் தாய்மொழியாக கொள்ளாத மாநிலங்கள் விரும்புகின்ற வரையிலே ஆங்கிலம் தொடர்ந்து இருக்கும். "மாநிலங்கள்" என்று பொதுவாகப் போட்டால் போதாது. அப்படிச் செய்தால் 'எத்தனை மாநிலங்கள்' என்ற பிரச்னை வரும். நம் மாநிலம் வரையிலும் நான் கேட்கிறேன். ஹிந்தியைத் தாய் மொழியாகக் கொள்ளாத எந்த மாநிலம் விரும்பினாலும், அது விரும்பும் வரையில் ஆங்கிலம் இருக்க வேண்டும் என்று நான் கேட்கிறேன். இந்த வரம்பு வந்து விடுகிறது. இந்த விஷயத்தில் 'ஷெல்' (shall) என்று போட வேண்டும் என்று நாங்கள் வற்புறுத்துவோம். இந்தக் கருத்து ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது. இந்தக் கருத்து நிறைவேறும் வகையில் சட்டம் இயற்றப்பட வேண்டும் என்று வற்புறுத்துவோம். இந்த நம்பிக்கை இப்போது இருக்கிறது. இவ்வாறு சட்டம் இயற்றப்பட வேண்டும் என்று நாங்கள் தொடர்ந்து வற்புறுத்தி, அத்தகைய சட்டத்தைப் பெறுவோம். ஆங்கிலம் அவ்வாறு, தொடர்ந்து, நாம் விரும்பும் வரையில் இருக்கும். அப்படி இருப்பதால், பாதகம் ஒன்றும் ஏற்படுவதற்கில்லை; அதாவது, ஹிந்தி பேசாத காரணத்தால் பாதகம் ஏற்படுவதற்கில்லை. இதுதான் ஆட்சி மொழி விஷயத்தில் இப்போதைய நிலை.

மாநிலம் சர்வீஸைப் பொறுத்த வரையில், தமிழோ, ஆங்கிலமோ—எப்படி வேண்டுமானாலும்—வைத்துக்கொள்ளலாம். ஆனால் அகில இந்திய ஸெர்வீஸை பொறுத்தவரையில், இதுவரையில் ஆங்கிலம் இருந்தது. இப்போது, ஹிந்தியையும் பரீட்சை medium ஆக வைக்க வேண்டும் என்று ஹிந்திக்காரர்கள் கேட்கிறார்கள். அவர்களுடைய இந்தக் கோரிக்கையை மறுப்பதற்கில்லை. காரணம், இப்போது ஆங்கிலம், ஹிந்தி ஆகிய இரண்டும் ஆட்சி மொழிகளாக இருக்கின்றன. ஹிந்தியைப் பொறுத்த வரையில், அது ஒரு சிலருக்கு தாய்மொழியாக இருக்கிறது. ஆங்கிலம், ஆங்கிலேயர் இந்தியர்களைத் தவிர வேறு யாருக்கும் தாய் மொழியாக இல்லை. எனவே இந்த ஏற்பாடு தாராளமயம் எற்படுத்தக்கூடியது. இந்த விஷயத்தில் ஸ்விட்ஸர்லாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் இருப்பது போல moderation முறை கொண்டுவருவதாக மத்திய அமைச்சர்கள் சொல்கிறார்கள். அப்படிச் செய்தால், பரீட்சை, rank ஆகியவைகளில் நியாயம் இருக்கும் என்று அவர்கள் சொல்கிறார்கள்.

திரு. கே. எஸ். அப்துல் வஹாப்: 'moderation' என்றால் என்ன? இதுபற்றிய விளக்கத்தை அறிய விரும்புகிறேன்.

[11th March 1965

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதை விளக்குகிறேன். 'moderation' திட்டத்தை எங்களுக்குத் திருப்தி ஏற்படும் வகையில் அமைப்பதாக அவர்கள் சொன்னார்கள். அந்தத் திட்டத்தை எங்களிடம் காட்டிவிட்டு அதன் பிறகு நடை முறைக்குக் கொண்டுவருவதாக அவர்கள் சொன்னார்கள்.

ஓட்டப் பந்தயங்களை கனம் அங்கத்தினர் ஸ்ரீ. வஹாப் பார்த் திருப்பார். ஓட்டப் பந்தயங்களில் சம நீதி வழங்குவதற்காக சிலருக்கு "handicap" கொடுப்பதுண்டு. அதாவது தான் மற்றவர்களைவிட 10, 20 அடி முன்னால் நிறுத்தி அங்கேயிருந்து ஓடச் சொல்வார்கள். அதே மாதிரி moderation முறை யிலும் சம நீதி வழங்கப்படும். ஹிந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள், அதைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்கள் ஆகிய இரு சாராரும் பரீக்ஷை எழுதும்போது, இரு சாராருக்கும் சமநீதி வழங்குவதற்கான திட்டம்தான் moderation திட்டம். இப்போது கூட 'moderation' முறை கையாளப்படுகிறது. இப்போது கூட தமிழ், ஆங்கிலம் இரண்டும் moderation ஆக இருக் கின்றன. அந்த மாடரேஷன் திட்டம் இன்னும் முடிவாகவில்லை. moderation formula என்ன என்று நமக்குத் தெரிவிக்கப்பட்டு அதை நாம் ஒப்புக்கொள்ளும் வரையில் அதைக் கொண்டு வரக்கூடாது என்று நாம் வற்புறுத்தினோம். அதை அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், இப்போது நாம் தெரி விப்பது முதலமைச்சர்கள் மகாநாட்டில் தெரிவிக்கப்படவில்லை. "அகில இந்தியப் பரீக்ஷையைப் பொறுத்தவரையில், ஹிந்தியை வைத்துக்கொள்வதென்றால், மற்ற பிராந்திய மொழிகளையும் வைத்துக்கொள்ளுங்கள். அவை மூலமும் பரீட்சை எழுதுவதை நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும்' என்று சொன்னோம். அதைப் பரிசீலிக்கிறோம். அது எவ்வளவு தூரம் சாத்தியமானது என்று பார்க்க வேண்டும். இரண்டு மொழிகளுக்கே 'moderation' என்றால், 14 மொழிகளை வைத்துக் கொண்டால் சிரமமாக இருக்குமே, இருந்தாலும் பரிசீலிக்கிறோம்" என்று மத்திய அரசினர் சொல்லியிருக்கிறார்கள். இதையெல்லாம் பரிசீலித்து முடிவு செய்யும் வரையில் ஆங்கிலமும் அகில இந்தியப் பரீக்ஷைக்கு இருக்க வேண்டும் என்று சொல்கிறோம். ஆங்கிலம் அகில இந்தியப் பரீக்ஷைக்கு அந்த அளவிற்கு முக்கியமான மொழியாக இருக்கும். அகில இந்தியப் பரீக்ஷையைப் பொறுத்தவரையில், இதுதான் இப்போதைய நிலை.

இப்போது மத்திய ஆட்சியில் இந்தி தெரியாதவர்கள் உத்தி யோகத்தில் இருக்கிறார்கள். இந்தியும் ஆங்கிலமும் இருக்க வேண்டும் என்ற நிலை வந்த பிறகு, அவர்களுக்கு பாதகம் ஏற்படக் கூடாது என்று நாங்கள் வற்புறுத்தினோம். புதிதாக மத்திய அரசாங்க ஸெர்விஸுக்கு நியமிக்கப்படுபவர்களுக்கு recruit பண்ணப்படுபவர்களுக்கு—இந்தியே தெரியாவிட்டாலும், அதனால் நியமனத்திற்குத் தடை இல்லை. ஐ.ஸி.எஸ். வேலை பார்த்த வெள்ளை காரர்கள் கூட தமிழோ, தெலுங்கோ, மலையாளமோ—ஏதோ ஒரு பிராந்திய மொழியை—கற்றுக்கொண்டு தான் இருந்தார்கள். ஆகையால் இன்றைக்கு வேலையில் இருப்பவர்களும் இனிமேல்

11th March 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

வேலைக்கு நியமிக்கப்படுபவர்களும் இந்தி பேசத் தெரியாதவர் களாக இருந்தால், அவர்களுக்கு எந்த விதமான பாதகமும் ஏற்படக் கூடாது என்பது இப்போது ஒப்புக்கொள்ளப்பட் டிருக்கும் விஷயம்.

ஒரு சிலர் இங்கே தீர்மானத்திற்கு நோட்டீஸ் கொடுத்திருக் கிறார்கள். நான் இதுவரை குறிப்பிட்டவைகளெல்லாம் போதாது என்பதும், 'கான்ஸ்டிட்யூஷனையே' மாற்ற வேண்டும் என்பதும் சிலருடைய கருத்து. இது ஒரு கருத்து. இன்னொரு கருத்து இருக்கிறது; 17-வது chapter-ஐயே எடுத்துவிட வேண்டும் என்பது இந்த கருத்து. 'கான்ஸ்டிட்யூஷனையே' மாற்றுவது என்பது ஒரு விஷயம். 17-வது பிரிவையே நீக்கிவிட வேண்டுமென்பது வேறு விஷயம். இது எப்படி முடியும்? 17வது பிரிவையே எடுத்து விட்டால், என்ன ஏற்படும்? இந்தப் பிரிவை நீக்கிவிட வேண்டும் என்று பெரிய மேதாவிகளெல்லாம் சொல்கிறார்கள். இதை எடுத்து விட்டால் என்ன status quo ஏற்படும்? இதை எடுத்துவிட் டால் இன்றைக்கிருக்கும் status quo வராது; வெள்ளைக் காரர் காலத்தில் இருந்த status quo தான் வரும். சிலர் இதெல் லாம் தெரியாமல், யாரோ பெரியவர்கள் கூறிவிட்டார்கள் என்ப தால் இதையே மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இது ஒரு fashion ஆகப் போய் விட்டது.

இன்று பாரதம் ஒன்று, இது இமயம் முதல் குமரி வரை ஒன்று என்பதை கொஞ்சம் கூட 'mental reservation' இல்லாமல் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். நம் நாட்டில் இன்று பல மொழிகள் பேசப்படுகின்றன. இந்த நாட்டில் பேசப்படும் பல மொழிகளில் ஒன்றுதான் இந்தி தான் இந்த நாட்டின் 'lingua franca' என்று மகாத்மா காந்தி சொன்னார். இந்தியாவில் ஒவ்வொரு மொழியையும் எத்தனை பேர் பேசுகிறார்கள் என்ற எண்ணிக்கை அடிப்படையில் பார்த்தால், இந்தி தான் அதிகமான மக்களால் பேசப்படுகிறது. சுதந்திரப் போராட்ட காலத்திலேயே இந்தியைக் கையாண்டு வந்தோம். இந்தியே கூடாது, ஆங்கிலம் வேண்டும் என்று சிலர் சொல்கிறார்கள். ஆங்கிலம் நல்ல மொழி தான். ரஷியாவில்கூட ஆங்கிலம் கற்றுக் கொள்கிறார்கள். ரஷியாவில் latest researches in the world என்று புத்தகங்கள் இருக்கின்றன. அவைகளில் 50 சதவிகிதத்திற்கு மேற்பட்டவை ஆங்கிலத்தில் இருக்கின்றன. சுமார் 36 சதவிகிதம் புத்தகங்கள் ரஷிய மொழியிலும் ஜெர்மன் மொழியிலும் இருக்கின்றன. ஆங் கிலத்தின் முக்கியத்தை உணர்ந்து தான் ரஷியர்கள் தங்கள் நாட் டில் இவ்வாறு செய்திருக்கிறார்கள். அவர்கள் ஆங்கிலத்திலுள்ள புத்தகங்களை ரஷிய மொழியில் சுலபமாக மொழி பெயர்க்க முடி யும். இருந்தாலும், "கட்டாயம் ஆங்கிலம் கற்றுக்கொள்ளுங்கள், ஆங்கிலம் தெரிந்திருந்தால், ஆங்கிலப் புத்தகங்களை ரஷிய மொழி யில் மொழிபெயர்க்கும் வரையில் நீங்கள் காத்திருக்க வேண்டிய தில்லை" என்று அவர்கள் தங்கள் மக்களுக்குச் சொல்கிறார்கள். இப்போது அந்த நாட்டில் ஆங்கிலம் இந்த நிலையில் இருக்கிறது. முன்பு ஃப்ரெஞ்ச மொழி அங்கே இந்த நிலையில் இருந்தது. "கட்டாயம் ஆங்கிலம் கற்றுக்கொள்ளுங்கள்" என்று ரஷியர்கள்

[திரு. எம். பக்தவத்சலம்] [11th March 1965

தங்கள் மக்களிடம் சொல்லிவருகிறார்கள். நம் நாட்டிலும் மாணவர்கள் நன்றாக ஆங்கிலம் படிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் இப்போது ஆங்கிலத்தை மூன்றாவது வகுப்பிலிருந்து தொடங்கியிருக்கிறோம். முன்பு மேல் வகுப்புகளிலிருந்து தொடங்கியதால்தான் மாணவர்களின் ஆங்கிலத் தேர்ச்சியில் deterioration ஏற்பட்டிருந்தது; அதில் இந்தியப் பரீட்சையில் தேறுவதில் நம் ராஜ்யத்தினர் எண்ணிக்கை குறைந்தது. ஆங்கிலத்தை நாம் கொஞ்சம் கூட அலட்சியப்படுத்த முடியாது. இந்தியா ஒன்று, இந்தியாவிற்கு ஒரு பொது மொழி வேண்டும் என்பதை நாம் உணர வேண்டும். ஆங்கிலம் ஒன்றே நாட்டு மொழியாக இருக்கவேண்டும் என்று சொன்னால், அது சாத்திய மில்லை. இன்னொரு விஷயம் இருக்கிறது. இந்தியை நம் மீது திணிக்கக்கூடாது என்று நாம் சொல்கிறோம். அதே போல் ஆங்கிலம் வேண்டாதவர்களும் பலர் இருக்கிறார்கள். மொழி விஷயத்தில் மனிதர்களுக்குப் பரபரப்பும் ஆவேசமும் வருவது இயற்கை. நாம் எப்படி அவர்கள் மீது ஆங்கிலத்தைத் திணிப்பது? இந்தியையே தாய்மொழியாகக் கொண்ட மாநிலங்கள் மீது நாம் எப்படி ஆங்கிலத்தைத் திணிப்பது? இந்தி சுதந்திரப் போராட்ட காலத்தில் ஒப்புக்கொள்ளப் பட்டது. இந்தி இருக்க வேண்டும் என்றால், நாம் விரும்பும் வரையில் ஆங்கிலமும் இருக்க வேண்டும் என்று நாம் வற்புறுத்துவது தான் நியாயமானது ஆகும். அந்த நியாயமான கோரிக்கையை அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படத்தான் வேண்டும். அப்படி நிறை வேற்றப்படும் என்ற நம்பிக்கை நமக்கெல்லாம் இருக்கிறது. இது தான் இப்போது ஏற்பட்டுள்ள ஆட்சிமொழிப்பிரச்சினையின் நிலைமை. ஒன்று மட்டும் கூற விரும்புகிறேன். மொழி என்பது ரொம்ப முக்கியமானதுதான். நமக்கு எப்படி பேசுவதற்கு—நம் முடைய சிந்தனையை வெளிப்படுத்துவதற்கு நாக்கு அவசியமாக இருக்கிறதோ அதே மாதிரி நாக்கைப் போன்றது மொழி. அது இல்லாவிட்டால் ஒருவர்க்கொருவர் கருத்துக்களைத் தெரிவிக்க முடியாது. நாக்கு இல்லாவிட்டால் ஊமையாகத்தான் இருக்கவேண்டும். நம்முடைய கருத்துக்களைத் தெரிவிக்க ஒரு சிறந்த வாகனம் என்று அதை வைத்துக்கொண்டால் அதைப்பற்றி நிதானமாக சிந்திக்க வேண்டும். வாகனம் அவசியம்தான். இப்போது யாரும் நடந்துபோகத் தயாராக இல்லை. டாக்டர்கள் கொஞ்சம் வாக் செய்ய வேண்டுமென்று சொன்னால்தான் நடக்கிறார்கள். மற்றபடி காரிலேயே போகிறார்கள். கார் இருக்கிறது நம்முடைய உபயோகத்திற்கு என்றால் அது நாம் போகவேண்டிய இடத்திற்குப் போக வேண்டும். மைலாப்பூருக்கு போவதற்கு கார் எடுத்தால் அது ராயபுரத்திற்குப் போவதாக இருந்தால் என்ன செய்வது? என்னுடைய சிறிய வயதில் ஒரு பெரியவர் இருந்தார். அவர் செவிடு. அந்தக்காலத்தில் அவர் குதிரை வண்டி வைத்திருந்தார். அதை அவரே ஓட்டிக்கொண்டு போவார். அவருடைய மகன் என்னுடன் படித்தார். அவர் ஒரு பத்திரிகை ஆசிரியர். அவரும் அப்போது அந்த வண்டியிலே போவதுண்டு. அந்தப் பெரியவர் வண்டியை ஓட்டும்போது எந்தப் பக்கம் திரும்பவேண்டுமோ அதற்குத்

11th March 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

தகுந்தாற்போல் 'சைட்' என்று சொல்வார். அதற்கு முன் அதிலுள்ள பையன்கள் 'லெப்ட்' என்று சொல்லிவிடுவார்கள். அவர்கள் சொல்வது பெரியவர் காதில் விழாது. அதைக் கேட்டு குதிரை சைட்டில் போகாமல் லெப்டில் போகும். அதைப் போல் மொழியைப் பற்றி சிந்திக்கும்போது மொழி நமக்குப் பயன்பட வேண்டும். மொழி நம்மைப் பயன்படுத்தும்படி செய்யக்கூடாது. மொழி ரொம்ப அவசியம். அதற்காக எவ்வளவு தியாகம் செய்தாலும் செய்துகாட்ட வேண்டியதுதான். ஆனால் மொழி எவ்வாறு நமக்குப் பயன்படுவது? நம்முடைய நாடு ஒன்று என்பதை உணர்ந்து எப்படி இப்போதுள்ள சிக்கலைத் தீர்ப்பது எந்தக் கொள்கையைக் கையாள்வது என்பதை பார்க்கவேண்டும். மத்திய ஆட்சி இருக்கிறது. அதில் நமக்கு அக்கரை இருக்கிறது. அதில் பங்குகொள்ள வேண்டுமென்று விரும்புகிறோம். அதற்கான உரிமை பெற்றிருக்கிறோம். மாநில ஆட்சியும் இருக்கிறது. எல்லாவற்றையும் சிந்தித்துப் பார்த்து ஆட்சி மொழிக் கொள்கையை எப்படி நிர்ணயிப்பது என்பதுதான் இப்போதுள்ள பிரச்னை. நான் விளக்கியதுதான் இப்போது நிர்ணயிக்கப்படவேண்டியிருக்கிறது. கனம் அங்கத்தினர்கள் அவர்களது கருத்துக்களைத் தெரிவித்த பிறகு நான் ஏதாவது சொல்லவேண்டியிருந்தால் நான் பிற்பகலில் கூறுகிறேன் என்று சொல்லி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

MR. CHAIRMAN : Hon. Members Sri N. V. Natarajan and Dr. A. Chidambaranathan may formally move their amendments and get them seconded. They can speak later on.

SRI N. V. NATARAJAN : Mr. Chairman, Sir, I move—

"Add the following at the end :—

'And on such consideration this House recommends that the Constitution should be amended so that English alone continues as the Official Language of the Union till all the National Languages (which have already become the Official Language of some State or other) are adopted as Official Languages of the Union with Hindi so that the different language groups of the country get equal opportunity and treatment in the Union Administration and Parliamentary Democracy without the possibility of any discrimination or disability inflicted on any group of people belonging to any language or region'."

SRI K. ANBAZHAGAN : I second the amendment, Sir.

DR. A. CHIDAMBARANATHAN : Mr. Chairman, Sir, I move—

"Add the following at the end :—

'and on such consideration, recommends to the State Government that the following recommendations be made to the Union Government :

(a) that English should be given the same place as it had before the 26th January 1965;

[Dr. A. Chidambaranathan] [11th March 1965

(*b*) that English shall be the link language between the States and the Centre and between the States;

(*c*) that in every State, English and the regional Language should be the languages used for all purposes;

(*d*) that the three-language formula should be discontinued;

(*e*) that it should be optional for the students to take a third language from among the fourteen languages recognised under the Constitution;

(*f*) that the recruitment for All-India Services should be limited to the barest needs of the Centre and that when these officers are posted to the various States, they should be familiar with the language of the State concerned by passing an elementary language test within three years of their posting;

(*g*) that officers posted to the States should have the same status and emoluments as they have in the Centre;

(*h*) that the quota system is unworkable and detrimental to the interests of the country;

(*i*) that an equal amount should be spent by the Centre for developing all the fourteen languages recognised in the Constitution, and

(*j*) that for the unity of the country and for national integration, such changes as may be needed to implement the above recommendations be made by amending the Constitution, and this statutory amendment should not be altered except by the unanimous approval of all the Legislatures of the States."

SRI G. KRISHNAMOORTHY : I second the amendment, Sir.

MR. CHAIRMAN : The motion and the amendments are before the House for discussion.

*திரு. சி. பா. ஆதித்தனர் : அவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய அனுமதியுடன் இருபது நிமிட நேரம் பேசலாமா என்று அறிய விரும்புகிறேன்.

மிஸ்டர் சேர்மன் : பதினைந்து நிமிஷமாக வைத்துக்கொள்ளலாம்.

திரு. சி. பா. ஆதித்தனர் : இந்த மொழிச் சிக்கலைப்பற்றிப் பேசுகிற நேரத்தில் தமிழகத்தில் இச் சிக்கல் எவ்வளவு தூரம் வளர்ந்து கொண்டுபோகிறது என்று சிந்திக்கும்போது கவலையும் வேதனையும் அடையாமல் இருக்கமுடியாது. முன் காலத்தில் தமிழகத்தில் ஒரு மொழிதான் இருந்தது. அது தமிழ். ஒரு மொழி வைத்து உலகை ஆண்டான் இமயவரம்பன், அவன் காலத்தில். அவனுடைய மகன் செங்குட்டுவன் காலத்தில் ஒரு மொழி வைத்து தமிழகம் மட்டுமல்ல, நாகரிக உலகத்தைத் தமிழன் ஆண்டான். இது சரித்திரம். பிறகு இரண்டு மொழி ஆனது. என்னுடைய இளமைக் காலத்தில் இரண்டுமொழி யாயிற்று. தமிழோடு ஆங்கிலம் சேர்த்துப் படிக்க வேண்டுமென்ற நிலைமை இருந்தது.

11th March 1965] [திரு. சி. பா. ஆதித்தனர்]

அதையும் படித்தோம். பிறகு சட்டமன்றத்தில் சில பல ஆண்டுகளாக மும்மொழித் திட்டம் என்று காதில் விழுகிறது தமிழைப் படி, ஆங்கிலத்தைப் படி, இந்தியையும் படி என்று மும்மொழித் திட்டம் என்பதாகப் பேசுகிறார்கள். மும்மொழியோடாவது நிற்குமா என்று பார்த்தால், இப்போது திராவிட மூன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் பதினைந்து மொழி படிக்க வேண்டுமென்று சொல்லும்போது, எனக்குத் திகைப்பாக இருக்கிறது. அந்த பதினைந்து மொழிகளில் சமஸ்கிருதம் இருக்கிறது, ஆங்கிலம் இல்லை. இதையும் சேர்த்துப் படிக்கவேண்டுமென்று சொல்கிறார்களா? முதலமைச்சர் அவர்கள் கூறிய விளக்கத்தை நான் வரவேற்கிறேன். தமிழ் மாநிலம் பொதுத்தலைவரில் தமிழ் என்று சிறப்பாகச் சொன்னார்கள். மத்திய ஆட்சியில் டில்லியில் ஆங்கிலமோ இந்தியோ இருக்கலாம். தமிழ்நாட்டில் தமிழ் என்று சொல்லும்போது, அவர்கள் தமிழக ஆட்சியில் என்ன இலாக்காக்கள் இருக்கின்றனவோ அதைப்பற்றி மட்டும் சொல்கிறார்கள். ஆனால் தமிழ் மாநிலத்தில் திருத்தணிக்குத் தெற்கே பார்க்கும்போது இரண்டு வகையான ஆட்சி இருக்கிறது. ஒன்று மாநில ஆட்சி; முதலமைச்சர் அவர்கள் தலைமையிலே இயங்கி வருகிற ஆட்சி. மற்றொன்று, மத்திய ஆட்சியில் இயங்குகின்ற தபால், ரயில்வே, இன்ஷியூரன்ஸ், துறைமுகம் எல்லாம் இருக்கின்றன. நான் கேட்டுக்கொள்வது எல்லாம், இந்தத் தமிழ்நாட்டில், தமிழ் மாநிலத்தில், திருத்தணிக்குத் தெற்கே, தமிழ் போதும்; இந்தி வேண்டாம்; அது மாநில ஆட்சியாக இருக்கட்டும் அல்லது மத்திய ஆட்சியாக இருக்கட்டும், தபாலாபீசாக இருக்கட்டும், துறைமுகமாக இருக்கட்டும், தமிழே போதுமென்று சொல்கிறேன். அதற்கு அவர்கள் இவை மத்திய ஆட்சி இந்தியில்தான் காரியங்களை நடத்தவேண்டுமென்று சொல்கிறார்கள். யாருக்குத் தமிழகத்தில் ஆட்சி செய்யவேண்டுமென்று விருப்பம் இருக்கிறதோ அவர்கள் தமிழைக் கற்றுக்கொண்டு ஆட்சி நடத்தட்டும். மக்கள் இந்தியை விரும்புகிறார்கள் என்று கூறுகிறார்கள். நானும் மக்கள் வேறொன்றை விரும்புகிறார்கள் என்று சொல்லலாம். யாரும் அப்படிச் சொல்லலாம்.

திரு. என். ஆர். தியாகராஜன் : வடநாட்டில் தமிழர்கள் வேலை பார்க்கிறார்களே அவர்கள் என்ன செய்வது?

திரு. சி. பா. ஆதித்தனர் : எனக்கு நண்பர் திரு. தியாகராஜன் குறுக்கே வருவார்கள் என்று தெரியும். அவர்கள் கேள்விக்கு இடம் கொடுத்து நான் உட்காரவில்லை. அப்படியிருக்கும்போது அவர்கள் பேசுகிறார்கள். இனி அப்படிப் பேசாமல், குறுக்கிடாமல் இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் தபால் ஆபீஸ் இருக்கிறது. ஏன் அது தமிழில் செயல்படக்கூடாது? சொல்லுகிறார்கள், எப்படி தமிழில் செயல்படமுடியும் என்று. தபால் தலையை எடுத்துக் கொள்ளுங்கள். ஏன் தமிழில் போடக்கூடாது? லாலா லஜபதிராய் அவர்களுக்குத் தலை போட்டார்கள், அது போல் காமராஜருக்குப் போட்டார்கள். தபால் தலையை ஏன் தமிழில் போடக்கூடாது? தமிழகத்தில்

[திரு. சி. பா. ஆதித்தனார்] [11th March 1965

ஆட்சி தமிழில் செயல்படவேண்டும். அதைத்தான் மக்கள் விரும்புகிறார்கள். இதற்கு வடவர்கள், தமிழ் நாட்டில் இருப்பவர்களுக்கு விளங்கவில்லை, விளக்கம் தேவை என்று சொல்லுகிறார்கள். இங்கு விளங்காதவர்கள் யாரும் இல்லை. நம் மாநிலத்தில் அமைச்சர்களும் மற்றவர்களும் அறிவு ஆற்றலில் குறைந்தவர்கள் அல்ல, இவர்களுக்கு விளக்கம் தேவை இல்லை. விளக்கம் யாருக்காவது தேவை என்றால், வடக்கே இருப்பவர்களுக்குத் தான். இங்கு இருக்கிற மக்கள் கேட்பது "திருத்தணிக்குத் தெற்கே இந்தி வேண்டாம், அது என்ன ஆட்சியாகவும் இருக்கட்டும், என்ன அலுவலகமாகவும் இருக்கட்டும்". ஒருமைப்பாட்டில் உண்மையாக நம்பிக்கை இருக்குமானால், ஏன் அதை தமிழில் நடத்தக்கூடாது? நன்றாக நடத்த முடியும். நாலரை கோடி மக்கள் உள்ள பகுதியில் எல்லா அலுவலகங்களையும் தமிழில் நடத்தலாம். விளக்கம் தேவை என்று சொல்லும்போது முதலமைச்சர்கள் மாநாடு நடந்தது, வரவேற்கத்தக்கது. முதலமைச்சர்கள் மாநாட்டில் என்ன முடிவு செய்து கொண்டார்கள்? அவர்களுக்கு வேண்டிய முடிவைச் செய்து கொண்டார்களா மக்களுக்கு வேண்டிய முடிவைச் செய்து கொண்டார்களா என்றால் இல்லை. அம் மாநாட்டில் முடிவு செய்திருக்கிறார்கள், இங்குள்ள அரசாங்கம் பிகாருக்கு ஒரு கடிதம் எழுத வேண்டுமானால் ஆங்கிலத்தில் எழுத வேண்டும்; பிகார் அரசாங்கம் உத்தரப் பிரதேசத்துக்கு எழுதுவது என்றால், இந்தியில் எழுதலாம்; பிகார் அரசாங்கம் சென்னை அரசாங்கத்துக்கு எழுத வேண்டுமென்றால் இந்தியில் எழுதி அத்துடன் ஒரு ஆங்கில மொழி பெயர்ப்பை வைக்க வேண்டும் என்று. அரசாங்கத்துக்கு அரசாங்கம் எப்படி நடந்து கொள்ளவேண்டியது என்பதை எல்லாம் முடிவு செய்தார்கள். அது மக்களை எவ்வளவு தூரம் பாதிக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். முதலமைச்சர்கள் மாநாட்டில் அவர்கள் கடிதம் எழுதும்பொழுது எந்த மொழியில் எழுதுவார்கள் என்பதை முடிவு செய்தார்களே ஒழிய தெருவில் போகிறவனுடைய கண்ணோட்டத்தை கவனிக்கவில்லை. அவன் பார்க்கிற தபால் ஆபீசில் நடவடிக்கை தமிழில் இல்லையே, இந்தியில் இருப்பதைப் பார்த்தவுடன் அதை அழிக்கிறான். நான் கேட்பது தவறாக இருந்தால் மன்னிக்க வேண்டும். என் அழிக்கிறான்? தபால் ஆபீசில் உள்ள இந்தி எழுத்துக்களை, ரயில் நிலையத்தில் உள்ள இந்தி எழுத்துக்களை ஏன் அழிக்கிறான்? அவன் அழிப்பதற்குக் காரணம், அவனுடைய கோரிக்கை, இங்கே இருக்கின்ற ஆட்சி அத்தனையிலும் இந்தி இருக்கக்கூடாது, தமிழ் தான் வேண்டும் என்பது. அழித்தால் என்ன தவறு? மூன்று ஒரு முறை ரயில் நிலையத்தில் உள்ள இந்தி எழுத்துக்களை அழித்தது தலைவர் அவர்களுக்கு நினைவு இருக்கலாம். கனம் ராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருக்கும்போது பெரியார் திரு. ஈ. வெ. ராமசாமி ரயில் நிலையங்களிலுள்ள இந்தி எழுத்துக்களை அழிப்பது என்று அறிவித்து, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் செய்தார்கள். அப்போது நான் எதிர்க்கட்சியில் முதல் இடத்தில் இருந்தேன். யாரையும் ரயில் நிலையத்திற்குள் நுழைய விடக்கூடாது என்று அரசினர் முதலில் உத்தரவு அனுப்பியிருந்த

11th March 1965] [திரு. சி. பா. ஆதித்தனார்]

போதிலும், கடைசி நேரத்தில் யாரும் வந்து அழித்துவிட்டுப் போகட்டும் என்று விட்டுவிட்டார்கள். போலீஸ்காரர்கள் யாரையும் தொடவில்லை, வந்தவர்கள் அழித்துவிட்டு வீடு திரும்பினார்கள். அதனால் ஒன்றும் கெட்டுப்போய்விட வில்லை. அவர்கள் ஏன் அழித்தார்கள் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டாமா? அரசாங்கத்துக்கு அரசாங்கம் எந்த மொழியில் பேசுவது, எழுதுவது என்பது முக்கியமில்லை. மக்களுக்கு என்ன கோரிக்கை என்பதுதான் முக்கியம். இங்குள்ள அலுவல்களை—மத்திய அரசாட்சியாகட்டும், மாநில அரசாட்சியாகட்டும்—தமிழில் நடத்தலாம், கடினம் இல்லை. சங்கடமாக இருக்கிறது என்று வாதத்திற்காக வைத்துக் கொண்டாலும், ஒருமைப்பாடு என்று பேசுபவர்கள் இந்த சங்கடத்தை சமாளிக்கக் கூடாதா? தபால் நிலையங்களில் பயன்படுத்தப்படுகிற பாரங்களை தமிழ் மொழியில் அச்சிடுவது சங்கடமா? சங்கடம் என்று வைத்துக் கொண்டாலும், ஒருமைப்பாடு வேண்டுமென்று ஆர்ப்பாட்டமாகப் பேசுகிறவர்கள் இந்த ஒரு சிறு காரியத்தைக்கூட செய்யக் கூடாதா? விளக்கம் யாருக்குத் தேவைப்படுகிறது என்றால் இங்குள்ளவர்களுக்குத் தேவை இல்லை, வடக்கே இருக்கிறவர்களுக்குத்தான் தேவை.

விளக்கம் தேவை என்று வாதத்திற்காக வைத்துக்கொள்ளுவோம். நான் முதலமைச்சரையும் அரசாங்கத்தையும் கேட்டுக் கொள்கிறேன், அந்த விளக்கத்தைக் கொடுக்க என்ன செய்திருக்கிறீர்கள்? மக்களுக்கு விளங்காமல் பல காரியங்களில் இறங்கி விட்டார்கள் என்று வைத்துக்கொண்டாலும், நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள், மக்களிடம் விளக்க. இன்றைக்கு பத்திரிகை ஆசிரியர்கள் நிலைமையைப் பார்க்கும்போது, அவர்கள் மீது பல நடவடிக்கைகள். ஒருவர் பாதுகாப்பு விதியின் கீழ் கைது செய்யப்பட்டு விசாரணையில்லாமல் வைக்கப்பட்டிருக்கிறார். இன்னும் இரண்டு பத்திரிகை ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். பத்திரிகை ஆசிரியர்கள், உதவி ஆசிரியர்கள் பலர் போலீஸ் வண்டிகளில் ஏற்றிக் கொண்டு போகப்பட்டு, பல நாட்கள் போலீஸ் நிலையத்தில் வைக்கப்பட்டு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் பாதுகாப்பு விதிகளின் கீழ் செய்ததாக சொல்லப்படுகிறது. ஆனால் பாதுகாப்பு விதிகள் எப்போது அமுலுக்கு கொண்டுவரப்பட்டன? 1962-ல் சீனப் படைகள் இமயமலைப் பகுதியில் ஆக்கிரமிப்பு செய்தபோது பாதுகாப்பு விதிகள் கொண்டுவரப்பட்டன. இப்போது அல்ல. நான் அமைச்சர்களுக்குச் சொல்ல விரும்புவது நீங்கள் ஒரு Press Relations Officer-ஐ அமைச்சரவைக்காக, அல்லது வெளிநாடுகளில் இருக்கிறமாதிரி, Press Secretary ஒருவரை, அதாவது பத்திரிகை என்ன என்று நன்றாகத் தெரிந்தவரை, நியமித்துக் கொண்டால், அவர் நன்றாக விளக்கம் செய்ய முடியும். இவ்வளவு தூரம் நாட்டில் கொந்தளிப்பு ஏற்பட்டிருக்காது. மற்ற நாடுகளில் அப்படித்தான் நியமனம் செய்கிறார்கள். அமெரிக்காவுக்கு போகிற பிரமுகர்களை முதலில் பார்ப்பது அங்குள்ள பிரஸ் செக்ரட்டரி அல்லது பிரஸ் ரிலேஷன்ஸ் ஆபீஸர்தான். இன்பர்மேஷன் டிபார்ட்மெண்டை சொல்லவில்லை; அது அதிகார

[திரு. சி. பா. ஆதித்தனர்] [11th March 1965

தோரணையில் நடந்து கொள்கிறது. பத்திரிகைபற்றி நன்கு தெரிந்த ஒருவரைச் சம்பளம் கொடுத்து நியமித்தால், உங்களுக்கு நல்ல தொடர்புள்ள அதிகாரியாக இருப்பார். நான் சொல்லுவதை தவருக நினைக்க வேண்டாம், பிரஸ் ரிலேஷன்ஸ் ஆபிஸர் ஒருவர் இருந்திருந்தால் இன்றுள்ள மாதிரி சங்கடம் வந்திருக்காது. 1962-ல், பாதுகாப்பு விதிகளை முதன்முறையாக அமுலுக்குக் கொண்டு வந்தபொழுது இப்படித்தான் அதிகாரிகள் இருந்தார்கள். மத்திய சர்க்கார் சில அதிகாரிகளை அனுப்பி அவர்கள் பத்திரிகைகளுடன் தொடர்பு கொள்ள செய்தார்கள். எந்தப் பத்திரிகை ஆசிரியரையும் கைது செய்யவில்லை, செய்ததைக் குற்றம் என்று சொல்லவில்லை. அந்த பிரஸ் ரிலேஷன் ஆபீஸர்கள் ஒரு செய்தியைப் போடக்கூடாது என்று பத்திரிகைகளுக்கு கடிதம் போடுவார்கள். "இப்படி ஒரு செய்தி இருக்கிறது, அதை உங்கள் பத்திரிகையில் போடக்கூடாது, இப்படி ஒரு கடிதம் எழுதியிருக்கிறது என்பதையும் உங்கள் பத்திரிகையில் வெளியிடக்கூடாது" என்று கடிதம் எழுதுவார்கள். டெலிபோனில் பேசுவார்கள். நேரில் சொல்லுவார்கள். தினமும் டெலிபோனில் கூப்பிட்டு, ஏதாவது ஐயப்பாடு இருக்கிறதா, ஏதாவது ஒரு செய்தியை போடலாமா, வெளியிடலாமா என்ற ஐயப்பாடு இருக்குமானால், உடனே தெரிவியுங்கள் என்று கேட்டுக்கொண்டிருந்தார்கள். அப்படி நன்முக சுமுகமாக காரியங்கள் எல்லாம் நடந்துகொண்டு இருந்தன. இப்பொழுது அந்த மாதிரி இல்லை. நேற்று நடந்த செய்தியைச் சொல்கிறேன். எங்கேயோ தடியடி நடந்தது. பத்திரிகை ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் டெலிபோன் செய்து, "தடியடி நடந்து இருக்கிறது, அதைப் போடலாமா, போடக்கூடாதா" என்று போலீஸ் அதிகாரியிடம் கேட்டார்கள். அவர் போடுங்கள், போடாதீர்கள் என்று சொல்லவில்லை. போட்டால் பின்னலே வாரண்ட் வந்தாலும் வரும். போடாமல் இருப்பதா போடுவதா என்று ஏதாவது ஆசிரியர்களுக்கு சொல்ல வேண்டாமா? இந்த ஐயப்பாட்டை தீர்ப்பதற்கு முன்போல் பிரஸ் ரிலேஷன் ஆபீசர் யாரையாவது நியமிக்கக்கூடாதா?

இன்னும் ஒன்று சொல்கிறேன். பலவழிகளிலே பத்திரிகைகளுக்குப் படங்கள் கிடைக்கின்றன. போக்கிரி ஒருவனைச் சுட்டுக்கொன்ற படத்தை பத்திரிகை ஆசிரியர் போடுகிற போது என்ன நினைப்போடு வெளியிடுகிறார் என்றால், போக்கிரித்தனம் பண்ணினால் இந்த மாதிரி சுட்டுக்கொல்ல வேண்டிய நிலைமை வரும் என்று மக்கள் தெரிந்துகொள்ள முடியும். ஆனால் அரசாங்கத்திடம் கேட்டுப் போடலாம் என்றால், போலீஸ் அதிகாரியைக் கேட்க வேண்டி இருக்கிறது. போலீஸ் அதிகாரியை பத்திரிகைக்கு தொடர்பு அதிகாரியாக நியமிப்பது போன்ற ஒரு தவறு வேறு எதுவும் இருக்கமுடியாது. அவர்களைக் குறை சொல்லி என்ன பயன்? அவர்களுக்குப் பத்திரிகை நடைமுறை தெரியாது. உண்மையாகவே கலவரம் ஏற்படக்கூடாது என்ற எண்ணத்தோடு இந்த மாதிரிக் கலவரம் செய்தவர்களுக்கு இந்த மாதிரி கதி ஏற்படும் என்று மக்களுக்கு உணர்த்த ஆசிரியர் படத்தைப் போடுகிறார். ஆனால் அரசாங்கத்தரக்கு, வேறு விதமாகத் தோன்றலாம். போக்கிரிகளுக்கெல்லாம் நாமும் கலவரம் செய்யலாம், நம்மைச் சுட்டுக் கொன்றலே நல்லது என்று அவர்களுக்குத்

11th March 1965] [திரு. சி. பா. ஆதித்தனர்]

தோன்றும் என்பது அரசாங்கத்தின் எண்ணம். ஆகவே, பாதுகாப்பு விதிப்படி வழக்கு தொடரப்படுகிறது. இந்தப் பாதுகாப்புச் சட்டத்தின்படி, எது செய்தாலும் குற்றம்தான். மின்சார அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், பல பம்புகளுக்கு மின்சாரம் கொடுக்கவில்லை அல்லது கொடுத்திருக்கிறோம் என்று. அதைப் போட்டால் கூட குற்றம் தான். வேறு பல மராமத்து நடந்ததாகச் சொன்னார்கள். அதைப் போட்டாலும் குற்றம்தான். எதைச் சொன்னலும் குற்றம் என்று இருக்கும்போது, பத்திரிகைகளின் பாதுகாப்புக்காக ஒரு ஒப்பந்தம் இருக்கிறது. என்ன ஒப்பந்தம் இருக்கிறது என்றால், பத்திரிகை ஆசிரியர்களும் அரசாங்கமும் சேர்ந்து பிரஸ் அட்வைஸரி கமிட்டி என்று நியமித்துள்ள கமிட்டி எதைக் குற்றம் என்று சொல்கிறதோ அதற்குத் தான் கேஸ் எடுக்கவேண்டும் என்று ஒரு அக்ரிமெண்டு இருக்கிறது. நேருவினுடைய வாக்குறுதி ஒன்றும் இருக்கிறது. பிரதம மந்திரியினுடைய வாக்குறுதி மட்டுமல்ல, பண்டித நேருவின் வாக்குறுதி காப்பாற்றப்படும் என்று உள்துறை அமைச்சர் நந்தாவினுடைய ஒரு வாக்குறுதியும் இருக்கிறது. மொழிப் பிரச்னையில் எப்படி வாக்குறுதி இருக்கிறதோ, அதைப்போலவே பத்திரிகைகளுக்கும் அரசாங்கத்திற்கும் ஏற்பட்ட உடன்படிக்கைப்படி, ஏதாவது பத்திரிகையின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால், அந்த ஆலோசனைக் குழுவின் தீர்ப்புப்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஒப்பந்தம். இவை எல்லாம் இங்கே உள்ளவர்களுக்குத் தெரியவில்லை. வாக்குறுதி எப்படி மொழிக் கொள்கையிலே காற்றிலே விடப்பட்டதோ,—அம்மியே ஆகாயத்தில் பறக்கும் போது, சிறு வாக்குறுதி எல்லாம், அரசாங்கத்துக்கு இருப்பதே தெரியாது—அந்த நிலைமையில் இருக்கிறார்கள். ஆகையினால் என்ன சொல்லுகிறேன் என்றால், உங்களுடைய கொள்கையை உணர்த்த சரியான தொடர்பு அதிகாரியை நியமித்து இருந்தால் இப்படிப்பட்ட சம்பவங்கள் ஒன்றும் நடந்து இருக்காது. இப்பொழுது போலீஸ் அதிகாரியைத் தொடர்பு அதிகாரியாக நியமித்தபோது, அவருக்கு பத்திரிகை பற்றி தெரியாத நிலைமை இருக்கிறது. பத்திரிகை ஆசிரியர்களைக் கைது செய்து கொண்டு போனார்கள். எப்பொழுது வந்து கைது செய்கிறார்கள் என்றால் மூன்று மணிக்கு வந்து கைது செய்கிறார்கள். நான்கு மணி என்பது பத்திரிகைகளுக்கு டெட் லைன். நான்கு மணிக்கு அந்தப் பத்திரிகை அடித்து இங்கே இருந்து காஞ்சீபுரத்திற்கு, வேலூருக்கு போயாக வேண்டும். மூன்று மணிக்கு ஏதாவது ஒரு பத்திரிகை ஆசிரியரைக் கைது செய்தால் அவர் டெட் லைன் விட்டு வரமுடியாது.

மிஸ்டர் சேர்மன்: இப்பொழுது உங்களுக்கு நாலு மணி 'டெட் லைன்' தான்.

திரு. சி. பா. ஆதித்தனர்: போலீஸ் அதிகாரியைத் தொடர்பு அதிகாரியாக போட்டிருப்பதால், டெட் லைன் இப்பொழுது கூப்பிடாதீர்கள். போலீஸ் ஸ்டேஷனுக்கு என்றால் அவர் யாரோ செத்துவிட்டார்கள் என்று எண்ணி போஸ்ட் மார்ட்டத்துக்குக் கொண்டு போங்கள் என்கிறார். நான் கேட்டுக்கொள்வது எல்லாம்

[திரு. சி. பா. ஆதித்தனார்] [11th March 1965

அமைச்சரவைக்கு நல்ல பிரஸ் செகாடரியோ அல்லது பிரஸ் ரிலேஷன் ஆபிஸரோ நியமிக்க வேண்டும். பத்திரிகை என்பது அரசினருக்கு நான்காவது கை எப்படி சட்ட மன்றம் ஒரு கையோ, நீதி மன்றம் ஒரு கையோ, திர்வாகம் ஒரு கையோ, அது மாதிரி நான்காவது கை பத்திரிகை என்று சொல்லுவார்கள் அல்லவா? அதைப் பயன்படுத்தி இந்தப் பிரச்னைகளை எல்லாம் சுமுகமாக தீர்த்துக் கொள்ள வகை செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

படித்தாலும் அதை நினைவில் சரியாக வைத்துக்கொள்ள முடியுமா? அதை வைத்துக்கொண்டு மேல் பதவிகள் அடைவதற்கு இந்தியிலேயும் பரீட்சைகள் எழுதும்போது எவ்வளவு தொந்தரவுகள் ஏற்படுகின்றன?

குறிப்பாக ஒரு மாதத்திற்கு முன்பு "Hindu" பத்திரிகையிலே ஒரு கடிதம் வெளி வந்தது. ராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் எழுதியிருந்தார். அவர் அதில் என்ன சொல்லியிருக்கிறார் என்றால் இந்தி மொழி சுமார் இரண்டு ஆண்டுகளாக ராணுவத்தின் ஆட்சி மொழியாக இருக்கிறது. அங்கே promotion கிடைப்பதற்கெல்லாம் இந்தி மொழியிலேயேதான் பரிட்சைகள் எழுதுகின்றோம். அந்தப் பரிட்சைகளிலே 200 பேருக்கு தேர்வு கிடைக்கிறது என்றால் 200 பேரும் இந்திவாலாக்களதான். இந்தி பேசாத மக்கள் சுமார் 5, 6 பேர்களுக்குத்தான் தேர்வு கிடைக்கிறது. அதனால் கிடைக்கக்கூடிய பலன் என்னவென்றால் உயர்ந்த பதவிகள் எல்லாம் அவர்கள் அனுபவிக்கின்றார்கள். சிப்பந்திகளாக கீழ்த்தரப் பதவிகளிலே தமிழர்கள் இருக்கக் கூடிய நிலை இருக்கிறது. இது நடைமுறையிலே இருந்துகொண்டு இருக்கிறது. இது பொது மக்களுக்குத் தெரியவில்லை என்று ஒரு கடிதம் வந்திருக்கிறது. அந்தக் கடிதத்தை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தி வந்து விட்டால் பல சௌகர்யங்கள் வரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக Moderation -ஐப் பற்றி நமது முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். Moderation கிடைப்பதன் மூலம் ஓரளவுக்கு நமது மாகாணத்திற்கு சலுகை கிடைக்கும் என்பது உண்மை. ஆனால் ஒன்று சொல்லிக்கொள்வேன். இந்த Moderation வரக்கூடியதை அரசியல் நிர்ணய சட்டத்திலே உறுதி அளிக்கப்பட்டால் ஓரளவுக்கு ஏற்றுக் கொள்ளலாம். அப்படி இல்லாமல் சாதாரண சட்டத்தின் மூலம் Moderation அளிக்கப் பட்டால், நமது கனம் மொரார்ஜி தேசாய் போன்ற ஒரு முரட்டு அரசியல்வாதி பொறுப்பிலே வந்து விட்டாரானால், நிடீரென்று தன் மெஜாரிட்டி பலத்தைக் கொண்டு அந்த சட்டத்தை நீக்கி விட்டாரானால் Moderation எல்லாம் இருக்கும் இடம் தெரியாமல் போய்விடும். ஆகவே அரசியல் நிர்ணய சட்டத்தின் மூலம் Moderation னை உறுதிசெய்ய முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு ஏ. சாம்பசிவ செட்டியார் : மதிப்புக்குரிய தலைவரவர்களே, இந்த மொழிப் பிரச்னைமீது நமது அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கக்கூடிய நடவடிக்கையை பாராட்டி சிறிது பேசுகிறேன். இதனை இன்றுள்ள சூழ்நிலையில் பேசுவதற்கு முன்னதாக இந்த சபையினருக்கும், பொது மக்களுக்கும், மாணவர்களுக்கும் ஒன்று தெரிவிக்க விரும்புகிறேன். நான் தமிழாசிரியனைப் பணியாற்றியவன். நான் பள்ளிக்கூடத்திலே முதன் முதலிலே நுழைந்தபோது, தமிழாசிரியர்கள் பெயர்கள் எல்லா ஆசிரியர்களுக்கும் கீழே, பியூனுக்கு அடுத்தபடியாக இருக்கும். சம்பளமும் எல்லா ஆசிரியர்களுக்கும் கீழான சம்பளம் தான் கொடுக்கப்பட்டு வந்தது.

12th March 1965] [திரு. ஏ. சாம்பசிவ செட்டியார்]

பிறகு ஜஸ்டில் கட்சிக்காரர்கள் பதவியிலே இருந்தபோது, பொப்பிலி ராஜா இருந்த காலத்திலே கூட, எல்.டி.-க்களுக்கெல்லாம் 75 ரூபாய் சம்பளம் என்றால், தமிழாசிரியர்களுக்கு 45 ரூபாய்தான் கொடுத்தார்கள். காங்கிரஸ் அரசாங்கம் வந்தபிறகுதான் பி. டி-க்களுக்கு, ஆங்கிலம் படித்த ஆசிரியர்களுக்கு, என்ன சம்பளமோ அதே சம்பளம் தமிழாசிரியர்களுக்கும் உண்டு என்று செய்தார்கள்.

இந்த நிலைமையை எதற்காக சொல்கிறேன் என்றால் காங்கிரஸ் அரசாங்கம் தமிழுக்கு ஏதோ துரோகம் செய்து விட்டது, தமிழைப் புறக் கணித்து விட்டது என்றெல்லாம் ஒரு தப்பான கருத்தை சிலர் மக்களிடத்திலே நிலவச் செய்கிறார்கள், அல்லது நிலவச் செய்ய வேண்டுமென்று நினைக்கிறார்கள். அது மிகவும் தவறு என்பதற்காகச் சொல்கிறேன்.

அது மாத்திரமல்ல, அன்றைக்குத் தமிழ் இரண்டாவது மொழியாகத்தான் இருந்தது. காங்கிரஸ் அரசாங்கம் வந்த பிறகுதான், தேர்வுகளுக்கு, பாடங்களுக்குக்கெல்லாம் தமிழ் முதல் மொழி என்று ஆக்கப்பட்டது. தமிழை ஆட்சி மொழியாகக் கொண்டு வந்ததை எடுத்துக்கொண்டால், இந்த விஷயத்திலும் மற்ற மாநிலங்களுக்கு முன்னால், முதன் முதலாக, அதைச் செய்தது நமது மாநில அமைச்சரவைதான். மேலும், இன்று அமைச்சரவையில் தலைமைப் பொறுப்பு ஏற்றிருக்கும் நம் கனம் முதலமைச்சர் 1950-இலோ, 1951-இலோ என் தொடர்புடைய ஒரு பள்ளிக்கூட ஆண்டு விழாவில் பேசியது எனக்கு இப்போதும் பசுமையாக நினைவில் இருக்கிறது. அந்த விழாவிற்கு அவரை நான் அழைத்திருந்தேன். அப்போது அவர் அமைச்சராக இல்லை. "நான் அரசியலில் ஓயாமல் அலைந்து கொண்டிருந்தேன். அப்படி எத்தனையோ ஆபீசர்களையும் கூட்டங்களையும் பார்த்து அலுத்துச் சலித்துப் போயிருக்கும் எனக்கு இளைஞர்களையும் மாணவர்களையும் பார்த்து, என் தாய் மொழியிலுள்ள இலக்கியங்களைப் பற்றி எனக்குத் தெரிந்த சில கருத்துக்களைச் சொல்ல இப்போது வாய்ப்பு கிடைத்துள்ளது குறித்து நான் உண்மையிலேயே மகிழ்ச்சி அடைகிறேன்" என்று அவர் அப்போது பேசினார். அப்படி, அவர் அமைச்சராக இல்லாத காலத்தில் அவருடைய தொண்டு தமிழ்த் தொண்டாகத்தான், தமிழ் இலக்கியத் தொண்டாகத் தான் இருந்தது. பொறுப்பில் இருக்கும் இன்றுகூட தமிழ் கலையையும் தமிழ் பண்பையும் வளர்க்க அவர் பாடுபடுகிறார். மூவேந்தர்கள் காலத்திலிருந்து இருந்து வரும் தேவாலயங்களை எல்லா இடங்களிலும் புதுப்பிக்க அவர் ஏற்பாடு செய்து வருகிறார்; திருப்பணிகளுக்கு ஆதரவு தருகிறார்; தேவாலயப் பணிகளுக்கு ஆதரவு தருகிறார்; திருவாய்மொழி, மறைந்து போன ஏடுகள் ஆகியவைகளை அச்சேற்றி அவை பொதுமக்களுக்குக் கிடைக்க ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறார். அவர் தமிழுக்கு துரோகம் இழைத்தவர் என்று கூறுபவர்கள், அவரை நன்கு தெரிந்து கொள்ளாதவர்களும், அவரோடு நன்கு பழகாதவர்களும், அவர் செய்ததைத் திரித்தும் மறைத்தும் பேசுபவர்களும் தான் என்று சொல்ல விரும்புகிறேன். உலுக்கு ஒரு பக்கம் இடி, மத்தளத்

[திரு. ஏ. சாம்பசிவ ரெட்டியார்] [12th March 1965

திற்கு இரு பக்கமும் இடி என்று சொல்லுவதுண்டு. இன்று தமிழ் நாட்டுக் காங்கிரஸ் அமைச்சர்கள் மத்தளத்தைப் போன்ற நிலையில் இருக்கின்றனர். தமிழ் போய்விட்டது என்று மாணவர்களும் மற்றவர்களும் இங்கே கூக்குரலிடுகின்றனர். அங்கே, காங்கிரஸ் கட்சியிலுள்ள இந்தி வெறியர்கள் "நீங்கள் இந்தியைக் கட்டாயப் படுத்தவில்லை. நீங்கள் இந்தியைப் புறக்கணித்து விட்டீர்கள்" என்று சத்தம் போடுகிறார்கள். இந்த இரண்டு நிலைகளுக்கும் நடுவில் அவர் தமது போக்கை விடாதபடி பிடித்துக்கொண்டு, மத்திய ஆட்சியினரோ, வடக்கேயுள்ள ஒரு மாநிலமோ ஹிந்தியைத் திணிக்க வேண்டுமென்று சட்டம் செய்ய முன் வந்தபோதும்கூட, "ஒரு தனி மாநிலம் எதிர்த்தாலும் இந்தி கூடாது" என்று சொன்னதன் பெருமை இந்தத் தமிழகத்தின் முதல்வரையே சாரும். இதற்காக, அவரோடு ஒத்துழைக்கவும், அவருக்கு நன்றி செலுத்தவும் மாணவர்களும் பொதுமக்களும் கடமைப்பட்டிருக்கிறார்கள். இப்படி சொல்லிக் கொண்டே போனால், தமிழுக்கு அவர் ஆற்றியுள்ள அரும் பணிகளைச் சொல்லிக்கொண்டே போகலாம்.

இன்னொரு விஷயத்தை அடக்கத்தோடு சொல்ல விரும்புகிறேன். இன்று எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் ஸ்ரீ. ராஜாஜி முதலமைச்சராக இருந்தபோது இந்த சட்டமன்றத்தில் இல்லை. ஸ்ரீ. ராஜாஜி ஒரு கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்தார். அத்திட்டம் குலக் கல்வி தர்மத்தை வளர்க்கும் என்றும், குலக் கல்வி முறை என்றும், கிராமப்புற மக்கள் கல்வித் துறையில் முன்னேறத் தடையாக இருக்கும் என்றும் கருதப்பட்டது. ஸ்ரீ. ராஜாஜி எங்கள் மதிப்பிற்கு உரியவர். அவர் அன்று எங்கள் கட்சியின் தலைவராக இருந்தார்; இருந்தாலும், அவர் சொன்னதை அன்று வேத வாக்காக நாங்கள் கொள்ளவில்லை. மாணவர்களின் நலனையும், பொது மக்களின் நலனையும் கருதி அவரைப் பதவியிலிருந்து விலகச் செய்தோம். எனவே காங்கிரஸ் மந்திரிகள் இந்த நாட்டு மக்களுக்காகவே பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை எல்லோருடைய கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறேன்.

இன்னும் இரண்டு நிமிடங்களுக்குள் என் பேச்சை முடித்து விடுகிறேன் என்று கனம் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு மாநிலம் மாத்திரம் எதிர்த்தாலும்கூட ஹிந்தியைக் கொண்டுவரக் கூடாது என்று சொல்லியுள்ள கனம் அமைச்சர் இப்போதும், "இந்தி கட்டாயப் பாடமாக ஆகிவிடும்" என்று சொல்லவில்லை. சென்ற ஆண்டு இருந்த நிலைமைதான் இனியும் இந்த மாநிலத்தில் இருக்கும் என்று அவர் சொல்லியிருக்கிறார். இதையும் மாணவர்களும் மற்றவர்களும் சிந்திக்க வேண்டும். இதைப் பற்றியெல்லாம் சிந்திக்கும்போது, இளைஞர்கள் காட்டும் எதிர்ப்பிற்கு அடிப்படை எது என்றே புரியவில்லை. அவர்கள் ஏதோ உணர்ச்சி வசப்பட்டு விட்டனர். அந்த உணர்ச்சியிலிருந்து அவர்கள் மீள முடியவில்லை. மாணவர்களின் பெற்றோர்களும், வெளியில் உள்ளவர்களும், எல்லோரும் சேர்ந்து மாணவர்களின் நலனைப் பாதுகாக்க வேண்டும். மாணவர்கள் தான் சமுதாயத்தின் ஆணி வேர். அவர்களிடையே கட்டுப்பாடின்மை வளர்ந்துவிட்டால், வருங்கால சமுதாயமே கெட்டுப் போய்விடும். எனவே அவர்களிடையே ஒழுங்கு முறையை வளர்ப்பது எல்லோருடைய கடமையுமாகும். இதற்கு எல்லோரும் முயற்சி செய்ய வேண்டுமென்றும், அரசாங்கத்தின் கொள்கைக்கு ஆதரவு தர வேண்டுமென்றும் சொல்லிக்கொண்டு என் பேச்சை முடிக்கிறேன்.

12th March 1965] [திரு. ஏ. சாம்பசிவ ரெட்டியார்]

MR. CHAIRMAN : The hon. Member Srimathi Lakshmi Krishnamurthi. I can't be chivalrous to you in respect of the time-limit. (Laughter).

* SRIMATHI LAKSHMI KRISHNAMURTHY: I hope I will keep it in mind, Sir.

Mr. Chairman, Sir, a great deal has been said about the language policy both inside and outside the House. Our Government in anticipation of practical difficulties did pass the official Language Bill on the 20th of October 1964 itself in this House. The Hon. the Chief Minister in the Legislative Assembly on the 17th of October while moving the Bill assured the members of the State Assembly, when it passed the Madras State Legislature (Continuance of use of English language) Bill 1964, that the formal passing of the measure did not mean that for the transaction of the business of the House progressive use of English would be made. He reminded the House that, on the other hand, it was declared policy of the Government that progressive use should be made of Tamil the regional language and that efforts were being made to fulfil that policy. Sir, hon. Members from this side of the House have forcefully put it how this Government has been working for the furtherance of Tamil not only when they have been in office but even long before they assumed office. If I remember aright, Sir, I think, it was the Indian Naional Congress party which started the practice of conducting all their business affairs in Tamil in Madras right from those early days. They were the first party to do it.

Sir, most of the members who spoke eloquently pleaded for the continuance of English as the sole official language of India. Having reiterated our right to retain English, we must in fairness concede the same right to other States also to choose whichever language they like to function not only in their States but even if they wanted to function in Hindi in the Centre also. It is not for us to dictate that English alone should be the official language of the Nation. English it is said is a great unifying force but for which no exchange of ideas could have taken place even within the country. We all agree and there is no gainsaying the fact. It is an International language which we cannot afford to ignore if we want to make any progress and especially if we have to play an effective role in the United Nations. But at the same time we cannot ignore Hindi either. It has been the firm policy of the Indian National Congress right from the days of the Karachi

[Srimathi Lakshmi Krishnamurthy] [12th March 1965

Session in the year 1930. My revered father had mentioned about it on his return to Madras after attending the Karachi Congress. He had said as early as 1931 :

" I also felt at the Karachi Congress that the rapid substitution of Hindi for English in all its proceedings was raising the stature of the Nation, enhancing our self-respect and above all confounding the foreigner.

I would appeal to all my countrymen to learn Hindi. But I would particularly appeal to all parents and guardians to see that their children learn Hindi and that Hindi is taught compulsorily in all the elementary and secondary schools ". This compulsion part of it is irksome today to us. Sir, it has taken the nation 150 or 200 years to spread even the little English that we know today. Given time I am sure we can master the Hindi language also.

Look at the Keralites. They have no quarrel with Hindi for they know where their bread and butter lies. With the Mysoreans right from the days of Hyder Ali and Tippu Sultan the language has been familiar to them. Similarly with the Andhraits now that they have accepted Hyderabad as their capital they do not seen to have any great difficulty. If we alone, that is Tamilnad alone does not want Hindi I am afraid we will be isolated and we would have to pay very heavily for our present folly later on. Hatred of one language can never be the right policy to nurture our own mother tongue. Sir, the hatred that has been preached in most of our educational establishments is now recoiling on our own heads for it is one of the causes for all the vandalisms that we witnessed recently. We have been forced to witness all these helplessly all these few weeks. These acts have sullied the fair name of Tamilnad, by the very same people who cry from housetops that they are the people who have lot of concern for Tamilnad and for Tamilthai. Hatred only breeds hatred as we all sadly know.

There has been absolutely no change as far as this Government is concerned both before and after January 1965 Tamil has been given its right full place and it will remain to be so. . . . .

Sir, we hear frequent reports of Chinese attempts to land in the Andamen and Minicoy Islands. Many Chinese are reported to be seen even in the remote villages of Ceylon. Sir, as our eminent Leader of the Opposition put it, we have enemies not only in the extreme north, east and west but also in the south. These enemies will be only too happy to see us indulge in civil war for it will be make their job easy. A disunited and disrupted India will be an easy prey for anybody.

Even today, Sir, the educational institutions are not allowed to function normally. All the Opposition parties in this Council have repeatedly said that they have no hand in this. Then who it at the back of all this? Some time back, I think, two or three weeks ago when the disturbance started, there was some mention

12th March 1965] [Srimathi Lakshmi Krishnamurthy]

made that a responsible committee should be appointed to unravel the mystery of all these happenings. When things settle down to normal, I do hope that a responsible committee would be constituted to go into the recent happenings so that such things may not repeat themselves hereafter at least.

Sir, the hon. the Leader of the Opposition mentioned yesterday that there was some sort of understanding arrived at among the leaders of various political parties some three or four years ago they would not call upon the students to participate in all these agitations and political activities. After all they are students and if they wait for two or three years they can come into politics and play their own part. I do hope that all parties even including the Congress will not use the students hereafter because we have now learnt a bitter lesson.

It is unfortunate that on the whole things have not yet settled down. But it is very essential that India should have one common language. Let me quote one or two instances how and why it is necessary to have one common language for the whole of India and conclude, Sir, very quickly. Some hon. Members may also be aware of the incident which I am now going to cite. One of our eminent Ambassadors had to present his credentials before the head of a great State. Just because that was in English the head of that particular State refused to accept it and the Ambassador unfortunately had no knowledge of Hindi. So, that particular State's foreign affairs department had to translate those credentials before they were presented. Then, Sir, an expert scientist told me the difficulties caused in meetings and conferences held for want of a common language. Technical experts, scientists and others from many parts of the World attend International Conferences. When they sit round the table and discuss things and want to come to an understanding, if they do not have a common language, common Indian language, it would be difficult for them to arrive at a common understanding. No doubt English is an important language but in addition to overcome practical difficulties we must learn Hindi also. Both Hindi and English are indispensible for the progress of our country.

Sir, I would also like the Hon. the Chief Minister to keep in mind what has been said here about the coercion that is employed to put through Hindi. For instance, Sir, yesterday hon. Members mentioned that even money order forms were printed in Hindi. We should not be reduced to that. Several of the staff of the Central Government have complained that when they have reached the middle-age, it is very difficult for them to pass Hindi examinations. Unless they pass examinations, we are told that they will not be given promotions. I hope the Chief Minister will keep this in mind and remove these small practical difficulties, because they do matter a lot. Life is one long compromise. There is no point in trying to be isolated unless we want to sink. If we really want to float and keep our heads above, we must join hands and remember that India is one nation, which is an indisputable fact.

1-20 p.m.

[Srimathi Lakshmi Krishnamurthy] [12th March 1965

Another thing to which I would like to draw the attention of the Government is this. During those stormy days, several unauthorised reports seem to have come out in all the papers very responsible papers. Sometimes even the All-India Radio has been guilty of wrong bulletins. I do hope that a proper publicity cell or unit will function under the Government themselves so that only authorised versions—I do not mean they should be "doctored" in any way—are sent out and unnecessary panic is avoided. With these few words, Sir, I resume my seat. Thank you, Sir.

* DR. H V. HANDE : Sir, at the very outset I want to say one important factor, and that is that I do believe in the Constitution and also believe in the respect which we give to the Constitution. All that I wish the House to examine is the first paragraph of our Constitution. In the Preamble there it is clearly stated—

'We, the people of India, having solemnly resolved to constitute India into a Sovereign Democratic Republic and to secure to all its citizens : Justice, social, economic and political; Liberty of thought, expression, belief, faith and worship; Equality of status and of opportunity; . . .'

All that I request the Chief Minister to bear in mind is that the people of Madras State and the people belonging to the different States which do not speak Hindi or which do not have Hindi as the State language must be given the same opportunity as the Hindi speaking people. This equality of opportunity should never be compromised under any circumstances. Sir, I believe in the unity of India also. Even here, by bringing in Hindi as the Central language and by giving it such importance as we are giving now, we are bringing in a sort of disruption in the unity of India. There is the possibility of bringing the entire citizens of India into these two classes, viz., the first class and the second class. All that I would request is, let us not break up the country into two classes. I would just narrate a small instance to show how Hindi was being imposed on the people of the non-Hindi States even before the 26th January 1965. This is a notification of the Union Public Commission for the I.A.S. examination, the most important administrative service examination. Here in page 15 it is printed like this. Probationers should have already passed or should pass during the period of probation an examination in Hindi in the Devanagari script of approved standard. This examination may be Praveen examination conducted by the Directorate of Education, Delhi, on behalf of the Ministry of Home Affairs, or one of the equivalent examination recognized by the Central Government. No probationary officer can be confirmed or his pay in the time-scale raised to Rs. 450 per month unless he fulfils this requirement, and failure to do so will involve liability to termination of service. No exemption will be granted. This is a notification which appeared in 1964. This was the state of affairs right before Hindi was compelled. After Hindi has been compelled, I do not want to take much time of this House to say what the position is. I will give you an illustration, Sir, we had a notification of the

12th March 1965] [Dr. H. V. Hande]

proceedings of the Chairman and Speakers of all the Legislatures. One side is in English and the other side is in Hindi. Just imagine how a person who knows only the Hindi language has a clear advantage over persons who do not know Hindi. This is the state of affairs now.

There is an argument advanced by several people that Hindi is spoken by a very huge population, and so it is to the advantage of the country if we have Hindi as the national language. May I point out, Sir, that the problem is not between a person in Salem or North Arcot and a person in United Province communicating to each other. The problem now is the question of administration. Let us not have a tremendous disadvantage for two-thirds of the population. As it is, ninety per cent of the people transacting business in Central Government offices transact their business in English. All that I request is, let us continue English and let us also see that no rift is brought about among the people.

Sir, English letters appear to be painted with tar in Delhi. There is some reason if there was painting with tar on Hindi letters in Tamilnad. May I point out with all humility that the question is not painting tar on English letters in Delhi. If they do it in Lucknow or Kanpur, we have no objection.

Sir, I only want to make one request to the Chief Minister. When he goes to Delhi, he may be given the greatest persuasion or pressure from Hindi zealots. Whatever happens, it is in his hands today to save Madras State from this catastrophe. I request him, Sir, to stand as firm as a rock against the Hindi zealots and save us from the situation that has already engulfed this State. Thank you, Sir.

திரு. க. அன்பழகன்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, அண்மையில் ஏற்பட்ட மிக நெருக்கடியான சூழ்நிலையிலிருந்து தமிழகம் விடுபடவேண்டும் என்றும், தமிழ் மக்களுடைய உண்மையான குறைகள் டெல்லி சர்க்காரால் கேட்டறியப்பட்டு அதன் காரணமாக அரசியல் சட்டத்தின் ஆட்சிமொழிப் பிரிவில் நிச்சயம் திருத்தம் கொண்டுவருவார்கள் என்றும் எதிர் பார்க்கப் படும் இந்த நேரத்தில் நான் இங்கே பேச முற்படுகிறேன். மொழி பிரச்னையில் எந்த அரசியல் கட்சியின் கொள்கைகளும், அவை கட்சியின் கொள்கைகளாக ஏற்கப்பட்ட கருத்துக்களாக இருந் தாலும், அவை காலத்தையொட்டி பல மாற்றங்களுக்கு உட்படு வனவேயாகும். பல ஆண்டுகளுக்கு முன் வகுக்கப்பட்ட அவை கட்சிக் கட்டுப்பாடு காரணமாக அப்படியே நிலைபெற்றுவிடும் என்று யாரும் எதிர்பார்க்கமுடியாது. இன்று, பாராளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குகள் பெற்றுள்ள கட்சியைச் சேர்ந்தவர்கள், மிகுந்த செல்வாக்கு பெற்றுள்ள பெரும்பான்மையினராலும் கூட மொழிப் பிரச்னை குறித்து புனராலோசனை செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

அகில இந்தியாவிற்கும் இந்திய ஆட்சி மொழி ஒன்று தேவை என்ற கருத்து அரசியல் நிர்ணயம் செய்யப்பட்ட காலத்தில்தான் மிக அழுத்தமாக வேரூன்றியது. அதற்கு முன்னால் இந்தியா

விற்கு ஒரே ஆட்சிமொழி தேவை என்ற கருத்தோ, மத்திய ஆட்சிமொழி நாட்டு மக்களின் பேச்சு வழக்கிலுள்ள ஒரு மொழியாக இருக்கவேண்டுமென்ற எண்ணமோ, வேரூன்றவில்லை.

பொதுமொழியைப்பற்றி மகாத்மா காந்தி உட்பட பல மாபெரும் அரசியல் தலைவர்கள் சொல்லியுள்ள கருத்துக்களைப் படித்துப் பார்ப்பவர்களுக்கு இது தெரியவரும். இந்திய சுதந்திர போராட்ட காலத்தில், ஒவ்வொரு மாநிலமும் சுயாட்சி உடைய தனித்தனி மாநிலமாக இருக்கமுடியும் என்ற நம்பிக்கையும் அந்தந்த மாநிலத்தின் தேவைகளை அந்தந்த மாநில மக்களின் மொழியே பூர்த்தி செய்ய முடியும் என்ற நம்பிக்கையும் இருந்தது. ஒரு பொதுமொழி தேவை என்ற மகாத்மா காந்தியும் அன்று ஹிந்திக்காக வாதாடியதைவிட மிகுதியாக ஹிந்துஸ்தானிக்காக வாதாடினார். வட நாட்டில் ஹிந்துக்களும் முஸ்லீம்களுக்கு மிடையே மனக்கசப்பு இருந்ததால் அந்த மனக்கசப்பை மாற்ற அவர்களிடையே ஒரு பொது மொழி தேவை என்ற எண்ணம் அவர் மனத்தில் மிகுதியாக இடம்பெற்றது. அதனால் 'இந்தி', 'உருது' இரண்டுக்கும் தொடர்புடையதால ஹிந்துஸ்தானிக்காக வாதாடினர். அதனையே 'இந்தி' என்றும் அழைத்தார். "ஹிந்தி மொழி என்பது வடநாட்டில் ஹிந்துக்களும், முஸ்லீம்களும் பேசுகின்ற மொழி என்றும், அது நாகரி அல்லது பாரசீய எழுத்துக்களில் எழுதப்படும் என்றும் நான் பலமுறை கூறியுள்ளேன்" என்று மகாத்மா காந்தியடிகளே சொல்லியிருக்கிறார். வடநாட்டில் ஹிந்தி பேசுபவர்களுக்கும் உருது பேசுபவர்களுக்கும் இடையே மனக்கசப்பு இருந்ததால், இரண்டு மொழிகளுக்கும் பொதுவான ஹிந்துஸ்தானியையே அவர் ஆதரித்தார். இந்துஸ்தானியை எழுதும் எழுத்து வடிவத்தால் கொஞ்சம் மாறுபாட்டையும் கருத்தில்கொண்டு தேவநாகரி அல்லது பாரசீய எழுத்துக்களில் ஹிந்துஸ்தானியை எழுதலாம் என்றும் காந்திஜி சொல்லியிருக்கிறார். எனவே, வடநாட்டவரிடையே சமயத்துக்குப் பயன்பட்ட இந்துஸ்தானியும்—கைவிடப்பட்டு, மேற்கொண்டுள்ள இந்தி வட நாட்டிலுள்ள பெரும்பாலோருக்கு திருப்தி அளிக்கக்கூடியதாக இருக்குமே யொழிய, தென்னாட்டுக்கோ, வங்காளத்துக்கோ திருப்தி அளிப்பதாக இருக்காது என்பதை, மொழிப் பிரச்னையை ஆராய்பவர்கள் கவனிக்கவேண்டும்.

அதேபோலத்தான் இந்திமொழி ஆட்சி மொழியாக கொண்டு வருவதற்கு அரசியல் சட்டம் செய்யப்பட்ட சூழ்நிலை காரணமாயிற்று. ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிர்ப்பு நடைபெற்று முடிந்த நேரமாகும். ஆங்கில மொழி ஆதிக்கக்காரர்களின் ஆட்சிமொழியாக இருந்த காரணத்தினால் அந்த மொழியில் ஆட்சி நடத்துவது நமக்கு இழிவு என்று கருதும் சூழ்நிலை அன்று இருந்தது. அந்த உணர்ச்சியிலிருந்தவர்கள் உள்நாட்டு மொழி ஒன்றை ஆட்சி மொழியாக ஆக்க நினைத்த வேகத்தில் சரியாகவோ தவறாகவோ இந்தி மொழி இடம்பெற்றது. அப்படிக் குறிப்பிடப்பட்ட இந்தி மொழி, மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத காங்கிரஸ் கட்சியினால் ஏற்கப்பட்டவர்களைக் கொண்ட அரசியல் நிர்ணய சபையில் அங்கீகரிக்கப்பட்டது. ஒரு கட்சி, பெரும்பான்மை வலிவு பெற்றிருந்த காரணத்தால் அக்கட்சியினர் கூறி ஒரு முடிவுக்கு வந்ததால்

எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இங்கு சுட்டிக் காட்டியதுபோல, ஒரு வோட்டு வித்தியாசத்தில் இந்தி இடம்பெற நேரிட்டது. மொழியாகப் போகிறது என்ற எண்ணத்தில்தான் இந்தி ஆட்சி மொழியாகப் போகிறது என்ற எண்ணத்தில்தான் இந்தி இடம் பெற முடிந்ததென்பதை நினைவூட்ட விரும்புகிறேன். இன்று ஏற்பட்டிருக்கும் சூழ்நிலையின் கண்ணோட்டத்தில் எண்ணிப்பார்த்தால், அன்று சட்டம் செய்து விட்டாலும் அதை வற்புறுத்துவது முறையல்ல என்ற பெருந்தன்மையான நோக்கம் இந்திமொழிச் சொந்தக்காரர்களுக்கு ஏற்பட்டிருக்கவேண்டும். ஆனால் அவர்கள் அதை எண்ணிப்பார்க்கவில்லை என்பது வருந்தத்தக்கது.

முதலமைச்சர் நேற்று பேசுகிறபோது இந்த மொழிச்சிக்கலுக்கு ஒரு காரணமாக சுதந்திரத்தைக் குறிப்பிட்டார்கள். சுதந்திரம் வருவதற்கு முன்னர் அதன் பலன், விளைவு யாருக்கும் தெரியாது. அது வந்தபிறகுதான் அதை நுகர்ந்து, நுகர்ந்து ஜனநாயகத் தன்மையை அறிந்து அவரவர்கள் உணர்ச்சி பெறுகிறார்கள். அந்த நிலையில் அந்த எழுச்சியை எந்த ஜனநாயக அரசாங்கமும் மறுப்பதில்லை. அப்படி மறுத்தால் அந்த ஜனநாயக அரசாங்கத்துக்கு மதிப்பு இருப்பதுமில்லை.

அப்படி உணர்ச்சி எழும்போது அதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் மத்திய அரசினர் என்பதற்கு உதாரணம் சொல்ல முடியும். மக்களுடைய மொழி உணர்ச்சி பெருகிய காரணத்தால் தான் ஆந்திரமாநிலம், மராட்டிய மாநிலம், குஜராத்தி மாநிலம் பிரித்தளிக்க முன்வந்தனர். இவையெல்லாம் எந்த அடிப்படையில் பிரிந்தன? ஒரு மாநிலம் அமைக்கும் அளவுக்கு ஒரு மொழியை மதிப்பது மட்டுமன்றி அரசியல் அமைப்புச் சட்டத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறபடி ஒரு மாநிலத்தில் வாழ்கின்ற சிறுபான்மையோர் தங்களுடைய மொழியைப் பாதுகாத்துக் கொள்ள எல்லாவித பாதுகாப்பும் வழங்கப்பட வேண்டுமென்ற அடிப்படை உரிமையின்படி, ஒரு மாநிலத்திலுள்ளேயே அங்குள்ள வேற்று மொழி பேசுகிறவர்களின் உரிமையைக் காப்பாற்ற அரசியல் சட்டத்தைத் திருத்தியிருக்கிறார்கள். மொழி, கலை உரிமைகட்கு பாதுகாப்பு வழங்கியிருக்கிறார்கள். பஞ்சாப் சிறிய மாநிலமாக இருக்கிறது. இந்தி மொழி பேசும் வட்டாரம் என்றும் பஞ்சாபி பேசும் வட்டாரம் என்றும் பாகுபாடு அதிலிருக்கிறது. வேறு நான்கு மாநிலங்களில் இந்தி மொழி பேசுபவர்கள் முழுச் செல்வாக்கு பெற்றவர்களாக இருந்தாலும் பஞ்சாப் மாநிலத்தில் இந்திக்கு ஆட்சி உரிமை இல்லாவிட்டால் என்ன செய்வது என்று அவர்கள் வற்புறுத்திய காரணத்தால் அந்த வட்டாரம் தனியாகப் பிரிக்கப்பட்டு இந்தி பேசுகிற வட்டாரத்திற்கு தனி உரிமை தரப்பட்டு அது மாநில சர்க்காரால் ஏற்றுக்கொள்ளச் செய்யப்பட்டிருக்கிறது. அதேபோலத்தான் ஆந்திரம் அமைக்கப்பட்டவுடன் தெலுங்கானா பகுதி முன்னர் ஐதராபாத்தில் சேர்க்கப்பட்டிருந்ததால் அந்தப் பகுதி மக்களின் கலாசாரம், பண்பாடு தனித்தன்மையதாக இருப்பதால் அவர்களுக்குத் தனி உரிமை தரப்பட்டு, உள்துறை ஆட்சி, சுகாதாரம் முதலானவை பற்றி அவர்தம் தனிக்கருத்துக்கள், ஆந்திர சட்ட சபையால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டி

[திரு. க. அன்பழகன்] [12th March 1965

ருக்கிறது. ஜம்மு-காஷ்மீர் சில தனி உரிமைகளுடன் டில்லியில் பிரதமர் என்று இருப்பதைப் போன்று அங்கும் பிரதமர் பதவி ஏற்கப்பட்டிருந்து அண்மையிலேதான் அதை மாற்றவேண்டு மென்று சொல்லும் நிலைமை ஏற்பட்டு வருகிறது. நம்மைப் போன்ற நாகரிகம் உள்ளவர்கள் என்று உலகம் ஒப்புக்கொள்ளாத நாகாலாந்தில் உள்ள மக்கள்கூட அவர்களது சமுதாய சட்ட திட்டங்கள் பழக்கவழக்கங்கள் காப்பாற்றப்படுவதற்காக தனி உரிமைகள் பெற்றிருக்கிற அளவுக்கு—தனி சுதந்திரம் அல்ல—அவற்றைப் பாதுகாப்பதற்கு அரசியல் சட்டத்தில் இடம் தரப் பட்டிருக்கிறது. தமிழகத்தில் சேர்ந்துவிடவேண்டிய புதுச்சேரி, காரைக்கால் பகுதிகள் இன்றைக்கும் தனி அரசாங்கம் அமைத்து தனித்தன்மையதாகக் கருதுகிற சூழ்நிலையில் இருக்கிறது. கோவாவில் அவர்களது மொழி, கலைக்காக அந்த உரிமை இருக்கிறது. இவைகளை எல்லாம் குறிப்பிடுவது ஒரு கலாசாரமும் பண்பாடும் அந்த மொழி எழுத்தும் அரசியல சட்டத்தால மதிக்கப் பட்டு ஒரே மாநிலத்திலேயே தனித்தனி பகுதியாக, தனித் தனி பாதுகாப்பு உரிமைகள் வழங்கப்பட்டிருக்கிறதே, அதே அரசியல் சட்டத்தில் இந்தியா முழுவதற்கும் ஒரு மொழிதான் ஆட்சிமொழி என்று எப்படித் தீர்மானித்தார்கள்? தமிழ்நாட்டில் தெலுங்கு மக்கள் இருபத்தைந்து அல்லது முப்பது சதவிகிதம் இருந்து தெலுங்கு மொழி ஆட்சி மொழி ஆகவேண்டுமென்று கேட்டால் தெலுங்கும் ஒரு ஆட்சிமொழியாகலாம். 'Multi Lingual State' என்ற முறையில் மாற்றப்படலாம். அப்படி இருக்கும்போது இந்தியா முழுமைக்கும் ஒரே மொழியில் ஆட்சி நடத்தவேண்டுமென்று எண்ணுவது எப்படி நியாயமாகும்? அது அரசியல் சட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற அடிப்படை உரிமை கள் காப்பாற்றப்படவேண்டும் என்னும் கருத்துப்படி நியாயமா என்று எண்ணிப்பார்க்கவேண்டாமா?

அடிப்படை உரிமைகள் பற்றிக் கூறும்போது, ஒரு தனி மனிதனுக இருந்தாலும் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திலோ ஜாதி யிலோ இனத்திலோ மதத்திலோ பிறந்த காரணத்திற்காக எந்த வட்டாரத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் யாவருக்கும் கிடைக்கிற பொது உரிமைகளில் இருந்து அவர்களது உரிமைகள் மறுக்கப்படக்கூடாது, என்று அடிப்படை உரிமைகள் திட்டவட்ட மாக நிறைவேறியிருக்கிறது. தனி மனிதனுக்கு எந்த எந்த உரிமை இலக்கணங்கள் அந்த அரசியல் சட்டத்தில் பேசப்படுகிறதோ அவை எந்த மொழி பேசுகிற இனமாக இருந்தாலும் அந்த மொழி பேசுகிற மக்களுக்கும், குழுவினருக்கும் உள்ள அடிப்படை உரிமை யாக இயற்கையிலேயே சொந்தமாக்கப் படுகிறது. தனி மனிதன் ஒருவனே ஜாதி முறையினால் வேலைக்கு வைக்கமாட்டேன் என்றால் அது எப்படித் தவறோ எப்படி அடிப்படை உரிமையினைப் பறிக்கும் தவறுகுமோ அதே போன்றதுதான், ஒரு வட்டாரத்தைச் சேர்ந் தவர்கள் தங்கள் தாய்மொழி அனைவருக்கும் ஆட்சிமொழி என்று சொல்லுவதும் பிறமொழி உரிமைகளைப் பறிப்பதுமாகும். தமிழர் கள் தமிழை டெல்லியில் ஆட்சிமொழியாகப் பயன்படுத்தக்கூடாது என்றால், தெலுங்கர்கள் தமது தெலுங்கு மொழியை ஆட்சிமொழி யாகப் பயன்படுத்த முடியவில்லை என்றால் அதேபோல உள்ள

12th March 1965] [திரு. க. அன்பழகன்]

பிறிதொரு வட்டார மொழியாகிய இந்தியை மட்டும் ஆட்சிமொழி என்று சொல்வது அடிப்படை உரிமையைப் பறிக்கும் தவறு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அரசியல் சட்டத்தின் வாசகத்தை எடுத்துக்காட்டி வாதிட முடியாமற்போகலாம். அப்படி வாதிட்டால் சட்டப்படி அது நிற்காது என்றும் கூறலாம். ஆனால் எந்த அடிப்படையான தத்துவத்தை மனதில் வைத்துக் கொண்டு அடிப்படை உரிமைகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றனவோ அந்த உரிமைகள் மொழி வழியில் அமைந்திருக்கிற எல்லா சமுதாயத்திற்கும் தரப்படவேண்டும். தனி மனிதனுக்கு வழங்கப் படும் அந்த உரிமை ஒரு மொழி பேசுகின்ற மூன்றரை கோடி மக்களுக்கு இல்லை என்றால் அது அச்சமுதாயத்தின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படுகிற முறையில் இல்லை என்பது தெளிவாகும்.

அடுத்து மற்றொன்று சொல்ல விரும்புகிறேன். இந்தி மொழியை ஆட்சிமொழியாக ஆக்கவேண்டுமென்று விரும்புகிறவர்கள் 15 ஆண்டுகளுக்கு முன்னர் அரசியல் சட்டத்தில் எப்படிப்பட்ட கருத்தைக் கொண்டு அதை இடம்பெறச் செய்தார்களோ, அதையே இவ்வளவு காலம் கூறி வந்ததும், இந்தப் பதினைந்து ஆண்டுகளில் அதை முறையாக நிறைவேற்ற முடிந்ததா என்றால் முடியவில்லை. எதிர்க்கட்சித் துணைத் தலைவர் குறிப்பிட்டார்கள், பி.ஜி. கெர் அவர்களைத் தலைமையாகக் கொண்ட ஆட்சிமொழி குழுவினையே 1965-லே இந்தி ஆட்சிமொழி ஆகிவிடமுடியும் என்ற கருத்து ஒப்புக்கொள்ளப்படவில்லை என்பதை. எப்பொழுது ஆகமுடியும் என்ற கருத்தும் தெரிவிக்கப்படவில்லை. இந்தி மொழியை ஆட்சி மொழியாக்குவதற்காக அதை ஆராய்வ தற்கு என அமைக்கப்பட்ட குழுவினாலேயே இந்தி எப்பொழுது ஆட்சிமொழியாகுமென்று நம்பிக்கையோடு கூறமுடியவில்லை. அக் குழுவில் இடம் பெற்ற தகுதி வாய்ந்த டாக்டர் சுப்பராயன், சுனித் குமார் சட்டர்ஜி ஆகியோர்களும் அதன் பல்வேறு கருத் துக்களை மறுத்துரைக்குமளவுக்கு அக்குழுவினர் இந்திக்கு ஆதாரமாக பல கருத்துக்களைக் கூறியிருந்தாலும் 1965 ஜனவரி 26-ல் இந்தி மொழி ஆட்சிமொழியாக முடியும் என்ற கருத்தை பி.ஜி. கெர் ஏற்றுக்கொள்ள வில்லை. இந்தி பற்றி அவர்கள் ஏற்றுக்கொண்ட கருத்துக்களையே கூட மாநில அரசாங் கத்தின் சார்பில் நாம் மறுத்துக் கூறியிருக்கிறோம். இவ் வளவுக்கும் பின்னர் இன்றைக்கு இந்தி ஆட்சிமொழி ஆகிவிட்டது என்று தெரிவித்திருக்கிறார்கள். இவைபற்றி யாரும் குழப்பம் ஏற்படக்கூடாது என்ற விளக்கத்தை தெரி விக்க விரும்புகிறேன். இந்திமட்டும் ஆட்சிமொழி ஆக வேண்டா மென்பதும், ஆங்கிலமொழி நீடிக்கவேண்டுமென்பதும் ஒன்று அல்ல. ஜவகர்லால் நேரு அவர்கள் வாக்குறுதி தந்தபோது முன்னர் ஆங்கிலம் எவ்வப்போது எந்தெந்த நிலையில் பயன் படுத்தப்பட்டதோ அவை எல்லாவற்றிலும் ஆங்கிலம் தொடர்ந்து பயன்படுத்தப்படும் என்ற எண்ணமே நம்முடைய மனத்தில் ஏற்பட்டது. நீடிக்குமென்றால் இருக்கிற நிலையிலிருந்து குறைந்து நீடிக்கும் என்று பொருள் அல்ல. நீண்டநாள் வாழ்வான் என்றால்

[திரு. க. அன்பழகன்] [12th March 1965

நோய்வாய்ப்பட்டு வாழ்வான் என்று பொருளாகாது. நீடிக்கும் என்று சொல்லும்போது முன்பிருந்த நிலையில் ஆங்கிலம் நீடிக்கும் என்று தான் பொருள்படும்.

(திரு. எஸ். கே. சம்பந்தன் தலைமை வகித்தார்)

ஆங்கிலம் ஆட்சிமொழியாக இருக்கவேண்டுமென்கிறபொழுது இந்தி ஆட்சிமொழியாக வருவதற்கு பயிற்சி பெற்றுக்கொண்டு இருக்குமென்பது தவிர ஆட்சிமொழியாக முடியாது. ஆட்சிமொழி ஒன்று என்றால், ஒன்று முதல் ஆட்சிமொழி மற்றொன்று துணை ஆட்சிமொழியாக மட்டுமே இருக்கமுடியும். அப்போது முதல் ஆட்சி மொழியாக ஆங்கிலம் நீடிக்காதபோது பண்டித நேருவின் வாக்குறுதிகள் பற்றி யார், எதை எண்ணிக்கொண்டிருந்தாலும் அந்த வார்த்தைகள் பயனற்றவையாகப் போய்விடுகின்றன. அது மட்டுமல்ல. ஆங்கில மொழி ஆட்சிமொழியாக நீடித்து இந்தி அதற்கான பயிற்சிபெறும் மொழியாகவும் நீடித்தாலும் அது தருதி பெற்று என்றைக்காவது ஆட்சிமொழியாக வந்துவிடும் என்ற எண்ணம் இயற்கையாகப் பலருக்கும் ஏற்படும். ஆனால் இன்றே, இந்தி மொழி அதற்கான தருதி பெறவில்லை. அதனால் ஆட்சியும் நடத்த முடியாது. இன்னும் இந்தியை பற்றி இந்திப் பண்டிதர் ஒருவர் எழுதியதை படித்துப்பார்த்தால்கூட இந்தி மொழியாளர்கள் இந்தியாவின் ஒற்றுமை உணர்ச்சிக்கு உலைவைக்கின்ற அளவுக்கு ஆதிக்க மனப்பான்மையில் வாழ்பவர்களேயன்றி இந்தியாவின் ஒற்றுமையைப் பேருந்துவையோடு காப்பாற்றுவதற்கும்கூட அவர்களால் முடியாது என்று தெளிவாகப் பெறப்படும். அதில் இந்திய சுதந்திர ஆராய்ச்சி பற்றி வேறு மொழிகளைப் பற்றிய ஒரு ஆராய்ச்சி ஏடு வெளியிட்டிருக்கிறது. அந்த ஏட்டில் இந்தி எழுத்தாளர் ஒருவர் கட்டுரை நீட்டியுள்ளார். அச்சிதானந்த பாகவா அவர் இந்தியைப் பற்றி கருத்து தெரிவிக்கிறார். ஒரு வேளை மொழிபெயர்த்துத் தருகிறேன். ஆங்கிலத்தில் படிக்கிறேன்.

"If it is permissible to begin with a seeming paradox, one would like to say that Hindi has been traditionally a language of protest. From the earliest times the bulk of its writing has been made up of expressions of resistance more or less organised by groups clearly definable, to something or other. This protest has not always been the voice of progress. Frequently it has been the the voice of resistance to change, of reaction, of narrowminded prejudice, seeking to protect a decayed tradition or an outworn privilege against a healthy desire to adopt new ways".

இவ்வாறு இந்தி மொழி பேசுவோர் பிற மொழிகளுக்கு இடம் தருகிற மனப்பான்மை, போற்றுகிற மனப்பான்மை, பலருக்கும் பொதுவான மனப்பான்மை முன்னேற்றத்துக்கு பயன்படுகூடிய ஒரு மொழியை ஏற்றுக் கொள்ளுகிற மனப்பான்மை, அதையெற்றை எனிதில் கொள்ளமுடியாதவர்களாக இருந்திருக்கிறார்கள். ஆகவேதான் பண்டித நேரு அவர்கள் எவ்வளவுதான் கருத்தொற்றுமைப் போராடிய ஒரு பெரும் தலைவராக இருந்தாலும் கூட, அவரே ஆங்கிலம் நீடிக்கவேண்டும் என்று விரும்பி வாக்குறுதி தந்திருந்தாலும்கூட, அதைக் கைவிடச்செய்கிற அளவுக்கு ஆட்சி மொழி சட்டத்தை நிறைவேற்றினார்கள். அந்தச் சட்டம் வந்த

12th March 1965] [திரு. க. அன்பழகன்]

நேரத்தில் நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம் அழுத்தம் திருத்தமாகவும் வன்மையாகவும் கண்டித்தது. ஆங்கிலம் இருக்கலாம் என்று மட்டுமே பொருள்பட 'English may continue' என்று குறிப்பதால் இந்தச் சட்டமே ஒரு வேளை பயன்படாமல் போய்விட்டால் என்ன செய்வது என்று கவலை தெரிவித்தது. அப்போது இங்குள்ள முதலமைச்சர் அவர்களும் மற்றவர்களும், தங்கள் கட்சியில் உள்ள நம்பிக்கையின் காரணமாக அப்படி ஏமாற்றம் ஏற்படாது என்று அவர்கள் வாதிட்டார்கள். பண்டித நேருவின் உறுதிமொழி இருக்கிறது, 'shall' என்றில்லாமல் 'may' என்று இருப்பதால் ஒன்றும் கெட்டுப்போய் விடாது என்று கூறினார்கள். அண்மையில் முதலமைச்சர் அவர்கள் 'may' என்ற சொல்லைவிட 'shall' என்ற சொல் இருக்குமானால் ஆங்கிலத்துக்கு தெளிவான பாதுகாப்பு இருக்கும் என்று தாம் எடுத்துச் சொல்லியும் இந்தி பேசுகிற அந்தத் தலைவர்கள் ஒப்புக் கொள்ளாததால் அதைக் கைவிட நேரிட்டது என்று தெரிவித்திருக்கிறார். மேலும் அந்த ஆட்சிமொழி சட்டத்தை முழுவதும் படித்துப் பார்த்தால் ஒரு விசித்திரமான உண்மை வெளிப்படும். அது இந்திக்கு பாதுகாப்புச் சட்டமாகத் தான் இயல்பாக இருக்கிறதே தவிர, எவ்விதத்திலும் இந்தியை புகுத்துவது எந்த விதத்தில் ஆங்கிலத்தை விலக்குவது என்று அதன் மூலம் திட்டம் அமைத்துக் கொண்டார்களே தவிர, மறைமுகமாக ஆங்கிலத்தை அகற்ற சூழ்ச்சி செய்யப்பட்ட சட்டமாக அமைந்திருக்கிறதே தவிர, ஆங்கில நீடிப்பு சட்டமாக இல்லை. அதனுடைய பல்வேறு பகுதிகளைப் படித்துப் பார்த்தால் உயர்திரு. கே. பாலசுப்ரமணிய அய்யர் எடுத்துச் சொன்னது போல் எந்த எந்த தேதியில் இந்தியைக்கொண்டு வருவது என்னும் நோக்கத்தோடுதான் இருக்கிறது என்பது தெளிவாகும். அப்படிப்பட்ட ஒரு ஆட்சிமொழிச் சட்டத்தை மறுபடியும் திருத்துவதாக இருந்தால் கூட அதிலும் தமக்குப் பாதுகாப்பு கிடைக்கும் என்பது பற்றி முழு அளவுக்கு நம்பிக்கை பெறமுடியவில்லை.

அது மட்டுமல்ல. 1965 ஜனவரி 26 முதல்தான் இந்தி ஆட்சி மொழியாவதற்கு சட்டப்படியான உரிமைகள் பெற்றிருக்கிறது என்பது நாம் அறிவதாகும். ஆனால் 1955-லிருந்தே இந்திய ஆட்சித் துறையில் புகுத்துகிற காரியத்தை அன்றைக்கு இருந்த குடியரசுத் தலைவரும் மற்றைய இந்தி ஆதரவாளர்களான அமைச்சர்களும் கலைஞரும் மற்றைய இந்தி ஆதரவாளர்களான அமைச்சர்களும் கொடுங்கிச் செய்துவருகிறார்கள். அரசியல் சட்டத்தில் இருக்கிற வாசகம் இந்தி மொழி ஆட்சிமொழியாக அறிவிக்கப்பட்டாலும் ஆங்கிலம் பதினைந்து ஆண்டுக்காலம் வரை தொடர்ந்து நீடித்துப் பயன்படுத்தப்படும் என்பது. அதுவரையில் எண்ணிக்கையைக் குறிக்க அனைவரும் அறிந்த 'international numerals' பயன்படுத்தப்படும். பதினைந்து ஆண்டுகட்குப் பின் தேவநாகரி அல்லது இந்தி எண்களைப் பயன்படுத்துவது குறித்தும் ஆட்சிமொழிக் குழு ஆராயவேண்டும். என்ற கருத்தும் அரசியல் சட்டத்தில் இருக்கிறது. அவற்றை எடுத்துக்காட்ட காலம் இடம் தரவில்லை. அந்தச் சட்ட விவரத்துக்கு நேர்மாறாக இந்தியைப் பயன்படுத்துவது பற்றியும் இந்தி எண்களை பயன்படுத்துவது பற்றியும் ஆட்சிமொழி குறித்து ஆலோசனை நடத்திய

[திரு. க. அன்பழகன்] [12th March 1965

குழு அதை ஆராய்ந்து கூறு முன்னரே குடியரசு தலைவர் அவர்கள் இந்தி மொழியை இன்ன இன்ன துறைக்குப் பயன்படுத்தலாம் என்ற உத்தரவு வெளியிட்டார்கள். அது மட்டுமல்ல, 1955-லேயே அந்த உத்தரவிலேயே இந்தி எண்களையும் இவற்றிற்குப் பயன் படுத்தலாம் என்ற ஆணையையும் வெளியிட்டார்கள். இந்தி எண்களைப் பயன்படுத்தலாம் என்று குடியரசு தலைவர் அவர்கள் தெரிவித்த பிறகு, ஆட்சிமொழிக்குழுவினர் தமது அறிக்கையில் அதையும் ஆராயத்தான் வேண்டும் என்பது எங்கள் கடமையாக இருந்தாலும் கூட இந்தி எண்களைப் பயன்படுத்தலாம் எனக் குடியரசுத் தலைவரே உத்தரவு இட்டிருக்கின்ற நிலைமையில் மேலும் ஆராய்ந்து என்ன செய்வது என்று குழுவின் தலைவர் பி.ஜி. கெர் தன்னுடைய கண்டனத்தை சுருக்கமாக தெரிவித்திருக்கிறார். 'international numerals' அராபிக் எண்களைக் குறித்து குறிப்பிடுகையில் அந்த எண்களை கூட இந்தியாவிலேயே தோன்றி அராபியா நாட்டில் வழங்கிப் பின்னர் இந்தியாவுக்கு வந்தி ருந்தாலும், அந்த வரலாற்று உண்மை தெரியாமல் இந்தி எண் களையே பிடிவாதமாக புகுத்துகிறார்கள். இதனால் என்ன பலன் ஏற்படப்போகிறது என்று கேட்டிருக்கின்றனர். ஆகவே, மத்திய அரசாங்கமும், குடியரசுத் தலைவரும் கூட விரைவில் இந்தி வந்து விட்டால் தான் நல்லது என்ற நோக்கம் கொண்டு அடிப்படை உரிமைக்கு மாறுகவே 1955-லேயே இந்தியைத் திணிக்க முயற்சிகள் எடுத்துள்ளனர். நான் சென்ற ஆண்டு இச்சட்ட மசோதா விவாதம் போது குடியரசுத் தலைவர் அவர்களிடம் இருந்து இந்தியிலேயே எழுதி வந்த அந்தச் சட்டை ஒன்றைக் காண்பித்து, இப்படி வருகிறதே என்று கேட்டேன். இது 1963-ம் ஆண்டு செப்டம்பரில் வந்தது என்பது அந்தச் சட்டை முத்திரையால் தெரிகிறது. அதில் இன்னொரு விஷயம், இருந்ததால் தான் அதாவது தெரிகிறது. அந்த அந்தச் சட்டை முழுவதும் இந்தியிலேயே— எண்களும் இந்தி எண்களே. பிறப்பட்ட ஒரு கடிதம்—தபால் முத்திரையில் தான் கண்டுபிடிக்கவேண்டியுள்ளது. குடியரசு தலைவர் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டவர். அனைவருக்கும் பொதுவானவர் அவருடைய அலுவலகத்தில் இந்தி நுழைந்து இடம் பிடித்துக்கொண்டது என்று சொன்னால், அது நியாயந் தானே? இந்த நாட்டின் ஆட்சிமொழி இந்தி மற்றவர்களை எல்லாம் இதை ஒத்துக்கொள்ளவைக்க வேண்டும், என்ற மனப்பான்மையும் அதற்காக எவ்வளவு தான் மற்றவர்கள் கஷ்டப்பட நேரிட்டாலும் கவலை இல்லை என்ற மனப்பான்மையும், காங்கிரஸ் இயக்கத்தில் பண்டித நேரு அவர்களைத் தவிர மற்ற வடநாட்டுத் தலைவர்களுக் கெல்லாம் இருந்த காரணத்தால் தான் இந்தக் கேடு ஏற்பட்டது. அது மட்டுமல்ல. 1965 ஜனவரி 26-க்குப் பிறகு எல்லாம் இந்தியி லேயே எழுத வேண்டும் என்று வந்த பல்வேறு உத்தரவுகள், கூற்றுக்கைகள் பற்றி எதிர் கட்சித் தலைவர் டாக்டர். எ. எல். முதலியார் அவர்கள் நேற்று எடுத்துச் சொன்னார்கள். நான் 1963 நவம்பர்-டிசம்பர் மாதத்தில் இந்திக் திணிப்பு எதிர்ப்பு மறியலில் ஈடுபட்ட நேரத்திலேயே இந்திக் திணிப்புக்கான பல்வேறு உத்தரவுகளும் வந்து கொண்டிருந்தன. ஓராண்டு இந்தி தெரிந்த வர்களைத் தான் ரயில்வே சர்வீஸ் கமிஷன் சில வேலைகளுக்கு எடுக்கும் என்ற அறிவிப்பு. 1964-க்கு முன்னரே வெளியிடப்பட்டது

12th March 1965] [திரு. க. அன்பழகன்]

என்றால் 1965 ஜனவரி 26-ல் இந்தி வெற்றிவிழா கொண்டாடப் போகிறது, அதற்கு முன்னரே கொடி ஏற்றப்பட வேண்டும் என்று திட்டமிட்டு இந்தி புகுத்துகிற வேலையை ஆரம்பித்துவிட்டார்கள். அது அவர்கட்குத் தாய் மொழிப் பற்றாக இருக்கலாம். ஆனால் இந்தி மொழியினர் அல்லாதவர்கட்கு ஆட்சி மொழி சட்டத்தின் படி இந்தி ஆட்சிமொழியானால் அதனால் ஏற்படுகிற கொடிய விளைவுகள், தொல்லைகள், இந்த நாட்டு மக்களை கண்ணீர் விடச் செய்யும் நிலைமையைத் தான் உண்டாக்குகிறது.

அதுமட்டுமல்ல, மற்றொன்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் தந்த வாக்குறுதியின்படி "இந்தி படிக்க விரும்பவில்லையானால் இந்தி படிக்காமல் இருக்கலாம்". அவர் இந்தியாவிலே இருக்கின்ற எல்லா மக்களும் நன்றாக வாழவேண்டுமானால் அவர்களிடத்திலே ஒரு பொது மொழி பரவி இருக்க வேண்டும் என்னும் கருத்துடை யவர்தான். அவரே இந்தி படிக்க விரும்பாதவர்கள் படிக்காமல் இருக்கலாம் என்று உறுதிமொழி தருவாரானால் என்ன அதற்குப் பொருள்? இந்தியைப் பள்ளிக் கூடங்களிலே புகுத்துகிற காரணத்தாலே, மாணவர்கள் படித்தாக வேண்டும் என்ற நிலைமையை உண்டாக்குகின்ற காரணத்தாலே, இந்தி மொழியும் பரவி விடாது. படித்தவர்களும் அதையே பயன்படுத்தி முற் பட்டுவிட மாட்டார்கள் என்பதுதான். ஆங்கிலம் தேவைப்படு கின்ற காரணத்தாலே தான் பயன்படுத்தப்படுகிறது. அந்த மொழி தேவையில்லையானால் அதைப் பயன்படுத்துவார்களா நாட்டு மக்கள்? நானும் ஓரளவு ஆங்கிலம் படித்திருக்கிறேன். ஆனால் அதையே பயன்படுத்திப் பழகாததால் தமிழைப்போல் அதைப் பயன்படுத்த என்னாலே முடியவில்லை. தாய் மொழியான தமிழ் உள்ளத்திலே இருந்து வெளிப்படுவதைப் போல் ஆங்கிலம் வெளிப் படுவதில்லை. ஆனால் ஆங்கிலத்தைப் பயன்படுத்த வேண்டிய தேவையுள்ளவர்கள், அதில் ஆற்றல் உடையவர்களாக அதைப் பயன்படுத்துகிறார்கள். அது போல இந்தி எதற்காவது பயன் படுவதாக இருந்தால் அதைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடியவர் கள், படித்தும் கொள்வார்கள். இன்று பள்ளிக்கூடங்களிலே மூன்றாவது மொழியாக ஒரு இந்திய மொழி படிக்க வேண்டும் என்று எல்லா வாய்ப்பும் வசதியும் இந்திக்கே செய்துகொண்டு இந்தி படிக்க வேண்டிய நிலையை ஏற்படுத்தி இருக்கிறார்கள். முதலமைச்சர்கள் நான் கட்டாய பாடம் ஆக்கவில்லை என்பார் கள்; அவர்கள், மாணவர்கள் இந்தியைக் கட்டாயமாக படிக்கு மாறு சொல்லவில்லையே தவிர, நடப்பு அப்படித்தான் கட்டாயமாக இருக்கிறது. 200 பேர் சமஸ்கிருதம், 2,000 பேர் தெலுங்கு, 20,000 பேர் இந்தி படிக்கின்றார்கள் என்றால் அது மறைமுகமான கட்டாயத்தால் தான். இந்த நிலைமைக்குக் காரணம் மொழிக் கொள்கையிலே இருக்கிற குழப்பம். என்ன குழப்பம் என்றால் இந்தியை ஆட்சி மொழியாக்க வேண்டுமென்றால் நாமெல்லாம் படித்தால் தானே முடியும். ஆகவே படிக்க வைக்க வேண்டும் என்பது நோக்கம். ஆனால் கட்டாயம் என்றால் எதிர்ப்பு மிகுமே என்பதற்காக, கட்டாயம் இல்லை என்ற பேச்சு. நான் கூட 1936-37-லே இந்தி படித்தவன் தான். இப்பொழுது அந்த எழுத்

துக்கள் சுவரிலே காணப்படும் பூச்சியைப் போல் தெரிகிறதே தவிர எழுத்துக்களின் வடிவங்கூட எனக்கு நினைவில்லை. காரணம் அதைப் பயன்படுத்த வேண்டிய வாய்ப்பு, அவசியம் எனக்கு இல்லை. நான் சிறு பிள்ளையாக இருக்கிறபோது சிறிதே படித்த காரணத்தால் கற்றதைக் காப்பாற்றிக் கொள்ளவும் இடமில்லாமற் போய் விட்டது. பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் கட்டாயப்படுத்த வேண்டாம் என்று சொல்லுவார்களானால், அதற்கு ஒரே காரணம் கட்டாயப் படுத்தினால் எதையும் மக்கள் விரும்ப மாட்டார்கள், வெறுப்பார்கள், எளிதிலே பரவாது என்பது தான். பள்ளிக்கூடங்களிலே மாணவருக்கும் கட்டாயப்படுத்துவது, மத்திய இலாக்காக்களிலே நியமிப்பதிலே கட்டாயப்படுத்துவது, இந்தி மொழி பேசுகிற மக்களின் பெரும்பான்மையான செல்வாக்காலே, மத்திய அரசிலே அவர்கள் செல்வாக்கு பெற்றிருப்பதாலே அதற்கு மற்றவர்கள் எல்லாம் கட்டுப்பட்டு இந்தியை ஏற்கச் செய்வதைக் கட்டாயப்படுத்துவது என்கிற அந்த முறைகள், மனப்பான்மைகள் மாற வேண்டும்.

அடுத்து நான் சொல்லிக்கொள்வேன், என்னுடைய நண்பர் திரு நடராஜன் அவர்களோடு நான் தத்திருக்கிற திருத்த தீர்மானத்தில் மொழிச் சிக்கலுக்கு உடனடி நிவாரணத்துக்கும் வழி இருக்கிறது. நீண்ட காலத்துக்குப் பிறகு நிலைபெற வேண்டிய நியாயத்துக்கும் வழி இருக்கிறது. 1965 ஜனவரி 26-ஆம் தேதியிலிருந்து அரசியல் சட்டத்தின் பெயரால் ஆங்கிலத்தை ஒதுக்கிவிட்டு இந்தி வருகிறது. ஆங்கிலத்தை ஒதுக்கிவிட மாட்டோம் என்று முதலமைச்சரவர்கள் சொல்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். இங்கே நான் அவருக்குத் துணையாகத் தான் நிற்கிறேன். அப்படி ஆங்கிலத்தை ஒதுக்குவதை தடுத்து நிறுத்தி நிடிக்கச் செய்தாலும், இது தேசிய மனப்பான்மைக்கு விரோதம், இந்தியாவின் தனித் தன்மையைக் காட்டும் பொது நோக்கத்திற்கு மாறுபடுவதால் இந்தியாவிலுள்ள ஒரு மொழிதான் ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென்று சொல்லி இந்தியை மட்டுமே ஆட்சி மொழியாக ஒத்துக்கொள்ள செய்ய முயற்சிப்பார்கள். அப்படி அவர்கள் கூறினால், அவர்களுக்குச் சொல்லுவேன், இந்தி மக்களுக்கு இருக்கிற எல்லா உரிமைகளும் தமிழ் மக்களுக்கும் உண்டு. எந்த அரசியல் சட்டம், மக்கள் சபை, நிர்வாகம் இதனை ஏற்றுக்கொள்ள மறுத்தாலும், இந்திக்காரர்களுக்கு உள்ள உரிமைகள் தமிழர்களுக்கும் உண்டு. தெலுங்கர்களுக்கும் உண்டு. மராத்தியர்களுக்கும் உண்டு. யாராவது உரிமையை விட்டுக் கொடுத்தால் அவர்களைப் பாராட்டட்டும். ஆனால் அவரவர் உரிமை அவர்களுக்கு வேண்டுமென்றால், அதை மறுக்கும் தகுதி, எவருக்கும் இல்லை; அப்படி மறுப்பவர்கள் ஜனநாயகத்தை உணர்ந்தவர்கள் ஆகமாட்டார்கள். இந்த உரிமையை ஒப்புக்கொள்வதாக இருந்தால் தமிழ் மக்கள் தங்கள் தமிழும் இந்தியோடு மத்திய ஆட்சி மொழியாக வேண்டுமென்று கேட்டால்—ஆந்திரமக்கள் இந்தியோடு தெலுங்கும் ஆட்சி மொழியாக வேண்டுமென்று கேட்டால்—அதை ஏற்றுக்கொண்டாக வேண்டும். ஆந்திர மக்கள் பரந்த மனப்பான்மையாலே [illegible] ஆரம்பித்து நாளாயிற்று, ஆகவே இந்தியெதிர்க்கட்டும் என்றால் அது அவர்கள்

விருப்பம். ஆனால் எந்த மொழி மத்திய ஆட்சி மொழி என்று தீர்மானிக்கின்ற உரிமை அவரவர்கள் விருப்பத்தை ஒட்டி ஒவ்வொரு மொழி வட்டாரம், மாநிலத்துக்குத்தான் இருக்க வேண்டும். எங்கள் மாநிலத்தின் சார்பாகவும் டெல்லியிலே இந்தியை வைத்து கொள்ளுங்கள் என்று இசைபவர்கள் பற்றிப் பிரச்னை இல்லை. ஆனால் ஒரு மாநில மக்களின் சார்பாக அவர்களது மொழி இருக்கவேண்டுமென்றால் அதை டெல்லி சர்க்கார் ஏற்றுக் கொள்ள வேண்டும். வங்காள மாநிலத்தின் சார்பாக வங்காளி வேண்டுமென்றால் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். வங்காளமும் அஸ்ஸாமும் ஒன்றுகூடி, சிலவகையில் மாறுபட்டிருந்தாலும், இரண்டு மொழிக்கும் ஒரே வித எழுத்து இருக்கிறது; ஆகவே அஸ்ஸாமுக்கும் சேர்த்து வங்காளியையே வைத்துக்கொள்ளுங்கள் என்றால் வங்காளியையே அஸ்ஸாமிகளுக்காகவும் ஏற்றுக்கொள்ளலாம். இந்திக்காரர்களுக்கு மத்திய சர்க்காரிலே இந்தியை ஆட்சி மொழியாக்குவதற்கு என்னென்ன உரிமைகள், நியாயங்கள், தகுதிகள் இருக்கிறதோ அவ்வளவு நியாயங்களும், உரிமைகளும், தகுதிகளும் ஒவ்வொரு தேசிய மொழியினருக்கும் உள்ளன.

அந்த அடிப்படையை காங்கிரஸ் கட்சி எதிர்க்கும் என்று நான் எண்ணவில்லை. ஏனென்றால் காங்கிரஸ் கட்சியின் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியிலே, மத்திய சர்க்கார் அலுவலர்கட்கு நடைபெறுகிற (Union Public Service Commission,) போட்டித் தேர்வுக்கு இந்தி மொழியிலும் தேர்வு எழுதுவதற்கு ஏற்றுக் கொள்ளப்படும் நிலைமை வருமானால் (Principal Languages) ஆகிய முக்கியமான வட்டார மொழிகள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. மத்திய சர்க்காரின் உத்தியோகத்துக்கு நடத்தப்படுகிற போட்டித் தேர்வுகளிலே வட்டார மொழிகளிலே எழுத உரிமை கிடைக்குமானால் தான் வட்டார மக்கள் உரிமை காப்பாற்றப்பட முடியும் என்று காங்கிரஸ் கட்சியின் பெருந் தலைவர்களே எடுத்துச் சொல்லக்கூடிய நிலைமை இன்று ஏற்பட்டிருக்கிறது. உத்தியோகத் தேர்வுக்கு அமரும் ஒரு சிலரான 50, 100 பேருக்கு நியாயம் கிடைக்க வேண்டுமானால், அந்த வட்டார மொழி போட்டித் தேர்வுக்கு ஏற்கப்பட்டால் தான் நியாயம் கிடைக்குமென்றால் அந்தக் கொள்கை மேலும் வலுப் பெறும்போது, என்ன முடிவு ஏற்படும்? Moderation முறை, சமனப்படுத்தும் முறை ஒத்துவருமா என்று கேட்கலாம். ஆங்கிலத்துடன் இந்தி ஏற்கப்பட்டாலுமே, மாடரேஷன் முறை வரும் என்றும் அது வெற்றி பெறாது என்றும் பலர் தெரிவிக்கிறார்கள். ஆனால் இந்திக்கும் ஆங்கிலத்துக்கும் இடையே எந்த சமனப்படுத்தும் முறையை வெற்றிபெறச் செய்வோம் என்று சொல்லுகிறார்களோ அதனையே விரிவாக்கி பல மொழிகளுக்குமிடையிலே பயன்படுத்தலாம். மேலும் தேசிய மொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு மாநில ஆட்சி மொழிகள் ஆகியுள்ள எல்லா மொழிகளும் மத்திய அரசின் போட்டித் தேர்வுக்கு பயன்படுத்தப்படுகிற மொழியாக Medium ஆக கைக்கொள்ளப்படுமானால் மாடரேஷன் கூடத் தேவைப்படாது. ஏனென்றால் இந்திக்காரார்கள் இந்தியிலே எந்த அளவு நிறமையாக எழுதமுடியுமோ அந்த அளவு தமிழ் மொழியிலே எழுதுகிறவர்களும் சிறப்புடன் எழுத முடியும். எந்த

[திரு. க. அன்பழகன்] [12th March 19

மொழியினரும் பிற மொழியில் எழுத நேரிட்டு அதனால் தோல் அடைந்து விடமாட்டார்கள். அரசினருக்கு இந்தத் தேர்வு விரிவாக நடத்துவது பெரும் சிரமமாக இருக்கலாம், ஆயினும் நீதியும் நியாயமும் அனைவருக்கும் கிடைக்க வேண்டுமென்ற கருதினால் அது தவிர வேறு வழியில்லை. மதிப்புக்குரிய டாக்டர் சிதம்பரநாதன் அவர்கள் தமது தீர்மானத்திலே, மத்திய சர்க்கரின் போட்டித் தேர்விலே தேர்தெடுக்கப்படுபவர்களின் எண்ணிக்கை குறைந்து, பெரும்பாலோரும் மாநில அரசாங்கதினுலேயே நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அது போல மத்திய சர்க்கார் தேர்ந்தெடுப்பவர் எண்ணிக்கையைக் குறைந்து, கொள்ளலாம். அந்த எண்ணிக்கை குறைந்து, மிகப் பெரும்பாலானவர்கள் அவரவர்கள் மாநில அரசின் மூலமாகவே உத்தியோகத்திற்கு வந்து, அதிலே சில ஆண்டுகள் பயிற்சி பெற்று அதற்குப் பிறகு மத்திய அரசினருக்கு தேவைப்படும்போது அங்கு மாற்றப்படலாம். அப்பொழுது எல்லா மொழிகளையும் போட்டித் தேர்வுக்கு பயன்படுத்துவது எளிதாகும். உத்தியோகத்திற்கே நாம் இந்த மொழி உரிமை கேட்கிறபோது, ஆங்கிலம்--இதற்கிடையே Moderation வருமானால்கூட அது நமக்கு நன்மை செய்யாது, உரிமையைக் குறைத்து விடும் என்று உணரும்போது, இந்தி மட்டும் இடம் பெறுமானால் பிற மொழி மக்களுக்கு அக்கிரமம், அநீதி என்று சொல்லும்போது அதே நியாயம் ஆட்சி மொழிப் பிரச்னையிலே எங்கே போய்விடுகிறது? இதிலே இருக்கிற நியாயம் ஆட்சிமொழிக்குப் பொருந்தாதா? உத்தரப் பிரதேசத்திலும் மத்தியப் பிரதேசத்திலும் இருக்கிறவர்கள் பரந்த மனப்பான்மையோடு நம்மிடத்திலே நடப்பார்கள் என்று எதிர்பார்க்க இடமுண்டா? சட்டம் அவர்களையும் நம்மையும் கட்டுப்படுத்தினாலொழிய, நியாயம் பிறக்குமா?

நான்கு நாட்களுக்கு முன்பு எழு கோடி மக்கள் இருக்கிற உத்தர பிரதேசத்தில் ஏறக்குறைய இரண்டு கோடி மக்கள் பேசுகிற உருது மொழியிலே சட்ட சபையிலே பேசுவதற்கு அனுமதி இல்லை என்று மறுக்கப்படுகிற அளவிற்கு அவர் தம் மனப்பான்மை இருக்கிறது என்றால், அங்கே வாழ்கிறவர்களுக்கே அந்த மொழி உரிமை தர மறுக்கிறார்கள் என்றால், அப்படிப்பட்ட மனப்பான்மையுடையவர்களின் இந்தி தான் இந்தியாவின் ஆட்சி மொழி என்று ஏற்பட்டுவிடுமானால் இந்தி ஒன்றே ஆட்சிமொழி என்று உறுதி செய்துவிட்டால், நிச்சயமாக ஒரு பரிதாபகரமான நிலைமை தான் நமக்கெல்லாம் ஏற்பட்டுத் தீரும். அந்த நிலைமை தடுக்கப்பட்டாக வேண்டும்.

இதற்கு முன்னரே மொழிப் பிரச்னைகளிலே கருத்துக்களை தெரிவிக்கிறபோது தமிழக அரசினர் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் பல கட்டங்களிலே அவற்றிலே வெற்றிபெற முடியாமல் திகைத்துப் போயிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களை டெல்லி சர்க்கார் உண்மையான அக்கறையோடு கவனிக்கவில்லை. அப்படி கவனித்திருந்தால் இதுநாள் வரை எத்தனையோ துறையிலே இந்தியை புகுத்துவதில் காட்டிய ஆக்க மனப்பான்மையை நிச்சயமாகக் கைவிட்டு இருப்பார்கள்

12th March 1965] [திரு. க. அன்பழகன்]

மாநில உயர் நீதிமன்றங்களிலே இந்தி ஒருநாளும் வர முடியாது, வட்டார மொழி தான் இருக்க வேண்டுமென்று 1958-59-லே தரப்பட்ட கருத்துரையிலேயே தெரிவித்திருக்கிறார்கள். அதேபோல பல்கலைக் கழக, கல்லூரி பாட மொழியாக நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரவர்கள் ஆங்கிலமே பயிற்சி மொழியாக இருந்தால் அறிவு வளர்ச்சிக்கும் பயன்படும் என்ற ஒரு கருத்தைக் கொண்டிருந்தாலும் முறையாக ஒழுங்குபடுத்தித் தமிழைக் கல்லூரிப் பாட மொழியாகப் பயன்படுத்தினால்தான் பொதுமக்களுக்கு அறிவும் திறமையும் அதிகமாகும் என்ற கருத்தை உட்கொண்டு தமிழ் தான் மாநிலத்தில் கல்லூரி பாட மொழியாக வேண்டுமென்று தமிழ்நாடு அரசினர் ஏற்கனவே தெரிவித்திருக்கிறார்கள். அதே போல, இந்திய அரசாங்கத்தின் அலுவலகங்களிலும் துறைகளிலும் ஹிந்தி வரும் காலத்தைப் பொறுத்த வரையில், கெர் அவர்களின் ஆட்சிமொழி குழுவின் கருத்தை ஆதரித்து, அந்தக் காலத்தை அறுதியிட்டுச் சொல்ல முடியாது என்றும் அதுகாறும் ஆங்கிலம் வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில், இந்த மாநிலத்தில் தமிழ்தான் இயங்க முடியும். அதற்குத் துணையாக ஆங்கிலம்தான் இருக்க முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். இங்கே தமிழில் இயங்கும்போது இங்குள்ள சட்டங்களை ஹிந்தியில் மொழிபெயர்க்க நாங்கள் ஒத்துக்கொள்ள முடியாது என்று திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறார்கள். இத்தகைய கருத்துக்களை ஒரு மாநில அரசாங்கம் தெரிவித்த பின்னும், என்னவெல்லாம் நடந்திருக்கின்றன என்பதை தான் கவனிக்க வேண்டும். "நாங்கள் ஹிந்தியை ஒவ்வொரு துறையிலும், வகையிலும் திணிப்போம்" என்று அவர்கள் சொல்லுகிறார்கள்; கனம் திரு. சி. சுப்ரமணியம் அவர்கள் தலைமையிலுள்ள இலாகாவில் சட்டத்தின் உதவியுடன் ஹிந்தியில் சுற்றறிக்கை வருகிறது; திரு. நந்தாவின் உள்துறை இலாகாவில் எல்லா நடவடிக்கைகளும் ஹிந்திக்கு மாற வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது; நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கு 40 கோடி மக்களின் நலனுக்குப் பொறுப்பேற்றுள்ள திரு. லால்பகதூர் சாஸ்திரி "ஹிந்தியை ஆட்சி மொழியாக விரைவில் புகுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது" என்று--ஜனவரி 27-அன்று என்று நினைக்கிறேன்—தெரிவித்தார். உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், பீஹார், ராஜஸ்தான் ஆகிய நான்கு மாநிலங்களில் ஹிந்தி ஆட்சி மொழியாக இருந்தும், அவர்களுக்கு மனத் திருப்தி ஏற்படவில்லை. இந்த நான்கு மாநிலங்களில் ஹிந்தி வளர்க்கப்படுவதற்கு எல்லா வாய்ப்பும் இருந்தபோதிலும், ஹிந்தி வளர்ச்சிக்காக மத்திய அரசு 1 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. மேலும் திரு. லேத் கோவிந்த தாஸ் ஹிந்திக்கென ஒரு தனி அமைச்சரவையே வேண்டும் என்றும் கோரியிருக்கிறார். இந்திக்காக இப்படியெல்லாம் நடக்கிறது என்றால், நாங்கள் சக்தியற்றவர்களாக இருந்தாலும், எங்கள் எதிர்ப்பு பொருளற்றதாகிவிடாது. ஒரு வட்டாரத்தின் மொழியே ஆட்சி மொழியாகி அவர்கள் ஆதிக்கம் ஓங்கி அந்த நிலைமை நாட்டில் நிலவினால் நாட்டில் ஜனநாயகத்தினால் பயன் ஏற்படும் என்று ஆட்சியாளர்கள் கருதுகிறார்களா? ஆங்கிலம் நீடிக்க வேண்டும் என்று கூறும்போது ஒரு விஷயத்தை கவனிக்க வேண்டும். டாக்டர் லக்ஷ்மணசாமி

முதலியார் அவர்களும் டாக்டர் சிதம்பரநாதன் அவர்களும் ஆங்கிலத்தில் பேசினார்கள் என்றால், அவர்களுக்கு ஆங்கிலத்தில் தாய்மொழியைவிட அதிகப் பற்று இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. அந்த மொழியிலுள்ள சில சிறப்பு காரணமாக அதை அவர்கள் பயன்படுத்துகிறார்கள். ஆங்கிலத்தைக் தந்திர மாகப் பயன்படுத்த முடிகிறது என்று திரு. பாலசுப்ரமணிய ஐயர் அவர்கள் இங்கு சொன்னார்கள். தமிழுக்கும் ஹிந்திக்குரிய அந்தஸ்தைக் கொடுக்க வேண்டும் என்று கனம் அமைச்சர்கள் வற்புறுத்த வேண்டும். அந்த அந்தஸ்து தமிழுக்கு இன்றைக்கு இல்லாவிட்டாலும் நாளைக்காவது கிடைக்கவேண்டும். அப்படிக் கிடைக்கும் வரையில் ஆங்கிலம் மட்டுமே ஆட்சி மொழியாக இருக்க வேண்டும்.

மேலும், ஹிந்தியை மூன்றாவது மொழியாக கல்விப் பயிற்சியில் வைத்திருப்பதால் ஒரு சிக்கல் ஏற்படுகிறது. "ஹிந்தியைப் பாடத் திட்டத்தில் வைத்திருப்பதால் அதை நீங்கள் ஐந்தாண்டு அல்லது பத்தாண்டு காலத்தில் படித்து விடுங்கள். இந்தத் தவணையை நாங்கள் தருகிறோம். தவணை முடிந்தவுடன் நாங்கள் இந்தியை ஆட்சிக்கு கொண்டு வருகிறோம், நீங்களும் ஆட்சியில் பங்கு கொள்ளலாம்" என்று டெல்லியிலுள்ளவர்கள் சொல்லக்கூடும். இந்தியை கட்டாய பாடமாக வைக்கக்கூடாது என்று சொல்ல விரும்புகிறேன். தெலுங்கையோ, சமஸ்கிருதத்தையோ, விரும்பு கிறவர்கள் படிப்பதுபோல, இந்தியையும் விரும்புகிறவர்கள் படிக் கட்டும். மும்மொழிக் கொள்கை சிக்கலானது என்று கனம் எதிர்க் கட்சித் தலைவரும், டாக்டர் சிதம்பரநாதன் அவர்களும் கூட தெரி வித்திருக்கிறார்கள். நம்மைப் பொறுத்தவரையில் அது ஏமாற்ற மானது. டெல்லியில் இருப்பவர்கள் கூட மூன்றாவது மொழி ஒன்று உண்டு என்று போர்டில் எழுதி வைத்துவிட்டு நம்மை ஏமாற்றிவிடுகிறார்கள். நேருவின் நண்பரான திரு. ஸ்ரீ. பிரகாசாவே என்ன சொல்லியிருக்கிறார் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். "நீங்கள் இந்தியைத் திணிப்பதில் இவ்வளவு அக்கறை காட்டுகிறீர்களே, உங்களுடைய எண்ணிக்கையில் தமிழர்களின் எண்ணிக்கை இருந்து, தமிழர்கள் தமிழே ஆட்சி மொழியாக ஆக வேண்டும் என்று சொன்னால் நீங்கள் ஒத்துக்கொள்வீர்களா" என்று அவர், வடக்கே இருப்பவர்களைப் பார்த்து கேட்டிருக்கிறார்.

தமிழும், தமிழுக்குத் துணையாக ஆங்கிலமும் என்ற அடிப் படையில் கல்வித் துறையை சீர்திருத்தி அமைக்கவேண்டும். தமிழ் நாட்டில் மத்திய சர்க்கார் இயங்கும் ஒவ்வொரு துறையிலும் அலுவலகத்திலும் நம் மாநில ஆட்சிமொழிதான் பயன்படுத்தப்பட வேண்டும்; தபால் இலாகாவோ, தபால் இலாகாவோ, ரயில்வேயோ, வருமான வரி இலாகாவோ, எல்லாவற்றிலும் தமிழ் நாட்டுக்குள் தமிழ் தான் பயன்படுத்தப்படவேண்டும். அதேபோல ஆந்திராவில் தெலுங்கும் பிற மாநிலங்களில் அந்தந்த மொழிகளும் பயன்படுத்தப்பட வேண்டும். அவர்கள் டெல்லியுடன் மத்திய அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளும்போது பொது மொழியான ஆங்கிலத்தைப் பயன்படுத்தலாம்.

டெல்லியில் இந்தி வந்தவுடன் உத்தரப் பிரதேசத்தில் கைகாட்டி மரத்தில் கூட மைல்கள் எண்ணிக்கை ஹிந்தியில் மட்டுமே எழுதி

பட்டிருந்ததாம். அதனால் நமது முதலமைச்சருக்குக்கூட கஷ்டம் ஏற்பட்டதாம் (சுற்றுப்பயணம் சென்றபோது).

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அப்படி மத்தியப் பிரதேசத்தில் எழுதப்பட்டிருந்தது.

திரு. க. அன்பழகன்: மேலும் ராமேஸ்வரத்திற்குப் போகும் நெடுஞ்சாலையில் கூட மைல் கற்களில் இந்தியில் எழுதியிருக்கிறார் கள். ஆட்சி மொழியாக தமிழை ஏற்றுக்கொள்ளாதவர்கள் மொழி யான ஹிந்தியை இந்த முறையில் நாம் ஏற்றுக் கொள்ள முடியாது, கூடாது. ஹிந்தி ஆட்சி மொழியாக வேண்டும் என்று சொன்னால், எல்லா தேசிய மொழிகளும் இன்று மாநில ஆட்சி மொழிகளாக ஆகியுள்ள யாவும், விரைவிலேயே மத்திய ஆட்சி மொழி நிலையை அடைவதற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்ய வேண்டும்.

அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்பதைப் பொறுத்த வரையில் ஒன்று சொல்ல விரும்புகிறேன். 17-வது பிரிவை தூக்கி எறிய வேண்டுமென்று யாராவது சொன்னால் அதன் பொருள் என்ன? 17-வது பிரிவின் முதல் பகுதி மத்திய ஆட்சி மொழியைப் பற்றியது. அதில் வரும் எல்லா ஷரத்துக்களும் ஆங்கிலத்தை விட ஹிந்திக்குத்தான் அதிகமான பாதுகாப்புகள் தருகின்றன. நாளைக்கே, "அதைத் திருத்தப் போகிறோம்" என்று கனம் அமைச் சர் சொன்னால், அதற்கு நன்றிகூறத் தயாராயிருக்கிறேன். மாறாக, அதைத் தூக்கி எறிந்துவிட்டால், 17-வது பிரிவின் இரண்டாவது பகுதியில் மாநில ஆட்சி மொழிபற்றிக் கூறியுள்ள உரிமைகள் போய்விடுமே என்று வாதிடுவது கண்டனத்தின் நோக்கத்தை ஏற்காததினாலேயே. ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் நடைபெற்ற தவறான காரியங்களுக்கெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் தான் பொறுப்பாளி என்று கனம் முதலமைச்சர் நினைக்கக் கூடாது என்று சொல்லிக் கொள்கிறேன். "இல்லை, அப்படித்தான் நினைப்பேன்" என்று அவர் சொன்னால், அவர் மனதை மாற்றக் கூடிய நிலையில் நான் இல்லை. ஹிந்தி மட்டுமே ஆட்சி மொழியாகக் கொலோச்சும் அக்கிரமத்தைத் தடுக்க கனம் அமைச்சர்கள் மேற் கொள்ளும் எல்லா முயற்சிகளிலும் திராவிட முன்னேற்றக் கழகம் அவர்களுக்கு உறுதுணையாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு என் பேச்சினை முடிக்கிறேன். வணக்கம்.

(Mr. Chairman in the chair)

*கனம் திரு. எம். பக்தவத்சலம்: தலைவர் அவர்களே, இந்த மொழிப் பிரச்னையை நான் அணுகும்போதும் பிரத்தியட்சக் கண்ணோட்டத்தோடு அணுகவேண்டும். மொழி சொம்ப முக்கிய மானதுதான். ஆனால் நம்முடைய நாடு பலமொழிகள் பேசப்படு கிற பரந்த நாடாக இருக்கிறது. மொழிவாரியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் தாய்மொழியான தமிழில்தான் நிர்வாகத்தை நடத்திக் கொண்டு வருகிறோம். அதற்கு எந்தவித தடையும் இருக்க முடியாது. தமிழில் நிர்வாகம் நடத்துவதற்கு அரசியலமைப்புச் சட்டம் இடம் கொடுக்கிறது. அதை வற்புறுத்துகிறது என்று கூட

[திரு. எம். பக்தவத்சலம்] [12th March 1965

சொல்லலாம். ஆனால் அதில்கூட நிர்ப்பந்தமில்லை தாய்மொழியில் நடத்தலாம், அல்லது ஆங்கிலத்தில் வேண்டுமானாலும் நடத்தலாம் என்கிற வகையில் அரசியலமைப்புச் சட்டம் உரிமை அளித்திருக்கிறது. ஆனால் இந்த நாடு பலமொழிகள் பேசுகிற நாடு, ஆகவே மத்திய ஆட்சி வேறு, மாநில ஆட்சி வேறு இரண்டுக்கும் sovereignty இருக்கிறது. மத்திய ஆட்சியைப் பொறுத்த வரையில் எந்த மொழியில் நடத்துவது என்பதுதான் பிரச்னை. நேற்று இன்று ஏற்பட்டதல்ல இது. சுதந்திரம் வந்தபிறகு ஏற்பட்டதல்ல. மகாத்மா காந்திதான் நமக்கெல்லாம் சுதந்திர விழிப்பு ஏற்படுத்தினார். சுதந்திர இயக்கத்தை பாமர மக்களின் இயக்கமாக மாற்றியமைத்தார். சுதந்திர இயக்கத்திற்கு தலைமை ஏற்றுக்கொண்டபொழுது நம்முடைய விவகாரங்களை தாய்மொழியில் நடத்தவேண்டுமென்பதையும் அகில இந்தியாவுக்கு ஒரு பொதுமொழி வேண்டுமென்பதையும் அவர்கள் வற்புறுத்தினார்கள். அரசியல் அமைப்புச் சட்டம் செய்யப்பட்ட பொழுது எத்தனையோ வேறுபட்ட அபிப்பிராயபேதம் எல்லாம் இருந்தது. ஆனால் சட்டமாகிவிட்டது. அதன்படி இந்தி ஆட்சிமொழியாக வேண்டுமென்று சட்டம் செய்தவர்கள் அதை உடனடியாக செய்யமுடியாது என்பதையும் உணர்ந்திருந்தார்கள். எனென்றால் இந்தியை தாய் மொழியாகக் கொண்ட மாநிலம் தவிர வேறு சில மாநிலங்களில் இந்தி அடியோடு தெரியாது. இந்தி படித்தாலும் இந்தியை உடனடியாக கையாள முடியாது என்பதால்தான் இந்தி உடனடியாக ஆட்சிமொழியாக இருக்கமுடியாது என்று அரசியலமைப்புச் சட்டம் செய்தார்கள். அதற்குப் பிறகு எப்படி மாற்றியமைக்க வேண்டுமென்பதையும் நாம் வற்புறுத்திக் கொண்டு வந்திருக்கிறோம். இந்தப் பக்கத்தில் நமக்கு இந்தியே வேண்டாமென்று கூறுகிறவர்கள் இருக்கிறார்கள். அதே மாதிரி, அந்தப் பக்கத்தில் ஆங்கிலமே வேண்டாமென்று சொல்கிறவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எண்ணிக்கை இதை விட அதிகம் என்று கூடச் சொல்லலாம். ஆனால் நாம் நம்முடைய தேவையை ஒட்டி நமக்கு வேண்டுகிற வரை ஆங்கிலம் இருக்கவேண்டுமென்று வற்புறுத்தினோம். Official Language Commission அமைக்கப்பட்டு மாநிலங்கள் மூலமாக ஆராய்ந்தார்கள். அவர்கள் ஒரு அறிக்கை சமர்ப்பித்தார்கள். பார்லிமெண்டரி கமிட்டி அமைக்கப்பட்டது. அப்போதெல்லாம் இந்த அரசாங்கம் சட்டமன்றத்தைக் கலந்தாலோசித்து எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்து கலந்தாலோசித்து, நம்முடைய கொள்கை என்ன என்பதை—நாம் வற்புறுத்த வேண்டிய கொள்கை என்ன என்பதை நிர்ணயித்து அதை நாம் தெரிவித்தோம். அதைப் பின்பற்றியேதான் பேரும் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோம். இந்தியே கூடாது என்று மூன்பு கூறவில்லை. இதுபற்றி சட்டமன்றத்தில் கலந்தாலோசித்து கமிட்டிபோட்டு எல்லாக் கட்சித் தலைவர்களும் கலந்து பேசி நாம் நிர்ணயித்தது என்னவோ அதைத்தான் இந்த அரசாங்கம் அனுசரித்து வருகிறது, முன்பும் அதுதான் அனுசரிக்கப்பட்டது. அந்த அடிப்படையில் மும்மொழிக் கொள்கை உருவாக்கப்பட்டது என்பது சனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். அது போதுமென்று அரசாங்கம் அப்போது நினைக்கவில்லை. சட்டமன்றத் தலைவர் நினைக்கவில்லை. மூன்று மொழிகளும் வேண்டும்,

12th March 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

ஒன்று தாய்மொழி, மற்றது ஆங்கிலம், மூன்றுவதாக இந்தியே படிக்கவேண்டுமென்பதில்லை. ஆனால் ஏதாவது ஒரு மொழி படிக்கவேண்டுமென்பதுதான் நாம் உருவாக்கிய மும்மொழித் திட்டம். அகில இந்தியாவுக்கும் மும்மொழிக் கொள்கை உருவாக்கப்பட்டிருக்கிறது. மற்ற மாநிலங்களில் எல்லாம் இந்தி தாய் மொழியாக இல்லாத மாநிலங்களில் எல்லாம் மும்மொழிக் கொள்கைப்படி இந்தி கட்டாயமாகக்கூட மாணவ மாணவிகளுக்கு போதிக்கப்பட்டு வருகிறது. நாம் கட்டாயப் படுத்தவில்லை. கட்டாயப் படுத்தப் போவதில்லை என்றும் நான் கூறினேன். கட்டாயம் என்றால் அதற்கு ஒரு எதிர்ப்பு வரும். நடைமுறையில் ஸ்கூல் ஃபைனலில் ஒரு லட்சத்தி ஐயாயிரம் பேர்கள் இந்தி படிக்கிறார்கள். அவர்களுக்குத் தெரியும். ஏதாவது புதியமொழி கற்றுக்கொள்ள வேண்டுமென்றால் இந்தி படிக்கலாமென்று அவர்கள் நினைக்கிறார்கள். அதில் என் குழப்பம் உண்டாக்க வேண்டும்? மாணவர்கள் தெரிந்துதான் இந்தி படிக்கிறார்கள் என்றால் அதை படிக்காதே என்று சொல்வது நல்லதல்ல. படித்தால் சௌகரியமிருக்கிறது. அதனால் படிக்கிறார்கள். மூன்று மொழி வேண்டாம், இரண்டு மொழியே போதும் என்று சொல்வது முறையல்ல. ரஷியாவில் ரஷிய மொழி இருக்கிறது. பிரான்சிய மொழி இருக்கிறது. ஆங்கிலமும் கட்டாயமாக இருக்கிறது. மூன்று மொழி கற்பது நல்லது என்பதை நாம் உணர்கிறோம். மாணவர்கள் அதை படிப்பதில் சிரமமில்லை. அப்படியிருக்கும்போது இந்தி வேண்டாம், அதைப் படிக்காதே என்று சொல்வது சரியல்ல. மும்மொழிக் கொள்கை இங்கே அனுசரிக்கப்படும்போது அது எல்லா மாநிலங்களிலும் கண்டிப்பாக நடத்தப் பட்டது. அங்கே கூடியவரையில் மும்மொழி Preferably என்று போடப்பட்டு இருக்கிறது. அது தென்னிந்திய மொழியாக இருப்பது நல்லது. இந்தி அல்லாத மொழியாக இருக்கவேண்டும் Modern Language ஆக இருக்க வேண்டுமென்று போடப்பட்டிருக்கிறது. இந்தி தாய் மொழியாகக் கொண்டவர்கள் உருது படித்தால் போதாது என்றும் போட்டு இருக்கிறார்கள்.

இப்போது சனம் உறுப்பினர் ஹண்டே அவர்கள் சொன்னார்கள், Constitution ல் இருக்கிறபடி equality of status இல்லை என்றார்கள் உயர்ந்த கருத்துதான். அப்படியிருக்கும்போது எனக்கு எதற்கு இந்தி என்று சொன்னார்கள். ஆங்கிலத்தை வைத்து விட்டால் மட்டும் equality of status வந்துவிடுமா? எத்தனை பேர் ஆங்கிலம் படித்திருக்கிறார்கள்? மற்றவர்கள் கேட்கமாட்டார்களா நாம் ஏன் ஆங்கிலம்படிக்க வேண்டுமென்று. தமிழில் நடத்தினாலும் equality of status வந்துவிடுமா? நான் ஒன்றும் படிக்கவில்லை. கையெழுத்துப்போடத் தெரியாது. தற்குறி. நான் சொல்லலாம், தமிழ் வைத்திருப்பது Constitution -க்கு விரோதமாக இருக்கிறது என்று தற்குறிகளுக்கு Opportunity இல்லை என்று அவர்கள் கேட்பார்கள். ஆங்கிலத்தை வைத்தாலும் எத்தனை பேருக்கு Opportunity வருகிறது. சனம் உறுப்பினர் அன்பழகன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் ஆங்கிலம் படித்தவர். தமிழில் பேசுகிறமாதிரி ஆங்கிலத்தில் பேசமுடியவில்லை என்

[திரு. எம். பக்தவத்சலம்] [12th March 1965

ருர்கள். பண்டிதர், புலவர், போராசிரியர் அப்படிச் சொல்கிறார் என்றால் மற்றவர்களுடைய கதி என்னவது? எதிர்க்கட்சித் தலைவர் Vice Chancellor இருக்கிறார்கள். துணைத்தலைவர் இருக்கிறார்கள். நன்றாக ஆங்கிலத்தில் பேசுகிறார்கள். அப்படியே எல்லோராலும் பேசமுடியுமா? அதனால் ஆங்கிலம் வைத்திருந்தாலும் equality of status இருக்குமென்று சொல்ல முடியாது. இது முன்பு நிர்ணயிக்கப்பட்ட விஷயம். அப்போது சட்டமன்றம் ஒப்புக்கொண்ட விஷயம் அப்போதுதான் மெமோராண்டம் தயாரித்தோம். இதுதான் நம் பார்லிமெண்டரி கமிட்டியில் வற்புறுத்தவேண்டியது என்று சொன்னேம். இப்போது புதிதாக ஒன்றும் சொல்லவில்லை. இந்த அடிப்படையில் தான் நாம் மேலும் மேலும் வற்புறுத்திக்கொண்டு வந்தோம். அப்போது தான். Official Language சட்டம் வந்தது. பதினைந்து ஆண்டுகள் கால அவகாசம் கொடுத்தார்கள். அது போதாது என்று தெரிந்தது. அதற்குப் பிறகும் 1965 ஜனவரி மாதம் 26-ம் தேதி அதற்குத் தயாராக இருக்க முடியாது, அதனால் பாதிக்கப்படுவோம் என்று உணர்ந்துதான் இந்த ஃபார்முலா

5-30 p.m. அமைத்தோம். ஆங்கிலம் நாம் வேண்டுமென்கிற வரையில் இருக்கலாமென்று நிர்ணயித்தோம். அதையொட்டித்தான் Official Language சட்டம் வந்தது. May அல்லது 'Shall' சட்டத்தில் வரம்பு இல்லை. May continue என்று இருக்கிறது. அது எத்தனை காலத்திற்கு Continue ஆகுமென்று வரம்பு இல்லாமல் 'ஷெல்' போட்டால் சில சங்கடங்கள் இருக்கின்றன என்று பிரதம மந்திரி கூறினார்கள். இருபது அல்லது நாற்பது ஆண்டு என்று போடலாமா என்று கேட்டார்கள். அதற்கு நான் ஒப்புக்கொள்ளவில்லை. எதிர்கால சந்ததியைப்பற்றி நாம் யார் சொல்வதற்கு? நாம் அவர்களைக் கட்டுப்படுத்துவது கூடாது என்று சொல்லிவிட்டேன். அதனால்தான் அப்போது 'மே' என்று போட்டார்கள். அதை விளக்கினேன். பிரதம மந்திரி உறுதி மொழி நமக்கு இருக்கிறது. அது நமக்கு வேண்டியதை அளிக்கிறது. நாம் வேண்டுகிற வரையில் ஆங்கிலம் இருக்க வேண்டுமென்ற உறுதியை அளிக்கிறது.

பிரதமர் நேரு அவர்கள் மறைந்துவிட்ட பிறகு சந்தேகம் வந்தது. அச்சம் ஏற்பட்டது. கொஞ்சம் அதிக உற்சாகத்தோடு கடிதம் எழுத முற்பட்டார்கள். உத்தரப்பிரதேச முதல் மைச்சர் எழுதி அனுப்பினார்கள். Living index சீசன் ரிப்போர்ட், இந்தியில் அடித்தார்கள். அவர்களுடைய சங்கடம் என்னவென்றால் ஆங்கிலமே உபயோகிக்க முடியாது. நாம் செய்த மாதிரி அவர்கள் சட்டம் செய்யவில்லை. எதற்கெடுத்தாலும் ஹைக்கோர்ட்டு சுப்ரீம் கோர்ட்டுக்கு போவார்கள். அப்படி ஒரு zeal அதைவிட கடுமையான வார்த்தை ஒன்றை நான் சொல்ல விரும்பவில்லை. அவர்களுக்கு ஒரு வேகம் ஆவேசம் இருப்பதால் ஆங்கிலமே கூடாது இந்தியே போதும் என்கிறார்கள். நாம் செய்த சட்டத்தைக்கூட அவர்கள் செய்யவில்லை. மொழி பெயர்க்க முடியும் என்றாலும் இந்தியில் வந்ததைத் திருப்பி அனுப்பியிருக்கிறோம்.

12th March 1965]

திரு. க. அன்பழகன்: நம்முடைய மாநிலத்தில் தமிழ் ஆட்சி மொழியாக இருக்கிறது. இந்தியை இங்கு அனுப்புகிறபொழுது நம்முடைய மாநிலத்திலிருந்து பதிலே தமிழில் அனுப்ப முன் வருவார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதுதான் எதிர் கட்சி தலைவர் அவர்கள் குறிப்பிட்டது. அதுவும் நடந்தது. டி.எம்.எஸ். இலாகாவில் அங்கிருந்து வந்ததற்குப் புரியவில்லை என்று தமிழில் எழுதினேம். இப்படி எல்லாம் விளையாடலாம். நாட்டு நிலவரம் எப்படி? நாட்டு பிரச்னை எப்படி? இந்த பிரச்னையை தீர்ப்பது எப்படி என்பதுதான் முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயம். இந்த அடிப்படையில்தான் நாம் என்ன செய்யவேண்டும் என்று பார்க்க வேண்டும். சரி, எல்லா மொழிகளும் இருக்கட்டும் என்று சொல்லலாம். சொல்லுவதில் தவறு ஒன்றுமில்லை. இந்தி இருந்தால் ஆங்கிலம் இருந்தால் மற்ற பிராந்திய மொழிகளும் இருக்கட்டும் என்பது ஒரு திருத்தம். கனம் நடராசன் பிரேரேபித்த திருத்தம். இதுவரையில் நாம் கையாண்ட கொள்கை சாத்தியப்பட்ட கொள்கை; வற்புறுத்தி வெற்றி பெற்ற கொள்கை. 14 மொழிகளும் இருந்தால் நிர்வாகம் பாதிக்கப்படும். அதையும் நாம் உணர வேண்டும். ஒன்று இரண்டு மொழிகள் இருக்கலாம். விவகாரத்துக்கு ஒரு மொழி, நிர்வாகத்திற்கு இன்னொரு மொழி வைத்து simultaneous translation செய்யலாம். எதற்கும் ஒரு அளவு வரம்பு உண்டு. 14 மொழிகள் என்று வாதத்திற்குக் கூறலாமே தவிர நடைமுறைக்கு சரி வராது. ஒரு பிரத்யட்ச உணர்வோடு ஒத்துக் கொள்ள வேண்டும். நாம் ஆங்கிலம் படித்திருக்கிறோம். 14 மொழிகளை வைத்துக்கொண்டிருந்தால் ஆங்கிலம் தேவை இல்லை. இப்போதே ஆங்கிலப் படிப்பு பாதிக்கப்பட்டிருக்கிறது. 14 மொழிகள் என்று சொல்லிக்கொண்டிருந்தால், ஆங்கிலம் இன்னும் போய்விடும். ஆங்கிலத்தைப் படிக்கிறது இல்லை என்பதுதான் என் குறை. நன்றாகப் படிக்கவேண்டும். ஆங்கிலம் எல்லாவற்றிற்கும் வேண்டும். இப்போது நாம் வேண்டும் என்கிற வரையில் ஆங்கிலம் என்று போட்டிருக்கிறோம். கனம் ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள் உடனே சட்டம் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். சீக்கிரம் செய்வதுதான் நல்லது. ஆனால் அவசரப்பட்டு நம்முடைய தேவை பூர்த்தியாகாத வகையில் சட்டம் செய்வதில் பயன் இல்லை. இதை மனதில் வைத்துக் கொள்ளவேண்டும். நம்மைப்போல் இந்தியைத் தாய் மொழியாகக் கொள்ளாதவர்கள் எல்லோரும் ஒரே வகையாக சிந்தித்தால் கவனம் செலுத்தினால் நம் வேலை சுலபமாக முடியும். இதுதான் என் கவலை. முதலில் இப்போது மத்திய சர்க்கார் ஒப்புக்கொண்டிருக்கிறது. காலம் சென்ற பிரதமர் நேரு அவர்களின் உறுதி மொழிகளை சட்டம் ஆக்குவது என்பதுதான் நாம் கோருவது அதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். சட்டம் நமக்கு வேண்டிய முறையில் வரவேண்டும். ஏதோ ஒரு சட்டம் வந்தால் பயன் இல்லை. அப்படி நான் அவசரப்படமாட்டேன். சீக்கிரம் வர வேண்டும் என்று வற்புறுத்துகிறேன். எப்ரல் மாதத்திற்குள் சட்டம் வரவேண்டும். நமக்கு என்ன தேவையோ அந்தத் தேவை பூர்த்தியாகக்கூடிய வகையில் சட்டம் செய்ய

[திரு. எம். பக்தவத்சலம்] [12th March 1965

வேண்டும். இப்போது பரீட்சைபற்றி கூறப்பட்டது. அது பற்றி நாம் இப்போது ஒன்று கூறியிருக்கிறோம். ஆங்கிலம் இருக்கிறது, அதோடு இந்தி மீடியம் வைக்க யோசிக்கிறார்கள். நீங்கள் இந்தியை வைப்பதாக இருந்தால் மற்ற மொழிகளையும் வையுங்கள் என்று கூறுகிறோம். அதில் அவர்கள் காண்கிற சிரமங்களை நாம் உரைராமல் இல்லை. இருந்தாலும் சொல்லியிருக்கிறோம். நாங்கள் பரிசீலனை செய்கிறோம் என்று சொன்னார்கள். பரிசீலனை செய்கிற வரையில் ஆங்கிலம் இருக்கட்டும் என்று சொன்னேம். உள்துறை அமைச்சர் நந்தா அவர்களை கடைசியில் பார்த்துவிட்டு வருகிறபோது அநேகமாக இந்தியை அவ்வளவு வேகமாக மீடியமாக கொண்டு வருவதில்லை என்றார்கள். இதை பரிசீலனை செய்யாமல் அவசரப்பட்டு இந்தி Moderation formula தயாராய் இருந்தாலும்கூட கொண்டு வரமாட்டார்கள். International numerals என்று அரசியல் சட்டத்தில் இருக்கிறது. இதற்கு முன்பு இதை அனுசரிக்காமல் இருந்தது தப்புத்தான். தப்பு யாரும் செய்கிறார்கள். இப்படி ஒரு சபாவம். புது டைப் ரைட்டர்களுக்கு ஆர்டர் கொடுத்திருக்கிறோம். இதுபற்றி எல்லாம் பேசாமல் இல்லை; விசாரிக்காமல் இல்லை. தற்சமயம் நடைபெறுகிற பார்லிமெண்டில் இந்தி எண்கள் இல்லை. International numerals தான் போட்டிருக்கிறார்கள்.

நேற்று பேசிய கனம் ஆதித்தனார் அவர்கள் இங்கே தமிழ் வைத்தால் போதும் என்று சொன்னார்கள். அதைத்தான் கனம் அன்பழகன் அவர்களும் எடுத்துக் காட்டினார்கள். தமிழ் வேண்டுமென்று வற்புறுத்தலாம். ஆங்கிலமும் தெரியவேண்டும். தமிழ் தெரியாதவர்களுக்கு ஆங்கிலம், தமிழும் ஆங்கிலமும் தெரியாதவர்களுக்கு இந்தி என்று மூன்றும் இருக்கலாம். நான் அதுதான் சொன்னேன். மத்திய பிரதேசத்தில் நாக்பூருக்கு ஏரோபிளேனுக்கு போக எவ்வளவு தூரம் என்று என்னால் தெரிந்து கொள்ளமுடியவில்லை. காரணம் அங்கு இந்தி எண்கள் போடப்பட்டிருந்தது. ஆங்கிலத்தில் இருந்தால் தெரிந்திருக்கும். தமிழ் அவசியம் இருக்கவேண்டுமென்று சொல்லலாம். வருமானவரி ரிட்டர்ன், மணியார்டர் பாரம், ரயில்வே ஸ்டேஷன் முதலிய இடங்களில் தமிழ்தான் இருக்கவேண்டும் இந்தி எதற்கு என்று தார் போட்டு அழிக்கிறேன் என்று சொன்னால் அதில் நியாயம் இல்லை. ராமேஸ்வரத்துக்கு எத்தனையோ பேர் வருகிறார்கள். ஆங்கிலம் தெரிந்தவர்களும் வருகிறார்கள், தெரியாதவர்களும் வருகிறார்கள். அவர்களுக்கு இந்திதான் தெரியும். நாம் காசிக்கு எவ்வளவு பேர் போகிறோமோ இதைவிட அதிகமாக ராமேஸ்வரத்திற்கு வருகிறார்கள். நாம்தான் வருகிறவர்களை நன்கு உபசரிக்கும் பண்புடையவர்கள் ஆச்சே. அங்கே ஆங்கிலத்தை அழிக்கிறேன் என்று சொல்லுகிறார்கள் என்பதற்காக இங்கே இந்தியை அழிக்கிறேன் என்று சொன்னால் எப்படி. ஆவேசம் படைத்தவர்கள் அங்கே தான் அதிகம். அகில இந்தியாவை சுற்றிப் பார்த்தால் ஆவேசம் அங்குதான் அதிகம். நாம் தமிழ் வேண்டும் என்று சொல்லலாம். ஆங்கிலம் இருக்கட்டும். இந்தி போடாதே என்று வையாச் சொல்லுவது? நியாயம் இல்லை. அகில இந்தியா பரிஸ்தி பற்றி பிரதம மந்திரி அவர்கள் மீண்டும் மீண்டும் உறுதிமொழி

12th March 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

அளித்திருக்கிறார். முன்பிருந்த பிரதமர் அளித்த உறுதிமொழியை வலியுறுத்தியிருக்கிறார். இந்தி தெரியா விட்டாலும் recruit செய்வதில் தடை இருக்காது என்று போட்டிருக்கிறார்கள்.

Constitution -ஐயே திருத்தினால் என்ன என்று வற்புறுத்தினார்கள் கனம் அங்கத்தினர்கள். Constitution திருத்தினால் நல்லதுதான்; ஆனால் திருத்துவது அவ்வளவு சுலபமல்ல.

முதலிலே இந்தியா பல மாநிலங்களைக் கொண்டது. அவர்கள் பிரிந்துபோக வேண்டுமென்று சொன்னாலும் நாம் பிரித்து போகத் தயாராயில்லை என்று மனதிலே திடம் பண்ணிக் கொள்ளவேண்டும். இந்தியா ஒன்று என்பதை மனதிலே திடம் செய்து கொள்கிற உறுதி வேண்டும்.

இப்பொழுது Constitution- -ஐத் திருத்துவது என்றால் இப்பொழுது இருக்கிற பார்லிமென்ட் சபையிலே எவ்வளவு ஓட்டு வரும். பக்கத்திலே இருக்கிற வங்காளமே முக்கால் பங்கு ஓத்துக் கொண்டால் சரிதான் என்கிறார்கள். பிறகு யாரை வைத்துக் கொண்டு ஓட்டு வாங்குவது. ஆகவேதான் நமக்கு பிரத்தியட்ச கண்ணோட்டம் வேண்டுமென்று சொன்னேன். Constitution- -ல் 17-வது பிரிவை எடுக்க வேண்டாம். திருத்த வேண்டும் என்று சொல்லலாம். அது அவ்வளவு சுலபமல்ல. அதற்கு requisite majority எல்லாம் வேண்டும். சில பேர் வராது இருந்தாலும் Constitution- -ஐத் திருத்த முடியாமல் போய்விடும். ஆனால் அவசியமிருந்தால் எப்படியும் திருத்துவதற்கு ஏற்பாடு செய்துதான் தீரவேண்டும். அதற்கு அவசியமில்லை என்று சட்ட நிபுணர்கள் சொல்லுகின்றார்கள் Official Languages Act லேயே திருத்தம் செய்தால் போதும் என்று சட்ட நிபுணர்கள் அபிப்பிராயம் சொல்கிறார்கள். ஆகவே Constitution- -ஐத் திருத்த வேண்டியதில்லை.

14 மொழிகளும் மத்திய ஆட்சி மொழிகளாக இருப்பது சாத்தியமானதல்ல. அப்படிச் சொன்னால் அது வாதம். அது போய்க் கொண்டேதான் இருக்கும். எப்படியும் ஒரு முடிவு வேண்டும். இந்தியா நம்முடைய நாடு, இமயமலை நமது மலை, நாமும் பாரத நாட்டு புதல்வர்கள் என்ற உணர்ச்சியோடு இந்த நாட்டிலே பிறந்த தமிழ் மக்கள், நமக்கு உரிய பங்கை மத்திய ஆட்சியிலே எப்படி பெறுவது என்று கவனம் செலுத்தும் வகையில் காரியத்தை செய்ய வேண்டுமே தவிர—வாதம் என்று பேசினால் தொடர்ந்து பேசிக்கொண்டே போகலாம், எத்தனை நாள் வேண்டுமானாலும் பேசலாம்—இதற்கு எப்படி ஒரு தீர்வு கண்டு மேலும் நமது உரிமைகளை எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது என்பதில் தான் நாம் கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இந்தி மத்திய ஆட்சி மொழி. ஆங்கிலமும் தொடர்ந்து இருக்கும். இன்றைக்கு அதுதான் நிலைமை. இதுவரைக்கும் நாம் ஒப்புக் கொண்டது, அரசாங்கம், சட்ட மன்றம் ஒப்புக்கொண்

[திரு. எம். பக்தவத்சலம்] [12th March 196

டது இதுவே. பொதுவாக ஒப்புக் கொள்ளக்கூடிய விஷயம் இது. அதற்கு மேலே எனக்கு இந்தி பிடிக்க வில்லை, இந்தி வேண்டாம் என்றால் வாதத்திற்குச் சொல்லலாம், ஆனால் இன்றை க்கு காரியத்தில் நடக்கக் கூடியது அல்ல. இந்தி ஆட்சிமொழி என்ற சட்டத்தில் இந்தி பேசாத மக்கள் விரும்புகின்ற வரையிலே ஆங்கிலம் என்று இப்பொழுது திருத்தப்படப் போகிறது. அதற்கு உறுதிமொழி அளித்து இருக்கிறார்கள்.

இந்தியைப் படிப்பதற்கு இது வரையிலே போதிய கவனம் எடுத்துக் கொள்ளவில்லை; கவனம் எடுத்துக் கொள்ளவேண்டு மென்று பணம் ஒதுக்குகிறோம் என்று சொல்லுகிறார்கள். இந்தி படிப்பதற்கென்றால் ஒரு மாநிலத்துக்கு மட்டுமல்ல. இந்தி பேசாத மாநிலங்களிலே, இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாத மாநிலங்களிலே இந்தியைப் படிப்பதற்கு ஆகும் செலவை மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற பொறுப்பிலேதான் ஒரு கோடி ரூபாயோ, மற்ற பணமோ கொடுக்கிறார்கள். அதே மாதிரி உத்தரப் பிரதேசத்திலே, மத்தியப் பிரதேசத்திலே, பஞ் சாபிலே தமிழோ, தெலுங்கோ சொல்லிக் கொடுக்கவும் பணம் கொடுக்கிறோம், எங்கெங்கே தமிழிலே அக்கரை இருக்கிறதோ, தமிழை கற்க எந்தெந்த மாநிலங்கள் எவ்வளவு அக்கரை எடுத் தாலும் அதற்கெல்லாம் ஆகும் செலவுக்கு—ஆசிரியர்களுக்கு ஆகும் செலவுக்குக் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள்.

அதேபோல இந்தி பேசப்படாத, இந்தியை தாய்மொழி யாகக் கொள்ளாத மாநிலங்களிலே இந்தியைப் படிக்க என்ன என்ன செலவாகிறதோ அந்த செலவை நாங்கள் கொடுக்கிறோம் என்று மத்திய அரசினர் சொல்கிறார்கள். இதுதான் இப்போதைய நிலைமை. இந்த நிலைமையிலே நாம் ஒன்றுதான் பார்க்க வேண் டும். நமக்கு—தமிழ் நாட்டு இளம் சந்ததியார்க்கும் சரி, பெரிய வர்களுக்கும் சரி—எந்த விதத்திலும் பாதகம் ஏற்படக்கூடாது, இப்பொழுது நாம் ஒப்புக்கொள்ள வேண்டிய இந்த அடிப்படை யிலே பாதகம் இல்லாமல் பார்க்க என்ன வழி? அது தான் அர சாங்கத்தின் கவலை. இந்த வகையிலேதான் இந்த அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

இதுதான் நிலைமை. இதிலே மேலும் தொடர்ந்து அரசாங்கம் கவனம் செலுத்தும். இதிலே நான் எதிர்க் கட்சியிலே வீற்றிருக்கிற நண்பர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் இந்த நிலைமையை தன்மை சிந்திக்கவேண்டும். மத்தளத்துக்கு இரண்டு பக்கமும் அடி என்பது போல எனக்கு ஏதோ இரண்டு பக்கமும் அடி என் றார்கள். அந்த மாதிரி எந்தப் பக்கத்திலேயும் என்னை அடித்து விட முடியாது. அதற்கு நான் அச்சப்படவில்லை. ஆனால் சிக்க லை பிரச்னையிலே தீர்வு காண்பதற்கு நாம் எந்தகைய சூழ் நிலையை அமைப்பது? அங்கேயும் பிடிவாதம் பிடித்தவர்கள், ஆவேசம் கொண்டவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எதற்காக ஆங்கிலம் நீடிக்க வேண்டும், ஆங்கிலம் கூடாது என்று சொல்

12th March 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

கிறார்கள். இன்றைக்கே இந்தி வரவேண்டும் என்று சொல்கிறவர் களுகூட இருக்கிறார்கள். ஆட்சி மொழிச் சட்டத்தை மாற்ற வேண்டாம் என்று சொல்கிறார்கள்.

நான் அவர்களிடம் கூறியது என்னவென்றால் ஏன் மாற்ற வேண்டாம் என்று சொல்லுகிறீர்கள். உறுதி மொழியை ஒப்புக் கொள்வதாக இருந்தால் அதை சட்ட பூர்வமாக்க உங்களுக்கு என்ன கஷ்டம். உங்களுக்கு mental reservation இருந்தால் சொல்லுங்கள், அந்த உறுதிமொழி கூட கூடாது என்று சொல் கிறீர்களா என்றேன். 'இல்லை இல்லை' என்றார்கள். பின்னே ஏன் ஆட்சேபம் என்றேன். அவர்கள் எண்ணம் இந்தி தாய் மொழி, அது அகில மொழியாக ஆய்விட்டது என்று சொல்கிறார் களே தவிர, ஒரு சகிப்புத் தன்மை, விட்டுக் கொடுக்கும் தன்மை இல்லை. இங்கே சில பேரிடத்தில் ஆவேசம் இருக்கிறது. ஆனால் அங்கே அதிகமாக இருக்கிறது. அதற்காக நமது உரிமையை விட்டுவிட வேண்டும் என்று சொல்லவில்லை. ஆனால் அவர்கள் எல்லோரையும் வைத்துத்தான் நாம் வேண்டிய சட்டத்தை செய்து நிறைவேற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம். சட்டத் தை செய்தால் மாற்ற மாட்டார்களா என்றால், இன்றைக்கு மாற்று கிறோம். ஜனநாயகத்திலே எந்தக் காலத்திலேயும் எதிர் காலத் தை கட்டுப்படுத்த முடியாது. சட்டத்தை எந்த விதத்திலேயும் மாற்றலாம். அதே மாதிரி அரசியல் அமைப்புச் சட்டத்தையும் மாற்றலாம். இன்றைக்கு சட்டம் செய்கிறோம். சட்டத்தை விட நேருஜியின் உறுதிமொழி இருந்தால் அதுவே உயர்ந்தது, அது இருக்கிறது, உறுதிமொழியும் இருக்கிறது, வேறு சட்டம் வேண்டியதில்லை, சட்டம் இல்லாவிட்டாலும் பாதகமில்லை என்ற வகையிலே தான் வற்புறுத்திக் கொண்டு வந்தோம். இப்பொழுது இந்த சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று வற்புறுத்து கின்றோம்.

சட்டத்தை நிறைவேற்றுவதோடு நாமும் நம்முடைய தமிழ் நாட்டு எதிர்காலத்தை கவனிக்கவேண்டும். நம் மாணவர்களிடத் திலே எல்லாம் ஒரு கருத்து, இந்தியே வேண்டாம், இந்தியை கொல் க்கு, இந்தி அரக்கியை தகனம் செய் என்ற ரீதியிலே அவர்கள் செய்கிறார்கள், அதற்கு நாம் ஆதரவு அளிப்பதாக இருக்கக் கூடாது. மொழியை எவ்வளவுக்கெவ்வளவு படிக்கிறோமோ அவ் வளவுக்கு அது நல்லதுதான். இது கனம் அங்கத்தினர்களுக் கெல்லாம் தெரியாததல்ல, ஒரு மொழியைப் படிப்பதாலே மற்ற மொழியிலே உள்ள பற்று குறையப் போவதில்லை. ஆங்கிலம் படித்தோமே, அதனால் ஆங்கிலம் படித்தவர்களுக்கு யாருக்கு தமிழிலே உள்ள பற்று குறைந்து விட்டது? யாருக்கும் குறைய வில்லை. கனம் அங்கத்தினர்களுக்குத் தெரிந்திருக்கும், திருப்ப னந்தாள் மடம், காசி மடம் இருக்கிறது. காசியிலே மடத்தை ஸ்தாபித்து அங்கே மக்களுக்கெல்லாம் நல்வழி காட்டிவந்த ஆதி குமரகுருபரர் வரலாறு உயர்ந்த வரலாறு. அவர் சமஸ் கிருதத்தை நன்றாகக் கற்றவர். அவர் தமிழையும் நன்றாகக் கற்றவர். அவர் இந்தியும் கற்றிருந்தார். அவர் கம்பராமாயணம்

[திரு. எம். பக்தவத்சலம்] [12th March 1965

பற்றி இந்தியில் பேசினார். இந்தி அவருக்குத் தெரிந்திருந்தால் விட்டால் அங்கே அவர் கம்பரின் பெருமையைப் பற்றி எப்படிப் பேசியிருக்க முடியும்? அங்கே தமிழில் பேசினால் அங்குள்ள தமிழர்கள்தான் அதைப் புரிந்துகொள்ள முடியும். அவர் தமிழ் இந்தி ஆகிய இரு மொழிகளிலும் நல்ல புலமை பெற்றிருந்ததால், அங்கே அவர் கம்பராமாயணம் பற்றி இந்தியில் பேசினார். அவர் பேசியதைக் கேட்டு உணர்ந்தவர்களில் ஒருவர்தான் பிரசித்தி பெற்ற 'ராம சரிதம்' எழுதிய துளசிதாஸ். குமாரகுருபார் சொன்னதை வைத்துத்தான் துளசிதாஸ் அதை எழுதினார் என்பது தமிழர்களுக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் பெருமை அளிப்பதாகும். எனவே ஒரு மொழியைக் கற்பதால் மற்றொரு மொழிக்கு பாதகம் ஏற்படாது; மற்றொரு மொழிக்குக் குறைவு ஏற்படாது.

Vested interests காரணமாக சிலர் இந்தி வந்து விட்டால் ஆங்கிலம் போய்விடும் என்று சொல்லுகிறார்கள். Vested interests எல்லா விஷயங்களிலும் வருகின்றன. ஆங்கிலத்தின் முக்கியத்துவம் குறையக் கூடாது என்று அவர்கள் சொல்கிறார்கள். ஆங்கிலத்திற்கு ஒருவிதத்திலும் பாதகம் ஏற்படாது.

திரு. க. அன்பழகன்: ஆங்கிலம் மத்திய அரசாங்கத்தில் நீடிக்க வேண்டும் என்று கனம் முதல் அமைச்சர் கூறும்போது, அவரும் **vested** interests காரணமாக இவ்வாறு கூறுகிறார் என்று அவர்கள் சொல்ல மாட்டார்களா? (சிரிப்பு).

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இல்லை. அவர்கள் அப்படிச் சொல்ல மாட்டார்கள். அவர்கள் அப்படிச் சொல்லக்கூடும் என்று சொல்வது புலவரின் கற்பனையில் தோன்றியது ஆகும். சமீபத்தில் நான் டெல்லிக்குச் சென்றிருந்தபோது ஆங்கிலம் பற்றி ரொம்ப வேகமான போக்கு உடையவர்களுடன் இதுபற்றிப் பேசினேன். நான் vested interests காரணமாக இவ்வாறு பேசியதாக அவர்கள் யாரும் சொல்லவில்லை. அவர்களில் ரொம்ப முக்கியமானவர்களில் சிலருடைய பெயர்களைத் தெரிவிக்கிறேன். ஸ்ரீ ராம் லூபாக் சிங், ஸ்ரீ விபூதி மிஸ்ரா ஆகியவர்கள் இந்த விஷயத்தில் தீவிரவாதிகள். இவர்கள் பார்லிமெண்ட் உறுப்பினர்கள். இவர்கள் ஆங்கிலமே கூடாது என்று சொல்லுபவர்கள். ஸ்ரீ. ராம லூபாக் சிங் சொம்பவும் வேகமான போக்கு உடையவர். இவர் எதிலும் தீவிரவாதி. இவர் இந்தி விஷயத்தில் மிகவும் கண்டிப்பானவர். ஸ்ரீ விபூதி மிஸ்ரா காங்கிரஸ் பார்லிமெண்டரி பார்ட்டியின் காரியதரிசி. நானே அவர்களை அழைத்து, உபசரித்து, அவர்களிடம் எல்லாவற்றையும் சொன்னேன். நான் அவர்களிடம் பேசிய பிறகு அவர்கள் "இதெல்லாம் எங்களுக்குத் தெரியவில்லை. நீங்கள் சொன்னதைக் கேட்ட பிறகு எங்களுக்கு எல்லாம் தெரிகிறது" என்று சொன்னார்கள்.

திரு. கே. பாலகப்பிரமணிய அய்யர்: அவர்களுக்கு கனம் முதலமைச்சர் காப்பி கொடுத்தாரா என்று அறிய விரும்புகிறேன். **(சிரிப்பு)**

12th March 1965]

கனம் திரு. எம். பக்தவத்சலம்: காப்பி, ஸ்வீட், 'சேவரி' எல்லாம் கொடுத்தேன் (சிரிப்பு). ஆனால் அவர்கள் அதற்காக மாற வில்லை. நான் ஒரு மணி நேரம் பேசினேன். அதைக் கேட்ட பிறகு அவர்கள் 'We are very much impressed' என்று சொன்னார்கள்; "இப்போதுதான் எங்களுக்கு எல்லாம் புரிந்தது" என்று சொன்னார்கள். ஸ்ரீ விபூதி மிஸ்ரா எப்போதும் ஹிந்தியில் தான் பேசுவார். ஸ்ரீ. தேவாரி என்ற மற்றொரு பெரிய வரும் அங்கே வந்திருந்தார். அவர்கள் "நீங்கள் மறுபடியும் மார்ச்-ஏப்ரலில் இங்கே வாருங்கள். அப்போது நாங்கள் 'பார்லிமெண்டரி பார்ட்டி மீட்டிங்' வைக்கிறோம். அந்தக் கூட்டத்தில் நீங்கள் பேசுங்கள். நீங்கள் பேசிய பிறகு மற்றவற்றை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்" என்று என்னிடம் சொன்னார்கள். நான் vested interests காரணமாக அவ்வாறு பேசியதாக அவர்கள் யாரும் சொல்லவில்லை.

நம்முடைய சௌகரியத்திற்காக ஆங்கிலம் வேண்டும் என்று நான் கூறுகிறேன். சிலர் vested interests காரணமாக, ஆங்கிலம் போய்விடுமோ என்று பயப்படுகிறார்கள். ஆங்கிலம் வேண்டும் என்று இயக்கம் நடத்தினால் இத்தனை சம்பவங்கள் நடக்காது. எனவே 'தமிழ் போய்விடும்' என்று அவர்கள் சொல்லுகிறார்கள். நான் கீழ் சபையில் எதிர்க் கட்சியினரிடம் "நீங்கள் ஸ்ரீ ராஜாஜியை எல்லா விஷயங்களிலும் பின்பற்று கிறீர்களே. தமிழுக்கு ஆபத்து இல்லை, ஆங்கிலத்திற்குத் தான் ஆபத்து என்று அவரே சொல்லியிருக்கிறாரே" என்று சொன்னேன். "இந்த விஷயத்திலும் நீங்கள் ஏன் ஸ்ரீ. ராஜாஜியைப் பின்பற்றக்கூடாது" என்று அவர்களிடம் நான் கேட்டேன். அதற்கு அவர்கள் "இதை மாத்திரம் நாங்கள் கேட்க மாட்டோம்" என்று சொன்னார்கள்.

திரு. என். வி. நடராசன்: நாங்கள் எல்லாவற்றிலும் ஸ்ரீ ராஜாஜியைப் பின்பற்றுவதாக கனம் அமைச்சர் சொல்கிறார். இந்தக் கருத்தை அவர் மாற்றிக் கொள்ள வேண்டும். மேலும், பிரச்னைகளிலுள்ள கருத்தொற்றுமையைப் பொறுத்தவரையில், காங்கிரஸுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் 60 சத விகிதம் ஒற்றுமை இருக்கிறது என்றால், கழகத்திற்கும் சுதந்திரா கட்சிக்கும் 30 சதவிகிதம் ஒற்றுமை தான் இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன். (கரகோஷம்)

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நான் கூட மொழி விஷயத்தில் ஸ்ரீ ராஜாஜி சொல்வதைப் பற்றி சிந்திக்கத் தயாராயிருக்கிறேன்; அவர் சொல்வது எல்லாவற்றையுமே ஏற்கத் தயாராயிருக்கிறேன் என்று நான் சொல்ல முடியாது. சில சமயங்களில் அவர் சொல்வது விபரீதமாக இருக்கிறது. அவர் சிறந்த அறிவாளி. அவர் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவு அளிப்பவர். ஆங்கிலத்திற்குத்தான் ஆபத்து என்று அவர் சொல்லுகிறார். இதனால் ஆங்கிலப் பத்திரிக்கைகளெல்லாம் கவலைப்படுகின்றன. ஆனால், பெருவாரியான மக்கள் ஏன் ஆவேசப்பட்டார்கள்? இதற்கு காரணம் சொல்லுகிறேன். ஒரு குறிப்பிட்டமான நிலைமை ஏற்பட்டது. யுத்த காலத்தில் மக்களுக்கு பயம் ஏற்படுவதுண்டு.

[திரு. எம். பக்தவத்சலம்] [12th March 1965

சாதாரணமாக, பிள்ளை பிடிப்பு நடக்கிறது என்று சொன்னால், எல்லோரும் பயந்து ஓடுவார்கள். பிள்ளை பிடிப்பவன் வருகிறான் என்று சொல்லிவிட்டால், உடனே எல்லோரும் பயந்துவிடுவார்கள். மருத்துவக் கல்லூரி மாணவனுக்கு பயம் ஏற்பட்டது. ஒரு கல்லூரி மாணவனிடம் "நீ ஏன் ஸ்டிரைக் பண்ணுகிறாய்?" என்று கேட்டால் "அடுத்த ஆண்டிலிருந்து நாங்கள் 'மெடிஸின்' சம்பந்தமான பாடங்களை ஹிந்தியில் தான் படிக்க வேண்டுமாமே" என்று அவன் சொன்னான். இப்படிப்பட்ட பயம் மாணவர்களுக்கு ஏற்பட்டது. ஆங்கிலத்திற்கு ஒரு குறைவும் ஒருக்காலும் இராது.

இப்போது 'Institute of English Teaching' என்ற ஸ்தாபனம் பெங்களூரில் இருக்கிறது. ஆங்கிலத்தை நல்ல முறையில் கற்றுக் கொடுப்பதற்கு இந்த ஸ்தாபனம் உதவுகிறது. அதற்குத் தகுந்தபடி ஆசிரியர்கள் தயாரிக்கப்படுகிறார்கள். நம் ராஜ்யத்தில் ஏராளமான ஆசிரியர்களுக்கு இந்தப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த ஸ்தாபனத்தில் பயிற்சி பெற்றுவந்த ஆசிரியர்கள் மற்ற பலருக்குப் பயிற்சி அளிக்கிறார்கள். இந்த ஸ்தாபனத்தைச் சேர்ந்த தலைவர் லண்டனிலிருந்து நம் நாட்டுக்கு வந்திருந்தார். உலகில் ஆங்கிலம் அன்னிய மொழியாக 70 நாடுகளில் கற்றுக்கொடுக்கப்படுகிறது என்று அவர் சொன்னார். 70 நாடுகளில் பிரிட்டிஷ் கவுன்சில் English Teaching Campaign நடக்கிறது. ஸ்காட்லண்டிலும் அயர்லாந்திலும் இந்த technic நடத்தப்படுகிறது. ஆங்கிலம் தாய் மொழியாக இல்லாத இந்த 70 நாடுகளில் ஆங்கிலத்தை நல்ல முறையில் போதிக்க இந்த ஸ்தாபனத்தால் கற்றுக் கொடுக்கப்படுகிறது. எனவே 70 நாடுகள் ஆங்கிலத்தைப் பயன்படுத்தும் போது ஆங்கிலம் எப்படிப் போகும்? ஆங்கிலம் போய் விடுமே என்று vested interests உணர்ச்சி கொண்டவர்களெல்லாம் சொல்கிறார்கள். அது போகாது. ஆங்கிலத்திற்குத்தான் ஆபத்து என்று நேரு சொல்கிறார். ஆங்கிலம் போகாது.

நாம் எல்லோரும் தமிழ் மக்கள். 'உலகம்' என்ற சொல்லில் துவங்கும் கவிதைகளை தமிழ்ப் புலவர்கள் இயற்றியிருக்கிறார்கள். எனவே நாம் உலக எதிர்ப்பு உணர்ச்சி கொண்டவர்கள் அல்ல. அப்படி இருக்கும்போது, நாம் எப்படி ஆங்கிலத்தைக் கை விடுவோம்?

இத்தனைக்குமிடையில், மும்மொழிக் கொள்கையை ஒருவிதமான அபிப்பிராய பேதமும் இல்லாமல் அகில இந்தியாவும் ஒப்புக் கொண்டிருக்கிறது. இந்தக் கொள்கையை ஒவ்வொரு மாநிலமும் ஒப்புக் கொண்டிருக்கிறது. 'Official Languages Act' மாற்ற வேண்டும் என்று சொன்னால் அந்த விஷயத்தில் உத்தர பிரதேச முதலமைச்சர், தமக்கு அந்த விஷயத்தில் தம் ராஜ்யத்தில் உள்ள பல கஷ்டங்களைப் பற்றிக் குறிப்பிட்டு, சட்டத்தை மாற்றுவதற்கு அவர் ஒத்துக் கொள்ள மறுத்தார். அவர் கூட மும்மொழிக் கொள்கையை ஒத்துக் கொண்டிருக்கிறார். இந்தக் கொள்கையை யாரும் எதிர்க்கவில்லை. இதில், இந்தி கட்டாயம் இல்லை என்று சொல்லிவிட்டேன். ஆனால் இந்தி படிப்பது தான்

12th March 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

நல்லது என்று சொல்ல விரும்புகிறேன். இந்த மூன்று மொழிகளில் ஆங்கிலம் ஒன்று. இப்போது, உத்தரப் பிரதேசம், பஞ்சாப் ஆகிய ராஜ்யங்களில் கூட ஆங்கிலம் இருப்பது நம்முடைய வெற்றி என்று நான் சொன்னால், அதை யாரும் தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது. ஆங்கிலம் போய்விடுமே என்று சொல்பவர்களிடம் 'ஆங்கிலம் போகாது' என்று சொல்வதற்கு இது ஒரு உதாரணம். எனவே ஆங்கிலத்திற்கு ஒரு பயமும் இல்லை. தமிழுக்கும் பயம் இல்லை; இந்தி மத்திய ஆட்சி மொழியாக வந்துவிட்டால் கூட பயம் இல்லை; இந்த விஷயத்தில் ஸ்ரீ ராஜாஜி சொல்லுவதை நாம் ஏற்றுக் கொள்ளலாம். இந்த விஷயத்தில் ஸ்ரீ ராஜாஜிக்கு தெரியாதது எதுவும் இல்லை. இருந்தாலும், இப்போது இந்தி மாத்திரமே வரப் போவதில்லை. ஆங்கிலம் தொடர்ந்து இருக்க வேண்டும் என்று சட்டம் இயற்றப்படும். எவ்வளவு காலம் வரையில் நாம் கேட்கிறோமோ அந்தக் கால அளவு வரையில் அது இருக்க வேண்டும் என்று தான் நாங்கள் சொல்கிறோம். ஆங்கிலத்தை விடுவதற்கு மைசூரும் ஆந்திராவும் ஒப்புக்கொள்ளுமானால், நமக்கு என்ன ஆயிற்று? இதுதான் ஸ்ரீ வினோபாஜியின் கருத்தும் ஆகும். வேண்டுமென்று சொல்கிற வரையில் இந்தி திணிக்கப்படக் கூடாது. கனம் வகாப் அவர்கள் சொன்னார்கள், ஏதோ திணிக்கப்படுவதாக. எங்கே திணிக்கப்படுகிறது? தாய்மொழி இந்தியாக இருக்கிற மாநிலங்களில்தான் இந்தி வந்திருக்கிறது. மத்திய ஆட்சி எதில் நடப்பது என்றால் ஆங்கிலத்திலும் இருக்க வேண்டுமென்று நாம் சொல்கிறோம். இந்தி மாத்திரம் கூடாது, ஆங்கிலமும் வேண்டுமென்று சொல்கிறோம். ஆங்கிலம் இல்லையென்றால் திணிப்பு என்று சொல்லலாம். உத்திர பிரதேசத்தில் உள்ளவர்கள் ஆங்கிலம் வேண்டாமென்று சொல்கிறார்கள்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: ஒரு மாகாணத்தைப் பொறுத்த வரையில் அவர்கள் மொழியை வைத்துக்கொள்வதில் தடை சொல்லவில்லை. மத்திய அரசாங்கத்தில் தான் ஆங்கிலம் இருக்க வேண்டுமென்கிறோம். அவர்கள் மாநிலத்தில் ஆங்கிலத்தை புகுத்தினால் அவர்களுக்கு திணிக்கப்படுகிறது என்று ஒப்புக்கொள்ளலாம்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: மாநிலத்தைப் பொறுத்தவரையில் தகராறு இல்லை. மத்திய ஆட்சியில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் அக்கறை இருக்கிறது. இந்தி மொழி கையாளப்பட்டால் நமக்கு உரிமை போய்விடுமென்று பேசினார்கள். நாம் வேண்டுகிற வரையில் ஆங்கிலம் இருக்கவேண்டுமென்று சொல்கிறோம். உத்திரப்பிரதேசத்தில் அவ்வளவாக ஆங்கிலத்தில் அக்கறை இல்லை. ஆங்கிலத்தால் அவர்கள் பாதிக்கப்பட்டவர்கள். எனவே அவர்கள் இந்தியில் ஆட்சி நடத்துகிறார்கள். நமக்கு இந்தி வேண்டாமென்றால் அவர்களுக்கு ஆங்கிலத்தை எப்படி திணிப்பது? திணிப்பது என்பது யாருக்கும் கூடாது. மாநிலங்கள் எல்லாம் சேர்ந்ததுதான் ஐக்கிய இந்தியா. இந்தியாவில் நாம் உரிமை கொண்டவர்கள். எல்லையிலுள்ள எதிரிகளை எல்லாம் விரட்டியடித்து நம்

[திரு. எம். பக்தவத்சலம்] [12th March 1

நாட்டைப் பலம் பொருந்திய நாடாக ஆக்கவேண்டியது நம் கடமை. எவ்வளவு சர்ச்சைகள் இருந்தாலும் கூடியவரைில் அவற்றைத் தீர்த்து தேசிய உணர்ச்சியோடு ஒருமைப்பாட்டு உணர்ச்சியோடு மேலும் நம் நாட்டை பலப்படுத்தவேண்டுமென்ப தான் இப்போதைய பிரச்னை. மொழி முக்கியமானது என்றும் அந்தப் பிரச்னையை நீட்டிக்கொண்டே போகக் கூடாது. அப்படி போனால் அதற்கு முடிவே இருக்காது. தலைவர் அவர்கள் அன்பு கூர்ந்து நான்கு நாட்கள் பேசலாம் என்று சொன்னால் பேசிக் கொண்டேயிருக்கலாம். எப்படித் தீர்வு காண்பது? எப்படி முடிப் பது? எல்லோரும் சேர்ந்து எப்படி நாட்டின் எதிர் காலத்தில் அக்கறை கொள்வது? நம்முடைய குழந்தைகள் அறிவு பெற்று சிறந்த மக்களாக விளங்குவது எப்படி? நம்முடைய மக்கள் உயர்ந்த விஞ்ஞான அறிவு பெற்று நம்முடைய மாநிலத்தில் உத்தி யோகம் வகிப்பதைப் போல புகழ்பெற்ற விஞ்ஞானிகளாக பாராட் டப் படுகிறவர்களாக இந்தியா எங்கும் உத்தியோகம் வகிக்கிறார் கள், வெளிநாடு செல்கிறார்கள் என்றெல்லாம் சொல்லக்கூடிய வகை யில் மாணவர்களை எப்படித் தயாரிப்பது? மாணவர்களுக்குத் தலைமை பாதையைக் காட்டக்கூடாது. கெடுதலைச் சொல்வது சுலபம். விஷம் கொம்ப சுலபமாகப் பரவிவிடும். நல்லதை அன்பு நெறிகளைப் பரப்புவது கஷ்டம். குழந்தைகளுக்கு எப்படித் தெரியும்? எதிர்காலத்திற்கு எது நல்லது என்று அவர்களுக்கு நாம் எடுத்துச் சொல்ல வேண்டும். கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வைஸ் சான்சலர் மாணவர் களுக்கு எல்லாம் ஒரு வேண்டுகோள் விடுத்தார்கள், மாணவர்கள் கட்டாயம் பள்ளிகளுக்கு, கல்லூரிகளுக்குப் போய்ப்படிப்பதோடு அவர்கள் எப்படி அறிவைப் பெறுவது, எப்படி நல்லொழுக்கங்களை கற்றுக் கொள்வது என்பதை மற்றவர்களும் உணர்த்தவேண்டும். மாணவர்கள் என்றால் இப்போது கல் எடுத்துப் போடுவதில்தான் இருக்கிறார்கள். அது சர்வசாதாரணமாக இருந்தால் என்ன செய் வது? பெற்றோர்களும் நாமும் மற்றவர்களும் அதைக் கவனிக்க வேண்டும். அது fashion ஆகிவிட்டால் என்னசெய்வது? நல்ல காரியங்கள் fashion ஆகவேண்டும். கெடுதலான காரி யங்கள் fashion ஆகக்கூடாது. நமக்கெல்லாம் வாழ்க்கையில் வேண்டியதெல்லாம் கிடைக்கிறதா? சிறந்த அறிவாளியாக இருக்க லாம். இருந்தாலும் வருவதுதான் வரும். ஆகையால் இதில் எல் லோரும் முடிவுசெய்து அதற்குமேல் அனைவரும் சேர்ந்து பாடுபட வேண்டும். அந்த வகையிலேதான் இந்த மன்றம் நல்ல வழி காட்டவேண்டும். நாட்டு மக்களுக்கும் முக்கியமாக மாண வ மாணவிகளுக்கும் நல்வழி காட்டவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். இங்கு கொடுக்கப்பட்டிருக்கும் இரண்டு திருத்தங்களை யும் அரசாங்கம் ஒப்புக்கொள்வதற்கில்லை என்றும், அத்திருத்தங் களை வாபஸ் வாங்கிக் கொண்டால் நலமாக இருக்குமென்றும் கூறி என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

MR. CHAIRMAN: There are two amendments; one moved by Sri N. V. Natarajan and the other by Dr. A. Chidambaranathan.

12th March 1965]

திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, நான் எனது திருத்தத்தை வற்புறுத்தவில்லை.

The amendment of Sri N. V. Natarajan, was, by leave, withdrawn.

SRI K. BALASUBRAMANYA AYYAR: Sir, I request that a report of the proceedings should be sent to the Union Government.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, after this discussion and if the amendments are withdrawn, Government will prepare a short summary of all the speeches delivered and send it to the Prime Minister and the Home Minister. There is no procedure now to send these things to any authorised person. Nevertheless, the Government would endeavour to take a summary of these speeches and present it to the Prime Minister and the Home Minister for their due consideration.

DR. A. CHIDAMBARANATHAN: Sir, I am not pressing my amendment.

The amendment of Dr. A. Chidambaranathan was, by leave, withdrawn.

MR. CHAIRMAN: The motion is talked out.

The House will now adjourn and meet again at 3 p.m. to-morrow.

The House then adjourned.

III.—PAPER LAID ON THE TABLE OF THE HOUSE.

159. Notification issued with G.O. Ms. No. 2434, Revenue, dated 30th September 1964 regarding declaration of Sri Muthukumaraswamy temple, Cuddalore O.T., Cuddalore taluk, South Arcot district be subject to the provision of Chapter VI of the Madras Hindu Religious and Charitable Endowments Act, 1959.

APPENDIX.

(*Vide* answer to starred question No. 159 on page 7)

The particulars are furnished in the appendix.

APPENDIX.

Statement showing the number of bags of sugar allotted to each municipal town in Tamilnad during the year 1964.

District.		Name of the municipality.		Number of sugar bags allotted.
(1)		(2)		(3)
Chingleput	1	Tiruvallur		888
	2	Kancheepuram		6,721
	3	Tambaram		2,070
	4	Alandur		1,329
	5	Thiruvottiyur		1,144
	6	Chingleput		2,462
North Arcot	7	Vellore		1,120
	8	Ambur		861
	9	Tiruvannamalai		4,176
	10	Arni		2,284
	11	Tirupattur		2,241
	12	Gudiyatham		1,307
	13	Wallajah		515
	14	Ranipet		804
	15	Arcot		859
	16	Arkonam		1,848
	17	Vaniyambadi		3,129
South Arcot	18	Cuddalore		278
	19	Chidambaram		306
	20	Tindivanam		228
	21	Villupuram		157
Thanjavur	22	Thanjavur		10,095
	23	Mayuram		5,316
	24	Nagapattinam		5,578
	25	Tiruvarur		3,564
	26	Mannargadi		3,156
	27	Kumbakonam		9,072

District.		Name of the municipality.		Number of sugar bags allotted.
(1)		(2)		(3)
Tiruchirappalli	28	Tiruchirappalli		4,23,48
	29	Srirangam		4,656
	30	Pudukkottai		8,769
	31	Karur		3,121
Madurai	32	Madurai		2,067
	33	Periakulam		96
	34	Theni		95
	35	Bodi		82
	36	Cumbum		35
	37	Dindigul		307
	38	Palani		120
Ramanathapuram	39	Srivilliputhur		1,116
	40	Sivakasi		756
	41	Virudhunagar		1,632
	42	Aruppukottai		3,744
	43	Karaikudi		1,632
	44	Devakottai		1,044
	45	Ramanathapuram		744
	46	Rajapalayam		2,016
	47	Paramakudi		660
Tirunelveli	48	Tirunelveli		9,135
	49	Palayamkottai		7,012
	50	Melapalayam		2,866
	51	Shencottai		789
	52	Tuticorin		8,705
	53	Kovilpatti		3,358·12
	54	Sankarankoil		1,468
Coimbatore	55	Mettupalayam		780
	56	Coimbatore		31,158
	57	Dharapuram		1,416
	58	Erode		9,000
	59	Gobi		1,562
	60	Pollachi		2,182
	61	Tiruppur		2,671
	62	Udumalpet		1,815
Ootacamund	63	Ootacamund		8,304
	64	Coonoor		9,162

District.		Name of the municipality.	Number of sugar bags allotted.
(1)		(2)	(3)
Kanyakumari	65	Colachel	793
	66	Muzhithurai	2,023
	67	Nagercoil	4,933
	68	Thukalai	720
Salem	69	Salem	1,362
	70	Rasipuram	104
	71	Dharmapuri	177

Statement showing the number of bags of sugar allotted to each town panchayat in Tamilnad during the year 1964 :—

District.		Name of the town panchayat.	Number of sugar bags allotted.
(1)		(2)	(3)
Chingleput	1	Thiruttani	816
	2	Padatturpet	96
	3	Avadi	1,259
	4	Tha	186
	5	Mangadu	58
	6	Korattur	201
	7	Poonamallee	356
	8	Thiruninravoor	86
	9	Sriperumbudur	491
	10	Wallajabad	578
	11	Utiramerur	638
	12	Red Hills	154
	13	Ambattur	703
	14	Villivakkam	621
	15	Thiruvanmiyur	132
	16	Pallavaram	1,058
	17	Chromepet	315
	18	Ponneri	628
	19	Arani	140
	20	Minjur	330
	21	Gummudipoondi	260
	22	Thirukalikundram	265
	23	Thiruporur	5
	24	Madurantakam	512
	25	Karunguli	55

12th March 1965]

District.		Name of the town panchayat.	Number of sugar bags allotted.
(1)		(2)	(3)
North Arcot	26	Wandiwash	970
	27	Desur	144
	28	Cheyyar	480
	29	Pallikonda	300
	30	Therapaddy Allavaram	194
	31	Kalponnathur	120
	32	Vettavalam	120
	33	Polur	717·40
	34	Chetpet	239·04
	35	Kalambur	143·04
	36	Kannammangalam	310·75
	37	Jolarpet	410
	38	Nattarampalli	179
	39	Chengam	220
	40	Pudupalayam	144
	41	Cholinghur	298
	42	Melvisharam	244
	43	Kalavai	102
	44	Thimri	120
	45	Kaveripakkam	204
	46	Panapakkam	120
	47	Takkolam	96
	48	Dharapadavedu	90
	49	Katpadi	90
	50	Permambet	90
	51	Alangayam	200
South Arcot	52	Nellikuppam	57
	53	Panruti	161
	54	Kurunjipadi	47
	55	Porto Novo	33
	56	Srimushnam	15
	57	Bhuvanagiri	29
	58	Kattumannarkoil	40
	59	Lalpet	27
	60	Vridhachalam	179
	61	Thitakudi	45
	62	Pennadam	43
	63	Kallakurichi	78

District.		Name of the town panchayat.	Number of sugar bags allotted.
(1)		(2)	(3)
South Arcot—*cont.*	64	Chinnasalem	72
	65	Thyagadurgam	38
	66	Sankarapuram	37
	67	Vadakkanandal	28
	68	Markanam	15
	69	Gingee	51
	70	Tirukoilur	130
	71	Ulundurpet	25
	72	Valavanur	15
	73	Vikravandi	15
Thanjavur ..	74	Vallam	375
	75	Tirukattupalli	1,356
	76	Thirupanthurathi (Newly formed)	132
	77	Tiruvaiyaru	1,512
	78	Orathanad	900
	79	Kuttalam	660
	80	Tharangampadi	468
	81	Sirkali	1,228
	82	Vaitheeswarankovil ..	276
	83	Pattukottai	3,360
	84	Adiramapattinam	1,080
	85	Peravurani	780
	86	Arantangi	1,260
	87	Thiruvadaimarudur ..	348
	88	Aduthurai	720
	89	Ayyampettai	852
	90	Papanasam	1,368
	91	Ammapettai	612
	92	Valangaiman	948
	93	Koothanallur	1,200
	94	Needamangalam	744
	95	Muthupettai	324
	96	Thiruthuraipundi	1,956
	97	Talanayar	180
	98	Vedaranyam	420
	99	Nannilam	552
	100	Kadavasal	216

District.		Name of the town panchayat.	Number of sugar bags allotted.
(1)		(2)	(3)
Tiruchirapalli	101	Golden Rock	1,650
	102	Golden Rock Railway Colony	1,150
	103	Sirugamani	816
	104	Alathur	288
	105	Karambakkudi	344
	106	Arimalam	266
	107	Ponnaravathi	531
	108	Illuppur	428
	109	Allangudi	1,297
	110	Kodiyappatti	173
	111	P. Pugalur	48
	112	Aravakuruchi	120
	113	Pallapatti	204
	114	Thanthoni	48
	115	Inam Karur	48
	116	Uppiamangalam	42
	117	Kulithalai	840
	118	Nangavaram	72
	119	Manaparai	600
	120	Musiri	29
	121	Thottaiam	213
	122	Kattuputhur	159
	123	Thathiengarpet	333
	124	Mettupalayam	243
	125	Thuraiyur	722
	126	Keerambur	165
	127	Lalgudi	650
	128	Poovalur	228
	129	Manachanallur	680
	130	Dalmiapuram	961
	131	Ariyalur	2,694
	132	Udayarpalayam	240
	133	Jayankondam	1,079
	134	Perambalur	1,293
Madurai	135	Avaniyapuram	7
	136	Thiruppanakkundram ..	9
	137	Peravai	3
	138	Melur	82

District.		Name of the town panchayat.	Number of sugar bags allotted.
(1)		(2)	(3)
Madurai—*cont.*	139	Natham	65
	140	A. Vellalapatti	4
	141	Gudaloor	39
	142	Devadampatti	15
	143	Andipatti	70
	144	Vadugapatti	11
	145	Uthamapalayam	33
	146	Chinnamanur	93
	147	Thevaram	10
	148	Kombai	19
	149	Ayyampalayam	19
	150	Chinnalapatti	43
	151	Sithayancottai	19
	152	Vadamadurai	13
	153	Vedasandur	27
	154	Ayyalur	7
	155	Kannivadi	10
	156	Thadicombu	1
	157	Palayam	1
	158	Tirumangalam	56
	159	T. Kallupatti	9
	160	Periyur	13
	161	Usilampatti	105
	162	Nilakottai	78
	163	Sholavandan	63
	164	Alagannalur	6
	165	Bathalagundu	39
	166	Ammayanaicknur	32
	167	Ayakudi	25
	168	Keeranur	5
	169	Neikarapatti	9
	170	Oddanchatram	43
	171	Kodaikanal Town	85
	172	Madurai	5,039
	173	Melur	410
	174	Tirumangalam	1,110
	175	Nilakottai	610
	176	Periakulam	1,320
	177	Kodaikanal	235

செலவு இல்லை என்று சொல்லவில்லை. இங்கே இருந்து டெல்லிக்குப் போகிறவர்களுக்கு அதிக சம்பளம் கொடுக்கிறார்கள். ஆகவே அதற்கு ஒப்பிட்டுக் கொடுக்கவில்லை என்று சொல்வது நியாயமில்லை. கனம் உறுப்பினர் உயர்ந்த எண்ணத்தோடு சொல்லி இருக்கலாம். இருந்தாலும் அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில் அவர்களிடத்திலே அக்கறை இல்லாமல் இல்லை. அக்கறை இருப்பதாலேதான் அவர்கள் கேட்காமலேயே பஞ்சப் படியை உயர்த்திக் கொடுக்க 5 கோடிக்கு மேலே செலவாகிறது என்றாலும் எப்படியோ கஷ்டப்பட்டு, வரவு செலவுத் திட்டத் தில் துண்டு விழுந்தால்கூட, மத்திய ஆட்சி எதுவும் கொடுக்க முடியாது என்று சொல்லி விட்டால்கூட, நாம் அதைக் கொடுக்க முடிவு செய்தோம். ஆகையினால் இந்தத் தீர்மானத்தை அரசாங் கம் ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று கூறி, பிரேரேபித்த கனம் உறுப்பினர் அவர்களும் இதை Press செய்யாமல் இருந்தால் நல்லது என்று சொல்லி என் வார்த்தையை முடித்துக் கொள் கிறேன்.

*** திரு. எஸ். கே. சம்பந்தன்:** கனம் தலைவர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கம் எந்த விதத்திலும் திருப்தி தருவதல்ல என்பதை எல்லோரும் உணர முடியும். மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்கப் படுகிறது என்ற ஒரே காரணத்திற்காக மட்டும் மாநில அரசாங்க ஊழியர்களுக்கு நாங்கள் அதிகச் சம்பளம் கேட்கவில்லை. ஒரே நாளில் ஒரே நிலையில் ஒருவர் மத்திய அரசாங்கத்திற்கும், இன் னொருவர் சென்னை மாநில அரசாங்கத்திற்கும் உத்தியோகத் திற்குச் சென்றால், அவ்விருவருடைய சம்பளங்களிடையே வித்தி யாசம் இருக்கக் கூடாது என்பதற்காக இந்தக் கோரிக்கையை நான் எழுப்புகிறேன். வேலையில் சேர்ந்த பிறகு வரும் வருஷங் களிலும் இந்த வித்தியாசம் இருக்கிறது. நம் அரசாங்க ஊழியர் கள், பக்கத்து வீட்டுக்காரர்கள் சொல்வதைக் கேட்டுவிட மாட் டார்கள். நம் மாநில அரசாங்க ஊழியர்கள்மீது இத்தகைய குற்றச்சாட்டு வரக்கூடாது என்பதுதான் என் எண்ணம். யாரா வது சொல்வதைக் கேட்டு அவர்கள் அதிகச் சம்பளம் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இருக்கக் கூடாது என்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்கிறேன். இன்றைக்கு இல்லாவிட்டாலும் என்றைக்காவது ஒரு நாள் இந்தச் சம்பள வித்தியாசம் நீக்கப்படவேண்டுமென்ற எண்ணம் இந்த அரசாங்கத்திற்கு இருந்தால், இந்தத் தீர்மானத்தை வாபஸ் பெற நான் தயாராயிருக்கிறேன். அப்படிப்பட்ட எண்ணம் இந்த அரசாங்கத்திற்கு இல்லையென்றால், இந்தத் தீர்மானம் தோற்றுப் போகக் கூடுமானாலும், இதை நான் வற்புறுத்துகிறேன்.

MR. CHAIRMAN: Is the hon. Member withdrawing his Resolution?

SRI S. K. SAMBANDHAN: I am not withdrawing, Sir.

MR. CHAIRMAN: The question is—

"This House recommends to the Government to take steps to narrow down the differences in the scales of pay and allowances between the State Government servants and the Central

Government servants and to place them on par with the Central Government servants in the matter of pay and allowances ".

The Resolution was put and lost.

(3) Secondary Grade trained Teachers in Higher Graede Posts.

* திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி : கனம் தலைவர் அவர்களே, என் பெயரிலுள்ள தீர்மானத்தை வாசித்துவிட்டு, அதன் பிறகு அதற்கு விளக்கம் தருகிறேன்.

" This Council recommends to the Government that all secondary grade trained teachers in higher grade posts in the various elementary schools under the various agencies in the State be given Secondary grade scales of pay ".

Dr. A. CHIDAMBARANATHAN : Sir, I second the resolution.

திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி : கனம் தலைவர் அவர்களே, இது ஒரு சாதாரணமான தீர்மானம். இது கட்சிச் சார்பற்றது. இது ஆசிரியர்களையும், வருங்காலக் குழந்தைகளையும், கல்வியையும், நாட்டில் கல்வி நன்முக வளர வேண்டுமென்ற கருத்தையும், நியாயத்தையும் பொறுத்தது. ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த நியாயமானது திரும்பவும் வழங்கப்பட வேண்டும் என்று சொல்வதற்காக இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானம் ஒரு சீர்திருத்தத்தைக் கோருகிறது. சுமார் 2,000 ஆசிரியர்கள் அவர்கள் படிப்புக்குரிய சம்பளம் கொடுக்கப்படாமல் இருக்கிறார்கள்; அதாவது, படித்துள்ள படிப்புக்கு என்ன சம்பளம் கொடுக்கப்பட வேண்டுமென்று அரசாங்கம் நிட்டமிட்டிருக்கிறதோ அந்தச் சம்பளம் கொடுக்கப்படாமல் இருந்து வருகிறார்கள். 1956-ல் இதே சர்க்காரின் கணக்குப்படி, சர்க்காரின் நிதி நிலை மிகவும் குறைவானதாகவும், மோசமானதாகவும் இருந்திருக்க வேண்டும். அப்படிப்பட்ட நிலையிலும், அந்தக் காலத்தில் கூட, ஒரு ஹையர் கிரேடு உபாத்தியாயர் செகண்டரி கிரேடு பரிட்கை பாஸ் பண்ணிவிட்டால், 'ரிலேட்' வந்த மறு தினத்திலிருந்தே அவருக்கு அந்தப் புதிய கிரேடுக்குரிய சம்பளம் கொடுக்கப்பட்டுவிடும். எக்காரணத்தாலோ இந்த வழக்கத்தை அரசாங்கத்தார் நிறுத்திவிட்டார்கள்.

இது சம்பந்தமாக, கனம் அங்கத்தினர்களுக்கு ஒரு விஷயத்தை நான் சொல்ல வேண்டியது அவசியம். இந்த உத்தியோகங்களில் பெயர்கள் விசித்திரமாக இருக்கும். ஹையர் கிரேடு என்பது உண்மையில் ஹையர் கிரேடு இல்லை. ஒரு சாதாரண நபர் மூன்றாவது ஃபாரம் (8-வது வகுப்பு) பாஸ் பண்ணி 'டீச்சர்ஸ் ட்ரெயினிங்' இரண்டு ஆண்டு பெற்று ஆசிரியராக ஆனால், அவருக்கு ஹையர் கிரேடு ஆசிரியர் என்று பெயர். எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் பண்ணிவிட்டு இரண்டு வருஷங்கள் உபாத்தியாயர் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் என்று பெயர். மூன்றாவது ஃபாரம் பாஸ் பண்ணியுள்ள பல ஹையர் கிரேடு ஆசிரியர்கள், தங்கள் நன்மை

யையும் நாட்டின் நன்மையையும், சர்க்கார் அவர்களுக்குக் கொடுத்துவந்த ஊக்கத்தையும் கருதி, 'ப்ரைவேட்டாக' எஸ்.எஸ்.எல்.சி. பரிட்கைக்குப் போய் அதைப் பாஸ் பண்ணி, செகண்டரி கிரேட் பயிற்சியும் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் இவ்வாறு உயர்ந்த படிப்புப் பெற்றிருக்கிறார்கள். ஆங்கிலேயர்கள் காலத்திலும், இப்படி செகண்டரி கிரேட் பாஸ் பண்ணியவர்களுக்கு அரசாங்கத்தார் ஊக்கம் கொடுத்தார்கள்; அப்போதும் அவர்களுக்குப் பரிட்கை பாஸ் பண்ணின மறு தினத்திலிருந்தே உயர்ந்த சம்பளம் கொடுத்து வந்தார்கள். ஆனால் அரசாங்கத்தார் திடீரென்று 1956-ல் ஒரு உத்தரவு போட்டு, இந்த வழக்கத்தை நிறுத்தி விட்டார்கள், இப்போது ஒரு ஹையர் கிரேட் ஆசிரியரின் சம்பள ஸ்கேல் ரூ 65—1—70—2—90; ஸெகண்டரி கிரேட் ஆசிரியர்களின் சம்பள ஸ்கேல் ரூ. 90—4—110—3—140. எனவே இப்போது 2,000 ஆசிரியர்கள், 90 ரூபாய் சம்பளம் பெறத் தகுதி பெற்றிருந்தாலும், 65 ரூபாய்தான் கொடுக்கப்பட்டு வருகிறார்கள். இத்தகைய தகுதி பெற்றவர்களுக்கு ஆரம்பத்தில்—முதல் ஆண்டில்—சம்பளக் குறைவு ரூ. 25; முதல் ஐந்து வருஷங்களில் வருஷத்திற்கு 3 ரூபாய் வீதம் சம்பள உயர்வு குறைத்துக் கொடுக்கப்படுகிறது. காரணம் 65 ரூபாயில் ஆரம்பமாகும் ஹையர் கிரேட் ஆசிரியர் சம்பளத்தில், முதல் 5 வருஷங்களில் ஒவ்வொரு வருஷத்திற்கும் ரூ. 1 வீதம் உயர்வு (இன்க்ரிமெண்ட்) இருக்கும் போது, 90 ரூபாயில் ஆரம்பமாகும் செகண்டரி கிரேட் ஆசிரியர் சம்பளத்தில் முதல் ஐந்து வருஷங்களில் ஒவ்வொரு வருஷத்திற்கும் 4 ரூபாய் வீதம் உயர்வு இருக்கிறது. மேலும் ஐந்தாவது வருஷ முடிவில் இந்த ஆசிரியர்களிடையே இருந்த சம்பள வித்தியாசம் ரூ. 25-இலிருந்து ரூ. 40 ஆக அதிகரிக்கிறது; 15 வருஷ முடிவில், மாதச் சம்பளத்திலுள்ள இந்த வித்தியாசம் 50 ரூபாய். அதற்குப் பிறகு ரிடையராகும் வரை இந்த ஆசிரியர்களுக்கு மாதம்தோறும் அபராதம் இந்த 50 ரூபாய். முப்பது வருஷ சேவிசுக்கு இப்படிப்பட்ட ஒரு ஆசிரியருக்கு 6,500 ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. இந்த அபராதம் கொடுப்பதற்கு, இந்த நஷ்டத்தை அடைவதற்கு, அவர் என்ன குற்றம் பண்ணினார்? ஆசிரியர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டியது சர்க்காரின் கடமை. ஆசிரியர்களின் தரத்தை உயர்த்த 'இன்ஸ்டிட்யூட் ஆஃப் எஜுகேஷனுக்கு' 'ப்ரொவைட்' பண்ணியிருப்பதாக வரவு செலவுத் திட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. கல்வித் துறையில் சுமார் 37 கோடி ரூபாய் செலவு செய்ய சர்க்கார் தயாராயிருக்கிறது. அப்படி இருக்கும்போது, ஒரு ஹையர் கிரேடு ஆசிரியர், " நான் எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் பண்ணிவிட்டு, அதற்கு மேல் ஸெகண்டரி கிரேட் ட்ரெய்னிங்கும் பெற்றுவிட்டு ஏற்கனவே

[திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி] [13th March 1965

செகண்டரி கிரேட் ஆசிரியர் உத்தியோகங்களுக்கு நியமிக்கப்பட்டு அவர்களுக்கு 90 ரூபாய் சம்பளம் கொடுக்கப்படுகிறது. எனவே, முதலில் ஹையர் கிரேட் ஆசிரியராக வந்துவிட்டு பிறகு செகண்டரி கிரேட் ஆசிரியர் உத்தியோகத்திற்குரிய தகுதியைப் பெற்றவர்களுக்கு "நீ முதலில் ஹையர் கிரேட் ஆசிரியராக வேலையில் சேர்ந்தாய். நாங்கள் கல்விக்காக 37 கோடி ரூபாய் செலவு செய்யத் தயாராக இருந்தாலும், நீ ஹையர் கிரேட் ஆசிரியராக இருந்த பாபத்திற்காக உனக்கு செகண்டரி கிரேட் சம்பளம் கிடையாது. (சிரிப்பு) உன் தலையில் 'ஹையர் கிரேட் ஆசிரியர்' என்று லேபில் ஒட்டப்பட்டிருக்கிறது, அது ஒட்டியது, ஒட்டியது தான்" என்று அரசாங்கத்தார் சொல்லுகிறார்கள். அவர்களுக்கு இதனால் சென்ற ஆண்டில் 6,500 ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது என்று நான் இந்த சபையில் பல தடவை சொல்லியிருக்கிறேன். இவர்கள் 2,000 பேர்; 12,000 ஆக்மார்க்கள். ஆசிரியர்களுக்குக் குழந்தைகள் ஜாஸ்தி. (சிரிப்பு) ஒரு ஆசிரியரின் குடும்பத்தில் சுமார் 6 அல்லது 8 பேர் இருப்பார்கள். இவர்களுக்கு ஏற்படும் நஷ்டத்தை கணக்கிடும்போது 'செகரிங் டெபாரிட்' கணக்குப் போட்டுப் பார்த்தால், நஷ்டத் தொகை இன்னும் அதிகமாக இருக்கும். இவர்களுக்கு செகண்டரி கிரேட் சம்பளம் கொடுக்காததற்கு காரணம் சொல்லும்போது, "ஹையர் கிரேட் ஆசிரியர் 'போஸ்ட்'ல் இவ்வளவுதான் இருக்க வேண்டும் என்று 1956-ம் ஆண்டில் நிர்மானித்து விட்டோம். இவர்களுக்கு ஹையர் கிரேட் லேபல் போட்டு விட்டோம். ஹையர் கிரேட் ஆசிரியர் உத்தியோகத்திற்கு வந்த இவர்கள் பாபம் பண்ணியிருக்கிறார்கள்" என்று அரசாங்கத்தார் சொல்வதுபோலாகிறது. ஆங்கிலம் போதிக்க வேறு புதியவர்கள் செகண்டரி கிரேட் ஆசிரியர் உத்தியோகங்களுக்கு நியமிக்கப்படுவது குறித்து கேள்வி கேட்டால், "முதலில் ஹையர் கிரேட் ஆசிரியர்களாக வேலைக்கு வந்த இவர்கள் செகண்டரி கிரேட் ஆசிரியர் வேலைக்குத் தகுதியற்றவர்கள். இவர்கள் ஹையர் கிரேட் ஆசிரியர் வேலைக்குத்தான் தகுதி உள்ளவர்கள்" என்றும் சொல்லப்படுகிறது.

இப்போது மொத்தம் 80,000 ஹையர் கிரேட் ஆசிரியர்கள் இருக்கிறார்கள். "சில வருஷங்களுக்குப் பிறகு ஹையர் கிரேட் ஆசிரியர் உத்தியோகங்களையே எடுத்து விடுவோம். அப்போது எல்லா ஹையர் கிரேட் ஆசிரியர்களுக்கும் செகண்டரி கிரேட் டிரெய்னிங் கொடுத்து விடுவோம். அதற்குத் திட்டம் இருக்கிறது" என்று சர்க்கார் சொல்கிறார்கள். 2,000 ஆசிரியர்களுக்கு செகண்டரி கிரேட் சம்பளம் கொடுக்க 6 லட்சம் ரூபாய்தான் தேவை. 80,000 ஆசிரியர்களுக்கும் அந்தச் சம்பளம் கொடுப்பதென்றால், 2½ கோடி ரூபாய் செலவாகும். இப்போது இவர்களுக்கு மேலே உயர்ந்த சம்பளம் கொடுத்து [illegible] என்ற எண்ணம் சர்க்காருக்கு இருந்தால், [illegible] இல்லாத காரணத்தால் [illegible]

[illegible] நன்மை

13th March 1965] [திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி]

சர்க்காரிடமே செகண்டரி கிரேடுக்கு குறையாத ஆசிரியர் இருக்கவேண்டுமென்ற திட்டம் இருக்கிறது என்பதால்தான் செகண்டரி கிரேடு ஆசிரியர்களிடையே இருக்கும் இந்தச் சம்பள வித்தியாசத்தை நீக்க வேண்டும் என்று சொல்கிறேன். ஒரே கிரேடு ஆசிரியர்களுக்குள்ளேயே ஏன் இந்தச் சம்பள வித்தியாசம் இருக்க வேண்டும்?

மாநில சர்க்கார் ஊழியர்களுக்கும், மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கும் இடையே இருக்கும் அகவிலைப் படி வித்தியாசம் போக வேண்டுமென்பதற்காக 5 கோடி ரூபாய் செலவழிக்க இந்த சர்க்கார் முன்வரும்போது, ஒரே இடத்தில் ஒரே கிரேடில் இருப்பவர்கள் இருவரில் ஒருவருக்கு அவருடைய சேவிசில் மொத்தம் 6,800 ரூபாய் நஷ்டம் ஏற்படக்கூடிய நிலைமையை இதே சர்க்கார் மாற்ற முன்வராதது வருந்தத்தக்க விஷயம்.

சாதாரணமாக ஆதிகாலத்தில் குழந்தைகளை பன்னிரண்டு வயதுக்குள் கொண்டுவந்து விடுங்கள் என்று பெரியவர்கள் சொல்வார்கள். கீழ் கிளாசில்தான் அக்குழந்தைகளுடைய 'விட்ட குறை தொட்ட குறை', என்று சொல்லக்கூடிய பூர்வஜென்ம வாசனையை அறிந்து ஏற்கனவே இருக்கக்கூடிய சக்தியை உணர்ந்து அதற்குமேலே ஆசிரியர்கள் பயிற்சி அளிக்கிறார்கள், 'Education is the manifestation of perfectoin already in man.' குழந்தைகளுக்கு இருக்கக்கூடிய அறிவை வெளியே இழுப்பது தானே தவிர பஞ்சைத் திணிப்பது போல கல்வியைப் புகட்டுவது அல்ல என்று சொல்வதைப்போல குழந்தைகள் பிறந்தவுடனே என்னென்ன சக்திகள் இக்குழந்தைகளுக்கு இருக்கிறது என்று அறிய மனோதத்துவ சாஸ்திரத்தை நன்றாகப் படித்து பி.ஏ.,பி.டி., படித்தவர்களைக் கொண்டு கீழ் கிளாசுகளில் பாடம் கற்பிக்க வேண்டுமென்று அந்தக் காலத்தில் சொல்லி வந்தோம். சுதந்திரம் வந்து பதினெட்டு ஆண்டு ஆகியும் எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்தாலும் போடத் தயங்குகிறோம். இரண்டாயிரம் பேர் பாஸ் பண்ணி வந்தால்கூட அவர்கள் நெற்றியில் ஒட்டிய லேபிளை நீக்கமாட்டோம் என்று சொல்கிறோமே, அது பொருந்துமா? மனோதத்துவ சாஸ்திரம் முக்கியமான பாடம். மனோதத்துவ சாஸ்திரம் படித்துவிட்டு குழந்தைகளுக்கு இன்னும் ஊக்கமாகச் சொல்லிக் கொடுக்கிறோம் என்று சொல்கிற நேரத்தில் கல்வி இலாகா கொடுக்க மாட்டேன் என்கிறது. 37 கோடி ரூபாய் செலவழிக்கிறோம், மொத்த வருமானத்தில் 22 சதவிகிதம் கல்விக்காக செலவழிக்கிறோம் என்றும் சோஷலிஸ்டிக் பேட்டர்ன் என்றும் சொல்கிற சர்க்கார் கல்வி இலாகாவில், கல்வி பயில ஊக்கமளிக்க வேண்டிய இலாகாவில், ஏற்கனவே போடப்பட்ட சம்பளம் மற்ற விபரங்களில்தான், லெகண்டரி கிரேடு பாஸ் பண்ணினாலும் அதே சம்பளம்தான் என்று சொல்கிறார்கள், ஏற்கனவே செலவழித்ததை விட அதிகமாக சர்க்கார் செய்கிறதே, எங்கள் இரண்டாயிரம் பேருக்குக் கொடுக்க சம்பளம் இல்லையா; நாங்களும் பாஸ் செய்

[திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி] [13th March 1965

திருக்கிறேமே, எங்களுக்குக் கிடையாதா என்று கேட்டால், அது மறுக்கப்படுகிறது. யாரும் வேலைக்கு வந்தால் அதில் முன்னேறி வர வேண்டுமென்பதுதானே நியதி. ஆறு லட்சம் ரூபாய் சர்க்காரிடம் இல்லையா? பள்ளிகள் நன்முக நடக்கவேண்டாமா? தேசப்பிதா காந்தியடிகள் சொல்லியதுபோல, எதிர்கால சமுதாயத்துக்கு மனோவிலையை, நியாக உணர்வை உண்டுபண்ணக் கூடிய ஆசிரியர்களுக்கு மன ஏக்கம் இல்லாமல் மனோசாந்தி வர வேண்டுமென்பதற்காக இதைச் சொல்கிறேன். இது கட்சிப் பிரச்னை அல்ல. எல்லோரும் இதற்கு ஆதரவு தரவேண்டும். இதைக் கொடுக்கச் செய்தால்தான் தமிழ்நாடு முன்னேற்றமடையும் என்பதை நாம் எல்லோரும் அறிந்துகொள்ள வேண்டுமென்றும் இதற்கு ஆதரவு காண்பிப்பீர்கள் என்றும் நினைத்து இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவருகிறேன்.

*டாக்டர் அ. சிதம்பரநாதன்: கனம் தலைவர் அவர்களே, திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இத் தீர்மானத்தை முழுமனதுடன் ஆமோதித்து வரவேற்கிறேன். திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசிய அளவு வீரமாகவோ, தீரமாகவோ, உணர்ச்சிவசப்பட்டோ, வேகமாகவோ, மூச்சுவிடாமலோ யாராலும் பேச முடியாது. அதிக சொற்களைக் கூறி இந்த சபையின் நேரத்தை எடுத்துக்கொள்ள நான் விரும்பவில்லை.

AN HON. MEMBER: Why not speak in English?

MR. CHAIRMAN: He adopts the Tamil medium for non-official business.

டாக்டர் அ. சிதம்பரநாதன்: திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டதுபோல ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள், மேல் வகுப்புகளுக்குக் கற்பிக்கும் தகுதிபெற்றிருந்தாலும்கூட மேல் வகுப்புகளுக்குக் கற்பிக்க வாய்ப்பு கிடைக்காத காரணத்தால் இடைப்பட்ட சம்பளத்தில் அவர்கள் இருக்கிறார்கள். ஹைஸ்கூலுக்கு அவர்கள் மாற்றப்பட்டிருப்பார்களானால் கட்டாயம் அவர்களுக்கு 90 தொடக்கமாகும் சம்பளம் கொடுத்திருப்பார்கள். எஸ். எஸ். எல். சி. படித்துப் பயிற்சி பெற்றுள்ள ஆசிரியர்களை மேல் வகுப்புகளுக்கு வாய்ப்பு இருந்தால் அனுப்பி அந்தச் சம்பளத்தையும் கொடுக்குமாறு அமைச்சர் அவர்களுக்கு ஒரு ஆலோசனை கூற விரும்புகிறேன். இரண்டாவது தொடக்கநிலைப்பள்ளிகளில் வேலை பார்க்கிற மூன்று, நான்காவது வகுப்புகளுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்கள் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களானால் செகண்டரி கிரேடு பயிற்சி ஆசிரியர்களுக்குக் கொடுக்கும் ரூ. 90 தொடக்கச் சம்பளம் கொடுக்கிறோம், பிரிட்டிஷ் கவுன்சில் பயிற்சி பெற்றிருக்கிற காரணத்தால், இப்போது நான்கு, ஐந்தாவது வகுப்பு ஆசிரியர்கள் இதே தகுதியுடையவர்கள் கொஞ்சம் பயிற்சி பெற்றிருந்தால் M.E.L.T. campaign பயிற்சி மூலம் செகண்டரி கிரேடு சம்பளம் கொடுக்கலாம். இரண்

13th March 1965] [டாக்டர் அ. சிதம்பரநாதன்]

டாயிரம் ஆசிரியர்கள்தான் இடைப்பட்ட நிலையில் இருக்கிறார்கள். இவர்களை நான்கு, ஐந்தாவது வகுப்புப் பாடம் எடுக்கும்படி செய்து M.E.L.T. campaign பயிற்சிக்குப் போகும்படி செய்து நான்கு, ஐந்தாவது வகுப்பு ஆசிரியர்களாகப் பாவித்து அவர்களுக்கு ஏன் செகண்டரி கிரேடு சம்பளம் ரூ. 90 கொடுக்கக் கூடாது என்று அரசாங்கம் சிந்திக்குமாறு கேட்டுக்கொண்டு இத்தீர்மானத்தை வரவேற்கிறேன்.

*திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, உயர்திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களால் தரப்பட்டிருக்கிற தீர்மானம் சில ஆண்டுகளாகவே ஆசிரியர் சமுதாயத்தில் மிகப்பெரிய குறையாக இருந்துகொண்டிருக்கிற பிரச்னை பற்றியதாகும். அரசாங்கத்தின் கொள்கைக்கு ஏற்ப அந்த ஆசிரியர்கள் நிலை அமையவில்லை என்பதை நான் எடுத்துக்கூற விரும்புகிறேன். மிகக் குறைந்த ஊதியத்தில் வேலைசெய்கிற ஆரம்பநிலை ஆசிரியர்களுக்கு, அவர்களுடைய கல்வித் தரத்தை அடிப்படையாக வைத்து, உயர்ந்த கல்வித்தரம் பெற்றிருந்தால் அவர்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டியது அரசாங்கத்தினுடைய கடமையாகும். அத்தகைய கருத்து ஒன்றை அரசாங்கம் ஏற்கனவே வெளியிட்டிருக்கிறது. தொடக்க நிலை வகுப்புகளில், முதல் இரண்டு வகுப்புகளில் ஹையர் எலிமெண்டரி ஆசிரியர்கள் என்ற நிலையில் தொடக்கநிலை ஆசிரியர்களாக ஓரளவு பயிற்சி பெற்றவர்கள் அமர்த்தப்படுவதைவிட, பத்தாவது படித்து பயிற்சி பெற்றவர்களை நியமிக்கும் நிலைமை ஏற்படவேண்டுமென்றும் அப்போதுதான் கல்வித்தரம் உயரும் என்றும் அரசாங்கம் முன்னரே கூறியிருக்கிறது. ஆரம்ப வகுப்புக்களில் எத்தகைய தகுதியுள்ளவர்கள் வேண்டுமென்று விரும்புகிறார்களோ அத்தகைய தகுதி பெற்றவர்கள், ஏற்கனவே அரசாங்கத்தால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற விதிமுறைகளின்படி, இதைவிட உயர்ந்த வகுப்புகளில் பாடம் நடத்துகிறபோது ரூ. 90-100 சம்பளம் பெறுகிறவர்கள் அங்கு வேலை கிடைக்காத காரணத்தால் தங்களுடைய படிப்புக்குப் பெறுகிற ஊதியத்தைவிட ரூ. 25 அளவுக்குக் குறைத்துப் பெறுகிறார்கள். அப்படி அவர்கள் குறைத்துப் பெறுவார்களேயானால் இதுதான் வழங்கப்படுகிற சம்பளம் என்று காரணம் சொல்லலாமே தவிர, அவர்கள் செய்கிற வேலைக்கு அதுதான் முறையான சம்பளம் என்று சொல்ல முடியுமா என்று கேட்டால் 3, 4-வகுப்பானாலும், முதல் வகுப்பானாலும் செய்கிற வேலையின் தரத்திலும், அளவு எல்லாம் ஒன்றுதான் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஆசிரியர்களுடைய கல்வித் தரத்துக்கு ஏற்ப அவர்கள் வகுப்புகளில் பாடம் நடத்துகிற முறை உயர்ந்ததாக இருக்க முடியும்., வகுப்புகள் வேறானாலும் பொதுவாக ஆசிரியர்கள் கடமையை நோக்கும்போது ஏறத்தாழ ஒரே வகையானதாகும். மூன்று, நான்காவது வகுப்புகளில் பாடம் நடத்த வாய்ப்பு கிடைக்கவில்லை; முதல் வகுப்புகளில் நடத்துகிறார்கள் என்பதற்காக முதல் இரண்டு வகுப்புகளில் பாடம் நடத்த நியமிக்கப்படும் ஆசிரியர்களைவிட உயர் தகுதி

[திரு க. அன்பழகன்] [18th March 1965

பெற்றிருந்தாலும் அவர்களுக்கு உரிய சம்பளம் மறுக்கப்படுகிறது என்றால் அது நியாயமாகாது. இன்றைக்கு அரசாங்கம் அதை ஏற்காததால் அவர்கள் படிப்புக்குரிய சம்பளம் அனுமதிக்கப்பட வில்லை, பணம் ஒதுக்கப்படவில்லை என்று காரணம் சொல்லலாமே தவிர சிந்தித்துப் பார்த்தால் அது ஏற்றுக்கொள்ள வேண்டிய தாகும். இதனால் ஏற்படும் செலவு, 150 கோடிக்கு வரவு-செலவுத் திட்டத்தை உருவாக்குகிற ஒரு அரசாங்கத்திற்கு மிகச் சிறிய செலவாகும். இது நியாயமா இல்லையா என்று எண்ணிப்பார்க்க வேண்டும். வெவ்வேறு தொழில் வகையாக இருக்கும் சூழ்நிலையில் ஒரே அளவு படித்தவர்கள் சிலர் கிளார்க்காக போகிறார்கள் : வெவ் வேறு ஊதியம் பெறுவது நியாயம். சிலர் வேறு தொழில்களுக்கு போகிறார்கள், அவர்களுக்கிடையே ஊதிய வேறுபாடு இருந்தால் அதை ஏற்றுக்கொள்ளமுடியும். ஒரே பள்ளிக்கூடம், பக்கத்து வகுப்பறை, ஒரே பணி. ஆறு ஏழு வயது குழந்தைகளுக்குப் பாடம் நடத்துகிறவர்கள், எட்டு ஒன்பது வயது பிள்ளைகளுக்குப் பாடம் நடத்துகிறவர்கள் என்பதுதான் வேறுபாடு. இருவரும் படித்துப் பயிற்சி பெற்றது ஒரே அளவு படிப்பு. ஆனால் அவர் களில் ஒருவர் வாங்கும் சம்பளம் ரூ. 100. இன்னொருவர் வாங் குவது ரூ. 70 என்று வேறுபட்டால் எவ்வளவு தூரம் அவர்களது உள்ளத்தில் வேதனையை, வருத்தத்தை, வாழ்க்கையைப் பற்றிய அருவருப்பான உணர்ச்சியை அது உண்டாக்குகிறது என்று எண் ணிப்பார்க்கவேண்டும். இப்போது பாதிக்கப்பட்டவர்கள் ஏறத் தாழ இரண்டாயிரம்பேர். நமது மாநில அரசாங்க ஊழியர் களுக்கு மத்திய அரசாங்க ஊழியர்கட்குச் சமமான ஊதியம் தர வேண்டும் என்ற முதல் தீர்மானத்தை திரு. எஸ். கே. சம்பந்தன் கொண்டுவந்து விளக்கிப் பேசியதற்கு பதில் அளித்த அமைச்சர் அவர்கள்கூட ஒரு மருமகள் கதை சொன்னார்கள். ஒரு வீட்டுக்கு வந்த மருமகளிடம் பக்கத்து வீட்டுப் பெண் எடுத்துகிற ஆடைகள் உனக்கில்லையே என்று பிறர் சொல்லக்கேட்டு அது தமக்கில்லையே என்று வருத்தப்பட்டால் அது தவறு என்று சொன் னார்கள். இந்தத் தீர்மானம் பக்கத்துவீட்டார் மருமகளுக்குச் சொல்கிற யோசனை அல்ல. இரு தகுதியுடைய ஆசிரியர்களும் ஒரே வீட்டில் இருக்கிற பெண்களைப் போன்றவர்கள். ஒரே வகை வேலை செபவர்கள், அக்காள் முன்னால் பிறந்தாள், தங்கை பின்னால் பிறந்தாள் என்பதற்காக மட்டுமே சிறிய பிள்ளைகளாக இருந்தாலும் தமக்கைக்கு மட்டும் நல்ல புடவை, நகை என்றால் தங்கை கேட்காமல் விடுவதில்லை. எனக்கும் இரண்டு பெண்கள் இருக்கிறார்கள். இந்த நிலைமையும் அதில் உள்ள நியாயமும் தெரியும். அக்காள் தங்கையைப் போல ஒரே இடத்தில், ஒரே தகுதியுள்ளவர்கள், ஒரே காரியம் செய்கிறவர்கள் இந்த ஆசிரியர் கள். ஏற்கனவே உள்ள கல்வித்திட்டத்தின்படி இன்னின்ன அளவுக்கு ஊதியம் தருவோம், இன்னின்ன படி நிலையில் இந்நின ஆசிரியர்கள் நியமிக்கவேண்டுமென்று சொல்லிவிட்ட காரணத் தால் மட்டும் தகுதிபெற்ற இரண்டாயிரம் ஆசிரியர்கள் பாதிக்கப் படக்கூடாது. டாக்டர் சிதம்பரநாதன் அவர்கள் சொல்கிறபோது

18th March 1965] [திரு க. அன்பழகன்]

எனக்குத் தோன்றியது,—சில வகையில் சிறப்பான தகுதிகள் பெற்றிருப்பார்களானால் அவர்களுக்கென்று சில சிறப்பு ஊதி யத்தை (Special allowance) வழங்கிக்கொண்டிருக்கிறது இந்த அரசாங்கம். எனவே எட்டாவது வகுப்பு வரையில் படித்து விட்டுப் பயிற்சி பெற்று அந்த வகுப்புப் பாடத்தை நடத்து வதற்கு பதில் 10-வது வரை படித்து முடித்து 2 ஆண்டுகள் பயிற்சி பெற்று வருகிற ஆசிரியர்களுக்கு இடைநிலை ஆசிரியர் (secondary grade) ஊதியம் உடனடியாகத் தர முடியாவிட்டாலும் தருவதற்கு உண்மையாக ஒருவேளை எந்தக் காரணத்தாலும் தடை இருந்தால் ஒரு சிறப்பு ஊதியம் தருவதற்கேனும் உடனடி யாக முன்வரவேண்டும். அடுத்து இப்படிப்பட்ட இடைநிலை பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஹையர் கிரேடு ஆசிரியர்களின் இடங்களில் வேலைபார்த்தால் எவ்வப்போது மேல்நிலைக்கு வரச் சந்தர்ப்பம் கிடைத்தாலும் அவர்கள் அந்தப் பதவிக்கு உயர்த்தப் பட வேண்டும். அரசாங்கக் கொள்கைப்படி Secondary grade ஆசிரியர்கள் Higher grade ஆசிரியர்கள் வகுப்பை நடத்துகிற காரணத்தால் பள்ளிக் குழந்தைகள்—சிறந்த பயனைப் பெறு கிறார்கள் என்ற அடிப்படையிலே அவர்களுக்கு Secondary grade ஆசிரியர் சம்பளம் தருவதற்கான ஒரு திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எதிர்கட்சிக்காரர்கள் கொண்டுவருகிற தீர்மானம் என்று கருதாமல் கொண்டு வந்த நண்பர் நடுநிலையாளர் என்ற முறையில் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று ஒரு வேண்டுகோளை வைத்து அந்தத் தீர்மானத்தை நான் ஆதரித்து முடிக்கிறேன்.

*கனம் திரு. எம். பக்தவத்சலம் : தலைவர் அவர்களே, எதிர் கட்சி கொண்டுவருகிற தீர்மானத்தையெல்லாம் எதிர்க்கவேண்டும் என்பது இல்லை. ஒத்துக்கொள்ளக் கூடிய வாய்ப்பு வராதா என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். ரொம்ப மகிழ்ச்சி அதிலும் இந்தத் தீர்மானத்தை மிரேரேபித்த திரு. கிருஷ்ணமூர்த்தி உருக்க மாகப் பேசினார்கள். எப்போதும் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதல் உண்டு. ஆசிரியர்களுக்காகப் பாடுபடுகிறவர். ரொம்ப உருக்கமாக மூச்சுக்கூட விடாமல் பேசினார்கள். இவ்வாறு உருக்கமாகப் பேசியதற்காகவாவது கொடுத்து விட வேண்டும் என்பது என் சொந்த அபிப்ராயம். முதல் தீர்மானத்தைக்கூட ஆதரித்து திரு. கிருஷ்ணமூர்த்தி பேசினார்கள். கனம் சம்பந்தன் முதல் தீர்மானத்திலே என்ன சொன்னார்? "ஒரே வேலை செய்கிற வர்களுக்கு இரண்டு விதமான சம்பளம் இருக்கலாமா, இரண்டும் ஒரே வேலைதானே. மத்திய சர்க்காரிலும் அதே வேலை மாநில சர்க்காரிலும் அதே வேலை. சம்பளம் மட்டும் வேறு வேறு இருக் கலாமா? என்று கேட்டார்கள். அதை திரு. கிருஷ்ணமூர்த்தி ஆதரித்தார்கள். இரண்டும் வேலைதான். 2, அல்லது முதல் வகுப்பு Higher grade ஆசிரியர் சொல்லிக் கொடுக்கிற பாடத்தை Secondary grade ஆசிரியர் கற்றுக் கொடுத்தால் ஒரே

வேலைதான். உயர்ந்த research scholar, post-graduate degree வாங்கியிருக்கலாம். Trombay-ல் Atomic Power Plant-ல் வேலை பார்த்தால் ரூ. 2,000 சம்பளம் கிடைக்கும். வேலை கிடைக்க வில்லை. Presidency College-ல் Physics Professor ஆகப் போடுகிறோம். அதற்கு ரூ. 2,000 சம்பளம் கொடுக்க முடியுமா? எப்படி எதிர்பார்க்க முடியும்? ஏதோ pass பண்ணி யிருக்கிறார். நீங்கள் உயர்ந்த ஜாதி என்று அதிகம் சம்பளம் கொடுக்க முடியுமா? வீட்டுக்கு வருகிற மருமகளைப் பற்றிச் சொன் னார்கள். பணக்கார வீட்டிலிருந்து அதிர்ஷ்டம் உள்ள பிள்ளைக்கு மருமகள் வருகிறாள். இன்னொரு பிள்ளைக்கு ஏழை வீட்டிலிருந்து பெண் வருகிறாள். பணக்கார வீட்டிலிருந்து அந்தப் பெண் வந்திருப்பதால் சாப்பாட்டுக்கு உட்காரும்போது வெள்ளித்தட்டு வைத்து அறுசுவையோடு போடுவது, ஏழைக் குடும்பத்திலிருந்து வந்தவளுக்கு உலர்ந்த இலையைப் போட்டு சாதம் போட்டால் நன்றாக இருக்குமா? ஒத்துக்கொள்ளுமா அந்தப் பெண்? வீட்டுக்கு வந்தபின் பணக்காரப் பெண், ஏழை வீட்டுப் பெண் என்று பார்க்க முடியுமா? ஒரே மாதிரியாக வேலைதான். எலிமெண்டரி கிரேட் ஆசிரியர் சொல்லிக் கொடுக்கிற பாடத்தைச் சொல்லிக் கொடுக்கலாம். என்னுடைய நோக்கம் அதில் பிடித்தம் உண்டு. குறைந்த பட்சம் Secondary grade தான் இருக்கவேண்டும். அதுவும் 1, 2-வது வகுப்புப் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்க திறமை வேண்டும். ஆரம்பப் பள்ளிகளிலே Secondary grade ஆசிரியர்களைத்தான் வைக்க வேண்டும் என்பது நம் லட்சியம். ஆனால் அந்தத் திட்டத்தை இப்போதே எடுத்துக் கொள்ளவில்லை. ஒரே வகுப்பில் இரண்டு ஆசிரியர்கள் பாடம் கற்றுக் கொடுக்கிறார் கள் என்பதற்காக அதிகச் சம்பளம் கொடுப்பது என்பது நியாய மாக இருக்காது. டாக்டர் அ. சிதம்பரநாதன் அவர்கள் தீர்மானத்தை ஆதரித்துப் பேசினார்கள். என்னுடைய கருத்தும் அவர் சொன்னதுதான். வேறு எதாவது வேலை வாய்ப்பும், அந்த Secondary grade ஸ்தானத்தில் போட்டுக் கொடுக்கலாம் என்று சொன்னார்கள். அதில் ஆட்சேபனையில்லை. Secondary grade teachers இத்தனை பேர் என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதில் அவர்களுக்கு வேலை கிடைக்கச் செய்யப் பார்க்கலாம். ஒரே பாடத்தைச் சொல்லிக்கொடுக்க இரண்டு விதமான சம்பளம் இருக்க நியாயம் இல்லை. அவர்களுக்கு Secondary grade சம்பளம் கிடைக்க சீக்கிரம் வாய்ப்பு கிடைக்கும். ஒதுக்கப்பட்ட ஸ்தாபனத்துக்குப் போக வேண்டும், அப்படிப் போனால் சம்பளம் கிடைக்கும். இந்த ஆரம்பப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் சட்டம் செய்திருக்கிறோம். பஞ்சாயத்து யூனியன் பொறுப்பில் இருக்கிறது. பஞ்சாயத்து யூனியனுக்கு நிதி வாய்ப்பு வைக்கப்பட் டிருக்கிறது. அதில் பள்ளிக்கூடம் நடத்தவேண்டும். ஸ்தாபனம் தலைக்கு எவ்வளவு என்று கணக்குப் போட்டு சட்டம் செய்திருக் கிறோம். அதை வைத்துக்கொண்டு அவர்கள் சம்பளம் கொடுக்க வேண்டும். நாம் தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டால் பஞ்சாயத்து யூனியன் என்ன செய்வார்கள்? அரசாங்கத்திடம் கேட்பார்கள். அரசாங்கத்தைக் கேட்டால் நிதியை எப்படிக் கண்டுபிடிப்பது?

நிதி கிடைக்கவேண்டுமென்றாலும் கொள்கை அளவில்கூட சரி யில்லை. எத்தனையோ பேர் எனக்குத் தெரியும். secondary grade training உள்ள இடத்துக்கு B.T. வருகிறார்கள். B.T. ஆச்சே அதிகச் சம்பளம் கொடு என்று கேட்டால் எப்படிக் கொடுப்பது? உயர்ந்த பதவி கிடைக்கும் வரை அதில் இருக்கிறார்கள். நான் படித்த காலத்தில் L.T. படித்தவர்கள் சின்ன வகுப்புக்கு வந்து சொல்லிக் கொடுப்பார்கள். அதற்காகச் சம்பளம் அதிகம் கொடுப்பதில்லை. B.T. வைக்கவேண்டுமென்ற நிமித்தம் இருந்தால் அந்தச் சம்பளம் கிடைக்கும் கனம் உறுப்பினர் பிரேரேபித்து திரு. கிருஷ்ணமூர்த்தி ஆதரித்ததில் எனக்குப் பிடித்தம் இல்லாமல் இல்லை. உருக்கமாகப் பேசினார். ஆசிரியர்களுக்குள்ள கஷ்டத்தை உணராமல் இல்லை. அதற்காக நாம் தண்டனை கொடுக்கிறோம் என்று சொல்லுவதெல்லாம் கற்பனையில் சொல்லுவது. ஆசிரியர் கள், புலவர்கள சொல்லுகிற விஷயம். எப்போது Secondary grade ஸ்தானத்துக்குப் போவார்களோ அப்போது அதிக சம்பளம் கிடைக்கும். கூடிய சீக்கிரம் எல்லாவற்றையும் Secondary grade-ஆக மாற்ற திட்டம் உள்ளது. கூடியவரை பெண்களைத்தான் வைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அதற்காக ஆண்கள் கவலைப்பட வேண்டாம்; ஆரம்பப் பள்ளிகளில் பெண்களை வைப்பதுதான் நல்லது. Secondary grade training இருப்பது நல்லது. அது என்னுடைய எண்ணம். நான் அமெரிக்கா போயிருந்தபொழுது அங்கே பெண்கள் இருந்தார்கள். பெண்களை ஆசிரியராக வைத்தால் நல்லது என்று அங்கு சொல்லுகிறார்கள். நல்ல ஒழுக்கம் ஏற்படும் என்ற கருத்துத்தான். ஆரம்பப் பள்ளி களில் Secondray grade-ஆக மாற்றுவது. அந்தத் திட்டம் படிப்படியாகத்தான் வர வேண்டும். எலிமெண்டரி பள்ளியில் பாடம் சொல்லிக்கொடுப்பவர் Secondray grade. ஆகவே அதிகச் சம்பளம் கொடு என்பதைக் கொள்கை அளவில் ஒப்புக் கொள்ளவில்லை. எதற்கும் சோசலிசம். எப்பொழுதே திருஷ்டாந் தம் வந்துவிட்டது. ஒரே வேலை செய்கிறதால் ஒரே மாதிரி சம் பளம். ஒரே வேலை செய்தாலும் வேறுவிதமாகச் சம்பளம் கொடுக் கலாம். அதுவும் சோசலிசம். சோசலிசம் எல்லாம் எப்படி அடி படுகிறது என்பதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாக இருக்கிறது. இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்வதற்கு இல்லை என்று வருத் தத்துடன் சொல்லி திரு. கிருஷ்ணமூர்த்தி அதை வற்புறுத்த வேண்டாம், ஆசிரியர்களுக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன். திரு. தங்கவேலு முதலியார், காஞ்சிபுரம் நகர மன்றத்தலைவர் சம்பளம் அதிகம் என்று தீர்மா னம் போட்டுவிட்டால் எங்கிருந்து பணம் கொடுப்பது என்று கேட்பார்.

திரு. ஏ. கே. தங்கவேல் முதலியார்: யாரிடமிருந்தும் பணம் வாங்க முடியவில்லை. பட்ஜட் பாஸ் பண்ணிவிட்டாலும் பணம் கேட்டால் எடுத்துக் கொடுக்க முடியவில்லை.

[13th March 1965

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எனவே புதிதாக நீர் மானத்தை நிறைவேற்றி இன்னும் கொஞ்சம் சம்பளத்தைக் கூட்டிக் கொடுங்கள் என்று நகர மன்றத் தலைவர்களுக்கு உத்தரவு போட்டு என்ன பிரயோசனம்? இருப்பதையே சரிப்படுத்த முடிய வில்லையே. இப்படி எல்லாம் சங்கடம் இருப்பதால் இந்தத் தீர்மானத்தை வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளு கிறேன்.

திரு ஜி. கிருஷ்ணமூர்த்தி: கனம தலைவர் அவர்களே, முத லமைச்சரவர்கள் சொன்ன பதிலாவது எனக்கு அவ்வளவு சரி என்று படவில்லை. உண்மையான சோஷலிசம் என்றால் ஒரே வேலை செய்கிறவர்களுக்கு ஒரே சம்பளம் என்றுதான் கேட்கின்றோம்.

இரண்டாவது Secondary grade post இவ்வளவு, higher grade post இவ்வளவு என்று பொருள்பட 1956-லே—சுதந்திரம் வந்து 9 வருஷம் கழித்து தீர்மானித்தது. ஆங்கிலத்திலே retro-grade step என்று சொல்வார்கள். அது பிற்போக்கு policy யாக இருப்பதால் நாம் செய்த தவறை உணர்ந்து 1965-ல் எட்டு வருஷம் கழித்து அதை நிவர்த்தி செய்யவேண்டும் என்றுதான் கேட்டுக் கொள்கிறேன்.

1956-லே கனம் முதலமைச்சரவர்கள் அப்பொழுது அமைச்ச ராக இருந்திருப்பார்கள். இதே சபையில் secondary grade post ஆசிரியர் எந்த class-ல் இருந்தாலும் 45—2—85 சம்பளம் வேண்டு மென்று இதுமாதிரி உத்தியோகச் சார்பற்ற தீர்மானம் கொண்டு வந்து, காங்கிரஸ் கட்சியிலே உள்ள பலரும் ஆதரித்து, கனம் சுப்பிரமணியம் அவர்கள் ஒப்புக்கொண்டு—1954 என்பது ஞாபகம், 10 வருஷத்துக்கு மேலே ஆகிறது—மாகாணம் பூராவும் எல்லா Secondary grade ஆசிரியர்களுக்கும் 45—2—85 அமுலில் இருந்து வந்தது. பிற்பாடு White paper என்று போட்டு, அது Higher Elementary School-க்குத் -க்குக் கிடையாது என்று Lower Elementary School- தான் உண்டு சர்க்கார் மாற்றினார்கள். அப்போப்பட்ட பிற்போக்குக் கொள்கை கல்வி இலாகாவிலே இருக்கக்கூடாது என்று சொல்கிறோம். முதலமைச்சரவர்கள் Secondary grade ஆசிரியர்கள் எங்கெங்கே வேலை செய்கிறார்களோ அதையெல்லாம் Secondary grade post என்று போட்டுவிட்டால் இதிலே கஷ்டம் வந்துவிடும் என்று சொல்கிறார்கள். ஒரு ஆறு லட்ச ரூபாய்க்கு, பஞ்சாயத்து கொடுக்க முடியாது, Municipality கொடுக்க முடியாது என்று சொல்வது நியாயமில்லை. கல்விச் செலவிலே எல்லாம் சர்க்கார் தான் கொடுக்கவேண்டும். ஆங்கிலேயன் ஆளுகிறபோது "Local self Government is but a branch of the Government. It is entitled to all the privileges of the State Government." என்று சொன்னன். ஆகையினாலே எதோ பஞ்சாயத்து இருக் கிறது, முனிசிபாலிடி இருக்கிறது, காஞ்சிபுரத்திலே கொடுக்க முடியாது என்ற நிலைமை நியாயமில்லை. ஒரே பதவியிலே தாரதம்யம் இல்லை. Central Government Servants, N.G.O. களுக்கு

13th March 1965] [திரு ஜி. கிருஷ்ணமூர்த்தி]

சொன்ன மாதிரி வித்தியாசம் இல்லை. பஞ்சாயத்து எல்லாம் செய்யவேண்டும் என்றால் பஞ்சாயத்துக்கு சர்க்கார்தானே பணம் ஒதுக்குகிறார்கள். அந்த பஞ்சாயத்து வேறு சர்க்கார் வேறு என்றால் ஒத்துக்கொள்ள முடியாது. ஆங்கிலேயன் காலத்தில் தபால் எழுதினால் மாகாணத்தைச் சேர்ந்த விஷயம் என்று பதில் வரும். அப்படி வேறு ஒருவர் பொறுப்பு என்று தட்டிக் கழிக்க முடியாது. கல்வி சர்க்கார் பொறுப்புதானே. அப்படி இருக்கும் போது ஆறு லட்ச ரூபாய்— சர்க்காரே 2½ கோடி செலவழித்து எல்லோரையும் secondary grade ஆகச் செய்வோம் என்று வரும் போது ஒரு ஆறு லட்ச ரூபாயைக் கொடுத்து இந்த வித்தியா சத்தை நீக்க சர்க்காரே முன்வர வேண்டும். இப்பொழுது இந்தத் தீர்மானத்தை வாபஸ் பெற்றுக் கொள்வதற்கு பதிலாக, இப்பொழுது இருக்கக்கூடிய 2,000 ஆசிரியர்களுக்கு, கேள்வி நேரங்களில் சர்க்கார் சார்பில் பதில் அளிக்கப்படுவதைப்போல் செய்யாமல், மேல் வகுப்புகளுக்கு English training -க்கு அனுப்பும் போது உத்தரவு போடுவேரம் என்றால் நான் வாபஸ் வாங்கிக் கொள்ள தயார். அப்படி இல்லாமல் இருக்கிற நிலைமையே இருக்கும் என்றால் நான் வாபஸ் வாங்கிக் கொள்ள முடியாது.

MR. CHAIRMAN: The question is—

"This Council recommends to the Government that all secondary grade trained teachers in higher grade posts in the various elementary schools under the various agencies in the State be given secondary grade scales of pay".

The Resolution was put and lost.

MR. CHAIRMAN: The next Resolution is in the name of Sri M. Rajah Iyer. As the hon. Member is not in his place, the Resolution is deemed to have been withdrawn.

The other Resolution is in the name of Sri M. Subbiah Chettiar. As the hon. Member is not in his place, the Resolution is deemed to have been withdrawn.

V.—MOTION UNDER RULE 205 OF THE COUNCIL RULES.

THE HON. SRI R. VENKATARAMAN: Mr. Chairman, I move—

"That the proviso to rule 41 of the Madras Legislative Council Rules be suspended with reference to the time-limit prescribed therein in its application to the discussion on the Traffic Accidents and that one hour be allotted for the discussion".

Under the rule, only half an hour is allotted for the discussion. I suggest that one hour be allotted so that hon. Members may have full opportunities to speak.

[13th March 1965

MR. CHAIRMAN: The question is—

"That the proviso to rule 41 of the Madras Legislative Council Rules be suspended with reference to the time-limit prescribed therein in its application to the discussion on the Traffic Accidents and that one hour be allotted for the discussion."

The motion was put and carried.

VI.—DISCUSSION ON THE TRAFFIC ACCIDENTS.

*திரு. எஸ். கே. சம்பத்தன்: கனம் தலைவர் அவர்களே, ரோடு விபத்துக்களைப் பற்றி அப்போதைக்கப்போது இந்த சபையில் பல கேள்விகளுக்கு அமைச்சரவர்கள் விடை அளித்ததில் ஆண்டு தோறும் விபத்துகள் அதிகமாகிக் கொண்டே போகின்றது என்று அறிகின்றோம். அதிலும் நாள் ஆக ஆக ஒவ்வொரு நாளும் விபத்துக்கள் அதிகம் ஆகிக் கொண்டும், உயிர்ச் சேதம் அதிகம் உண்டாகக்கூடிய விபத்துகள் அதிகமாகிக் கொண்டு போவதையும் அன்றாடம் பார்த்துக் கொண்டு இருக்கிறோம். உயிர்ச் சேதம் இல்லாத விபத்துக்கள் நடக்கும் நாட்களை இனி பார்க்க முடியுமா என்றே சந்தேகமாக இருக்கிறது. நேற்று கூட பேப்பரிலே பார்த்தோம். "Three fatalities in road accidents" மூன்றும் ஒரே விபத்தில் அல்ல. விதவிதமான விபத்துகள். அந்த மாதிரி உயிர்ச் சேதம் அடையக்கூடிய விபத்துக்கள் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டு இருக்கின்றன. இதற்கு அரசாங்கம் அதிகமான அக்கறை எடுத்துக் கொண்டு அதைத் தடுப்பதற்கு முன் வர வேண்டுமே தவிர ஏதோ சொல்லிவிட்டோம், செய்து விட்டோம் என்ற முறையோடு இருந்து விடக் கூடாது என்று நான் முதலாவதாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நம் நாட்டிலே இப்பொழுது போக்கு வரத்து எந்த அளவுக்கு அதிகமாகிக் கொண்டு இருக்கிறதோ இதைவிட இன்னும் வேறு சில நாடுகளிலே பன்மடங்கு அதிகமாகிக் கொண்டு இருக்கிறதை நாம் எல்லோரும் அறிவோம். அதிலும் தொழில் அமைச்சரவர்கள் நன்றாக அறிவார்கள். அந்த நாடுகளிலே எல்லாம் விபத்துக்கள் ஏற்படத்தான் செய்கின்றன. ஆனால் இந்த மாதிரி அளவுக்கு மீறிய விபத்துக்கள் ஏற்படவில்லை. இதை அரசாங்கம் ஆராய வேண்டும். இதற்கான காரணங்களையெல்லாம் ஆராய வேண்டும்.

உதாரணத்துக்கு United States -ஐ எடுத்துக் கொண்டால் அங்கே இருக்கிற வாகனங்களின் எண்ணிக்கையையும், நடக்கின்ற விபத்துகளையும், நமது தமிழ்நாட்டிலே இருக்கிற வாகனங்களின் எண்ணிக்கையையும், விபத்துகளின் எண்ணிக்கையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் அதிர்ச்சி அடைகிறமாதிரி இருக்கும். அங்கே கோடிக் கணக்கான வாகனங்கள். விபத்துகள் அன்றாடம் ஏற்படத்தான் செய்கின்றன. ஆனால் உயிர்ச் சேத முள்ள விபத்துகள் அதிகமில்லை. இதை கனம் தொழிலமைச்சர் அவர்கள் நன்றாக அறிவார்கள்.

13th March 1965] [திரு. எஸ். கே. சம்பத்தன்

அங்கே போக்கு வரத்துச் சட்டங்களை மக்கள் மதிக்கிறார்கள். அவர்கள் மதிக்கவில்லை என்றாலும் மதிக்கச் செய்கின்றார்கள். அதைத்தான் நான் முன்பு ஒரு முறை அமைச்சரவர்களுக்கு இந்த சபையிலே எடுத்துச் சொல்லி இருக்கிறேன். அதைத்தான் திரும்ப நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

நமது மாநிலத்திலேயும் போக்கு வரத்துக்கு இப்பொழுது இருக்கிற சட்டங்களே கிட்டத்தட்ட போதுமான அளவு இருக்கின்றன. ஆனால் அவை மட்டும் போதாது. இன்னும் அதிகமான சட்டங்கள் ஏற்படுத்த வேண்டும். சட்டங்களை ஏற்படுத்தி விட்டால் மட்டும் போதாது என்பதையும் மேற்கொண்டு அமைச்சரவர்களுக்குச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். நான் பல உதாரணங்களை, பலவிதமான இடங்களிலே ஏற்பட்டதையும், எடுத்துச் சொல்லி இருக்கிறேன்.

உதாரணமாக Mount Road -லே நாம் இப்பொழுது சபைக்கு வருகின்ற வழியிலேகூட பார்த்தேன். சட்டத்தை எந்த விதத்திலே மீறலாம் என்றுதான் சிலர்களை உபயோகப்படுத்துகிற காரோட்டிகள், பாதசாரிகள் முதற்கொண்டு எண்ணுகிறார்களே தவிர சட்டத்தை மதித்துச் செல்லவேண்டும் என்ற எண்ணம் பொதுவாக இல்லை. இதை அரசாங்கம் கண் காணித்தாலொழிய மக்களுக்கு இதனைச் செய்யவேண்டிய நிலைமை ஏற்படாது என்பதை அமைச்சரவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். முன்னேறியிருக்கிற, சட்டத்தை மதிக்க எண்ணுகிற அமெரிக்க நாட்டிலேகூட சாலைச் சட்டங்கள் சம்பந்தப்பட்ட வரையிலே மிக மிகக் கண் காணிப்பாக அவ்வப்பொழுது எச்சரிக்கிறார்கள். அதுமட்டுமல்ல. அங்கங்கே அபராதங்கள் விதிக்கப்படுகின்றன. அதே மாதிரி இங்கே சொல்லிக் கொண்டிருப்பதைவிட அபராதங்கள் விதித்தாலும் அவர்களைத் திருத்த முன்வரவேண்டும்.

ஒரு சில நாட்களுக்கு முன்னாலே சென்னை Mount Road -இலே Police Traffic Propaganda Van போய்க் கொண்டு இருந்தது. காலினே தியேட்டருக்கு எதிரில் 10 கெஜ தூரத்தில் ஒரு கார் நின்று கொண்டிருந்தது. அந்தக் காருக்குள் காரோட்டி அமர்ந்தவாறே இருந்தார். அப்போது அந்தப் பக்கம் வந்த 'ப்ராபகண்டா' வானில் இருந்தவர் காரை அந்த இடத்தில் நிறுத்தக் கூடாது என்று சொல்லிக்கொண்டே போய்க் கொண்டிருந்தார். ஆனால் அந்தக் கார் தொடர்ந்து அங்கே நின்றுகொண்டே இருந்தது. அங்கே சோடில் இருந்த வளையைச் சுற்றிக்கொண்டு நான் அந்தப் பக்கம் வந்தபோது இதைப் பார்த்தேன். எனவே 'ப்ராபகண்டா வானினால்' என்ன பயன்? இந்தச் சட்டம் இருப்பதில் என்ன அர்த்தம் இருக்கிறது? அமெரிக்காவில் இப்படி இல்லை. அங்கே தப்புச் செய்பவர் எவ்வளவு தூரம் போனாலும் போலீசார் அவரிடம் 'செய்துவிட்டாய் தப்பு' என்று ஒரு டிக்கெட் கொடுக்கிறார்கள். அப்படி டிக்கெட் கொடுத்துவிட்டால், உடனே அபராதம் செலுத்தித்தான் ஆக வேண்டும். "இப்படிப்பட்ட அதிகாரத்தை போலீஸ்காரர்களுக்குக் கொடுத்தால், அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்படக் கூடும், லஞ்சம் பெருகும்" என்று கனம்

[திரு. எஸ். கே. சம்பந்தன்] [13th March 1965

அமைச்சர்கள் நினைக்கக்கூடும். இந்த விஷயத்தில் ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். இதற்குக் கொஞ்சம் உயர்ந்த அதிகாரிகளை நியமித்து தவறு செய்பவர்களுக்கு ஆங்காங்கே அபராதம் விதிக்கலாம். ஆங்காங்கே அவர்களுக்கு புத்திமதி சொல்லுவதற்கு 'ஸ்க்வாட்ஸ்' வைக்கலாம். இதையெல்லாம் செய்தால் விபத்துக்களைத் தவிர்க்கலாம்.

அடுத்தபடியாக, ரோடு ஜங்ஷன்களில் நிற்கும் போலீஸ்காரர்கள் தங்கள் வேலையைச் சரியாகச் செய்வதில்லை. இதை நான் பல நாட்கள் கவனித்திருக்கிறேன். அவர்களுக்கு நல்ல பயிற்சி அளிக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். நான் இந்த சந்தர்ப்பத்தில் ஒரு விஷயத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். நான் ஒரு நாள் காரில் பூந்தமல்லி ஹைரோடில் நேரே போய்க் கொண்டிருக்கும்போது ரோடு ஜங்ஷன் ஒன்றில் திடீரென்று நிறுத்தும்படி எனக்கு அங்கிருந்த போலீஸ்காரர் சமிக்ஞை காட்டினர். இந்த மாதிரி, நேர் சாலையில் போய்க் கொண்டிருக்கும்போது கார் வரும் திசைக்கு எதிர் திசையிலிருந்தோ அல்லது குறுக்குசாலையிலிருந்தோ ஒரு சைக்கிள் மட்டும் வந்தாலும் கார் நிற்க வேண்டுமென்று போலீஸ்காரர்கள் சமிக்ஞை காட்டுகிறார்கள். இந்த மாதிரியான சமிக்ஞைகளால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. எனவே போலீஸ்காரர்களுக்கு நல்ல பயிற்சி கொடுத்து, நல்ல 'இன்ஸ்ட்ரக்ஷன்ஸ்' கொடுத்து, அவர்களுக்கு இந்த வேலையைக் கொடுக்க வேண்டும்.

மேலும், சென்னை மாநில அரசாங்கம் நடத்தும் பஸ்கள் சம்பந்தமாக இந்த சபையில் கேட்கப்பட்ட ஒரு வினாவிற்கு கனம் அமைச்சர் அவர்கள் "அரசாங்க பஸ் டிரைவர்கள் செய்யும் சிறு தவறுகளுக்கு இலாகாவில் நடவடிக்கை எடுத்துவருகிறோம்" என்று சொன்னார். மற்றவர்கள் தவறு செய்தால், போலீசார் நடவடிக்கை எடுக்க முடியும். இந்த மாதிரியான பாரபட்சம் காரணமாக, அரசாங்க டிரைவர்கள் அலுக்கிறதையாக இருக்கிறார்கள்: "நம்மை போலீசார் ஒன்றும் செய்ய முடியாது. நம் இலாகாவில் தானே நடவடிக்கை எடுப்பார்கள்; நாம் ஏதாவது பதில் சொல்லிக்கொள்ளலாம்" என்று அவர்கள் நினைக்கிறார்கள். ரோடுகளில் பல இடங்களில் "ஸ்டாப் அண்ட் கோ" என்று போர்டு இருக்கிறது. அவைகளில் அனேக இடங்களில் அரசாங்க பஸ்கள் நின்று விட்டுப் போவதில்லை. எக்மோரில் ஹைரோடில் இந்த போர்டு உள்ள ஒரு இடத்தில் சர்க்கார் பஸ்கள் ஒரு நிமிஷம் கூட நிற்பதில்லை. "நிற்க வேண்டும் என்று போர்டு போட்டிருக்கிறதே, சர்க்கார் தானே அந்த போர்டைப் போட்டிருக்கிறார்கள். நாம் சர்க்காரைச் சேர்ந்தவர்களாயிற்றே" என்ற எண்ணம் அவர்களுக்கு வருவதில்லை. இதனால் தான் சென்னை நகரத்தில் அவர்களால் விபத்துக்கள் அதிகமாகின்றன.

மேலும், சர்க்கார் பஸ் டிரைவர்கள் பஸ்களை பல இடங்களில் எந்த விதமான முன்னறிவிப்பும் இன்றி நிறுத்துகிறார்கள்; பஸ்டாப்புகளுக்குப் பக்கத்தில் பஸ்களை ரோடின் ஓரத்தில் நிறுத்தாமல் ரோடின் நடுவில் நிறுத்துகிறார்கள். இதன் காரணமாக அந்த பஸ்களுக்குப் பின்னால் காரில் போகிறவர்கள் இரண்டு நிமிஷம்

13th March 1965] [திரு. எஸ். கே. சம்பந்தன்]

நின்றுவிட்டுத் தான் மேலே போக வேண்டியிருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் சர்க்கார் பஸ் டிரைவர்கள் போலீசாரால் விசாரிக்கப்பட முடியாத நிலை தான். எல்லோரையும் விசாரிப்பதற்கு போலீஸ் துறை இருக்கிறது. சர்க்கார் பஸ் டிரைவர்களையும் போலீஸார் விசாரிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

சர்க்கார் பஸ்கள் சம்பந்தமாகப் புகார்கள் தெரிவித்தால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. நான் சாதாரணமாக அடிக்கடி புகார் செய்வதில்லை. கடந்த அக்டோபரில் இந்த இலாகாவிற்கு நான் ஒரு புகார் தெரிவித்தேன். அது பற்றி மார்ச்சில் விசாரிக்கப்படும் என்று எனக்கு பதில் வந்தது. ஒரு சட்ட மன்ற அங்கத்தினருக்கே இவ்வாறு பதில் வருகிறது. நான் குறை சொல்லவில்லை. இதற்கு நான்கு மாதங்கள் அவசியமென்று தோன்றவில்லை. விசாரிக்கவில்லை என்று எனக்குக் குறை இல்லை. இவ்வளவு கால தாமதம் கூடாது. சர்க்கார் டிரான்ஸ்போர்ட் இலாகாவிடம் பொதுமக்கள் எத்தனை குறைகள் தெரிவித்தாலும், அவற்றை இலாகாவினர் அவ்வப்போது கவனித்து நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன்.

அரசாங்கம் என்ன சட்டம் போட்டாலும், அதைச் சரிவர அமல் நடத்துவதில்லை. சட்டத்தை மீறுபவர்கள் யாராயிருந்தாலும் அவர்களுக்கு தண்டனை அளிக்க வேண்டும். ஜனங்கள் சட்டத்தை மீறுதபடி கண்காணிக்க ஒரு குழுவை அமைத்தால் நன்றாக இருக்கும். இதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு என் பேச்சை முடிக்கிறேன்.

* SRI V. K. RAMASWAMY MUDALIAR: Mr. Chairman, Sir, I wish to make some observations with regard to the subject now under discussion. I had the opportunity of going round countries in the whole world recently in connection with some conference and I had occasion to observe the traffic controls, the peak hour traffic movements and all those things. My submission here is that traffic, though controlled to a certain extent, is not controlled to the extent to which it should be done. On inquiry also I learnt that there was dearth of traffic personnel and adequate strength has not been given to the Police Department. Whatever it may be, the traffic intensity is so great that unless the Government take up this question in all seriousness, it will not at all be possible for them to tackle this problem. In other countries especially America, Japan, and other places, we find super highways, flyovers and all those things. I would put forth a suggestion to the Hon. Minister so that he may try a flyover or a super highway near Gemini Corner. Otherwise, especially during the peak hour, since all the Convent high schools are situated close by, it is not at all possible for a man going by bus or car to cross that Gemini Corner at least within ten minutes; it may take even more. I have been having bitter experience of this everyday. I understand that the American Consulate-General is going to put up a multi-storeyed building in the Cathedral. Before that, unless the Government

[Sri V. K. Ramaswamy Mudaliar] [13th March 1965

take it into their head to purchase certain, portions, it may come difficult afterwards if the buildings come up, for them to do anything about this super highway. I would, therefore, request the Hon. Minister in-charge to consider this question in all seriousness. This is a very important thing and I would request the Hon. Minister in-charge to consider it in all seriousness.

Regarding sub-ways, Sir, we have been thinking of putting up sub-ways only in two places, that is, one near the Central Station and the other in Round Tana, Mount Road. Even though two or three years have passed since they were thought of, I do not know the stage at which the matter stands at present. I do not know whether it is pending with the Corporation or the Highways Department. I wish the Hon. the Minister takes up this question also very soon. Recently, that is about a week back, I had been to Bombay. I found a beautiful sub-way put up at Church Gate. I wish we had two or three such beautiful sub-ways near Broadway, Round Tana, Central Station and so on.

With regard to pedestrian tarffic and crossings, Sir, there must be no crossings. The existing pedestrian pathways are dirty and the payments are very bad. We cannot prosecute the pedestrians however much the Police might try. It is impossible to use these pavements. This is also very important and therefore I would request the Hon. Minister to pay some attention to it.

With regard to the slow moving traffic, Sir, I would suggest that it should be tackled if we want to solve the traffic porblem. Many may be thrown out of employment and it may create a problem if it is completely eliminated. My submission is that they may be kept out of the Corporation limits or some diversion may be made permanently so that they could use the unimportant roads only. Of course it may be a circuious route and cause difficulty to the poor people who are using bullock-carts and hand-carts. Anyhow, some arrangement must be made for the slow moving traffic. Otherwise you will find that in a main road with very heavy and fast moving traffic, a hand-cart or a bullock-cart gets to the middle of the road and hundreds of cars and fast moving vehicles held up. This held up a huge national waste. They waste diesel oil and petrol and they waste the precious time of the public and cause considerable annoyance to them. This is a national waste. This is also an important point which should be considered in all seriousness.

Another thing which I wish to emphasise is the parking of cars. The Municipalities want more and more money. Why should they not make arrangements for parking of cars and earn some revenue? In Broadway and Mount Road we find owners of cars leaving their cars on the road and going to office at 8 in the morning and taking their cars only in the evening. If parking meters are introduced as they do in some Western countries, you will find them taking these cars to some unimportant places. In Singapore I found cars parked in multi-storyed buildings. One such building for parking cars could be put up in Broadway. The

13th March 1965] [Sri V. K. Ramaswamy Mudaliar]

Hon. Minister in-charge has visited many foreign countries and I hope he will bear this in mind and find out ways and means of putting up a multi-storyed building for parking cars.

Lastly, Sir, I wish to refer to the Broadway bus stand. It is an eyesore. I should in this connection congratulate the Hon. Minister on having put up so many fine bus stands so far as the Government State Transport is concerned, in different parts of the city. But the private buses are parked in very dirty, unhealthy places. The atmosphere is very bad and congestion is too great in those places and the travelling public find it very inconvenient and their belongings are not safe in those places. Unsocial elements gather together in those places and the traffic also gets blocked. I know there was a proposal before the Government that the buses coming from the South should be parked near Mount Road beyond Tenampet or Saidapet and the buses coming from the North parked at Washermanpet or so. I do not know at what stage that proposal stands. It is very important that the public bus stand at Broadway should be improved and some other solution found by which the congestion there could be relieved.

Thank you, Sir.

*திரு. எம். எத்திராஜுலு: கனம் தலைவர் அவர்களே, சர்க்கார் போக்கு வரத்து இலாகாவைப்பற்றிச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். தமிழ் நாட்டில் போக்குவரத்து விபத்துக்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போகின்றன. பெரும் பாலான விபத்துகள் லாரியினாலும் பஸ்களினாலும் ஏற்பட்டிருக் கின்றன. விபத்துக்களைக் குறைக்க சர்க்கார் எவ்வளவோ முயற் சித்த போதிலும் அவை குறையவில்லை என்பது நான் தரும் புள்ளி விவரங்களிலிருந்து தெரியவரும். தமிழகத்தில் 1959-60 ஆம் ஆண்டில் பஸ்களும் லாரிகளும் மொத்தம் 17,000 க்கு மேல் இருந் தன. 1963-64-இல் இவை மொத்தம் 18,000-க்கு மேல் இருக்கின்றன. 1960-ஆம் ஆண்டில் இவைகளால் 7,830 விபத்துக்கள் ஏற்பட்டன. ஆனால் 1963-64-இல் இவைகளால் 7,321 விபத்துக்கள் ஏற்பட்டிருப் பதாக சொல்லப்படுகிறது. விபத்துக்கள் ஏதோ கொஞ்சம் தான் குறைந்திருக்கின்றன என்று சொல்லலாம். இந்த விபத்தானது நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டேதான் போகிறது. பொது மக்கள் இதிலே அதிகக் கவலைப்படுகிறார்கள் என்பதை நான் சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஏன் இந்த விபத்துக்கள் நடக்கின்றன? அவை எப்படி விவாதிக்கப்படு கிறது. இந்த இவாதத்தில் வருகிற சொற்பொழிவுகளைப் பார்த் தாலாவது விபத்துக்குக் காரணமாக இருக்கிறவர்கள் யார் என் பதை ஜாக்கிரதையாக பரிசிலனை செய்யவேண்டும். பஸ்கள், லாரி களினால்தான் அதிகமாக ஏற்படுகிறது இதைக் குறைப்பதற்கு என்ன வழியென்று நாம் தீவிரமாக முக்கிய கவனம் செலுத்த வேண்டுமென்பதுதான் என்னுடைய கோரிக்கை. அதற்கு முன்ன தாக லாரிகள் முன்பு 9 டன்கள் பாரம் ஏற்றலாமென்றிருந்தது. இப்போது 12 டன் வரையில் ஏற்றலாமென்று குறிப்பிட்டிருக் கிறோம். அதிகமாகச் சரக்குகளை ஏற்றுவதாலும், வேகமாகப்

[திரு. எம். எதிராஜுலு] [13th March 1965

